நாட்டிடைச்சட்டம்

INTERNATIONAL LAW

வி.ஆர்.ஜெயராஜன்

ஆய்வு செய்யப்பட்ட
இரண்டாம் பதிப்பில்...

பிரச்சனைகளுக்கான
தீர்வுகளுடன்...

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

நாட்டிடைச்சட்டம்

[பிரச்சனைகளுக்கான தீர்வுகளுடன்]

International Law

[With Solutions to Problems]

தமிழக அரசு

தமிழ் வளர்ச்சித்துறையின் சிறந்த நூலாசிரியருக்கான பரிசை

மும்முறை வென்றெடுத்த சட்டத்தமிழாய்வு அறிஞர்

P.R.ஜெயராஜன்

M.L., M.B.A., P.G. Dip. in A.D.R., D.Lit.,

வழக்குரைஞர் மற்றும் சட்டக்கல்வியாளர்

சட்டப்பல்கலைக்கழகத்தின் புதிய முறை வினாத்தாளின்படி

சீரமைக்கப்பட்ட 9-ஆம் பதிப்பு

ஸ்ரீ பதி ராஜன் பப்ளிஷர்ஸ்®

தமிழக அரசின் பரிசு பெற்ற சட்ட நூல் வெளியீட்டாளர்கள்,

69/42 - சி, மீனாட்சி நகர், அஸ்தம்பட்டி, சேலம் 636007.

நிகழ்நிலையில் நூல் வாங்க : www.shripathirajanpublishers.com

(இந்தியாவின் முன்னணி மின் வணிக வலைதளம்)

பொருளடக்கம்

1. நாட்டிடைச் சட்டத்தின் வரையறை, தோற்றம் மற்றும் வளர்ச்சி **[Definition, Orgin and Development of International Law]** **1**
   - பல்வேறு அறிஞர்களின் வரையறை 2
   - நாட்டிடைச் சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் 4
   - ஹூயூகோ குரோஷியஸ் 13
2. நாட்டிடைச் சட்டத்தின் தன்மை **[Nature of International Law]** **18**
   - நாட்டிடைச் சட்டம் உண்மையில் ஒரு சட்டமா? **20**
3. நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை **[Basis of International Law]** **25**
   - இயற்கைச் சட்டக் கோட்பாடு 26
   - அரசுறுத்து சட்ட கருத்தியல் கோட்பாடு 27
   - குரோஷியர்களின் கோட்பாடு 29
   - உண்மையான அடிப்படை 30
4. நாட்டிடைச் சட்டத்தின் மூலங்கள் **[Sources of International Law]** **32**
   - நாட்டிடைச் சட்ட மூலங்களின் முக்கியத்துவம் 34
   - சர்வதேச நீதிமன்றச் சட்டம் கூறும் மூலங்கள் 34
5. நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் **[Codification of International Law]** **43**
6. நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் **[Subjects of International Law]** **47**
   - நாடுகள்தாம் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் 49
   - தனிநபர்களும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே 50
   - சமீப காலத்திய நடப்புகள் 51
   - நாடல்லாத அமைப்புகளும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே 54
7. நாட்டிடைச் சட்டத்திற்கும் உள்நாட்டுச் சட்டத்திற்கும் இடையிலான தொடர்பு **[The Relationship between International Law and Muncipal Law]** **56**
   - உள்நாட்டுச் சட்டத்திற்கும் நாட்டிடைச் சட்டத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு 57

– நாட்டிடைச் சட்டத்தின் உள்நாட்டில் இயங்கும் தன்மை 62

8. நாடுகளின் வகைகள் **67**
[Kinds of States]
– சுதந்திரமான சிறு நாடுகள் 67
– நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் 68
– புனித நாடு 70

9. நாடுகளின் சமத்துவம் **71**
[Equality of States]

10. நாடுகளின் அங்கீகாரம் **74**
[Recognition of States]
– விளக்கமும் அவசியமும் 74
– நாட்டை அங்கீகரிப்பது, அரசாங்கத்தை அங்கீகரிப்பது – வேறுபாடுகள் 76
– இணைந்து உருவாக்கும் கோட்பாடு 78
– அறிவிக்கைக் கோட்பாடு அல்லது சான்று கூறும் கோட்பாடு 79
– அங்கீகாரத்தின் விளைவுகள் 81
– வெளிப்படையான அங்கீகாரம், மறைமுகமான அங்கீகாரம் 83
– நிகழ்வுநிலை அங்கீகாரம், சட்டநிலை அங்கீகாரம் 84
– வேறுபாடுகள் 84
– கலகநிலை அங்கீகாரம், போர்நிலை அங்கீகாரம் 86
– நிபந்தனை அங்கீகாரம் 88
– கூட்டு அங்கீகாரம் 88
– தலைமை அங்கீகாரம் 88
– ஸ்டிம்சன் கோட்பாடு 89
– எஸ்ட்ராடா கொள்கை 90

11. நாட்டு வாரிசுரிமை **91**
[State Succession]
– நாட்டு வாரிசுரிமை என்பது தவறான பெயராகும் 92
– நாட்டு வாரிசுரிமையின் இரு வகைகள் 93
– ஒரு நாடு மற்றொரு நாட்டின் வாரிசாகும் பொழுது ஏற்படும் உரிமைகளும் கடமைகளும் 94
– ஒப்பந்தவியல் உரிமைகளும் வாரிசுமையும் 97
– தீங்கியியல் கோரிக்கைகளும் வாரிசுரிமையும் 98

12. நாட்டுப் பொறுப்பு **100**
[State Responsibility]
– பொறுப்புடையதாக்கும் கோட்பாடு 102

- கால்வோ விதி 106
- ட்ரோகோ கோட்பாடு 108

13. தலையீடு (அல்லது) இடையீடு **[Intervention]** **110**
- விளக்கம் 111
- உரிமை பெற்ற தலையீடு 112
- மன்றோ கோட்பாடு 117

14. நாட்டின் ஆள்நிலம் **[State Territory]** **119**
- ஆள்நில ஆதிக்கம் 120
- ஆள்நிலப்பரப்பை அடைவதற்குண்டான வகைமுறைகள் 121
- ஆள்நிலப்பரப்பை இழத்தலுக்கான வகைமுறைகள் 127
- வான் மண்டலம் குறித்த அய்ந்து கொள்கைகள் 129
- வான் மண்டலம் குறித்த சட்டத்திற்கான ஏற்புவிதிகள் 131
- விண்வெளி மண்டலம் 135
- எல்லையோரக் கடல் 137
- கண்டத் திட்டு 139
- தனி உரிமை கொண்ட பொருளாதாரப் பகுதி 142
- கரையொட்டின கடல் பகுதி 143
- பயனுரிமை ஒதுக்கம் 144
- சர்வதேச வசதியுரிமை 145

15. நாட்டின் ஆள்நில ஆதிக்கவரம்பு **[State Jurisdiction]** **148**
- நாட்டின் ஆள்நில ஆதிக்கவரம்பு – பிரிவுகள் 149
- ஆள்நில ஆதிக்கம் 149
- அதிகாரவரம்பிலிருந்து விலக்களிப்பு 152
- நபர் ஆதிக்கம் 156
- ஆழ்கடலின் சுதந்திரம் 161
- துரத்திப் பிடிக்கும் உரிமை 163
- கடற்கொள்ளை 164
- விமானக் கடத்தல் கொள்ளை 166

16. நாட்டுரிமை **[Nationality]** **169**
- நாட்டுரிமையைப் பெறும் முறைகள் 173
- நாட்டுரிமையை இழக்கும் முறைகள் 175
- இரட்டை நாட்டுரிமை 176

17. மீட்டொப்படைத்தல்
[Extradition] **181**
- மீட்டொப்படைப்பதற்கு தேவையான நிபந்தனைகள் 183
- இரட்டைக் குற்ற விதி 185
- அரசியல் குற்றங்கள் 188
- அட்டென்ட் பிரிவு 191

18. அடைக்கலம்
[Asylum] **193**
- அடைக்கல வழக்கு 196

19. மனித உரிமைகள்
[Human Rights] **198**

20. நாடும் பொருளாதார நலனும்
[The State and Economic Interest] **209**

21. தூதாண்மை முகவர்கள்
[Diplomatic Agents] **211**
- தூதர்களின் வகைப்பாடு 212
- தூதுவரின் உரிமைகள், சிறப்புரிமைகள், சட்ட விலக்களிப்புகள் 214
- வாணிபத் தூதர்கள் 218
- தூதர் குழு முடிவுக்கு வரும் முறைகள் 220

22. உடன்படிக்கைகள்
[Treaties] **223**
- வகைகள் 225
- உடன்படிக்கை உருவாக்கத்தின் முக்கிய கட்டங்கள் 229
- உடன்படிக்கைக்கு பொருள் விளக்கமளித்தல் 231
- உடன்படிக்கை முடிவுறுதல் 233
- உடன்படிக்கை குறித்த நான்கு சட்ட முதுமொழிகள் 235

23. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்
[International Criminal Court] **241**

24. அய்க்கிய நாடுகள் சபை
[United Nations Organisation] **243**
- பொதுச் சபை 243
- பாதுகாப்புச் சபை 256
- பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு 263
- பொறுப்பாண்மைக் குழு 266
- சர்வதேச நீதிமன்றம் 269
- செயலகம் 276

சுட்டிக்காட்டப்பட்டுள்ள வழக்குகளின் பட்டியல்

"B"

1. Bank of Ethopia v. National Bank of Egypt. and Liguori 86
2. Birgman v. De Sieyes 222

"C"

3. Canevaro Case 178
4. Case concerning Continental Shelf (Libyan Arab Jahahiriya/Malta 142
5. Case concerning the Temple of Preah Vihear 39
6. Case concerning United States Diplomatic and Consular Staff in Tehran 216
7. Case of Amelia Island 114
8. Case of Caroline 114
9. Chorzow Factory (Indemnity) Case 39, 101
10. Chung Chi Cheung v. Rex 151, 157
11. Colombia v. Peru (or) Asylum case 196
12. Corfu Channel Case 101, 322

"D"

13. Danzing Railways Official Case 51
14. Dharam Teja's Case 187

"E"

15. Eastern Greenland Case 122
16. Eichmann Case 166
17. Eisler's Case 186
18. El Oro Mining and Railway Company Ltd. 107

"F"

19. Factor v. Laubenheimer and Haggard 185

"I"

20. I'm Alone 108
21. In re Berubari Union and Exchange of Enclaves 125
22. In re Castioni 190
23. In re Govt. of India and Mubarak Ali Ahmed (or) Mubarak Ali Ahmad v. State of Bombay 191
24. In re Meunier 190
25. Island of Palmas Arbitrations 122, 305

"J"

26. Jacquin Case 192
27. Jolly George v. The Bank of Cochin 60

"K"

28. Kutch Arbitration Award 41

"L"

29. Luther v. Sagor 85

"M"

30. Mavrommatis Palestine Concessions Case 39
31. Mighell v. Sultan of Johore 155, 156

"N"

32. North Amercian Dredging Company Case 106
33. North Atlantic Fisheries Case 41
34. North Sea Continental Shelf Case 36
35. Nuremberg Trial 51

"P"

36. Paquet Habana Case 38
37. Public Prosecutor v. Hjelmaland and Blong 216

"R"

38. R. v. Governor of Brixton Prison Case, Exparte Kolizynski 191
39. R. v. Keyn 39
40. R.J.Lynch Claim 171
41. R.v. Keyn (The Franconia Case) 63
42. Re Piracy Jure Gentium 165
43. Right of Passage case or Right of Passage over Indian Territory Case (Portugal v. India) 147
44. Robert E. Brown's Claim 99
45. Russian Socialist Federated Soviet Republic v. Cibrario 42

"S"

46. S.S.Lotus Case (France v. Turkey / The Lotus Case) 38, 151. 325
47. Savarkar's Case (France v. Great Britain) 187
48. State of Madras v. C.G.Menon 65
49. State of Madras v. C.G.Menon 76
50. Stoeck v. Public Trustee 173

"T"

51. The Alabama Claims Arbitration Case 41
52. The Arantzazu Mendi v. The Governement of Republican Spain 86
53. The Cristina 153
54. Trail Smelter Case 320

"U"

55. Union of India v. Sukumar Sengupta 126
56. United States v. Rauscher 185

"W"

57. West Rand Central Gold Mining Company Ltd. v. R 38

"Y"

58. Youman's Case 104

சிறு குறிப்புகள்

1. ஹூயூகோ குரோஷியஸ் [Hugo Grotius] 12
2. பழக்க வழக்கங்கள் சட்டத்தின் ஒரு மூல ஆதாரம் [Custom as a source of law] 33
3. நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் [Codification of International Law] 43
4. நியுரம்பர்க் வழக்கு விசாரணை [Nuremberg Trial] 48
5. நாட்டிடைச் சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டம் [International Law and Municipal Law] 57
6. ஒருபொருள் வாதம் [Monism] 57
7. இருபொருள் வாதம் [Dualism] 57
8. சுதந்திரமான சிறு அரசுகள் [Micro States] 67
9. நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் [Neutralised States] 68
10. புனித நாடு [Holy See] 70
11. அங்கீகரிப்பின் சட்ட விளைவுகள் [Legal effects of recognition] 81
12. நடைமுறை மற்றும் சட்டரீதியான அங்கீகாரங்கள் [Defacto and Dejure recognitions] 83
13. ஸ்டிம்சன் கோட்பாடு [Stimson Doctrine] 89
14. அங்கீகரியாமைக் கொள்கை [Doctrine of Non-recognition] 89
15. எஸ்ட்ராடா கொள்கை [Estrada Doctrine] 90
16. நாட்டு வாரிசுரிமை [State Succession] 92
17. நாட்டுப் பொறுப்பு [State Responsibility] 100
18. அனைத்துலக தீங்குகள் [International Delinquencies] 102
19. கால்வோ பிரிவு [Calvo Clause] 105
20. ட்ரோகோ கோட்பாடு [Drago Doctrine] 108
21. தலையீடு [Intervention] 111
22. தற்பேணுதல் [Self-preservation] 111
23. காற்று மண்டலத்தின் அய்ந்து சுதந்திரங்கள் [Five Freedoms of Air] 128
24. அய்ந்து சுதந்திர உடன்படிக்கை [Five Freedoms Agreement] 129
25. காற்று மண்டலம் [Air Space] 129
26. விண்வெளி மண்டலம் [Outer Space] 135

27.	எல்லையோரக் கடல் [Territorial Waters]	137
28.	கண்டத் திட்டு [Continental Shelf]	137
29.	ஒதுக்கப்பட்ட பொருளாதாரப் பகுதி [Exclusive economic zone]	137
30.	கரையொட்டின் கடல் பகுதி [Cotiguous zone]	143
31.	பயனுரிமை ஒதுக்கம் [Cabotage]	144
32.	சர்வதேச வசதியுரிமை [International Servitudes]	145
33.	வசதியுரிமை [Servitude]	145
34.	இந்திய எல்லை மீது வழியுரிமை வழக்கு [Right of Passage case]	147
35.	ஆள்நில ஆதிக்கம் [Territorial Jurisdiction]	148
36.	ஃபிராங்கோனியா வழக்கு [Franconia Case]	148
37.	மிதக்கும் தீவுக் கோட்பாடு [Floting Island Theory]	148
38.	லோட்டஸ் வழக்கு [The Lotus Case]	148
39.	சூங் சி சௌங் எதிர் ரெக்ஸ் [Chung Chi Cheung v. Rex]	148
40.	நபர் ஆதிக்கம் [Personal Jurisdiction]	156
41.	குற்றமிழைத்தவன் நாட்டுரிமைக் கோட்பாடு [Active Nationality Principle]	156
42.	குற்றமிழைக்கப்பட்டவன் நாட்டுரிமைக் கோட்பாடு [Passive Nationality Principle]	156
43.	ஆழ்கடலின் சுதந்திரம் [Freedom of the High Seas]	159
44.	ஆழ்கடல் பகுதி [High Seas]	159
45.	துரத்திப் பிடிக்கும் உரிமை [Right of Hot pursuit]	163
46.	கடற்கொள்ளை [Piracy]	164
47.	நாட்டிடைச் சட்டத்தில் கடற் கொள்ளை [Piracy jure gentium]	164
48.	உலக அதிகாரவரம்புக் கொள்கை [Principles of Universal Jurisdiction]	164
49.	மனித இன அழிவு [Genocide]	164
50.	விமானக் கடத்தல் கொள்ளை [Hijacking]	166
51.	இரட்டை நாட்டுரிமை [Double Nationality]	171
52.	ஆக்கப்பூர்வமான நாட்டுரிமை [Effective Nationality]	171
53.	நாடற்ற தன்மை [Statelessness]	171
54.	இரட்டைக் குற்ற விதி [Double Criminality]	181
55.	மீட்டொப்படைத்தல் [Extradition]	182
56.	மீட்டொப்படைத்தல் குற்றங்கள் [Extradition Crimes]	182

57. அட்டென்ட் பிரிவு [Attentat Clause] 191
58. புகலிடம் [Asylum] 194
59. அடைக்கல வழக்கு [Asylum Case] 194
60. சர்வதேச பொருளாதாரச் சட்டம் [International Economic Law] 209
61. வாணிபத் தூதர்கள் [Consuls] 218
62. பொது நீதி விதி [Jus Cogens] 235
63. ஒரு உடன்படிக்கை அதன் தரப்பினரை மட்டுமே கட்டுப்படுத்தும் [Pacta tertis nec nocent nec prosunt] 236
64. அடிப்படை சூழல் மாறல் [Rebus sic stantibus] 236
65. ஒப்பந்தங்களை நல்லெண்ணத்துடன் நிறைவேற்ற வேண்டும் [Pacta sunt servanda] 238
66. சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் [International Criminal Court] 241
67. பாதுகாப்புச் சபை [Security Council] 257
68. அய்க்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் வாக்களித்தல் [Voting in the United Nations Security Council] 257
69. பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு [Economic and Social Council] 263
70. பொறுப்பாண்மைக் குழு [Trusteeship Council] 266
71. பொறுப்பாட்சி முறை [Trusteeship system] 266
72. சர்வதேச நீதிமன்றம் [International Court of Justice] 269
73. சர்வதேச நீதிமன்றத்தின் கட்டாய அதிகாரவரம்பு [Compulsory Jurisdiction of International Court of Justice] 269
74. அய்க்கிய நாடுகளின் செயலகம் [Secretariat of United Nations] 276
75. உலகத் தொழிலாளர் அமைப்பு [International Labour Organisation] 280
76. அய்க்கிய நாட்டின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார அமைப்பு [United Nations Educational, Scientific and Cultrual Organisation] 281
77. மறுப்பாணை அதிகாரம் [Veto Power] 282
78. இரட்டை மறுப்பாணை அதிகாரம் [Double Veto Power] 283
79. பாதுகாப்பாட்சி முறை [Mandate system] 284
80. தன்னாட்சியில்லாத ஆட்சிப் பரப்புகள் [Non-Self governing territories] 285
81. அமைதிக்காக ஒன்று சேர்க்கும் தீர்மானம் [Uniting for peace resolution] 287

பிரச்சனைகளும் தீர்வுகளும்

இந்நூலின் 289 முதல் 332 வரையுள்ள பக்கங்களில் பல்வேறு பிரச்சனைகளுக்கு தீர்வுகள் தரப்பட்டுள்ளன.

பல்கலைக்கழக வினாத்தாள்கள்

மூன்றாண்டு சட்டக் கல்வி

1. மே, 2016 335
2. நவம்பர், 2016 336
3. மே, 2017 338
4. நவம்பர், 2017 340
5. மே, 2018 342
6. நவம்பர், 2018 343
7. மே, 2019 345
8. நவம்பர், 2019 347
9. ஜனவரி, 2021 349

ஐந்தாண்டு சட்டக் கல்வி

10. மே, 2016 352
11. நவம்பர், 2016 353
12. மே, 2017 355
13. நவம்பர், 2017 357
14. மே, 2018 359
15. நவம்பர், 2018 361
16. மே, 2019 362
17. நவம்பர், 2019 364
18. ஜனவரி, 2021 366
19. பிப்ரவரி, 2022 368

1

நாட்டிடைச் சட்டத்தின் வரையறை, தோற்றம் மற்றும் வளர்ச்சி [Definition,Origin and Development of International Law]

1. Define International law and trace the origin and development of this law. (நாட்டிடைச் சட்டத்தை வரையறுத்து, அதன் தோற்றத்தையும் வளர்ச்சியையும் விளக்குக.)

(அல்லது)

Discuss the nature and origin of International Law and examine the present day status of international law. (நாட்டிடைச் சட்டத்தின் தன்மை மற்றும் தொடக்கத்தை விவரித்து, இன்று நாட்டிடைச் சட்டத்தின் நிலை என்ன என்பதை ஆராய்க.)

(அல்லது)

Define International Law keeping in view the post war developments and assess its present day status. (போருக்குப் பிந்திய வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு நாட்டிடைச் சட்டத்தை வரையறுக்க மற்றும் அதன் இன்றைய நிலையை மதிப்பிடுக.)

(அல்லது)

The definition of International Law has been changed to considerable extent after the second world war. In what respects does it differ from the old definition? (சர்வதேசச்

சட்டத்தின் பொருள் விளக்கம் இரண்டாவது உலகப் போருக்குப் பின் பல வகைகளில் மாற்றம் கண்டுள்ளது. இது எந்த வகைகளில் முன்பிருந்த விளக்கத்தில் இருந்து மாறுபட்டுள்ளது என்பதை விளக்குக.)

(அல்லது)

Define International Law. Examine the post second world war development in the definition of international law. (நாட்டிடைச் சட்டத்தை வரையறு. அதன் வரையறையில் இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஏற்பட்ட வளர்ச்சியை ஆராய்க.)

(அல்லது)

"The scope of International Law has become wide unlike in the past"- Examine this statement. ("கடந்த காலத்தைப் போலல்லாமல் நாட்டிடைச் சட்டத்தின் எல்லை விரிவடைந்துள்ளது" – இக்கூற்றை ஆராய்க.)

முன்னுரை:

ஒவ்வொரு நாட்டிலும் வழங்கப்படும் சட்டம், 'உள்நாட்டு சட்டம்' **(Municipal Law)** எனப்படுகிறது. அதேபோன்று ஒரு நாட்டின் சட்டம் மற்ற நாடுகளில், 'அயல்நாட்டுச் சட்டம்' **(Foreign Law)** எனப்படுகிறது. ஆனால் ஒரு சட்டம் ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் இடையே பொதுவாக வழங்கப்பட்டால், அது 'நாட்டிடைச் சட்டம்' **(International Law)** என அழைக்கப்படுகிறது. இதனை 'சர்வதேச சட்டம்' என்றும், 'பன்னாட்டுச் சட்டம்' என்றும் அழைக்கலாம். எனினும் நாடுகளுக்கிடையே இச்சட்டம் வழங்கப்படுவதால், 'நாட்டிடைச் சட்டம்' என்ற தமிழ்ப் பதமே சாலப் பொருந்தும்.

நாட்டிடைச் சட்டம் - பல்வேறு அறிஞர்களின் வரையறை:

ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் கொண்டுள்ள பரஸ்பர உறவுமுறைகளில் அந்நாடுகளின் நடத்தையை ஒழுங்குபடுத்துவதற்காக வகுக்கப்பட்ட விதிகளின் தொகுப்பே நாட்டைச் சட்டமாகும், என்று பொதுவாகக் கூறலாம். எனினும் பல்வேறு சட்ட அறிஞர்கள் நாட்டிடைச் சட்டத்திற்கு ஏறத்தாழ ஒரே பொருளில் அமையும் படியான வரையறைகளைக் கொடுத்துள்ளனர். அவற்றில் முக்கியமான சிலவற்றை நாம் பின்வருமாறு காண உள்ளோம்.

சட்டவியல் அறிஞர் ஓப்பன்ஹெய்ம் **(Oppenheim)** அவர்கள், "நாகரிமடைந்த நாடுகள் தங்களுக்குள் கொண்டுள்ள தொடர்புகளில், அவற்றால் சட்டப்படியாகக் கட்டுப்படுத்தக் கூடியவை எனக் கருதப்படக்கூடிய வழக்கமாகப் பின்பற்றப்பட்டு வரும் மற்றும் உடன்படிக்கையின் வாயிலாக ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட விதிகளின் தொகுப்பிற்கு வழங்கப்படும் பெயரே, நாடுகளின் சட்டம்

அல்லது நாட்டிடைச் சட்டம் எனப்படுகிறது"[1] என்று கூறுகிறார். அதாவது நாடுகளிடையே எழும் உறவுமுறைகளை நெறிப்படுத்தும் வழக்கம் சார்ந்த மற்றும் உடன்படிக்கை வழியான வழிமுறைகளே, நாட்டிடைச் சட்டமென அவர் விளக்குகிறார்.

அறிஞர் ஹூயூக்ஸ் **(Hughes)** அவர்கள், "நாகரிமடைந்த நாடுகள் தங்களுக்கிடையிலான பரஸ்பர உறவுமுறைகளில், தங்களைக் கட்டுப்படுத்துவதாகக் கருதும் விதிகள் மற்றும் கொள்கைகளின் தொகுப்பே, நாட்டிடைச் சட்டமாகும். அது இறைமையுடைய அரசுகளின் இசைவின் பேரில் எழுகிறது"[2] என்று வரையறுக்கிறார்.

அறிஞர் கென்ட் **(Kent)** அவர்கள், "ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் கொண்டுள்ள தொடர்புகளில் அந்நாடுகளின் உரிமைகளை வரையறுத்தும், கடமைகளை விதித்தும் வழங்கக்கூடிய அரசு வழிகாட்டுத் தகவல்களின் தொகுப்பே நாட்டிடைச் சட்டமாகும்"[3] என்று குறிப்பிடுகிறார்.

அதுபோல் அறிஞர் சர் சிசில் ஹர்ஸ்ட் **(Sir Cecil Hurst)** அவர்கள், "ஒரு நாடு தனக்காகவும் தன் நாட்டு மக்களுக்காகவும் மற்றொரு நாட்டிற்கு எதிராக கோர உரிமை படைத்த உரிமைகளைத் தீர்மானிக்கும் விதிகளின் மொத்த வடிவமே நாட்டிடைச் சட்டம்"[4] என்கிறார்.

அறிஞர் பிட் கோபெட் **(Pitt Cobbett)** அவர்கள், "நாகரிமடைந்த நாடுகள், அவை ஒவ்வொன்றும் மற்றொரு நாடுடன் மற்றும் மற்றொரு நாட்டின் குடிமக்களுடன் கொண்டுள்ள நடத்தையை தீர்மானிப்பதாக அந்நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படும் விதிகளின் மொத்தத்தை நாட்டிடைச் சட்டம் என்று விளக்கலாம்"[5] என்று கூறுகிறார்.

மேற்கண்ட வரையறைகளிலிருந்து நாடுகள் தங்களுக்கிடையிலான உறவு

---

1. "Law of Nations or International Law is the name for the body of customery and treaty rules which are considered legally binding by civilized States in their intercourse with each other" - **Oppenheim.**
2. "International Law is the body of principles and rules which civilized States consider as binding upon them in their mutual relations. It rests upon the consent of sovereign States" - **Hughes.**
3. "International Law is that code of public instructions which defines the rights and prescribes the duties of nations in their intercourse with each other" - **Kent.**
4. "International Law is the aggregate of the rules which determine the rights which one State is entitled to claim on behalf of itself or its nationals against another State" - **Sir Cecil Hurst.**
5. "International Law may be described as "the sum of the rules accepted by civilised States as determining their conduct towards each other, and towards each other's subjects" - **Pitt Cobbett.**

முறைகளில், தொடர்புகளில் ஒரு ஒழுங்குமுறையைக் கொண்டு வருவதற்காக, அவற்றால் ஏற்றுக் கொள்ளப்பட்ட விதிகளின் தொகுப்பே, நாட்டிடைச் சட்டம் என்பது புலனாகும்.

நாட்டிடைச் சட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் (Origin and Development of International Law):

நாட்டிடைச் சட்டம் எனும் பதத்தின் நவீன வடிவம் வளர்ச்சியுற்ற விதத்தை காண வேண்டுமெனில், அதன் தோற்றத்தை 15–ஆம் நூற்றாண்டுக் காலத்திலிருந்து கண்டால் போதுமானது. எனினும் தொன்மைக் காலத்திலும், இடைப்பட்ட காலத்திலும் நாட்டிடைச் சட்டம் நிலவியுள்ளதற்கான சுவடுகள் காணப்படுகின்றன. எனவே நாட்டிடைச் சட்டத்தின் தோற்றத்தை நாம் பின்வரும் காலகட்டங்களாகப் பிரித்து, அவற்றின் கீழ் காண உள்ளோம்.

(1) தொன்மைக் காலம் (The Ancient Period):

மனித வரலாறின் ஆரம்ப காலகட்டமான தொன்மைக் காலத்தில், எகிப்து நாட்டிலும் மற்றும் ஜுக்கள் இனத்தவரிடையேயும் நாட்டிடைச் சட்டம் நிலவியுள்ளதை அறிய முடிகிறது. அவர்கள், உடன்படிக்கைகளில் (treaties) ஈடுபட்டுள்ளனர். அவ்வுடன்படிக்கைகளானது, உறுதிமொழிகள் மற்றும் மதச் சின்னங்களால் வலுவூட்டப்பட்டிருந்தன. தூதர்களுக்கு உரிய மரியாதை அளித்துள்ளனர். மேலும் அயல்நாட்டவர்களையும், தம்நாட்டவர்களாக பாவித்தனர்.

அதுபோல் தொன்மைக் கால இந்து மன்னர்களின் ஆட்சிக்கு, இந்து தரும சாத்திரங்கள் அடிப்படையாக விளங்கின. நியாயத்திற்கான போர் (just war), நியாயமற்ற போர் (unjust war) என போர்கள் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்ததற்கான குறிப்புகள், இந்து தரும சாத்திரங்களில் காணப்படுகின்றன. போருக்கான விதிகள், மிகக் கடுமையாக இருந்துள்ளன. இவையெல்லாம் பண்டைய கால இந்துக்களிடையே நாட்டிடைச் சட்டம் இருந்துள்ளதை சுட்டிக்காட்டுகின்றன.

தொன்மைக்கால உரோம் மற்றும் கிரீஸ் நாட்டில், நாட்டிடைச் சட்டத்திற்கான விதிகள், மதம் சார்ந்த அறநெறிக் கோட்பாடுகளின் (religious morality) அடிப்படையில் அமைந்திருந்தது. ஆனால் இவ்விதிகள், மிகக் குறைந்தளவே இருந்தன. இருப்பினும், 15 மற்றும் 16–ஆம் நூற்றாண்டுகளில் வளர்ச்சியுற்ற நவீன நாட்டிடைச் சட்டத்திற்கு, உரோம் நாட்டினர் வகுத்துக் கொடுத்த உரோமானிய சட்டத்தில் (Roman Law) கூறப்பட்டிந்த பல கோட்பாடுகளே, அடிப்படையாக விளங்கியது எனில் அது மிகையன்று.

(2) இடைக்காலம் (Middle Ages):

இடைக்காலத்தில் நாட்டிடைச் சட்டம் வளர்ச்சியுறுவதற்கு சாதகமான சூழல் நிலவவில்லை. அதற்கு பின்வருவன தடைக்கற்களாக இருந்தன.

(அ) தேவாலயங்களின் மேலாதிக்கம் (Supremacy of Church) மற்றும் அய்ரோப்பா முழுவதும் அதன் விதிகள் பொதுவாக பின்பற்றப்பட்ட தன்மை ஆகியவை, நாட்டிடைச் சட்டம் வளர்ச்சியுறுவதைத் தடுத்தது. கிறுத்தவ மதத்தை பின்பற்றும் நாடுகளின் மீது போப்பாண்டவர் கொண்டிருந்த உயர்நிலையானது (Supremacy of Pope), நாட்டிடைச் சட்டமே அவசியமற்றது எனுமளவிற்கு கொண்டு சென்றது. கிறுத்தவ மதம் அல்லாத பிற மதங்களைப் பின்பற்றும் நாடுகளுக்கு பொருந்தக் கூடிய ஒரு மதச் சார்பற்ற நாட்டிடைச் சட்டம் (secular international law) அவசியானதாகும் என்பது அப்பொழுது உணரப்படவில்லை.

(ஆ) மேற்கத்திய உலகில், பேரரசர் (Emperor) உயர்ந்த அதிகாரம் கொண்டவராக இருந்தார். சட்டப்படி ஒருவர் மட்டுமே, பேரரசராக இருக்க முடியும். எனவே புனித உரோமானிய பேரரசில் (Holy Roman Empire) சிற்றரரசர்களுக்குள் நாட்டிடை உறவுகள் எதுவும் இல்லாமல் போயின.

(இ) அக்காலத்தில் இருந்த நிலப்பிரபுக்கள் (feudal lords), அரசாண்மை யருக்குரிய அதிகாரங்களை தங்கள் கையில் எடுத்துக் கொண்டனர். இதனால் நாட்டில் இறைமையுடைய ஒரே அரசு, ஒரே அரசாங்கம் என்பன இல்லாமல் போனது. பரந்த நிலமுடைய பிரபுக்கள் பலரும், தங்கள் நிலங்களை ஒன்றிணைத்துக் கொண்டதன் காரணமாக, நாடுகளின் எல்லை கூட மாறிப் போனது. இதன் காரணமாக நாட்டிடைச் சட்டத்தின் முக்கியத்துவத்தை உணரவியலவில்லை.

இவ்வாறு தனிப்பட்ட, இறைமையுடைய நாடுகள் (sovereign States) இடைக்காலத்தில் இல்லாத காரணத்தால் நாட்டிடைச் சட்டமும் வளர்ச்சியுறவில்லை.

(3) 15 மற்றும் 16-ஆம் நூற்றாண்டுகளில் நாட்டிடைச் சட்டத்தின் எழுச்சி (The Rise of International Law in the 15th and 16th Centuries):

ஒரு நாட்டின் ஆதிக்கப்பிடியிலிருந்து விடுபட்டு, பல தனி நாடுகள் தோன்றி அவை தனித்து இயங்கக் கூடிய நிலை ஏற்படும் வரை, நாட்டிடைச் சட்டத்தின் அவசியம் எழவில்லை என்றே கூற வேண்டும். பல நாடுகள் என்றிருந்தால்தானே, நாட்டிடை உறவுகள். நாட்டிடை உறவுகள் ஏற்பட்டால்தானே, அவற்றை ஒழுங்கு படுத்த நாட்டிடைச் சட்டம் வேண்டும். 15 மற்றும் 16–ஆம் நூற்றாண்டுகளில் அய்ரோப்பா பல தனித்தனி நாடுகளாகப் பிரிந்தன. அப்பொழுதுதான் அந்நாடுகள் ஒன்று மற்றொன்றுடன் கொண்ட உறவுகளை ஒழுங்குபடுத்த, முறைப்படுத்த நாட்டிடைச் சட்டம் என ஒன்று வேண்டும் என்பது உணரப்பட்டது. அந்த வகையில் நாட்டிடைச் சட்டத்தின் பல அடிப்படைக் கொள்கைகள் உருப்பெற பின்வருவன காரணிகளாக விளங்கின. அவை,–

(அ) உரோமானியப் பேரரது வீழ்ச்சியடைந்தவுடன் மறைந்து போன கடல் வாணிபம் (sea trade), மீண்டும் உயிர்ப் பெற்றது. இதனால், வழக்கங்களின் அடிப்படையில் அமைந்த கடற் சட்டங்கள் (Maritime Laws) தோன்றின.

இவ்வாறு கடல் வழியாக சர்வதேச வாணிபத் தொடர்புகள் ஏற்பட்டதால், ஆழ்கடலை பயன் படுத்தும் சுதந்திரம் குறித்து சில கருத்து வேறுபாடுகளும் தோன்றின. இதனால் நாட்டிடைச் சட்டம் வளர வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

(ஆ) வாணிபம் செய்யும் நகரங்கள், தங்கள் வாணிபத்தையும் வாணிபம் செய்யும் குடிமக்களையும் காப்பதற்காக குழுக்களை (Leagues for the protection of the trade and the trading citizens) அமைக்கத் தொடங்கின. இக்குழுக்கள், தம்மிடம் உறுப்பினராக இருக்கும் நகரங்களுக்குள் தகராறுகள் ஏதும் எழுந்தால், அவற்றை இசைவுத்தீர்வு முறை (arbitration) மூலம் தீர்த்து வைத்தன. இது நாட்டிடைச் சட்டம் வளர்ச்சியுற உதவியது.

(இ) ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு நிலையான அரசுமுறை தூதுப் பிரதிநிதிகளை (permanent legations) அனுப்புதல் மற்றும் அவர்களை வரவேற்கும் வழக்கம் வளர்ச்சியுற்றது.

(ஈ) வல்லரசுகள் தங்கள் நாட்டுப் படைகளை எல்லையோரத்தில் நிறுத்தும் வழக்கம், போர்முனை தொடர்பான உலகளாவிய சில விதிகளை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது அவசியம் என்று நாடுகள் உணர்ந்தன.

(உ) விஞ்ஞானம் மற்றும் கலைத் துறையில் மறுமலர்ச்சி (renaissance) ஏற்பட்டது. இதனால் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் வளர்ந்தது. கிரேக்க நாடு வகுத்துக் கொடுத்த இயற்கைச் சட்டக் கோட்பாடுகள் (Law of Nature) மீண்டும் உயிர்ப் பெற்றன. இது நாட்டிடைச் சட்டத்தின் வளர்ச்சிக்கு அடித்தளமாக விளங்கியது.

(ஊ) மக்கள் கலாச்சாரத்தில் சீர்திருத்தக் கருத்துக்கள் (reformation) தோன்றின. இது நாகரிமடைந்த உலகில் மதத்தின் அடிப்படையிலான தலைமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தது. இதனால் போப்பாண்டவரின் மேலாதிக்கம் வலுவிழந்தது.

(எ) நாட்டில் அமைதி நிலவ என்ன செய்ய வேண்டும் என்று பல்வேறு சிந்தனையாளர்களும், எழுத்தாளர்களும் சிந்திக்கத் தொடங்கினார். திட்டங்களை வகுத்தனர். இதுவும் நாட்டிடைச் சட்ட வளர்ச்சிக்கு வித்திட்டது.

(4) 17 மற்றும் 18-ஆம் நூற்றாண்டுகளில் நாட்டிடைச் சட்டம் (International Law in the 17th and 18th Centuries):

இந்தக் காலகட்டத்தில் புகழ்பெற்ற பல்வேறு சிந்தனையாளர்கள் நாட்டிடைச் சட்டத்திற்கான ஆய்வை மேற்கொண்டனர். பல்வேறு புதிய விதிகளையும், வரையறைகளையும் வகுத்தனர். அத்தகு சிந்தனையாளர்களில் மிக முக்கியமானவர் ஹூயூகோ குரோஷியஸ் **(Hugo Grotius)** எனும் சட்டவியல் அறிஞர் ஆவார். இவர் நாட்டிடைச் சட்டத்தின் வளர்ச்சிக்கு ஆற்றிய பங்கு மகத்தானது. நாட்டிடைச் சட்டத்தை முறையாக ஆராய்ந்தவர்களில் இவர்தான் முதன்மையானவர். இவர்

இயற்கைச் சட்டமும், வழக்கம் மற்றும் உடன்படிக்கைகளின் வாயிலான விதிகளும் நாட்டிடைச் சட்டத்திற்கு அடிப்படையாக விளங்குகின்றன எனும் கருத்தை முதன் முதலில் எடுத்துரைத்தார். எனவே இவரை நவீன நாட்டிடைச் சட்டத்தின் தந்தை என்று நாட்டிடைச் சட்டம் அறிந்த உலகினர் போற்றுகின்றனர். [இவரது பங்களிப்பைப் பற்றி வினா எண். (2)–ல் விரிவாகக் காண உள்ளோம்.]

மேலும் 1658–ஆம் ஆண்டில் ஏற்பட்ட வெஸ்ட்பாலியா உடன்படிக்கை **(Treaty of Westphalia)** 30 ஆண்டுகளாக உரோமானியப் பேரரசில் நீடித்த போரை முடிவிற்கு கொண்டு வந்தது. இந்த உடன்படிக்கை, உலகில் அமைதி நிலவ சர்வதேச அமைப்பு ஒன்றை உருவாக்க முயன்றது.

18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த நாட்டிடைச் சட்ட அறிஞர்கள், மூன்று வகையான சிந்தனைகளின் அடிப்படையில் முக்குழுக்களாகப் பிரிந்தனர். அக் குழுக்கள், (1) இயற்கைவாதிகள் **(Naturalists)** (இயற்கைச் சட்டம்தான் நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை என்று கூறுவோர்); (2) அரசுறுத்துச் சட்டக் கொள்கையினர் (மெய்வாதிகள்) **(Positivists)** (இவர்கள் நாடுகளுக்கிடையிலான வழக்கங்களும், உடன்படிக்கைகளும்தாம் நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை என்று விளம்புபவர்கள்); (3) குரோஷியர்கள் **(Grotians)** (இவர்கள் அறிஞர் ஹீயூகோ குரோஷியஸ் கூறிய கருத்தான இயற்கைச் சட்டமும், உடன்படிக்கைகளும்தாம் நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை என்று குறிப்பிடுவோர். அதாவது இயற்கை வாதிகள் மற்றும் நேர்க்காட்சிவாதிகள் கூறிய மேற்கண்ட இரண்டு கருத்துகளையும் ஒருங்கே கொண்டவர்கள்). (இக்குழுக்களைப் பற்றி பின்னர் விரிவாகக் காண உள்ளோம்).

சுருங்கக் கூறின் இந்தக் காலகட்டத்தில், கோட்பாட்டளவில் நாட்டிடைச் சட்டம் நல்ல முன்னேற்றத்தை அடைந்தது என்றே கூற வேண்டும்.

(5) 19-ஆம் நூற்றாண்டு (The 19th Century):

19–ஆம் நூற்றாண்டில் நாட்டிடைச் சட்ட வளர்ச்சியில் நாட்டிடை உடன்படிக்கைகளும், சர்வதேச மாநாடுகளும் முக்கியப் பங்காற்றின. அதாவது 1872–ஆம் ஆண்டில் அலபாமா கோருரிமை வழக்கில் தீர்வம் **(Alabama Award Claim)** பிறப்பிக்கப்பட்டதைத் தொடர்ந்து, நாடுகளுக்கிடையிலான பிரச்சனைகளை நாட்டிடை இசைவுத் தீர்ப்பாயங்களின் வாயிலாக தீர்வு காண்பது பெருமளவில் இந்தக் காலகட்டத்தில்தான் அதிகரித்தது என்று கூற வேண்டும். மேலும், 1850–ஆம் ஆண்டில் நடந்த வியன்னா மாநாட்டில் **(Congress of Vienna)** நாட்டிடைச் சட்ட விதிகள் பல உருவாக்கப்பட்டன. அதுபோல் 1856–ஆம் ஆண்டில் ஏற்பட்ட பாரிஸ் உடன்படிக்கையானது **(Covention of Paris)**, கடலில் போரில் ஈடுபடும் நாடுகளுக்கு வழிகாட்டும் முகமாக பல்வேறு விதிகளை உள்ளடக்கியிருந்தது. அவ்வாறே, 1864–ஆம் ஆண்டில் ஏற்பட்ட ஜெனீவா உடன்படிக்கையானது **(Geneva Convention)**, நிலத்தில் போர்புரிந்து காயமடைந்த மற்றும்

பிணியுற்றவர்களின் நிலையை மேம்படுத்துவதற்கான விதிகளை கொண்டிருந்தது. இவ்வாறு நாடுகளுக்கிடையிலான பொருளாதாரம், சமூக நலன் ஆகிவற்றை மேம் படுத்துவற்காகவும் பல்வேறு சர்வதேச மாநாடுகள் நடந்தன. இக்காலகட்டத்தை 'சர்வதேச மாநாடுகள் மற்றும் உடன்படிக்கைகளின் தொடக்கத்திற்கான பொற்காலம்' என்று கூட வருணிக்கலாம்.

(6) 20-ஆம் நூற்றாண்டு (The 20th Century):

நாட்டிடைச் சட்ட வளர்ச்சியின் போக்கு 19–ஆம் நூற்றாண்டில் எவ்வாறு நீடித்ததே, அவ்வாறே 20–ஆம் நூற்றாண்டில் முதல் உலகப் போர் ஏற்படும் வரை நீடித்தது என்று கூறலாம். இக்காலகட்டத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த சர்வதேச மாநாடுகள் பல நடந்தன. அந்த வகையில் 1907–ஆம் ஆண்டில் நடந்த ஹேக் மாநாட்டின் **(Hague Conference)** வாயிலாக 'இசைவுத்தீர்ப்பிற்கான நிலையான நீதிமன்றம்' **(Permanent Court of Arbitration)** ஒன்று அமைக்கப்பட்டது.

முதலாம் உலகப் போருக்குப் பின்னர் (After the First World War):

முதலாம் உலகப் போர் கற்பித்த பாடத்தின் காரணமாக, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதற்காகவும், சர்வதேச கூட்டுறவை வளர்ச்சியுறச் செய்யவும் சர்வதேச அமைப்பு ஒன்று நிருமாணிக்கப்பட வேண்டியது அவசிமென அய்ரோப்பா உணர்ந்தது. முதலாம் உலகப் போருக்குப் பின்னிட்டு, வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையானது **(Treaty of Versailles)** 'சர்வதேச சங்கம்' **(League of Nations)** அமைவதற்கு அடித்தளமாக விளங்கியது. இச்சங்கம், 'நிலையான சர்வதேச நீதிமன்றம்' **(Permanent International Court of Justice)** எனும் மற்றொரு அமைப்பையும் தன்னகத்தே கொண்டு விளங்கியது. மேலும் 1925–ஆம் ஆண்டில் ஏற்பட்ட லோகார்னோ உடன்படிக்கையின் **(Treaty of Locarno)** வாயிலாக, சில முக்கியமான அய்ரோப்பிய நாடுகள் தங்களுக்குள் ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு எதிராக படை பலத்தைப் பயன்படுத்தக் கூடாது என்று உறுதிமொழி பூண்டன. மேலும் நாடுகள் தங்களுக்குள் ஏற்படும் தகராறுகளை சர்வதேச சங்கம் வகுத்துள்ள விதிமுறைகளின்படி சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்ள வேண்டும் என்று அவ்வுடன்படிக்கை வலியுறுத்தியது. அதுபோல் 1928–ஆம் ஆண்டில் ஏற்பட்ட கெல்லோக்–பிரையண்ட் ஒப்பந்தமானது **(Kellogg-Briand Pact)** சர்வதேச தகராறுகளை தீர்த்துக் கொள்வதற்கு போரை ஒரு கருவியாக பயன்படுத்துவது கண்டிக்கத்தக்கது என்றும், அத்தகராறுகளை அமைதியான முறையில் தீர்த்துக் கொள்வோம் என்று உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும் உறுதிபூண வேண்டும் என்றும் வலியுறுத்தியது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் (After the Second World War):

மேற்கண்ட உடன்படிக்கைகளையும், ஒப்பந்தத்தையும் செர்மன் நாடு

புறக்கணித்தது. இதனால் இரண்டாம் உலகப் போர் மூண்டது. இதன் பின்னர் நாட்டிடைச் சட்டம் குறித்த துறையில் இரண்டு முக்கிய முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அவை,

(அ) அய்க்கிய நாடுகள் சபை (United Nations Organisation-UNO), உலக சுகாதார அமைப்பு (WHO), சர்வதேச தொழிலாளர் அமைப்பு (International Labour Organisation-ILO) போன்ற பல சர்வதேச அமைப்புகள் நிருமாணிக்கப்பட்டன. மேலும் அய்க்கிய நாடுகள் சபையின் ஒரு அங்கமாக 'சர்வதேச நீதிமன்றம்' (International Court of Justice) கொண்டு வரப்பட்டது. முதலாம் உலகப் போருக்குப் பின், உலக அமைதியை நோக்கமாகக் கொண்டு அமைக்கப்பட்ட சர்வதேச சங்கத்தின் (League of Nations) செயற்பாடுகள் தோல்வியுற்றதால், இரண்டாம் உலகப் போர் மூண்டது. எனவே 'சர்வதேச சங்கத்திற்குப்' பதிலாக, அய்க்கிய நாடுகள் சபையும், 'நிலையான சர்வதேச நீதிமன்றத்திற்குப்' பதிலாக (Permanent International Court of Justice), சர்வதேச நீதிமன்றமும் மேற்கண்டவாறு அமைக்கப்பட்டது.

(ஆ) மற்றொரு முக்கிய முன்னேற்றம் யாதெனில், நாட்டிடைச் சட்டத்தைப் பயன்படுத்த தனிநபர்களும் முன்வந்ததாகும். அஃதாவது, மனிதனாகப் பிறந்ததன் காரணமாக அவனிடத்தில் இயற்கையாகவே பொதிந்துள்ள மனித உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டன. அவை பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் பிரகடனத்தால் பாதுகாக்கப் பெற்றன. அதுபோல் சர்வதேச குற்றவியல் சட்டத்தை (International Criminal Law) மீறும் தனிநபர்களை தண்டிக்க புதிய விதிகள் உருவாக்கப்பட்டன. சர்வதேச குற்றவியல் நீதிமன்றமும் நிறுவப்பட்டது. இவையெல்லாம் நாட்டிடைச் சட்டத்தின் முக்கிய வளர்ச்சியையும், தனிநபர்களும் நாட்டிடைச் சட்டத்திற்கு உட்பட்டவர்களே என்பதையும் மறைமுகமாக பறைசாற்றுகின்றன.

(7) நாட்டிடைச் சட்டத்தின் இன்றைய நிலை (The Present Day Status of International Law):

நாட்டிடைச் சட்டத்தில் ஆர்வம் கொண்டுள்ள எவரும், நாட்டிடைச் சட்டத்தில் இன்று ஏற்பட்டுள்ள பல்வேறு வளர்ச்சிகளை பின்வருமாறு காணலாம். அவை,

(அ) நாடுகளுக்கிடையிலான உறவுகளை மேம்படுத்தவும், ஒழுங்கு படுத்தவும் நாட்டிடைச் சட்டம் அவசியம் என்பதையும், நாட்டிடைச் சட்டம் இல்லாது போனால், அவ்வுறவுகளை பேணி வளர்ப்பது கடினம் என்பதையும் நாடுகள் இன்று பெருமளவில் உணர்ந்துள்ளன.

(ஆ) 20–ஆம் நூற்றாண்டின் முற்பாதியில், நாடுகளின் உறவும், தொடர்புகளும் அதிகரித்தன. ஒரு நாடு, மற்றொரு நாட்டை சார்ந்திருத்தல் நன்மை பயக்கக் கூடியது என்று நம்பின. எனவே அவ்வுறவுகளை வலுப்படுத்த பரஸ்பர

உடன்படிக்கைகளில் ஈடுபட வேண்டியது அவசிமென்றும், வெறும் நாட்டிடை வழக்காறுகளும், வழக்கங்களும் மட்டுமே போதுமானதல்ல என்றும் கருதப்பட்டது. எனவே சர்வதேச அளவில் பல்வேறு உடன்படிக்கைகள் ஏற்பட்டன. அதன் வாயிலாக நாட்டிடைச் சட்ட விதிகள் வகுக்கப் பெற்றன. அவ்வுடன்படிக்கைகள் நாட்டிடைச் சட்டத்தை உருவாக்கும் உடன்படிக்கைகளாக விளங்குகின்றன. இதனை சர்வதேச சட்டமியற்றல் (International Legislation) என்று அறிஞர்கள் போற்றுகின்றனர்.

(இ) நாடுகளுக்கிடையிலான தகராறுகளை, பூசல்களை சர்வதேச இசைவுத்தீர்வு முறை மூலம் சுமூகமான வழியில் தீர்த்துக் கொள்ள பல்வேறு அமைப்புகள் உருவாக்கப்பட்டன. பிரச்சனைக்கு போர் ஒன்றே தீர்வல்ல; சமாதானப் பேச்சு வார்த்தைகளும் பயனளிக்கக் கூடியதே எனும் கருத்து மலர்ந்தது. உலகில் அமைதி நிலவ வேண்டும்; அதற்காக நாடுகள் பாடுபட வேண்டும் என்ற புதிய நோக்கு எழுந்தது.

(ஈ) நாட்டிடைச் சட்டத்தைத் தொகுக்கவும், அதன் தொடர்ச்சியான வளர்ச்சிக்காகவும் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதன் பொருட்டு, அய்க்கிய நாடுகளால் அமைக்கப்பட்ட 'சர்வதேச சட்ட ஆணையம்' (International Law Commission) ஆற்றிய பணி குறிப்பிடத்தக்கது.

(உ) நிலையான சர்வதேச அமைப்புகள் பலவும் உருவாக்கப்பட்டு, அவை நாட்டிடைச் சட்டத்தின் சீரான வளர்ச்சிக்கு அடிகோலின.

(ஊ) நாடுகளுக்கிடையிலான உறவுகளைப் பலப்படுத்த பல்வேறு சர்வதேச உச்சி மாநாடுகள், மாநாடுகள், கூட்டங்கள் இன்று நடத்தப் பெறுகின்றன.

(எ) நாட்டிடைச் சட்டத்தின் எல்லை விரிவாகியது. நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக நலன்கள் பலவற்றை மட்டும் காப்பதோடு நாட்டிடைச் சட்டம் நின்று விடாமல், இன்று மனிதர்களின் அடிப்படை சுதந்திரங்களையும், மனித உரிமைகளையும் காக்கும் பணியிலும் நாட்டிடைச் சட்டம் ஈடுபட்டுள்ளது. இது நாட்டிடைச் சட்டத்தின் மிக முக்கியமானதொரு வளர்ச்சியாகும்.

(ஏ) நாட்டிடைச் சட்டம் மலர்ந்ததால் பல்வேறு சிந்தனையாளர்களின் கருத்துகளுக்கு இருந்த செல்வாக்கு சரிந்தது. நாட்டிடை தீர்ப்பாயங்கள் வழங்கும் முடிவுகளுக்கும், நாடுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கும், ஏற்பு விதிகளுக்கும் முக்கியத்துவம் ஏற்பட்டது.

(ஒ) 1955–ஆம் ஆண்டில் ஆசிய–ஆப்பிரிக்க நாடுகள் (Afro-Asian States), 'அணி சேரா இயக்கத்தைத்' **(Non-Alligned Movement - NAM)** தொடங்கின. உலகளவில் செயற்படும் பொதுவுடைமை அணி, முதலாளித்துவ அணி ஆகியவற்றிலிருந்து விலகிச் செயற்படும் வெளியுறவுக் கொள்கையை அணி சேராக் கொள்கை எனலாம். நாடுகள் தங்கள் வெளியுறவில் ஒரு சுதந்திரமான விருப்பத்தையும் செயல்முறையையும் கொண்டு செயல்படுவதற்கு இவ்வியக்கம் வழி

கோலுகிறது. இது நாட்டிடைச் சட்டத்திற்கு சவாலாக அமைந்திருந்த பல பிரச்சனைகளுக்கு விடை பகர்ந்தது.

(ஒ) 1985–ஆம் ஆண்டில் தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பாக, பிராந்தியக் கூட்டுறவிற்கான தெற்காசியச் சங்கம் **(South Asian Association for Regional Co-operation - SAARC)** மலர்ந்தது. இதில் இந்தியா, பாகிஸ்தான், வங்காளதேசம், இலங்கை, நேபாளம், பூடான், மாலத்தீவுகள் ஆகிய ஏழு நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்நாடுகள் இதற்கான சாசனத்தில் கையொப்பமிட்டு, தங்களுக்கிடையில் எழும் பல சமுதாய மற்றும் பொருளாதார பிரச்சனைகளை நல்லெண்ண பேச்சு வார்த்தைகளின் மூலம் தீர்த்துக் கொள்ள முன்வந்தன.

நாட்டிடைச் சட்டத்தின் இன்றைய வளர்ச்சியின் காரணமாக, அதன் வரையறையில் ஏற்பட்டுள்ள மாற்றம் (Change in the definition of International Law due to its present day development):

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர், நாட்டிடைச் சட்டம் கணிசமான அளவில் முன்னேறி உள்ளது; வளர்ச்சி கண்டுள்ளது; அதன் பரவெல்லை (scope) விரிவடைந்துள்ளது. பொதுவாக நாட்டிடைச் சட்டம் நாடுகளுக்கிடையில் அமைதியை மட்டும் பேணிக்காக்கிறது; அது நாடுகளுக்கு நீதி கிடைக்க வழி செய்வதில்லை எனும் கருத்து மறைந்தது. மேலும் நாட்டிடைச் சட்டம், போர் அல்லது அமைதியைக் குறித்ததாக மட்டும் உள்ளது எனும் கருத்தும் வலுவிழந்தது. நாட்டிடை உறவுகள், நாட்டிடை பழக்க வழக்கங்களால் ஏற்பட்ட விதிகளால் நெறிப்படுத்தப்படுகின்றன என்ற கோட்பாடும் செயலிழந்தது. இன்று நாட்டிடைச் சட்டம், நாடுகளுக்கிடையில் அமைதியை நிலவச் செய்வதோடு மட்டுமில்லாமல், அவற்றின் சமூக, பொருளாதார நலன்களின் மேம்பாட்டிற்கும் வகை செய்கிறது. சர்வதேச உடன்படிக்கைகளின் வாயிலாக நாட்டிடைச் சட்ட விதிகள் வகுக்கப் பெற்றன. அதனை மீறும் நாடுகள் மீது பொருளாதார தடைகளை விதிக்கவும், கண்டிக்கவும் அய்க்கிய நாடுகள் சபை அமைக்கப்பட்டது. நாடுகளுக்கிடையிலான பூசல்கள், இசைவுத்தீர்வு முறை மூலம் தீர்க்கப்பட்டன. மனித உரிமைகளுக்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டு, அவை பாதுகாக்கப் பெறுகின்றன. இவ்வாறு இன்றைய நாட்டிடைச் சட்டம் பல்வேறு முன்னேற்றமான நிலைகளில் சர்வதேச அரங்கில் செயல்படுகிறது. இதனால் நாட்டிடைச் சட்டத்திற்கு முன்பு வழங்கப்பட்டு வந்த வரையறைகளில், முற்போக்கான மாறுதல்கள் ஏற்பட்டுள்ளன என்பது மறுக்க முடியாத உண்மையாகும். அந்த வகையில், இந்த 21–ஆம் நூற்றாண்டில் மேலும் முன்னேற்றங்கள் தொடரும் என்பதையும் என்பதையும் இங்கு மறுக்க முடியாது.

முடிவுரை:

நாட்டிடைச் சட்டமென்பது இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சட்டமாக மாறிவிட்டது. நாட்டிடைச் சட்டமென தனியாக ஏதும் இயற்றப்படவில்லையே

என்று எங்கும் தேடுதல் கூடாது. அது மற்ற உள்நாட்டுச் சட்டங்களைப் (Municipal Laws) போல மக்களின் கவனத்திற்கு எளிதில் வருவதில்லை. ஏனெனில் அதனை பாராளுமன்றமோ, சட்டமன்றமோ இயற்றுவதில்லை. நாடுகள் தங்கள் நாட்டிடை செயற்பாடுகளை ஒரு கட்டுக்குள் இயங்கச் செய்விக்க, அது மற்ற நாடுகளுடன் கையொப்பமிட்டுச் செய்து கொள்ளும் உடன்பாடுகளும், ஒப்பந்தங்களும், சாசனங்களும், அதில் பொதிந்துள்ள விதிகளுமே நாட்டிடைச் சட்டமாகிறது. இன்று உலக நாடுகள், அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளாக உள்ளன. அதன் சாசனத்தில் அவை கையொப்பமிட்டுள்ளன. அதில் கூறப்பட்டுள்ள விதிகளை மீறி நடத்தல் கூடாது என்று உறுதிமொழி எடுத்துக் கொண்டுள்ளன. இவ்வாறு நாடுகள் தங்களைத் தாங்களே கட்டுப்படுத்திக் கொண்டு ஒரு ஒழுங்குமுறையுடன் செயல்படச் செய்வதற்காக தாங்களாகவே முன்வந்து உருவாக்கிக் கொண்டது தான் நாட்டிடைச் சட்டம். அய்க்கிய நாடுகள் சபை போன்று எண்ணற்ற அமைப்புகள், கூட்டமைப்புகள், பிராந்திய அமைப்புகள் இன்று ஏற்பட்டுள்ளன. அந்த அமைப்புகளின் சாசனங்களிலெல்லாம் அடிப்படையாக இருக்கும் விதிகள், நாட்டிடைச் சட்ட விதிகளே.

இன்றைய இந்தியாவின் படை பலம் உலகம் அறிந்தது. இருப்பினும் நமது நாடு என்றும் அமைதி விரும்பியாக உள்ளது. சமீபத்தில் கார்கில் நகரில் வலிய போருக்கு வந்த பாகிஸ்தான் மீது, அய்க்கிய நாடுகள் சாசன விதிமுறைகளின்படி சில வகை ஆயுதங்களை நமது நாடு பிரயோகிக்கவில்லை. பல்லாண்டுகளாக நடந்து வரும் இலங்கைத் தமிழர் பிரச்சனையில், சமாதானப் பேச்சு வார்த்தைகளில் தாம் நமது நாடு ஆர்வம் காட்டி வருகிறது. காசுமீரப் பிரச்சனையில் போருக்குப் பின்னிட்டும், நமது நாட்டின் அமைதியான நிலைப்பாட்டைக் கண்டு, பாகிஸ்தான் நல்லெண்ணப் பேச்சு வார்த்தைகளுக்கு முன் வருகிறது; பகைவனையும் நண்பனாக மாற்றக் கூடிய தெளிவு நம்மிடம் உள்ளது. நமது நாடு, நாட்டிடைச் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியது இன்றியமையாதது என்பதை முழுதளவில் உணர்ந்ததன் காரணமாகத் தான், இவ்வாறு பொறுமை காக்கிறது. சுருங்கக் கூறின் நாட்டிடைச் சட்டத்தை பின்பற்றும் நாடுகள் பெருமையே பெறும்.

2. Discuss the contribution made by Gurotius to the Modern International Law and critically examine the aptness of him being called the father of Modern International Law. (நவீன நாட்டிடைச் சட்டத்திற்கு குரோஷியஸ் ஆற்றிய பணிகளையும், அவர் நவீன நாட்டிடைச் சட்டத்தின் தந்தை என்பதை ஒப்புக் கொள்ள இயலுமா என்பதையும் விளக்குக.)

(அல்லது)

Hugo Grotius - Write short notes (ஹீயூகோ குரோஷியஸ் – சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

நாம் முன் சென்ற வினாவின் விடையில் நாட்டிடைச் சட்டத்திற்கான பல்வேறு வரையறைகளையும், அதன் தோற்றத்தையும் விரிவாக அறிந்தோம். நாட்டிடைச் சட்டம் என்பது இயற்றப்பட்ட ஒரு சட்டமல்ல; அது பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளின் வாயிலாக விளைகிறது என்றும் கண்டோம். நாட்டிடைச் சட்டத்திற்கு உதாரணமாக அய்க்கிய நாடுகள் சபையின் அமைப்புச் சாசன விதிகளைக் கூறலாம். தூதரக விதிகள், நாடுகளிடையே எழும் உடன்படிக்கை விதிகள் ஆகியவைகளையும் குறிப்பிடலாம்.

நாட்டிடைச் சட்டத்தில் இரு பிரிவுகள் உள்ளன. அதாவது (1) சில நாடுகளிடையே மட்டும் வழங்கப்படும் சில விதிகள் பிராந்திய அல்லது வட்டார நாட்டிடைச் சட்டம் **(Regional International Law)** எனப்படுகிறது. உதாரணமாக மன்றோக் கோட்பாடு, பிராந்தியக் கூட்டுறவிற்கான தெற்காசியச் சங்கம் **(South Asian Association for Regional Co-operation - SAARC)** ஆகியவற்றைக் குறிப்பிடலாம். மிக அதிகமான நாடுகளால் பின்பற்றப்படும் விதிகள், 'பொது நாட்டிடைச் சட்டம்' **(General International Law)** எனப்படுகிறது. உதாரணமாக 1856–ஆம் ஆண்டின் பாரீஸ் நகரத்து பிரகடனத்தையும், அய்க்கிய நாடுகள் சபையின் அமைப்புச் சாசனத்தின் விதிகளையும் கூறலாம். சுருங்கக் கூறின் நாடுகளின் உறவுமுறைகளை பொதுவாக, இணக்கமாக நெறிப்படுத்துவது தான் நாட்டிடைச் சட்டமாகும். ஒப்பன்ஹெய்ம் என்ற அறிஞர், "நாடுகளிடையே எழும் உறவு முறைகளை நெறிப்படுத்தும் வழக்கம் சார்ந்த உடன்படிக்கை வழியான வழிமுறைகளையே நாட்டிடைச் சட்டமெனக்" கூறுகிறார். ஆனால் மேற்கண்ட கருத்துகள் சரியானபடிக்கு வடிவம் பெற மிகவும் உதவியவர், ஹூயூகோ குரோஷியஸ் **(Hugo Gurotius)** எனும் அறிஞர்தாம்.

ஹூயூகோ குரோஷியஸ் - வாழ்க்கை குறிப்பு :

சட்ட நிபுணர்கள் பலர், பல விளக்க நூல்களை எழுதி நாட்டிடைச் சட்டத்தின் வளர்ச்சிக்கு துணை புரிந்தனர் என்றாலும், அவர்களில் மிக மிக முக்கியமானவர் அறிஞர் ஹூயூகோ குரோஷியஸ்தாம். இவர் 1583–ஆம் ஆண்டில் ஏப்ரல் மாதம் 10–ஆம் தேதி ஹாலந்து நாட்டின் டெல்ப் **(Delft)** என்ற இடத்தில் பிறந்தார். இவர் தமது 15–வது வயதிலேயே, ஆர்லியன்ஸ் பல்கலைக்கழகத்தில் சட்டப்படிப்பில் முனைவர் (Doctor of Law) பட்டத்தைப் பெற்றார். இதற்கு முன்பே இவர் ஒரு நல்ல எழுத்தாளர், பெரிய சட்ட மேதை, புலவர் என்றும் புகழ் பெற்றிருந்தார். 16–வது வயதில் வழக்கறிஞராகத் தொழில் ஆரம்பித்தார்.

இவர் நாட்டிடைச் சட்டத்திற்கு ஆற்றிய பணி :

இவர் 1621–ஆம் ஆண்டில் சில சூழ்நிலைகளின் காரணமாக பாரிசுக்கு

செல்ல நேரிட்டது. அங்கிருந்து கொண்டே, இவர் 1625–ஆம் ஆண்டில் போர்கால மற்றும் அமைதிக்கால விதிகள் (***De jure belli ac pacis***) (ஆங்கிலத்தில், **Of the law of wars and peace**) என்ற நூலை வெளியிட்டார். இந்த அரிய நூல் இவருக்குப் பெரும் புகழை சர்வதேச அரங்கில் தேடித் தந்தது. நாட்டிடைச் சட்டத்தின் பிற்கால வளர்ச்சிக்கு இந்நூல் அடித்தளமாக அமைந்தது என்றால் அது மிகையாகா. இந்நூலின் வாயிலாக இவர் உணர்த்திய கருத்துக்கள் வருமாறு.

1. இவர் தனது மேற்படி நூலின் மூலம் ஒரு முறையான ஒழுங்கமைவுடன் கூடிய நாட்டிடைச் சட்டத்தை (systematisation of international law) வகுக்க முனைந்தார். அஃதாவது நாட்டிடைச் சட்டமென்பது இப்படி இருக்க வேண்டும் என்று உலகிற்கு இவர்தான் உணர்த்தினார்.

2. இவர் தனிநபர்களும், தனிநபர்களை உள்ளடக்கிய நாடுகளும் ஒன்றே என்று கூறினார். நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் நாடுகள்தாம் என்றும், தனிநபர்களின் செயற்பாடுகளை சட்டம் எவ்வாறு ஒழுங்குபடுத்துகிறதோ அவ்வாறே நாட்டிடைச் சட்டம் நாடுகளின் செயற்பாடுகளையும், நாடுகளுக்கிடையிலான உறவுகளை நெறிப்படுத்துகிறது என்று மேலும் கூறினார்.

3. நாட்டிடைச் சட்டத்திற்கு அடிப்படையே இயற்கை நெறிச் சட்டம்தான் (Law of nature is the basis of international law) என்று எடுத்துரைத்தார். இயற்கை நெறிச் சட்டத்தின் அடிப்படை, மனித சுபாவத்திலேயே உள்ளது என்றும், மனிதனிடத்தில் இயற்கையாகவே அமைந்திருக்கும் உரிமைகளைப் பாதுகாத்தல், ஈகை, கொடை, அறநெறி, காரண காரியத்தை ஆராய்தல் ஆகிய குணங்களே, நாட்டிடைச் சட்டத்திற்கும் அடிப்படையாகும் என்று கூறினார். தொன்மைக் காலத்தில் தோன்றிய கிரேக்கர்களின் இயற்கை நெறிச் சட்டக் கோட்பாடுகளில், மதத்தின் தாக்கம் அதிகளவில் இருந்தது. ஆனால் ஹூயூகோ குரோஷியஸ்தாம், இயற்கை நெறிச் சட்டத்தை முதன்முதலில் மதச் சார்பற்றதாக (secularised the concept of law of nature) ஆக்கியவர். இத்தகு இயற்கை நெறிச் சட்டத்தின் பெயரில் சட்ட விதிகளை உருவாக்கி அவற்றை நாடுகளின் பரஸ்பர உறவுகளுக்கு பொருந்தும்படி இவர்தான் முதலில் ஆக்கினார்.

4. மேலும் இவர் நாடுகளுக்கிடையே நிலவி வந்த பல்வேறு பழக்க வழக்கங்களையும் முறையான சட்ட விதிகளாக்க முயன்றார்.

5. நியாயத்திற்கான போர், நியாயமற்ற போர் (just and unjust wars) எனும் இவையிரண்டிற்கும் இடையிலுள்ள வேறுபாடுகளை தெளிவாகச் சுட்டிக் காட்டினார். நாடுகள் தங்கள் மனம் போனபடி போர் தொடுப்பதற்கு அவைகளுக்கு எல்லையில்லா உரிமை உள்ளது எனும் கருத்தை வன்மையாகக் கண்டித்தார்.

6. மேலும் நியாயத்திற்காக போர் தொடுக்கும் நாடுகளுக்கு பிற நாடுகள் உதவி புரிதல் வேண்டும் என்றும் பரிந்துரைத்தார்.

7. சர்வதேச அரங்கில் கொடுக்கப்படும் வாக்குறுதிகளுக்கும், நாடுகள் ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கைகளுக்கும் அவை கட்டுப்பட்டு நடத்தல் வேண்டும் என்று நாடுகளைக் கட்டாயப்படுத்தினார்.

8. நாடுகளுக்கிடையிலான தகராறுகளை, பிரச்சனைகளை பேச்சு வார்த்தைகள் மூலம் சுமூகமான முறையில் தீர்த்துக் கொள்ளவே நாடுகள் பெரிதும் முயல வேண்டும் என்று வலியுறுத்தினார்.

9. இவர் தனது மேற்படி நூலில் போர்கால விதிகளையும், அமைதிக்கால விதிகளையும் மிக விரிவாக விளக்கியிருந்தாலும், அமைதிக்கால விதிகளுக்கே அதிக முக்கியத்துவம் கொடுத்திருந்தார். இவரது எண்ணமெல்லாம், போரை வேரறுக்க வேண்டும்; உலகில் அமைதி நிலவ வேண்டும் என்பதே.

மேற்கண்ட கருத்துக்கள், நாட்டிடைச் சட்டம் ஒரு ஒழுங்கான மற்றும் புதிய வடிவத்தைப் பெற உதவின. எனவே இவரை 'நவீன நாட்டிடைச் சட்டத்தின் தந்தை' **(The Father of Modern International Law)** என்று உலகம் போற்றியது.

இவர் 'நவீன நாட்டிடைச் சட்டத்தின் தந்தை' என்பதை ஒப்புக் கொள்ளவியலுமா?

உலகம் எதையும் எளிதில் ஒப்புக் கொள்வதில்லை. எதற்கும் முரண்பட்ட கருத்துக்கள் தயாராக இருக்கும். அந்த வகையில் அறிஞர் குரோஷியஸ் கூறிய மேற்படி கருத்துக்களில் குற்றங்குறை காண சிலர் அப்பொழுது இருக்கத்தான் செய்தனர். அவர்கள், குரோஷியஸ் கூறிய கருத்துக்களுக்கு பின்வருமாறு குறை கூறினர். அவை,–

1. போர்க்கால மற்றும் அமைதிக்கால விதிகள் குறித்து குரோஷியஸ் கூறிய கருத்துக்கள், மூடத்தனமானது என்றும், பகுத்தறிவிற்கு உட்படாதது என்றும் கூறினர்.

2. நாட்டிடைச் சட்டத்திற்கான அடிப்படை எது என்பதை வகுப்பதில், காரிண–காரிய விதிகள் (logical) எதையும் குரோஷியஸ் பின்பற்றவில்லை என்றும், அவர் கூறிய அடிப்படை, இயற்கைவாதத்தினருக்கு உரியதாகவோ அல்லது மெய் வாதத்தினருக்கு உரியதாகவோ இல்லை என்றும் பரிகாசித்தனர். இரண்டும் கலந்த கலவையாக உள்ளது என்றும் கூறினர்.

இதனால் இவரை நாட்டிடைச் சட்டத்தின் தந்தை என்று அழைத்தல் கூடாது என்று கூறினர். ஆனால் குரோஷியஸின் கருத்துக்களில் மேற்கண்ட சில குறைகள் இருந்தாலும், நாட்டிடைச் சட்டத்திற்கு ஒரு ஒழுங்கமைவை ஏற்படுத்திக் கொடுத்தவர் எனும் வகையிலும், நாட்டிடை உறவுகளுக்கென ஒரு வகையான சட்டத்தை உருவாக்கிக் கொடுத்தவர் எனும் வகையிலும், இவரை 'நவீன நாட்டிடைச் சட்டத்தின் தந்தை' என்று அழைப்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்.

சட்டவியல் முதறிஞர்

ஹயூகோ குரோஷியஸ்

நவீன நாட்டிடைச் சட்டத்தின் தந்தை

(1583–1645)



அறிஞர் ஹ்யூகோ குரோஷியஸ் எழுதிய 'போர்க்கால மற்றும் அமைதிக்கால விதிகள்' (De jure belli ac pacis) எனும் நூலின் உட்பக்க படங்கள். முதற்படத்தில் அறிஞர் ஹ்யூகோ குரோஷியஸ் காட்சியளிக்கிறார். இரண்டாம் படம், போர்க்காலத்தையும், அமைதிக்காலத்தையும் சித்தரிப்பதாக உள்ளது.

2

நாட்டிடைச் சட்டத்தின் தன்மை
[Nature of International Law]

3. Define International law. Explain its nature and scope. (நாட்டைச் சட்டத்திற்கு வரையறை தருக. அதன் தன்மை மற்றும் எல்லையை விளக்குக.)

(அல்லது)

Discuss critically Austin's view that International Law is not true but rules of positive international morality. (நாட்டிடைச் சட்டம் உண்மையில் சட்டமல்ல, அது ஆக்க முறையான நாட்டிடை ஒழுக்க நெறியாகும் என்ற ஆஸ்டினுடைய நோக்கினை திறனாய்வு செய்து விவாதிக்க.)

(அல்லது)

"International law is merely positive morality" - Critically examine this statement. ("நாட்டிடைச் சட்டம் வெறும் அறநெறி முறையே ஆகும்" – இக்கூற்றினை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Discuss the validity of International Law as law.(நாட்டிடைச் சட்டத்தின் சட்டரீதியான செல்லுடைமையை ஆராய்க:)

(அல்லது)

Is International Law a true law? Discuss. (நாட்டிடைச் சட்டம் உண்மையில் ஒரு சட்டமா? விவாதிக்க.)

(அல்லது)

"International Law is not true law; but a code of rules of

conduct of moral force only"-Austin. Examine.(நாட்டிடைச் சட்டம் உண்மையில் சட்டமல்ல; அது ஒழுக்கமுறையினால் வலியுறுத்தப்படும் நடத்தை விதிகளின் தொகுப்பாகும்" – ஆஸ்டின். ஆராய்க.)

(அல்லது)

Discuss critically

(a) Austin's view that International Law is not true law but rules of positive international morality; and

(b) the view that International law, though law is still a weak law.

திறனாய்வு செய்து விவாதிக்க :

(அ) நாட்டிடைச் சட்டம் உண்மையில் சட்டமல்ல, அது ஆக்க முறையான நாட்டிடை ஒழுக்க நெறியாகும், என்ற ஆஸ்டினுடைய நோக்கு.

(ஆ) நாட்டிடை சட்டம், சட்டமாக இருந்தாலும், அது இப்பொழுதும் ஒரு வலிமை குறைந்த சட்டமே என்ற நோக்கு.

(அல்லது)

"Almost from the beginning of the science of the Law of Nations, the question has been discussed whether the rules of International law are legally binding." Explain. ("அநேகமாக நாடுகள் சட்ட அறிவியல் ஆரம்பகால முதற் கொண்டு, நாட்டிடைச் சட்ட விதிகள் சட்ட முறையான கட்டுப்பாடு உடையவையா என்னும் கேள்வி கூர்ந்து ஆராய்ப்பட்டு வந்திருக்கிறது." விளக்குக.)

முன்னுரை:

சமுதயா நல்வாழ்விற்கு சட்டம் இன்றியமையாத ஒன்று. இன்று, பல நாடுகளைக் கொண்ட ஒரு சமுதாயமாகவே, உலகம் விளங்குகிறது. உலக நாடுகள் ஒன்றுக்கொன்று பல வகைகளில் தொடர்பு கொண்டுள்ளன. வாணிபம், செய்தித் தொடர்புகள், தொலைத்தகவல் தொடர்பு, போக்குவரத்து என்று எத்துணையோ துறைகளில் உலக நாடுகளின் தொடர்பு, வளர்ந்துள்ளது. இத்தொடர்புகள் ஒழுங்காக இயங்குவதற்கான உறவு முறைகள் நாடுகளிடையே நிலவ வேண்டும். நீண்ட நாளைய வழக்காறுகளும், மரபுகளும் நாடுகளிடையேயான உறவு முறைகளை வகுத்து உள்ளன. நாடுகளுக்கிடையேயான ஒப்பந்தங்களையும், உறவு முறைகளையும் பேணி நடக்கும் கடமை, உலக நாடுகளுக்கு உள்ளது. இன்றேல், நாடுகளிடையே எழும் ஒப்பந்தங்கள் பொருளற்றனவாகி விடும். இவ்வாறு, உலக நாடுகள் தம்மிடையே ஓர் ஒழுங்குக்கு உட்பட்டு இயங்குவதால், அந்த ஒழுங்கை 'நாடுகளின் சட்டம்' (Law of Nations) என்று சட்டவியலறிஞர்கள் கூறுவார்கள்.

'நாடுகளின் சட்டம்' என்றால் நாடுகளுக்கு மேலான சட்டம் என்ற பொருள்படும் என்பதால், சட்டவியல் அறிஞர் **ஜெரிமி பெந்தாம்** இச்சட்டத்தை நாடுகளிடையே எழும் சட்டம் எனும் பொருளில், 'நாட்டிடைச் சட்டம்' (International Law) என்று குறிப்பிடுகிறார். இவர்தான் நாடுகளுக்கிடையிலான உறவு முறைகளை நெறிப் படுத்தும் விதிகளை **'International Law'** எனும் ஆங்கிலப் பதம் கொண்டு முதலில் அழைத்தவர். அதுவரை **'Law of Nations'** என்றுதான் வழங்கப்பட்டுவந்தது.

நாட்டைச் சட்டம் - வரையறை:

நாம் வினா எண். 1–ல் நாட்டிடைச் சட்டத்திற்கு பல்வேறு அறிஞர்கள் கொடுத்துள்ள வரையறைகளை ஏற்கனவே விரிவாகக் கண்டுள்ளோம். அந்த வகையில் அறிஞர் **வீட்டன் (Wheaton)** அவர்கள், "வழக்காறு அல்லது நாட்டிடை ஒப்பந்தம் (treaty) இவற்றால் எழும் விதிமுறைகளுக்கு இசைந்து நாகரிக நாடுகள் தம்மிடையே எழும் உறவுகளை வகுத்து நடக்க கடமைப்பட்டுள்ளன. இவ்விதிமுறைகள் மீறப்பட்டால், அதனால் தீங்குற்ற நாடு அதற்கான தீங்கீடு பெறுவதற்கு உரிமை உடையதாகும். இந்த விதிமுறைகளே நாட்டிடைச் சட்டம் என்பது," என்கிறார்.

நாட்டிடைச் சட்டம் உண்மையில் ஒரு சட்டமா ? :

நாட்டிடைச் சட்டம் உண்மையில் ஒரு சட்டமா, என்ற வினாவிற்கு இரு தரப்பினர் விடையளிக்கின்றனர்.

ஆஸ்டின் (Austin), ஜெரிமி பெந்தாம் (Bentham) ஆகிய அறிஞர்களைக் கொண்ட ஒரு சிந்தனைக் குழு (School of Thought) நாட்டிடைச் சட்டத்தை, ஒரு ஆக்க முறையான நாட்டிடை ஒழுக்க நெறி முறை (Positive morality) என்று குறிப்பிடுகின்றனர். அதாவது நாட்டிடைச் சட்டம் ஒரு சட்டமல்ல என்பது அவர்கள் கருத்து.

ஒப்பன்ஹைய்ம் (Oppenheim), ஸ்டார்க் (Starke) ஆகியவர்களைக் கொண்ட மற்றொரு சிந்தனைக் குழு, நாட்டிடைச் சட்டம் ஒரு முறைப்படியான சட்டமே என்று கூறுகின்றனர். மேற்கண்ட இரண்டு சிந்தனைகளையும் நாம் சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போமா?

நாட்டிடைச் சட்டம் ஒரு ஒழுக்க நெறிமுறைதான் எனும் கருத்து (அல்லது) நாட்டிடைச் சட்டம் பற்றி அறிஞர் ஆஸ்டினின் நோக்கு :

ஆஸ்டினின் கருத்துப்படி 'சட்டம்' என்பது அரசாண்மையரால் தமக்குப் பணிந்து நடப்போருக்கு இடும் ஆணையாகும். அரசாண்மை (இறைமை) உடைய நாடுகளுக்கு மேலாக வேறு அரசாண்மையர் இருத்தல் இயலாது. நாடுகள் அனைத்தும் சம நிலையில் உள்ளவை. எனவே, அவை ஒப்புக் கொண்ட விதிகளை,

ஆணைகள் என்று கொள்வதும் பொருந்தாது. அதனால், அவ்விதிகளைச் 'சட்டம்' என்று சொல்வதற்கில்லை. மேற்கண்ட கருத்திலிருந்து பின்வரும் விஷயங்கள் தெளிவாகின்றன.

(1) நாடுகள் அனைத்தும் சமநிலையில் உள்ளவை. ஆகவே ஒரு நாட்டின் சட்டம், மற்றொரு நாட்டைக் கட்டுப்படுத்தாது. அதாவது அரசாண்மையுடைய நாடுகளுக்கெல்லாம் மேலாக வேறு அரசாண்மை கிடையாது (No sovereign).

(2) நாடுகள் ஒப்புக் கொண்ட விதிகளை வலியுறுத்திச் செயல்படுத்துவதற்கு என அமைப்பு ஏதும் கிடையாது (No enforcement machinary).

(3) மேலும் சாதாரணச் சட்டத்தை மீறினால் தண்டனை உண்டு. நாட்டிடைச் சட்டம் மீறப்பட்டால், தண்டனை என்று ஏதும் இல்லை; தண்டனை விதிப்பதற்கான மேலுறுத்தம் (No sanction) என்று ஏதும் இல்லை.

'சட்டம்' என்பது ஒரு அரசாண்மையரும், அது இயற்றும் சட்டங்களை செயல் படுத்தக் கூடிய ஒரு அமைப்பும், அதனை மீறுபவர்களுக்கு தண்டனை வழங்கும் தன்மையும் கொண்டதாக, அது இருக்க வேண்டும். ஆனால் இத்தகு தன்மைகளை நாட்டிடைச் சட்டம் கொண்டிருக்கவில்லை. ஆகவே நாட்டிடைச் சட்டம் ஒரு சட்டமல்ல என்றும், அது நாடுகள் தங்களுக்கிடையே மனச்சாட்சியின்படியும் தார்மீக கோட்பாட்டின்படியும் பின்பற்றி வரும் சில ஒழுக்க முறைகளே ஆகும் என்றும் ஆஸ்டின் கூறுகிறார். இந்த ஒழுக்க முறைகளை பின்பற்றியே தீரவேண்டும் என்று கூறவோ அல்லது இவைகளை மீறினால் இன்ன தண்டனை என்று விளம்பவோ யாரும் கிடையாது. சுருங்கக்கூறின் 'திருடினால் தண்டனை உண்டு' என்று கூறுவது சட்டம்; 'திருடுவது பாவம்' என்பது ஒழுக்க முறை (Morality). இந்த இரண்டில் 'திருடுவது பாவம்' என்ற ஒழுக்க முறையின் அடிப்படையில் நாடுகள் செயல்படுகின்றன. எனவே ஆஸ்டின் கூற்றுப்படி, நாட்டிடைச் சட்டம் என்பது ஒரு ஆக்க முறையிலான ஒழுக்க நெறி முறையாகும்; அது உண்மையில் ஒரு சட்டமல்ல.

நாட்டிடைச் சட்டம், சட்டம்தான் என்பவர்களின் கருத்து:

சட்டத்திற்கு ஆஸ்டின் கூறியுள்ள இலக்கணத்தை வரைகல்லாக வைத்து நாட்டிடைச் சட்டத்தை ஆய்வது பொருந்தாது. ஏனென்றால், சட்டத்திற்கு ஆஸ்டின் கூறுகின்ற இலக்கணமே தவறானது. 'சட்டம்' என்பது ஆணையாக இருக்க வேண்டும் என்பதன்று. சமுதாய மக்கள் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும் என்று தங்களுக்குள் இசைவதால் எழுவதே சட்டமாகும். இங்கு நாடுகள் ஒன்றுக்கொன்று இசைந்து தங்களைக் கட்டுப்படுத்தக் கூடிய விதிமுறைகளை உருவாக்கி அவற்றை ஏற்றுக் கொள்கின்றன. எனவே, அவைகளும் சட்ட விதிகளைப் போன்றவைதாம் என்று கூறுகின்றார், அறிஞர் **ஓப்பன்ஹெய்ம்.**

நாட்டிடைச் சட்டத்தை மீறினால் தண்டனை கிடையாது என்பதால் மட்டுமே, நாட்டிடைச் சட்டத்தை, சட்டமல்ல என்று கூற முடியாது. நாட்டிடைச் சட்டத்தை, ஒரு நாடு மீறினால் அந்நாட்டின் மீது பொருளாதாரத் தடைகளை விதிப்பதின் மூலமாகவும், போரின் மூலமாகவும் தண்டனை அளிக்கலாம். (எடுத்துக் காட்டாக, வளைகுடாப் போரில் ஈராக் நாட்டின் அநியாயப் பிடியிலிருந்து குவைத்தை மீட்க, அமெரிக்கா தனது இராணுவப் படைகளை அனுப்பி அவர்களை விரட்டியது.)

நாட்டிடைச் சட்டம் இவ்வாறு சட்டமாக இருந்தாலும், அது வலிமை குறைந்த சட்டமாகவே (Weak Law) கருதப்படுகிறது. ஏனெனில் நாட்டிடைச் சட்டத்தைச் செயலுறுத்துவதற்கு (enforcement) என்று எவரும் இல்லை. அங்ஙனமே நாட்டிடைச் சட்டம் வலிமை குறைந்ததாக இருந்தாலும் சட்டம், சட்டம் தான் என்று மேலும் கூறுகிறார் அறிஞர் ஒப்பன்ஹெய்ம்.

முடிவுரை :

ஒவ்வொரு நாடும் பிற நாடுகளுடன் கொள்ளும் தொடர்பு நேர்மை, நன்னம்பிக்கை என்ற பண்புகளின் அடிப்படையில்தான் அமைகிறது. காலப் போக்கில் எழுந்த வழக்காறுகள், வழக்கங்கள் ஆகியவை நாட்டிடை உறவு முறைகளை வகுத்தாலும் கூட, அவ்வழக்காறுகள் இன்று மரபுகளாக மட்டும் இல்லை. மரபு வழிச் சட்டங்களாகவும் (Customary law) உள்ளது. அம்மரபுகளைப் பேணும் கடப்பாட்டிலிருந்து நாடுகள் எளிதில் தப்புவது இயலாது. உலக வங்கியிலிருந்து பிறநாடுகள் பெற்றுள்ள கடன்தொகைகளைத் திருப்பிச் செலுத்த வேண்டியது வெறும் அறக்கடமை மட்டுமன்று; சட்டக் கடமையாகவும் உள்ளது. இனி எதிர் காலத்தில் நாட்டிடைச் சட்ட விதிகள் சாதாரணச் சட்டங்கள் போன்று இயங்கினால்தான் உலக அமைதி உறுதி பெறும். இந்த நிலையை நோக்கியே உலக அரசியலும் செல்லுகிறது எனலாம்.

4. Do you agree that International law is the vanishing point of jurisprudence? Give reasons for your answer. (சட்டவியல் மறைந்து போகும் இடந்தான் நாட்டிடைச் சட்டம் என்பதை தாங்கள் ஒத்துக் கொள்கிறீர்களா? உங்கள் விடைக்கு காரணம் தருக.)

(அல்லது)

"International Law is the vanishing point of jurisprudence"- Holland. Discuss ("சாதாரண சட்டம் பற்றிய எண்ணம் மறைந்து போகும் இடத்தில் நாட்டிடைச் சட்டம் தோன்றுகிறது" – ஹாலண்டு. விவாதிக்க.)

அறிஞர் ஹாலண்டு அவர்களின் கருத்து:

"சாதாரண சட்டம் பற்றிய எண்ணம் மறைந்து போகும் இடந்தான்,

நாட்டிடைச் சட்டம் தோன்றும் இடமாகும்'' என்று அறிஞர் ஹாலண்டு குறிப்பிடுகிறார். இதையே வேறுவிதமாக சொல்வதாக இருந்தால், ''நாட்டிடைச் சட்டம் என்பது சாதாரண சட்டம் என்ற வரம்பிற்குள் (வரையறைக்குள்) வருவதில்லை'' எனலாம்.

விளக்கம்:

''சாதாரண சட்டம்'' என்றால் அது ஒரு அரசாண்மையரால் (Sovereignity) இயற்றப்பட்டிருக்க வேண்டும். அதனைச் செயல்படுத்த, உரிய அதிகாரம் கொண்ட தொரு அமைப்பு இருக்க வேண்டும். அதை மீறினால் தண்டனை (sanction) வழங்கும் அதிகாரமும் இருக்க வேண்டும்

ஆனால் ''நாட்டிடைச் சட்டத்திற்கு'' இவை யாவும் கிடையாது. இங்கு அரசாண்மையர் என்று யாரும் கிடையாது. அனைத்து நாடுகளும் உலக அரங்கில் சம அந்தஸ்து வாய்ந்தவை. எந்நாட்டின் கட்டுப்பாட்டிலும், எந்நாடும் கிடையாது. உதாரணமாக, நாட்டின் தலைவன் அரசன் என வைத்துக் கொள்வோம். அவன் சட்டங்களை இயற்றி மக்களை நெறிப்படுத்தி பாதுகாக்கின்றான். இதில் இரு தரப்பினர்களுக்கு இடையே ஏதேனும் பிரச்சனைகள் எழுந்தால் அதனை நீதிபதி மூலம் தீர்த்து வைக்கின்றான். ஆனால் இரண்டு நாடுகளுக்குள் பிரச்சனை என்று வரும் பொழுது, அதனை தீர்த்து வைக்க நடுவரோ அல்லது பொது ஆளோ யாரும் கிடையாது. அப்படி தீர்த்து வைக்கும் அதிகாரமும் பிறருக்கு இல்லை. மேற்கண்ட வாறு ஒரு அரசன் தன் குடிகளுக்குள் ஏற்படும் பிரச்சனைகளை நீதிபதி மூலம் தீர்த்து வைக்கும் அமைப்பு, நாட்டிடைச் சட்டத்தில் கிடையாது. இதனைத்தான், சாதாரண சட்டம் பற்றி அறிவு மயங்கி இருக்கும் இடத்தில், நாட்டிடைச் சட்டம் உள்ளது, எனக் கூறுகிறார் ஹாலண்டு.

ஹாலண்டு கூறும் கருத்திற்கான காரணம்:

ஹாலண்டு கூறிய மேற்படி கருத்திற்கான காரணம் என்னவென்றால், நாட்டிடைச் சட்டத்தை செயலுறுத்தும் அதிகாரம் இல்லை. இது தனி மனிதனின் நடத்தையைக் கட்டுப்படுத்தாமல் நாடுகளின் நடத்தையை கட்டுப்படுத்துகிறது. 'கட்டுப்படுத்துகிறது' என்று கூறுவதை விட நாடுகள் தங்களை 'கட்டுப்படுத்திக் கொள்கிறது' எனக் கூறுவதுதான் பொருத்தமாகும். நாடுகள் நன்மனசாட்சியின் (good conscience) அடிப்படையில் செயல்படுகின்றன. இது குறித்து ஹாலண்டு மேலும் கூறுகையில், 'நாட்டிடைச் சட்ட விதிகளை நாட்டிடையே நிலவும் ஒழுக்க விதிகள் என்று கூறலாமே தவிர வேறு வகையில் அவற்றைக் குறிப்பிடுவதற்கில்லை' என்கிறார். ஏனென்றால் ஆஸ்டின், ஜெரிமி பெந்தாம் போன்ற அறிஞர்களின் கூற்றுப்படி, நாட்டிடைச் சட்டம்தான் உண்மையில் ஒரு சட்டமே ஆகாதே.

ஹாலண்டு அவர்களின் மேற்படி கூற்றுகள் ஆஸ்டின் அவர்களின் ஆக்க முறையிலான ஒழுக்கநெறிக் கருத்தினை (Positive morality) ஒட்டி உள்ளது. ஆஸ்டின் அவர்கள் ''மக்கள் தலைவன் அரசன், அவன் சட்டமியற்றுகின்றான்.

மக்கள் அச்சட்டத்திற்கு அடிபணிகிறார்கள். கண்டிப்பாக பணிந்தே தீரவேண்டும். சட்டத்தை மீறுபவர்கள் அரசரால் தண்டிக்கப்படுவார்கள்'' என்கிறார்.

நாட்டிடைச் சட்டத்தில் மேற்கண்ட அம்சங்கள் ஏதும் இல்லை. சட்டத்தை இயற்ற ஆளிலில்லை; ஒரு அமைப்பில்லை. அதைச் செயல்படுத்தும் அதிகாரம் எவரிடமும் இல்லை. அதனை மீறினாலும் தண்டனை கிடையாது. இன்று உலகம் முழுவதும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்யப்படவில்லை. 'உலக அரசாங்கம் என்பது நனவாகாதொரு கனவு' (World Government is an Utopia) என்று அன்றே ஒரு அறிஞர் கூறிவிட்டான். தாமாகவே, தார்மீக அடிப்படையில் பணியவும், மீறவும் கூடிய சட்டம் என்று ஒன்று இருக்கிறதென்றால், அது நாட்டிடைச் சட்டம் மட்டுமேயாகும். சாதாரண சட்டத்தின் சங்கதிகள் சற்றும் இங்கு கிடையாது. எனவே சாதாரண சட்டம் பற்றிய அறிவும் எண்ணமும் மறைந்து போகும் இடந்தான் நாட்டிடைச் சட்டம் என்று கூறுவதில் தவறொன்றுமில்லை.

விவாதத்தின் முடிவுரை:

அன்று ஹாலண்டு கூறிய மேற்படி கருத்து இன்றைய நாட்டிடைச் சட்டத்திற்கு பொருந்துமா என்று ஒரு வினாவை எழுப்பினால், **'பொருந்தாது'** என்று தான் கூற வேண்டியிருக்கும். ஏனெனில், இன்று நாடுகள் தங்கள் உறவுகளை ஒழுங்குபடுத்திக் கொள்ள, நெறிப்படுத்திக் கொள்ள பல்வேறு உடன்படிக்கைகளில், ஒப்பந்தங்களில் ஈடுபடுகின்றன. பல்வேறு சர்வதேச மாநாடுகளை நடத்துகின்றன. அவற்றின் பிரகடனங்களில், சாசனங்களில் கையொப்பமிட்டு, அவற்றில் கூறப் பட்டுள்ள விதிகளை ஏற்றுக் கொள்கின்றன. அவ்விதிகள், நாட்டிடைச் சட்டமாக மிளிர்கின்றன. நாடுகளின் விதி மீறலை தட்டிக் கேட்க, அய்க்கிய நாடுகள் சபை உள்ளது. அய்க்கிய நாடுகள் சபையின் ஒரு உறுப்பு நாடு, மற்றொரு உறுப்பு நாட்டின் மீது நியாயமற்ற அடிப்படையில் போர் தொடுக்கும் பொழுது, அய்க்கிய நாடுகள் சபை தனது ஒரு அங்கமான பாதுகாப்புச் சபையின் (Security Council) மூலமாக தனது படைகளை உதவிக்கு அனுப்பலாம். அந்நாட்டின் மீது பொருளா தாரத் தடைகளை விதிக்கலாம். நாடுகளுக்கிடையிலான தகராறுகளை, பூசல்களைத் தீர்க்க சர்வதேச நீதிமன்றம் (உலக நீதிமன்றம்) நிறுவப்பட்டுள்ளது. பல்வேறு சர்வதேச இசைவுத் தீர்ப்பாயங்கள் உள்ளன. இன்று தனிநபர் கூட நாட்டிடைச் சட்டத்திற்கு உட்பட்டவராக உள்ளார். எவரேனும் மனித உரிமைகளை மீறினால், அதை ஒரு புகாராக அய்க்கிய நாடுகள் சபைக்கு அனுப்பலாம். இவ்வாறு இன்று நாட்டிடைச் சட்டம், ஒரு சாதாரண உள்நாட்டுச் சட்டத்திற்குரிய தன்மைகளை பெற்றுள்ளது என்றே கூற வேண்டும். ஹாலண்டு கூறிய மேற்படி கருத்து, நாட்டிடைச் சட்டம் சரிவர வளர்ச்சியடையாதிருந்த அப்பொழுதைய கால கட்டத்தில் வேண்டுமானால் ஏற்புடையதாக இருந்திருக்கலாம். ஆனால் மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் அக்கருத்தை இன்று **'ஏற்புடையதல்ல'** என்று கூறுவதில் தவறொன்றுமில்லை.

3

நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை
[Basis of International Law]

5. Critically examine the theory of positivism as the basis of International Law. (அரசறுத்துச் சட்ட கருத்தியல் நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை என்பதை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Write an essay on the theories as to basis of International law. (நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை குறித்த கோட்பாடுகள் பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

"The Grotians stand midway between naturalists and positivists"- Discuss. ("குரோஷியர்கள் இயற்கை சட்ட கொள்கையினருக்கும் அரசுறுத்துச் சட்டக் கொள்கையினருக்கும் இடையே நிற்கின்றனர்"– விளக்குக.)

(அல்லது)

"The modern law of Nations in particular owes its very existence to the theory of the law of Nature" - Oppenheim. Discuss. ("குறிப்பாக, தற்கால நாட்டிடைச் சட்டம் தன் இருத்தலுக்கே இயற்கைச் சட்டக் கோட்பாட்டிற்கு கடன்பட்டிருக்கிறது" – ஒப்பன்ஹெய்ம். ஆராய்க.)

முன்னுரை:

நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை குறித்த கருத்துக்களைக் கூறிய அறிஞர்களை பின்வரும் இருவகையினராகப் பிரிக்கலாம். (1) இயற்கைச் சட்ட வாதிகள் (Naturalists); (2) அரசுறுத்து சட்ட கருத்தியல் வாதிகள் (Postivists). இவ்விரு குழுவினரின் (Schools) கருத்துக்களும் மாறுபட்டவை. அதே சமயத்தில் ஹூயூகோ

குரோஷியஸ் கூறிய கருத்துக்களைப் பின்பற்றும், 'குரோஷியர்கள்' (Grotians) எனும் அறிஞர்கள், ஒரு இடைநிலையான கருத்தைக் கூறுகின்றனர். விரிவாக வருமாறு.

1. இயற்கைச் சட்டக் கோட்பாடு (Theory of Law of Nature) (அல்லது) இயற்கை வாதியினர் கோட்பாடு (Naturalism Theory) (அல்லது) அடிப்படை உரிமைகள் கோட்பாடு (Theory of Fundamental Rights):

இக்கோட்பாட்டை எடுத்துரைத்த அறிஞர்கள் சாம்யேல் புஃபென்டார்ஃப் (Samuel Pufendorf), வாட்டெல் (Vattel), கிறிஸ்டியன் தாமேசியஸ் (Christian Thomasius) ஆகியோராவர். அறிஞர் ஒப்பன்ஹெய்ம் அவர்களும் ஓரளவு இக்கோட்பாட்டை வலியுறுத்தியவர். இவர்கள் நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை, இயற்கைச் சட்ட நெறியேயாகும் (Law of Nature is the basis of International Law) என்று கூறுகின்றனர். இக்கோட்பாட்டை அறிந்து கொள்ள நாம் முதலில் 'இயற்கைச் சட்டம்' என்பதின் பொருளை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகும். இயற்கைச் சட்டம் என்பதை 'அறநெறி' என்று கூறலாம். நாடுகள் தோன்றுவதற்கு முன்பாக, மனிதன் இயற்கை நிலையில் (State of Nature) வாழ்ந்து வந்தான். அவனிடத்தில் சில அடிப்படை உரிமைகள் இயற்கையாகவே பொதிந்திருந்தன. அவை, சுதந்திர உரிமை, சமத்துவ உரிமை, தற்காப்புரிமை, மதிப்புடன் வாழும் உரிமை ஆகியன. ஒருவர் மற்றொருவரின் மேற்கண்ட அடிப்படை உரிமைகளில் தலையிடுதல் கூடாது எனும் விதி இயற்கையாகவே பின்பற்றப் பட்டது. இந்த விதிதான் இயற்கைச் சட்டமாகும். வேறு விதத்தில் கூறுவதானால், 'மற்றவர்களின் உரிமைகளுக்கு மதிப்பு கொடுப்பதற்கும், அவைகளில் அனாவசி யமாக தலையிடாமல் இருப்பதற்கும், நீதியும் நேர்மையுமான அடிப்படையில் சமுதாயத்துடன் இயைந்து வாழவும், மக்கள் தங்களுக்குள் இயற்கையாகவே வகுத்துக் கொண்ட விதிகளின் வழிவந்த நெறியே, இயற்கைச் சட்டமாகும் எனப் படுகிறது. இது நாட்டிற்கு நாடோ அல்லது காலத்திற்கு காலமோ மாறுபடாது."

ஆதிகாலத்தில் இயற்கைச் சட்டத்தில் மதத்தின் சாயல் அதிகம் இருந்தது. அதாவது 'தப்பு பண்ணினா சாமி கண்ணைக் குத்தும்' என்பதைப் போன்று. ஆனால் இயற்கைச் சட்டத்தை பின்னிட்டு மதத்திலிருந்து பிரித்து, மதச் சார்பற்றதாக ஆக்கிய முதற் பெருமை நாம் முன் கண்ட சட்டவியல் மூதறிஞர் ஹூயூகோ குரோஷியஸ் அவர்களையேச் சாரும். இவர், இயற்கைச் சட்டத்தை **'நியாயத்தின் தொகுப்புவிதி'** (Law of Nature is the **'dictate of right reason'**) என்றழைக்கிறார்.

பின்னிட்டு நாடுகள் தோன்றிய பிறகு, மனிதனுக்குள்ள இயற்கை உரிமைகளைப் போலவே நாடுகளுக்கும் உள்ளன என்றும், ஒரு நாடு, மற்றொரு நாட்டின் மேற்கண்ட இயற்கை உரிமைகளில் தலையிடுதல் கூடாது என்றும் மேற்படி அறிஞர்கள் கருத்துரைத்தனர். நாடுகள் தங்களுக்கு இயற்கையாகவே கிடைத்திட்ட

உரிமைகளைப் பாதுகாத்துக் கொள்ள விழைகின்றன என்றும், நாடுகளுக்கிடையிலான உறவுமுறைகளில் ஒரு நாடு தனது அத்தகு இயற்கை உரிமைகளுக்கு மற்றொரு நாடு மதிப்பளிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றன என்றும் மேற்கண்ட அறிஞர்கள் மேலும் கூறினர். நாடுகளின் இத்தகைய எண்ணமே, பிற நாடுகளுடன் ஒரு நாட்டிற்கு சட்டப்பிணைப்புகளை ஏற்படுத்துகின்றன. இத்தகைய பிணைப்பின் வாயிலாக எழுந்த உறவுமுறை செவ்வனே செயல் புரிதலுக்காக சில விதிமுறைகளும் வரையறைகளும் நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு எழுப்பப் படுகின்றன. அதுவே நாட்டிடைச் சட்டம். மேற்குறிப்பிட்ட இயற்கை உரிமைகளை நாடுகளானது பெறாமலோ அல்லது பெறுதலுக்கு விரும்பாமல் இருந்தாலோ நாட்டிடைச் சட்டம் என்பது ஏற்பட்டு இருக்கவே வழி இல்லை என அவ்வறிஞர்கள் கருத்து தெரிவிக்கின்றார். எனவே இவர்களது கூற்றுப்படி, இயற்கைச் சட்டம்தான், நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையாகும்.

இக்கோட்பாட்டிற்கான குறைகள் (Criticism): மேற்படி இக்கோட்பாடு பின்வருமாறு குறை கூறப்பட்டது. அஃதாவது, (1) 'இயற்கைச் சட்டத்தைப்' பின்பற்றுபவர்கள் பலரும் பல விதமாக இயற்கைச் சட்டத்திற்கு பொருள் தந்துள்ளனர். அவை ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாக உள்ளன. ஒரு தரப்பினர் இயற்கைச் சட்டமென்பது, 'மனித வாழ்விற்குரிய சட்டங்கள்' என்றும், மற்றொரு தரப்பினர் அது 'வாழும் உலகின் சட்டங்கள்' என்றும், பிறிதொரு தரப்பினர் அது 'சட்டமென்பது எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கும் சட்டங்கள்' என்றும் கூறுகின்றனர். இவ்வாறு மாறுபட்ட பொருள்கள் இயற்கைச் சட்டத்திற்கு இருப்பதால், இயற்கைச் சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு நாட்டிடைச் சட்ட விதிகளை நிருணயிக்க இயலாது.

(2) நாடுகள் தோன்றி அவை இன்றைய நாட்களைப் போல பெரிதான வளர்ச்சி எதையும் அடையாத காலகட்டங்களில் வேண்டுமானால், இயற்கைச் சட்டந்தான் நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை என்று கூறுவது பொருத்தமானதாக இருக்கலாம். ஆனால் தற்பொழுது வேகமாக வளர்ந்து வரும் இவ்வுலகிற்கு, இயற்கைச் சட்ட நெறிக் கோட்பாட்டை நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையாக வைப்பது, போதுமானதாக இருக்காது; அது நாட்டிடைச் சட்டத்தை வளர்ச்சியுறவும் வைக்காது.

(3) நாடுகள் தங்களுக்கிடையிலான உறவுமுறைகளை நெறிப்படுத்திக் கொள்ள உள்ளபடியாகப் பின்பற்றும் நடைமுறைகள் (Actual State practices), இயற்கைச் சட்டத்திலிருந்து மாறுபட்டவையாகும்.

2. அரசுறுத்து சட்ட கருத்தியல் கோட்பாடு (Theory of Positivism) (அல்லது) சம்மதம் குறித்த கோட்பாடு (Consent Theory) (அல்லது) சுயக் கட்டுப்பாட்டுக் கோட்பாடு (Auto Limitation Theory):

பைன்கெர்–சூக் (Bynker-Shoek), ஒப்பன்ஹெய்ம் (Oppenheim), அன்ஜிலோட்டி (Anzilotti), பிரியர்லி (Brierly), ஜெலினிக் ஆகிய அறிஞர்கள் இக்கோட்பாட்டினை எடுத்துரைத்தனர்.

இக்கோட்பாட்டின்படி, நாடுகள் தங்களுக்கிடையே உள்ளபடியாக பின்பற்றும் நடைமுறைகள் (actual practice of the States), வழக்கங்கள், உடன்படிக்கைகள், மாநாட்டு ஏற்பு விதிகள் ஆகியவையே நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையாக விளங்குகிறது. அஃதாவது, நடைமுறை பழக்க வழக்கத்தில் இருந்த நாட்டிடை விதிமுறைகள், மரபுகள் ஆகியவை நாடுகளால் இணைக்கப் பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டு, அதுவே நாட்டிடைச் சட்டத்திற்கு அடிப்படையாக அமைகிறது. அறிஞர் **ஒப்பன்ஹெய்ம்** அவர்கள், மேற்கண்ட நாட்டிடை பழக்க வழக்கங்கள், மரபுகள், உடன்படிக்கைகள் ஆகியவற்றிற்கு கட்டுப்படுவோம் என பல்வேறு நாடுகளும் அளிக்கும் சம்மதமானது உட்கிடையாக வழங்கப்பட்ட ஒன்றே எனக் கூறுகிறார். மேலும், ஒரு நாடானது புதிதாக தோன்றும் போது வெளிப்படை யாகவோ அல்லது உட்கிடையாகவோ நேச நாடுகளால் அங்கீகாரம் வழங்கப் படுகிறது. அப்படி அங்கீகாரம் வழங்கப்பட்டவுடன், நாட்டிடை சட்டத்தின் நடைமுறைக்கு உட்படுவதாக, இணைந்த அங்கீகாரத்தை, அப்புதிய அரசிற்கு உட்கிடையாக அளிப்பதன் வாயிலாக அதற்கு உறுப்பினர் பதவி நேச நாடு சபையில் வழங்கப் படுகிறது. இதனையே அரசுறுத்து **'சட்ட கருத்தியல் கோட்பாடு' (Doctrine of Positivism)** எனக் கூறுவர். **அறிஞர் பிரியர்லி** அவர்கள், நாட்டினால் சம்மதிக்கப் படாத அல்லது அங்கீகரிக்கப்படாத செயல்கள் அனைத்தினையும் சட்டம் என வகைப்படுத்த முடியாது என்று கூறுகிறார். மேலும் நாடுகள் இவ்வாறு தங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதாக கூறுவது, **நாடுகளின் விருப்பத்தைப் (Will of the States)** பொறுத்தாகும் என்றும், நாடுகளின் விருப்பமே நாட்டிடைச் சட்டம் என்றும் **பைன்கெர்–சூக்** எனும் அறிஞர் கூறுகிறார். **அன்ஜிலோட்டி (Anzilotti)** அவர்கள், நாட்டிடைச் சட்டத்திற்கு நாடுகள் கட்டுப்படும் தன்மை **'pacta sunt servanda'** எனும் சட்ட நெறியின் அடிப்படையில் எழுகிறது என்றும், நாட்டிடைச் சட்டத்தின் ஒவ்வொரு விதியும் இந்நெறியின் அடிப்படையில் அமைந்ததேயாகும் என்கிறார். இந்நெறியின் விளக்கம் யாதெனில், 'உடன்படிக்கையின் சரத்துக்களை அதன் தரப்பினர்கள் நல்லெண்ணத்துடன் கடைபிடித்தாக வேண்டும்' என்பதாகும். எனவே நாடுகள் தங்களுக்கிடையே செய்து கொள்ளும் உடன்பாட்டில் கூறப் பட்டிருக்கும் சரத்துக்களை, நல்லெண்ணத்துடன் கடைப்பிடிக்க வேண்டும்; இதுவே நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை என்பது இவரது கூற்று.

ஆகவே இக்கோட்பாட்டின் பரிந்துரையாளர்களின் கருத்தின்படி நாட்டிடைச் சட்டம் என்பது பல்வேறு நாடுகள் தானாக வலிய விரும்பி, தங்களை கட்டுப்படுத்திக் கொள்வதாக சம்மதித்து, சில விதிமுறைகளுக்கு ஒத்துச் செல்வதாக உறுதியளிப்பது என்பதே. இதனையே **ஜெலினிக் என்ற அறிஞர்** நாடுகளின் சுயக்கட்டுப்பாடு எனக் கூறுகிறார். எனவே இக்கோட்பாட்டை **'சுயக்**

கட்டுப்பாட்டுக் கோட்பாடு' (Auto Limitation Theory) என்றும் கூறலாம். அதுபோல், நாடுகள் சம்மதம் அளிப்பதால்தான், நாட்டிடைச் சட்டமும் எழுகிறது என்று இக்கோட்பாட்டில் கூறப்படுவதால், இதனை **'சம்மதக் கோட்பாடு' (Consent Theory)** என்றும் கூறலாம்.

இக்கோட்பாட்டிற்கான குறைகள் (Criticism): இக்கோட்பாடும் குறைபாடுகளிலிருந்து தப்பவில்லை. இது பின்வருமாறு குறை கூறப்பட்டது. (1) 'நாடுகளின் விருப்பம்' எனும் கருத்து, ஒரு உருவகமேயன்றி (purely metaphorical), உண்மையானதல்ல.

(2) நாட்டிடைச் சட்டம் முழுவதும் நாடுகள் அளிக்கும் சம்மதத்தின் அடிப்படையில் எழுகிறது என்பது முற்றிலும் உண்மையல்ல. நாடுகளிடையே பல்வேறு பழக்க வழக்கங்கள், மரபுகள் உள்ளன. எழுதப்படாத இவற்றிற்கு நாடுகள் தங்களை உட்படுத்திக் கொள்கின்றன. எனவே நாடுகள் சம்மதித்துதான், அப்பழக்க வழக்கங்களை தங்களைக் கட்டுப்படுத்தும் ஒன்றாக ஏற்றுக் கொள்கின்றன என்பது தவறு. அவற்றிற்கு தங்களை அறியாமலேயே நாடுகள் கட்டுப்பட்டு நடக்கின்றன. உலக நாடுகளுடன் இணையும் ஒரு புதிய நாடும், அவற்றிற்கு கட்டுப்பட்டு நடக்கின்றன. இவ்வாறு கட்டுப்பட்டு நடக்க சம்மதமளிக்க வேண்டும் என்று அந்நாட்டை பிறநாடுகள் கோருவதில்லை. உலக நாடுகளின் சமுதாயத்தில் இணைய விழையும் ஒரு நாடு, சர்வதேச பழக்க வழக்கங்களுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியது இன்றியமையாதது. இக்கருத்தை மேற்படி கோட்பாட்டை வலியுறுத்திய அறிஞர்கள் எடுத்துரைக்கத் தவறிவிட்டனர். எனவே சர்வதேச வழக்கம் என்பது, நாடுகளின் சமுதாயத்திற்கான ஒரு உண்மையான பொது நாட்டிடைச் சட்டமாகும். மேலும் 'உடன்படிக்கைகளுக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்' **(pacta sunt servanda)** எனும் நெறி, நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை என்பதை ஏற்றுக் கொள்ளவியலாது. இக்கொள்கையே சர்வதேச வழக்கத்தின் அடிப்படையில் எழுந்த ஒன்று.

(3) பொது நாட்டிடைச் சட்டத்தின் ஒரு குறிப்பிட்ட விதிக்கு ஒரு நாடு தனது சம்மதத்தை அளித்துள்ளதா இல்லையா என்று கவனிக்க வேண்டியது நடைமுறையில் அவசியமில்லை என்கிறார் அறிஞர் ஸ்டார்க் அவர்கள். பேரா. ஸ்மித் அவர்கள், அனைத்து நாடுகளும் நாட்டிடைச் சட்டத்திற்கு கட்டுப்பட வேண்டும். அதற்கு சம்மதித்துள்ளதா, இல்லையா என்பது இங்கு ஒரு பொருட்டல்ல என்று கூறுகிறார்.

3. குரோஷியர்களின் கோட்பாடு (Grotians Theory):

நார்மன் டி.பாமர் (Norman D.Palmer), ஒப்பன்ஹெய்ம் (Oppenheim), பேரா.டென்னிங் (Prof. Denning), ஸ்டார்க் (Starke), ஜாக்ஸன் (Jackson) ஆகிய அறிஞர்கள் நாட்டிடைச் சட்ட மூதறிஞர் ஹூயூகோ குரோஷியஸ் கூறிய

கருத்துக்களைப் பின்பற்றி கருத்துரைத்தவர்கள் ஆவர். எனவே இவர்களை 'குரோஷியர்கள்' (Grotians) என்றழைக்கின்றனர். இவர்கள் கூறிய கோட்பாடு, **'குரோஷியர்களின் கோட்பாடு'** எனப்படுகிறது.

இவர்களது கோட்பாட்டின்படி, நாட்டிடைச் சட்ட விதிகளின் அடிப்படையை, மேற்கண்ட இரண்டு கோட்பாடுகளில் ஏதேனும் ஒன்றை மட்டும் பொருத்திக் கூறுவதன் மூலம் விளக்க முடியாது. இவை இரண்டுமே தேவை. அஃதாவது, இயற்கைச் சட்ட வாதத்தினர் கூறிய கருத்துக்கள் ஓரளவிற்கு நாட்டிடைச் சட்டத்திற்கு அடிப்படையாகத் திகழ்கிறது; அதுபோல் அரசுறுத்து சட்டக் கருத்தியல் கோட்பாட்டினர் கூறிய கருத்துக்கள் பிறிதொரு அளவிற்கு அடிப் படையாகத் திகழ்கிறது. வேறு விதத்தில் கூறுவதானால், இயற்கை வாதிகளும், அரசுறுத்து சட்டக் கருத்தியல் வாதிகளும் கூறிய கருத்துக்கள் இணைந்தே, நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையாக விளங்குகிறது என்பது குரோஷியர்களின் கருத்தாகும். இயற்கைச் சட்ட நெறி ஒன்று மட்டுமே நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையன்று; அதுபோல், சர்வதேச பழக்க வழக்கங்கள், உடன்படிக்கைகள் ஆகியவை மட்டுமே நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையன்று. இயற்கைச் சட்டம், சர்வதேச பழக்க வழக்கம், உடன்படிக்கை ஆகியவற்றிற்கு நாடுகள் தங்களையும், தங்கள் நாட்டிடை உறவுகளையும் கட்டுப்படுத்திக் கொள்வதால் விளைந்ததே நாட்டிடைச் சட்டமாகும்; இதைத்தான் நாடுகள் அளிக்கும் சம்மதம் நாட்டிடைச் சட்டத்திற்கு ஒரு அடிப்படையாக இருக்கலாம். ஆனால் அது ஒன்று மட்டுமே அடிப்படை; அதைத் தவிர வேறொன்றுமில்லை என்று கூறவியலாது என இரண்டு கோட்பாடுகளுக்கும் இடையிலான கருத்துக்களைக் கூறுகின்றனர். எனவேதான்,

"குரோஷியர்களை, இயற்கை சட்ட கொள்கையினருக்கும் அரசுறுத்துச் சட்டக் கொள்கையினருக்கும் இடையே நிற்பவர்கள்" என்கின்றனர்.

உண்மையான அடிப்படை (True Basis) :

இன்றைய நவீன காலகட்டத்தில் ஒரு நாடு, உலக நாடுகளுடன் தொடர்பு கொள்ளாமல் தனித்து இயங்க இயலாது எனும் நிலை ஏற்பட்டுள்ளது. மேலும், நாடுகளுக்கிடையிலான போக்குவரத்து, தகவல் தொடர்பு, செயற்கைக் கோள் ஒலி–ஒளிபரப்பு, அறிவியல் கண்டுபிடிப்புகள் ஆகியவை உலக நாடுகளை மிக நெருக்கமாகக் கொண்டு வந்துள்ளன. ஒரு நாட்டின் நிகழ்வுகள் மற்ற நாடுகளையும் பாதிக்கவே செய்கின்றன. இப்படிப்பட்ட நிலையில், மேற்கண்ட எந்தக் கோட்பாடும் நாட்டிடைச் சட்டத்தின் உண்மையான அடிப்படை எது என்பதை விளக்க முடியாது. ஒவ்வொரு கோட்பாடும் தம் பங்கிற்கு நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையை விளக்குகிறதே தவிர, அவை முழுமையாக எதையும் விளக்கவில்லை என்பதுதான் உண்மை. ஏனென்றால் அவ்வாறு விளக்குவதும் சாத்தியமன்று. இக்கோட்பாடுதான் நாட்டிடைச் சட்டம் பிறக்க அடிப்படையாக விளங்கியது என்று எந்நாடும் இதுகாறும்

ஏற்றுக் கொள்ளவில்லை என்பதையும் நாம் இங்கு கவனிக்க வேண்டும். அறிஞர் **சர் சிசில் ஹர்ஸ்ட் (Sir Cecil Hurst)** அவர்கள், நாட்டிடைச் சட்டத்தின் கட்டுப் பாட்டிலிருந்து எந்நாடும் தப்பவியலாது என்றும், நாடுகளை நாட்டிடைச் சட்டம் கட்டுப்படுத்துகிறது; ஏனெனில் அவை நாடுகளாக உள்ளன என்றும் எளிமையாகக் கூறுகிறார். இதன்படி நாட்டிடைச் சட்டத்திற்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டியது நாடுகளின் அடிப்படைக் கடமை. இவ்வாறு கட்டுப்பட்டு நடந்தால், அந்நாட்டிற்குத் தான் நன்மை ஏற்படும். இதனை நாடுகள் உணர்ந்தன. நாட்டிடைச் சட்டத்திற்கு கட்டுப்படுகின்றன.

அறிஞர் **ஃபென்விக் (Fenwick)** அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். அதன்படி, போரைத் தடுத்தல், உரிமைக் கோரிக்கைகளைத் தீர்த்தல், பொது நலத்தை மேம்படுத்தல் ஆகியவற்றில் நாடுகள் அனைத்தும் பொதுவாக அக்கறை கொண்டுள்ளன. இவை நாடுகளுக்கிடையே அறநெறியின் அடிப்படையில் அமைந்த ஒற்றுமையை ஏற்படுத்துகிறது. அதே சமயத்தில் நாடுகள் தங்களுக்குரிய சட்டப்படியான உரிமைகளையும் விட்டுக் கொடுப்பதில்லை; அவற்றில் சட்டத்தின் ஆட்சியைக் கோருகின்றன. ஒரு நாட்டில் வாழும் தனிநபர்கள் தங்களுக்கு ஏற்படும் இன்னல்களின் பொழுது ஒற்றுமையாகச் செயல்படுகின்றனர்; அதே சமயத்தில் தங்களுக்குரிய தனி உரிமைகளையும் விட்டுக் கொடுப்பதில்லை. அவ்வாறே நாடுகளும் செயல்படுகின்றன. எனவே நாட்டைச் சட்டத்தின் அடிப்படை, நாடுகளும், மக்களும் நிலைத்திருப்பதன் பேரிலும், நாட்டு மக்கள் தங்களுக்குள் பரஸ்பரம் செய்து கொள்ளும் நிலையான உறவு முறையிலும் அமைந்திருக்கிறது.

மேற்கண்ட கருத்தை **பிரையர்லி (Brierly)** எனும் அறிஞர் சற்று வேறு விதமாகக் கூறுகிறார். அவரது கூற்றுப்படி, மனிதன் தனித்திருக்கலாம் அல்லது ஒரு நாட்டில் வாழும் மற்றவர்களுடன் தொடர்பு கொண்டு கூட்டமாக இருக்கலாம். அவன் எப்படி இருப்பினும், அவன் நியாயமாக நடந்து கொள்ளும் ஒரு வாழ்வினமாக இருக்கும் வரை, அவன் வாழ வேண்டிய உலகிற்கு அமைதிதான் வழிகாட்டும் நெறியாக இருக்க வேண்டுமேயொழிய, அமைதியற்ற குழப்பமான சூழல் அல்ல என்பதை அவன் நம்பித்தான் தீர வேண்டும். அப்பொழுதுதான் அனைத்து சட்டங் களும் வலிமை கொண்டதாகவும், கட்டுப்படுத்தக் கூடிய தன்மை கொண்டதாகவும் இருக்கும். இதுவே அனைத்து சட்டங்களின் கட்டுப்படுத்தக் கூடிய தன்மையின் இறுதி விளக்கமாகும், என்று கூறுகிறார். எனவே மனிதனை அடிப்படையாகக் கொண்டு நாட்டிடைச் சட்டம் உள்ளிட்ட அனைத்து சட்டங்களும் செயல்படுகின்றன.

திறனாய்வு முடிவு:

மனிதனின் மேற்கண்ட நம்பிக்கையை நிலை பெறச் செய்ய நாடுகள் முனைய வேண்டும். அமைதியை நிலவச் செய்ய வேண்டும். அதற்குரிய சாதகமான சூழலை உருவாக்க வேண்டும். இதற்காக நாடுகள் செய்யும் முயற்சிகள் அனைத்துமே, நாட்டிடைச் சட்டத்தின் உண்மையான மற்றும் உயர்ந்த அடிப்படையாகும்.

4

நாட்டிடைச் சட்டத்தின் மூலங்கள் [Sources of International Law]

6. What are the sources of International law? (சர்வதேசச் சட்டத்தின் மூலாதாரங்கள் யாவை?)

(அல்லது)

What are the material sources of International law? Discuss in detail each source. (நாட்டிடைச் சட்டத்தின் கருநிலை ஆதாரங்கள் யாவை ? ஒவ்வொரு ஆதாரத்தையும் விரிவாக விவாதிக்கவும்).

(அல்லது)

Explain the traditional and the modern sources of International law. (நாட்டிடைச் சட்டத்தின் பாரம்பரியமான மற்றும் நவீன மூலங்களை விளக்குக.)

(அல்லது)

Critically examine the sources of International law with special reference to Article 38 of the Statute of the International Court of Justice. (சர்வதேச நீதிமன்றச் சட்டத்தின் 38–ஆம் அதிகாரத்தைச் சிறப்பு மேற்கோள் காட்டி, நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களை விவாதித்து எழுதுக.)

(அல்லது)

Describe the source of International Law. Discuss the significance of adoption of "The general principle of law recognised by civilised nations" as a source of law in Article 38 of Statute of the International Court of Justice. (நாட்டிடைச்

சட்டத்தின் மூலங்களை விளக்குக. சர்வதேச நீதிமன்றச் சட்டத்தின் 38–வது சரத்தில் சட்டத்தின் ஒரு மூலமாக "நாகரிகமடைந்த நாடுகளால் அங்கீகரிக்கப் பட்ட பொதுவான சட்டக் கொள்கைகள்" ஏற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை விவாதிக்க.)

(அல்லது)

Explain the various sources of International Law as enumerated under Art. 38(1) of the Statute of International Court of Justice. (நாட்டிடை நீதிமன்ற சட்டத்தின் உறுப்பு 38(1)–ல் எழுதப் பட்டிருக்கும் நாட்டிடை சட்ட மூலங்களை விளக்குக.)

(அல்லது)

The International Court of Justice follows the principle of "Order success" in applying the sources of International Law. - Discuss. (பன்னாட்டு நீதிமன்றம் சர்வதேசச் சட்டத்தில் உள்ள மூலக் கூறுகளை முறையாக வரைப்படுத்திக் கையாளுகின்றது. – விளக்குக.)

(அல்லது)

Custom as a source of law - Write short notes. ("பழக்க வழக்கங்கள்" – சட்டத்தின் ஒரு மூல ஆதாரம் – சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

How does a custom evolve? Explain custom as a source of International law with reference to decided cases. (வழக்கம் எவ்வாறு தோன்றுகிறது ? வழக்கம் நாட்டிடை சட்டத்தின் மூலம் என்பதை தீர்ப்பாணைகள் துணை கொண்டு விளக்குக.)

(அல்லது)

Examine the following sources of International law.

a. Judicial decisions of national courts.
b. Treaties
c. Writings of Jurists

சர்வதேசச் சட்டத்தின் கீழ்கண்ட அடிப்படைச் சான்றுகளை விளக்குக.

அ. நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புகள்.
ஆ. உடன்படிக்கைகள்
இ. சட்டவல்லுநர்களின் கருத்துகள்

(அல்லது)

"Until recent times, International law consisted of the most

part of customary rules." Explain. ("சமீபகாலம் வரை நாட்டிடைச் சட்டம் பெரும்பாலும் வழக்கங்களையே பொருளடக்கமாக கொண்டிருந்தன" – விளக்குக.)

நாட்டிடைச் சட்ட மூலங்களின் முக்கியத்துவம் :

ஓர் உள்நாட்டுச் சட்டத்தைப்பற்றி ஏதேனும் அய்யம் எழுமேயானால், தொடர்புடைய இயற்றப்பட்ட உள்நாட்டுச் சட்டத்தைப் புரட்டிப் பார்த்துத் தெளிவு பெறலாம். ஆனால், நாட்டிடைச் சட்டத்தை ஒட்டி அய்யம் எழுந்தால், அதனைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு விளக்கம் பெற உடனடியாகவும், நேரடியாகவும், தகவல் தரக் கூடிய இயற்றப்பட்ட சட்டங்கள் எதுவுமில்லை. நாட்டிடைச் சட்டம் வளரக் காரணமாக அமைந்த மூலங்களை ஆய்ந்து பார்ப்பதன் வாயிலாகவோ, நாடுகளிடையே வழங்கிவரும் நடைமுறை வழக்கத்தை ஆய்வதன் மூலமாகவோ தான் அவ்வய்யப்பாடுகளைப் போக்கிக் கொள்ள இயலும். சில வேளைகளில் எழும் கேள்விகளுக்கு மேற்கூறிய இரண்டு வகையாலுமே தெளிவு பெறுவது இயலாமல் போவதுண்டு. அங்கெல்லாம் கருத்து வேற்றுமைகளும் சிக்கல்களும் எழுவதுண்டு.

நாட்டிடைச் சட்டத்தில் உள்ள மேற்படி குறையைப் போக்கும் பொருட்டு அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொள்ளும் வகையில் நாட்டிடை சட்டத் தொகுப்பு ஒன்றை உருவாக்கும் முயற்சி பல்வேறு காலகட்டங்களில் பல்வேறு நாடுகளாலும், பல்வேறு உலக அமைப்புகளாலும் மேற்கொள்ளப்பட்டு, அம்முயற்சியில் ஆங்காங்கே ஒரு சில தலைப்புகளில் மட்டுமே நாட்டிடைச் சட்டத்தை வெற்றிகரமாக தொகுக்க முடிந்தது. எனவே, நாட்டிடைச் சட்டத்தை முழுவதுமாகத் தொகுக்கும் முயற்சி இன்னும் முற்றிலும் வெற்றி பெறவில்லை. அனைத்து உலக நாடுகளையும் கட்டுப் படுத்தும் வகையில் சட்டம் இயற்றும் உயர்ந்த அதிகாரம் கொண்டு, உலக நாடுகளை உள்ளடக்கிய "மைய உலக அரசு" (Central World Government) எதுவும் தோன்றுவதற்கும் வழி இல்லை. எனவே நாட்டிடைச் சட்டத்தில் அய்யம் எழுந்தால், அதனைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு, நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களின் வாயிலாகவே தெளிவு காண வேண்டியுள்ளது. அத்தகு மூலங்கள் யாவை என்பதை பின்வரும் பத்திகள் அடுத்தடுத்து விளக்குகின்றன.

சர்வதேச நீதிமன்றச் சட்டம் கூறும் நாட்டிடைச் சட்டத்தின் மூலங்கள் :

சர்வதேச நீதிமன்றத்தை அமைப்பதற்காக இயற்றப்பட்ட சட்டத்தின் (Statute of International Court of Justice) சரத்து 38(1)–ல் நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாக பின்வருவன அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

அச்சரத்தில், சர்வதேச நீதிமன்றம் தன்முன் வரும் வழக்குகளை பின்வரும் சட்ட மூலங்களில் காணப்படும் நாட்டிடைச் சட்ட விதிகளின் அடிப்படையிலே தீர்க்க வேண்டும் எனக் கூறப்பட்டுள்ளது. அம்மூலங்கள் வருமாறு.

1. உலக அரங்கில் நாடுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் (International Treaties). இவை உலக நாடுகளின் மாநாட்டு ஏற்பு விதிகளையும் (Conventions) உள்ளடக்கியதாகும்;

2. உலக நாடுகளின் பொதுவான நடைமுறைக்கு சான்றாக உள்ளதும் சட்டமென ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான சர்வதேச பழக்க வழக்கங்கள் (International Custom as evidence of a general practice accepted as Law);

3. நாகரிகமடைந்த நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான சட்டக் கொள்கைகள் (The General Principles of Law recognised by civilized Nations);

4. நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் (Decisions of Judicial and Arbitral Tribunals);

5. சர்வதேச சட்ட வல்லுநர்களின் போதனைகள் மற்றும் சட்ட ஆய்வுரைக் கருத்துகள் (Teachings of the most highly qualified publicists of the various Nations and juristic works);

இவற்றில் இறுதியிரண்டு மூலங்களும், துணை மூலங்களாகும் (Subsidery Source). அதுபோல் இவற்றில் எண்கள். 2, 5 ஆகியன பாரம்பரியமான மூலங்களாகும். எண்கள். 1, 3, 4 ஆகியன நவீன மூலங்களாகும். சற்று விரிவாக வருமாறு.

(1) சர்வதேச உடன்படிக்கைகள் (International Treaties):

சர்வதேச உடன்படிக்கைகள் நாட்டிடைச் சட்ட மூலங்களையொட்டி முதலாவதாக முக்கியத்துவம் பெறுகின்றன. இவ்வுடன்படிக்கைகள் (அ) சட்டங்களை உருவாக்கும் உடன்படிக்கை; (ஆ) நாடுகளிடையே கடப்பாட்டு ஒப்பந்தங்களாகச் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கை என இரு வகைப்படும்.

(அ) சட்டங்களை உருவாக்கும் உடன்படிக்கை (Law Making Treaties) :

இவ்வகை உடன்படிக்கைகளுக்கு உலகத்தின் பெரும்பாலான நாடுகள் தரப்பினர்களாக இருக்கும். பெரும்பாலான நாடுகள் கூடி சர்வதேச உடன்படிக்கைகள் செய்து கொள்கின்றன. அவற்றின் சரத்துக்களை தரப்பு நாடுகள் ஒப்புக் கொள்வதால், அச்சரத்துக்கள் சட்டத்தின் தன்மையையும் வலிமையையும் பெறுகின்றன. அதாவது அச்சரத்துக்கள் நாட்டிடைச் சட்டமாக உருவெடுக்கின்றன. இவ்வகையில் 1864–ஆம் ஆண்டிலிருந்து இன்று வரை உலக நாடுகள் பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகளில் ஈடுபட்டுள்ளன. தொடர்ந்து ஈடுபட்டும் வருகின்றன. எனினும், சட்டங்களை உருவாக்கும் உடன்படிக்கைகள் என்பதால், அவை உலகு அனைத்திற்கும் என்றென்றும் பொருந்தக் கூடிய நாட்டிடைச் சட்டத்தை உருவாக்குவதாகப் பொருள் கொள்ள இயலாது. சட்டத்தை உருவாக்கும் உடன்படிக்கைகளிலும் இருவகை உண்டு. முதலாவதாக, உலகு அனைத்திற்கும் பொருந்தக் கூடிய நாட்டிடைச் சட்டத்தைத் உருவாக்கும்

உடன்படிக்கைகள். இதற்கு அய்க்கிய நாடுகள் சபையின் சாசனத்தை (Charter of United Nations Organisation) எடுத்துக்காட்டாகக் கூறலாம். இரண்டாவதாக, பொதுத் தன்மையுடன் கூடியதாகவோ, பொதுவான விதிகளை வெளிப்படுத்துவதாகவோ மட்டும் அமையும் உடன்படிக்கைகள்.

North Sea Continental Shelf Case[1] - இவ்வழக்கை 'வடகடல் கண்டத்திட்டு வழக்கு' என்பர். இவ்வழக்கு 1969–ஆம் ஆண்டில் சர்வதேச நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டுத் தீர்ப்பளிக்கப்பட்டது. அத்தீர்ப்பில், உலகின் பெரும்பாலான நாடுகள் மாநாடு கூட்டி இசைவு தெரிவித்தன என்ற ஒரே காரணத்திற்காக அம்மாநாட்டினால் ஏற்கப்பட்ட ஏற்பு விதிகளானது (conventions), அம்மாநாட்டில் சேராத நாடுகளையும் கட்டுப்படுத்தத்தக்க நாட்டிடைச் சட்ட விதிகளைப் போன்றவை என்று கருதக் கூடாது. அந்த விதிகள் அம்மாநாட்டிற்குத் தரப்பு நாடுகளல்லாத நாடுகளையும் கட்டுப்படுத்த வேண்டுமென்றால், அந்நாடு தானும் அவ்விதிகட்குக் கட்டுப்படுவதாக வெளிப்படையாகத் தன் விருப்பத்தினைத் தெரியப்படுத்தி ஏற்க வேண்டும் என்றும், கண்டத்திட்டுப் பற்றிய 1958–ஆம் ஆண்டின் ஜெனீவா மாநாட்டின் ஏற்பு விதிகளை, பின்னர் தரப்பு நாடல்லாத செர்மன் கூட்டுறவுக் குடியரசு ஏற்றுக் கொள்ளாத காரணத்தினால், அவ்விதிகள் செர்மன் கூட்டுறவுக் குடியரசு (German Federal Republic) நாட்டைக் கட்டுப் படுத்துமென்று கூற இயலாது என்றும் கூறப்பட்டிருந்தது.

(ஆ) கடப்பாட்டு ஒப்பந்த உடன்படிக்கை (Treaty Contracts):

சாதாரணமாக, இவ்வகை உடன்படிக்கைகள் நாட்டிடைச் சட்டத்தின் நேரடி மூலங்களாகக் கருதப்படுவதில்லை. இருந்தாலும் சில வேளைகளில் அவை நாட்டிடைச் சட்ட விதிகளை உருவாக்க உதவுவதாகக் கருதப்படுகின்றன.

(a) சில நாடுகளுக்கிடையே சில குறிப்பிட்ட விதிகளுக்குட்பட்டுச் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகள் மற்ற நாடுகளாலும் தொடர்ந்தும், மீண்டும் பின்பற்றப்பட்டு அதே விதிகளை உள்ளடக்கி உடன்படிக்கைகள் செய்து கொள்ளப் படுமானால், அதன் காரணமாக அவ்விதிகள் பொதுத்தன்மை பெற்று நாட்டிடைச் சட்ட வழக்கு விதி என்ற தகுதியையும் பெறுவதுண்டு. உதாரணமாக, 19–ஆம் நூற்றாண்டில் மீட்டொப்படைத்தல் (extradition) உடன்படிக்கைகளை நாடுகள் தங்களுக்கிடையே தனித்தனியே செய்து கொண்டன. உடன்படிக்கைகள்தாம் தனித்தனியே தவிர அவற்றின் கருப்பொருள் ஒன்றாகவே அமைந்தது. எனவே, மீட்டொப்படைத்தல், நாடுகளின் தனிப் பிரச்சனையாக இருந்த நிலை மாறி நாட்டிடைச் சட்டத்தில் தற்போது முக்கியப் பகுதியெனும் தகுதியைப் பெற்று விட்டது.

(b) சில வேளைகளில் முதலில் இரண்டோ அதற்கு மேற்பட்ட நாடுகளோ ஏற்றுக் கொள்ளும் உடன்படிக்கைகளின் விதிகளை, பின்னர்ப் பெரும்பாலான

1. (1969) I.C.J. Rep. 3 : 63 A.J.I.L. 591 (1969).

நாடுகள் தாமும் ஒப்புக்கொண்டு ஏற்றுக் கொள்வதாலும், பின்பற்றுவதாலும் அத்தகைய விதிகளும், நாளடைவில் நாட்டிடைச் சட்ட வழக்கு விதியாக மாறுவது உண்டு.

(c) சில சமயங்களில் தாமாக உருவாகி வரும் விதிகள் நாடுகளுக்கிடையே ஏற்படுத்திக் கொள்ளப்படும் ஒப்பந்த உடன்படிக்கைகளால் ஏற்றுக் கையாளப் படுவதால், அவையும் காலப் போக்கில் நாட்டிடைச் சட்ட விதியாவதுண்டு.

(2) சர்வதேச பழக்க வழக்கங்கள் (International Custom):

வழக்கம் தோன்றும் விதம்:

ஒரு செயல், பழக்க வழக்கமாக ஆவதற்கு அது பின்வரும் அம்சங்களைக் கொண்டிருக்க வேண்டும். (1) அச்செயல் அறிவுக்கு உகந்ததாய் இருக்க வேண்டும். (2) அச்செயலை மக்களே விரும்பி கடைப்பிடித்திருக்க வேண்டும். (3) இயற்றப்பட்ட சட்டங்களுடன் முரண்பட்டு இருத்தல் கூடாது. (4) நீண்ட நெடுங்காலமாக கடைப் பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். (5) தொடர்ந்து பின்பற்றப்பட வேண்டும். (6) எவரும் அறிந்ததாக தெளிவுடையதாக இருக்க வேண்டும். (7) உரிமையை நிலை நாட்டுவதாக இருக்க வேண்டும். இப்படிப்பட்ட ஏழு அம்சங்களை ஒரு செயல் கொண்டிருந்தால், அது பழக்க வழக்கமாகிவிடுகிறது. இதனை 'வழக்க நெறி' எனலாம்.

நாட்டிடைச் சட்டத்தைப் பொறுத்தவரை, ஒரு குறிப்பிட்ட செயல் நிகழ்வு, நாடுகளின் நடவடிக்கைகளில் நியாயமெனக் கருதப்பட்டு சட்டத்தின் வலிவுடன் தொடர்ந்து நாடுகளால் நடைமுறையில் ஏற்று செயற்படுத்தப்படுமானால், அச்செயல் நிகழ்வுகளையே சட்ட வல்லுநர்கள் 'வழக்கம்' என்று கூறுகின்றனர்.

வழக்கம் (Custom) மற்றும் வழக்காறு (Usage) - வேறுபாடு:

வழக்கம் (Custom) வழக்காறிலிருந்து (Usage) மாறுபட்டது. ஒரு செயல், சட்டத்தின் பாதுகாப்பை பெறாமல் வெறும் செயல் நிகழ்வுகளாக மட்டுமே நின்றுவிடுமாயின் அதனை, வழக்காறு என்று கூறுவார்கள். எப்பொழுது இவ் வழக்காறுகள் பொது நடைமுறையில் சட்டத்தின் வலிமையுடன் பரவலான அங்கீகாரத்தையும் பெற்றுச் செயல்படத் தொடங்குகின்றனவோ, அப்பொழுது வழக்கங்களாக மாறுகின்றன. எங்கே வழக்கம் தொடங்குகிறதோ, அங்கே வழக்காறு முடிவடைகிறது. சுருக்கமாகச் சொன்னால் வழக்காறுகள் எப்பொழுது சட்டத்தின் வலிவைப் பெறுகின்றனவோ, அப்பொழுது அவை வழக்கங்களாக மாறி விடுகின்றன.

நாட்டிடைச் சட்டத்தின் மூலமாக வழக்கம் (Custom as a source of International Law):

நாட்டிடைச் சட்டம், நாடுகளின் பொதுவான சம்மதத்தையே அடிப்படை

யாகக் கொண்டு அமைந்தது. அந்தப் பொதுவான சம்மதம், எக்காரணங்களால் நடைமுறைக்கு வந்ததோ அவையெல்லாம் நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாகும். தனி மனிதனைப் போலவே நாடும் அதன் சம்மதத்தை நேரடியான அறிவிப்பின் மூலமாகவோ, மறைமுகமான நடவடிக்கைகள் மூலமாகவோ தரலாம். அதாவது நாட்டிடைச் சட்டத்தின் முதன்மையான மூலங்கள் இரண்டாகும். அவை, நாடுகள் தங்கள் வெளிப்படையான சம்மதத்தைத் (Express Consent) தெரிவித்து ஏற்படுத்திக் கொள்ளும் உடன்படிக்கைகள் மற்றும் உட்கிடையான சம்மதத்தைத் (Implied Consent) தெரிவித்துக் கொள்ளும் வகையில், சட்ட விதியைப் போன்றே நாடுகள் வழங்கிவரும் உலக வழக்கத்தைத் தாமும் நடைமுறையில் ஏற்று ஒரு நாடு நடப்பது. அண்மையில் வகுக்கப்பட்டுள்ள நாட்டிடைச் சட்டங்களின் பெரும்பகுதி, ஏற்கனவே நடைமுறையிலிருந்த வழக்கங்களையே உள்ளடக்கியுள்ளது.

West Rand Central Gold Mining Company Ltd. v. R[1] – இவ்வழக்கில் வழக்கின் தரப்பினர் எவரேனும் தமது உரிமையானது, குறிப்பிட்ட நாட்டிடைச் சட்ட வழக்கத்தையொட்டி எழுவதாக வாதிடுவார்களேயானால், அவ்வழக்கம் உலக நாடுகளின் பெரும்பாலான நாடுகளால் சட்டவிதியாக ஏற்கப் பட்டு வழங்கி வரப்பட்டாலொழிய அதனை நாட்டிடைச் சட்ட வழக்க நெறியாக நீதிமன்றம் ஏற்காது என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Right of Passage over Indian Territory case (Portugal v. India) [2] – இவ்வழக்கில், குறிப்பிட்ட இரு நாடுகளுக்கிடையே மட்டும் ஒரு குறிப்பிட்ட நடைமுறை விதி சட்டமாக ஏற்கப்பட்டு வந்திருக்குமானால், அது குறிப்பிட்ட அந்தத் தரப்பினரை மட்டும் கட்டுப்படுத்தக்கூடிய வழக்க நெறியாகி விடும், என சர்வதேச நீதிமன்றம் கூறியது.

Paquet Habana Case[3] – எனும் இவ்வழக்கில் அமெரிக்க தலைமை நீதிமன்றமும், **S.S.Lotus Case**[4] – எனும் இவ்வழக்கில் சர்வதேச நீதிமன்றமும் வழக்கநெறி பற்றி விரிவாக ஆராய்ந்து கருத்து தெரிவித்துள்ளது.

(3) பொதுவான சட்டக் கொள்கைகள் (General Principles of Law):

நாட்டிடைச் சட்டத்தில் போதுமான அளவு வேகமான முன்னேற்றமும் வளர்ச்சியும் இல்லாமையால் சில இடங்களில் சட்ட வெறுமையோ, இடைவெளியோ ஏற்படுவதுண்டு. அம்மாதிரியான நேரங்களில் நாடுகளிடையே செயல்படுகிற நீதி மன்றங்களும், இசைவுத் தீர்ப்பாயங்களும் எவ்விதியை பின்பற்றுவது என்ற வினா எழக்கூடும். இதற்கு உதவுவதற்காகவே சர்வதேச நீதிமன்றத்தின் அமைப்புச்

1. (1905) 2 KB 391.
2. I.C.J. Rep. (1960), p, 6.
3. (1900) 175 US 677.
4. (1927) SCIJ, Series A, No. 10.

சட்டமானது பின்வருமாறு வழிவகை செய்துள்ளது. அதன்படி, தனக்கென ஒரு அரசியலமைப்பைப் கொண்டு விளங்கும் நாகரிமடைந்த நாடுகளால் அங்கீகரிக்கப் பட்ட (ஏற்றுக் கொள்ளப்பட்ட) பொதுவான சட்டக் கொள்கைகளை சர்வதேச நீதிமன்றமும், சர்வதேச இசைவுத் தீர்ப்பாயங்களும் பின்பற்றலாம்.

அஃதாவது, உலக நாடுகளில் நாகரிகமடைந்த பெரும்பான்மையான நாடுகள் தங்கள் உள்நாட்டுச் சட்டத்தில் என்னென்ன சட்டநெறிகளைப் பொதுவாகக் கையாண்டு வழக்குப் பிரச்சனைகளை தீர்க்கின்றனவோ, அவ்விதிகளையும் நாட்டிடைச் சட்ட விதிகளாகக் கருதலாம் என்பதே இதன் கருத்து. இதற்கு பின்வரும் வழக்குகள் சான்றுகளாகும்.

R. v. Keyn[1] – எனும் வழக்கில் நாடுகளால் நீண்ட நெடுங்காலமாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் நீதி, நேர்மை, நன்மனச்சான்று எனும் சட்டக் கொள்கை (Principles of Justice, Equity and Good Conscience) நாட்டிடைச் சட்டத்திற்கும் பொருந்தும் எனப்பட்டது.

Chorzow Factory (Indemnity) Case[2] – எனும் வழக்கில் நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்தில் வழங்கப்பட்டு வரும் 'முன்தீர்ப்புத் தடைக் கோட்பாடு' (Principle of Res-judicata), நாடுகளுக்கிடையிலான வழக்கிலும் செயற் படுத்தப்படக் கூடியதே எனப்பட்டது. (மேற்படி வழக்கில் அக்கோட்பாடு சர்வதேச நீதிமன்றத்தால் பயனுறுத்தப்பட்டது).

Mavrommatis Palestine Concessions Case[3] – எனும் வழக்கில் உள்நாட்டுச் சட்டங்களில் மட்டுமே இருக்கக் கூடிய மாற்றமர் அடைமான உரிமைக் கொள்கையை (Priniciple of Subrogation), சர்வதேச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டு தீர்ப்பளித்தது.

Case concerning the Temple of Preah Vihear[4] – எனும் வழக்கில் உள்நாட்டு சாட்சியச் சட்டங்களில் காணப்படும் 'முரண்தடைக் கோட் பாட்டை' (Principle of Estoppel) சர்வதேச நீதிமன்றம் பின்பற்றி தீர்ப்பளித்தது.

இவ்வாறு பின்வரும் பொதுவான சட்டக் கொள்கைகளை நாட்டிடைச் சட்டமாக சர்வதேச நீதிமன்றம் ஏற்றுக் கொண்டுள்ளது. அவை (1) நல்லெண்ணம்; (2) பொறுப்பு; (3) நீளுடைமை; (4) முரண்பாடான வகைமுறை ஏதும் வெளிப்படையாக இல்லாத பொழுது, நீதிமன்றம் ஒவ்வொன்றும் தனக்குரிய அதிகாரவரம்பைத் தீர்மானித்துக் கொள்ளுதல்; (5) வழக்கொன்றின் தரப்பினர்,

1. (1876) Ex. D. 63.
2. Pub. P.C.I.J. (1928) Series A, No. 17
3. Pub. P.C.I.J. (1964) Series A, No. 2
4. I.C.J. Rep. (1962), p. 6.

தானே அவ்வழக்கிற்கு தீர்வாளராகவோ, நீதிபதியாகவோ இருத்தல் கூடாது; (6) முன்தீர்ப்புத் தடை மற்றும் (7) நீதிமன்ற நடவடிக்கை ஒவ்வொன்றிலும் வழக்கின் இரு தரப்பினரையும் விசாரித்தறிந்த பிறகே தீர்ப்பளித்தல் வேண்டும் எனும் கொள்கை. இவையும், நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாக உள்ளன.

(4) நீதிமன்றம் மற்றும் இசைவுத் தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் (Decisions of Judicial and Arbitral Tribunals):

இது, சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் 38–வது சரத்தின்படி, நாட்டிடைச் சட்டத்தின் ஒரு துணை மூலமாகும். ஒரு நாட்டின் உயர்ந்த அதிகாரம் படைத்த நீதிமன்றங்கள் வழக்குகளின் பொழுது வழங்கிய தீர்ப்புகள், அதே மாதிரியான வழக்குகள் கீழமை நீதிமன்றங்களில் எழும் பொழுது, கீழமை நீதிமன்றத்தால் பின்பற்றப்பட வேண்டும். இக்கொள்கை, 'முன்தீர்ப்பு நெறி நிற்றல்' எனப்படும். அதாவது அத்தீர்ப்புகளே சட்டங்களாக கீழமை நீதிமன்றங்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் முன் எழும் அதையொத்த வழக்குகளில் பின்பற்றப்படுகின்றன.

ஆனால் சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளானது, கட்டுப்படுத்தும் தன்மை கொண்ட ஒரு பொதுவான நாட்டிடைச் சட்டத்தை உருவாக்குவதில்லை. சர்வதேச நீதிமன்றச் சட்டத்தின் **59–வது சரத்து**, சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகள், சம்பந்தப்பட்ட வழக்கையும் அதன் தரப்பினர்களையும் மட்டுமே கட்டுப் படுத்துமேயொழிய, பின்னிட்டு அதையொத்தவாறு எழும் வழக்குகளையோ, அதன் தரப்பினர்களையோ கட்டுப்படுத்தாது என்று தெளிவுபடுத்துகிறது.

இதிலிருந்து சர்வதேச நீதிமன்றம் வழங்கிய முந்தைய தீர்ப்புகள், அந் நீதிமன்றத்தையே கட்டுப்படுத்தாது என்பதும், அது அம்முந்தைய தீர்ப்புகளிலிருந்து வேறுபட்ட ஒரு தீர்ப்பை வழங்க அது சுதந்திரம் கொண்டது என்பதும் புலனாகும். எனினும் நடைமுறையில் என்ன நடக்கிறது என்பதை நாம் இங்கு கவனித்தல் வேண்டும். அஃதாவது சர்வதேச நீதிமன்றம் நடைமுறையில், தான் வழங்கிய முந்தைய தீர்ப்புகளிலிருந்து வேறுபட்டுச் செல்வதில்லை. ஒத்த மாதிரியான வழக்குகளின் பொழுது, தான் முன்னதாக வழங்கிய தீர்ப்புகளைப் பின்பற்றியே தீர்ப்பளிக்கின்றன. மிகவும் விதிவிலக்கான சூழல்களில் மட்டுமே, தனது முந்தைய தீர்ப்புகளிலிருந்து வேறுபட்டு தீர்ப்பளிக்கின்றன. எனவே ஏட்டளவில் சர்வதேச நீதிமன்றம் தனது முந்தைய தீர்ப்புகளைப் பின்பற்ற வேண்டியதில்லை என்றிருந்த பொழுதும், நடைமுறையில் அது தனது முந்தைய தீர்ப்புகளைப் பின்பற்றியே தீர்ப்பளிக்கின்றன. எனவே சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகளும், நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாக உள்ளன.

அறிஞர்களின் ஒரு பகுதியினர், சர்வதேச இசைவுத் தீர்ப்பாயங்கள் வழங்கும் முடிவுகளை, நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று குரல் கொடுத்தனர். இதற்குக் காரணமாக, இசைவுத் தீர்ப்பாயங்களில் முன்னிலை

வகிப்பவர்கள், நீதிபதிகள் அல்லர்; அவர்கள் இரு தரப்பினர்களுக்கு இடையே பேச்சு வார்த்தை நடத்தும் நடுவர்களே என்றும், அவர்கள் வழங்கும் முடிவுகள் சட்டத் தன்மை கொண்டவையல்ல என்றும் கூறுகின்றனர். இவர்களது கருத்து ஓரளவு ஏற்புடையதாக இருந்தாலும், அறிஞர்களில் மற்றொரு பகுதியினர், சர்வதேச இசைவுத் தீர்ப்பாயத்தின் முடிவுகளை (International Arbitral Awards), நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாகக் பாவிக்க வேண்டும் என்று கூறுகின்றனர். இதற்கு எடுத்துக்காட்டாக, நிரந்தர இசைவுத்தீர்ப்பு நீதிமன்றத்தின் (Permanent Court of Arbitration) முடிவுகளில் சில, ஒத்த மாதிரியான பிரச்சனைகளில் பின்பற்றப் பட்டுள்ளதைச் சுட்டிக் காட்டினர். இசைவுத் தீர்ப்பாயத்தின் முடிவுகள் சட்டத் தன்மை கொண்டவை என்பதற்கும், அது நாடுகளை சட்டப்படியாகக் கட்டுப்படுத்தக் கூடியவை என்பதற்கும் ஆதாரமாக **கட்ச் இசைவுத் தீர்ப்பு முடிவு (Kutch Arbitration Award[1]), அலபாமா கோருரிமை வழக்கு (The Alabama Claims Arbitration Case[2]), வட அட்லாண்டிக் மீன்பிடி உரிமை வழக்கு (North Atlantic Fisheries Case[3])** ஆகியவற்றைச் சுட்டிக்காட்டலாம். எனவே நாட்டிடைச் சட்டம் குறித்த பிரச்சனையில், வழக்குகளில் ஏதேனும் அய்யம் எழுந்தால், சர்வதேச இசைவுத் தீர்ப்பாயம் வழங்கிய முடிவுகளை அதன் ஒரு மூலமாகக் கொண்டு அறியலாம்.

(5) சர்வதேச சட்ட வல்லுநர்களின் போதனைகளும் ஆய்வுரைக் கருத்துக்களும் (Teachings of Publicists and Juristic Works):

இதுவும் நாட்டிடைச் சட்டத்தின் ஒரு துணை மூலமாகும். வெளிப் படையான நாட்டிடைச் சட்ட விதிகள் எங்கெல்லாம் இல்லையோ அங்கெல்லாம், நாட்டிடைச் சட்டத்தின் மற்ற மூலங்களின் துணை கொண்டு அவ்விதியை அறிய முற்படுவது உண்டு. சில வேளைகளில் அம்முறையிலும் தோல்வியுறுவது உண்டு. அவ்வேளைகளில் நாட்டிடைச் சட்டத்தை ஆய்ந்து அறிந்து உணர்ந்த, கற்றறிந்த வல்லுநர் பெருமக்கள், சர்வதேச சட்ட அறிஞர்கள் ஆகியோர் கூறும் கருத்துக்களைக் கொண்டு அவர்களது காலத்தில் நாடுகளுக்கிடையிலான உறவுகளில் என்னென்ன வழக்கங்கள், வழக்காறுகள் பின்பற்றப்பட்டு வந்தன என்பதை அறிந்து அதற்கொப்ப நாட்டிடைச் சட்ட விதிகளை உய்த்துணரலாம் என **Paquette Habana[4]** வழக்கில் நீதியரசர் **கிரே** அவர்கள் குறிப்பிட்டுள்ளார். கூறப்போனால் நாட்டிடைச் சட்டமே ஒரு சில பெரும் சட்டச் சான்றோர்களின் சிந்தனைத் தெளிவின் தத்துவச் சாரமே ஆகும். இதற்கு உதாரணமாக ஹீயுகோ குரோஷியஸ், விக்டோரியா, வேட்டல், சாக்கே (Hugo Gurotius, Victoria, Vattal and Zouche) போன்ற நாட்டிடைச் சட்ட வல்லுநர்களின் சட்டப் பணியைக் கூறலாம்.

1. (1968)
2. (1872)
3. (1910)
4. (1900) 175 U.S. 677 at p. 700

இவை தவிர பின்வரும் மூலங்களும் உண்டு. அவை :

(6) நாடுகளுக்கிடையிலான மரியாதை உறவுகள் (International Comity):

சட்டத்தால் நாடுகள் தங்களுக்குள் ஒரு கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்வது மட்டுமல்லாமல், ஒரு நாடு மற்றொரு நாட்டை மதித்து நடத்தல், அந்நாட்டுச் செயற்பாட்டின் மீது நன்னம்பிக்கை கொள்ளுதல், அந்நாட்டின் வசதியை அறிந்து செயற்படல் ஆகிய மரியாதை உறவுகளின் வாயிலாகவும் தங்களுக்கிடையே ஒரு கட்டுப்பாட்டை வளர்த்துக் கொள்கின்றன. இவைகள் சட்டத்தால் ஏற்படும் விதிகளல்ல. நாடுகளின் நல்லெண்ணத்தால் வகுத்துக் கொள்ளப்படும் நன்னெறிகள். ஆனால் இத்தகு உறவுகள் நாட்டிடைச் சட்டத்தின் மூலமாக, முன்பு இல்லை. எனினும், அவைகளில் பல இன்று, நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களாக விளங்குகின்றன.

Russian Socialist Federated Soviet Republic v. Cibrario[1] – இவ்வழக்கில் நீதிபதி ஆண்ட்ரூஸ் (Andreus) அவர்கள், 'மரியாதை உறவு' (Comity) என்பது, நாடுகளின் குடும்பத்தில் ஒரு உறுப்பு நாடு மற்ற நாடுகளுக்கு காட்டும் பரஸ்பர நன்றியுணர்வு, நட்பு ஆகியவற்றை முதலாகக் கொள்வது... மேலும் 'நியாயத்துடன் நடப்போம்; பதிலுக்கு நியாயம் பெறுவோம்' (We do justice; that justice may be done in return) என்பதின் அடிப்படையில் அமைந்தது, என்கிறார்.

(7) அரசுமுறை ஆதாரப் பத்திரங்கள் (International State Papers):

நாடுகளுக்கிடையிலான பிரச்சனைகள் அரசுமுறை ஆதாரப் பத்திரங்களின் வாயிலாக விவாதிக்கப்படும். இந்த விவாதத்தில் சட்டத்தில் தேர்ச்சி பெற்ற, திறமை வாய்ந்த நீதிபதிகள், அறிஞர்கள் பங்கு கொள்வார்கள். இவ்விவாதத்திற்கு பின்னர், அவர்கள் தங்களுடைய கருத்துக்களை, தங்கள் தங்கள் அரசுகளுக்கு இரகசியமாக அனுப்புவார்கள். இப்படிப்பட்ட கருத்துக்கள் பல, நாட்டிடைச் சட்டமாக உருவெடுத்துள்ளன. ஒவ்வொரு நாட்டின் வெளியுறவுத்துறை அமைச்சகங்கள் இப்படிப் பட்ட கருத்துரைகள் (Opinions) பலவற்றை கொண்டுள்ளன. அவையெல்லாம் பதிப்பிக்கப்பட்டால், நாட்டிடைச் சட்டத்தின் வளர்ச்சி மேலும் பன்மடங்கு பெருகும்.

(8) அரசு அதிகாரிகளுக்கு வழிகாட்ட அரசு கொடுக்கும் அறிவுறுத்தல்கள் (State Instructions for the guidence of their own Officers)

(9) சர்வதேச மாநாட்டின் தீர்மானங்கள் (Resolutions of International Conferences)

(10) உள்நாட்டுச் சட்டங்கள் மற்றும் உள்நாட்டு நீதிமன்றங்களின் முடிவுகள் (Municipal Laws and the decisions of Muncipal Courts)

1. New York Court of Appeals, 235-255

5

நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் [Codification of International Law]

7. Write a note on the efforts made towards the codification of the Law of Nations. (நாடுகளின் சட்டத்தின் சட்டக் கோட்பாடுகளை தொகுத்து சட்டமாக்குவதற்கான முயற்சிகள் குறித்து குறிப்பு வரைக.)

(அல்லது)

What was the contribution of the International Law Commission to codify the International Law? Explain. (நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதில் சர்வதேச சட்ட ஆணையத்தின் பங்கு என்னவாக இருந்தது? விளக்குக.)

(அல்லது)

Codification of International Law - Write short notes. (நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் (Codification of International Law) :

உள்நாட்டுச் சட்டங்களில் பல முறைப்படி தொகுக்கப்பட்டவையாக உள்ளன. எடுத்துக்காட்டாக, நமது இந்திய நாட்டில் இந்திய தண்டனைச் சட்டத் தொகுப்பு (Indian Penal Code), குற்றவியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு (Criminal Procedure Code), உரிமையியல் நடைமுறைச் சட்டத் தொகுப்பு (Civil Procedure Code) ஆகியவற்றைக் குறிப்பிடலாம். இவையெல்லாம் அந்தந்த சட்டஞ் சார்ந்த வகைமுறைகளை ஒருங்கே ஒரே சட்டத்தின் கீழ் தொகுக்கப் பெற்றதாகும். அவ்வாறே, நாடுகளிடையே பொதுவாக பின்பற்றப்படும்

விதிமுறைகளை தொகுத்தல் வேண்டும் எனும் கருத்து உலகளவில் பரவலாக ஏற்பட்டது. இங்கு நாடுகளிடையே பின்பற்றப்படும் பொதுவான விதிமுறைகள் என்பதை இரண்டு கோணங்களில் குறிப்பிடலாம். அவை (1) நாடுகளிடையே பின்பற்றப்பட்டு வரும் பழக்க வழக்கங்கள், வழக்காறுகள்; (2) நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகள், மாநாட்டு ஏற்பு விதிகள், சாசனங்கள். இவை இரண்டையும் 'நாட்டிடைச் சட்டம்' எனும் தலைப்பின் கீழ் முறையாக எழுத்துவடிவில் தொகுத்தலே, 'நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல்' எனப்படுகிறது.

வரையறை:

"நாட்டிடைச் சட்டத்தைத் தொகுக்கும் பணி என்பதைக் குறித்து ஏதேனும் பொருள் கூற வேண்டுமெனில், அது நாடுகளிடையே நிலவும் பழக்க வழக்கங்கள் அல்லது நாடுகளினால் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையில் ஏற்கனவே எழுந்துள்ள விதிகளை நாடுகளால் ஒப்புக் கொள்ளப் பட்ட விதிகளாக மாற்றிக் கொண்டு வருதலையே முதற்பணியாகக் கொண்டதாகும் என்று **Lauterpacht** எனும் அறிஞர் கூறுகிறார்.

வரலாற்றுப் பின்னணி:

18–ஆம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் நாட்டிடைச் சட்டத்தைத் தொகுக்கும் முயற்சிகள் ஆரம்பித்தது என்று கூறலாம். நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் வேண்டும் என்று முதலில் கருத்துரைத்தவர், அறிஞர் பெந்தாம் ஆவார். அந்த வகையில் 1856–ஆம் ஆண்டில் நடைபெற்ற **பாரிஸ் பிரகடனம் (Declaration of Paris)**, நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். மேலும் இவ்வாறு தொகுக்கும் பொருட்டு 1899–ஆம் ஆண்டில் **முதலாம் ஹேக் மாநாடு (First Hague Conference)** நடந்தது. இதைத் தொடர்ந்து 1907–ஆம் ஆண்டில் **இரண்டாம் ஹேக் மாநாடு (Second Hague Conference)** நடந்தது. இதில் 44 நாடுகள் கலந்து கொண்டன. முதலாம் உலகப் போருக்குப் பின்னிட்டுத் தோன்றிய **சர்வதேச சங்கமானது (League of Nations)** நாட்டுரிமை, எல்லையோரக் கடல், நாட்டுப் பொறுப்பு, கடற்கொள்ளை ஆகிய தலைப்புகளின் கீழ் நாட்டிடைச் சட்ட விதிகளை தொகுப்பதில் அதிக கவனம் செலுத்தியது. பின்னிட்டு, 1930–ஆம் ஆண்டில் **ஹேக் தொகுப்பு மாநாடு (Hague Codification Conference)** நடந்தது. இதுவே நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதெற்கென முதன்முதலில் பிரத்யேகமாக நடத்தப்பட்ட மாநாடாகும். அதுபோல் நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதற்கான முக்கிய அங்கீகாரத்தை இரண்டாம் உலகப் போருக்குப் பின் உதித்த **அய்க்கிய நாடுகள் சபையின் சாசனம் (Charter of United Nations)** வழங்கியது. அச்சாசனத்தின் சரத்து 13(1)(a)–ஆனது, "நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதற்கும், நாட்டிடைச் சட்டத்தின் முன்னேற்றமான வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கும் மற்றும் அரசியல் துறையில் சர்வதேச ஒத்துழைப்பை மேம்

படுத்தவும் அய்க்கிய நாடுகளின் பொதுப் பேரவை (General Assembly of U.N.O.) ஆய்வுகளை மேற்கொண்டு தக்க பரிந்துரைகளைச் செய்தல் வேண்டும்" என்று கூறுகிறது.

நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதில் சர்வதேச சட்ட ஆணையத்தின் பங்களிப்பு (The Contribution by the International Law Commission) :

அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை (General Assembly of U.N.O.), 'சர்வதேச சட்ட ஆணையத்தை' நிறுவியது. இது நாட்டிடைச் சட்டத்தை வளர்ச்சியுறச் செய்வதில் பல்வேறு பரிந்துரைகளைச் செய்துள்ளது. அந்த வகையில் நாட்டிடைச் சட்டத்தை தொகுப்பதற்குண்டான பல்வேறு வழிகாட்டு நெறிகளை வகுத்துரைத்துள்ளது. கடல் தொடர்பான சட்டங்கள், தூதுரகத் தொடர்பு மற்றும் தூதர்களின் சிறப்புரிமைகள் குறித்த சட்டங்கள், மனித உரிமைகள், உலக வர்த்தகம், பதிப்புரிமை, வணிகச் சின்னம் குறித்த உரிமை, இசைவுத்தீர்வு முறை, சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பு ஆகியவை தொடர்பான சட்டங்கள் குறித்து பல்வேறு வரைவுகளை வரைந்து அய்க்கிய நாடுகளின் பொதுச் சபையின் முன் சமர்ப்பித்துள்ளது. நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் தொடர்பாக இந்த ஆணையம் வழங்கிய பல்வேறு பரிந்துரைகளை அய்க்கிய நாடுகளின் பொதுச் சபை ஏற்றுக் கொண்டுள்ளது. நாட்டிடைச் சட்டத்தை தொகுப்பதில் சர்வதேச சட்ட ஆணையத்தின் பங்கு மகத்தானது என்றே கூற வேண்டும்.

நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதால் ஏற்படும் நன்மைகள் (Merits of Codification of International Law):

(1) **உறுதிப்பாடு (Certainity):** நாட்டிடைச் சட்டத்தை தொகுப்பதால், நாட்டிடைச் சட்டம் குறித்து ஒரு உறுதிப்பாடு ஏற்படுகிறது. அய்யங்களும், குழப்பங்களும் மறைகின்றன.

(2) **நாட்டிடை பழக்க வழக்கங்கள் பாதுகாக்கப்படுகின்றன:** நாட்டிடைச் சட்டத்தின் பிறப்பிடம், நாடுகளுக்கிடையே பின்பற்றப்பட்டு வந்த, வருகின்ற பழக்க வழக்கங்கள் மற்றும் வழக்காறுகள் ஆகும். நாட்டிடைச் சட்டத்தைத் தொகுத்தல் எனும் பணியே, நாட்டிடை பழக்க வழக்கங்களை எழுத்துவடிவில் கொண்டு வருதலாகும். இதனால் நாட்டிடை பழக்க வழக்கங்களுக்கு வலிமை ஏற்படுகின்றன. அவற்றை விளம்பும் ஏடுகளாக நாட்டிடைச் சட்டத்தின் தொகுப்பு அமைகிறது.

(3) **சீர்மை (Uniformity):** நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதால், உலகம் முழுவதும் ஒரே மாதிரியான சட்டம் விளைய ஏதுவாகிறது. நாட்டிடைச் சட்டத்தைப் பின்பற்றுவதில் நாடுகளிடையே ஒரே சீரான தன்மை ஏற்படுகிறது. முரண்பாடுகள் தவிர்க்கப்படுகின்றன.

நாட்டிடைச் சட்டத்தைத் தொகுப்பதால் ஏற்படும் தீமைகள் (Demerits of Codification of International Law):

(1) நெகிழாமை (Rigidity): எழுத்து வடிவில் தொகுக்கப்பட்ட சட்டத்தை திருத்துவது கடினம். அதிலும் நாட்டிடைச் சட்டத்தில் திருத்தங்கள் கொண்டு வர வேண்டுமெனில், அதை எவ்வாறு செய்வது, யார் செய்வது என்பது குறித்த வினாக்கள் தோன்றுகின்றன. இவ்வாறு எளிதில் திருத்த இயலாச் சட்டத்தை நெகிழாத் தன்மை கொண்டது என்பர்.

(2) தனித்துவத்தை நிலைநாட்ட முடியாமை: நாட்டிடைச் சட்டம் தொகுக்கப்பட்டால், அது உலகம் முழுமைக்கும் ஒரு ஒற்றுமையைக் கொண்டு வரும் என்பதில் மாற்றுக் கருத்தில்லை. ஆனால் அதுவே ஒரு இடர்பாட்டையும் விளைவிக்கிறது. அதாவது, அனைத்து நாடுகளுக்கும் பொருந்தக் கூடிய சட்டத்தில், தனியொரு நாட்டின் விருப்பு, வெறுப்பு, பற்றார்வம், நாட்டு மக்களின் உணர்ச்சி, பழக்க வழக்கம் ஆகியவற்றிற்கு இடமில்லாது போய்விடுகிறது. இதனால் நாடுகளின் தனித்துவம் மறைந்துவிடுகிறது.

(3) தவறு செய்தலும், அதிலிருந்து தப்பித்தலும் எளிதாகிறது: நாட்டிடைச் சட்டத்தை தொகுப்பதால், அனைவரும் அச்சட்டத்தை அறிந்து கொள்ள முடிகிறது. இதனால் தவறு செய்பவர்களும் அச்சட்டத்தை நன்கறிந்து கொள்கின்றனர். மேலும் அதிலிருந்து தப்பிக்கும் வழியையும் எளிதில் கண்டறிந்து கொள்கின்றனர். இதனால் சட்டத்தை மீறும் நிகழ்வு சாதாரணமாகிவிடுகிறது.

(4) இருக்கும் உரிமை பாதிக்கப்படல்: தொகுக்கப்பட்ட நாட்டிடைச் சட்டம், குடிமக்களுக்கு ஏற்கனவே இருக்கும் உரிமைகளை பாதிக்கச் செய்யலாம். இதனால் சமுதாயத்தில் குழப்பமும், ஒழுங்கின்மையும் தோன்றலாம்.

முடிவுரை:

நாட்டிடைச் சட்டத்தை தொகுப்பதற்காக செய்யப்பட்ட பல்வேறு முயற்சிகளை நாம் மேலே கண்டோம். நாட்டிடைச் சட்டத்தை தொகுத்தல் வரவேற்கத் தக்கதே. அதனால் பல நன்மைகள் எழுகின்றன. எனினும் அவ்வாறு தொகுப்பதால் பல்வேறு தீமைகளும் எழவே செய்கின்றன. எனவே நாடுகளுக்கு பொதுவாக இருக்கும் விஷயங்களைப் பொறுத்து மட்டும் உள்ள நாட்டிடை பழக்க வழக்கங்கள், ஏற்பு விதிகள், உடன்படிக்கைகளின் வாயிலாக விளைந்த விதிகள் ஆகியவற்றைத் தொகுத்தல் நலம் பயக்கும். அதே சமயத்தில் தனியொரு நாட்டின் உணர்வு களுக்கும், குடிமக்களுக்கு ஏற்கனவே இருக்கும் உரிமைகளுக்கும் எவ்வித குந்தகமும் ஏற்படுதல் கூடாது.

-oOo-

6

நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் [Subjects of International Law]

8. To what extent is it true to say that individual is a subject of International Law? Discuss the question with reference to recent trends. (தனி மனிதன் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாக உள்ளான் என்று கூறுவது எந்த அளவிற்கு உண்மையாகும் ? சமீப நடப்புகளைக் கொண்டு இவ்வினாவினை விவாதிக்க.).

(அல்லது)

"International law is no more primarily concerned with the rights, duties and interests of States Only." Examine. ("நாட்டிடைச் சட்டம், நாடுகள் குறித்த உரிமைகள், கடமைகள் மற்றும் நலன்கள் பற்றி மாத்திரம் முதன்மையாக அக்கறையுள்ளதாக தற்போது இல்லை." ஆராய்க)

(அல்லது)

"The individual is no more just the object of international law, he has very much become the subject of international law". Discuss ("தனிநபர் நாட்டிடைச் சட்டத்தின் நோக்கப் பொருளாக மட்டுமே இல்லை, நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாகவே ஆகிவிட்டார்". விவாதிக்கவும்.)

(அல்லது)

International law is primarily concerned with the rights, duties and interests of States. Explain. ("நாட்டிடைச் சட்டம் நாடுகளின் உரிமைகள், கடமைகள் மற்றும் நலன்களையே முதன்மையாகக் கருதுகிறது. விவரி.)

(அல்லது)

Define "International Law". Explain with reasons, the statement that international organisations and individuals under certain circumstances are also subject of international law. (பன்னாட்டுச் சட்டத்தை வரையறை செய். சர்வதேச அமைப்புகளும் மற்றும் சில சூழ்நிலைகளில் தனிமனிதர்கள் கூட பன்னாட்டுச் சட்டத்தின் கருப்பொருள் ஆவார்கள் என்ற கூற்றினை காரணங்களுடன் விளக்குக.)

(அல்லது)

Examine the statement that International organisations and individuals are also the subjects of International Law (சர்வதேச அமைப்புகள் மற்றும் தனிநபர்களும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாக உள்ளனர் என்ற கூற்றை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Nuremberg Trial - Write short notes. (நியுரம்பர்க் வழக்கு விசாரணை – சிறு குறிப்பு எழுதுக.)

சட்டத்தின் கருப்பொருள் (Subjects of the Law) :

"நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள்" என்பதின் விளக்கத்தை தெரிந்து கொள்ளும் முன்னர் "சட்டத்தின் கருப்பொருள்" என்பதின் விளக்கத்தை அறிந்து கொள்ளல் அவசியமாகும். அதாவது, சட்டத்தின் உரிமைகளையும் கடமைகளையும் எவனொருவன் அடைகிறானோ, அவனே சட்டத்தின் கருப்பொருள் ஆகிறான். நாட்டிடைச் சட்டத்தினைப் பொறுத்தவரை, அதன் உரிமைகளையும், கடமைகளையும் நாடுகள் அடைகின்றன. ஆகவே அவைகள் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாகி, உலக நபரத்துவம் (International Personality) அடைகின்றன.

சட்டத்தின் பருப்பொருள் (அல்லது) சட்டத்தின் நோக்கப் பொருள் (Objects of the Law) :

உரிமைகளை நிலைநிறுத்தவும், கடமைகளை வலியுறுத்தவும் அவசியமாக இருப்பவைகள் சட்டத்தின் பருப்பொருள் ஆகும். நாட்டிடைச் சட்டத்தின் பருப் பொருளாக இருப்பவர்கள் தனி நபர்கள்தாம் (Individuals) என பழமைவாதிகள் (Orthodox Positivists) கூறுகின்றனர். அதாவது நாட்டிடைச் சட்டத்தின் கீழ் எவ்விதமான உரிமைகளையோ அல்லது கடமைகளையோ அவர்கள் நேரடியாகப் பெறுவதில்லை. இதனால் அவர்களுக்கு உலக நபரத்துவம் கிடையாது. வேறு விதத்தில் கூறுவதெனில், நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் (Subjects), நாடுகளேயாகுமே தவிர தனி நபர்கள் அல்லர், என்பது அவர்கள் கருத்து.

இவர்களது கூற்று இப்படி இருக்க, ஒரு தனிநபரும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே ஆவர் என்று அறிஞர்கள் பலரும் விவாதிக்கின்றனர். இவர்கள் இவ்வாறு விவாதிப்பதில் எவ்வித வியப்புமில்லை. ஏனெனில் அதற்குத் தக்க காரணங்கள் பல உள. மேலும் அவர்களது விவாதத்திற்கு சமீப நடப்புகளும் சாதகமாகவே உள்ளன.

நாடுகள்தாம் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் என்போரின் வாதங்கள் (Only the States are Subjects of International Law) :

முன்பே கூறியபடி பழமைவாதிகளாகிய (Orthodox Positivists) ஒப்பன்ஹெய்ம் (Oppenheim), ஸிவர்ஜென்பெர்ஜர் (Schwazenberger) ஆகியோர், நாடுகள் மட்டுமே நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் (Subjects) ஆகும் என்றும், தனிநபர்கள் நாட்டிடைச் சட்டத்தின் பருப் (நோக்கப்) பொருள்களாக (Objects) மட்டுமே இருக்கின்றனர் என்று கூறுகின்றனர். அதற்கு அவர்கள் பின்வரும் காரணங்களை சுட்டிக்காட்டுகின்றனர்.

1. தனிநபர்கள் நாட்டிடைச் சட்டத்தின் நேரடிப் பார்வையின் கீழ் வருவதில்லை. மேலும் அவர்களுக்கு நாட்டிடைச் சட்டத்தின் கீழ் எவ்வித உரிமைகளும் கடமைகளும் கிடையாது. இதனால் அவர்களுக்கு உலக நபரத்துவம் (International Personality) எனும் தகுநிலையும் (Status) கிடையாது.

2. நாடுகளுக்கிடையிலான மாநாடுகள் நாடுகளால் மட்டுமே நடத்தப் படுகின்றனவே தவிர தனி நபர்களால் அல்ல. மேலும் மாநாட்டு ஏற்புவிதிகளிலும், உடன்படிக்கைகளிலும் அதன் தரப்பு நாடுகள் மட்டுமே கையொப்பமிடுகின்றன. அவை யாவும் நாடுகளின் பெயரில்தான் முடிவுறுகின்றனவே தவிர, தனிநபர்களின் பெயரில் அல்ல.

3. தனிநபர் ஒருவன், ஒரு நாட்டிற்கு எதிராக நாட்டிடை பிரச்சனை ஒன்றினை கிளப்ப முடியாது. மாறாக, அவன், தான் குடியுரிமை பெற்றிருக்கும் நாட்டின் வாயிலாகத்தான் பிரச்சனையை கொண்டு வர முடியும். இதற்கு ஒரு மறைமுகமான உதாரணமாக சர்வதேச நீதிமன்ற சட்டத்தின் 34–வது சரத்தினைக் கூறலாம். அதன்படி நாட்டிடை வழக்குகளில் நாடுகள் மட்டுமே தரப்பினர்களாக இருக்க முடியுமே தவிர, தனி நபர்கள் அல்ல.

4. நாடுகள் மட்டுமே பிற நாடுகளுக்கு தூதுவர்களை அனுப்பவோ அல்லது பெறவோ அதிகாரம் படைத்துள்ளது.

5. நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகள் நாட்டின் முன்னேற்றம் என்ற பெயரில் தனிநபரின் நலனுக்காக ஏற்படுத்தப்படுவது என்னமோ உண்மை

தான். ஆனால் அவ்வுடன்படிக்கைகளில் தனிநபர்கள் பலனை அடைபவர்களாக மட்டுமே இருக்கின்றனரே தவிர, மேற்படி உடன்படிக்கைகளின்படி தங்களது உரிமைகளை நிலைநிறுத்திக் கொள்ள நேரடியாக நாடுகளுடன் மோத முடியாது. தங்களது நாட்டின் வாயிலாகத் தான் போராடிப் பெற முடியும்.

சர் ஃபிரடெரிக் ஸ்மித் என்ற மற்றொரு பழமைவாதி, "நாடுகள் மட்டுமே நாடுகளின் சட்டத்தின் கீழ் நின்று வழக்குரைக்கும் உரிமையை அனுபவிக்க முடியும். அவைகள் மட்டும் உலக நபரத்துவத்தில் புக முடியும்." (State and States alone enjoy a locus standi in the law of nations and that they are the only wearers of international personality), என்கிறார்.

தனிநபர்களும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே என்போரின் வாதங்கள் (Individuals are also Subjects of International Law) :

காலங்கள் மாற மாற பழமைவாதிகளின் கருத்துகளும் படிப்படியாக மாற்றம் அடைந்தன. அறிஞர் நெல்சன் அவர்கள், நாட்டிடைச் சட்டத்தின் கருப் பொருளாக எவ்வாறு நாடு இருக்கிறதோ, அவ்வாறே தனிமனிதனும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் ஆகிறான் என்று கூறினார். நாடு என்பதே தனி நபர்களின் கூட்டம். நாட்டிடைச் சட்டத்தின் உரிமைகளையும் கடமைகளையும் ஒரு நாடு அடைகிறதென்றால், அது அந்நாட்டின் தனிநபர் ஒவ்வொருவரும் அடைந்த தாகத்தான் பொருள்படும், என அவர் மேலும் கூறி தனிநபரும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே என வாதாடுகிறார்.

அறிஞர் **ஹூஃப்டர் (Heffter)** அவர்கள் தனி நபரை நாட்டிடைச் சட்டத்தின் உடனடி கருப்பொருளென (Immediate subjects of International law) வருணிக்கிறார்.

அறிஞர் **P.M. பிரௌன்** அவர்கள், "நாட்டிடைச் சட்டத்தை ஆதரிப்பவர்கள் செய்த மிகப் பெரும் தவறு, அது இறைமை பெற்ற நாடுகளுக்கிடையே மட்டுமே பொருந்தக்கூடியதாகும் என சொன்னதையே சொல்லும் கிளிப்பிள்ளை (Parrot like reaffirmation) போல கூறுவதாகும்" என மறைமுகமாக தனி நபர்களும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே என உணர்த்துகிறார்.

அதுபோல் சர்வதேச அமைப்புகளும் (International Organisations) நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாக இன்று உள்ளன.

மேற்படி அறிஞர்களின் கூற்றுகளுக்கு சாதகமாக சமீப காலத்திய நடப்புகளும் அமைந்துவிட்டன. அவற்றினை பின்வருமாறு கவனிப்போமா?

சமீப காலத்திய நடப்புகள் :

(1) டான்ஸிங் இருப்பாதைகள் அலுவலர் வழக்கு (Danzing Railways Official Case[1]):

சர்வதேச உடன்படிக்கை ஒன்றின் வாயிலாக 'டான்ஸிங் இருப்புப்பாதை நிறுவனம்' (Danzing Railway Co.) எனும் பெயருடைய நிறுவனமொன்றை போலந்து நாடு கையகப்படுத்திக் கொண்டது. அவ்வுடன்படிக்கையின் அடிப்படையில், அந்நிறுவனத்தின் அலுவர்களுக்கு சில வசதிகளை அளிக்க போலந்து ஒப்புக் கொண்டது.

ஆனால் பின்னிட்டு அவ்வசதிகளை போலந்து அளிக்க மறுத்து, பின் வருமாறு வாதிட்டது. அதன்படி அவ்வுடன்படிக்கை ஒரு சர்வதேச உடன்படிக்கையின் வடிவத்தில் உள்ளது என்றும், அதனால் எழும் உரிமைகளும் கடமைகளும் அதன் தரப்பு நாடுகளை மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியது என்றும், எனவே அந்த உடன் படிக்கையின் கீழ் தனிநபர்கள் எவ்வித உரிமைகளையும் பெறுவதில்லை என்றும், நிரந்தர சர்வதேச நீதிமன்றத்தின் முன் வாதிட்டது. ஆனால் போலந்தின் இவ் வாதத்தை சர்வதேச நீதிமன்றம் ஏற்க மறுத்து, உடன்படிக்கையின் தரப்பினர்களாக விளங்கும் நாடுகள், அவ்வுடன்படிக்கையின் வாயிலாக சில உரிமைகளை தனி நபர்களுக்கும் வழங்குவதாக நோக்கம் கொண்டிருந்தால், நாட்டிடைச் சட்டம் தனி நபர்களின் அவ்வுரிமைகளை அங்கீகரிப்பதோடு மட்டுமல்லாமல், அதை சம்பந்தப் பட்ட தரப்பு நாட்டிற்கெதிராக வலியுறுத்திச் செயல்படுத்தவும் அதிகாரம் உடையது என்று தீர்ப்புரைத்தது.

(2) நியுரம்பர்க் வழக்கு விசாரணை (Nuremberg Trial[2]):

நியுரம்பர்க் வழக்கு விசாரணையில் குற்றம் சாட்டப்பட்டு இருந்த போர்க் குற்றவாளிகள் (War Criminals), நாட்டிடைச் சட்டம் இறைமை பெற்ற நாட்டின் நடவடிக்கைகளை ஒழுங்குப்படுத்த உள்ளதே தவிர, தனி நபர்களை தண்டிக்கும் அதிகாரம் அதற்கு இல்லை என நியுரம்பர்க்கில் உள்ள நாட்டிடை இராணுவ தீர்ப்பாயத்திடம் (International Millitary Tribunal at Nuremberg) வாதிட்டனர்.

ஆனால் மேற்படி தீர்ப்பாயம் அவர்களது வாதத்தினை நிராகரித்து விட்டு பின்வருமாறு கூறியது. அஃதாவது, நாட்டிடைச் சட்டமானது தனிநபர்கள் மீதும் கடமைகளையும், பொறுப்புகளையும் சுமத்துகிறது. ஆகவே நாட்டிடைச் சட்டத்தினை மீறி தனி நபர்கள் நடந்தால் அவர்களை தண்டிக்கும் அதிகாரம் அதற்கு உண்டு என்று கூறியது.

1. P.C.I.J. (1928), Series B.No. 15
2. 1964, AJ.I.L., Vol. 41 (1947). p. 172.

(3) மனிதவதை உடன்படிக்கை அல்லது ஏற்பு விதி (Genocide Convention):

மனித இனத்தைப் பூண்டோடு அழிப்பதை தடுத்து அதற்கு காரணமான வர்களை தண்டிக்கும் உடன்படிக்கையானது, அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சயைால் 1948–ஆம் ஆண்டு டிசம்பர் 9–ஆம் தேதியன்று அங்கீகரிக்கப்பட்டது. அன்றிலிருந்து தனி நபர் யாரேனும் ஒருவர் அவர் அரசியலமைப்புப்படி ஆட்சி செலுத்தும் ஆட்சியாளராக இருந்தாலும் சரி அல்லது அரசு அதிகாரியாக அல்லது தனி நபராக இருந்தாலும் சரி, ஒரு குறிப்பிட்ட இடத்தில் உள்ள மனித இனத்தை வேரோடு அழிக்கும் குற்றம் புரிந்தால், அவர்களை மேற்படி மனிதவதை தடுப்பு உடன்படிக்கையின் வாயிலாக தண்டனைக்கு உள்ளாக்கலாம் என்ற நிலை ஏற்பட்டது. இதனால் தனிநபரும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாகி விட்டான்.

(4) அய்க்கிய நாடுகள் சபையின் சாசனம் (The Charter of the United Nations Organisation):

அய்க்கிய நாடுகள் சபை தோன்றிய பின்னர் தனி நபர்களும், நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே என்ற கூற்று மேலும் வலுப்பெற்றது. அய்க்கிய நாடுகள் சபை சாசனத்தின் முகப்புரையே, **"அய்க்கிய நாடுகளின் மக்களாகிய நாம்" (We the Peoples of the United Nations)** என்றுதான் தொடங்கி உள்ளது. உண்மையில் சொல்லப்போனால் **"அய்க்கிய நாடுகள் சபையின் நாடுகளாகிய" (We the Countries of the United Nations)** என்றுதான் முகப்புரையின் தொடக்கம் இருந்திருக்க வேண்டும். இந்த ஒன்றிலிருந்தே நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாக தனிமனிதனுக்கும் முக்கியத்துவம் அளித்திருப்பது புலனாகும். அதனுடைய பல அமைப்புகளான, உலகச் சுகாதார அமைப்பு (WHO), உலகத் தொழிலாளர் அமைப்பு (ILO), உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) போன்றவையெல்லாம் தனி மனித மேம்பாட்டிற்காக ஏற்படுத்தப்பட்டவையாகும். தனி மனிதர்கள் சேர்ந்த இனம்தானே நாடாகிறது. இந்தக் கண்ணோட்டத்தில்தான் அய்க்கிய நாடுகள் சபை எப்பொழுதும் செயல்பட்டு வருகிறது. இன்று பல உலகப் பிரச்சனைகளையும் சமாளித்து வருகிறது.

(5) ஜெனீவா மாநாட்டு ஏற்பு விதி (Geneva Convention):

1949–ஆம் ஆண்டில் ஜெனீவா–வில் நடந்த சர்வதேச மாநாட்டில் ஏற்கப் பட்ட 'போர்க் கைதிகளை நடத்தும் உடன்படிக்கை'–யில் (The Geneva Convention on Treatment of Prisoners of War, 1949), போர்க் கைதிகள் நாடுகளால் மனிதாபிமானத்துடன் நடத்தப்பட வேண்டும், அவர்களை சிறைப் பிடித்திருக்கும் நாடுகள் அவர்களுக்கு உடல்ரீதியாக அல்லது மனரீதியாக சித்ரவதை எதையும் செய்தல் கூடாது என 13 உரிமைகளை வழங்கியுள்ளது. இது தனிநபர்களும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே என்பதை பறை சாற்றுகிறது.

(6) மனித உரிமைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் (International Recognition of Human Rights):

பல்வேறு சர்வதேச உடன்படிக்கைகள் தனிநபர்களுக்குள்ள பல்வேறு உரிமைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் வழங்கின. பல்வேறு சுதந்திரங்களையும் வழங்கின. அந்த வகையில் 1946–ஆம் ஆண்டில் 'மனித உரிமைகளின் மீதான அய்க்கிய நாடுகள் ஆணையத்தை' (United Nations Commission on Human Rights) அய்க்கிய நாடுகளின் சபை நிருமாணித்தது. இந்த ஆணையம் தனி நபர் மனித உரிமை மீறல் குறித்த புகார்களை (Private Complaints) பெற்று, அவற்றை மனித உரிமை மீறல் புரிந்த சம்பந்தப்பட்ட நாடுகளுக்கு அனுப்பி, அதன் மீது பதிலளிக்கும்படி கேட்டுக் கொள்கிறது. அந்த வகையில் இந்த ஆணையமானது, இது காறும் ஆயிரக்கணக்கான தனிநபர் மனித உரிமைகள் மீறல் குறித்த புகார்களைப் பெற்றுள்ளது. தக்க நிவாரணங்களையும் வழங்கியுள்ளது.

இதைத் தொடர்ந்து 1948–ஆம் ஆண்டில் 'மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனம்' (Universal Declaration of Human Rights) அய்க்கிய நாடுகளின் பொதுப் பேரவையால் எவ்வித மாறுபட்ட கருத்தும் இல்லாமல் ஒருமனதாக ஏற்று வெளியிடப்பட்டது. மேலும் 1966–ஆம் மக்களின் 'வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை' (International Covenant on Civil and Political Rights, 1966) ஒன்றும், அதே ஆண்டிலேயே மக்களின் 'பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கை' (International Covenant on Economic, Social and Cultural Rights, 1966) ஒன்றும் ஏற்பட்டது. முன்னதாக 1950–ஆம் ஆண்டில் ஏற்பட்ட மனித உரிமைகளின் மீதான அய்ரோப்பிய உடன்படிக்கை (European Covention on Human Rights, 1950) நாடுகளுக்கு எதிராக தனி நபர்களுக்கும் சில உரிமைகளை வழங்கியது. அவ்வுடன்படிக்கையின்படி, மனித உரிமைகளின் மீதான அய்ரோப்பிய ஆணையமும், அய்ரோப்பிய நீதிமன்றங்களும் (European Commission and Courts on Human Rights) நிறுவப்பட்டன. மனித உரிமைகள் எங்கெல்லாம் மீறப்படுகிறது என்பதை மேற்படி ஆணையம் புலனாய்வு செய்தது. அந்த மீறலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு வழங்க அந்த மீறலைப் புரிந்த நாடுகளுக்கு மேற்படி மனித உரிமைகளின் மீதான அய்ரோப்பிய நீதிமன்றம் ஆணையிட்டது. இவ்வாறு மேற்கண்ட உடன்படிக்கைகள் தனிநபருக்குள்ள மனித உரிமைகளுக்கு சர்வதேச அங்கீகாரம் வழங்கி, அவற்றை நாட்டிடைச் சட்டத்தின் வரம்பிற்குள் கொண்டு வந்தன.

(7) நாட்டிடை அதிகார அமைப்பிற்கு மனுச் செய்யும் உரிமை (Right to Petition an International Authority):

நாம் மேற்சென்ற பத்தியில் கண்டவாறு மனித உரிமை மீறப்பட்டுவிட்டது என தனிநபரோ அல்லது தனிநபர்கள் அடங்கிய ஒரு குழுவோ, நாட்டிடை அதிகார

அமைப்பிற்கு மனுச் செய்யலாம். இன்று இது போன்ற மனுக்கள் பல அய்க்கிய நாடுகள் சபையின் செயலகத்திற்கு (UN Secretariat) வந்த வண்ணம் இருக்கின்றன. இதனை விசாரித்து தக்க நடவடிக்கை எடுக்க அய்க்கிய நாடுகள் சபைக்கு அதிகாரம் உள்ளது. இதனை, ஒரு நாட்டின் விவகாரத்தில் தலையிடுவ தாகக் கூறி அந்நாடு அய்க்கிய நாடுகள் சபையின் நடவடிக்கைகளை தடுக்க முடியாது என அய்க்கிய நாடுகள் சபையின் சாசனத்தில் 2–வது சரத்தின் 7–வது பத்தி கூறுகிறது.

நாடல்லாத அமைப்புகளும் (சர்வதேச அமைப்புகள்) நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே (Non - State entities or International Organisations also subject of International Law):

முதலில் நாடுதான் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள் என்ற நிலை மாறி தனி மனிதனும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே எனும் கருத்து மலர்ந்தது. இதை மேற்சென்றவாறு கண்டோம். தற்பொழுது, இதற்கும் ஒரு படி மேலாக, 'நாடல்லாத அமைப்புகளும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே' என்ற நிலை உருவாகிவிட்டது. இங்கு சர்வதேச (நாட்டிடை) அமைப்புகளே (International Institutions) 'நாடல்லாத அமைப்புகள்' எனப்படுகின்றன.

அறிஞர் ஸ்டார்க் (Starke) அவர்கள், நாடுகளுக்கிடையிலான உடன் படிக்கையே அய்க்கிய நாடுகள் சபையால் தோற்றுவிக்கப்பட்டது. அச்சபையின் சாசனச் சரத்துகள் அதன் மற்ற அமைப்புகளாகிய உலகத் தொழிலாளர் அமைப்பு (I.L.O.) உலகச் சுகாதார அமைப்பு (WHO), உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) போன்றவைகளையும், அய்க்கிய நாடுகள் சபையின் பொது செயலாளரையும் (Secretary - General) கட்டுப்படுத்தி முறைப்படுத்துகிறது. இவ்வாறு உலக அமைப்புகளையும், அய்க்கிய நாடுகளின் சபையின் பொதுச் செயலாளராகிய ஒரு தனி நபரையும் அய்க்கிய நாடுகள் சபை சாசனம் கட்டுப் படுத்துவதால், அய்க்கிய நாடுகள் சபை எனும் நாடல்லாத ஒரு அமைப்பும் நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே என்று கூறுகிறார். அந்த வகையில் உலக வங்கியும் (World Bank) நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளே. உலக வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன்களை நாடுகள் செலுத்தவில்லையானால், அந்நாட்டிற்கு எதிராக நாட்டிடைச் சட்டத்தை நெறிப்படுத்தியுள்ள சர்வதேச உடன்படிக்கைகள், ஏற்புவிதிகள் ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை எடுக்கலாம்.

முடிவுரை :

கள்ளநோட்டு அச்சடிப்பதை ஒடுக்கவும் (Suppression of Counterfeiting Currency) (1929), பன்னாட்டு போதை மருந்து கடத்தலை ஒடுக்கவும்

(1936) ஏற்பட்ட ஜெனீவா உடன்படிக்கைகளின்படி தனிமனிதன் யாரேனும் மேற்படி சர்வதேச குற்றத்தைப் புரிந்தால் அவர்களை நாடுகள் ஒன்று சேர்ந்து தண்டிக்கலாம். மேலும், இப்படிப்பட்டவர்கள் தாங்கள் குற்றம் புரியவில்லை என சர்வதேச நீதிமன்றத்தின் முன்பு வாதாட அவர்களுக்கு உரிமை வழங்கப் பட்டுள்ளது. மேலும் அமெரிக்க அய்க்கிய நாடுகளால் போர்க் கைதியாக சிறைப் பிடிக்கப்பட்ட ஈராக் நாட்டு அதிபர் சதாம் உசேனை சர்வதேச நீதிமன்றத்தின் முன் விசாரணைக்காக நிறுத்த அந்நாடு முடிவெடுத்துள்ளதாக நாம் செய்திகளின் வாயிலாக அறிகிறோம். இவ்வாறு சமீப கால நடப்புகள் தனி மனிதனை நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருளாக்கிக் கொண்டு வருகிறது. தனி நபர்களுடைய உரிமைகள், கடமைகள் மற்றும் நலன்களை பற்றி அக்கறை கொண்டதாக இன்றைய நாட்டிடைச் சட்டம் விளங்குகிறது. நாட்டிடைச் சட்டம், நாடுகள் குறித்த உரிமைகள், கடமைகள் மற்றும் நலன்கள் பற்றி மாத்திரம் முதன்மையாக அக்கறையுள்ளதாக தற்போது இல்லை, என்ற கூற்று முற்றிலும் சரியானதுதான்.

-o0o-

7

நாட்டிடைச் சட்டத்திற்கும் உள்நாட்டுச் சட்டத்திற்கும் இடையிலான தொடர்பு [The Relationship between International Law and Municipal Law]

9. Examine the relationship between Municipal Law and International Law in England and India. (இங்கிலாந்திலும் மற்றும் இந்தியாவிலும் நாட்டிடைச் சட்டத்திற்கும் உள்நாட்டு சட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பை ஆராய்க.)

(அல்லது)

Examine the doctrine of Blackstone that the law of Nations is part of the law of land. (நாட்டிடைச் சட்டம் என்பது உள்நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியே எனும் பிளாக்ஸ்டோனின் கோட்பாட்டினை ஆய்க).

(அல்லது)

Explain the theories regarding the relationship between International Law and Municipal Law. (நாட்டிடைச் சட்டத்திற்கும் உள்நாட்டுச் சட்டத்திற்கும் உள்ள உறவைப் பற்றிய கோட்பாடுகளை விளக்கவும்.)

(அல்லது)

Examine the British and American practice as to operation of International Law within the Municipal sphere. (நாட்டிடைச் சட்டத்தின் உள்நாட்டில் இயங்கும் தன்மையை இங்கிலாந்து, அமெரிக்கா ஆகிய நாடுகளின் வழக்கங்களை மேற்கோள் காட்டி ஆய்க).

(அல்லது)

Discuss the British, American and Indian practices as to the operation of International Law within the Municipal sphere. (உள்நாட்டிற்குள் நாட்டிடைச் சட்டம் இயங்குவதில் இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் இந்திய வழக்கங்களைப் பற்றி விவரி.)

(அல்லது)

Explain with reference to State practice in India, England and America as to the relationship between Municipal Law and International Law. (நாட்டிடைச் சட்டத்திற்கும் உள்நாட்டுச் சட்டத்திற்கும் உள்ள தொடர்பினை இந்தியா, இங்கிலாந்து மற்றும் அமெரிக்கா ஆகிய நாட்டு முறையினை குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

Examine the relationship between Municipal Law and International Law. Refer to State practice. (உள்நாட்டுச் சட்டத்திற்கும் நாட்டிடைச் சட்டத்திற்கும் இடையே உள்ள தொடர்பை ஆய்க. நாட்டு முறையினை குறிப்பிடுக.)

(அல்லது)

Explain the practice adopted by India, U.S.A. and U.K. in applying the principles of International Law in Municipal Courts. (சர்வதேச சட்டம் எந்த வகையில் இந்தியா, அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளின் நீதிமன்றத்தில் பின்பற்றப்படுகிறது என்பதை விளக்குக.)

(அல்லது)

Write short notes on International Law and Municipal Law. (நாட்டிடைச் சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டம் குறித்து சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Monism - Write short notes. (ஒருபொருள் வாதம் - சிறு குறிப்பு எழுதுக)

(அல்லது)

Dualism - Write short notes. (இருபொருள் வாதம் - சிறு குறிப்பு எழுதுக)

உள்நாட்டுச் சட்டத்திற்கும் நாட்டிடைச் சட்டத்திற்கும் இடையே உள்ள முரண்பாடு :

ஒரு நாட்டில் வழங்கப்படும் சட்டம் 'உள்நாட்டுச் சட்டமெனவும்', நாடுகளுக்கிடையே வழங்கப்படும் சட்டம் 'நாட்டிடைச் சட்டமெனவும்' நாம் ஏற்கனவே கண்டோம். ஆனால், நாடுகளின் நீதிமன்றங்களும் (International Courts),

நாட்டிடைச் சட்ட வழக்கறிஞர்களும் (International Lawyer), நாடுகளுக் கிடையேயான தீர்ப்பாயங்களும் (International Tribunals) பெரும்பான்மையான சமயங்களில் குறிப்பிட்ட சில பிரச்சனைகள் நாட்டிடைச் சட்டத்தின் விதிகளுக்கு உட்பட்டதா அல்லது நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்துக்குட்பட்டதா, என்று நிருணயிக்க வேண்டிய கடமைகளுக்குள்ளாயின. அப்பிரச்சனைகள், பல சமயம் தங்கள் நுண்ணிய தன்மையால் நாட்டிடைச் சட்டத்திற்குட்பட்டதா, நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்திற்குட்பட்டதா என்று நிருணயிப்பதில் பெரும் சிக்கலை தோற்று வித்தன. எனவே நாட்டிடைச் சட்டமும் உள்நாட்டுச் சட்டமும் ஒத்த தன்மையுடையதா அல்லது வேறுவேறானவையா அல்லது எத்தன்மை வாய்ந்தது என்பதைப் பற்றி அறிந்து கொள்வது இன்றியமையாத ஒன்றாகிவிட்டது. இது குறித்து அய்ந்து வகையான கோட்பாடுகள் உள்ளன. அவை வருமாறு.

(1) ஒரு பொருள் வாதத்தினர் (Monistic Theory):

ஒரு பொருள் வாதத்தினரின் கோட்பாட்டுப்படி, **நாட்டிடைச் சட்டமும், உள்நாட்டு சட்டமும் ஒரே அமைப்பில் இரு வேறு பிரிவுகளை நெறிப்படுத்தும் சட்டங்கள்** என்பதாகும் **(Two systems of law)**. உள்நாட்டுச் சட்டத்திற்கும், நாட்டிடைச் சட்டத்திற்கும் இடையே ஒரு நெருங்கிய தொடர்பு உள்ளது என இக் கோட்பாட்டின் பரிந்துரையாளர்களாகிய **ரைட் (Wright), கெல்சென் (Kelsen), டுகிட் (Duguit)** எனும் அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். இவர்கள், இரண்டு சட்டங்களும் ஒரே தன்மையது என பின்வரும் காரணங்களைச் சுட்டிக்காட்டி விளக்குகின்றனர்.

1. மேற்படி இரண்டு சட்டங்களுக்கும் **அடிப்படை வேராக** இருப்பவர்கள் **மனிதர்கள்தான்.** ஒரு நாட்டின் மக்களை நெறிப்படுத்துகிறது உள்நாட்டுச் சட்டம். அதே சமயத்தில் நாடுகளின் உறவு முறைகளை நெறிப்படுத்துகிறது நாட்டிடைச் சட்டம் எனக் கூறலாம். என்றாலும், நாடு என்பது என்ன ? ஒரு மக்கள் கூட்டம் தானே நாடகிறது. ஆகவே நாட்டிடைச் சட்டமும், உள்நாட்டுச் சட்டமும் மனிதர்களின் நடவடிக்கைகளை சீர் செய்தலிலும், ஒழுங்குப்படுத்துதலிலுமே முக்கியப்பணி ஆற்றுகிறது.

2. இரண்டு சட்டங்களுமே மக்களைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் உடைய ஆணைகளாகும்.

3. நாட்டிடைச் சட்டம், உள்நாட்டுச் சட்டம், இரண்டுமே ஒன்றினை அடிப்படையாகக் கொண்டு பிறந்தவையே (Origin) ஆகும்.

(2) இரு பொருள் வாதத்தினர் கோட்பாடு (Dualistic Theory)

இருபொருள் வாதத்தினரின் கோட்பாட்டுப்படி நாட்டிடைச் சட்டமும், உள்நாட்டுச் சட்டமும் முற்றிலும் மாறுபட்ட, அடிப்படைக் குணங்களில் வேறுபாடு கொண்ட இரு வேறு அமைப்புகளோடு தொடர்புடைய சட்டங்கள் என்பதாகும்.

சுருங்கக் கூறின் இரண்டு சட்டங்களும் ஒன்றுக்கொன்று முற்றிலும் மாறுபட்டது. இக்கோட்பாட்டினை ஆதரித்தவர் **ஆன்ஜலோட்டி (Anzilloti), டிரைபெல் (Triepel)** போன்ற அறிஞர்கள் ஆவார்கள். இவர்கள், இரண்டு சட்டங்களும் பின்வரும் விதத்தில் முரண்படுகின்றன எனக் கூறுகின்றனர்.

1. முதலாவதாக இவற்றின் **மூலத்தை (Source)** ஒட்டி எழும் வேறுபாடு. உள்நாட்டு சட்டம் என்பது, அந்த நாட்டு எல்லைக்குள் சட்டம் பிறப்பிக்கும் ஆற்றலுடன் கூடிய அரசாலோ அல்லது சட்டமன்றங்களாலோ பிறப்பிக்கப்படுபவை. ஆனால் நாட்டிடைச் சட்டம் நாடுகளிடையே நீண்ட நெடுங்காலமாக வளர்ந்து பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வழக்க நெறியாக (Customary Law) வழங்கி வருபவைகளையும், நாடுகளிடையே விதிமுறைகளை உருவாக்கத் தக்க வகையில் ஏற்படும் உடன்படிக்கைகளையுமே (treaties) மூலமாகக் கொண்டது.

2. இரண்டாவதாக இவை இரண்டும், **உறவு முறைகளை ஒழுங்குபடுத்துவதிலும்** வேறுபடுகிறது. உள்நாட்டுச் சட்டம் ஒரு ஆட்சியின் கீழ் உள்ள மக்களுக்கும் அந்த அரசுக்கும் உள்ள உறவுகளை நெறிப்படுத்துகிறது. ஆனால் நாட்டிடைச் சட்டமோ நாடுகளுக்கிடையேயான உறவுகளை நெறிப்படுத்துகிறது.

3. மூன்றாவதாக அவை உள்ளடக்கியுள்ள **கருப்பொருளில் (Subject) வேறுபடுகின்றன.** உள்நாட்டுச் சட்டம் அரசாண்மையின் (Sovereignty) அடிப்பிறந்து அந்நாட்டு மக்களைக் கட்டுப்படுத்துவதாகும். ஆனால் நாட்டிடைச் சட்டமோ, நாடுகளிடையே வழங்கப்படுவது ஆகும். அரசாண்மையரால் பிறப்பிக்கப் படாததாகும். நாடுகளை மட்டும் கட்டுப்படுத்த வல்லதாகும். அதாவது உள்நாட்டுச் சட்டத்தின் கருப்பொருள், தனிநபர்; நாட்டிடைச் சட்டத்தின் கருப்பொருள், நாடுகள். எனவே நாட்டிடைச் சட்டத்தை மற்றதுடன் ஒப்பு நோக்குங்கால் அவ்வளவு வலிவானதல்ல.

(3) குறித்த வகையில் ஏற்றுக் கொள்ளும் கோட்பாடு (Specific Adoption Theory):

பைன்கெர்–சூக் (Bynker-Shoek), ஓப்பன்ஹெய்ம் (Oppenheim) போன்ற அறிஞர்கள், நாட்டிடைச் சட்டத்தை நேரடியாக உள்நாட்டுச் சட்ட முறைக்குப் பொருந்தும்படிச் செய்ய முடியாது என்றும், அதனை உள்நாட்டுச் சட்டத்தில் வலியுறுத்த வேண்டுமெனில், நாட்டிடைச் சட்டத்தை நாடுகள் குறித்த வகையில் ஏற்றுக் கொள்ள வேண்டியது அவசியம் என்றும் கூறுகின்றனர். சுருங்கக் கூறின், நாட்டிடைச் சட்டத்தை உள்நாட்டுச் சட்டத்திற்குப் பொருந்தும்படிச் செய்ய வேண்டுமெனில், அந்த உள்நாட்டுச் சட்டமானது நாட்டிடைச் சட்டத்தை அனுமதிக்க வேண்டும் அல்லது குறித்த வகையில் ஏற்றுக் கொள்ள வேண்டும்; உள்நாட்டுச் சட்டம், நாட்டிடைச் சட்டத்தை அங்கீகரிக்க வேண்டும். இக்கோட்பாடு பொதுவாக சர்வதேச உடன்படிக்கைகள் விஷயத்தில் நாடுகளால் பின்பற்றப்

படுகிறது. எடுத்துக்காட்டாக, 1975–ஆம் ஆண்டின் டோக்கியோ மாநாட்டு உடன் படிக்கை ஏற்புவிதிச் சட்டம் (Tokyo Convention Act, 1975), 1972–ஆம் ஆண்டில் இந்தியப் பாராளுமன்றத்தால் இயற்றப்பட்ட தூதாண்மை உறவுகள் குறித்த வியன்னா மாநாட்டு உடன்படிக்கை ஏற்புவிதி சட்டம் (Vienna Convention of Diplomatic Relations Act, 1972) ஆகிய சர்வதேச உடன்படிக்கைகளை குறித்த வகையில் ஏற்றுக் கொண்டதன் விளைவாகத்தான், அவை உள்நாட்டுச் சட்டத்தில் வலியுறுத்தும் தன்மை பெற்றுள்ளன.

மற்றொரு எடுத்துக்காட்டாக, ஒரு நாட்டில் இருந்து தப்பி வந்த பிற நாட்டு கைதியை, அந்நாட்டிற்கே மீண்டும் அனுப்புவது குறித்த "மீட்டொப்படைப்பு உடன்படிக்கைகளை" (Extradition Treaties) எடுத்துக் கொள்ளலாம். இவ்வாறு தப்பி வந்த கைதியை மீண்டும் அவருக்குரிய நாட்டிடம் ஒப்படைக்க வேண்டுமெனில், அந்நாட்டின் உள்நாட்டு சட்டத்தில் அப்படிப்பட்ட சட்டம் இயற்றப்பட்டு இருக்க வேண்டும். மேலும் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளுக்குமிடையே மீட்டொப்படைப்பு உடன்படிக்கை இருக்க வேண்டும். இவ்வாறு இரண்டு நாடுகளின் உள்நாட்டு சட்டமும், குறித்தவகை ஒன்றினை தேர்வு செய்வதன் மூலமாகத்தான் நாட்டிடைச் சட்டம் தோன்றுகிறது. உள்நாட்டு சட்டத்தில் மேற்கண்டவாறு வழிவகை ஏதும் இல்லையென்றால் சம்மந்தப்பட்ட நாடு, அக்கைதியை மீட்டு, அவனது நாட்டிற்கு அனுப்பக் கடமைப்பட்டதல்ல. இவ்வாறே, மற்ற நாட்டிடை உடன்படிக்கைகளை செயல்படுத்த வேண்டும் என்றாலும், அது குறித்து உள்நாட்டுச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டு அங்கீகாரம் அளிக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு வரியில் கூற வேண்டுமெனில், இரு நாடுகளின் உள்நாட்டு சட்டம், ஒன்றினை குறித்த வகையில் விரும்பி ஏற்றுக் கொண்டால்தான் அது நாட்டிடைச் சட்டம் ஆகும் என்பதே இக்கோட்பாட்டின் கருவாகும்.

ஒரு நாட்டின் உள்நாட்டுச் சட்டம் குறித்த வகையில் ஏற்றுக் கொள்ளாமல், சர்வதேச உடன்படிக்கைகளை அப்படியே அந்நாடு பின்பற்றவியலாது. அதுபோல் மனித உரிமைகளின் மீதான சர்வதேச உடன்படிக்கைகளைக் (International Covenants on Human Rights) குறித்து **Jolly George v. The Bank of Cochin**[1] எனும் வழக்கில் உச்ச நீதிமன்றம் கருத்துரைக்கும் பொழுது, "அவ்வுடன்படிக்கைகளின் தரப்பினர்களாக உள்ள நாடுகள் தங்களது நாட்டில் அவ்வுடன்படிக்கைகளின் அடிப்படையில் சட்டங்களை இயற்ற முன்வர வேண்டும். மாறாக அவ்வுடன்படிக்கைகள் தானாகவே இந்திய சட்டக் கட்டமைப்பின் ஒரு பகுதியாகிவிடாது" என்று கூறுகிறது. அந்த வகையில் நமது இந்திய நாடு, நாட்டிடை உடன்படிக்கைகளில் வலியுறுத்தப்பட்டு வந்த மனித உரிமைகளின் பாதுகாப்பை மேம்படுத்தும் பொருட்டு, 1993–ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை (The Protection of Human Rights Act, 1993)

1. A.I.R. 1980 S.C. 470.

இயற்றியது. மேலும் பின்வரும் சர்வதேச உடன்படிக்கைகளை, ஒரு சட்டமாக தனது உள்நாட்டுச் சட்டத்தில் ஏற்றுக் கொண்டுள்ளது. அவை (1) இனவெறிக்கு எதிரான (அய்க்கிய நாடுகள் உடன்படிக்கை) சட்டம், 1981 [Anti-Apartheid (United Nations Convention) Act, 1981]; (2) விமானக் கடத்தலுக்கு எதிரான சட்டம், 1982 (Anti-Hijacking act, 1982); (3) சர்வதேச நிதி மற்றும் வங்கி (திருத்தச்) சட்டம், 1982 [International Monetary Fund and Bank (Amendment) Act, 1982].

எனினும் இக்கோட்பாடு பின்வருமாறு குறை கூறப்பட்டது. அதாவது, நாட்டிடைக் கொள்கைகள் குறிப்பாக வழக்க நெறிகள் பலவும், நாடுகளால் குறித்த வகையில் ஏற்றுக் கொள்ளப்படாமலேயே, அவற்றால் உள்நாட்டுச் சட்டத்தில் பின்பற்றப்படுகிறது. எனவே நாட்டிடைச் சட்டம் முழுவதற்கும் மேற்படி கோட்பாடு பொருந்துமான என வினா எழுப்பினால், பொருந்தாது என்றுதான் கூற வேண்டும் எனப்பட்டது.

(4) மாற்றிக் கொண்டுவரும் கோட்பாடு (Transformation Theory):

இக்கோட்பாடு, நாம் முன்னதாகக் கண்ட 'குறித்தவகையில் ஏற்றுக் கொள்ளும் கோட்பாட்டின்' சாயலை உடையது. நாட்டிடைச் சட்டத்தினை செயல் படுத்த வேண்டுமெனில், அதற்கு உள்நாட்டு சட்டத்திலேயே வழிவகை செய்யப் பட்டிருக்க வேண்டும் என்று இக்கோட்பாடு கூறுகிறது. சுருங்கக்கூறின் உள்நாட்டு சட்டம் அங்கீகாரம் அளித்து, வழிவிட்டால்தான் நாட்டிடைச் சட்டமே உள் நுழைய முடியும். எனவே இக்கோட்பாட்டின்படி, உள்நாட்டுச் சட்டத்தில் நாட்டிடைச் சட்டம் செயல்பட வேண்டுமெனில், நாட்டிடைச் சட்ட விதிகளை உள்நாட்டுச் சட்ட முறைக்கு பொருந்தும் வண்ணம் மாற்றிக் கொணர வேண்டும்; உள்நாட்டுச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட வேண்டும்.

இக்கோட்பாடும் குறை கூறப்பட்டது. அதன்படி,. நாடுகளிடையே 'சட்டங்களை உருவாக்கும் பல்வேறு உடன்படிக்கைகள்' (Law making treaties) உள்ளன. அவற்றையெல்லாம் உள்நாட்டுச் சட்டத்திற்குப் பொருந்தும் வண்ணம் மாற்றிக் கொண்டுவர வேண்டியதில்லை என்றும், அவை தானாகவே உள்நாட்டுச் சட்டத்திற்குப் பொருந்தக் கூடியது என்றும், எனவே நாட்டிடைச் சட்ட விதிகளின் வடிவத்தை உள்நாட்டுச் சட்டத்திற்கு பொருந்தக் கூடிய வடிவில் மாற்ற வேண்டிய அவசியமில்லை என்றும் குறை கூறப்பட்டது.

(5) அளிப்படைவுக் கோட்பாடு (Delegation Theory):

இக்கோட்பாட்டின்படி ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு உரிமை அளிக்கப்பட்டு உள்ளது. அதாவது நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகளின் சரத்துகள் எப்பொழுது அமுலுக்கு வருகின்றன, என்ன முறையில் அமுலுக்கு வருகின்றன என்பனவற்றையெல்லாம் தங்களது உள்நாட்டுச் சட்டத்திலேயே நாடுகள்

நிருணயித்துக் கொள்ளலாம். இங்கு, முன்கண்ட கோட்பாடுகளின்படி நாட்டிடைச் சட்டவிதிகளை பின்பற்ற, அவற்றைக் குறித்த வகையில் ஏற்றுக் கொள்வதோ அல்லது அவற்றினை மாற்றிக்கொண்டு வரும் வேலையோ கிடையாது. நாட்டிடைச் சட்டத்தினை பற்றி அக்கறையே இங்கில்லை. எல்லாமே உள்நாட்டுச் சட்டத்திலே உள்ளது என்று கூறுகிறது மேற்படி கோட்பாடு.

நாட்டிடைச் சட்டத்தின் உள்நாட்டில் இயங்கும் தன்மை (Operation of International Law within the Municipal Sphere) :

(1) பிரிட்டனில் (In Great Britain):

பெரும்பான்மையான நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடுகளிடையே பொதுவாக வழங்கி வரும் வழக்க நெறியிலான விதிகளை (Customery Rules of International Law) இன்றும் இங்கிலாந்து நாடு தனது உள்நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே கருதி வருகிறது. இதையே 18–ஆம் நூற்றாண்டில் வாழ்ந்து வந்த **பிளாக் ஸ்டோன்** எனும் அறிஞர், **"பொது நெறிச் சட்டத்தின் (Common Law or Unwritten law) வாயிலாக எழுந்த நாட்டிடைச் சட்டம், உள்நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியே"** என்று கூறுகிறார். ஆனால் நாட்டிடை உடன்படிக்கைகளின் வாயிலாக ஏற்படும் விதிகளைப் (Law laid down by treaties) பொறுத்தவரை, பின்வரும் இரண்டு நிலைப்பாடுகள் அங்கு பின்பற்றப் படுகின்றன.

(அ) இங்கிலாந்து மன்னர் வேறு நாடுகளுடன் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் செயலுக்கு வருவதற்கு, இங்கிலாந்து நாட்டு பாராளுமன்றம் அவ்வுடன்படிக்கைகளைச் செயல்படுத்துவதற்கு ஆற்றல் வழங்கும் வகையில் சாதகச் சட்டம் (Enabling Act) ஒன்றினை இயற்ற வேண்டும். எனவே,

1. இங்கிலாந்து மக்களின் தனிப்பட்ட உரிமைகளைப் பாதிக்கத்தக்க வகையிலோ; 2. வழக்க நெறியை (Customary Law) அல்லது இயற்றப்பட்ட சட்டத்தை பாதிக்கத்தக்க வகையிலோ; 3. மன்னரின் அதிகாரங்களை அதிகரிக்கத்தக்க வகையிலோ; அல்லது 4. இங்கிலாந்து அரசின் செலவினத்தைக் கூட்டும் வகையிலோ, அமைந்துள்ள உடன்படிக்கைகளுக்கு இங்கிலாந்து பாராளுமன்றம் உயிர் கொடுக்க வேண்டும். அதன் பின்னரே அவை இயங்கத் தக்கவையாகும்.

(ஆ) நாட்டிடைச் சட்டம் இங்கிலாந்து நாட்டுச் சட்டத்தின் ஒரு பிரிவு என்கிற கருத்து ஏற்றுக் கொள்ளப்பட்டதெனினும், எல்லாச் சூழ்நிலைகளிலும் நாட்டிடைச் சட்டமே முதன்மை வாய்ந்தது என்று கருத இயலாது. இங்கிலாந்து பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டங்களனைத்தையும், இங்கிலாந்து நீதிமன்றங்கள் முற்றிலும் செயல்படுதத்க் கடமைப்பட்டவை. இங்கிலாந்து பாராளுமன்றம் ஒரு சட்டத்தை நிறைவேற்றும்போது, நாட்டிடைச் சட்டத்திற்கு முரணானதொரு

கருத்தை மனதில் கொண்டு நிறைவேற்றியிராது என்றொரு யூகம் இருந்தபோதும் பாராளுமன்றம் நிறைவேற்றிய சட்டம், நாட்டிடைச் சட்டத்திற்கு மாறுபட்டு இருக்குமானால், இங்கிலாந்து நீதிமன்றங்கள் உள்நாட்டுச் சட்டத்தைத்தான் செயல்படுத்த கடமைப்பட்டவை.

பிளாக் ஸ்டோனின் மேற்கூறிய கொள்கையை 18–ஆம் நூற்றாண்டு நீதிபதிகளும், குறிப்பாக நீதிப்பெருமகனார் **மேன்ஸ்ஃபீல்டு** என்பாரும் பெரிதும் வலியுறுத்தியுள்ளனர். 19–ஆம் நூற்றாண்டில் எழுந்த வழக்குகள் பலவற்றிலும், பிளாக்ஸ்டோனின் கொள்கைப்படி, நாடுகளிடையே வழங்கப்பட்டு வேரூன்றி விட்ட வழக்க விதிகளைத் தங்கள் நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியாகக் கருத வேண்டுமென வலியுறுத்தப்பட்டது. எனினும் அவ்விதிகள் உள்நாட்டு நாட்டிடைச் சட்டத்திற்கு முரணாக இருக்கும் பட்சத்தில், உள்நாட்டுச் சட்டமே முதன்மையாக செயல்படுத்தப் படும். இது தொடர்பாக முக்கியமான வழக்கொன்றினை பின்வருமாறு காண்போம்.

R.v. Keyn[1] (The Franconia Case) (மன்னர் – எதிர் – கைன்) பெரும்பான்மையான நாடுகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடுகளிடையே பொதுவாக வழக்கத்தில் இருக்கும் விதிகளை, அதாவது நாட்டிடைச் சட்ட விதிகளை உள்நாட்டுச் சட்டத்தின் ஒரு பகுதியாகவே கருத வேண்டும் என்று அறிஞர் பிளாக்ஸ்டோன் கூறிய கருத்தினை இவ்வழக்கின் பொருண்மைகள் மேலும் தெளிவாக்கும். அவை வருமாறு.

வழக்கின் பொருண்மைகள் (Facts of the case) : இவ்வழக்கில் ஃபிராங்கோனியா எனும் சேர்மானிய கப்பல் ஒன்று, பிரிட்டிஷ் எல்லையோரக் கடல் பகுதியில் பயணித்துக் கொண்டு இருந்துபொழுது டோவர் (Dover) துறைமுகத் திலிருந்த ஸ்ட்ரேத் கிளைட் (Strath Clyde) என்ற பிரிட்டிஷ் கப்பலின் மீது கவனமின்றி மோதி அக்கப்பலுக்கும், அதிலிருந்த பயணி ஒருவருக்கும் சேதம் விளைவித்தது. இதன் காரணமாக சேர்மானியக் கப்பல் தலைவன், மனிதச் சிதைவு குற்றத்திற்காக (Manslaughter) இங்கிலாந்து நீதிமன்றத்தின் முன் குற்றம் சாட்டப்பட்டார். ஆனால் இவ்வழக்கினை இறுதியாக அரசு வழக்குகளுக்கான நீதிமன்றம் (Court for Crown Cases) விசாரித்து பிரிட்டனின் எல்லையோரக் கடல் பகுதியில் அயலார் குற்றம் புரிந்தால் அவர்களை விசாரித்துத் தண்டனை வழங்கும் ஆற்றல் இங்கிலாந்து பொது நெறி நீதிமன்றங்களுக்கு (Common Law Courts) இல்லையென்று தீர்ப்பு வழங்கி, அக்கப்பல் தலைவனை விடுதலை செய்தது.

இத்தீர்ப்பு அதுவரை வழங்கி வந்த பிளேக் ஸ்டோனின் கொள்கையினை வலுவிழக்கச் செய்யவே, இங்கிலாந்து பாராளுமன்றம் இத்தகு வழக்குகளை விசாரிக்க இங்கிலாந்து பொது நெறி நீதிமன்றங்களுக்கு ஆற்றல் வழங்கும் வகையில் எல்லை யோரக் கடல் நீர் மீதான விசாரணை நடத்தும் அதிகாரம் வழங்கும் சட்டத்தினை (Territorial Waters Jurisdiction Act) 1878–ஆம் ஆண்டில் இயற்றியது.

1. (1876) 2 Ex. D. 63

இவ்வாறாக மேற்படி வழக்கில் அரசு வழக்குகளுக்கான நீதிமன்றம், இங்கிலாந்து பாராளுமன்றம் வலிந்து ஏற்றுக்கொள்ளாத நாட்டிடைச் சட்டவிதிகள், உள்நாட்டுச் சட்டத்தின் பகுதியாகாது எனும் கருத்தினை உருவாக்கியது.

(2) அமெரிக்க அய்க்கிய நாடுகளில் (In United States of America):

நாடுகளுக்கிடையே வழங்கப்பட்டு நிலைபெற்றுவிட்ட வழக்கச் சட்ட விதிகள் உள்நாட்டுச் சட்டத்தின் பகுதியாகக் கருதப்பட வேண்டும், எனும் பிளேக் ஸ்டோனின் கொள்கையினை (Doctrine of Incorporation) முதன்முதலில் சட்ட அடிப்படையில் செயலுக்குக் கொண்டு வந்தவை, ஆங்கிலேய அமெரிக்க நாடுகள்தாம்.

1787–ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட அமெரிக்க அய்க்கிய நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்தின் ஆறாவது சரத்து, இரண்டாவது பிரிவின் கீழ் (Article VI Sec.2), அமெரிக்க நாடு செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் அனைத்துமே அமெரிக்க நீதிமன்றங்களைக் கட்டுப்படுத்தவல்லது என்று கூறுகிறது. ஆனால் இவ்வுடன்படிக்கைகள் தன்னியக்க உடன்படிக்கைகள் (Self Executing Treaties), தன்னியக்கமற்ற உடன்படிக்கைகள் (Non-self Executing Treaties) என இரண்டு வகையாகப் பிரிந்து வழங்கப்படுகின்றன. இவற்றில் தன்னியக்க உடன்படிக்கை மட்டுமே அமெரிக்க சட்டமன்றத்தின் சட்டமின்றி, தானே அமலுக்கு வரும். தன்னியக்கமற்ற உடன்படிக்கைகள் அமலுக்கு வர அமெரிக்க சட்டமன்றத்தின் சாதகச் சட்டம் (Enabling Act) தேவை.

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு நாடுகளிடையே நிலையாக வழங்கி வரும் சட்ட விதிகளும், முறைப்படி முடிக்கப்பட்ட தன்னியக்க உடன்படிக்கைகளும் அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாக இன்றி ஏற்கனவே செயலிலுள்ள சட்டத்திற்கு மட்டும் முரணாக இருப்பினும், அமெரிக்க நீதிமன்றங்களால் ஏற்றுச் செயல்படத்தக்கவை. ஆனால் குறித்த வகையில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளுக்கோ, உடன்படிக்கைகளுக்கோ பின்னிட்டு, அமெரிக்க பாராளுமன்றம் முரணான சட்டம் ஒன்றினைப் பிறப்பிக்குமானால் அந்த விதிகளும் உடன்படிக்கையும் வழக்கிழந்து விடும். அண்மையில் ஏற்கப்பட்ட உள்நாட்டுச் சட்டமே, மேன்மை பெறும். இங்கும்கூட பாராளுமன்றம் அப்படி ஒரு விருப்பத்தை வெளிப்படையாகத் தெரிவித்திருக்க வேண்டும். இல்லையென்றால் முரண்பாடான நாட்டிடைச் சட்ட விதியும் உடன்படிக்கையுமேதான் மேன்மை பெறும்.

(3) இந்தியாவில் (In India):

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில், நாட்டிடைச் சட்டம் பற்றியும், அரசியல் அரங்கில் அது செய்து கொள்ளக்கூடிய உடன்படிக்கைகள் பற்றியும் இரண்டு இடங்களில் கூறப்பட்டுள்ளது.

முதலாவதாக, சரத்து 51–ல், "(அ) நாடுகளுக்கிடையே அமைதி மற்றும்

பாதுகாப்பை மேம்படுத்தவும், (ஆ) நாடுகளிடையே நியாயமான மற்றும் மரியாதை உறவுகளை பராமரிக்கவும், (இ) அரசியல்ரீதியாக நல்ல அமைப்புகளை அமைத்துச் செயற்படுகின்ற மற்ற நாட்டு மக்களுடன் உறவு கொள்ளும்போது நாட்டிடைச் சட்டத்தையும் நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகளையும் மதித்து நடக்கவும், (ஈ) இசைவுத் தீர்ப்பின் வாயிலாக நாடுகளுக்கிடையிலான பிணக்குகளை தீர்த்து வைத்தலை ஊக்கப்படுத்தவும், அரசு முயல வேண்டும்," என்று கூறப்பட்டுள்ளது. அதாவது அரசானது மேற்படி சரத்தின் உட்கூறுகளுக்கொப்ப வகையில் சட்டமியற்ற வேண்டும் எனக் கூறப்படுகிறது.

இரண்டாவதாக, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 253–வது சரத்தினை ஏழாம் அட்டவணை முதலாம் பட்டியல் 14–வது உருவுடன் இணைத்துப் படித்தால், உடன்படிக்கைகளையோ அல்லது ஒப்பந்தங்களையோயொட்டி சட்டமியற்றும் ஆற்றலை பாராளுமன்றமும், அவற்றைச் செயல்படுத்தும் ஆற்றலை நிருவாகத்துறையும் (Executive) பெறுகின்றன, என்பது புலனாகும்.

இன்றைய நிலையில் இந்தியாவில் உடன்படிக்கைகளோ அல்லது அனைத்து நாடுகளரங்கில் இந்தியா ஏற்றுக்கொள்ளும் சட்ட விதிகளோ, பாராளுமன்றத்தால் ஏற்று உள்நாட்டுச் சட்டமாக உருமாற்றம் பெற்ற பின்னரே செயல்தன்மை பெறுகின்றன. மற்றபடி வழக்கத்திலுள்ள நாட்டிடைச் சட்ட விதிகளைப் பொறுத்தவரை, பிரிட்டனில் உள்ள நடைமுறையையே இந்தியாவும் பின்பற்றி வருகிறது. பிரிட்டனில் உள்ள நடைமுறையை இந்தியா பின்பற்றியதை பின்வரும் வழக்கில் காணலாம்.

State of Madras v. C.G.Menon[1] – சிங்கப்பூரிலிருந்து சென்னை வந்தடைந்த மேனன் என்பவரும், அவர் தம் மனைவியும் நம்பிக்கை மீறல் (Breach of Trust) குற்றத்திற்காக கைது செய்ய சிங்கப்பூர் குற்றவியல்துறை நீதிபதி பிறப்பித்த ஆணையின் கீழ், கைது செய்யப்பட்டு, சென்னை மாநில தலைமை குற்றவியல் துறை நீதிபதி முன்னர் கொண்டு வரப்பட்டனர். அவர்களை மீண்டும் சிங்கப்பூர் அரசிடம் ஒப்படைப்பதில் ஏற்பட்ட சிக்கலில், இந்திய உச்ச நீதிமன்றம், "நாடுகளிடையே வழங்கி வரும் விதிகள் இந்திய நாட்டுச் சட்டத்துடன் முரண்படாத வரையில் அவை வேறு சட்டம் எதுவுமின்றிச் செயல்படுத்தப்படும் என்றும், ஆனால் உடன்படிக்கைகளும் அவற்றை ஒட்டியெழும் விதிகளும் இந்தியப் பாராளுமன்றத்தால் குறிப்பாகவும், தெளிவாகவும் சட்டத்தின் மூலம் ஏற்றுக் கொள்ளப்பட்டாலொழியத் தாமே செயலுக்கு வரமாட்டா என்றும் கூறியுள்ளது. இந்த இந்திய வழக்கில் பிரிட்டனில் உள்ள நடைமுறைகளானது பின்பற்றப்பட்டு உள்ளதை மேற்கண்ட கருத்திலிருந்து தெரிந்து கொள்ளலாம். சுதந்திரம் வரும் வரை இந்தியாவை ஆண்டது இங்கிலாந்து நாட்டினன்தானே! அதன் பாதிப்புகள் அத்தனை விரைவில் மறைந்து போய்விடுமா என்ன?

1. A.I.R. 1954 S.C. 92.

(4) பிற நாடுகளில் (In Other Countries):

பின்வரும் சில மேற்கு அய்ரோப்பிய நாடுகளின் அரசியலமைப்புச் சட்டத்தில், நாட்டிடைச் சட்டத்தின் முதன்மை வெளிப்படையாக வற்புறுத்தப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. அந்நாடுகள் வருமாறு:– (1) செர்மானியக் கூட்டாட்சி குடியரசு; (2) நெதர்லாந்து; (3) இத்தாலி; (4) ஃபிரான்சு; (5) ஆஸ்டிரியா.

-o0o-

8

நாடுகளின் வகைகள் [Kinds of States]

10. Micro States- Write short notes. (சுதந்திரமான சிறு அரசுகள் - சிறு குறிப்பு எழுதுக.)

சுதந்திரமான சிறு அரசுகள் (சுதந்திரமான சிறு நாடுகள்) - விளக்கம்:

'சுதந்திரமான சிறு அரசுகள்' (சுதந்திரமான சிறு நாடுகள்) என்பவை ஆட்சிப்பரப்பிலும், மக்கள் தொகையிலும் சிறிதானவையாகும். இவ்வகை நாடுகளின் மனித வளம், பொருளாதார வளம் ஆகியவையும் குறைவாகவே இருக்கும். எனினும் அவை ஒரு நாட்டிற்கே உண்டான அனைத்து தேவைகளையும் நிறைவு செய்யும் பட்சத்தில், அவையும் சுதந்திரமான நாடுகளாக கருதப்படுகின்றன. உதாரணமாக **"நாரு" (Naru)** எனும் நாட்டின் பரப்பளவு 8.25 சதுர மைல் ஆகும். அதனுடைய மக்கள் தொகை சுமார் 3000 ஆகும். இவ்வளவு குறைவான பரப்பளவையும் மக்கள் தொகையையும் இந்நாடு பெற்றிருந்தபொழுதும், இது 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31-ஆம் தேதி சுதந்திரம் பெற்று, இன்று முழு இறைமை பெற்ற நாடாகத் திகழ்கிறது.

சுதந்திரமான சிறு நாடுகளின் பிரச்சனைகள் :

இத்தகு சுதந்திர சிறு நாடுகள் ஒரு புது வகையான பிரச்சனையைக் கிளப்புகிறது. அஃதாவது, சுதந்திரமான சிறு நாடுகளுக்கு தன் முடிவுரிமையும் முழு இறைமையும் இருக்கிறது. இதில் எவ்வித அய்யமுமில்லை. ஆனால் இவ்வகை நாடுகள், அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 4-வது சரத்தின்படி தங்களை அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்ளும்படி கேட்பதற்கு உரிமை உண்டா, என்பதே அப்பிரச்சனையாகும். ஏனெனில் ஒரு நாடு, அய்க்கிய நாடுகள்

சபையில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமெனில், அந்நாடு அய்க்கிய நாடுகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் உணர்ந்து அதன்படி திறம்பட செயலாற்றும் ஆற்றல் பெற்றிருத்தல் அவசியமாகும். அத்தகு ஆற்றல், பரப்பளவிலும், மக்கள் தொகையிலும், வளங்களிலும் குறைவான நிலையில் உள்ள இவ்வகை நாடுகளுக்கு உள்ளதா, என்றால் 'கிடையாது' என்றே பதிலளிக்க வேண்டியிருக்கும். மேலும் இத்தகு நாடுகள் அய்க்கிய நாடுகள் சபையில் சேருவதனால், பலம் பொருந்திய அவ்வமைப்பு பலவீனமடையும். எனினும் இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டு, இத்தகு நாடுகளும் அய்க்கிய நாடுகள் சபையில் பங்கேற்றுக் கொண்டு அதன் நலன்களைப் பெறுவதற்கும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதன்படி பின்வரும் சில நலன்களை இத்தகு நாடுகள் அய்க்கிய நாடுகள் சாசனத்தின் பொறுப்புகள் எதனையும் ஏற்றுக் கொள்ளாமல் அனுபவிக்கலாம். **உதாரணமாக** (அ) சர்வதேச நீதிமன்றத்தின் முன் தமது வழக்குகளையும், பிரச்சனைகளையும் முறையிட்டு தக்க நிவாரணம் தேடலாம். (ஆ) வட்டார பொருளாதார குழுக்களில் கலந்து கொள்ளலாம். (இ) வேறு சில சிறப்புக் குழுக்களிலும் கலந்து கொண்டு பயன் பெறலாம்.

இத்தகு நாடுகள் அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக இருக்க முடியாத காரணத்தினால், அவற்றின் உலக நபரத்துவத்தில் (International Personality) எத்தகைய பாதிப்பும் கிடையாது. இவையும் மற்ற பெரு நாடுகளைப் போலவே உடன்படிக்கைகளில் ஈடுபடுதல், மாநாடுகளில் அழைப்பின் பேரில் கலந்து கொள்ளல் போன்ற செயல்களில் ஈடுபடலாம்.

11. Neutralised States - Write short notes. (நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் - விளக்கம்:

'நடுநிலையாக்கப்பட்ட நாடுகள்' என்பன சர்வதேச அரங்கில் நிரந்தரமாக ஒரு நாட்டுக்கு அதன் வேண்டுகோளின் பேரில் ஏனைய நாடுகளால் வழங்கப்பட்ட ஒரு சர்வதேச நிலையாகும். நடுநிலையாக்கப்பட்ட நாட்டு நிலை, குறிப்பிட்ட ஒரு நாடால் கேட்கப்பட்டு ஏனைய நாடுகளால் வழங்கப்படுவதாகும். இது ஒப்பந்தத்தின் பாற்பட்டது. சுய பிரகடனத்தால் வராதது. நடுநிலையாக்கப்பட்ட நாட்டுநிலை, நிலையானது.

நடுநிலையாக்கப்பட்ட நாடுகள் - எவை?

தற்போதுள்ள நடுநிலையாக்கப்பட்ட நாடுகள், சுவிட்சர்லாந்து, லாவோஸ், ஆஸ்டிரியா ஆகியவைகளாகும். பெல்ஜியம் நடுநிலையாக்கப்பட்ட நாடென்றாலும் இரண்டாம் உலகப் பெரும் போருக்குப் பின்னர், அது மற்ற நாடுகளுடன் சேர்ந்து செய்து கொண்ட சில ஒப்பந்தங்களால், அதனை இந்நிலைப்பாட்டிலிருந்து வழுவச் செய்து விட்டது.

ஒரு போரில் நடுநிலைமை வகிப்பதாக ஒரு நாடு அறிவித்தால் அப்போரைப் பொறுத்தவரை அந்நாடு நடுநிலை நாடாகக் கருதப்படும். எனவே இது ஒரு தலையானது. மேலும் அந்நாடு எப்போது வேண்டுமானாலும் அப்போரில் கலந்து கொண்டு போரிடும் நாடாக மாறலாம். ஆகவே நடுநிலை நாட்டுநிலை சந்தர்ப்பத்தின்பாற்பட்டது.

நடுநிலையாக்கப்படுதலும் நடுநிலையும் (Neutralisation and Neutrality) :

நடுநிலையாக்கப்படும் நாடுகளுக்கும் நடுநிலை வகிக்கும் நாடுகளுக்கும் இடையே அடிப்படை வேறுபாடுகளுண்டு. நடுநிலையாக்கம் செய்வதினால் நன்மை பெறும் நாடுகளின் முயற்சியால் நிரந்தரமாக ஒரு நாடு நடுநிலையாக்கப்படுகிறது. ஆனால் நடுநிலை வகிக்கும் நாடுகள் தங்களின் சொந்த விருப்பின் காரணமாகத் தாம், தம்மை நடுநிலைவகிக்கும் நாடாக பிரகடனம் செய்யும். தேவைப்பட்டால், தன் விருப்பம்போல் தம் நடுநிலைத் தன்மையை முடிவுக்குக் கொண்டு வரும் ஆற்றலும், வாய்ப்பும் கொண்டவை, அத்தகு நாடுகள்.

நடுநிலையாக்கப்பட்ட நாடுகளின் கடமைகள் :

1. தற்காப்பிற்கன்றி போரில் ஈடுபடுதல் கூடாது.

2. அரசியல் சார்பான உடன்படிக்கைகளில் பிற நாடுகளுடன் ஈடுபடக் கூடாது. ஆனால் அரசியல் சார்பற்ற மாநாடுகளில் கலந்து கொள்ளவும் உடன் படிக்கைகளில் ஈடுபடவும் உரிமை உண்டு.

3. போர்க்காலத்தில், நடுநிலை விதிகளைக் கடைபிடிக்க வேண்டும்.

4. தன் உள் விவகாரங்களில் வேறு எந்த நாடும் தலையிடும் வாய்ப்பைக் கொடுத்தல் கூடாது.

ஒரு நாட்டை நடுநிலையாக்குகின்ற நாட்டின் கடமைகள்:

1. நடுநிலையாக்கப்பட்ட நாட்டின் மீது தாக்குதல் கூடாது. அதுபோல் தாக்குதல் செய்யவிருப்பதாக அச்சுறுத்தக் கூடாது.

2. நடுநிலையாக்கப்பட்ட நாட்டின் மீது வேறெந்த நாடேனும் போர் நடவடிக்கை மேற்கொண்டால், நடுநிலையாக்கப்பட்ட நாட்டினைப் பாதுகாக்க, நடுநிலையாக்கும் நாடு கடமைப்பட்டது.

நடுநிலையின் நோக்கமும் பயனும் :

1. பொருளாதார சீரழிவினைத் தடுக்கிறது. 2. போரிடுவது தவிர்க்கப் படுகிறது. 3. போரினை வட்டாரப் போராக நிலைநிறுத்தல். 4. போரிடும் ஊக்கத்தினைக் குறைத்தல். 5. சர்வதேசச் சமாதானம் மேலோங்கச் செய்தல். 6. நாட்டிடை உறவு முறைகள் சீர் பெறுதல்.

12. Holy See - Write short notes (புனித நாடு - சிறு குறிப்பு எழுதுக.)

கிறித்துவ நாடுகளிடையே நாட்டிடைச் சட்டம் வளர்ச்சி பெறத் துவங்கிய போது 'போப்பாண்டவர்' ஒரு நாட்டின் முடி மன்னராக விளங்கினார். அப்பொழுது அந்நாடு **'போப்பாண்டவர் நாடு' (Papal State)** என்றழைக்கப்பட்டது.

வரலாற்றின் இடைக்காலத்தில், முதல் போப்பின் "உலக நபரத்துவம்" நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டு, ஏற்றுக் கொள்ளப்பட்டது. அக்காலத்தில் போப்பாண்டவர், மதத் தலைவராகவும் (Spiritual Head), அரசியல் தலைவராகவும் (Temporal Head) இருந்து வந்தார். 1870–ஆம் ஆண்டில் போப்பாண்டவர் நாடு, இத்தாலியுடன் இணைத்துக் கொள்ளப்பட்டது. இதனால் முதல் போப் தனது அரசியல் தலைமைத் தன்மையை இழந்து மதத் தலைமையை மட்டும் வகிக்கும் நிலை ஏற்பட்டது. எனினும் தூதுவர்களை அனுப்புதல், பெறுதல், உடன்படிக்கைகள் செய்து கொள்வது ஆகியவற்றின் மீது அவருக்குள்ள அதிகாரங்கள் பறிக்கப் படவில்லை.

1871–இல் இத்தாலிய பாராளுமன்றம், உறுதிச்சட்டம் (Law of Guarantee) ஒன்றை நிறைவேற்றியது. அச்சட்டம் போப்பிற்கும் அவரின் புனித நாட்டிற்கும் சில சலுகை உறுதிகளை வழங்கியது. அது முதல் புனித நாட்டின் நிலை, உறுதி பெற்று உலக நாடுகள் போப்புடன் உடன்படிக்கைகளும் தூதுவப் பரிவர்த்தனையும் செய்து கொண்டன. இந்த போப்பாண்வர் நாடுதான், 'புனித நாடு' என்றழைக்கப் பட்டது. அது இன்று **வாடிகன் நகரம் (Vatican City)** எனும் பெயரால் அழைக்கப் படுகிறது.

-o0o-

9

நாடுகளின் சமத்துவம் [Equality of States]

13. Explain the Doctrine of Equality of States. (நாடுகளின் சமத்துவம் என்ற கோட்பாட்டை விளக்குக.)

முன்னுரை :

உலக நபரத்துவத்தின் (International Personality) அடியெழும் குணங்களில் ஒன்றுதான் 'நாடுகளின் சமத்துவம்' என்பது. ஏனெனில், **'இறைமை பெற்ற நாடுகள், மற்றொரு நாட்டின் ஆதிக்கத்திற்கு உட்பட்டதல்ல'** எனும் கொள்கை **(Par in Parem Non Habet Imperium)** நீண்ட நெடுங்காலமாக வழங்கப்பட்டு வரும் ஒன்றாகும். நாடுகள் தங்களிடையே எண்ணற்ற பரிவர்த்தனைகளில் ஈடுபட வேண்டியுள்ளது. ஒரு நாடு மற்றொரு நாட்டை தனக்கிணையான நாடாகக் கருதவில்லையென்றால், உலக அரங்கில் அரசியல் பணிகள் தன்னியக்கம் பெறாமல் முடங்கிப் போகும். இரண்டாவதாக அண்மைக் காலத்தில் சில நூற்றாண்டுகளாக அதிலும் குறிப்பாக சர்வதேச சங்கமும், அய்க்கிய நாடுகள் அமைப்பும் தோன்றிய பின்னர், நாடுகள் தங்களுக்குள் உண்டான சிக்கல்களை ஒன்று கூடித் தீர்த்துக் கொள்வதால் இச்சமத்துவ மனப்பான்மை மிகவும் இன்றியமையாததாகிவிட்டது. சமத்துவ மனப்பான்மை இல்லையென்றால் சிறிய நாடுகளின் வாதங்கள் கவனிக்கப்படவோ, ஏற்றுக் கொள்ளப்படவோ வழி இராது. நாடுகளிடையே ஒருமைப்பாடு என்பது மேலும் கடினமாகி விடும்.

சமத்துவத்தின் நல்விளைவுகள் :

1. Par in Parem Non Habet Imperium - எனும் கொள்கைப்படி, ஒரு நாடு மற்ற நாட்டின் ஆதிக்கத்திற்கு (ஆளுகைக்கு) உட்பட்டதல்ல. எனவே உதாரணமாக ஒரு நாடு மற்றொரு நாட்டின் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுக்க

லாம் என்ற நிலை இருந்தபோதிலும், ஒரு நாட்டு நீதிமன்றத்தின் முன் மற்றொரு நாடு அதன் ஒப்புதலின்றிப் பிரதிவாதியாக்கப்பட முடியாது. அதாவது அதன் மீது வழக்கு தொடுக்க முடியாது.

2. ஒரு நாட்டின் நீதிமன்றம், மற்றொரு நாட்டின் செயல் தகுதிகளை மதிப்பிடவோ, நிர்ணயிக்கவோ, குற்றங் காணவோ முடியாது.

3. நாடுகளின் ஒப்புதலின் பேரில் ஏதேனும் சிக்கலுக்குத் தீர்வு காண வேண்டிய நிலை ஏற்பட்டால், ஒவ்வொரு நாட்டுக்கும் சரிநிகர் சமானமாக ஒரு வாக்கே (vote) வழங்கப்படுகிறது.

4. அளிக்கப்படுகிற வாக்கு, பலம் பொருந்திய பெரும் நாட்டுடையதாக இருப்பினும், பிற நாட்டுடையதாக இருப்பினும், அவ்வாக்கின் தரமும், தகுதியும், மதிப்பும், நிர்ணயிக்கும் ஆற்றலும் ஒன்றேயாகும். வாக்குகளுக்குகிடையே எவ்விதத் தகுதி வேறுபாடுகளும் கிடையாது.

பஞ்சசீலக் கொள்கை :

பஞ்சசீலக் கொள்கைக்கு வித்திட்டவர் பாரதப் பிரதமர் நேரு ஆவார். இக்கொள்கை 1955–ஆம் ஆண்டில் நடந்த பாண்டுங் மாநாட்டில் விவாதிக்கப்பட்ட உலக அமைதி மற்றும் ஒத்துழைப்பிற்கான பேரறிக்கையில் சேர்க்கப்பட்டது. பஞ்சசீலக் கொள்கை சமத்துவத்திற்கு வழிவகுக்கிறது. அதன் சாரம் வருமாறு.

1. ஒரு நாடு மற்றொரு நாட்டின் சூழ்நிலை ஒருமைப்பாட்டையும் இறைமையையும் மதித்தல்;

2. ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது ஆக்கிரமிப்பு செய்யாதிருத்தல் (Non-aggression);

3. ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடா திருத்தல்;

4. சமத்துவமாக நடந்து கொள்ளல் மற்றும் ஒருவருக்கொருவர் உதவுதல்;

5. நட்பமைதியுடன் கூடிய கூட்டு வாழ்வு (Peaceful co-existence) வாழ்தல்;

இன்றைய நிலை :

சமத்துவ கோட்பாட்டின் காரணமாக இன்று சில சிறிய நாடுகளும் உலக அரங்கில் சுதந்திரம் பெற்று, பெருநாடுகளுக்கு இணையாக மாற முடிகிறது.

சமத்துவ கோட்பாடு - சில நிபந்தனைகள் :

உலக நாடுகள் அனைத்தும் சமத்துவமும், சம இறைமையும் பெற்றவை

என்ற கோட்பாடு ஏற்புடையதே. ஆனால் இறைமை பெற்ற நாடு தன் செயல்களில் தனித்தியங்கும் தன்மையும்; சர்வ சுதந்திரமும் பெற்றது. எனினும் இத்தனித் தியங்கும் தன்மையும் மற்ற நாடுகளின் இறைமையை பாதிக்காத வகையில் இருக்க வேண்டும். சில சமயங்களில் தன் நாட்டிற்குள்ளேயே நிகழ்த்தும் செயல்கள் கூட மற்ற நாட்டைப் பாதிக்கக்கூடும். உதாரணமாக ஒரு ஆறு இரண்டு நாடுகளின் வழியே ஓடும்போது, மேலிருக்கும் நாடு கீழிருக்கும் நாட்டிற்குச் செல்லும் நீர் வறண்டு போகும்படி தன்னிச்சையாக செயல்படுவது தவிர்க்கப்படுதல் வேண்டும். ஏனெனில் அது மற்ற நாட்டின் உரிமையை பாதிக்கவல்லது என அறிஞர் **ஓப்பன் ஹெய்ம்** கூறுகிறார். இது குறித்து சில முக்கிய வழக்குகள் வருமாறு.

இரு முக்கிய வழக்குகள்:

Trail Smelter Arbitration between U.S. and Canada[1] எனும் பிரச்சனையில் ஒரு நாடு, மற்றொரு நாட்டிற்கு எவ்விதத்திலேனும் இழப்பு நேரும் வகையில் எக்காரணங் கொண்டும் செயல்படலாகாது எனக் கருத்துரைக் கப்பட்டது.

Corfu Channel Case[2] – மேற்படி பிரச்சனையில் கூறப்பட்ட கருத்து சர்வதேச நீதிமன்றத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, இவ்வழக்கில் வலியுறுத்தப் பட்டது. இவ்வழக்கின் விபரங்கள் வருமாறு. கர்ஃபூ கால்வாயில், தனது எல்லையோர நீரடியில் கன்னி வெடிகள் பரப்பப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், அல்பேனிய நாடு, அவ்வழியாகச் செல்லும் வேற்று நாட்டு கப்பல்களுக்கு அதுபற்றி அறிவிக்கக் கடமைப்பட்டிருந்தும், அது எவ்வித அறிவிப்பும் தராமல் வாய்மூடி மௌனியாக இருந்தது. இதை அறியாத பிரிட்டிஷ் கடற்போர்க் கப்பல்கள் அவ்வழியாகச் சென்றபோது மேற்படி கன்னி வெடிகளால் தாக்குண்டு வெடித்துச் சிதறின. இதனால் உயிரிழப்பும், பொருள் இழப்பும் ஏற்பட்டன. அல்பேனியா நாடு தனது மேற்படி கடமையிலிருந்து தவறியதால், பிரிட்டிஷ் நாட்டிற்கேற்பட்ட இழப்பினை ஈடு (Damages) செய்ய வேண்டிய பொறுப்புக்குட்பட்டது எனவும், ஒரு நாடு அறிந்தே மற்ற நாடுகளின் உரிமைகளுக்குப் தீங்கு ஏற்படுத்தும் வகையில் நடவாதிருக்கக் கடமைப்பட்டது என்றும் இவ்வழக்கைத் தீர்மானித்த சர்வதேச நீதிமன்றம் (Intenational Court of Justice) தீர்ப்பளித்தது.

-o0o-

1. Vol. 35 A.J.I.L. (1941), p. 684
2. I.C.J. Reports (1949), p. 23

10

நாடுகளின் அங்கீகாரம் [Recognition of States]

14. "A State is, and becomces, an International person through recognition only and exclusively". Discuss. ("ஒரு நாடு அங்கீகாரத்தின் மூலம் மட்டுமேதான் ஒரு சர்வதேச நபராக இருக்கவும் ஆகவும் செய்கிறது." ஆராய்க.)

(அல்லது)

Explain the significance of recognition in International Law. How does the recognition of a State differ from the recognition of a Government? (நாட்டிடைச் சட்டத்தில் அங்கீகரித்தலின் முக்கியத்துவத்தை விளக்குக. ஒரு நாட்டினை அங்கீகரித்தலானது, ஒரு அரசாங்கத்தை அங்கீகரித்தலிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது ?)

நாடுகளை அங்கீகரித்தல் (Recognition) - விளக்கமும் அவசியமும் :

சர்வதேச சமுதாயத்தின் அங்கத்தினர்களாக இருக்கும் நாடுகளின் நிலையானது, காலத்தின் கோலத்திற்கேற்ப மாறிக் கொண்டே வருகிறது. உதாரணமாக பழைய நாடுகள் மறைவதோ அல்லது பிற நாட்டுடன் இணைந்து புதிய நாடாவதோ அல்லது ஒரு நாட்டிலிருந்து பிரிந்து பல நாடுகள் தோன்றுவதோ (பரந்த நிலப்பரப்பைக் கொண்டிருந்த இரஷ்யா, பல சிறு நாடுகளாக பிரிந்து போனதை இங்கு நினைவுபடுத்திக் கொள்ளலாம்) அல்லது ஒரு சமுதாயம் நாடாவதோ இன்று சகஜமாகி விட்டது. சில சமயங்களில் நாட்டில் மாற்றம் ஏற்படா விட்டாலும் அரசாங்கத்தில் மாற்றம் ஏற்படுகிறது. இவ்வாறு ஒரு நாடு மறைவதும், மாறுவதும் அந்நாட்டிற்கு ஏற்பட்ட பிரச்சனை மட்டுமல்ல; அது உறவு கொண்டிருந்த

மற்ற நாடுகளுக்கும் உரித்த பிரச்சனையாகும். ஒரு சமுதாயம், ஒரு நாடாக மலர பின்வரும் நான்கு முக்கியப் பண்புகள் தேவை. அவை (1) நிலையான மக்கட் தொகை; (2) குறிப்பிட்ட எல்லையுடைய நிலப்பரப்பு; (3) அரசாங்கம்; (4) மற்ற நாடுகளுடன் உறவு கொள்ளும் தகுதி. எனினும் இவற்றை ஒரு சமுதாயம் அடைந்தவுடன், அது ஒரு நாடாகிவிடுவதில்லை. அது சர்வதேச அரங்கில் ஒரு நாடாக கருதப்பட, மற்ற நாடுகளின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும். அதற்குப் பின்தான் ஒரு நாட்டிற்கே உரித்தான உரிமைகளும், கடமைகளும் அதற்கு ஏற்படுகின்றன. ஆகவே **"ஒரு புதிய நாடு அங்கீகாரத்தின் மூலம் மட்டுமேதான் ஒரு சர்வதேச நபராக இருக்கவும், ஆகவும் செய்கிறது"** – என்று அறிஞர் **ஒப்பன்ஹெய்ம்** கூறுகிறார். இதனைச் சரியென ஏற்றுக்கொள்வதில் தவறில்லை.

அங்கீகாரத்திற்கு அறிஞர் ஃபென்விக் (Fenwick) தரும் வரையறை :

அறிஞர் **ஃபென்விக்** அவர்கள், "சர்வதேச சமுதாயத்தில் உறுப்பினராக இருக்கும் ஒரு நாடு, அதுவரையில், தான் அதிகாரப்பூர்வமான உறவுகளை வைத்துக் கொள்ளாத ஒரு நாட்டையோ அல்லது அரசியல் குழுவையோ ஒரு நாடாக முறைப்படி ஒப்புக் கொள்வதே (Formal acknowledgement), அங்கீகாரமாகும்" என்று கூறுகின்றார்.

நாட்டிடைச் சட்ட நிறுவனம் கூறும் வரையறை :

"அரசியல்ரீதியாக அமைந்த, பிற நாடுகளின் கட்டுப்பாட்டில் இல்லாத, நாட்டிடைச் சட்டத்தின் நெறிமுறைகளை கடைப்பிடிக்கும் திறன் படைத்த, ஒரு குறிப்பிட்ட நில எல்லையை தனது நிலப்பரப்பாகக் கொண்ட மனித சமுதாயம் ஒன்று இருக்கிறது என ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளோ தன்னிச்சையாக ஒப்புக் கொள்ளும் செயலே அங்கீகாரமாகும். அதன் மூலம், அந்த மனித சமுதாயத்தை சர்வதேச சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக கருதுவதற்கு தங்கள் எண்ணத்தை வெளிப்படையாக அந்த நாடுகள் எடுத்துக் கூறுகின்றன" என நாட்டிடைச் சட்ட நிறுவனம் (Institute of International Law) 'அங்கீகாரத்திற்கு' வரையறை தருகிறது.

அங்கீகாரத்தின் முக்கியத்துவம் :

நாகரிகமடைந்த நாடுகளின் பொது ஒப்புதலே (Common consent) நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையாகும் (Basis). எனவே, ஒரு நாட்டிற்குரிய தகுதிகள் அனைத்தையும் ஒரு சமுதாய அமைப்பு கொண்டிருந்தாலும், அது சர்வதேச சமுதாயத்தில் ஒரு உறுப்பு நாடாக முடியாது. அதாவது அத்தகுதிகள் மட்டுமே போதுமானவையல்ல. ஆரம்ப காலத்தில் தங்களிடையே நிலவி வந்த வழக்கம், உடன்படிக்கை மூலமாக நாட்டிடைச் சட்டத்தை தோற்றுவித்த நாடுகளே,

சர்வதேச சமுதாயத்தின் துவக்க கால உறுப்பினர்கள் ஆகும். எனவே புதிதாகத் தோன்றிய ஒரு நாடு, ஏனைய உலக நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டால்தான் அது சர்வதேச சமுதாயத்தில் ஒரு உறுப்பினராக முடியும். எனவே அங்கீகரிப்பின் மூலமாகத் தான் ஒரு நாடு, உலக நபரத்துவம் (International Personality) அடைகிறது. (மேலும் விரிவாக "அங்கீகரித்தலின் விளைவுகள்" என்ற தலைப்பின் கீழ்க் காண்க.)

நாட்டை அங்கீகரிப்பது, அரசாங்கத்தை அங்கீகரிப்பது - வேறுபாடுகள் :

புதியதொரு நாட்டை அங்கீகரிப்பதையும், புதிய அரசாங்கத்தை அல்லது புதிய அரசுத் தலைமையை அங்கீகரிப்பதையும் ஒன்றாகக் கருத முடியாது. இவை இரண்டிற்குமிடையே எவ்வித தொடர்பும் இல்லை. முன்பே அங்கீகரிக்கப்பட்டுவிட்ட நாட்டில் ஏற்படும் புதிய அரசாங்கத்தை அல்லது ஆட்சித் தலைவர் மாற்றத்தை, ஒரு வெளிநாடு அங்கீகரிக்க மறுத்தால், அதன் காரணமாக அவ்விரு நாடுகளிடையே இருந்த வந்த உறவு முறைகள் நிறுத்தி வைக்கப்பட்டாலும், அப்புதிய நாடு 'உலக நபரத்துவம்' பெற்றது எனும் அங்கீகாரத்தை இழந்து விட்டதாகக் கருத முடியாது. **Tinoco Arbitration**[1] எனும் இசைவுத்தீர்வு வழக்கில் அங்கீகரிக்கப்படாத ஒரு அரசாங்கத்தின் செயல்கள், அது அங்கீகரிக்கப் படவில்லை என்ற காரணத்தால் மட்டுமே, சட்டத்திற்கு விரோதமானது என்று கூறிவிட முடியாது, எனப்பட்டது.

புதிய ஆட்சித் தலைவர் ஒருவர் பதவிக்கு வருவதனால், ஒரு புதிய அரசாங்கம் தோன்றுகிறது. இது உள்நாட்டுச் சட்டத்தின்படி நடப்பதாகும். இவ்வாறு ஒரு நாட்டில் புதிய அரசாங்கம் தோன்றியவுடன், அது மற்ற உலக நாடுகளுக்கு அறிவிக்கப்பட்டு, அந்நாடுகளின் தலைவர்கள், புதிதாக பதவியேற்ற ஆட்சித் தலைவருக்கு வாழ்த்துச் செய்திகள் (Congratulatory message) அனுப்புவதன் மூலம், அவர் அங்கீகரிக்கப்படுகிறார். அதன் மூலம் அவ்வரசாங்கமும் அங்கீகரிக் கப்படுகிறது. எனினும், உலக நாடுகளின் தலைவர்களுக்கு இவ்வாறு அறிவித்து, அவர்கள் வாழ்த்துச் செய்தி அனுப்பி அங்கீகரித்தால்தான் ஒரு புதிய அரசாங்கம் செயல்பட முடியும் என்று கூற முடியாது. ஏனெனில் ஒரு புதிய ஆட்சித்தலைவர் பதவிக்கு வருவது உள்நாட்டுச் சட்டத்தால் (Municipal Law) மட்டுமே அன்றி, நாட்டிடைச் சட்டத்தால் (International Law) அல்ல. ஆனால் இதிலும் நாட்டிடைச் சட்டத்தின் முக்கியத்துவம் இருக்கவே செய்கிறது. அஃதாவது, அவ்வறிப்பின் மூலமாகத்தான், அக்குறிப்பிட்ட புதிய ஆட்சித்தலைவரே நாட்டு அரசாங்கத்தின் உயர் தலைமை என்பதையும், உள்நாட்டுச் சட்டத்தின்படி அவர்தான் வெளிநாட்டு உறவுமுறைகளில், நாட்டின் சார்பில், அதனைக் கட்டுப் படுத்தும் செயல்களைச் செய்யும் அதிகாரம் பெற்றவரென்றும் அந்நாடு மற்ற நாடுகளுக்கு அறிவிக்கிறது. இதற்கு பதிலாக மற்ற நாடுகளும் அத்தலைமையை

1. 1, United Nations Reports of International Arbitral Awards, p. 369.

அங்கீகரிப்பதன் மூலம், அவருடன் நட்புறவிலான பேச்சு வார்த்தைகள் நடத்தத் தயாராகின்றன. எனினும் நாட்டை அங்கீகரிப்பதற்கும், அரசாங்கத்தை அங்கீகரிப் பதற்கும் சம்பந்தமில்லை. அரசாங்கம் மாறினாலும் நாடு, நாடுதான்.

15. Define recognition and explain the theories of reconition. (அங்கீகாரத்தை வரையறை செய்து அதன் கோட்பாடுகளை விளக்குக)

(அல்லது)

Discuss the theories of recognition. (அங்கீகாரம் பற்றியுள்ள தத்துவங்களை விளக்குக.)

(அல்லது)

What are the principal theories as to the nature, function and effect of recognition? Is there a duty to grant recognition? (அங்கீகரித்தலின் தன்மை, செயல்பாடு மற்றும் விளைவு ஆகியவற்றைக் குறித்த முதன்மைக் கருத்தியல்கள் யாவை? அங்கீகாரம் அளிக்க வேண்டும் என்கிற கடமை ஏதேனும் உண்டா ?)

(அல்லது)

Referring to the Constitutive and Declaratory theories of recognition, Starke states that 'Probably the truth lies somewhere between these two theories. The one or the other theory may be applicable to different sets of facts' - Discuss. (அங்கீகாரத்தின் அமைப்பு முறை மற்றும் விளம்பு முறை கருத்தியல்புகளை குறிப்பில் கண்டு ஸ்டார்க் கூறுகின்றார் "நிகழ்வுக்குரிய நிலையில் உண்மை இரண்டு கருத்தியல்களிடையே அமைந்திருக்கின்றது. ஒரு கருத்தியல் அல்லது மற்றொன்று வேறுபட்ட உண்மை நிலைக்கு பொருந்தக் கூடியதாகும்." விவாதிக்க.)

(அல்லது)

"Recognition while declaration of an existing fact is constitutive in nature" - Explain. ("நடப்பு உண்மையை அறிவிக்கும் பொழுது, அங்கீகரித்தல் என்பது; உருவாக்கும் தன்மையுடையதாகிறது" – விளக்குக.)

(அல்லது)

What are the theories relating to recognition? Can recognition be withdrawn? (அங்கீகாரம் தொடர்பான கோட்பாடுகள் யாவை? அங்கீகாரத்தை திரும்பப் பெற முடியுமா?)

முன்னுரை:

அங்கீகரித்தல் குறித்து இரண்டு முக்கியமான கோட்பாடுகள் உள்ளன.

அவை இரண்டும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட கருத்தினைக் கொண்டவையாகும். அத்தகு இரண்டு கோட்பாடுகள் வருமாறு.

1. இணைந்து உருவாக்கும் கோட்பாடு (Constitutive Theory) :

இக்கோட்பாட்டின்படி, அங்கீகாரம் அளிப்பதன் வாயிலாக மட்டுமே, ஒரு அரசியல் சமுதாயம், உலக அரங்கில் 'நாடு' எனும் தகுநிலையை (status) அடைகிறது. அத்தகு அங்கீகாரத்தை உலகின் மற்ற உறுப்பு நாடுகள் இணைந்து அளிக்க வேண்டும். அதன் பிறகே, ஒரு நாடு உலக நபரத்துவம் (International Personality) அடைகிறது. சுருங்கக் கூறின், ஒரு நாடு என்பதே அது மற்ற நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பின்புதான் தோன்றுகிறது. அங்கீகாரத்திற்கு முன்பு, அந்த அரசியல் சமுதாயம் அல்லது நாடு, ஒரு நாட்டிற்குரிய பண்புகளைக் கொண்டிருப்பினும், அது நாடாகக் கருதப்படுவதில்லை, என்று மேற்படி கோட்பாடு கூறுகிறது. இப்படிப்பட்ட அங்கீகாரம், பரஸ்பரமான உறவுகளை உருவாக்கக் கூடியதாகவும், அங்கீகாரம் அளிக்கப் பெற்ற நாடு முன்பு கொண்டிராத உரிமைகளையும், கடமைகளையும் உண்டாக்குவதாகவும் இருக்க வேண்டும் என அறிஞர் அன்ஜலோட்டி கூறுகிறார். மேற்கண்ட கூற்றிலிருந்து தெளிவாக தெரிவது என்னவென்றால், ஒரு அரசியல் சமுதாயம் நாட்டிற்குரிய நான்கு பண்புகளாகிய (அ) மக்கள் தொகை (ஆ) எல்லை, (இ) அரசாங்கம், (ஈ) பிற நாடுகளுடன் உறவு கொள்ளத் தகுதி ஆகிய இவற்றைக் கொண்டிருந்தாலும், அதனை மற்ற நாடுகள் இணைந்து அங்கீகாரம் அளித்தால்தான் அது "நாடாக" உருவெடுக்கும். எனவேதான் இதற்கு "இணைந்து உருவாக்கும் கோட்பாடு" என்ற பெயர் வழங்கலாயிற்று. ஆனால் இக்கோட்பாடு குறைபாடுடையது என நாட்டிடைச் சட்ட வல்லுநர்கள் குற்றம் கண்டுபிடித்தனர். அவை வருமாறு.

இணைந்து உருவாக்கும் கோட்பாட்டின் குறைகள் (Criticism):

(i) அனைத்து உலக நாடுகளும் அங்கீகாரம் அளித்த பிறகுதான் "நாடு" என்பது தோன்றுகிறது, என மேற்படி கோட்பாடு கூறுகிறது. ஆனால் சில நாடுகள் அங்கீகாரம் அளித்து, மீதியிருக்கும் நாடுகள் அங்கீகாரம் அளிக்காவிட்டால், அந்நாட்டின் நிலை என்னவென்பதை மேற்படி கோட்பாடு தெரிவிக்கவில்லை. அச்சமயத்தில், அந்நாடு உலக நபரத்துவம் பெற்ற நாடா அல்லது அந்த நாட்டை அங்கீகரித்த நாடுகளின் முன் உலக நபரத்துவம் பெற்ற நாடாகவும், அங்கீகரிக்காத நாடுகளின் முன் உலக நபரத்துவம் பெறாத நாடாகவும் கருதப்படுமா என்ற வினாக்கள் தோன்றுகின்றன. உதாரணமாக, செஞ்சீனாவை (Red China) இந்தியா, பிரிட்டன், இரஷ்யா போன்ற நாடுகள் அங்கீகரித்துவிட்டாலும், 1973–ஆம் ஆண்டு வரை அதனை அமெரிக்கா மற்றும் சில நாடுகள் அங்கீகரிக்கவில்லை. இம்மாதிரியான பிரச்சனைகளுக்கும் மேற்படி கோட்பாடு விடையளிக்கவில்லை.

(ii) மேற்படி இணைந்து உருவாக்கும் கோட்பாடு உண்மையென்றால், அங்கீகாரம் அளிக்கப் பெறாத நாடுகளுக்கு நாட்டிடைச் சட்டத்தின் கீழ் எவ் விதமான உரிமைகளோ அல்லது கடமைகளோ இருக்கக் கூடாது. ஆனால், உண்மையில் அவ்வாறில்லை. உதாரணமாக செஞ்சீனாவை 1973–ஆம் ஆண்டு வரை அமெரிக்காவும் மற்ற நாடுகளும் அங்கீகரிக்கவில்லை. அய்க்கிய நாடுகள் சபையும் அதனைத் தனது உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்ளவில்லை. எனினும், அய்க்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள், அப்பொழுது நடந்த போரை நிறுத்துவதைப் பற்றி செஞ்சீனாவிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். அங்கீகாரம் அளிக்கப் பெறாத ஒரு நாட்டிடம், அய்க்கிய நாடுகள் சபையின் அதிகாரிகள் பேச்சு வார்த்தை நடத்த மேற்படி கோட்பாட்டின்படி அவசியமில்லையென்றாலும், உண்மையில் அவ்வாறு நடந்ததா என்றால், இல்லையென்பது மேற்கண்ட உதாரணத்தினால் தெளிவாக விளங்கும்.

2. அறிவிக்கைக் கோட்பாடு அல்லது சான்று கூறும் கோட்பாடு (Declaratory or Evidentiary Theory) :

இக்கோட்பாடு, முன்பு கண்ட கோட்பாட்டை விட மிகவும் முரணானது. இக்கோட்பாட்டின்படி, அங்கீகாரம் அளிப்பதன் வாயிலாக ஒரு நாடு உருவாவ தில்லை. ஒரு அரசியல் சமுதாயம், நாட்டிற்கேயுரிய நான்கு பண்புகளைப் பெற்றவுடனேயே ஒரு நாடாகி விடுகிறது. ஒரு உலக நபராகவும் கருதப்படுகிறது. இந்த நிலையை உலகிற்கு அறிவிப்பதே மேற்படி கோட்பாடாகும். ஒரு அரசியல் சமுதாயம் நாடாகிவிட்டது என்ற உண்மையை மெய்ப்பிக்கும் விதத்தில் மற்ற நாடுகள் அங்கீகாரம் அளிப்பதால், இதற்கு **"சான்று கூறும் கோட்பாடு" (Evidentiary Theory)** என்று மற்றுமொரு பெயரும் வழங்கலாயிற்று. சுருங்கக் கூறின், அங்கீகாரம் என்பது ஒரு நாட்டினை, மற்ற நாடுகள் இணைந்து உருவாக்குவதல்ல; ஒரு நாடு, நாடாக இருக்கும் நிலையை உலக நாடுகள் தெரிந்து கொள்ளும் வண்ணம் அறிவிப்பதே இக்கோட்பாடு ஆகும். அதாவது அங்கீகாரம் அளித்தால்தான், ஒரு நாடு உருவாகும் என்ற கருத்து இங்கு அடிபட்டுப் போய் விடுகிறது. அங்கீகாரத்தைப் பொறுத்தவரை இக்கோட்பாடே சிறந்ததென சட்ட அறிஞர்கள் கருதுகின்றனர். இதனை நாட்டிடைச் சட்டத்தின் சில விதிமுறைகளும் வலியுறுத்துகின்றன. அவை வருமாறு.

(i) எந்த தேதியில் ஒரு நாடு தோன்றியது என்ற வினா எழுந்தால், அந்நாடு, ஒரு நாட்டிற்கே உரிய பண்புகளை எப்பொழுது பூரணமாக அடைந்ததோ அந்த தேதியைத்தான் கணக்கில் கொள்ள வேண்டுமே தவிர, அந்நாடு மற்ற நாடுகளால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதியை அல்ல.

(ii) அங்கீகாரத்திற்கு பின்னோக்கி செல்லும் தன்மை உண்டு (Retrospective effect) என்பதை இவ்விதி கூறுகிறது. எனவே, ஒரு நாடு,

எப்பொழுது நாட்டின் பண்புகளை அடைந்ததோ, அந்த தேதியிலிருந்தே அதன் செயல்களுக்கெல்லாம் சட்ட வலிமை ஏற்பட்டுவிடுகிறது.

(iv) ஒரு நாட்டினை அங்கீகரித்தே தீர வேண்டும் என்று மற்ற நாடுகளுக்கு எவ்விதமான கடமையையும் நாட்டிடைச் சட்டம் விதிப்பதில்லை. அதே போல், ஒரு புதிய நாடு, தான் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று எவ்விதமான உரிமைக் கோரலையும் நாட்டிடைச் சட்டத்தின் முன் செய்ய முடியாது. வேறு விதத்தில் கூறுவதெனில், அங்கீகரித்தல் எனும் செயலை, நாட்டிடைச் சட்டம் அரசியல் காரணங்களுக்காக நிறுத்தி வைக்கலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் "இணைந்து உருவாக்கும் கோட்பாடு" (Constitutive Theory) உண்மையெனில், எந்த ஒரு புதிய நாடும் தோன்றவே முடியாது. ஏனெனில், அக்கோட்பாட்டின்படி, ஒரு புதிய நாடு, மற்ற நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டால்தானே, "நாடு" எனும் தகுநிலையைப் (அந்தஸ்து) பெறும்.

"நடப்பு உண்மையை அறிவிக்கும்பொழுது அங்கீகரித்தல் என்பது, உருவாக்கும் தன்மையுடையதாகிறது" ("Recognition while declaration on an existing fact is constitutive in nature") - விளக்கம் :

"இணைந்து உருவாக்கும்" (Constitutive Theory) கோட்பாடும், "அறிவிக்கை கோட்பாடும்" (Declaratory Theory) ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்றாலும், அங்கீகாரம் பற்றிய உண்மையான கோட்பாடு இந்த இரண்டு கோட்பாடுகளுக்கும் இடையே உள்ளது என **அறிஞர் ஸ்டார்க்** கூறுகிறார். அதாவது, ஒரு நாடு ஏற்படுவது அங்கீகாரத்தினால் அல்ல எனும் உண்மையை ஒத்துக் கொண்டால், அங்கீகரிக்கப்படாத ஒரு புதிய அரசியல் சமுதாயம், நாட்டிற்கேயுரிய எல்லா பண்புகளைப் பெற்றிருந்தாலும், அங்கீகாரம் பெறாவிட்டால் அது சில சட்டப்படியான உரிமைகளைப் பெறுவதில்லை, என்பதையும் ஒத்துக் கொள்ள வேண்டும். அங்கீகாரத்திற்கு பின்னோக்கி செல்லும் திறன் (Retrospective effect) உண்டென்று நாட்டிடைச் சட்டம் கூறுவதால், மேற்படி சட்ட உரிமைகளை, அந்த அரசியல் சமுதாயம் ஒரு நாட்டிற்கே உரிய பண்புகளை அடைந்த தினத்திலிருந்து அடைந்து விடுகிறது. மாறாக, நாடுகள் அங்கீகாரம் அளித்த தினத்திலிருந்து அந்த உரிமைகள் ஏற்படுகின்றன எனக் கூற முடியாது.

மேற்படி கூற்றில், முதல் பகுதியைப் பார்க்கையில், அறிவிக்கைக் கோட்பாடு போன்று தோன்றும். அதன் இடைப்பகுதி, இணைந்து உருவாக்கும் கோட்பாட்டின் கருத்து போன்று தோன்றும். ஆகவே அங்கீகாரம் என்பதில் இரண்டு கோட்பாடுகளுமே உள்ளது. இதுவே சரியான கண்ணோட்டம் (correct view) என அறிஞர் பலர் கூறுகின்றனர்.

இதைத்தான், "நடப்பு உண்மையை அறிவிக்கும் பொழுது, அங்கீகரித்தல் என்பது, உருவாக்கும் தன்மையுடையதாகிறது" எனப்படுகிறது. அதாவது, ஒரு அரசியல் சமுதாயம், ஒரு நாட்டிற்கே உரிய நான்கு பண்புகளைப் பெற்று, நாடாகிவிட்டது, என்ற நடப்பு உண்மையை உலக நாடுகள் அங்கீகரித்தல் என்ற போர்வையில் அறிவிக்கின்றனர் (Declaratory). அவ்வாறு அறிவிக்கும்பொழுது, அந்நாட்டிற்கு நாட்டிடைச் சட்டத்தின்படி சில உரிமைகளும் கடமைகளும் வந்து சேர்கின்றன. இந்த உரிமைகளும், கடமைகளும், மற்ற நாடுகள் இணைந்து அங்கீகாரம் வழங்குவதால்தான் ஏற்படுகின்றன. ஆகவே அங்கீகாரம் என்பது இங்கு இணைந்து உருவாக்கும் (Constitutive) தன்மை கொண்டதாகிறது. சுருங்கக்கூறின் இந்த இரண்டு முரண்பட்ட கோட்பாடுகளையும் தனித்தனியாக பார்க்காமல், இணைத்துப் பார்த்தால்தான், அங்கீகாரம் என்பதின் முழு வடிவம் புலனாகும்.

16. What are the legal effects of recognition? (அங்கீகரித்தலின் சட்ட விளைவுகள் யாவை ?)

(அல்லது)

State the legal consequences that follow on recognition of a State. (ஒரு நாட்டை அங்கீகரித்தலின் பேரில் பின்தொடரும் சட்ட விளைவுகளைச் குறிப்பிடுக.)

(அல்லது)

Legal effects of recognition - Write short notes. (அங்கீகரிப்பின் சட்ட விளைவுகள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

ஒரு நாட்டினை அங்கீகரிக்கும்பொழுது, அது நாட்டிடைச் சட்டம் மற்றும் உள்நாட்டுச் சட்டத்தில் சில சட்ட விளைவுகளை உண்டு செய்கிறது. அவை வருமாறு.

நாட்டிடைச் சட்டஞ் சார்ந்து ஏற்படும் விளைவுகள் (Effects at International Law) :

(1) ஒரு புதிய நாட்டினை அல்லது அரசாங்கத்தினை அங்கீகரிப்பதன் வாயிலாக அது உலகநாடுகளின் சமுதாயத்தில் உறுப்பினராகிறது.

(2) அது மற்ற நாடுகளுடன் தூதாண்மை (Diplomatic) உறவு கொள்ளும் தகுதியைப் பெறுகிறது. உடன்படிக்கைகளில் (Treaties) ஈடுபடும் தகுநிலையையும் அடைகிறது.

(3) இரு நாடுகளுக்கிடையேயான முந்தய உடன்படிக்கைகள், அங்கீகாரம்

காரணமாக செயலற்றுவிடுவதில்லை. அவை சில வரம்புகளுக்குட்பட்டு தானாகவே புத்துயிர் பெற்று அமுலுக்கு வருகிறது.

உள்நாட்டு சட்டஞ் சார்ந்து ஏற்படும் விளைவுகள் (Effects at Municipal Law) :

(1) அங்கீகாரம் பெற்ற நாடு, தனக்கு அங்கீகாரம் அளித்த நாட்டின் நீதிமன்றங்களில் வழக்கிடும் உரிமையை பெறுகிறது. மேலும் பிற நாட்டின் உள் நாட்டு நீதிமன்றங்களில் அதற்கு எதிராகத் தொடரப்படும் வழக்குகளுக்கு விலக்குரிமையும் (Immunity) பெறுகிறது.

(2) அங்கீகாரம் பெற்ற நாட்டின் சட்டமன்ற மற்றும் நிருவாகத் துறையின் செயல்களுக்கு, அங்கீகாரம் அளித்த நாடு மதிப்பளித்து, அவற்றை ஏற்றுக் கொள்ளும்.

(3) அங்கீகாரம் அளித்த நாட்டின் நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிலிருந்து, அங்கீகாரம் பெற்ற நாட்டின் தூதாண்மை பிரதிநிதிகள் விலக்குரிமை பெறுவர். அவர்களது சொத்துக்களுக்கும் விலக்குரிமை உண்டு.

(4) அங்கீகாரத்தால் புதிய நாடு, பழைய நாட்டிற்கு வாரிசு ஆகிறது. அங்கீகாரம் அளிக்கும் நாடுகளில் உள்ள, பழைய நாட்டுக்குச் சொந்தமாக இருந்த சொத்துக் களை, புதிய நாடு தன்னுடையதாக்கிக் கொள்ளும் உரிமையை அது பெறுகிறது.

17. Explain the kinds of recognition with examples. (அங்கீகரித்தலின் வகைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Explain the nature and kinds recognition. (அங்கீகரித்தலின் தன்மை மற்றும் வகைகளை விளக்குக.)

(அல்லது)

Define recogntion and distinguish defacto recognition from dejure recognition. (அங்கீகாரத்தை வரையறுத்து, நிகழ்வுநிலை அங்கீகாரத்தை சட்டநிலை அங்கீகாரத்திலிருந்து வேறுபடுத்துக.)

(அல்லது)

What is recognition? Explain the difference between (a) Defacto recognition and Dejure recognition. (b) Recognition of a State and recognition of a New Governement. (அங்கீகாரம் என்றால் என்ன? (அ) நிகழ்வுநிலை அங்கீகாரம் மற்றும் சட்டநிலை அங்கீகாரம் (ஆ) ஒரு நாட்டை அங்கீகரித்தல் மற்றும் ஒரு புதிய அரசை அங்கீகரித்தல் ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாட்டை விளக்குக.)

(அல்லது)

What is recognition? What are the legal effects of de-jure and de-facto recognition? (அங்கீகரித்தல் என்றால் என்ன? சட்டப்படியாக அங்கீகரித்தல், நடப்பு முறையாக அங்கீகரித்தல் ஆகியவற்றின் சட்ட விளைவுகள் யாவை?)

(அல்லது)

Defacto and dejure recognitions - Write short notes. (நடைமுறை மற்றும் சட்டரீதியான அங்கீகாரங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

ஒரு நாட்டை அங்கீகரித்தல் பல வகைகளில் நடைபெறுகிறது. அத்தகு வகைகள் வருமாறு.

(அ) வெளிப்படையான அங்கீகாரமும் மறைமுகமான அங்கீகாரமும் :

(1) வெளிப்படையான அங்கீகாரம் (Express Recognition):

ஒரு புதிய நாட்டிற்கு அங்கீகாரம் அளிப்பது வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமானதாகவோ இருக்கலாம். அங்கீகாரம் கோரும் நாடு அல்லது அரசிற்கு, ஒரு நாடு தனது அங்கீகாரத்தை முறையாக அறிவித்தால் (Formal Declaration), அது நேரிடையான அங்கீகாரம் எனப்படும்.

(2) மறைமுகமான அல்லது உட்கிடையான அங்கீகாரம் (Implied Recognition):

ஒரு நாடு தனது அங்கீகாரத்தை வெளிப்படையாக அறிவிக்காவிட்டாலும், அங்கீகாரம் அளிப்பதற்கான தனது எண்ணத்தை எவ்வித அய்யப்பாட்டிற்கும் இடமின்றி செயல்கள் மூலம் வெளிக்காட்டுவது மறைமுக அங்கீகாரமாகும். இதனை 'உட்கிடையான அங்கீகாரம்' என்றும் அழைப்பர். இவ்வித அங்கீகாரம் அந்நாட்டிற்கு மட்டுமல்லாமல், அனைத்து நாடுகளுக்கும் எவ்வித அய்யப் பாட்டிற்கும் இடமில்லாமல் ஏற்படும் எண்ணத் தெளிவைப் பொறுத்திருக்கிறது. இந்த எண்ணத் தெளிவு ஏற்பட்டாலொழிய அங்கீகாரம் அளிக்கப்பட்டதாகக் கொள்ளக் கூடாது. எடுத்துக்காட்டாக, நாடுகளுக்கிடையே நடைபெறும் மாநாடுகளில், அங்கீகாரம் பெறாத நாடும் பங்கு கொள்வதால், அது அங்கீகாரத்தைப் பெற்றுவிட்டதாகக் கொள்ளக் கூடாது.

பின்வரும் நிகழ்வுகளை மறைமுக அங்கீகாரத்திற்கும் உதாரணமாகக் கூறலாம். (1) சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கிடையேயான உறவுகளை முழுமையான அளவு ஒழுங்குப்படுத்தி (regulating relations), வாணிபம் போன்ற உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளும் போதும்; (2) தூதாண்மை உறவுகளை

மேற்கொள்வதற்கான நடைமுறைச் செயல்களைத் துவக்கும் போதும்; (3) போர் நிலையை அங்கீகரிக்கும் பொழுது தன்னுடைய நடுநிலைக் கொள்கையைப் பிரகடனப்படுத்திக் கொள்ளும் போதும் மறைமுக அங்கீகாரம் ஏற்படும் எனலாம்.

(ஆ) நிகழ்வு நிலை அங்கீகாரமும், சட்ட நிலை அங்கீகாரமும்:

(1) நிகழ்வுநிலை அங்கீகாரம் (Defacto Recognition):

ஒரு நாட்டில் புதிய அரசு ஒன்று தோன்றியுள்ளது. அது நிகழ்வு நிலையில் தன்னியக்கம் பெற்று அதன் கட்டுப்பாட்டிலுள்ள பகுதியில் மேலாண்மையுடன் அரசோச்சுகிறது. ஆனாலும் அங்கீகரிக்கும் வெளிநாடுகளின் கருத்துப்படி அந்நாடு தன்னை நிரந்தரமாக உறுதியாக்கிக் கொள்ளவில்லையெனும் போதும் அல்லது அந்நாடு சர்வதேச அரங்கில் தன் கடமைகளை நிறைவேற்றுவதற்கு தயங்கும் போதும் அல்லது தவறும்போதும், சட்டப்படி இல்லாவிட்டாலும் அந்நாட்டை செயல்நிலையில் அங்கீகரிக்கலாம். இதனையே 'நிகழ்வு நிலை அங்கீகாரம்' என்பர். சுருங்கக்கூறின், இது ஒரு புதிய நாட்டை தற்காலிகமாக அங்கீகரித்தலாகும்.

முதலாம் உலகப் போருக்குப் பிறகு இரஷ்யப் பேரரசிலிருந்து விடுவித்துச் சென்ற ஃபின்லாந்து, லாட்வியா, எஸ்த்தோனியா போன்ற நாடுகள் தங்களுக்கென்று தனித்தன்மையும், இயக்கமும் பெற்ற மேலாண்மை அரசுகளை அமைத்துக் கொண்டன. அவ்வரசுகளுக்கு மற்ற நாடுகள் நிகழ்வு நிலை அங்கீகாரம்தான் அளித்தன. அதேபோல் (அப்பொழுதைய) சோவியத் ஒன்றிய அரசும் முதலில் நிகழ்வு நிலை அங்கீகாரத்தைத்தான் பெற்றது.

(2) சட்டநிலை அங்கீகாரம் (Dejure Recognition):

நாட்டிடைச்சட்டம் வகுத்துள்ள அனைத்து தேவைகளையும் ஒரு புதிய நாடு அல்லது அரசு பூர்த்தி செய்து, சர்வதேச சமுதாயத்தின் நடைமுறைகளில் சிறப்புடன் செயலாற்றும் வலிமையை அடைந்தால், அந்நாட்டை சட்டப்படி அங்கீகரிக்கலாம். இது 'சட்டநிலை அங்கீகாரம்' எனப்படும். இது நிரந்தரமானதாகும்.

நிகழ்வுநிலை அங்கீகாரம், சட்டநிலை அங்கீகாரம் - வேறுபாடுகள்:

நிகழ்வுநிலை அங்கீகாரம் [De-facto Recognition]	சட்டநிலை அங்கீகாரம் [De-jure Recognition]
1. இது தற்காலிகமானது.	இது நிரந்தரமானது.
2. இந்த அங்கீகாரத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளலாம் revokable).	இதனை திரும்பப் பெற முடியாது (irrevokable).

3. சட்டநிலை அங்கீகாரம் வழங்கப் படுவதற்கு முன் இந்த அங்கீகாரம் வழங்கப்படுகிறது. சட்டப்படியான அங்கீகாரம் பெறுவதற்கு தேவையான நிலைகளை அந்நாடு உண்டாக்கத் தவறிவிட்டால், எந்நேரத்திலும் அந்நாட்டிற்கு வழங்கப்பட்ட நிகழ்வு நிலை அங்கீகாரம் திரும்பப்பட்டு இரத்து செய்யப்படலாம்.	இங்கு அவ்வாறில்லை. சட்ட நிலை அங்கீகாரம் அளிக்கப்பட்டுவிட்டால், அது இறுதியானதாக கருதப்படுகிறது.
4. இவ்வகை அங்கீகாரம் பெற்ற நாட்டினுடைய சொத்துக்கள், அதனை அங்கீகரித்த நாட்டில் இருந்தால், அவற்றினைப் பெற கோரிக்கை எழுப்ப முடியாது.	சட்டநிலை அங்கீகாரம் பெற்ற நாடுகள் மட்டுமே இவ்வகை சொத்துக்களைப் பெற கோரிக்கை எழுப்ப முடியும்.
5. இவ்வகை அங்கீகாரம் பெற்ற புதிய நாடு, தன்னுடைய பழைய நாட்டிற்கு வாரிசாக (State Succession) முடியாது.	சட்டநிலை அங்கீகாரம் பெற்றால் தான், ஒரு புதிய நாடு தன்னுடைய பழைய நாட்டிற்கு வாரிசுரிமை கொண்டாட முடியும். அப்பழைய நாட்டிற்கு சேர்ந்த சொத்துக்கள், தன்னை அங்கீகரித்த நாட்டில் இருந்தால், அவற்றினை அப்பழைய நாட்டின் சார்பாக பெற முடியும்.

தர்க்கரீதியாக மேற்படி வேறுபாடுகளைத் தவிர, செயல்ரீதியாக அதிக வேறு பாடுகள், மேற்கண்ட இரண்டு அங்கீகாரத்திற்குமிடையே கிடையாது. ஏனெனில், அங்கீகரிக்கும் நாட்டின் நீதிமன்றங்கள், நிகழ்வுநிலை அங்கீகாரம் பெற்ற நாட்டின், சட்டமன்றங்களையும், உள்ளாட்சி நடவடிக்கைகளையும் சட்டநிலை அங்கீகாரம் பெற்ற நாட்டினதைப் போலவே கருதுகின்றன. எடுத்துக்காட்டாக,

Luther v. Sagor[1] – எனும் வழக்கில் நிகழ்வு நிலை அங்கீகாரம் பெற்ற நாடுகளுக்கு உலக நபரத்துவம் பெற்ற நாடுகளுக்குண்டான சலுகைகளும், உரிமைகளும், ஆட்சியதிகார எல்லையால் பாதிக்கப்படாத தன்மையும் (Ex-territoriality) வேற்றுநாட்டு நீதிமன்றங்கள் முன் உண்டென்று தீர்ப்பு வழங்கப் பட்டது. இத்தீர்ப்பினை முன்கண்ட வேறுபாடுகளுடன் ஒப்பிட்டு பார்த்தால், முற்றிலும் மாறுபட்ட ஒன்றாகத் தோன்றுவது புலனாகும்.

1. (1921) 3 KB 532

சட்டநிலை அங்கீகாரத்திற்கும், நிகழ்வுநிலை அங்கீகாரத் திற்கும் இடையே உள்ள முரண்பாடு:

சில சமயங்களில் பதவி பறிபோன சட்டநிலை அங்கீகாரம் பெற்ற அரசாங்கத்திற்கும் (Displaced dejure Government), புதிதாக அங்கீகாரம் வழங்கப்பட்ட நிகழ்வுநிலை அரசாங்கத்திற்கும் (Newly recognised de-facto Government) இடையே அதிகாரப் பிரச்சனை பற்றி முரண்பாடு (Conflict) எழுதுவண்டு. ஆங்கில நாட்டு நீதிமன்றங்களின் கூற்றுப்படி, நிகழ்வு நிலை அங்கீகாரம் பெற்ற பிந்தய அரசாங்கத்தின் அதிகாரமே மேலோங்கி நிற்கும் என்று கூறப்பட்டுள்ளது. இதனை பின்வரும் வழக்கு விளக்கும்.

Bank of Ethopia v. National Bank of Egypt. and Liguori[1] – இவ்வழக்கில், இத்தாலிய அரசாங்கம், 1936–ஆம் ஆண்டில் அபிசீனியாவை கைப்பற்றியதிலிருந்து பிரச்சனை ஆரம்பானது. அபிசீனியாவை பொறுத்தமட்டிலும், இத்தாலிய அரசாங்கத்திற்கு நிகழ்வுநிலை அங்கீகாரம் (de-facto) மட்டுமே மற்ற நாடுகளால் வழங்கப்பட்டது. இந்நிலையில் இத்தாலிய அரசாங்கம் சில சட்டங்களை இயற்றியது. அச்சமயத்தில், அபிசீனியாவின் பேரரசர் நாடு கடத்தப் பட்டார். எனினும், அவர் அப்பொழுதும், அபிசீனியாவின் சட்டப்படியான ஆட்சியாளராகவே (dejure ruler) கருதப்பட்டார். இவ்வாறிருக்கையில், இத்தாலிய அரசாங்கம் இயற்றிய மேற்படி சட்டங்கள், அபிசீனியா அரசர் இயற்றி இருந்த சட்டங்களுக்கு முரணாக இருந்தன. இங்குதான் வழக்கின் முக்கிய பிரச்சனையே எழுந்தது. அஃதாவது இத்தாலிய அரசாங்கம் இயற்றிய சட்டம் மேலேங்கி நிற்குமா அல்லது அபிசீனியா அரசர் இயற்றிய சட்டம் மேலோங்கி நிற்குமா என்ற வினா எழுந்தது. இதற்கு ஆங்கில நீதிமன்றம், பதவி பறிபோன சட்டப்படியான ஆட்சியாளரின் சட்டங்கள் தற்பொழுது நடைமுறைக்கு வராது; அவை வெறும் ஏட்டளவில் மட்டுமே இருக்கும், என்று விடை பகர்ந்தது. அதாவது, இத்தாலிய அரசாங்கம் அபிசீனியாவைப் பொறுத்தமட்டிலும் நிகழ்வு நிலை (de facto) அங்கீகாரம் மட்டுமே பெற்றிருந்த போதிலும், அது சட்டப்படியான அங்கீகாரம் மட்டுமே பெற்றிருந்த அபிசீனியாவை கைப்பற்றி விட்டதால் இத்தாலிய அரசின் அதிகாரமே மேலோங்கி நிற்கும். அதன் சட்டங்கள், அபிசீனியா அரசர் இயற்றிய சட்டங்களின் மீது ஆதிக்கம் செலுத்தும் வலிமை படைத்தவை, என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

இந்த வகையில், **The Arantzazu Mendi v. The Governement of Republican Spain**[2] எனும் வழக்கும் முக்கியமானதாகும்.

(இ) கலக நிலை அங்கீகாரமும், போர் நிலை அங்கீகாரமும்:

மேற்கண்ட இரண்டு அங்கீகாரங்களும் ஒரு நாட்டை அல்லது

1. (1937) Ch. 517
2. (1939) A.C. 265

அரசாங்கத்தை அங்கீகாரத்திலிருந்தும் மாறுபட்டது. இவற்றினை ஒன்றன்பின் ஒன்றாகப் பின்வருமாறு காண்போமா?

(1) கலகநிலை அங்கீகாரம் (Recognition of Insurgency):

தாய்நாட்டிலிருந்து பிரிந்து செல்ல உள்நாட்டுப் புரட்சியோ அல்லது கலகமே ஏற்படும்பொழுது, மூன்றாவது நாடுகள் கலக நாட்டை உடனடியாக அங்கீகரித்தல் கூடாது. அவ்வாறு செய்தால் அது தாய்நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் தலையிட்டதாக அமையும். ஆனால் கலக நாடு தனக்கென்று ஒரு நாட்டமைப்பையும், அரசையும் உறுதியாக தோற்றுவித்துக் கொண்டாலோ அல்லது தாய்நாட்டை, உள்நாட்டு போரில் தோற்கடித்துவிட்டாலோ, அக்கலக நாட்டை மூன்றாவது நாடுகள் அங்கீகரிக்கலாம். இப்படிப்பட்ட அங்கீகாரம், 'கலக நிலை அங்கீகாரம்' எனப்படுகிறது.

(2) போர்நிலை அங்கீகாரம் (Recognition of Belligerency):

தாய்நாட்டிற்கும், அதிலிருந்து பிரிந்த கலகக்காரர்களுக்கும் இடையே நடக்கும் உள்நாட்டுப் போர், உண்மையான போராக பிற அந்நிய நாடுகள் கருதும் அளவிற்கு வளர்ச்சியுற்றால், அந்நிய நாடுகள் அவற்றிற்கிடையே உள்நாட்டுப் போர் நடக்கிறது என்ற தங்களது கருத்தினை மாற்றிக்கொண்டு, உண்மையான போர் ஏற்பட்டுள்ளது என்று கருதும் நிலையில் அளிக்கப்படும் அங்கீகாரம், 'போர் நிலை அங்கீகாரம்' எனப்படுகிறது.

மேற்கண்ட இரண்டு அங்கீகாரங்களுக்கும் இடையிலான வேறுபாடுகள்: கலகநிலை அங்கீகாரத்தில் (Recognition of Belligerency) கலகக்காரர்கள், தங்களது தாய்நாட்டிலிருந்து பிரிந்து, அரசுக்கு எதிராக நாட்டின் சட்டத்தினை மீறி உள்நாட்டுப் போர் புரிகிறார்கள். போர் நிலை அங்கீகாரத்தில் உள்நாட்டுப் போர் அல்லாமல் பொதுவான உண்மையான போரே நடக்கிறது. போர்நிலை அங்கீகாரம் வழங்கப்பட வேண்டுமெனில், பின்வரும் நான்கு நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். போரிடுநர்கள் (Belligerents) (1) தங்களது நாட்டில் சட்டப்படி இயங்கும் அரசுடன் உள்நாட்டுப் போரல்லாத முறையில் பொதுவாகப் போரில் ஈடுபட்டு (General not local conflict with the lawful Government); (2) போர்விதிகளைக் கடைப்பிடித்து (Observing the rules of war); (3) ஆள்நிலத்தையோ அல்லது அதன் ஒரு பகுதியையோ அடக்கி ஆள்வார்களானால் (control of territory); (4) அந்நிய நாடுகள் அவர்களுடன் உண்டான தொடர்புகளை வரையறைச் செய்ய வேண்டிய அவசியம் ஏற்படுமானால், அந்நிய நாடுகள் அவர்களைப் போரிடுநர்களாக ஏற்றுக்கொண்டு, அவர்கள் பிடித்த பகுதிக்கு போர்நிலை அங்கீகாரம் வழங்கலாம்.

மேற்கண்ட நான்கு நிபந்தனைகளையும் கலகக்காரர்கள் (Insurgents) நிறைவு செய்வார்களானால் அவர்கள் போரிடுநர் நிலையை (Belligerent)

அடைவார்கள். அந்நிய நாடுகள் அவர்களுக்கு நிகழ்வுநிலை அங்கீகாரம் (Defacto recognition) மட்டுமே வழங்கலாம். சட்டபடியான அங்கீகாரம் (Dejure recongnition) வழங்கப்படுவதில்லை. ஏனெனில், சட்டப்படி அங்கீகரிக் கப்பட்ட பழைய அரசும், அதே ஆள்நிலத்தில் ஆட்சியிலிருப்பதாகக் கருதப்படும்.

(ஈ) நிபந்தனை அங்கீகாரம் (Conditional Recongniton):

சில சமயங்களில், சில நிபந்தனைகளுக்குட்பட்டு நாடுகள் அங்கீகரிக்கப் படலாம். 1878–ஆம் ஆண்டில் நடந்த பெர்லின் மாநாடு, பல்கேரியா, ருமேனியா, செர்னியா, மான்டினீக்ரோ ஆகிய நாடுகளை, தங்களது நாட்டு குடிமக்கள் மீது சமயக் கட்டுப்பாட்டைத் திணிக்கக் கூடாது என்ற நிபந்தனையின் கீழ் அங்கீகரித்தது. ஒரு முறை அங்கீகரித்தால், அதனைத் திரும்பப் பெற இயலாது என்பது பொது நியதி. நிபந்தனையின் கீழ் அங்கீகாரம் பெற்ற நாடு, அந்நிபந்தனையை மீறினால், அதற்கு அளிக்கப்பட்ட அங்கீகாரம் இரத்தாகிப் போகாது. மாறாக அந்நாடு நாட்டிடைச் சட்டத்தை மீறிய குற்றம் புரிந்ததாக மட்டுமே கருதப்படும். அங்கீகாரம் அளித்த நாடுகள், அந்நாட்டுடன் கொண்டிருந்த தூதண்மை உறவுகளை துண்டித்துக் கொள்ளலாம்.

(உ) கூட்டு அங்கீகாரம் (Collective Recognition) :

பல நாடுகள் ஒன்று சேர்ந்து, ஒரு சர்வதேச அமைப்பின் வாயிலாக, ஒரு நாட்டினை அங்கீகரித்தல், 'கூட்டு அங்கீகாரம்' எனப்படுகிறது. உதாரணமாக, நாம் மேற்சென்ற பத்தியில் கண்டவாறு 1878–ஆம் ஆண்டின் பெர்லின் மாநாடு (The Berlin Congress of 1878) பல்கோரியா, ருமேனியா, செர்னியா, மாண்டினீக்ரோ ஆகிய நாடுகளை கூட்டாக அங்கீகரித்ததைப் பற்றிக் கூறலாம்.

(ஊ) தலைமை அங்கீகாரம் (Recognition of a Head of a State) :

ஒரு நாட்டின் தலைவரே அந்நாட்டைப் பொருத்தவரை வெளிநாடுகளுடன் உறவு கொள்ளும் உரிமையுடையவராவார். அவருடைய செயல்தான் அந்நாட்டைக் கட்டுப்படுத்தும். இதை முன்னிட்டு தலைமை மாறியவிடத்துப் புதிய தலைமையை அங்கீகரிப்பது நாடுகளின் பழக்கம். இவ்வகை அங்கீகாரம் பெரும்பாலும் வாழ்த்துச் செய்திகளின் வாயிலாக தெரிவிக்கப்படுகிறது. இதனை 'புதிய அரசாங்கத்தை அங்கீகரித்தல்' (Recogniton of a New Government) என்றும் அழைப்பர்.

கொடுத்த அங்கீகாரத்தை திரும்பப் பெற இயலுமா? (Can Recognition be withdrawn?) :

ஒரு நாட்டிற்கு வழங்கப்படும் சட்டநிலை அங்கீகாரம் (Dejure Recognition) முடிவானதாகும். அதைத் திரும்பப் பெறவியலாது. அதே சமயத்தில்

நிகழ்வுநிலை அங்கீகாரத்தைப் (Defacto Recognition) பெற்ற ஒரு நாடு, சர்வதேச கடப்பாடுகளை நிறைவேற்றவில்லையென்றால் அல்லது ஒரு நாடாக நிலைத்திருக்கக் கூடிய வலிமையை இழந்துவருகிறதென்றால், அதற்கு அங்கீகாரம் அளித்த நாடு, அந்நாட்டிற்கு சட்டநிலை அங்கீகாரத்தை வழங்காது. வேறு விதத்தில் கூறுவதெனில், சில சமயங்களில் நிகழ்வுநிலை அங்கீகாரத்தைத் திரும்பப் பெறவியலும், ஆனால் ஒரு முறை சட்டநிலை அங்கீகாரம் கொடுக்கப்பட்டுவிட்டால், அதனை திரும்பப் பெறவியலாது. ஏனெனில், ஒரு நாட்டிற்கு சட்டநிலை அங்கீகாரத்தை வழங்கிய நாடு, பின்னர், அதைத் திரும்பப் பெற்றுக் கொண்டு விட்டால், நாட்டிடைச் சட்டத்தின் கீழ் அது ஒரு அனர்த்தமாகிவிடும். நாட்டிடைச் சட்டத்தின் கீழ், அங்கீகரித்தல் என்பது, அங்கீகாரம் பெற்ற நாடு, நாட்டின் தகுதிகள் அனைத்தையும் கொண்டதொரு அமைப்பாக மாறிவிட்டதாகப் (Statehood) பொருளாகும். ஒரு நாட்டிற்கு கொடுக்கப்பட்ட அங்கீகாரம் திரும்பப் பெறப்பட்டு விட்டது எனும் காரணத்தால் மட்டுமே, அது ஒரு நாடாக இருக்கும் தன்மையை இழந்துவிட்டது என்று கூற முடியாது.

18. Stimson Doctrine - Write short notes. (ஸ்டிம்சன் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Doctrine of Non-recognition - Write short notes. (அங்கீகரியாமைக் கொள்கை – சிறு குறிப்பு எழுதுக.)

1931–ஆம் ஆண்டில் ஜப்பான், சர்வதேச சங்கத்தில் ஒரு உறுப்பினராக இருந்தபோது, சைனாவிற்குச் சொந்தமான மஞ்சூரியாவை முற்றுகையிட்டு தெற்கு மஞ்சூரியவைத் தன்வசப்படுத்திக் கொண்டது. இது போன்று, வன்முறையின் அடிப்படையில் நடக்கும் எத்தகு நிகழ்ச்சியையும் அல்லது 1928–ஆம் ஆண்டின் பாரிஸ் ஒப்பந்தத்தின் (Pact of Paris of 1928) சரத்துக்களுக்கு முரணாக உண்டாக்கப்படும் சூழ்நிலைகளுக்கோ அல்லது உடன்படிக்கைகளுக்கோ அமெரிக்க அய்க்கிய அரசு அங்கீகாரம் அளிக்காது என அதன் செயலாளர் **திரு. ஹென்றி, L.ஸ்டிம்சன்** அவர்கள் அறிக்கை விடுத்தார். அது முதல் எந்நாட்டிற்கேனும் இவ்வகை காரணங்களுக்காக, அங்கீகாரம் மறுக்கப்பட்டால், அவ்வாறு அங்கீகாரம் மறுக்கப்பட்டதை, **'ஸ்டிம்சன் கோட்பாடு'** என அவரது பெயராலேயே உலக அரங்கில் வழங்கி வரப்படலாயிற்று.

1945–ஆம் ஆண்டில் அய்க்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட பிறகு அங்கீகரிப்பு மறுப்புக் கொள்கையில் வளர்ச்சியும் முன்னேற்றமும் ஏற்பட்டது.

1. 1948–ஆம் ஆண்டில் அமெரிக்க அய்க்கிய நாடுகள் அமைப்பின் பகோடா சாசனத்தின் பதினேழாவது பிரிவில் 'வன்முறையாலோ, பாலாத்காரத்தாலோ ஈட்டும் நிலப்பரப்பையும், தனிச்சலுகைகளையும் அங்கீகரித்தல் கூடாது' எனக் கூறப்பட்டுள்ளது.

2. 1949–ஆம் ஆண்டில் சர்வதேச சட்ட ஆணையம் தயாரித்த நாடுகளின் உரிமைகள், கடமைகள் பற்றிய வரைவுப் பிரகடனத்தின் 11–வது சரத்தில் (Article 11 of the Draft declaration on the rights and duties of States prepared by the International Law Commission in 1949) 'எந்நாடேனும் அச்சுறுத்தலாலோ, வன்முறை காட்டியோ ஈட்டும் நிலப்பரப்பினை மற்ற நாடுகள் அங்கீகரித்தல் கூடாது, என்று கூறுகிறது.

3. நாடுகளின் நட்புறவையும், ஒத்துழைப்பையும் உருவாக்குவதற்கான நாட்டிடைச் சட்டக் கொள்கைகளை வெளிப்படுத்தும் பிரகடனத்தை அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை 1970–ஆம் ஆண்டில் ஏற்றுக் கொண்டுள்ளது. அதிலும் மேற்கூறிய கருத்தே வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது.

19. Estrada Doctrine - Write short notes. (எஸ்ட்ராடா கொள்கை – சிறு குறிப்பு எழுதுக.)

மெக்ஸிகோ நாட்டின் வெளியுறவுத்துறைச் செயலாளர் எஸ்ட்ராடா 1930–ஆம் ஆண்டில் ஒரு அறிக்கை விடுத்தார். அதன்படி, ஒரு நாட்டை அங்கீகரித்தல் என்பது, அந்நாட்டினை அவமானப்படுத்தும் செயலாகும். ஆகவே அங்கீகாரம் என்பதே ஒழிக்கப்பட வேண்டும், என எஸ்ட்ராடா கூறுகிறார்.

ஒரு நாட்டிற்கேயுரிய அனைத்து பண்புகளையும் கொண்ட ஒரு புதிய சமுதாயமே, நாடென அங்கீகரிப்படுகிறது. அதாவது நிறைநாடே அங்கீகரிக்கப் படுகிறது. ஆகவே ஒரு புதிய நாட்டினை அங்கீகரிப்பதற்கு முன், அது நாட்டிற்குரிய அனைத்து பண்புகளையும் கொண்டிருக்கிறதா என ஆராய்ந்தறிய வேண்டியுள்ளது. இது அந்நாட்டின் உள்விவகாரத்தில் தலையிடுவதாக அமைகிறது. இதனால், அந்நாட்டு இறைமையின் மீதான மதிப்பு குறைகிறது. சுருங்கக் கூறின், அங்கீகாரம் அளித்தல் என்ற பெயரில், ஒரு நாட்டின் மதிப்பை சீர்குலைத்து அவமதிப்பதாக உள்ளது, என எஸ்ட்ராடா கூறுகிறார். எனவே, மெக்ஸிகோ நாடு, வெளிநாடுகளில் புதிய அரசாங்கம் மாறுவதிலோ அல்லது புதிய அதிகாரிகள் பதவிக்கு வருவதிலோ தலையிடுவதில்லை. சுருங்கக்கூறின் எஸ்ட்ராடா கொள்கைப்படி அங்கீகாரம் என்பது ஒரு நாட்டை அவமானப்படுத்தும் முறைகளில் ஒன்றாகும், என்பது எஸ்ட்ராடா அவர்களின் கருத்தாகும்.

19-A. "While the granting or recognition is within the discretion of States, is not a matter of arbitray will but must be given or refused in accordance with legal principles" - Discuss. ("அங்கீகாரம் வழங்குவது நாடுகளின் தன் விருப்புரிமையாக இருந்தாலும், சட்ட விதிகளுக்குட்பட்டு அதை வழங்க வேண்டும் அல்லத மறுக்க வேண்டும், அது தன் விருப்புரிமைப்படி செய்லபடக்கூடிய விஷயமல்ல" விவாதி.)

(இந்த அத்தியாயத்தில் புரிந்து கொண்டதை இவ்வினாவிற்கு தக்க வகையில் சுருக்கமாக எழுதவும். இரு கோட்பாடுகளை விளக்கவும்.)

நாட்டு வாரிசுரிமை
[State Succession]

20. Explain the different kinds of succession of States. (நாடுகளின் பல்வேறு வகையான இறங்குரிமைகளைப் பற்றி விளக்குக.)

(அல்லது)

What are the rules relating to State Succession ? (நாடுகளிடையே வாரிசுரிமை பற்றிய விதிகள் யாவை ?)

(அல்லது)

Discuss the law of State succession citing relevant cases. (அரசின் பின்னுரிமை பற்றிய சட்டத்தினை தக்க தீர்ப்புகளை எடுத்துக்காட்டி விவாதிக்கவும்.)

(அல்லது)

'State succession is a misnomer in International Law'- Discuss. ('நாட்டு வாரிசுரிமை என்பது நாட்டிடைச் சட்டத்தில் ஒரு தவறான பெயர்'. விளக்குக.)

(அல்லது)

What is State sucession? How do rights and obligations pass upon external changes of sovereignty over terriotory? (அரசு பின்னுரிமை என்றால் என்ன? ஆட்சி மண்டலத்தின் மீது பேரரசாண்மையின் வெளிப்புற மாறுதல்களினால் உரிமைகளும், கடமைகளும் எப்படி சேருகின்றன?)

(அல்லது)

Discuss the rights and liabilities arising out of State

succession. (நாட்டின் இறங்குரிமையால் உருவாகும் உரிமைகள் மற்றும் கடமைகளை விவரிக்கவும்.)

(அல்லது)

State succession creates certain rights and liabilities. Explain. (நாட்டு வாரிசு உரிமை சில உரிமைகளையும், பொறுப்புகளையும் ஏற்படுத்துகிறது. விவாதிக்க.)

(அல்லது)

State succession - Write short notes. (நாட்டு வாரிசு உரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

நாட்டு வாரிசுரிமை - விளக்கம் :

மனிதர்கள் பிறக்கின்றனர். பின் இறக்கின்றனர். இறந்து போனவரின் உரிமைகளையும், கடமைகளையும் அவரது வாரிசுகள் அடைகின்றனர். நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. எனினும் மனிதன் இறந்தால் அவனது உடல் மண்ணுக்குப் போகிறது. அவனது உடலுறுப்புகள் யாவும் அழிந்து விடுகிறது. ஆனால் நாடுகள் அப்படி அழிந்து விடுவதில்லை. அதன் மக்களும், ஆள்நிலமும் அப்படியே இருக்கின்றன. 'நாடு' என்பது அரசியல் முறையாக இணைந்து செயலாற்றும் ஒரு சமுதாயத்திற்குக் கொடுக்கப்படும் கற்பனை உருவம். இந்த அரசியல் முறையான இணைப்பில் ஏதேனும் மாறுபாடுகள் ஏற்பட்டால், கற்பனை உருவமாகிய 'நாடும்' மாறுபாடுகள் அடைகிறது. போரிட்டுக் கைப்பற்றுதல், அடிமைப்படுத்தல், பிரிவினை செய்தல் போன்றவற்றின் வாயிலாக ஆள்நிலச் சேர்ப்பும், இழப்பும் ஏற்படுகிறது. இதனால் கற்பனை வடிவமான நாடு உருமாற்றமடைகிறது. இப்படி உருவம் சிறிது மாற்றமடைந்தாலும், அங்கு பழைய நாடு இறந்து, புதிய நாடு பிறந்து இருப்பதாக நாட்டிடைச் சட்டம் கருதுகிறது. இருப்பது இறந்து, புதியது பிறந்து தனது ஆதிக்கத்தைச் செலுத்தும்போது இறந்ததன் உரிமைகளுக்கும், கடமைகளுக்கும், உடைமைகளுக்கும் புதிதாகப் பிறந்தது, வாரிசாகிறது. நாடுகளைப் பொறுத்த வரையில் நாட்டிடைச் சட்டம், இதை **'நாட்டு வாரிசுரிமை' (State Succession)** எனப் பெயரிட்டு அழைக்கிறது. நுணுக்கமாகக் கூறுவதெனில், ஒரு உலக நபரின் இடத்தை மற்ற உலக நபர்கள் கைக் கொள்ளும்போது ஏற்படக்கூடிய வாரிசுரிமை, 'நாட்டு வாரிசுரிமை' எனப்படுகிறது.

'நாட்டு வாரிசுரிமை' என்பது தவறான பெயராகும் (State Succession is a misnomer):

'நாட்டு வாரிசுரிமை' எனும் பதத்தின் விளக்கம் குறித்து நாட்டிடைச் சட்ட அறிஞர்களிடையே ஒருமித்த கருத்து இல்லை. ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உலக நபர்கள் (இங்கு நாடுகள்), மற்றொரு உலக நபரின் இடத்தைக் கைக்

கொள்ளும் பொழுது, அதற்கிருந்த உரிமைகளும், கடமைகளும் அவ்வாறு கைப்பற்றிக் கொண்ட உலக நபர்களுக்கு மாறிச் செல்கின்றன; இதுவே நாட்டு வாரிசுரிமை என்று ஒரு சில அறிஞர்கள் கூறுகின்றனர். ஆனால் ஸ்டார்க் உள்ளிட்ட வேறு சில அறிஞர் பெருமக்கள், 'நாட்டு வாரிசுரிமை' என்பது ஒரு **தவறான பெயராகும் (misnomer)** என்று கருத்துரைக்கின்றனர். ஒரு மனிதன் இறந்துவிட்டால், அவனது உரிமைகளும், கடமைகளும் அவனது வாரிசுகளைச் சென்றடைகின்றன என்று உள்நாட்டுச் சட்டம் கூறுகிறது. அதையொத்தவாறே, நாட்டு வாரிசுரிமையும் உள்ளதாகக் கருதப்படுகிறது; ஆனால் இந்நிலைப்பாடு தவறானது என்று கூறுகின்றனர். ஏனெனில், ஸ்டார்க் அவர்களின் கூற்றுப்படி, நாட்டிடைச் சட்டத்தில் நாட்டு வாரிசுரிமை என்பதற்கு எவ்வித பொதுக் கோட்பாடுகளும் கிடையா. ஒரு புதிய நாடு, பழைய நாட்டின் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டால், அது அதன் வாரிசு என்றோ, பிரதிநிதி என்றோ கூற முடியாது. மேலும் அவ்வாறு ஒரு நாட்டின் இடத்தை மற்றொரு நாடு முழுமையாக கைப்பற்றுதல் என்பது நாட்டிடைச் சட்டத்தின் கீழ் நடவாத காரியம். **ஒப்பன்ஹெய்ம்** எனும் அறிஞர் கூட, நாட்டிடைச் சட்டத்தில் பொதுவான (ஒட்டு மொத்தமான) நாட்டு வாரிசுரிமை என்பது இடம் பெறுவதில்லை என்பதற்கு நாடுகள் பின்பற்றும் நடைமுறைகளே சான்றாகும், என்று கூறுகிறார். சுருங்கக்கூறின், ஒரு நாடு இறந்துபட்டவுடன் (அதாவது மறைந்தவுடன்), அதற்குரிய உரிமைகளும், கடமைகளும் மறைந்து விடுகின்றன. ஆனால் அதே சமயத்தில் ஒரு நாடு மறைந்த பிறகு, அந்நாட்டினுடைய எதற்கும் வாரிசுரிமை ஏற்படுவதில்லை என்ற கூறுவதும் தவறு. ஒரு நாட்டை மற்றொரு நாடு கைப்பற்றிய பிறகு, அதன் சில உரிமைகளும் கடமைகளும் கைப்பற்றிய நாட்டிற்கு மாறுகின்றன. அனைத்து உரிமைகளும், கடமைகளும் மாறுவதில்லை. இவ்வாறு எத்தகு உரிமைகளும், கடமைகளும் வாரிசுரிமையின் கீழ் மாறிச் செல்கின்றன என்பது அந்தந்த உரிமைகள் மற்றும் கடமைகளின் தன்மையைப் பொறுத்ததாகும். எனவே நாட்டு வாரிசுரிமை உள்ளது என்பதற்கோ, இல்லை என்பதற்கோ திட்ட வட்டமான, ஒரே மாதிரியான விதிகள் ஏதுமில்லை. வாரிசுரிமை என்றால், இறந்தவரின் அனைத்து உரிமைகளும், கடமைகளும் வாரிசுரிமை பெறுபவருக்குச் சென்றடைய வேண்டும். ஆனால் நாட்டு வாரிசுரிமையில் அவ்வாறு நடப்பதில்லை. எனவே 'நாட்டு வாரிசுரிமை' என்பது சரியான பெயரா, தவறான பெயரா என்பதில் இன்றளவும் முரண்பட்ட கருத்துக்கள் நிலவுகின்றன என்பதுதான் சரி.

நாட்டு வாரிசுரிமை - இரண்டு வகைகள் :

(1) முழு வாரிசுரிமை (Universal Succession):

(i) ஒரு நாடு மற்றொரு நாட்டை போரிட்டு வென்று (conquest) அல்லது அடிமைப்படுத்தி (subjugation) முற்றிலும் தன்வயப்படுத்திக் கொண்டால் (completely absorbed) அந்நாட்டைப் பொருத்தவரை, அடிமைப்படுத்திய நாட்டிற்கு முழு வாரிசுரிமை கிடைக்கிறது. **(எ.கா.)** கிரேட் பிரிட்டன் 1901-ஆம்

ஆண்டில் தென்னாப்ரிக்க குடியரசையும், ஜப்பான் 1910–ஆம் ஆண்டில் கொரியாவையும், இத்தாலி 1936–ஆம் ஆண்டில் அபிசீனியாவையும் தன்னுடன் இணைத்துக் கொண்ட பொழுது முறையே அந்நாடுகளுக்கு முழு வாரிசுரிமை உண்டானது.

(ii) பல நாடுகள் தானாக ஒன்றாக இணைந்து (voluntary merger) ஒரு கூட்டாட்சி அரசை (Federal State) உருவாக்கும்பொழுதும், முழு வாரிசுரிமை ஏற்படுகிறது. **(எ.கா.)** 1871–ஆம் ஆண்டில் செர்மானியப் பேரசை உருவாக்குவதற்கு செர்மானிய நாடுகள் ஒன்றிணைந்தன.

(iii) ஒரு நாடு பல பகுதிகளாக உடைந்து (a State breaks up into parts), அந்த ஒவ்வொரு பகுதியும் ஒரு உலக நபராக உருமாறும்பொழுதும், முழு வாரிசுரிமை உண்டாகிறது; அப்படி துண்டாக உடைந்த ஒவ்வொரு பகுதியும், தனது மூல நாட்டிற்கு வாரிசாகிறது.

(2) பகுதி வாரிசுரிமை (Partial Succession):

(i) ஒரு நாட்டின் பகுதி அதனிடமிருந்து பிரிந்து, சுதந்திர நாடாகும் பொழுது, பகுதி வாரிசுரிமை ஏற்படுகிறது. **(எ.கா.)** 1776–ஆம் ஆண்டில் அமெரிக்க அய்க்கிய நாடுகள், அதனுடைய தாய்நாடான கிரேட் பிரிட்டனிலிருந்து பிரிந்ததைக் குறிப்பிடலாம்.

(ii) ஒரு நாடு, மற்றொரு நாட்டின் ஒரு பகுதியை பிரிவினை (cession) மூலமாகவோ அல்லது போரிட்டோ (conquest) அடைந்தால், பகுதி வாரிசுரிமை ஏற்படுகிறது.

(iii) முழுதளவிலான இறைமையதிகாரம் பெற்ற ஒரு அரசு, ஒரு கூட்டாட்சி அரசில் இணைவதாலோ அல்லது ஒரு நாட்டின் பாதுகாப்பின் கீழ் வருவதாலோ தனது சுதந்திரத்தை இழக்கும் பொழுது அல்லது இறைமை இல்லாத அரசு ஒன்று முழு இறைமையுடைய அரசாக ஆகும் பொழுது, பகுதி வாரிசுரிமை ஏற்படுகிறது. **(எ.கா.)** மியுனிச் உடன்படிக்கையின் விளைவாக 1938–ஆம் ஆண்டில் செக்கோஸ்லோவாகிய துண்டான பொழுது பகுதி வாரிசுரிமை ஏற்பட்டது.

ஒரு நாடு மற்றொரு நாட்டின் வாரிசாகும் பொழுது ஏற்படும் உரிமைகளும், கடமைகளும் :

(1) உடன்படிக்கையின் வாயிலாகப் பெறப்படும் உரிமைகளுக்கும் கடமைகளுக்கும் வாரிசுரிமை (Succession to Treaty Rights and Obligations):

(அ) நிறைவேற்ற வேண்டிய உடன்படிக்கைகளில் (Treaties of executory character): ஒரு நாடு அரசியல் உடன்படிக்கையில் (Political

treaty) ஈடுபடுவதானால், அதற்கு சில உரிமைகளும் கடமைகளும் உண்டாகின்றன. அவ்வுடன்படிக்கையின் கீழான **உரிமைகளை அந்நாடு அடைய வேண்டிய நிலையில்** இருக்கும் பொழுது அல்லது **கடமைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் (executory character)** இருக்கும் பொழுது, அந்நாடு மறைந்து, அதன் ஆள்நிலம் மற்றொரு நாட்டின் கட்டுப்பாட்டிற்குள் மாறிச் சென்றுவிட்டால், அத்தகு உரிமைகளும், கடமைகளும் அவ்வாறே அதனைக் கைக் கொண்ட நாட்டிற்கு மாறிச் செல்லாது. வேறுவிதத்தில் கூறுவதானால், இறந்து போன நாடு கொண்டிருந்த உடன்படிக்கையின் வாயிலாக எழுவிருக்கும் உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் அந்நாட்டை கைக் கொண்ட வாரிசு நாடு கட்டுப்பட்டதல்ல. நாடு இறக்கும் பொழுதே, அதனுடன் அவ்வுரிமைகளும் கடமைகளும் செல்லத்தகாதவையாகி விடுகின்றன. இங்கு உடன்படிக்கையால் பெறப்படும் உரிமைகளும், கடமைகளும் முழுமையாக கைமாறுவதில்லை. ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் இணையும் பொழுது, அந்நாட்டின் குணங்கள் அழிந்து போவதாகக் கருதப்படுகின்றன. எனினும் இதற்கு பின்வரும் இரண்டு விதிவிலக்குகள் உண்டு. அவை,

(i) ஒரு நாட்டின் ஆள்நிலத்தை மற்றொரு நாடு கைப்பற்றிக் கொண்டதால், அந்த ஆள்நிலத்தின் பரப்பளவு குறைகிறது அல்லது மாற்றத்திற்கு உள்ளாகிறது. இவ்வாறு மாற்றத்திற்கு உள்ளான ஆள்நிலத்தையே நேரடியாகக் குறிக்கும் உடன்படிக்கைகள், அதுபோல் வசதியுரிமையை (right of servitude) உருவாக்கும் உடன்படிக்கைகள் ஆகியவற்றின் கீழ் எழும் உரிமைகளும் கடமைகளும், வாரிசு நாட்டிற்கு மாறிச் செல்லும்.

(ii) சுகாதாரம், போதை மருந்துகள் போன்றவை தொடர்பான பன்முனை உடன்படிக்கைகள் (multi-lateral conventions) உலகனைத்திற்கும் பொதுவாகப் பொருந்தக் கூடியவையாகும். எனவே இவ்வுடன்படிக்கைகளின் கீழான உரிமைகளும், கடமைகளும் வாரிசு நாட்டிற்கு சென்றடையும்.

(ஆ) நிறைவேறிய உடன்படிக்கைகளில் (Executed Treaties): ஏற்கனவே நிறைவேற்றியுள்ள உடன்படிக்கைகளின் வாயிலாக எழும் உரிமைகளும், கடமைகளும் மறைந்துபோன (இறந்துபட்ட) நாட்டிலிருந்து, அதனைக் கைக் கொண்ட புதிய நாட்டிற்கு மாறிச் செல்லும். **எடுத்துக்காட்டாக,** இரண்டு நாடுகள் செய்து கொண்ட உடன்படிக்கையின் கீழ் ஒரு நாடு பலன் எதையும் பெற்றிருந்து, பின்னிட்டு அந்நாடு மறைந்துவிட்டால், அதனைக் கைக் கொண்ட வாரிசு நாடு, அப்பலனையும் அடைய உரிமை படைத்தது. அவ்வாறே, பெற்ற பலனுக்குண்டான கடமையையும் அவ்வாரிசு நாடு நிறைவேற்றுதல் வேண்டும்.

(2) வாரிசுரிமையும் உள்நாட்டுச் சட்ட உரிமைகளும் (Succession and Private or Municipal Law Rights):

ஒரு நாட்டுடன் இணையும் நாட்டின் உள்நாட்டுச் சட்ட உரிமைகள், அதனை இணைத்துக் கொள்ளும் வாரிசு நாட்டிற்கு மாறும். ஆனால், அச்

சட்டங்களில், இணைத்துக் கொள்ளும் வாரிசு நாடு தனது வசதிகளுக்கேற்ப மாற்றங்கள் செய்யலாம். இதன் விளைவாக அந்நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தில் ஏற்கனவே இருந்த உரிமைகளைக் கூட இடம் மாற்றி வைக்கலாம்.

எனினும் இவ்வாறு மாற்றுவதால், அந்நாடு, நாட்டிடைச் சட்டம் விதிக்கும் கடப்பாடுகளை மீறிவிடக் கூடாது. **எடுத்துக்காட்டாக,** ஒரு நாட்டை தன்னுடன் இணைத்துக் கொள்ளும் நாடு, அந்நாட்டின் உள்நாட்டுச் சட்டங்களில் மாற்றங்கள் கொண்டு வருவதன் மூலம், அயல்நாட்டவருக்கு உரிய சொத்துக்களை, அவர்களுக்கு உரிய இழப்பீடு கொடுக்காமல், பறிமுதல் செய்வது என்பது நாட்டிடைச் சட்டத்தை மீறும் ஒரு செயலாகும்.

(3) வாரிசுரிமையும், நாட்டின் கடன்களும் (Succession and Public Debts):

(i) மறைந்து போன நாடு வாங்கியிருந்த கடனிலிருந்து பலன் எதையும், அதனைக் கைப்பற்றிய நாடு அடைந்திருப்பின், அது, அதனைத் திரும்பச் செலுத்த வேண்டிய பொறுப்புடையதாகும். அஃதாவது, ஒரு நாட்டுடன் இணையும் நாடு வாங்கிய கடன்களுக்கு அந்நாட்டை இணைத்துக் கொள்ளும் வாரிசு நாடு கட்டுப்பட்டது. அஃதாவது, நாட்டின் சீரமைப்புக்காக வாங்கப்பட்ட கடனை வாரிசு நாடு திருப்பித் தருவதே, அந்நாட்டிற்கு மரியாதை.

(ii) மறைந்து போன ஒரு நாடு வாங்கிய கடனிலிருந்து அந்நாட்டின் குறிப்பிட்டதொரு ஆள்நிலப்பகுதி பலன் எதையும் அடைந்திருப்பின், அப்பகுதியை கைப்பற்றும் வாரிசு நாடே அக்கடனுக்கும் பொறுப்புடையதாகும்.

(iii) நாட்டின் வருவாய்களின் பேரில் பெறப்பட்ட கடனுக்கு, அந்நாடு எந்த அளவிற்கு வரி செலுத்தும் சக்தியைப் பெற்றிருந்ததோ, அந்த அளவிற்கு மட்டுமே வாரிசு நாடும் பொறுப்பாகும். அதற்கு மேல் சென்று கடனை அடைக்கும் பொறுப்பு வாரிசு நாட்டிற்கில்லை.

(iv) புதிய அரசு போரிட்டு ஒரு நாட்டின் ஒரு குறிப்பிட்ட ஆள்நிலப் பரப்பை கைப்பற்றுகிறது. இங்கு இறந்துபட்ட நாடு, புதிய நாட்டுக்கு எதிராகப் போர் நடத்திய போது போர்ச் செலவுக்காக கடன் வாங்கியிருக்கலாம். இந்தக் கடன் புதிய நாட்டைக் கட்டுப்படுத்தாது. எனினும் இணையும் நாட்டினது சொத்து மதிப்பைவிட அதன் கடன் அதிகமாக இருந்தால், அதை இணைத்துக் கொள்ளும் வாரிசு நாடு கட்ட வேண்டும்.

(iv) மறைந்துபோன நாட்டின் ஆள்நிலப் பரப்பு, பல புதிய நாடுகளாகப் பிரியும் பொழுது, அம்மறைந்து போன நாடு வாங்கிய கடன்களை எந்நாடு கட்டுவது என்பது குறித்து பிரச்சனை ஏற்படுகிறது. அச்சமயத்தில், பிரிவினை உடன்படிக்கையிலேயே அக்கடனை எவ்வாறு புதிய நாடுகள் தங்களுக்குள் பிரித்துக் கொண்டு கட்ட வேண்டும் என்று வழிவகை செய்யப்பட்டிருப்பின், அதன்படி அக்கடன்களைத்

தீர்த்தல் வேண்டும். ஆனால் இத்தகு உடன்படிக்கை ஏதும் இல்லையெனில், 'பூனைக்கு யார் மணி கட்டுவது' எனும் நிலையில்தான் அப்புதிய நாடுகள் இருக்கும். எனவே அக்கடன்களை எப்படிப் பிரித்துக் கொண்டு கட்டுவது என்பதற்கு நாட்டிடைச் சட்டத்தில் இன்னமும் தீர்வு காணப்படவில்லை என்றே கூற வேண்டும்.

(4) வாரிசுரிமை மற்றும் நாட்டின் நிதியும், சொத்துக்களும் (Succession and Public Funds and Public Properties):

மறைந்துபோன நாட்டின் நிதியும், சொத்துக்களும் அந்நாட்டைக் கைப் பற்றிய நாட்டைச் சேரும் என்பது நாட்டிடைச் சட்டத்தில் முடிவான ஒரு கொள்கை யாகும்.

(5) வாரிசுரிமையும் குடியுரிமையும் (Succession and Nationality):

மறைந்து போன நாட்டில் வசிக்கும் அல்லது அதன் குடியுரிமையைப் பெற்ற குடிமகன், அந்நாட்டைக் கைப்பற்றி தன்னுடன் இணைத்துக் கொண்ட நாட்டின் குடியுரிமையைப் பெற்றவனாவான்.

(6) வாரிசுரிமையும் ஆள்நிலம் தொடர்பாக எழும் வழக்க வழி உரிமைகளும் (Succession and Customary Rights relating to Territory):

ஒரு நாட்டின் ஆள்நிலம் தொடர்பாக எழும் வழக்க வழி உரிமையொன்று, அந்நாட்டிற்குச் சார்பாக உள்ளதாக மெய்ப்பிக்கப்பட்டால், அந்த ஆள்நிலத்தைக் கைப்பற்றிய நாடும் அந்த வழக்க வழி உரிமைக்கு மரியாதை செலுத்துதல் வேண்டும்.

(அடுத்த வினாவின் விடையில் உள்ளவற்றையும் தொடர்ந்து எழுதுக.)

21. Discuss the rules of State sucession relating to contractual rights and tortious claims. (ஒப்பந்தவியல் உரிமைகள் மற்றும் தீங்கியல் கோரிக்கை தொடர்பான நாட்டு வாரிசுரிமை குறித்த விதிகளை விவாதிக்க)

(அல்லது)

Discuss how the successor State is bound by the contracts entered into by the extinct State. (இறந்துபட்ட நாடு செய்து கொண்ட ஒப்பந்தங்களுக்கு வாரிசுரிமை பெறும் நாடு எந்த அளவிற்கு கட்டுப்பட்டது என்பதை விவாதிக்க.)

(அ) ஒப்பந்தவியல் உரிமைகளும் வாரிசுரிமையும் (Contractual Rights and Succession) :

ஒப்பந்தவியல் சம்பந்தப்பட்ட உரிமைகளுக்கும் வாரிசுரிமைக்கும் இடையே பல முரண்பாடான கருத்துகள் நிலவுகின்றன. ஆனால், ஒப்பந்தவியல் சம்பந்தப்

பட்ட உரிமைகளும் கடமைகளும், வாரிசு நாட்டை அடையுமா என்பது அந்தந்த ஒப்பந்தங்களின் தன்மையை சார்ந்து அமைகிறது என அறிஞர் பெருமக்கள் கூறுகின்றனர். இது குறித்து பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

(1) அறுதியிடப்படாத இழப்பீட்டிற்கு உரிமை (Right to Unliquidated Damages): ஒப்பந்த மீறுகைக்கு அறுதியிடப்படாத இழப்பீடு வழங்குவதாக ஒப்புக் கொள்ளப்பட்ட ஒப்பந்த நிபந்தனையானது, பெரும்பாலும் வாரிசு நாட்டைக் கட்டுப்படுத்துவதில்லை. ஆனால், அவ்வொப்பந்தத்தின் வாயிலாக ஏதேனும் நலனையும் சேர்ந்து அந்நாடு பெற்றிருந்தால், மேற்படி நிபந்தனை வாரிசு நாட்டைக் கட்டுப்படுத்தும். அதன்மூலம் எழுந்த உரிமைகளும், கடமைகளும் அழியாமல் அப்படியே வாரிசு நாட்டைச் சேரும்.

(2) நிறைவுற்ற அல்லது அடைந்துவிட்ட உரிமை (Vested or Acquired Right): ஒரு ஒப்பந்தத்தின் வாயிலாக பெற வேண்டிய உரிமை முழுவதுமாக வந்தடைந்து விட்டால் அது நிறைவுற்ற உரிமையாகும் (vested right). இத்தகு நிறைவுற்ற உரிமை, வாரிசு நாட்டை அடையும். ஆனால் ஒரு ஒப்பந்தம் நிறைவேற்ற வேண்டிய ஒப்பந்தமாக (executory contract) இருந்து, அதன் மூலம், எதிர் காலத்தில் ஏதேனும் உரிமைகள் உண்டாவதற்கு வாய்ப்பு இருப்பின், அத்தகு உரிமைகள் வாரிசு நாட்டை அடையாது.

(3) வணிக ஒப்பந்தங்கள் (Business Contracts) : மறைந்து போன நாடு செய்து கொண்ட வணிக ஒப்பந்தங்களை, அந்நாட்டை தன்னுடன் இணைத்துக் கொண்ட நாடு (வாரிசு நாடு) நிறைவேற்றித்தர கடமைப்பட்டது என சட்ட அறிஞர்கள் கூறுகின்றனர்.

(4) சலுகை ஒப்பந்தங்கள் (Concessionary Contracts) : மறைந்து போன நாடு, எவ்விதத்திலும் சலுகை வழங்குவதாகக் கூறி மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து, அவ்வொப்பந்தத்தை ஏற்கனவே நிறைவேற்றத் தொடங்கி இருந்தால், அந்நாட்டை பின்னிட்டு தன்னுடன் இணைத்துக் கொண்ட நாடு அந்த ஒப்பந்தத்தை மதித்து நடக்கக் கடமைப்பட்டது; அச்சலுகைகளை ஒப்பந்தப்படி வழங்க வேண்டும்.

(ஆ) தீங்கியியல் கோரிக்கைகளும் வாரிசுரிமையும் (Tortious Claims and Succession):

மறைந்து போன நாடு இழைத்த தீங்கிற்கு, அதனைத் தன்னுடன் இணைத்துக் கொண்ட வாரிசு நாடு பொறுப்பேற்க வேண்டுமென்ற பொது விதி ஏதும் நாட்டிடைச் சட்டத்தில் கிடையாது. ஏனெனில், இழைக்கப்பட்ட தீங்குகள் மறைந்த நாடால் செய்யப்பட்டவை. அதற்கு இணைத்துக் கொண்ட நாடு பதில் கூற வேண்டிய அவசியமில்லை. வாரிசு நாட்டிற்கு, அதாவது இணைத்துக் கொண்ட

நாட்டிற்கெதிராக, தீங்கியல் தொடர்பாக அறுதியிடப்படாத இழப்பீடு கேட்டு எவ்விதக் கோரிக்கையும் எழுப்ப முடியாது. ஆனால், மறைந்த நாடு செய்த தீங்கிற்கு தீர்வழியாக ஒரு குறிப்பிட்ட தொகையைக் கொடுக்க வேண்டுமென்று ஒப்பந்தத்தின் வாயிலாகவோ அல்லது நீதிமன்றத் தீர்ப்பின் மூலமாகவோ சொல்லப்பட்டால், அந்த அறுதியிடப்பட்ட (liquidated) தொகையை வாரிசு நாடு கட்ட வேண்டும். இது குறித்து பின்வரும் முக்கிய வழக்கொன்றை கவனிப்போமா?

Robert E. Brown's Claim[1] – எனும் கோருரிமை வழக்கின் பொருண்மைகளின்படி, தென்னாப்பிரிக்க குடியரசின் ஆள்நிலத்தை பிரிட்டன் அரசு போரிட்டு கைப்பற்றிக் கொண்டது. அச்சமயத்தில் அமெரிக்க குடிமகன் ராபர்ட் பிரௌன் என்பவரின் சார்பாக அமெரிக்க அய்க்கிய நாடுகள் ஒரு கோரிக்கையை பிரிட்டன் அரசின் முன் வைத்தது. அஃதாவது, தென்னாப்பிரிக்க குடியரசை பிரிட்டன் கைப்பற்றுவதற்கு முன், மேற்படி பிரௌன் என்பவருக்கு அவ்வரசு தனது ஆள்நிலத்தில் உள்ள சுரங்கங்களிலிருந்து கனிமங்களை வெட்டி எடுத்துக் கொள்ளும் உரிமையை அளித்திருந்தது. ஆனால் பின்னிட்டு அவ்வுரிமையை பறித்துக் கொண்டது. இந்நிலையில் அவ்வரசை பிரிட்டன் கைப்பற்றிக் கொண்டது. எனவே இதற்காக அவருக்கு அறுதியிடப்படாத இழப்பீடு (unliquidated damages) வழங்கப்பட வேண்டும் என்பதே அக்கோரிக்கை. ஆனால் இக் கோரிக்கையை ஆராய்ந்த அமெரிக்க மற்றும் பிரிட்டன் இசைவுத் தீர்வு கோருரிமை தீர்ப்பாயம் (American & British Claims Arbitration Tribunal), மறைந்து போன ஒரு நாடு இழைத்த தீங்கிற்கு, அந்நாட்டை தன்னுடன் இணைத்துக் கொண்ட வாரிசு நாடு பொறுப்பாகாது என்றும், எனவே அறுதியிடப்படாத இழப்பீட்டை பிரிட்டன் மேற்படி ராபர்ட் பிரௌன் அவர்களுக்கு வழங்கப் பொறுப்புடையதல்ல என்றும் தீர்வம் (award) பகர்ந்தது.

22. To what extent is a successor State liable to meet the claims of the predecessor State arising out of (a) Public debts and (b) Claims in tort ? (முன்பிருந்த அரசின் (அ) பொதுக் கடன்கள் மற்றும் (ஆ) தீங்கியல் கோருரிமையினால் எழுகின்ற கோருரிமைகளை எந்த அளவிற்கு பின்வரும் அரசு ஏற்றுக் கொள்ள வேண்டியிருக்கும் என்பதைக் கூறுக.)

[(அ) பொதுக்கடன்கள் – இதற்கு வினா எண். 20–ல் 3–வது எண் கொண்ட பத்தியில் விடை பார்க்கவும். (ஆ) தீங்கியல் கோருரிமை – இதற்கு வினா எண். 21–ல் (ஆ) எனும் தலைப்பின் கீழ் விடை பார்க்கவும்.]

-o0o-

1. ABCAT Nov. 1923 in BYBIL (1924), pp. 220-221

12

நாட்டுப் பொறுப்பு
[State Responsibility]

23. Discuss the concept of "State responsibility" (நாட்டுப் பொறுப்பு எனும் கருத்துப்படிவத்தை விவாதிக்க.)

(அல்லது)

Analyse the concept of "State Responsibility" with reference to decided cases. ("நாட்டுப் பொறுப்பு" எனும் கருத்தை ஒரு சில வழக்குகளின் துணை கொண்டு பகுத்தாராய்க.)

(அல்லது)

State responsibility - Write short notes. (நாட்டுப் பொறுப்பு – சிறு குறிப்பு எழுதுக.)

நாட்டுப் பொறுப்பின் பொருள் (Meaning of State Responsibility):

'அரசர் தவறு செய்யார்' (King can do no wrong) என்றொரு முது மொழி உண்டு. இதன்படி ஒரு நாட்டுச் சட்டத்தின் கீழ் அந்நாட்டிற்கு எப்பொறுப்பும் எழுவதில்லை. ஆனால் இப்பொறுப்பின்மை, அந்நாட்டின் அரசாண்மை (இறைமை) அதிகாரத்தைப் பெற்றவரின் குடிகளைப் பொறுத்து மட்டுமேயாகும். ஏனெனில், ஒரு நாடு தனது விருப்பத்திற்கேற்ப தான் இயற்றிய சட்டங்களை மாற்றலாம்; அதன் வாயிலாக தனக்குள்ள பொறுப்புகளில் மாற்றங்களைக் கொண்டு வரலாம். அதுபோல் தனக்கு எப்பொறுப்பும் இல்லை என்று கூட விளம்பலாம். எனவே இவ்வாறு ஒரு நாடு தன்னை பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொள்வது அல்லது எப்பொறுப்பும் இல்லாமல் ஆக்கிக் கொள்வது, அந்நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தைப் (Municipal Law)

பொறுத்து மட்டுமேயாகும். ஆனால் நாட்டிடைச் சட்டத்தின் கீழ் ஒரு நாட்டின் பொறுப்பு முற்றிலும் மாறுபட்டதாகும். அதாவது ஒரு நாடு, மற்றொரு நாட்டைப் பொறுத்தவரை சில பொறுப்புகளையும், கடப்பாடுகளையும் கொண்டதாக உள்ளது. அவற்றிலிருந்து அந்நாடு தன்னை விடுவித்துக் கொள்ள முடியாது. அதுபோல் தனக்கு எப்பொறுப்பும் இல்லை என்று மறுக்கவும் முடியாது. இந்நிலைப்பாட்டைத்தான் அறிஞர் **ஒப்பன்** ஹெய்ம் அவர்கள், 'சர்வதேச கடமைகள் குறித்த ஒரு நாட்டின் பொறுப்பு, சட்டப் படியானதாகும். ஒரு நாடு, தனது நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தை உருவாக்குவதைப் போன்று அல்லது இரத்து செய்வதைப் போன்று, நாட்டிடைச் சட்டத்தை உருவாக்க முடியாது அல்லது இரத்து செய்யவும் முடியாது' என்றுரைக்கிறார். எனவே, இங்கு 'நாட்டுப் பொறுப்பு' என்பது ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு எதிராகக் கொண்டுள்ள பொறுப்பைக் குறிக்கிறது. அப்பொறுப்பை நாட்டிடைச் சட்டம் சுமத்துகிறது.

எடுத்துக்காட்டாக, ஒரு நாடு எடுத்த ஒரு நடவடிக்கை மற்றொரு நாட்டிற்கு கேடு எதையும் விளைத்தால் அல்லது அந்நாட்டிற்குள்ள மதிப்பை பழிக்கும் விதத்தில் அமைந்தால், அதனால் ஏற்பட்ட பாதிப்பிற்காக அந்நாட்டிடமிருந்து உரிய பரிகாரம் பெற அம்மற்றொரு நாடு உரிமை படைத்தது. அந்நாடு, அப்பரிகாரத்தை வழங்க பொறுப்புடையது. இதுவே நாட்டுப் பொறுப்பு எனப்படுகிறது.

இரு முக்கிய வழக்குகளில் கூறப்பட்ட கருத்துரைகள்:

Chorzow Factory (Indemnity) Case[1] – எனும் வழக்கில், 'ஒரு கடப்பாட்டை (பொறுப்பை) நிறைவேற்றுவதாக ஒப்புக் கொண்டதை நிறைவேற்றாமல், அதனை மீறுகை புரிதல் என்பது, நாட்டிடைச் சட்டத்தின் கீழ், இவ்வளவு ஏன் சட்டத்தின் சாதாரண கருத்தின்படி கூட, உரிய பரிகாரம் வழங்கக் கூடிய பொறுப் புக்குள்ளாக்கக் கூடியதாகும்' என்று சர்வதேச நீதிமன்றம் கருத்துரைத்தது.

Corfu Channel Case[2] – இவ்வழக்கில், கார்ஃபூ கால்வாயில், தனது எல்லையோர நீரடியில் கன்னி வெடிகள் பரப்பப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், அல்பேனிய நாடு, அவ்வழியாகச் செல்லும் வேற்று நாட்டு கப்பல்களுக்கு அதுபற்றி அறிவிக்கக் கடமைப்பட்டிருந்தும், அது எவ்வித அறிவிப்பும் தராமல் வாய்மூடி மௌனியாக இருந்தது. இதை அறியாத பிரிட்டிஷ் கடற்போர்க் கப்பல்கள் அவ் வழியாகச் சென்றபோது மேற்படி கன்னி வெடிகளால் தாக்குண்டு வெடித்துச் சிதறின. இதனால் உயிரிழப்பும், பொருள் இழப்பும் ஏற்பட்டன. அல்பேனியா நாடு தனது மேற்படி கடமையிலிருந்து தவறியதால், பிரிட்டிஷ் நாட்டிற்கேற்பட்ட இழப்பினை ஈடு (Damages) செய்ய வேண்டிய பொறுப்புக்குட்பட்டது எனவும், ஒரு நாடு அறிந்தே மற்ற நாடுகளின் உரிமைகளுக்குப் தீங்கு ஏற்படுத்தும் வகையில் நடவாதிருக்கக் கடமைப்பட்டது என்றும் இவ்வழக்கைத் தீர்மானித்த சர்வதேச நீதிமன்றம் (Intenational Court of Justice) கருத்துரைத்தது.

1. (1928) P.C.I.J. Series A.No. 17, p. 29
2. I.C.J. Reports (1949), p. 23

நாட்டுப் பொறுப்பு எழும் பல்வேறு நிலைகள்:

பின்வரும் நிலைப்பாடுகளில் நாட்டுப் பொறுப்பு எழக்கூடியது என்று கூறலாம். அவை,–

(1) சர்வதேச தீங்கிற்கு நாட்டுப் பொறுப்பு (Responsibility of State for International Delinquency).

(2) அந்நியர்களுக்கு இழைக்கப்படும் கேட்டிற்கு நாட்டுப் பொறுப்பு (State Responsibility for injury to aliens).

(3) அரசு அமைப்புகளின் செயல்களினால் ஏற்படும் நாட்டுப் பொறுப்பு (State Responsibility for acts of government organs).

(4) அயல்நாட்டவருடன் கொண்ட ஒப்பந்தங்களுக்கு நாட்டுப் பொறுப்பு (State Responsibility for contracts with foreigners).

(5) உடன்படிக்கை அல்லது ஒப்பந்தக் கடப்பாடுகளை மீறியமைக்காக நாட்டுப் பொறுப்பு (State Responsibility for breach of Treaty or Contractual Obligations).

(6) அயல்நாட்டுச் சொத்தைப் பறிமுதல் செய்தல் குறித்த நாட்டுப் பொறுப்பு (State Responsibility in respect of Expropriation of Property).

(7) பன்னாட்டு வர்த்தகக் கழகங்களின் செயல்களுக்கு பொறுப்பு (Liability for the acts of Mutinational Corporations).

(8) சுற்றுச்சூழலுக்கான நாட்டுப் பொறுப்பு (State Responsibility for Environment).

(9) கடன்கள் குறித்து நாட்டிற்குள்ள பொறுப்பு.

மேற்கண்ட நாட்டுப் பொறுப்புகளில் முக்கியமான சில வகை நாட்டுப் பொறுப்புக்களை பின்வரும் வினாக்களின் விடைகளின் வாயிலாகக் காண்போமா?

24.Explain the responsibility of States for International delinquencies. (அனைத்துலக தீங்குகளுக்காக நாடுகளுக்கு உண்டான பொறுப்பினை விளக்குக.)

(அல்லது)

International delinquencies - Write short notes. (அனைத்துலக தீங்குகள் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

ஒரு நாட்டின் சட்ட விரோதமான செய்கை ஒவ்வொன்றுக்கும் அந்நாடு நாட்டிடைச் சட்டத்தின் கீழ் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது.

ஒப்பந்த முறிவுகளினால் ஏற்படும் தீங்குகளைத் தவிர, நாட்டின் நடத்தையால் நேரும் தீங்குகளுக்கும் நாடு பொறுப்பு கொண்டுள்ளது. இவ்வகைத் தீங்குகள், ஒரு நாடு, நாட்டிடைச் சட்டத்தின் கீழ் மற்ற நாடுகளுக்கோ அல்லது அதன் குடி மக்களுக்கோ ஆற்ற வேண்டிய செயல்களைச் செய்யாது விடுவதாலோ அல்லது அதற்கு முரணாகச் செய்வதாலோ ஏற்படுவதாகும். இவை **'அனைத்துலக தீங்குகள்' (International Delinquencies)** என அழைக்கப்படுகிறது.

அனைத்துலக தீங்குகளுக்கு **எடுத்துக்காட்டாக,** ஒரு நாட்டில் நடந்த கலவரத்தில் அந்நியக் குடிமக்களுக்கு ஏற்படும் பொருள், உடல், உயிர் சேதங்கள், முறையற்ற சிறையிடல், அந்நாட்டு நீதிமன்றங்கள் முறையான தீர்ப்பு வழங்க மறுத்தல் ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

பொறுப்புடையதாக்கும் கோட்பாடு (Doctrine of Imputability) :

நாட்டிடைச் சட்டத்தில், ஒரு நாட்டில் உள்ள அயல்நாட்டுக் குடிமக்களின் வாழ்விற்கும் சொத்திற்கும் சில உரிமைகள் உண்டு. இதனையொட்டி ஒரு கோட்பாடு நடைமுறையில் உள்ளது. அது **'பொறுப்புடையதாக்கும் கோட்பாடு' (Doctrine of Imputability)** எனப்படுகிறது. இக்கோட்பாட்டை பின்வரும் ஒரு **எடுத்துக்காட்டின்** வாயிலாகக் காணலாம்.

அஃதாவது, 'ஏ' என்ற நாடு 'சி' என்ற நாட்டைச் சார்ந்த குடிமக்களுக்கு நாட்டிடைச் சட்டத்தை மீறும் வகையில் ஏதேனும் தீங்கிழைத்து விடுமானால் அதன் காரணமாக 'ஏ' என்ற நாடு 'சி' என்ற நாட்டிற்குப் பொறுப்புடையதாகிறது. இவ்வகையில் மேற்கூறிய 'ஏ' என்ற நாட்டை சார்ந்த பணியாளர்களோ, அதிகாரிகளோ அல்லது அமைப்புகளோ 'சி' என்ற நாட்டு குடிமகனுக்கிழைத்த தீங்கிற்கு அந்த நாட்டையே பொறுப்புக்குள்ளாக்குவதால் இதனை 'பொறுப்புடைய தாக்கும் கோட்பாடு' என்று அழைக்கிறோம்.

தீங்கிழைத்த நாடு, அத்தீங்கை இழைத்த தனது அதிகாரிகளோ, அமைப்போ உள்நாட்டுச் சட்டத்திற்குப் புறம்பாகவோ, அவர்களது எல்லை மீறியோ நடந்திருந் தாலும் அச்செயலின் விளைவிற்குப் பொறுப்பேற்கக் கடமைப்பட்டது. இவ்வாறு ஒரு நாட்டின் அதிகாரியோ அல்லது அமைப்புகளோ இழைத்த தீங்கினை அந்நாடே இழைத்ததெனக் கருதி அதனைப் பொறுப்புடையதாக்கும் இக்கோட்பாடு, இரு நிபந்தனைகளுக்குட்பட்டது. அவை,–

1. அந்நாட்டு அதிகாரியோ, அமைப்போ இழைத்தாகக் கூறப்படும் தீங்கு நாட்டிடைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள கடப்பாடுகளை மீறியதாக இருக்க வேண்டும்.

2. நாட்டிடைச் சட்டத்தில், அவ்வகைத் தீங்குகள் ஒரு நாடால் இழைக்கப் பட்டதெனக் கருதத்தக்க வகையில் இருக்க வேண்டும்.

ஒரு நாட்டினைப் பொறுப்புடையதாக்க தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயங்கள் :

ஒரு நாட்டினை அதன் தீங்குகளுக்காகப் பொறுப்புடையதாக்க முதலில் சில விஷயங்கள் தீர்மானிக்கப்பட வேண்டும். முதலாவதாக, பிரச்சனைக்குரிய செயலொன்றைப் புரிந்த ஒரு நாட்டின் அதிகாரிக்கு அல்லது அமைப்பிற்கு அந்நாட்டின் உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் அச்செயலைப் புரிய பொதுவான அதிகாரம் வழங்கப்பட்டிருந்ததா, இல்லையா என்பது தீர்மானிக்கப்பட வேண்டும் (Official acts under General Authority of Municipal Law.)

2. இரண்டாவதாக, அவ்வாறு அந்த அதிகாரிக்கு அல்லது அமைப்பிற்கு பொது அதிகாரம் வழங்கப்பட்டிருப்பின், பிரச்சனைக்குரிய அத்தீங்கினை நாடே இழைத்ததெனக் கூறி அதனை பொறுப்புடையதாக்க நாட்டிடைச் சட்டத்தில் இடமுண்டா, என்பதையும் தீர்மானிக்க வேண்டும். இங்கு அந்த அதிகாரி அல்லது அமைப்பு தங்களுக்கு உள்நாட்டுச் சட்டத்தால் வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறிச் செயல்பட்டுள்ளார்களா என்பதை கவனிக்க வேண்டிய அவசியமில்லை.

அந்த வகையில், ஒரு அதிகாரி உள்நாட்டுச் சட்டத்தின்படி ஒரு செயலைப் புரிய அதிகாரம் பெற்றிருந்து, அதற்குப் புறம்பாக நடந்து தீங்கு விளைவித்திருந்தாலும், அத்தீங்கினை பொதுவாக அந்நாடே இழைத்ததெனக் கருதி, அதனைப் பொறுப்புக்குள்ளாக்க வேண்டுமென பின்வருமொரு வழக்கு கூறுகிறது.

Youman's Case[1] – மெக்ஸிகோ நாட்டில் ஒரு நகரத்தில் ஏற்பட்ட கலவரத்தில் அமெரிக்க நாட்டைச் சார்ந்த குடிமக்கள் தாக்கப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு அந்நகரத் தந்தை (Mayor) இராணுவ அதிகாரியொருவரை அழைத்துக் கலவரத்தை அடக்குவதற்காக ஆணையிட்டனுப்பினார். அவரது தலைமையில் அங்கு சென்ற இராணுவக் குழு கலவரக்காரர்களைக் கலைப்பதற்கு பதிலாக, அவ்வமெரிக்க மக்கள் ஒளிந்து கொண்டிருந்த இல்லத்தின் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதின் பேரில் ஒருவர் கொல்லப்பட்டார். மேலும் இருவரை அவ்வீட்டை விட்டு வெளியேறுமாறு வற்புறுத்தி வெளியேற்றும்போது, அவர்கள் இராணுவத்தாலும், கலவரக்காரர்களாலும் கொல்லப்பட்டனர். இச்செயல் மூலம் இராணுவக் குழு, தங்களுக்கிடப்பட்ட ஆணைக்கு முற்றிலும் புறம்பாக, அதாவது தங்களுக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை மீறி நடந்துள்ளனர். எனினும், அந்த இராணுவக்கு குழு இழைத்த தீங்கான செயல், மெக்ஸிகோ நாட்டால் இழைக்கப் பட்ட தீங்கான செயலாகவே கருத வேண்டும் என்றும், அதற்கு மெக்ஸிகோ நாடு பொறுப்புடையதே என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

3. ஆனால் அவ்வாறு தீங்கினைப் புரிந்த அதிகாரியோ அல்லது அமைப்போ உள்நாட்டுச் சட்டத்தின் கீழ் அவ்வாறு செயல்பட இயலாதவர்களாயின்

1. Annual Digest of Public International Law Cases, 1925-26, p. 223

அத்தகு செயல்கட்கு நாடே பொறுப்பு எனக் கருதுதல் இயலாது (Official act without Authority).

4. ஒரு நாட்டின் அதிகாரியோ அல்லது அமைப்போ அல்லாமல் அந்நாட்டின் குடிமக்கள் அயல்நாட்டுக் குடிமக்களுக்குத் தீங்கிழைத்தால் அதற்கு அந்நாட்டைப் பொறுப்பாளியாக்க முடியாது. ஆனால் அந்நாடு தன் மக்களை அவ்விதத் தீங்குகள் புரியாத வண்ணம் தடுப்பதற்குண்டான எல்லா முயற்சிகளையும் எடுப்பதும், குற்றம் புரிந்தவர்களைத் தீவிரமாகத் தண்டிப்பதும் அவசியம். அந்நாடு இச்செயல்களில் தவறுமானால் இங்கும் கூட பொறுப்பாளியாக்கப்படும். (Delinquencies committed by private citizens).

முடிவுரை :

இவ்வகை நாட்டுப் பொறுப்பு உள்நாட்டுக் கலவரங்களால் ஏற்படுவதுண்டு. உள்நாட்டுக் கலவரங்களின்போது அயலார் பொருள்களுக்குச் சேதம் ஏற்படுதல் கூடும். இத்தருணங்களில் அந்நாடு அயலார் சொத்துக்களை கவவரத்தினரிடமிருந்து காப்பாற்ற நல்லெண்ணத்துடன் தன்னதிகாரத்திற்குட்பட்டு எல்லா முயற்சிகளும் எடுத்திருந்தால் அவ்விழப்புகளுக்கு அது பொறுப்பாளியாகாது. அவ்விதமின்றி காப்பதற்கு எவ்வித முயற்சியும் எடுக்கவில்லையென்றால், அந்நாடு பொறுப்பாளியாகக் கருதப்படும்.

25. (a) When is an expropritation of foreign property valid under international law ?

(b) Write a note on the Calvo Clause.

(அ) நாட்டிடைச் சட்டத்தின் கீழ் எப்பொழுது அந்நிய சொத்துகளைப் பறிமுதல் செய்தல் நியாயமாகக் கருதப்படும்?

(ஆ) கால்வோ பிரிவைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.

(அ) அந்நிய சொத்துகளைப் பறிமுதல் செய்தல் எப்பொழுது நியாயமாகிறது?

சமீப காலமாக ஒவ்வொரு நாடும் பொது நன்மையைக் கருதி, மக்களின் மேம்பாட்டிற்காக தனியார் தொழில்களையும், சொத்துக்களையும் நாட்டுடைமையாக்கி வருகிறது. இது பொதுவாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு நாட்டு நடப்பாகும். எனினும் அவ்வாறு நாட்டுடைமையாக்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்பட்ட, அதாவது பறிமுதல் செய்யப்பட்ட (கையகப்படுத்தப்பட்ட) (Acquired) சொத்தானது, அயல்நாட்டுக் குடிமக்களுடையதாக இருக்குமானால், பொது நன்மைக்காகவும், அந்நிய சொத்து எனும் வகையில் வேற்றுமை காட்டாமலும் (Non-discriminatory) அவற்றினை எடுத்துக் கொள்வதில் எவ்வித ஒழுங்கீனமும் இல்லாமலிருந்தால்தான், அது சட்டப்படி செல்லுபடியாகும்.

மேலும் அவ்வாறு எடுத்துக்கொள்ளப்பட்ட சொத்திற்கு நியாயமான (Just) மற்றும் போதுமான (Sufficient) மற்றும் ஆக்கப்பூர்வமான இழப்பீடு (effective compensation) வழங்கப்படுதல் வேண்டும். இவ்வாறில்லாமல் அந்நிய சொத்துக்கள் எடுத்துக் கொள்ளப்பட்டால், அது ஒரு சர்வதேசப் பிரச்சனையை உருவாக்கும் என அறிஞர் பெருமக்கள் சிலர் கூறுகின்றனர்.

ஆனால், வேறு சில அறிஞர்கள், பொது நன்மையைக் கருதி நாட்டுடைமை யாக்கும் பொருட்டு எடுத்துக் கொள்ளப்படும் அந்நிய சொத்துக்கு இழப்பீடு மட்டும் வழங்கினால் போதுமென்றும், அது மேற்கூறியபடி, நியாயமானதாகவோ, போது மானதாகவோ, ஆக்கப்பூர்வமானதாகவோ இருக்க வேண்டிய அவசியமில்லையென்றும், இதைக் காரணமாகக் காண்பித்து எடுத்துக் கொள்ளப்பட்ட சொத்தின் மீது நாட்டிற் குண்டான உரிமையை இழக்கும்படிச் செய்யவோ அல்லது சர்வதேசப் பிரச்சனையை உருவாக்கவோ முடியாது, என மாறுபட்ட ஒரு கருத்தினைக் கூறுகின்றனர்.

(ஆ) கால்வோ விதி (Calvo clause):

'கால்வோ' என்ற அர்ஜென்டைனா நாட்டு சட்ட வல்லுநர் இவ்விதியை தோற்றுவித்தவர். எனவே அவரது பெயராலேயே இவ்விதி அழைக்கப்படுகிறது.

இவ்விதியின்படி ஒரு நாட்டு குடிமகன் மற்ற நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொள்வதிலோ அல்லது வேறு நாட்டில் தொழிலமைப்புகள் ஏற்படுத்துவதிலோ, ஏதேனும் சிக்கல்கள் பிற்காலத்தில் ஏற்பட்டால், தன் நாட்டு உதவியையோ அல்லது சர்வதேச இசைவுத் தீர்ப்பாயங்களையோ (International Arbitral Tribunals) நாடாமல், தான் எந்த நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொள்கிறாரோ அந்நாட்டு நீதிமன்றங்களின் தீர்ப்புக்கும், அந்நாட்டுச் சட்ட அடிப்படையில் உண்டான ஈட்டினை பெறவும் ஒப்புதல் தெரிவித்துச் செய்து கொள்ளும் ஒப்பந்த நிபந்தனையே **'கால்வோ விதி'** எனப்படுகிறது.

இதன்மூலம் வேற்று நாட்டுடன் ஒப்பந்தம் செய்து கொள்ளும் மற்றொரு நாட்டின் குடிமகன் தன்னைக் காப்பாற்ற தன்னாட்டிற்கிருக்கும் உரிமையை இழந்து விடச் சம்மதிக்கிறான். இவ்வாறான ஒப்பந்தங்கள் சரியானவை என்று சில இசைவுத் தீர்ப்பாயங்களும், செல்லாதவை என்று வேறு சிலவும் மாறுபட்ட கருத்துக்களைத் கூறியுள்ளன. இது தொடர்பாக பின்வரும் வழக்குகளைக் காண்போம்.

North Amercian Dredging Company Case[1] – இவ்வழக்கில், மெக்ஸிகோ நாட்டுடன் வாணிபத் தொடர்பு கொண்ட நிறுவனம், அமெரிக்க நாட்டைச் சார்ந்தது. அது மெக்ஸிகோ நாட்டுடன் செய்து கொண்ட வாணிப ஒப்பந்தத்தில் 'கால்வோ விதி'–க்கு ஒப்புதல் அளித்திருந்தது. பின்னிட்டு ஏற்பட்ட பிரச்சனையொன்றின் காரணமாக, அந்நிறுவனம் தன்னாடான அமெரிக்கா நாட்டுச் சட்டத்தின்படி ஈடு கோரி முறையிட்டது. ஆனால் வழக்கை ஆராய்ந்த,

1. Annual Digest of Public International Law Cases, 1925-26, p. 218

அமெரிக்க அய்க்கிய நாடுகள் மற்றும் மெக்ஸிகோவிற்கு இடையிலான பொது கோருரிமைக் குழு (United States - Mexico General Claims Council), மேற்கண்ட கால்வோ விதியின் அடிப்படையில் ஏற்படும் ஒப்பந்தங்கள் செல்லக் கூடியவையே என்று ஏற்றுக் கொண்டு, ஈடு கோரும் அமெரிக்க நிறுவனம், ஏற்கனவே கால்வோ விதியின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால், மெக்ஸிகோ நாட்டுச் சட்டப்படியும், அந்நாட்டு நீதிமன்றங்களின் மூலமும்தான் ஈட்டுத் தொகைக்கான முறையீட்டைச் செய்து கொள்ள வேண்டும் என்றும், அமெரிக்க நாட்டுச் சட்டத்தின்படி முறையிட முடியாது என்றும் தீர்வம் பகர்ந்தது. எனினும் பின்வரும் வழக்கொன்றில் ஒரு மாறுபட்ட தீர்ப்பு வழங்கப்பட்டது.

El Oro Mining and Railway Company Ltd.[1] – மேற்படி நிறுவனம் பிரிட்டிஷ் நாட்டைச் சார்ந்தது. அது மெக்ஸிகோ நாட்டுடன் கால்வோ விதியினடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டு பின்னர் ஈட்டுத் தொகைக்காக அவ்வொப்பந்தப்படி மெக்ஸிகோ நாட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தது. ஆனால் மேற்படி வழக்கு ஒன்பது ஆண்டுகளுக்கும் மேலாக விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படாததால், பாதிக்கப்பட்ட நிறுவனம் கால்வோ விதிக்குப் புறம்பாகத் தன்னாட்டுத் துணையையும், நாட்டிடைச் சட்டத்தின் கீழான தீர் வழிகளையும் பெற முயன்றது. அச்சமயத்தில் மெக்ஸிகோ நாடானது, மேற்படி பிரிட்டிஷ் நிறுவனம் கால்வோ விதியின் அடிப்படையில் ஒப்பந்தம் செய்து கொண்டிருப்பதால், தன்னாட்டு சட்டத்தின் வழியாகத்தான் ஈடு பெற முடியும் என எதிர்வாதம் புரிந்தது. ஆனால், ஏற்கனவே வழக்குத் தொடங்கப்பட்டு, ஒன்பது ஆண்டுகள் கால தாமதாமான காரணத்தினால், மெக்ஸிகோ நாட்டின் எதிர்வாதம் நிராகரிக்கப்பட்டு, அதன் கோரிக்கையை மேற்படி பொது கோருரிமைக் குழு (General Claims Council) தள்ளுபடி செய்தது.

26. Explain the responsibility of a State for breach of treaty
(உடன்படிக்கையை மீறியதற்காக ஒரு நாட்டின் பொறுப்பினை விளக்குக.)

(அல்லது)

I am alone - Write short notes (ஐம் அலோன் – சிறு குறிப்பு எழுதுக.)

உடன்படிக்கை மீறலுக்கான நாட்டின் பொறுப்பு:

நாடுகள் தங்களுக்குள் பல்வேறு உடன்படிக்கைகளில் ஈடுபடுகின்றன. அவற்றின் சரத்துக்களை ஒரு நாடு மீறுகை புரிந்தால், அதனால் பாதிக்கப்பட்ட நாட்டிற்கு இழப்பீடு கொடுக்க மீறுகை புரிந்த நாடு பொறுப்புடையது. எனினும் நாட்டின் ஒரு செயலால் மற்றொரு நாட்டின் தனிநபர் ஒருவருக்கு ஏற்படும் பாதிப்பு அல்லது கேடு என்பது, அம்மற்றொரு நாட்டிற்கு ஏற்படும் பாதிப்பு அல்லது கேட்டிலிருந்து வேறுபட்டதாகும். இவ்விரண்டையும் ஒரே நிலையில் வைத்துப்

1. Annual Digest of Public International Law Cases, 1931-32, p. 100

பார்க்க முடியாது. இந்நிலைப்பாடு பின்வரும் ஒரு முக்கிய வழக்கொன்றில் விளக்கப்பட்டுள்ளது.

முக்கிய வழக்கு:

I'm Alone[1] – இவ்வழக்கில் 'ஐ அம் அலோன்' எனும் பெயருடைய கப்பல் பிரிட்டன் நாட்டைச் சார்ந்தது. கனடாவில் பதிவு செய்யப் பெற்றது. அது 1929–ஆம் ஆண்டில் அமெரிக்க அய்க்கிய நாடுகளில் கடற்பரப்பில் மதுபானங்களை கடத்துதலில் ஈடுபட்டது. 1928–ஆம் ஆண்டில் அமெரிக்க அய்க்கிய நாடுகளுக்கும் பிரிட்டனுக்கும் இடையே 'மதுபான உடன்படிக்கை' (Liquor Treaty) ஒன்று ஏற்பட்டிருந்தது. இந்த உடன்படிக்கையை பிரிட்டன் கப்பல் மேற்கண்டவாறு மீறியதால், அமெரிக்க கடலோர காவற் படையினர் அக்கப்பலை துரத்திச் சென்றனர். ஆனால், அமெரிக்காவின் கடலோர எல்லையிலிருந்து 200 மைல்களுக்கும் மேலாக அவ்வாறு துரத்திச் சென்று, அக்கப்பலை சுட்டு வீழ்த்தி கடலில் மூழ்கடித்தனர். அக்கப்பல் கனடாவில் பதிவு செய்யப்பட்டிருந்ததால், கனடா நாடு இழப்பீடு கோரி சர்வதேச தீர்ப்பாயத்தில் முறையிட்டது. இதனை ஆராய்ந்த தீர்ப்பாயம், அக்கப்பல் மதுபானங்களைக் கடத்துவதற்காக அமெரிக்க குடிமக்கள் சிலரால் பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும், எனவே அக்கப்பலை அல்லது அதிலிருந்த சரக்குகளை அவர்கள் இழந்ததற்காக அமெரிக்க நாடு இழப்பீடு ஏதும் கொடுக்கக் கடமைப்பட்டதல்ல என்றும் கூறியது. அதாவது தனிநபர்களுக்கு மற்றொரு நாடு விளைவித்த பாதிப்பிற்கு, அது பொறுப்பல்ல. ஏனெனில், அத்தனிநபர்கள் உடன் படிக்கைக்கு முரணாக மதுபானங்களைக் கடத்தியதே குற்றம் என்று கூறியது. ஆனால், அமெரிக்க நாடு, தனது கடலோர எல்லையைத் தாண்டிச் சென்று, அக்கப்பலை சுட்டு வீழ்த்தி முழ்கடித்தது மேற்படி மதுபான உடன்படிக்கையை மீறிய செயலாகும். எனவே, அக்கப்பலின் பதிவைப் பெற்றுள்ள கனடா நாட்டிற்கு 25000 பவுண்டு பணத்தை இழப்பீடாகக் கொடுக்க அமெரிக்கா பொறுப்புடையது என்று தீர்ப்புரைத்தது.

27. Drago Doctine - Write Short Notes. (ட்ரோகோ கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Discuss the responsibility of States regarding debts. (கடன்கள் குறித்து நாட்டிற்குள்ள பொறுப்பை விவாதிக்க.)

கடன்கள் குறித்து நாட்டிற்குள்ள பொறுப்பு:

கடன்களை ஒட்டிய பொறுப்பு பல வகைகளில் எழக்கூடும். (எ.கா.) ஒரு நாடு மற்ற நாட்டிடம் பெற்ற கடனை அடைக்கத் தவறுதல் அல்லது ஒரு நாடு மற்ற

1. P.C.I.J. (1928), Series A. No. 17(1) W.C.R. 646

நாட்டுடன் இணையும்போது, இணையும் நாடு பட்டுள்ள கடன்களை அடைப்பதில் எழும் சிக்கல் ஆகியவற்றை குறிப்பிடலாம். இதையொட்டி மூன்று கோட்பாடுகள் உண்டு. அவற்றில் முக்கியமானது **ட்ரோகோ கோட்பாடு** ஆகும். எனினும் அம்மூன்று கோட்பாடுகளையும் பின்வருமாறு காண்போம்.

1. நீதிப்பெருமகனார் பாமெர்ஸ்டன் கோட்பாடு (Lord Palmerston's Theory) :

1848–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட இக்கோட்பாட்டின்படி, கடன் கொடுத்த நாடு, கடன்பட்ட நாட்டுடன் தூது முறைகளைப் பயன்படுத்திக் கடன் தொகையை பெற முயலலாம். அம்முயற்சி பலனளிக்கவில்லையென்றாலும், தேவை ஏற்பட்டாலும் இராணுவத் தலையீடு செய்தும் கடன் தொகையைப் பெறலாம்.

2. ட்ராகோ கோட்பாடு (Drago Doctine) :

இக்கோட்பாடு முதன்முதலில் 1902–ஆம் ஆண்டில் அர்ஜென்டைனாவின் வெளியுறவு அமைச்சர் ட்ராகோ என்பவரால் எடுத்தாளப்பட்டதால், அவர் பெயர் கொண்டு வழங்கப்படுகிறது. இக்கோட்பாட்டின்படி, கடன் கொடுத்த நாடுகள், கடன்பட்ட நாட்டின் மீது இராணுவ முயற்சிகள் மேற்கொள்ளாமலிருக்கக் கடமைப் பட்டவைகள் ஆகும். இக்கோட்பாடு மன்றோ கோட்பாட்டின் தொடர்பிணைக் (Corollary) கொள்கையாகும். இக்கோட்பாடு மத்திய மற்றும் தென் அமெரிக்க நாடுகளிடையே பெரிதும் வலிவு பெற்று வழங்கப்பட்டது. இதன்படி கடன் கொடுத்த நாடு, எக்காரணமாகவும் கடன்பட்ட நாட்டின் மீது ஆயுதத் தலையீடு நடத்துதல் முடியாது. இக்கொள்கை இராணுவத் தலையீட்டைத்தான் எதிர்க்கிறதே தவிர, தூது முறையில் கடன் வசூலிப்பதை எதிர்க்கவில்லை. 1907–ஆம் ஆண்டின் ஹேக் மாநாட்டில் இது ஓரளவிற்கு ஏற்றுக் கொள்ளப்பட்டது. அதாவது கடன்பட்ட நாடு இசைவுக் குழு தீர்ப்பிற்கு சம்மதிக்கவில்லையென்றாலொழிய, ஆயுதத் தலையீடு தவிர்க்கப்படுதல் வேண்டும் என ஏற்றுக் கொள்ளப்பட்டது.

3. பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படும் கோட்பாடு (The Most Generally Accepted Theory):

மேற்கண்ட இரு கோட்பாடுகளைத் தவிர, பெரும்பாலான நாடுகளால் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்டு வரும் மற்றொரு கோட்பாடும் இங்குண்டு. அதன்படி, கடன் கொடுத்த நாட்டிற்குள்ள உரிமைகள், நாட்டிடைச் சட்டத்தின் கீழ் செய்து கொள்ளப்படும் உடன்படிக்கைகளின் கீழ் எழும் உரிமைகளைப் போன்றவையே. அத்தகைய உரிமைகளைச் செயற்படுத்த என்ன விதிகள் உள்ளனவோ, அவற்றையே கடன் கொடுத்த நாட்டிற்குள்ள உரிமைகளைச் செயற்படுத்தவும் பயன்படுத்துதல் வேண்டும் என்பதே இக்கோட்பாடாகும். எனவே கடன் ஒப்பந்தத்தை ஒரு சிறப்பு வகையான ஒப்பந்தமாகக் கருதுதல் கூடாது.

13

தலையீடு (அல்லது) இடையீடு [Invervetion]

28. "The duty not to intervene in the internal and external affairs of another state is a recognised principle of International Law" - Comment. ("ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் விவகாரம் மற்றும் வெளி விவகாரங்களில் தலையிடுதல் கூடாது என்பது நாட்டிடைச் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கடமையாகும்" – மதிப்புரை தருக.)

(அல்லது)

What is intervention? Discuss it with reference to different kinds of intervention. (இடையீடு என்றால் என்ன? பல வகை இடையீடுகளை கருத்திற் கொண்டு விவாதிக்கவும்.)

(அல்லது)

Why do you understand by "intervention"? State briefly the just grounds for intervention. ("தலையீடு" என்பதால் நீர் அறிவது என்ன? தலையீடு செய்வதற்கான நியாயமான காரணங்களை சுருக்கமாக கூறுக.)

(அல்லது)

What is meant by Intervention? Explain the different types of Intervention and the circumstances in which it is permitted in International Law? (தலையீடு என்றால் என்ன? தலையீட்டின் பல்வேறு வகைகளையும், நாட்டிடைச் சட்டத்தில் எச்சூழ்நிலைகளில் தலையீடு செய்தல் அனுமதிக்கப்பட்டுள்ளது என்பதையும் விளக்குக.)

(அல்லது)

Define intervention. What are the exceptional cases in which

State has a legitimate right of intervention at International Law. (இடையீடு என்றால் என்ன? நாட்டிடைச் சட்டத்தில் எந்தெந்த விதிவிலக்கான சூழ்நிலைகளில் தலையிடுவதற்குரிய சட்டப்படியான உரிமையை ஓர் அரசு பெற்றிருக்கிறது ?)

(அல்லது)

Define 'intervention'. Explain the various kinds of intervention. When does a state has legitimate right of intervention? (தலையீட்டை வரையறு. தலையீட்டின் பல்வேறு வகைகளை விளக்குக. எப்போது ஒரு நாட்டிற்கு சட்டப்படியாக தலையீடு செய்வதற்கு உரிமையுள்ளது?)

(அல்லது)

International Law prohibits intervention. Critically examine the statement. (பன்னாட்டு சட்டம் தலையிடுதலை தடை செய்கிறது. சீராய்க.)

(அல்லது)

Intervention - Write short notes. (தலையீடு - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

State the extent and scope of the right of self preservation of State with reference to instances in the practice of States. (நாட்டின் தற்காப்புரிமையின் அளவு மற்றும் அளாவுகையை நாடுகளுடைய நடைமுறைகளிலிருந்து மேற்கோள்கள் காட்டி விளக்குக.)

(அல்லது)

Self-preservation - Write short notes. (தற்பேணுதல் - சிறு குறிப்பு வரைக.)

தலையீடு - விளக்கம் :

பொதுவாக 'தலையீடு' என்றால் ஆதிக்க மனப்பான்மையோடு செய்யும் இடையீடுகளையே (Dictatorial interference) குறிக்கும். ஒரு நாட்டின் உள் மற்றும் வெளி விவகாரங்களில் மற்றொரு நாடு தனது படைகளைக் கொண்டு அல்லது வேறு வழிகளில் தலையிடுவது நாட்டிடைச் சட்ட விதிகளுக்குப் புறம்பானது. இத்தலையீடு, தலையிடப்படுகின்ற நாட்டின் தனி மேலாண்மைத் தன்மையை (supremacy) பாதிக்கத்தக்கது.

எது தலையீடு ஆகாது ?

ஒரு நாட்டின் விவகாரத்தில் மற்ற நாடு இடையீடுவதாலேயே அதனைத்

தலையீடு என்று கூறிவிட இயலாது. சில சமயம் இரு நாடுகளிடையே பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் குறிக்கோளுடன் (extending co-operation to reconcile) மற்றொரு நாடு தம் ஒத்துழைப்பை நல்கக் கூடும். இச்செயல்கள் தலையீடு ஆகா. **உதாரணமாக,**

(அ) 1826–ஆம் ஆண்டில் போர்ச்சுகலின் வேண்டுகோளின் பேரில் பிரிட்டன் தனது படைகளை டான் மைகேல் என்பார் தலைமையின் கீழ் அனுப்பியதும்,

(ஆ) 1849–ஆம் ஆண்டில் ஆஸ்டிரியாவின் வேண்டுகோளுக்கிணங்க இரஷ்யா, ஹங்கேரிப் புரட்சியை அடக்க ஹங்கேரி நாட்டுக்குத் தன் படையை அனுப்பியதும் தலையீடாகாது.

தலையீடு - வகைகள் :

தலையீட்டினை இருபெரும் வகையாகப் பிரிக்கலாம். 1. உரிமை பெற்ற தலையீடு, 2. உரிமையற்ற தலையீடு. ஒரு நாட்டின் விவகாரங்களில் மற்ற நாடு தலையிடுதல் தவிர்க்கப்படுதல் வேண்டும் என்பது நாட்டிடை விதி. எனினும், இதற்கும் ஒரு விதிவிலக்கு உண்டு. அது மேற்கண்ட இரு பெரும் வகைகளில் ஒன்றான உரிமை பெற்ற தலையீடு (Intervention by Right) என்பதேயாகும்.

உரிமை பெற்ற தலையீடு (Intervention by Right) :

தலையீடென்பது எப்பொழுதும், ஒரு நாட்டின் புறத் தன்னியக்கத்தையோ (external independence), அந்நாட்டெல்லையின் தனி மேலாண்மைத் தன்மையையோ (supremacy) பாதிக்கவல்லது. ஆனால் தலையீடு, உரிமையின் அடிப்படையில் இருக்குமானால், தலையிடப்படுகின்ற நாட்டின் புறத் தன்னியக்கமோ, அந்நாட்டு எல்லைகளின் தனி மேலாண்மைத் தன்மைக்கோ குந்தகம் ஏற்பட்டதாகக் கொள்ளுதல் கூடாது. ஏனென்றால் உரிமையுடன் கூடிய தலையீட்டில், தலையிடப்படுகின்ற நாடு ஏதோ காரணங்களுக்காக வேற்று நாட்டின் தலையீட்டிற்கு தன்னை உட்படுத்திக் கொள்ள கடமைப்பட்டது. ஒரு நாடு பின்வரும் ஏழு காரணங்களுக்காக உரிமையுடன் கூடிய தலையீடு செய்யலாம். அவைகளாவன.

1. தன் பாதுகாப்பின் கீழ் ஆட்சி புரியும் (Protectorate) நாட்டின் உள் விவரங்களில் தலையிட மேலாட்சி நாட்டிற்கு உரிமையுண்டு.

2. ஒரு நாட்டின் வெளி விவகாரம், மற்றொரு நாட்டையும் அதில் ஈடுபடுத்த வல்லதாயின், அத்தகு நாடு முதல் நாட்டின் விவகாரங்களில் தலையிட உரிமையுண்டு.

3. எந்நாடேனும் தன் வெளிவிவகாரத் தன்னியக்கத்தையோ (external independence), தனி மேலாண்மைத் தன்மையையோ (personal supremacy) வரையறுத்து, மற்ற நாடுகளுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட பின் அவ்வரையறையை

மீறிச் செயல்படுமாயின், ஒப்பந்தம் செய்து கொண்டதும், அம்மீறுதலால் பாதிக்கப் பட்டதுமான நாடு மீறிய நாட்டின் விவகாரங்களில் தலையிடும் உரிமை பெற்றது.

உதாரணமாக,

(அ) ஹவானா ஒப்பந்தத்தின் 3–வது சரத்தின்படி (Article 3 of Treaty of Havana), அமெரிக்க அய்க்கிய நாடுகள், கியூபாவில் (Cuba) ஒழுங்கை நிலை நாட்டும் பொருட்டு, 1903–ஆம் ஆண்டில் அந்நாட்டு விவகாரங்களில் தலையிட்டது.

(ஆ) கிரீஸ் நாட்டுக் காப்பாளர்களான இரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் 1916–17–ஆம் ஆண்டுகளில் கிரீஸ் நாட்டில் சட்ட முறை அரசை (Constitutional Government) நிலைநிறுத்தும் பொருட்டு, அலெக்சாண்டர் என்பாரை ஹெலெனெஸ் (Halleness) மன்னராக நியமித்தன.

4. உலக நாடுகளில் ஏற்கப்பட்டு வழங்கிவரும் நாட்டிடை சட்ட விதியினை அமைதிக் காலத்திலோ, போர்க் காலத்திலோ எந்நாடேனும் மீறுமானால், அந்நாட்டின் விவகாரங்களில் தலையிட்டு அந்நாட்டைச் சட்ட விதிகளின்படி நடக்கச் செய்ய மற்ற நாடுகளுக்கு உரிமையுண்டு.

5. எந்நாடேனும் மற்ற நாடுகளுடன், தன்னாடு ஒரு குறிப்பிட்ட அரசியலமைப்பாலோ, அரச வம்சத்தாலோ ஆளப்படும் என உறுதி ஒப்பந்தம் செய்து கொண்டு, அவ்வுறுதியினின்றும் வழுவுமாயின் உறுதி பெற்ற நாடு தலையிட்டு வாக்குறுதியை நிலை பெறச் செய்யும் உரிமை பெற்றது.

6. ஒரு நாடு வேற்று நாட்டிலுள்ள தன் குடிகளின் நன்மையைக் கருதி, அந்நாட்டு விவகாரங்களில் தலையிடும் உரிமை பெற்றது.

7. சர்வதேச சங்கத்தின் சாசனமும் (Covenant of the Leaque of Nations), அய்க்கிய நாடுகள் அமைப்பின் சாசனமும் (U.N. Charter) உலக அமைதியைக் குலைக்கும் செயலில் ஈடுபடும் நாட்டின் மீது உலக நாடுகள் கூட்டுத் தலையீடு நடத்தி, தேவைப்பட்டால் போர் மேற்கொண்டேனும் அந்நாட்டை அமைதி வழிக்குக் கொண்டு வரும் உரிமையை வழங்குகின்றன.

வேறு காரணங்கள் :

பின்வரும் வேறு காரணங்களுக்காகவும் தலையீடு செய்யலாம். இவை நாட்டிடைச் சட்டத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளது.

(1) தற்பேணுதல் (Self Preservation):-

ஒரு நாடு தன்னைக் காத்துக்கொள்ளும் பொருட்டு, வேற்று நாட்டின் விவகாரங்களில் தலையிட்டால், அது நாட்டிடைச் சட்டத்தில் குற்றமாகக் கருதப் படுவதில்லை. தற்பேணுதல் பொருட்டு மற்ற நாட்டு இறைமையை மீறும் வகையில்

ஆற்றப்படும் செயல்கள் மன்னிக்கக் கூடியவை என்றாலும், நடந்துவிட்ட தீங்கான செயல், அதனைப் புரிந்த நாட்டை தற்காத்துக் கொள்வதற்கு மிக மிக இன்றியமை யாததாக இருக்க வேண்டும். மேலும், அச்செயலைச் செய்யாது விடுத்திருந்தால் அந்நாடு பேரிழப்பிற்குள்ளாகியிருக்கும் என்கிற நிலை இருந்தால்தான் அச்செயல்கள் மன்னிக்கப்படும். இல்லையென்றால், அச்செயல்கள் தலையீட்டுக் குற்றமாக மாற வாய்ப்புண்டு.

உதாரணம் : ஒரு நதி இரண்டு நாடுகளில் ஓடுவதாகக் கொள்வோம். கீழ் நாட்டில் அந்நதியின் குறுக்கே அணை கட்டப்பட்டுள்ளது. நதியில் வெள்ளம் பெருக்கெடுத்துள்ள நிலையில் மேல்நாடு கீழ்நாட்டை அணையைத் திறந்து நீரை வெளியேற்றுமாறும் இல்லையென்றால் தன்னாடு வெள்ளத்தால் அழிவுக்குள்ளாகும் என்றும் வேண்டுகிறது. கீழ்நாடு அணையைத் திறப்பதில் காலதாமதம் செய்கிறது. மேல்நாடு ஆட்களை அனுப்பி அணையைத் திறந்து விடுகிறது. இச்செயல் தற்பேணுவதற்காக ஆற்றப்பட்டதால் மன்னிப்பு பெறத்தக்கது.

முக்கிய வழக்குகள் :

Case of Amelia Island[1] – அமிலியாத் தீவு வழக்கு என்றழைக்கப் படும் இவ்வழக்கில், அமிலியாத் தீவினை ஸ்பானியக் கடற் கொள்ளையர்கள் கைப்பற்றிக் கொண்டு, அப்பக்கம் கடந்து செல்லும் அமெரிக்க கடல் வாணிபர்களைக் கொள்ளையடித்து வந்தனர். அத்தீவு ஸ்பானிய நாட்டைச் சார்ந்தது. ஸ்பானிய நாடு இதையொட்டி எவ்வித நடவடிக்கையும் எடுக்காததால், அமெரிக்கா தனது போர்க்கப்பலை அத்தீவுக்கு அனுப்பி அக்கொள்ளையரை வெளியேற்றியது.

Case of Caroline[2] – கரோலின் வழக்கு என்றழைக்கப்படும் இவ் வழக்கில், 1837–ஆம் ஆண்டில் கனடா நாட்டுப் புரட்சிக் கலகத்தினர் நயாகராவில் கனடா பகுதிக் கரையையொட்டி அமைந்துள்ள நேவித் தீவினைக் கைப்பற்றிக் கொண்டு **'கரோலின்'** எனும் கப்பல் மூலம் நயாகராவின் அமெரிக்கப் பகுதியில் இருந்து நேவித் தீவிலிருக்கும் தங்களது சக கலகக்காரர்களுக்கு தேவையான பொருள்களை அளித்து வந்தனர். அப்பொருள்கள் அங்கிருந்து கனடா நாட்டிற்குள் இருந்த கலகக்காரர்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. இதனையறிந்த கனடா அரசு நயாகராவின் அமெரிக்கப் பகுதிக் கரைக்கு பிரிட்டிஷ் கடற்படைப் பிரிவினை அனுப்பி மேற்படி கரோலின் எனும் கப்பலை கைப்பற்றி அழித்தது. இச்செயலில் இரு அமெரிக்கர்கள் உயிரிழக்க நேரிட்டது. தன்னாட்சி எல்லையில் நுழைந்ததற் காகவும், தன் குடிமக்களிருவரைக் கொன்றதற்காகவும், தன்னாட்டு எல்லையின் மேலாண்மைத் தன்மையை மீறியதாகவும், அமெரிக்கா குற்றஞ் சாட்டியது. மேலும் அவ்வாறு செய்ய எவ்வித அவசரமோ, அவசியமோ கனடாவிற்கு இல்லை, என்றும் வாதிட்டது. ஆனால் தற்காப்பின் பொருட்டே அவ்வாறு செயற்பட்டதாக பிரிட்டன்

1. 1817
2. 1841 Moore's Digest of International Law, Vol. II, p. 412

கூறியது. மேலும் தனது செயலுக்கு மன்னிப்பும் கோரியது. எனவே பிரச்சனை அத்துடன் சுமூகமாக முடிந்தது.

(2) அரசுகளின் வலிமையை சமாளிக்கும் பொருட்டு (In the interest of the Balance of Powers):

ஒரு குறிப்பிட்ட நாட்டை மட்டும் வல்லமை பொருந்திய அரசாக வளர விட்டால் அல்லது அது அவ்வாறு வளரும் வாய்ப்பைப் பெற்றால், அந்நாடு சர்வதேச ஆதிக்கம் பெறக்கூடிய சூழ்நிலை உருவாகிவிடும். இதனை தவிர்க்கும் பொருட்டே நாடுகள் உடன்படிக்கைகளில் ஈடுபடுகின்றன. இதன் மூலம் தங்களது சக்தியை மற்ற நாடுகளின் சக்திக்கொப்ப குறைத்துக் கொண்டு வலிமைச் சமநிலையை (Balance of Powers) உருவாக்குகின்றன. இவ்வுடன்படிக்கைகளின் சரத்தினை மீறி ஒரு நாடு செயல்பட்டால் அங்கே வலிமைச் சமநிலை குலைந்து விடுகிறது. இதனை தவிர்க்கும் பொருட்டு உடன்படிக்கையில் ஈடுபட்டுள்ள மற்ற நாடுகள், அவ்வுடன்படிக்கையை மீறிச் செயல்பட்ட நாட்டின் விவகாரங்களில் தலையிட்டு வலிமைச் சமநிலையை உருவாக்கலாம். ஆனால் இத்தலையீடு நாட்டிடைச் சட்டத்திற்கு முரணானது என அறிஞர்கள் பலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

(3) மனிதாபிமான அடிப்படையில் (Grounds of Humanity):

ஒரு நாடு தன்னாட்டு மக்களைத் தன்னிச்சையாக நடத்திச் செல்லும் உரிமை பெற்றது. எனினும் அவ்வுரிமை சில வரையறைகளுக்கும் நெறிமுறைக்கும் உட்பட்டது. ஒரு நாடு, தனது மக்களுக்கு அடிப்படை மனித உரிமைகளை மறுத்துக் கொடுங்கோன்மை ஆட்சி நடத்துமாயின், அத்தகு நாட்டின் உள்–விவகாரத்தில் தலையிட்டு நல்வழிக்கு கொண்டு வர மற்ற நாடுகளுக்கு உரிமையுண்டு என, நாட்டிடைச் சட்ட விதிகள் கூறுகின்றன.

உதாரணம் : 1827–ஆம் ஆண்டில் கிரீஸ் நாட்டுக்கும் துருக்கி நாட்டுக்கும் இடையே நிகழ்ந்த சச்சரவில் மனித இனத்திற்கு இழைக்கப்பட்ட கொடுமைக்கெதிராக பிரிட்டன், இரஷ்யா, பிரான்ஸ் ஆகிய நாடுகள் தலையிட்டன. இவ்வகைத் தலையீடு அடிக்கடி நிகழ்வதுண்டு. சில ஆண்டுகளுக்கு முன் 1971–72 ஆம் ஆண்டுகளில் மேற்கு பாகிஸ்தான், புரட்சி செய்த கிழக்கு பாகிஸ்தான் மக்களைக் கடும் கொடுமைக்கு உள்ளாக்கியது. இந்தியா மனிதாபிமானக் காரணங்களுக்காக அந்நாட்டு விவகாரங்களில் தலையிட்டுக் கிழக்கு பாகிஸ்தான் மக்களைக் கொடுமையிலிருந்து காப்பாற்றி, அது ஒரு தனி நாடாக (பங்களாதேஷ்) உதிக்க உதவியது.

(4) கூட்டுத் தலையீடு (Collective Intervention):

வலுச்சண்டையை உருவாக்குகிற ஒரு நாட்டிற்கு எதிராக அமைதியை விரும்பும் நாடுகள், ஒன்றாக இணைந்து அந்நாட்டின் இறைமையின் மீது கூட்டாக தலையிடுகின்றன. இது கூட்டுத்தலையீடு எனப்படுகிறது. இது தொடர்பாக

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் ஏழாவது அத்தியாயமானது, வலுச்சண்டைக்கு எதிராக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அதிகாரத்தைப் பாதுகாப்புச் சபைக்கு (Security Council) வழங்குகிறது. இதற்காக, மேற்படி சபையானது சர்வதேசப் படையையே உருவாக்கி, கூட்டாக தலையீடும் அதிகாரத்தைப் பெற்றுள்ளது.

உதாரணமாக, 1990–ஆம் ஆண்டில் குவைத் நாட்டை ஆக்ரமித்துக் கொள்ளும் வண்ணம் ஈராக் செயல்பட்ட நிகழ்வைக் குறிப்பிடலாம். 02–08–1990–ஆம் தேதியில் சதாம் உசேன் தலைமையின் கீழ் ஈராக் நாடு, குவைத்தில் ஊடுருவியது. உடனே அய்க்கிய நாடுகள் சபை, தனது சாசனத்தில் ஏழாவது அத்தியாயத்தின் கீழ், பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது. அவற்றின்படி, (1) குவைத்தில் ஈராக் செய்த ஊடுருவலை அது கண்டித்தது. (2) குவைத்திலிருந்து ஈராக் தனது படைகளை உடனே திரும்ப அழைத்துக் கொள்ள வேண்டியது. (3) ஈராக்கும், குவைத்தும் தங்களுக்கிடையிலான பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள உடனடியாக சமரசப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்க வேண்டியது. ஆனால் நடந்தது என்ன? ஈராக் அதிபர் மேற்கண்ட தீர்மானங்களை மதிக்க வில்லை. இதன் விளைவாக அய்க்கிய நாடுகள் சபை ஈராக் நாட்டில் 'கூட்டுத் தலையீடு' செய்ய தன் உறுப்பு நாடுகளுக்கு ஆணையிட்டு தீர்மானம் நிறைவேற்றி, அங்கு சர்வதேசப் படையை அனுப்பியது. இதனால் குவைத் நாடு, ஈராக்கின் பிடியிலிருந்து மீண்டது. (சதாம் உசேனின் கொடுங்கோன்மை ஆட்சி மேலும் தொடர்ந்து கொண்டிருப்பதையும், அது அணு ஆயுதங்களைக் கொண்டு தாக்க விருப்பதையும் கண்ட அமெரிக்க, ஈராக்கின் மீது போர் தொடுத்து, தற்பொழுது அவரை ஒரு கைதியாக சிறைப் பிடித்து வைத்துள்ளதை நாமறிவோம்.)

இதுபோல் 1950–ஆம் நாட்டில் கொரியா நாட்டிலும், 1961–ஆம் ஆண்டில் காங்கோ நாட்டிலும், 1993–94–ஆம் ஆண்டுகளில் சோமாலியா நாட்டிலும், 1999–ஆம் ஆண்டில் இந்தோனேஷியாவின் ஆதிக்கப்பிடியிலிருந்து கிழக்கு தைமூரை விடுவிக்க, இந்தோனேஷியாவிலும் அய்க்கிய நாடுகள் கூட்டுத் தலையீடு செய்தது.

(5) உடன்படிக்கையின் வாயிலான உரிமைகளை வலியுறுத்த தலையீடு (Intervention for Enforcing Treaty Rights):

சர்வதேச உடன்படிக்கை ஒன்றின் தரப்பு நாடாக உள்ள ஒன்று, அவ்வுடன்படிக்கையின் சரத்துக்களை மீறினால், அதைத் தடுக்கும் பொருட்டு மற்ற நாடுகள் அந்நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடலாம். இது முன்பு ஒரு நல்ல காரணமாக அமைந்திருந்தது. ஆனால் பின்னிட்டு அமைக்கப்பட்ட அய்க்கிய நாடுகள் சபை, இக்காரணத்தை அங்கீகரிக்கவில்லை.

(6) நபர்களையும் அவர்களது உடைமைகளையும் காக்கும் பொருட்டு தலையீடு (Intervention for Protection of Persons and Property):

இதுவும் முன்பு ஒரு நல்ல காரணமாக அமைந்திருந்தது. ஆனால் பின்னிட்டு

அவ்வாறு தலையீடு செய்வது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. உதாரணமாக, 25–10–1983–ஆம் தேதியில் அமெரிக்க அய்க்கிய நாடுகள், கிரனடா (Grenada) நாட்டின் உள்விவகாரத்தில் தலையீடு செய்தது. தனது அத்தலையீடு நியாயமானதே என்பதற்கு பின்வரும் இரு காரணங்களை அமெரிக்கா சுட்டிக் காட்டியது. அவை (1) கிரனடா–வில் கொடுமைக்குள்ளாகிவரும் 1000–த்திற்கும் மேற்பட்ட அப்பாவி அமெரிக்க குடிமக்களை காப்பாற்றவும்; (2) கிரனடா–வில் அரசு நிருவாக அமைப்புகளில் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டவும். ஆனால் இதற்காக அமெரிக்க அய்க்கிய நாடுகள், கிரனடாவின் விவகாரங்களில் தலையிட்டது முறையல்ல என்று அய்க்கிய நாடுகள் சபை கண்டனம் தெரிவித்தது.

29. Manroe Doctrine - Write short notes. (மன்றோ கோட்பாடு- சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

அமெரிக்க அய்க்கிய நாடுகளின் சனாதிபதி ஜேம்ஸ் மன்றோ என்பார் 1823–ஆம் ஆண்டில் இக்கொள்கையை வெளியிட்டார். இதனைத் தென் அமெரிக்க நாடுகள் பெரும்பாலானவை ஏற்றுச் செயல்பட்டன.

இக்கொள்கையின் நோக்கம் :

இக்கொள்கையின் முதன்மையான நோக்கம் அமெரிக்கக் கண்டத்திலுள்ள **மற்ற** நாடுகளின் விவகாரத்தில் அமெரிக்க அய்க்கிய நாடுகள் மட்டுமே தலையிடும் உரிமையை ஏற்படுத்திக் கொள்வதுதான். ஆனால் மற்ற அய்ரோப்பிய நாடுகள் தென் அமெரிக்க நாடுகளின் விவகாரங்களில் தலையிடுவதையும், மேலும் குடியேற்றங்களைத் (Colonies) தவிர்ப்பதற்காகப் பொதுவாகவும், குறிப்பாக வடமேற்கு அமெரிக்காவில் (அப்பொழுதைய) ஒருங்கிணைந்த இரஷ்யாவின் ஆதிக்கத்தை ஒழிக்கவும், ஸ்பானிய அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் மீது ஸ்பெயின் ஆதிக்கத்தை நிலைபெறச் செய்யவும் இக்கொள்கை உருவாக்கப்பட்டது என்று கூறினால் அது மிகையாகாது. இதனைப் **'புனித ஒப்பந்தம்' (Holy Alliance)** எனவும் கூறுவர்.

இக்கொள்கை சாற்றும் பிரகடனங்கள் (Declarations):

1. இதுகாறும் தடையற்ற குடியேற்ற நாடாகவிருந்த அமெரிக்க கண்டம், இனி எந்த அய்ரோப்பிய நாடுகளாலும் குடியேற்ற நாடாக கருதப்படுதல் கூடாது. இப்பிரகடனத்தை (Declaration) பிரிட்டன், முன்னாள் இரஷ்ய ஒன்றியம் போன்ற அய்ரோப்பிய நாடுகள் ஏற்றுக் கொள்ளாமல் எதிர்த்தன. எனினும் பின்னர், எவ்விதக் குடியேற்றத்தையும் எந்நாடும் மேற்கொள்ளவில்லை.

2. அய்ரோப்பிய நாடுகளின் உள்விவகாரங்களிலோ அல்லது அய்ரோப்பிய

போர்களிலோ அமெரிக்கா தலையிடாது. அவ்வாறு தலையிடுவது அமெரிக்காவின் எண்ணமும் அல்ல.

3. அய்ரோப்பிய நாடுகள் புதிய தென்–அமெரிக்க நாடுகள் மீது தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டும் வகையில் தலையிட்டால், அது அமெரிக்கக் கண்டத்திற்கெதிரான பகைமை நடவடிக்கையாக கருதப்படும். இது மிக முக்கிய மானதொரு பிரகடனமாக அமைந்தது.

மன்றோ கொள்கை வெளியீட்டிலிருந்து அமெரிக்க அய்க்கிய நாடுகள், அமெரிக்கா கண்டத்தின் மீதான தலைமையை மறைமுகமாக தனதாக்கிக் கொண்டது என்றே கூற வேண்டும். அது முதல் தென் அமெரிக்க நாட்டுக்கும் அய்ரோப்பிய நாடுகளுக்கும், எல்லைப்புறச் சிக்கல் ஏற்படும் போதெல்லாம் அமெரிக்கா தலையிடும் வழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டது.

மன்றோ கொள்கையின் சிறப்புகள் :

1. இக்கொள்கை தென் அமெரிக்க நாடுகளுக்குத் தனித்து இயங்கும் (Independence) தன்மையைத் தந்தது.

2. தங்கள் அய்ரோப்பியத் தாய் நாடுகளுடன் தென் அமெரிக்க நாடுகள் உலக அரங்கில் சமத்துவம் பெற வழிவகுத்துக் கொடுத்தது.

3. நாடுகளின் வட்டார வளர்ச்சி; ஒருமைப்பாட்டுணர்ச்சி ஆகியவற்றைத் தோற்றுவித்தது.

மன்றோ கொள்கையின் வளர்ச்சி :

இக்கொள்கை முதலில் அமெரிக்க அய்க்கிய நாடுகளால் தன்சார்பாக (Unilateral) மட்டுமே வெளியிடப்பட்டதென்றும், பின்னிட்டு தென் அமெரிக்க நாடுகள் தங்கள் வழக்கத்தில் ஏற்றுச் செயல்படத் துவங்கியதோடு, பின்னர் கூடிய மாநாடுகளில் இக்கொள்கையை ஏற்று வலியுறுத்தியதின் மூலம் இக்கொள்கை முக்கியத்துவமும் பொதுத்தன்மையும் பெறலாயிற்று.

தென் அமெரிக்க நாடுகள் 1938–ஆம் ஆண்டில் லிமாவில் (Lima) கூட்டிய பேன் அமெரிக்கன் (Pan American) மாநாடு இக்கொள்கையை வலியுறுத்தியது. 1940–ஆம் ஆண்டில் அமெரிக்க அய்க்கிய நாடு, ஜெர்மனிக்கும் இத்தாலி நாட்டுக்கும், அமெரிக்க நாடுகளல்லாத நாடுகளின் நிலப் பகுதியை வேறொரு அமெரிக்கா அல்லாத நாட்டுக்கு மாற்றுதலாகாது என எச்சரிக்கை விடுத்தது. 1940–ஆம் ஆண்டில் அபானாவில் (Hebana) கூடிய அமெரிக்கக் குடியரசுகளின் வெளி விவகார அமைச்சர்களின் மாநாட்டிலும் மன்றோ கொள்கையின் ஆவணங்கள் வலியுறுத்தி ஏற்கப்பட்டன. எனினும் அய்க்கிய நாடுகள் சாசனம் ஏற்படுத்தப்பட்ட பின்னர், இக்கொள்கையின் செல்வாக்கு மறையத் தொடங்கியது என்றே கூற வேண்டும்.

14

நாட்டின் ஆள்நிலம்
[State Territory]

30. What do you mean by territorial sovereignty? State the various modes of acquiring territory. (ஆள்நில ஆதிக்கம் என்பதனால் நீர் அறிவதென்ன? ஆள்நிலத்தை அடைவதற்குண்டான பல்வேறு முறைகளைக் கூறு.)

(அல்லது)

What are the different modes of acquiring and losing territory? (அரசின் ஆட்சி எல்லையை பெறுவதற்கும் மற்றும் இழப்பதற்கும் உள்ள பல்வேறு வகைமுறைகள் யாவை?)

(அல்லது)

What are the traditional and generally recognised modes of acquiring territorial sovereignty? (மரபார்ந்த முறைப்படி நிலத்தின் மீது இறைமை கொண்டாடுவதற்கு எத்தனை வகைமுறைகள் உள்ளன?)

(அல்லது)

Explain briefly the principal modes of acquiring and losing territory. Refer to relevant cases and events. (நிலப் பரப்பாட்சியுரிமை ஏற்றல் மற்றும் அதை இழந்து விடல் ஆகியவற்றிற்கான வகைமுறைகளைச் சுருக்கமாக விவரித்து எழுதுக.)

(அல்லது)

Compare occupation and prescription as modes of acquisition of sovereignty. Do you think that annexation is a valid method of acquiring sovereignty in modern International Law?

(கையாளுகை மற்றும் நீடானுபோக உரிமை ஆள்நிலம் சேர்ப்பதற்கான முறைகளை ஒப்பிட்டுக் காட்டுக. இணைத்துக் கொள்ளுதல் நவீன நாட்டிடைச் சட்டத்தின் ஒரு செல்லத் தகுந்த ஆள்நிலம் சேர்க்கும் முறையென நீங்கள் கருதுகிறீர்களா?)

(அல்லது)

"Occupation consists in establishing sovereignty over a territory not under authority of any other State whether newly discovered or ..... abandoned by the State formerly in control". Stark. Explain with reference to occupation as a mode of acquiring terriority.
("வேறு எந்த ஆட்சி உரிமையின் கீழும் இல்லாத ஒரு பிரதேசத்தின் மீது, அது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட பகுதியாக இருப்பினும் அல்லது ... ... ஏற்கனவே ஆட்சி உரிமை பெற்றிருந்த ஒரு நாட்டால் கைவிடப்பட்டதாக இருப்பினும் அதன் மீது தன் இறையாண்மையை நிறுவுதல் படைப்பற்றாட்சி எனப்படுகின்றது." – ஸ்டார்க். ஒரு பிரதேசத்தினைக் கையகப்படுத்துவதற்குப் படைப்பற்றாட்சியும் ஒரு வகை முறை என்பதனோடு தொடர்புபடுத்தி விளக்குக.)

நாட்டின் ஆள்நிலம் (State Territory) - பொருள் :

ஒரு மக்கட் சமுதாயம் நாடென அழைக்கப்படுவதற்கு தேவையான மூலக் கூறான பண்புகளில் முக்கியமானது 'ஆள்நிலம்' (Territory) ஆகும். அதாவது உலக நிலப்பரப்பில், ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பரப்பை ஒரு நாடு கொண்டிருக்கு மாயின், அது 'அந்நாட்டின் ஆள்நிலப்பரப்பு' (State Territory) ஆகும்.

அறிஞர் **ஒப்பன்ஹெய்ம்** அவர்கள், 'ஆள்நிலம்' என்பதற்கு தனது 'நாட்டிடைச் சட்டம்' எனும் புகழ்பெற்ற நூலில் பின்வருமாறு வரையறை தருகிறார். அதன்படி, "உலக நிலப்பரப்பின் ஒரு வரையறுக்கப்பட்ட நிலப்பகுதி, ஒரு நாட்டின் இறைமைக்குட்பட்டதாக இருக்குமானால், அது அந்நாட்டின் ஆள்நிலம் ஆகும். ஒரு நாட்டிற்கு தேவையான ஆள்நிலம் எவ்வளவு சிறிதாக இருந்தாலும், ஆள்நிலம் இல்லாமல் ஒரு நாடு என்பது சாத்தியமில்லை. ஒரு நாடு தனது மேலாண்மை அதிகாரத்தை கோலோச்சக் கொண்டுள்ள பகுதி எனும் மெய்மையில்தான், நாட்டின் ஆள்நிலம் என்பதன் முக்கியத்துவம் அடங்கியுள்ளது", என்று கூறுகிறார்.

ஆள்நில ஆதிக்கம் (Territorial Sovereignty):

இத்தகு ஆள்நிலப்பரப்பில் வாழும் மக்கள் மற்றும் பொருட்களின் மீது அந்நாடு கொண்டிருக்கும் கோண்மையே **"ஆள்நில ஆதிக்கம்"** எனப்படுகிறது.

1. "State territory is that defined portion of the surface of the globe which is subjected to the sovereignty of the State. A State without a territory is not possible, although the necessary territory may be a very small.... The importance of State territory lies in the fact that it is the space within which the State exereises its supreme authority". - **Oppenheim.**

ஒரு நாட்டின் ஆள்நிலத்தின் மீது, பொதுவாக வேறு எந்தவித நாட்டிற்கும் ஆதிக்கம் செலுத்தும் அதிகாரமோ, உரிமையோ கிடையாது. ஆனால் இதற்கு விதிவிலக்குகள் உண்டு. உதாரணமாக தூதர்கள் ஆள்நில ஆதிக்கத்திலிருந்து விலக்கப்பட்டுள்ள நிலையைக் (Ex-territory) குறிப்பிடலாம்.

ஆள்நிலப்பரப்பினை அடைவதற்குண்டான வகை முறைகள் (Modes of Acquiring Territory):

நாடுகளின் ஆள்நிலப்பரப்புகள், அவ்வப்போது அதன் வலிமைக்கேற்பவும், செயல்களுக்கேற்பவும், இயற்கையின் மாறுதலுக்கேற்பவும் கூடவோ குறையவோ கூடியவை. எனவே ஒரு நாடு கூடுதலான நிலப்பரப்பை பின்வரும் முக்கியமான சில வகைமுறைகளின்படி அடையலாம். அவை வருமாறு.

(1) ஆட்சியின் கீழ் கொண்டு வரல் (அல்லது) படைப்பற்றாட்சி (Occupation):

ஒரு நாடு ஆளும் எண்ணத்துடன் ஒரு நிலப்பரப்பைத் தனது ஆட்சியின் கீழ்க் கொண்டு வரலாம். இந்த முறையில் சேர்க்கப்படும் நிலப்பரப்பு அதுவரை எந்த ஆட்சியின் கீழும் இருந்திருக்கக் கூடாது. ஆட்சியும் அரசுமில்லா நிலப் பரப்புகளை நாடுகள் தங்கள் நாடாகக் கருதலாம். இதுவே 'ஆட்சியின் கீழ் கொண்டு வரல்' அல்லது 'படைப்பற்றாட்சி' மூலம் நாட்டின் ஆள்நிலத்தை அடைதல் எனப்படுகிறது.

இதற்கான முக்கிய நிபந்தனைகள் (Important Conditions for Occupation): (1) ஆட்சியின் கீழ் கொண்டு வரல் உண்மையானதாக இருக்க வேண்டும்; பெயரளவில் இருத்தல் கூடாது; (2) ஒரு நாடு தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த நிலப்பரப்பின் மீது உண்மையில் தனது ஆட்சி அதிகாரத்தை செலுத்தினால்தான், அந்நாட்டிற்கு அதன் மீதுள்ள முழுமையான அதிகாரம் அங்கீகரிக்கப்படுகிறது; (3) சில சமயங்களில் ஒரு நிலப்பரப்பைப் புதிதாக கண்டுபிடிப்பதன் வாயிலாகவும், ஒரு நாடு ஆள்நிலத்தை அடையலாம். இவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட நிலப்பரப்பின் மீது அதனைக் கண்டுபிடித்த நாட்டிற்கு ஒரு நல்ல உரிமைமூலம் (good title) ஏற்படுகிறது; (4) அந்நிலப்பரப்பினை தனது ஆட்சியின் கீழ் கொண்டு வர வேண்டும் எனும் பலமான விருப்பமும் எண்ணமும் சம்பந்தப்பட்ட நாட்டிற்கு இருக்க வேண்டும்; (5) ஒரு நிலப்பரப்பை ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் அனைவருக்கும் தெரியக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். மேலும் அது தொடர்ந்து நெடுங்காலமாக நீடித்திருக்க வேண்டும். அங்கு அந்நாடு அமைதியான முறையில் தனது ஆட்சியை செய்துகொண்டிருப்பதை வெளிக்காட்ட வேண்டும்; (6) ஒரு நாட்டு நிலப்பரப்பின் மீது போர் தொடுத்து அதன் நிலப் பரப்பைக் வலியக் கைப்பற்றுதல் ஒன்று மட்டுமே, அவ்வாறு கைப்பற்றிய நாட்டிற்கு அதன் மீது எவ்வித உரிமைமூலத்தையும் வழங்கிவிடாது.

புதிதாகக் கண்டுபிடிக்கப்படும் நிலப்பரப்பின் மீதான உரிமை: புதிதாக கண்டுபிடிக்கப்படும் நிலங்களுக்கு இந்த முறையில் நாடுகள் உரிமை கொண்டாட லாம். எனினும் புதிய உலகம் அல்லது நிலப்பரப்பைக் கண்டுபிடிக்குமிடத்து, கண்டுபிடித்த நாட்டுக்கு அதன் மீதான உரிமை உடனே வந்துவிடுவதில்லை. கண்டுபிடிப்பு, கண்டுபிடித்த நாட்டுக்கு ஒரு முற்றுப் பெறாத உரிமையை மட்டுமே வழங்கும். கண்டுபிடித்த நிலப்பரப்பை ஆளும் எண்ணத்துடன் (சுவாதீனம் செய்து) ஆட்சி நிறுவி (occupation) தொடர்ந்து தனது முழு ஆட்சி அதிகாரத்தையும் (effective control) செலுத்தி வந்தால், கண்டுபிடிப்பால் அரும்பிய முற்றுப் பெறாத உரிமை, முற்றுப் பெற்றதாக கருதப்படும். முக்கியமான வழக்கு வருமாறு.

Island of Palmas Arbitrations[1] – இவ்வழக்கின்படி பஹாமாஸ் தீவு முதன்முதலாக ஸ்பெயினால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஸ்பெயின் அதன் மேல் தனது முழு ஆட்சி அதிகாரத்தையும் செலுத்தவில்லை. நாளடைவில் அத்தீவு நெதர்லாந்தின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் வந்தது. அதன் பிறகு நெதர்லாந்து நெடுங்காலம் அதனை ஆட்சி புரிந்தது. பின் அத்தீவை ஒரு உடன்படிக்கை மூலம் அமெரிக்க அய்க்கிய நாடுகளுக்கு நெதர்லாந்து கொடுத்து விட்டது. இடையே ஸ்பெயினானது, மேற்படி தீவை தம் வசம் ஒப்படைக்கக் கோரி நெதர்லாந்திடம் கேட்டது. ஆனால் நெதர்லாந்து நீண்ட நெடுங்காலமாக அத்தீவின்மீது தன்னுடைய முழு ஆட்சி அதிகாரத்தையும் (effective control) செலுத்தி ஆட்சி புரிந்து வந்ததால், அத்தீவின் மீதான உரிமைமூலம் (title) நெதர்லாந்திற்குத்தான் உள்ளது என இசைவுத் தீர்ப்பாளர் முடிவு (award) கூறினார்.

Eastern Greenland Case[2] – இவ்வழக்கில் இரண்டு முக்கியமான நிபந்தனைகளை சர்வதேச நீதிமன்றம் வலியுறுத்தியது. அவற்றின்படி (1) ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்ட நிலப்பரப்பின் மீது தனது முழுமையான இறைமை அதிகாரத்தை செலுத்தி அங்கு ஆட்சி புரிதல் வேண்டும் எனும் எண்ணம், அவ்வாறு ஆட்சியின் கீழ் கொண்டு வந்த நாட்டிற்கு இருத்தல் வேண்டும். (2) அத்தகு அதிகாரத்துடன் அந்நாடு அங்கு உண்மையில் ஆட்சி புரிந்து கொண்டிருக்க வேண்டும். இந்த இரண்டு நிபந்தனைகளும் இருந்தால்தான், ஒரு நாடு, 'ஆட்சியின் கீழ் கொண்டு வரல்' எனும் முறையின்படி ஆள்நிலத்தை அடைய முடியும் என்று கூறியது. மேற்படி வழக்கின் பொருண்மைகளைக் கண்டால், மேற்கண்ட நிலைப்பாடு மேலும் தெளிவாகும். அதன்படி, 10–07–1932–ஆம் தேதியில் அரசுத் தீர்ப்பாணை ஒன்றின் வாயிலாக கிரின்லாந்தின் கிழக்குப் பகுதியின் மீது தனக்கு ஆள்நில ஆதிக்க அதிகாரம் (territorial sovereignty) உள்ளதாக நார்வே நாடு பிரகடனம் செய்தது. மற்றொரு புறம், தனக்கும் அக்கிழக்குப் பகுதியின் மீது ஆள்நில ஆதிக்க அதிகாரம் உள்ளதாக டென்மார்க் நாடு கோரிக்கை எழுப்பியது. இடையில் முதலாம் உலகப் போர் அறிவிக்கப்பட்டது. அதில் ஈடுபட்ட கூட்டணி

1. Award of the Permanent Court of Arbitration (1929), Hudson cases p. 361.
2. P.C..I.J. (1933), A/B No. 53 (3 W.C.R. 151)

நாடுகள் (allied powers) பலவும், கிரின்லாந்து முழுவதும் டென்மார்க்கின் ஒரு பகுதியே என பிரகடனம் செய்தன. மேலும் அவ்வாறு டென்மார்க் கிரின்லாந்தின் மீது தனது ஆள்நில அதிகாரத்தை செலுத்துவதில் தங்களுக்கு எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்றும் அக்கூட்டணி நாடுகள் தெளிவுபடுத்தின. நார்வே நாட்டு வெளிவிவகார அமைச்சரும் இந்நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு, டென்மார்க் நாடு, கிரின்லாந்தை ஆட்சி புரிய நார்வே நாட்டிற்கும் எவ்வித ஆட்சேபணையும் இல்லை என்று விளம்பினார். எனினும் நார்வே அரசாங்கம் டென் மார்க்கிற்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் வழக்குரைத்தது. இக்கூற்றுகளை ஆராய்ந்த சர்வதேச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகள், கிழக்கு கிரின்லாந்தை ஆட்சி புரிய வேண்டும் எனும் தனது எண்ணத்தையும், அவ்வாறு ஆட்சி புரிந்ததையும் டென்மார்க் அரசு தெளிவாக மற்ற உலக நாடுகளுக்கு வெளிப் படுத்தியுள்ளது; எனவே கிழக்கு கிரின்லாந்து நிலப்பரப்பு, டென்மார்க்கின் ஆள்நில அதிகாரத்திற்கு உட்பட்டதாகும் என்று தீர்ப்புரைத்தனர்.

(2) நெடுங்கால அனுபோகம் (அல்லது) நீடனுபோகம் (Prescription):

எந்நாடேனும் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பினை இடையீடின்றி அமைதியான முறையில் தன்னுடைமையாக்கிக் கொண்டு, தனது ஆட்சிக்குரிய செயல்களை அங்கு நிகழ்த்தி வருமானால், அந்நாடு அந்நிலப்பரப்பினை நீண்ட நெடுங் காலமாக அனுபவித்து வருகிறது எனும் உடைமை உரிமையின் அடிப்படையில், அந்நிலப் பரப்பானது அந்நாட்டிற்குச் சேருகிறது.

இதற்கான முக்கிய நிபந்தனைகள் (Important Conditions for Prescription): (1) ஒரு நாடு நெடுங்கால அனுபோகத்தின் அடிப்படையில் ஒரு ஆள் நிலப்பரப்பை அடைய வேண்டுமெனில், அப்பரப்பின் மீது மற்ற நாடுகள் எந்த வகையிலேனும் உரிமை கொண்டாடுவதை ஏற்றுக் கொண்டிருத்தலாகாது; (2) அந்நாடு அந்நிலப்பரப்பின் மீது கொண்ட உடைமையை அமைதியான முறையிலும், பிற நாடுகளின் இடைஞ்சல் எதுவுமில்லாமலும் ஆளுகை செய்தல் வேண்டும்; (3) அவ்வாறு கொண்ட உடைமை, பகிரங்கமாக இருக்க வேண்டும்; (4) பொதுவாக உள்நாட்டுச் சட்டத்தில், ஒருவன் பன்னிரண்டு ஆண்டுகள் தொடர்ந்து, ஒரு நிலப்பகுதியை தனதாக்கிக் கொண்டு, எவரிடமிருந்தும் எவ்வித இடைஞ்சலும் இல்லாமல் அமைதியாக அனுபவித்து வந்தால் அவனுக்கு அதில் அனுபோக உரிமை ஏற்பட்டு, அந்நிலப்பகுதியின் உரிமையாளன் ஆகிறான். அதுபோல் ஒரு நாடு, ஒரு நிலப்பரப்பை தனதாக்கிக் கொள்ள எத்தனை ஆண்டுகள் வரை அதை அனுபவித்து வரவேண்டும் என நாட்டிடைச் சட்டத்தில் கூறப்படவில்லை. எனினும், நீண்ட நெடுங் காலம் என்று குறிப்பிடப்படும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அத்தகு அனுபோகத்தை அந்நாடு கொண்டிருக்க வேண்டும்; (5) ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் தங்கி சில நிருவாகமுறைச் செயல்களைச் செய்யும் பொருட்டு, உடன்படிக்கை ஏதேனும் வாயிலாக ஒரு நாடு, மற்றொரு நாட்டிற்கு அனுமதியளித்தன் அடிப்படையில், அம்மற்றொரு நாடு தனக்கு அப்பரப்பில் உரிமை ஏற்பட்டுவிட்டதாக கோர முடியாது.

இவ்வாறு நிலப்பரப்பை அடையும் முறைக்கு உறுதியான எடுத்துக்காட்டு எதுவுமில்லை. எனினும், நாம் ஏற்கனவே கண்ட **பஹாமாஸ் தீவு இசைவுத் தீர்ப்பு வழக்கினை (Island of Palmas Arbitrations Case)** இதற்கு ஒரு முன் மாதிரியாகக் கூறலாம்.

(3) பெருக்கம் அல்லது சேர்தல் (Accretion):

இயற்கையாகவோ, செயற்கையாகவோ ஒரு நாட்டின் ஆள்நிலப்பரப்பு அதிகரித்து பெருகலாம்.

இயற்கையால் ஒரு நாட்டின் ஆள்நிலப் பெருக்கம் ஏற்படுவதற்கு எடுத்துக் காட்டாக, பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம். அவை (1) ஆறுகள் சிறிது சிறிதாக ஒரு பக்கக் கரையை அதிமாக்கலாம்; அல்லது ஒரு புறக் கரையிலிருந்து பெரிய நிலப்பகுதியை பிரித்துக் கொண்டு வந்து மற்றொரு கரையில் அணைத்து அந்த அண்டை நாட்டின் ஆள் நிலத்தை அதிகப்படுத்தலாம்; (2) ஓர் ஆறு வற்றி அதன் அடிப்பாகம் நிலப்பகுதியாக மாறி ஆள் நிலத்தைப் பெருக்கலாம்; (3) கடல், கரையை விட்டு அதிகமாகத் தள்ளிச் சென்று விடுவதாலும் புதிய ஆள்நிலப் பரப்பானது சேரலாம். இவை இயற்கையால் நிலம் சேர்தல் ஆகும்.

ஒரு நாடு செயற்கையாகவும் தனது ஆள்நிலப்பரப்பைப் பெருக்கிக் கொள்ளலாம். அதாவது, இயற்கையாக அல்லாமல், மனித உழைப்பால் ஒரு நாட்டின் ஆள்நிலம் அதிகரித்தால், அது செயற்கைப் பெருக்கம் எனப்படுகிறது. எடுத்துக் காட்டாக, ஒரு நாடு மனித உழைப்பால், கடலுக்குக் கரைகட்டி, கரை நிலத்தை தனது ஆள்நிலமாகச் சேர்த்துக் கொள்வதைக் குறிப்பிடலாம். அவ்வாறே ஆற்றின் ஓரங்களில் கரை கட்டி, ஆள்நிலத்தின் பரப்பளவை அதிகரித்துக் கொள்வதையும் குறிப்பிடலாம்.

(4) பிரிவினை (Cession):

ஒரு நாடு தனது ஆட்சியின் கீழ் உள்ள தனது ஆள்நிலப்பரப்பின் எப் பகுதியையும், தனது சொந்தக் காரணங்களுக்காக உதாரணமாக போர் நிறுத்தத் திற்காகவோ, இடையெழும் சிக்கல்களில் அமைதியும் தீர்வும் காண்பதற்காகவோ பிரித்து மற்ற நாடுகளுக்குக் கொடுக்கலாம். இவ்வாறு ஒரு நாடு தன்னிடமிருந்து பிரித்துத் தந்த நிலப்பரப்பு மற்ற நாட்டுடன் சேரும்போது, சேர்த்துக் கொள்ளும் நாட்டின் நிலப்பரப்பு பெருகுகிறது. இதுவே 'பிரிவினை' மூலம் ஆள்நிலப்பரப்பை அடையும் வகைமுறை எனப்படுகிறது.

ஒரு சில சந்தர்ப்ப சூழ்நிலைகளின் தொல்லைகளிலிருந்து விடுபடும் பொருட்டோ அல்லது தன் விருப்பத்தின் பெயரிலோ ஒரு நாடு தன் பகுதியை மற்ற நாட்டிற்கு வழங்கலாம். இவ்வகைக்கு உதாரணமாக அமெரிக்காவிற்கு இரஷ்யா 1867–ஆம் ஆண்டில் தன் நிலப்பரப்பான அலாஸ்காவை விற்ற நிகழ்ச்சியையும், கட்டாயப் பிரிவினைக்கு உதாரணமாக ஃபிரான்ஸ் அல்ஸாஸ், லோரைன் பகுதிகளை

1871–ஆம் ஆண்டில் செர்மனிக்குப் கொடுத்ததையும் கூறலாம். இந்தியா, கச்சத் தீவை இலங்கைக்கு தாரைவார்த்து கொடுத்ததையும் கூறலாம். இவ்வாறு ஒரு நாடு தன்னாட்டின் ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பை மற்ற நாடுகட்டு பிரித்துக் கொடுக்க அதிகாரம் பெற்றதா எனும் கேள்வி பின்வரும் முக்கிய வழக்கொன்றில் எழுந்தது.

In re Berubari Union and Exchange of Enclaves[1] எனும் வழக்கில், இந்தியாவிற்கு சொந்தமான 'பெருபரி' என்ற பகுதியை, இந்தியா பாகிஸ்தானுக்கு பிரிவினை செய்து கொடுத்தது. இது தொடர்பாக இந்திய சனாதிபதி, உச்ச நீதிமன்றத்திடம் ஆலோசனை (Advisory) கேட்டார். அதற்கு, உச்ச நீதிமன்றம், ஒரு நாடு இறைமை அதிகாரம் பெற்றுள்ளது என்றாலே, அதற்கு நாட்டின் ஒரு பகுதியைப் பிரித்துக் கொடுக்கவும் அதிகாரம் உள்ளது, என அறிவுறுத்தியது. ஆகவே, இவ்வாறு பிரிவினை செய்தது சரியே என்றும், அதற்கு ஒரு நாட்டிற்கு அதிகாரமுண்டு என்றும் மேற்படி வழக்கில் நிலை நிறுத்தப்பட்டது.

(5) இணைத்தல் (Annexation):

ஒரு நாட்டின் கீழுள்ள நிலப்பரப்பை மற்றொரு நாடு தன் ஆள்நிலப் பரப்புடன் இணைத்துக் கொள்வது, 'இணைத்தல்' மூலம் ஆள்நிலத்தை அடைதல் எனப்படும். இது இரு வகையில் நிகழக்கூடும்.

1. ஒரு நாடு மற்ற நாட்டை போரிட்டு வெற்றி பெறுவதன் மூலமோ அல்லது தன்வயப்படுத்திக் கொள்வதன் மூலமோ (conquering or subjugating) தோற்றுப் போன நாட்டின் நிலப்பகுதியைத் தன்னுடன் இணைத்துக் கொள்வதுண்டு. இதுதான் பெரும்பாலும் நடைமுறையில் உள்ள பழக்கமாகும். இது முதல் வகை.

2. இரண்டாவது வகை, ஒரு நாடு தன்னாதிக்கத்தின் கீழ் அடிமையாக உள்ள நாட்டின் நிலப்பகுதியைத் தன் ஆள்நிலத்துடன் இணைத்துக் கொள்வதாகத் தனது விழைவை பிரகடனம் செய்து (declaring annexation), பின்னர் இணைத்துக் கொள்வது. ஆனால் இம்முறையில் இணைக்கும்போது இணைக்கப்படும் நிலப் பரப்பிற்குரிய நாடு இணைத்துக் கொள்ளும் நாட்டின் முழு ஆதிக்கத்திற்கு உட்பட்டதாக இருந்திருத்தல் வேண்டும். உதாரணமாக ஜப்பான் தன் ஆதிக்கத்தின் கீழிருந்த கொரியவைத் தன்னுடன் 1910–ஆம் ஆண்டில் இணைத்துக் கொண்ட சம்பவத்தைக் குறிப்பிடலாம்.

வெற்றி கொண்ட நாடு வெற்றி பெற்றதனாலேயே தோல்வியுற்ற நாட்டின் நிலப்பரப்பை இணைத்துக் கொண்டதாகப் பொருள் கொள்ள முடியாது. வெற்றியின் காரணமாக இணைத்துக் கொள்ளும் நாடு, அவ்வாறு இணைத்துக் கொண்ட நிகழ்வை உலகிற்கு அறிவிப்பு செய்தல் அவசியம்.

ஆனால் இவ்வாறு போரிட்டு அல்லது தன்வயப்படுத்தி ஆள்நிலப்பரப்பை இணைத்துக் கொள்ளும் முறையையே தற்பொழுது அய்க்கிய நாடுகள் சாசனம் தடை செய்துள்ளது.

(6) குத்தகைக்குவிடல் (Lease):

ஒரு நாடு தனது ஆள்நிலப்பரப்பை மற்றொரு நாட்டிற்கு ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதன் வாயிலாகவும், அம்மற்றொரு நாடு ஆள்நிலத்தை அடையலாம். இங்கு அவ்வாறு குத்தகைக்கு விடும் சமயத்தில், அந்நிலப்பரப்பின் மீது ஆட்சி செய்யும் உரிமைகளில் சிலவற்றை அம்மற்றொரு நாட்டிற்கு மாற்றியளிக்கலாம். எனினும் இங்கு முழுமையான ஆட்சியதிகாரம் மாற்றியளிக்கப்படுவதில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். எடுத்துக் காட்டாக, மால்டா தீவு, பிரிட்டனுக்கு சில ஆண்டுகளுக்காக குத்தகைக்கு விடப்பட்ட நிகழ்வைக் குறிப்பிடலாம்.

Union of India v. Sukumar Sengupta[1] – 1974 மற்றும் 1982–ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட உடன்படிக்கைகளின்படி இந்திய நாடு, 'டீன் பிகா' எனும் நிலப்பகுதியை பங்காளதேஷிற்கு 'நிரந்தரக் குத்தகைக்கு' (lease in perpetuity) விட்டது. அதன் வாயிலாக அப்பகுதியின் மீது சில சலுகைகளை அளித்திருந்தது. இடையில் அப்பகுதி தொடர்பாக எழுந்த மேற்படி வழக்கில் நமது உச்ச நீதிமன்றமானது, மேற்படி உடன்படிக்கைகளில் 'குத்தகை' எனும் பதம் எழுதப் பட்டிருந்தாலும், அப்பகுதியின் மீது பங்களாதேஷிற்கு அளிக்கப்பட்டுள்ள சலுகைகளை ஆராயும் பொழுது, அது ஒரு 'வசதியுரிமையே' (servitude) தவிர 'குத்தகையாகாது' என்று தீர்ப்புரைத்தது.

(7) அடகு வைத்தல் (Pledge):

மகாபாரதத்தில் பாண்டவர்கள் தங்கள் நாட்டையே சூதாட்டத்தில் பணையமாக வைத்தனர். இதை நாமறிவோம். அந்த வகையில் நாட்டிடைச் சட்டத்தில், நாட்டையே அடகு வைக்கும் நிகழ்வும் துர்பாக்கிய நிலையும் ஏற்படுவதுண்டு. சில சமயங்களில் ஒரு நாடு தனக்கு அத்தியாவசியமாகத் தேவைப்படும் பணத்திற்காக, தனது நாட்டு ஆள்நிலப்பரப்பின் ஒரு பகுதி நிலத்தை மற்றொரு நாட்டிடம் அடகு வைக்கலாம். அப்பொழுது, அந்நிலத்தின் மீது அரசோச்சும் சில அதிகாரங்களும் அம்மற்றொரு நாட்டிற்கு மாற்றியளிக்கப் படுகிறது. எடுத்துக்காட்டாக, 1768–ஆம் ஆண்டில் ஜெனீயோ குடியரசு (Republic of Geneo) தன்னுடைய கார்சிகா தீவை (Island of Carsica) ஃபிரான்சிடம் அடகு வைத்ததைக் குறிப்பிடலாம். ஆனால் உலக நாடுகளில் இன்று சனநாயகம் மலர்ந்துள்ளது. எனவே இவ்வாறு அடகின் மூலம் ஆள்நிலப்பரப்பைப் பெறும் நடைமுறையை உள்நாட்டுச் சட்டம் அனுமதிப்பதில்லை.

(8) மக்கள் பொதுக் கருத்து வாக்கெடுப்பு (Plebiscite):

ஒரு குறிப்பிட்ட ஆள்நிலத்தின் மக்கள் தாங்கள் எந்த நாட்டுடன் இணைய விருப்பம் தெரிவித்து வாக்களிக்கிறார்களோ, அந்நாட்டுடன் அந்த

1. AIR 1990 SC 1962

ஆள்நிலப்பரப்பு இணைந்துவிடும். இது மக்கள் பொதுக் கருத்து வாக்கெடுப்பின் மூலம் ஆள்நிலப்பரப்பை அடைதல் எனப்படுகிறது. **எடுத்துக்காட்டாக,** நெதர் லாந்தும், இந்தோனேஷியாவும் மேற்கு அய்ரைன் (West Irian) நிலப்பரப்பின் மீது உரிமை கொண்டாடின. இப்பிரச்சனையை மேற்கு அய்ரைன் மக்களின் பொதுக் கருத்தை வாக்கெடுப்பின் மூலம் கேட்டறிந்து முடிவெடுக்கலாம் என்று அமெரிக்க அய்க்கிய நாடுகள் கருத்து தெரிவித்தது. இதன் அடிப்படையில் மேற்கு அய்ரைன் மக்கள், தாங்கள் இந்தோனேஷியாவுடன் இணைய விருப்பம் தெரிவித்து வாக்களித்தனர். இதனால் மேற்கு அய்ரைன் இன்று இந்தோனேஷியாவுடன் இணைந்த ஒரு ஆள்நிலப்பரப்பானது.

ஆள்நிலப்பரப்பை இழத்தலுக்கான வகைமுறைகள் (Modes of Losing Territory):

ஒரு நாட்டின் ஆள்நிலப்பரப்பு மற்றொரு நாடுடன் சேருமானால், அந்நாடு தனது ஆள்நிலப்பரப்பை இழந்த ஒன்றாகிறது. அந்த வகையில் பின்வரும் வழிகளில் ஒரு நாடு தனது ஆள்நிலப்பரப்பை இழக்கிறது. அவை,–

(1) பிரிவினை செய்து கொடுத்தல் (Cession):

ஒரு நாடு தனது நாட்டின் ஆள்நிலப்பரப்பை பிரிவினை செய்து மற்றொரு நாட்டிற்கு கொடுத்தலால், அவ்வாறு கொடுக்கும் அந்நாடு தனது ஆள்நிலப் பரப்பை இழக்கிறது. பெறும் நாடு தனது நிலப்பரப்பை பெருக்கிக் கொள்கின்றது. எனவே இது, ஆள்நிலப்பரப்பை அடைதல் மற்றும் இழத்தல் ஆகிய இரண்டுக்குமே பொருந்தும் பொதுவான வகைமுறையாகும்.

(2) இயற்கையின் விளைவுகள் (Operation of Nature):

இயற்கையின் விளைவால், ஒரு நாடு தனது நிலப்பரப்பில் ஒரு பகுதியை இழக்கலாம். ஆறு சிறிது சிறிதாக ஒரு நாட்டின் நிலப்பகுதியை அரித்து அதன் பரப்பைத் தேய்க்கலாம். ஒரு நாட்டின் ஆள்நிலத்தில் உள்ள ஒரு தீவை, கடல் சூழ்ந்து, அத்தீவே மறைந்து போகலாம். எடுத்துக்காட்டாக இந்தியாவில் தனுஷ் கோடியை கடல் சூழ்ந்து கொண்டதைக் குறிப்பிடலாம்.

(3) தோல்வி இழப்பு (Subjugation):

போரில் தோற்றுப் போன நாடுகளின் நிலப்பரப்பை பிரகடனத்தின் வாயிலாக, வெற்றி கொண்ட நாடு, அதனை தன் நிலப்பரப்புடன் இணைத்துக் கொள்ளலாம். இது நிலப்பரப்பை அடைதல் மற்றும் இழத்தல் என இரண்டிற்குமே பொருந்தக்கூடிய பொதுவான முறையாகும்.

(4) அனுபோக இழப்பு (Prescription):

நீண்ட நாள் அனுபோகத்தால் ஒரு நாடு தன் நிலப்பரப்பை அதிகப்படுத்த

முடியுமானால், அதனால் மற்றொரு நாடு தனது நிலப்பரப்பை இழந்தேயாக வேண்டும். எதிரனுபோகம் (adverse possession) என்பது அது வேறொரு நாட்டின் உரிமைக்கு எதிராகவே இருந்தாக வேண்டும். ஆகவே இதுவும் நிலப்பரப்பை அடைதலுக்கும் இழத்தலுக்கும் உள்ள பொதுவான முறையாகும்.

(5) கைவிடல் (Dereliction):

ஒரு நாடு, ஆள முடியாமையை முன்னிட்டோ, பயனில்லாமை குறித்தோ தனது நிலப்பரப்பின் ஒரு பகுதியைக் கைவிட்டு விடலாம். இப்படிக் கைவிடப்பட்ட நிலப்பரப்பை ஆட்சியின் கீழ்க்கொண்டு வரல் என்ற முறையில் வேறொரு நாடு தனது ஆள்நிலத்துடன் சேர்த்துக் கொள்ளலாம்.

(6) கிளர்ச்சி (Revolt):

ஒரு நாட்டின் ஒரு பகுதி கிளர்ச்சியின் காரணமாகப் பிரிந்து விடலாம். இந்தக் கிளர்ச்சி உள்நாட்டுப் போராகக் கூட இருக்கலாம். இப்படி நாடிழப்பதைக் 'கிளர்ச்சியால் நாடிழத்தல்' என்று குறிப்பிடுகிறோம். இதற்கு எடுத்துக்காட்டாக, 1579–ஆம் ஆண்டில் கிளர்ச்சியின் காரணமாக ஸ்பெயின், நெதர்லாந்தை இழந்ததைக் குறிப்பிடலாம். மேலும், 1776–ஆம் ஆண்டில் ஏற்பட்ட சுதந்திரப் போரின் காரணமாக, பிரிட்டனில் இருந்து அமெரிக்கா பிரிந்ததைக் கூறலாம். அதுபோல், மேற்கு பாகிஸ்தான் மக்கள் செய்த கிளர்ச்சியின் காரணமாக, அது பாகிஸ்தானிலிருந்து பிரிந்து பங்களாதேஷ் எனும் தனி நாடாக உருவெடுத்தது. அந்த வகையில் சில ஆண்டுகளுக்கு முன்பு சோவியத் ஒன்றியத்திலிருந்து ஜார்ஜியா உட்பட 12 குடியரசுகள் பிரிந்து சோவியத் ஒன்றியம் கலைந்ததைக் கூறலாம்.

31. Write a note on the freedom of the air. To what extent are they observed? (காற்று மண்டலத்தில் சுதந்திரங்களை பற்றி ஒரு குறிப்பு வரைக. எந்த அளவுக்கு அவைகள் கடைப்பிடிக்கப்படுகின்றன?)

(அல்லது)

What are the five freedom of the Air? (வானவெளியில் உள்ள அய்ந்து சுதந்திரங்கள் யாவை?)

(அல்லது)

Examine the five freedoms of the air. To what extent are they observed? (வான் வெளியின் அய்ந்து சுதந்திரங்களை ஆராய்க. எந்த அளவிற்கு அவை கடைப்பிடிக்கப்படுகின்றன?)

(அல்லது)

Five Freedoms of Air - Write short notes. (காற்று மண்டலத்தின் அய்ந்து சுதந்திரங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Five Freedom Agreement - Write short notes. (அய்ந்து சுதந்திர உடன்படிக்கை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Air space - Write short notes. (காற்று மண்டலம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain the law relating to Air space with reference to various conventions. (காற்று மண்டலத்தை குறித்த சட்டத்தை பல்வேறு பேராண்மை பேரவைக் கருத்துக்களை எடுத்துக்காட்டி விளக்கவும்.)

முன்னுரை :

மாறிவரும் நவீன காலத்திற்கேற்ப விமானப் போக்குவரத்துகளும் அதிகமாகியுள்ளன. இதற்காக அதிவேகமான வானவூர்திகளும் கண்டுபிடிக்கப் பட்ட வண்ணம் உள்ளன. பழையன கழிதலும் புதியன புகுதலும் இயற்கையே. ஆனால் அப்புதியன கூடவே புதிரான சிக்கல்களையும் கொண்டு வந்து சேர்க்கின் என் செய்வது? வானவூர்திகள் வான்வெளியில் (காற்று மண்டலம்) பறக்கின்றன. அதுபோல் வான்வெளிக்கு பல நாடுகளும் செயற்கைக் கோள்களை அனுப்பிய வண்ணம் உள்ளன.

ஒரு நாட்டிற்கு அதனைச் சார்ந்த நிலப்பகுதி வரை ஆள்நில ஆதிக்கம் உள்ளது எனக் கண்டோம். ஆனால் வரம்பில்லாத வான்வெளியைப் பொறுத்தவரை அந்நாட்டின் ஆள்நில ஆதிக்கம் (Territorial Sovereignty) எவ்வாறு உள்ளது, அந்நாட்டிற்கு அதன் நிலப்பகுதிக்கு மேலுள்ள வான்வெளியில் எவ்வகையான இறைமை உள்ளது, என்பனவெல்லாம் தீர்வுக்குரிய சிக்கலான பிரச்சனைகள். இப்பிரச்சனைகளுக்கு ஓரளவு பதில் கூறும் முகமாக வான் மண்டலத்தில் அதன் நில நாட்டிற்குண்டான இறைமையை ஒட்டி அய்ந்து கொள்கைகள் வழங்கப்பட்டு வருகின்றன. அவற்றில் முதலிரண்டு கொள்கைள், கடலில் அதன் சார்பு நாடுகளுக்கு என்ன உரிமைகள் உண்டோ அக்கருத்தை ஒட்டியதாகும். அத்தகு அய்ந்து கொள்கைகள் பின்வருமாறு.

வான் மண்டலம் குறித்த அய்ந்து கொள்கைகள்:

முதற் கொள்கை:

ஆழ்கடல் (High Seas) எவ்வாறு எந்நாட்டிற்கும் சொந்தமில்லாமல் பொதுவாக எல்லா நாட்டினராலும் பயன்படுத்தத்தக்கதோ, அதுபோல் வான் மண்டலமும் (காற்று மண்டலமும்) ஒரு நாட்டின் நிலப்பரப்பின் மீது பரந்து விரிந்திருந்தாலும், அது அந்நாட்டிற்கு சொந்தமானதல்ல. அனைத்து நாடுகளும் அதைப் பயன்படுத்தலாம் என்கிறது முதற்கொள்கை.

இரண்டாவது கொள்கை :

இது எல்லையோரக் கடல் கருத்தையொட்டி (the Concept of Territorial Sea) எழுவதாகும். அதாவது வான் மண்டலம் எந்த நாட்டு நிலப்பரப்பிற்கு மேலுள்ளதோ அந்த நிலநாடு ஒரு குறிப்பிட்ட உயரம் வரை உள்ள வான் மண்லத்தை தன் இறைமையின் கீழ்க் கொண்டு வரலாம். அதற்கு மேற்பட்ட வான் மண்டலம், எல்லா நாடுகளுக்கும் பயன்படத்தக்க வகையில் திறந்த பொது வான் மண்டலமாகத் கருதப்பட வேண்டும் என்பது இரண்டவாது கொள்கையாகும்.

மூன்றாவது கொள்கை :

இக்கொள்கைப்படி நிலத்தினையொட்டி விரிந்துள்ள வான்மண்டலத்தை நில வான் மண்டலம் (Air Belt) எனவும், அதற்கு மேலெழும் வான் மண்டலத்தை மேல் வான் மண்டலம் (Open Air Space) எனவும் கொண்டு, இந்த மேல் வான் மண்டலம் திறந்த பொதுப் பயன் மண்டலமாகக் கருதப்படுதல் வேண்டும் என்பதாகும். இதுவரை இக்கொள்கை, இரண்டாவது கொள்கையையொட்டியே அமைந்துள்ளது. ஆனால் இக்கொள்கைப்படி நில நாடு தன் நன்மையைக் கருதி மேல் வான் மண்டலத்திலும் சில நெறிமுறைகளைத் தோற்றுவிக்கவும், ஒழுங்கு விதிகளை ஏற்படுத்தவும் உரிமையும், ஆற்றலும் பெற்றவை.

நான்காவது கொள்கை :

இக்கொள்கைப்படி நிலநாட்டிற்குத் தன் மேலுள்ள வான் மண்டலத்தின் மீது முழு இறைமையும் உரிமையும் ஆதிக்கமும் உண்டு. இதன்படி வான் மண்டலத்தில் நில நாட்டின் ஆதிக்கத்திற்கு உயர எல்லையே கிடையாது. எனவே நிலநாடு, தான் விருப்பப்பட்டால் எந்நாட்டு வானவூர்தியையும் தன் வான் மண்டலத்தில் நுழைவதிலிருந்து தவிர்க்கும் ஆற்றல் பெற்றதாகும்.

அய்ந்தாவது கொள்கை :

இக்கொள்கை நான்காவதாகக் கூறப்பட்டுள்ள கொள்கையிலிருந்து சிறிது வேறுபட்டது. இக்கொள்கையும் நிலநாட்டிற்கு வான்மண்டலத்தில் வரம்பில்லாத இறைமை ஆதிக்கம் உண்டு, எனும் கருத்தினை ஏற்றுக் கொள்கிறது. ஆனால் மற்ற நாடுகளும் வான் மண்டலத்தின் வழியாகப் பறப்பதற்கும், அதனைப் பயன்படுத்து வதற்கும் உரிமை பெற்றதென்று கூறுகிறது.

மேற்கண்ட அய்ந்து கொள்கைகளுள் நான்காவதாகக் கூறப்பட்டுள்ள, அதாவது வான் மண்டலத்தில் நில நாட்டிற்கு வரம்பற்ற இறைமையுண்டு எனும் கொள்கையே உலகத்தின் பெரும்பாலான நாடுகளில் ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்தாகும். வான் மண்டல இறைமை பற்றிய கருத்துக்கள் முதல் உலகப் போருக்குப் பின் பெரும் மாறுதல்களுக்குள்ளானது. அவை வருமாறு.

முதல் உலகப் போருக்குப் பின் (After the First World

War) (அல்லது) வான்மண்டலம் குறித்த சட்டத்திற்கான ஏற்பு விதிகள் (Law relating to Air space with reference to various conventions):

(1) பாரிஸ் ஏற்பு விதிகள் (Paris Convention) :

முதல் உலகப் போருக்குப் பின் 1919–ஆம் ஆண்டில் வான்வெளிப் போக்குவரத்தை நெறிப்படுத்துவதற்காக **பாரிஸில் கூட்டப்பட்ட மாநாட்டில் இதற்கான ஏற்புவிதிகள் (Convention for the Regulation of Aerial Navigation at the Conference of Paris in 1919)** உருவாக்கப்பட்டு ஏற்கப்பட்டன. இதில் அமெரிக்கா கலந்து கொள்ளவில்லை. இந்த ஏற்பு விதிகள் மிகவும் பரந்த நோக்குடையன. அதன் நான்கு முக்கிய கொள்கைகள் பின்வருமாறு.

1. நிலநாட்டிற்குத் தன் வான்மண்டலத்தின் மீது இறைமையுண்டு.

2. இதில் கண்ட ஏற்பு விதிகளுக்கு (Convention), தரப்பு (Party) நாடாக இருந்து ஏற்புறுதி (Ratification) வழங்கியுள்ள நாடுகளுக்குள்ளாக, அமைதிக் காலத்தில், ஒன்றின் வான்மண்டலத்தில், மற்ற நாட்டிற்குத் **'தீங்கில்லா வழியுரிமை' (Freedom of Inncocent Passage)** உண்டு. ஆனால் வான்வெளிப் போக்குவரத்தில் தொடர்ச்சியாக ஈடுபட்டுள்ள அனைத்துலக விமான நிறுவனங்கள் நிலநாட்டின் சம்மதத்தை தனியாகச் பெற்றிருந்தாலொழிய இச்சலுகைகள் நேரடியாகச் செயற்படாது.

3. வானவூர்திகளைத் (Air Crafts) தன்னாட்டில் பதிவு செய்யும்போது, பதிவு (Registering) செய்யும் நாடு அந்த வானவூர்தி தன்னாட்டவனுக்கு (National) சொந்தமானதாக இருந்தாலொழியப் பதிவு செய்தல் கூடாது.

4. வானவூர்திகளைப் பதிவு செய்யும்போது ஒரே வானவூர்தியை இரண்டு நாடுகள் பதிவு செய்தல் கூடாது.

(2) ஹவானா ஏற்புவிதிகள் (Havana Convention) :

மேற்கூறிய பாரிஸ் மாநாட்டிற்கு அமெரிக்கா, ஒரு, தரப்பு நாடாகக் கலந்து கொள்ளாததால், அது மற்ற நாடுகளுடன் சேர்ந்து ஹவானா ஏற்புவிதிகளை உருவாக்கியது. இவ்வேற்பு விதிகள் பாரிசில் கூடிய மாநாட்டின் ஏற்பு விதிகளையே பெரும்பாலும் பின்பற்றியவை. ஆனால் இம்மாநாடு பெரிதும் வாணிப வான் பணியைப் பற்றிய ஏற்பு விதிகளை (Convention on Commercial Air Navigation) உருவாக்கும் பொருட்டு 1928–ஆம் ஆண்டில் ஹவானாவில் கூட்டப்பட்டது.

(3) வார்சா ஏற்புவிதிகள் (Warsaw Convention):

1929–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வார்சா ஏற்புவிதிகள் முக்கியமாக

சர்வதேச வணிகம் மற்றும் சரக்கு போக்குவரத்து (International transport of traffic and goods) குறித்ததாக இருந்தன.

(4) சிக்காகோ ஏற்புவிதிகள் (Chicaco Convention):

வானவூர்திகள் எண்ணிக்கையில் பெருமளவு பெருகிவிட்டதனாலும், அவற்றின் தொழில் நுணுக்கங்களில் பெரும் முன்னேற்றங்கள் ஏற்பட்டுவிட்ட தாலும், ஏற்கனவே இருந்த விதிகளில் முன்னேற்றம் செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டதன் காரணமாகவும் 1944–ஆம் ஆண்டில் சிக்காகோ நகரில் இம்மாநாடு கூட்டப்பட்டது. இம்மாநாட்டில் 40 நாடுகள் பங்கு கொண்டன. இம்மாநாட்டில் வாணிப வான் போக்குவரத்து உரிமைகளைப் பற்றியும் பேச்சு நடந்தது. இம் முக்கியமான மாநாட்டில், ஒவ்வொரு நாட்டிற்கும் வான்மண்டலத்தில் பின்வரும் அய்ந்து சுதந்திரங்கள் இருத்தல் (Five Freedoms of Air) அவசியம் என அமெரிக்கா வலியுறுத்தியது. அவை வருமாறு,–

வான் மண்டலத்தின் அய்ந்து சுதந்திரங்கள் (Five Freedoms of Air):

1. நிலத்தில் இறங்காமல் மற்ற நாட்டின் வான் மண்டலத்தில் பறந்து கடக்கும் சுதந்திரம் (Freedom to fly across foreign territory without landing);

2. பயணிகள் அல்லது சரக்குகளின் போக்குவரத்துப் பணியில் ஈடுபடாமல் மற்றக் காரணங்களுக்காக ஒரு நாட்டில் இறங்கும் சுதந்திரம் (Freedom to land for non-traffic purposes);

3. வானவூர்தி எந்நாட்டைச் சார்ந்ததோ அந்நாட்டிலிருந்து புறப்பட்டு எந்த வெளிநாட்டில் இறங்குகிறதோ அந்த நாட்டிற்குச் செல்லும் பயணிகளையும் சரக்குகளையும் இறக்குவதற்காக இறங்கும் சுதந்திரம் (Freedom to disembark in foreign territory traffic originating in the State of the origin of the craft);

4. அதேபோல் எந்நாட்டில் இறங்குகிறதோ அந்நாட்டிலிருந்து தன் நாட்டிற்குப் பயணிகளையோ அல்லது சரக்குகளையோ ஏற்றிச் செல்வதற்காக இறங்கும் சுதந்திரம் (Freedom to pick up in any foreign country traffic destined for the State of origin of aircraft); மற்றும்

5. இரு வெளிநாடுகளுக்கிடையே பயணப் பணி புரிவதற்காக இறங்கும் சுதந்திரம் (Freedom to carry traffic between two foreign countries);

இதனையொட்டி நாடுகளுக்கிடையே பொதுவான கருத்தொற்றுமை ஏற்படாத காரணத்தால் இவ்வைந்து சுதந்திரங்களும் நாடுகளால் ஒருமனதாக ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அவற்றில் சில சுதந்திரங்களை சில நாடுகள் ஏற்றுக் கொண்டன. சில நாடுகள் ஏற்க மறுத்தன. எனவே நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்படும்

அச்சுதந்திரங்களையொட்டி, பின்வரும் இரண்டு சர்வதேச உடன்படிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்பட்டன. அவை,

(1) சிக்காகோ சர்வதேச வான் சேவைகள் இடங்கடப்பு உடன்படிக்கை (Chicago International Air Services Transit Agreement): இவ்வுடன் படிக்கையில் மேற்கண்ட அப்ந்து சுதந்திரங்களில், முதலிரண்டு சுதந்திரங்கள் சேர்க்கப் பட்டன. இவ்விரண்டு சுதந்திரங்களும் உலக நாடுகள் பலவற்றாலும் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டன. இச்சுதந்திரங்களை ஒரு நாடு மற்றொரு நாட்டிற்கு அளிக்க முன்வந்தன. எனவே இவ்வுடன்படிக்கையை **'இரு சுதந்திர உடன்படிக்கை' (Two Freedoms Agreement)** என்று சிறப்பாக அழைப்பதுமுண்டு.

(2) சிக்காகோ சர்வதேச வான் போக்குவரத்து உடன்படிக்கை (Chicago International Air Transport Agreement): மேற்கண்ட அப்ந்து சுதந்திரங் களில் மிதமுள்ள மூன்று சுதந்திரங்கள் இவ்வுடன்படிக்கையில் சேர்க்கப்பட்டன. ஆனால் இவ்வுடன்படிக்கையில் சில நாடுகள் மட்டுமே கையொப்பம் செய்தன.

மொத்தத்தில் மேற்படி சிக்காகோ மாநாடு நாடுகளிடையே உண்டான 'குடிமை வான்போக்குவரத்தை' (The International Civil Aviation) ஒட்டித் தோற்றுவித்துள்ள சில 'ஏற்பு விதிகள்' (Conventions) உலக அரங்கில் வான் மண்டலப் போக்குவரத்துக் கொள்கைகளை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளன என்றால் அதில் மிகையில்லை.

மேற்கண்ட பன்முக உடன்படிக்கைகளுக்கு (multilateral treaties) இணங்காத சில நாடுகள், தங்களுக்குள் இருதலை உடன்படிக்கைகளைச் (bilateral treaties) செய்து கொண்டு, அவற்றின் வாயிலாக தங்கள் வான்மண்டல சுதந்திரங்களை ஒரு நெறிமுறைக்குள் கொண்டு வந்தன.

(5) சர்வதேச குடிமை வான்போக்குவரத்துக் குழு ஏற்றுக் கொண்ட உடன்படிக்கைகள் (Treaties adopted by the International Civil Aviation Organisation):

1947–ஆம் ஆண்டில் சர்வதேச குடிமை வான்போக்குவரத்துக் குழு ஏற்படுத்தப்பட்டது. இக்குழு சர்வதேச வான் போக்குவரத்து மற்றும் வான்வழி வணிகத் தொடர்பு குறித்து பல விதிகளை உருவாக்கியது. அந்த வகையில் பின்வரும் உடன்படிக்கைகளை இக்குழு ஏற்றுக் கொண்டது. அவை,–

(1) வானவூர்தி உரிமைகளுக்கு சர்வதேச அங்கீகாரமளித்தல் தொடர்பாக 1948–ஆம் ஆண்டில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஏற்புவிதிகள் (Convention of 1948 on the International Recognition of Rights in Aircraft).

(2) 1952–ஆம் ஆண்டின் உரோம் ஏற்புவிதிகள் (Roam Convention

of 1952): இது, வான் சேவையில் ஈடுபட்டிருக்கும் மற்றொரு தரப்பு நாட்டிற்கு ஒரு வெளிநாட்டு வானவூர்தி இழைக்கும் சேதம் குறித்த விதிகளைக் கூறுகின்றன.

(3) 1959–ஆம் ஆண்டின் வார்சா ஏற்புவிதிகளின் திருத்த ஒப்பந்தம் (Protocol of amendments of Warsaw Convention, 1959): இது, வான் பயணிகளுக்கும் சரக்குகளுக்கும் வானவூர்திகள் கொண்டுள்ள பொறுப்பு குறித்து கூறுகின்றன.

(6) டோக்கியோ ஏற்புவிதிகள் (Tokyo Convention):

1963–ஆம் ஆண்டில் டோக்கியோவில் நடந்த மாநாட்டில், வானவூர்தி கடத்தலுக்கெதிரான (Aircraft Hijacking) ஏற்புவிதிகள் பல நாடுகளாலும் ஏற்கப் பட்டன. இவ்விதிகளுக்கு நமது நாட்டிலும் செயலாக்கம் கொடுக்க, நமது இந்தியப் பாராளுமன்றம் 1975–ஆம் ஆண்டில் 'டோக்கியோ ஏற்புவிதிகள் சட்டத்தை' (Tokyo Convention Act, 1975) இயற்றியது.

(7) ஹேக் ஏற்புவிதிகள் (Hage Convention):

வானவூர்தி கடத்தலுக்கெதிரான டோக்கியோ ஏற்புவிதிகளின் சற்று மேம்பட்ட வடிவமே, ஹேக் ஏற்புவிதிகள் ஆகும். இவ்விதிகள் 1970–ஆம் ஆண்டில் ஹேக் எனுமிடத்தில் கூட்டப்பட்ட மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டன. இதில் வானவூர்திகள் கடத்தலை ஒடுக்கவும், குடிமை வான் போக்குவரத்திற்கு அதனால் ஏற்பட்டிருந்த அச்சுறுத்தலைத் தடுக்கவும் பல்வேறு விதிகள் வகுக்கப்பட்டிருந்தன. இவ்விதிகளுக்கு நமது நாட்டில் செயலாக்கம் கொடுக்கும் பொருட்டு, நமது இந்தியப் பாராளுமன்றம், 1982–ஆம் ஆண்டில் 'வானவூர்திக் கடத்தல் எதிர்ப்புச் சட்டத்தை' (Anti-Hijacking Act, 1982) இயற்றியது.

(8) மாண்ட்ரியல் ஏற்புவிதிகள் (Montreal Convention):

வானவூர்தி கடத்தலைத் தடுப்பதில் பல்வேறு முனைப்பான விதிகளை மேற்படி ஹேக் ஏற்புவிதிகள் கொண்டிருந்தாலும், சர்வதேச வான்வூர்திக் கடத்தல் தொடர்பான நாடுகளின் அதிகாரவரம்பு, அக்குற்றவாளிகளைப் பிடித்து சம்பந்தப் பட்ட நாட்டிடம் மீட்டொப்படைத்தல் குறித்த விதிகளை வகுக்கும் பொருட்டு, 1971–ஆம் ஆண்டில் மாண்ட்ரியல் ஏற்புவிதிகள் ஏற்கப்பட்டன.

வான் பயனுரிமை ஒதுக்கம் (Air Cabotage) :

நாடுகளிடையே உண்டான பயணிகள் விமானப் போக்குவரத்து (Scheduled International Air Services), சம்பந்தப்பட்ட இடை நாடுகளின் சம்மதத்தின் பேரில் அல்லது ஒப்பந்த நிபந்தனைகளின் பேரில் ஒழுங்குபடுத்தப் படுகிறது எனக் கண்டோம். ஆனால் ஒரு நாட்டிற்குள் நடத்தக் கூடிய விமானப்

போக்குவரத்தை அந்நாடுகள் விரும்பினால் முற்றிலும் அந்நிலநாடுகளுக்கே உரியதென ஒதுக்கி வைக்கலாம். இது 'வான்பயனுரிமை ஒதுக்கம்' (Air Cabotage) எனப்படுகிறது. இவ்வாறு வான் மண்டலத்தில் உள்நாட்டு விமானப் போக்குவரத்துப் பயன்களை முற்றிலும் நிலநாடே பெறும் வகையில் வழி செய்வதற்குண்டான கொள்கையையும் நாம் முன்கண்ட சிக்காகோ மாநாடு வகுத்துக் கொடுத்தது.

வான்மண்டலமும் வான் ஒலிபரப்பும் :

வான்மண்டலம் போக்குவரத்திற்குப் பயன்படுத்தப்படுவது மட்டுமல்லாமல் வான் ஒலிபரப்பிற்கும் (Radio Broadcasting) பயன்படுத்தப்படுகிறது. இதுவும் சில சிக்கல்களைத் தோற்றுவிக்க வல்லது. இதையொட்டி சில விதிகள் நாட்டிடைச் சட்டத்தில் வழங்கப்பட்டு வருகின்றன. அவை,

1. ஒவ்வொரு நாடும் தன் வான் மண்டலத்தில் தனக்கோ அன்றி மற்ற நாடுகளுக்கோ பாதிப்பு ஏற்படுத்தும் செய்திகளைத் தாங்கிய ஒலிக் கதிர்களை, தன் வான் மண்டலத்தை ஊடுருவிக் கடப்பதைத் தடுக்கும் உரிமை பெற்றது.

2. மேலும் ஒரு நாடு தன் வான் மண்டலத்தை மற்ற நாட்டுக்குத் தீங்கேற் படுத்தும் வகையில் ஒலிபரப்பு செய்வதற்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்கக் கடமைப்பட்டது.

முடிவுரை :

வான்மண்டல இறைமை தொடர்பாக பல்வேறு ஆண்டுகளில் படிப்படியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட பல்வேறு ஏற்புவிதிகளாலும் பெரிதும் முன்னேற்றமடைந்தன. குறிப்பாக வான்மண்டலத்தைப் வான் போக்குவரத்திற்காக பயன்படுத்துதல், சர்வதேச வான்வூர்தி கடத்தலுக்கு எதிரான வகைமுறைகள் ஆகியவற்றில் பெரும் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ளன. இம்மாறுதல்கள் இன்றும் தொடர்கின்றன.

32. Outer Space - Write short notes. (விண்வெளி மண்டலம் – சிறு குறிப்பு எழுதுக.)

'வான் மண்டலம்' எனப்படும் வான்வெளிக்கு (Air Space) அடுத்துள்ளது விண்வெளியாகும் (Outer Space). வான்வெளியில் பயணம் செய்ய வானவூர்தி கண்டுபிடிக்கப்பட்டது. அறிவியலும் தொழில் நுட்பமும் வளர வளர வான்வெளிக்கு அப்பால் விண்வெளிக்கு சென்று அங்கிருக்கும் கோள்களைப் பற்றி ஆராயும் ஆர்வமும் வளர்ந்தது. இதற்கொப்ப விண்கலன்களும் செயற்கைக் கோள்களும் கண்டு பிடிக்கப்பட்டன. இவையெல்லாம் மகிழ்வுக்குரிய விஷயங்கள்தாம். ஆனால் எப்பொழுது ஒரு நாட்டின் ஆள்நிலப்பரப்பு வான்வெளியையும் தாண்டி விண்வெளிக்கும் சென்று விட்டதோ அப்பொழுதிலிருந்து நாட்டிடைச் சட்டத்தில் ஒரு நாட்டின் இறைமை அதிகாரம் குறித்த சிக்கல்கள் தோன்ற ஆரம்பித்து விட்டன. எனவே இவை குறித்து தக்கவாறு விதிகள் செய்ய வேண்டியது அவசியம் என்ற கருத்து உருவானது.

ஒரு நாட்டிற்கு அதன் நிலப்பரப்பிற்கு மேலுள்ள வான் மண்டலத்தில் எல்லையற்ற உயரத்திற்கு இறைமை உண்டு என்பது பழைய விதி. இது நடைமுறை சாத்தியமும் உடையதல்ல. ஒரு குறிப்பிட்ட உயரம் வரைதான் ஒரு நாட்டிற்கு வான் மண்டலத்தில் இறைமை உண்டு என்பது தற்காலக் கருத்தாகும். அதன்படி ஒரு நாட்டின் விண்கலம் இதர நாடுகளின் வான்வெளி மண்டல எல்லையைத் தாண்டி விண்வெளி மண்டலத்திற்குள் சென்றுவிடுமாயின், அதனை மேற்படி நாடுகள் எதிர்க்கவோ அல்லது குறை கூறவோ முடியாது. மேலும் விண்வெளி என்பது நிலையற்றது. அதில் கோள்கள் இடம் மாறிக் கொண்டேயிருக்கும். ஆகவே அவற்றின் மீது ஒரு நாடு நிலையான ஆதிக்கம் கொண்டாட இயலாது.

1957–ஆம் ஆண்டில் இரஷ்யா தனது முதல் செயற்கைக் கோளை விண் வெளியில் அனுப்பியது முதற்கொண்டு இன்று இந்தியா உட்பட பல நாடுகளும் போட்டி போட்டுக் கொண்டு விண்வெளி ஆய்வுக்காகவும், மற்ற கோள்களின் (Other Planets) நிலைகளைக் கண்டறியவும் விண்கலன்களையும், செயற்கைக் கோள்களையும் அனுப்பி வருகின்றன.

இவ்வகையில் விண்வெளியை எல்லா நாடுகளின் நன்மைக்காகவும் பொதுவாக நாடுகள் பயன்படுத்தலாம் என்ற கருத்தைக் கொண்டிருப்பதாக எண்ண இடமுள்ளது. எனவே இதனையொட்டி அய்க்கிய நாடுகளின் பொதுச் சபை தனது 1721–வது தீர்மானத்தில், 'விண்வெளியை மனித இனத்தின் பொது நலனிற் காகவும், அனைத்துலக அரங்கில் நாடுகளிடையே ஒத்துழைப்பை வளர்க்கவும் பயன்படுத்துதல் வேண்டும்' எனவும், 'இது எல்லா நாடுகளின், அவை பொருளாதார அறிவியல் துறைகளில் முன்னேற்றம் அடைந்திருந்தாலும் இல்லையென்றாலும், பொதுவான நன்மைக்கும் பயன்பட வேண்டும்' என்றும் வலியுறுத்தியுள்ளது.

மேற்படி தீர்மானம் விண்வெளிக் கொள்கையை வெளிப்படுத்துகிறது. இந்தத் தீர்மானம் விண்வெளியும், கோள்களும் நாடுகளின் பொது நன்மைக்கும், ஆய்வுக்கும் உரியவை; அவைகள் எந்தத் தனியொரு நாட்டாலும் உரிமை கொண்டாடத் தக்கவை அல்ல என்ற கருத்தை வெளியிடுகிறது.

33. Describe the rule of International Law regarding the rights of a Coastal State over its territorial waters and continental shelf. (கடலோர நாட்டின் எல்லையோரக் கடல் மற்றும் கண்டத்திட்டு ஆகியவைக் குறித்து நாட்டிடைச் சட்டத்தின் விதிகளை விவரிக்க.)

(அல்லது)

Decribe the rules of International Law regarding the rights of a Coastal State over its (a) territorial water, (b) continental shelf and (c) exclusive economic zone. (கடலோர நாட்டின் (அ) எல்லையோரக் கடல் (ஆ) கண்டத்திட்டு (இ) தனி உரிமை கொண்ட பொருளாதார பகுதி ஆகியவற்றைக் குறித்து நாட்டிடைச் சட்டத்தின் விதிகளை விவரிக்க.)

(அல்லது)

Explain Territorial Sea, Contiguous Zone and Economic Zone. (எல்லையோரக் கடல், இணை பகுதி மற்றும் பொருளாதாரப் பகுதி ஆகியவற்றை விளக்கவும்.)

(அல்லது)

Territorial Waters - Write short notes. (எல்லையோரக் கடல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Continental Shelf - Write short notes. (கண்டத்திட்டு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Discuss the Coastal State's Exclusive economic zone. (கடலோர நாட்டின் தனி உரிமை கொண்ட பொருளாதாரப் பகுதியை பற்றி விளக்குக.)

(அல்லது)

Exclusive economic zone - Write short notes. (ஒதுக்கப்பட்ட பொருளாதாரப் பகுதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"No branch of International Law has undergone revolutionary changes than the law of the sea during the past decade". Explain. ("கடந்த பத்தாண்டுகளில் கடல் பற்றிய சட்டத்தைப் போன்று புரட்சிகரமான மாறுதலுக்குள்ளான சர்வதேசச் சட்டத்தின் பிரிவு வேறொன்றும் இல்லை"– விளக்குக.)

(a) எல்லையோரக் கடல் (Territorial Waters) :

ஒரு நாட்டின் நில எல்லைப்பகுதி கடலையொட்டி முடிவதாகக் கொண்டால், அக்கடலில், கரையையொட்டி அமைந்துள்ள பகுதியே **'எல்லையோர கடல்'** (Territorial Water or Territorial Sea) எனப்படுகிறது. இதனைக் **'கரையோரக் கடல் கச்சை'** (Maritime Belt) என்றும் அழைப்பதுண்டு. இது குறித்து இருவகைக் கருத்துக்கள் நிலவுகின்றன. அவை வருமாறு.

இரு வகைக் கருத்துகள் : எல்லையோரக் கடலானது, கடற்கரை நாட்டின் ஆள்நிலப்பகுதி எனவும், அது கரையோர நாட்டின் சொத்தெனவும், அதன் மீது கரையோர நாட்டிற்கு முழு ஆதிக்கம் உண்டெனவும், ஆனால் மற்ற நாட்டு வணிகக்

கப்பல்களுக்குத் தீங்கிலா வழியுரிமை மட்டுமே உண்டு என்றும் ஒரு சாரார் கூறுகின்றனர்.

மற்றொரு சாரார் கரையோர நாட்டிற்கு, எல்லையோரக் கடலில் ஆதிக்கம் செலுத்தவோ, தன் நிலப்பகுதியாகக் கருதவோ உரிமையில்லை எனவும், கரையோர நாடு தனது எல்லைக் கரையின் நன்மையைக் கருதி காவல் உரிமையும் ஆளுகை அதிகாரவரம்பும் (Jurisdiction), சில கட்டுப்பாடுகளை செயல்படுத்தும் உரிமையும் மற்றும் அது போன்ற சில உரிமைகளும் பெற்றவையே தவிர, கோண்மை பெற்றவை அல்ல என்றும் கூறுகின்றனர். ஆனால் நாடுகள் நடைமுறையில் முதல் வகைக் கருத்தையே கடைப்பிடித்து வருகின்றன.

எல்லையோரக் கடலின் அகலம் (Breadth of the Territorial Sea) :

ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் மீது அந்நாட்டிற்கு முழு ஆதிக்கம் உண்டு என்ற கருத்தே நாட்டிடைச் சட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக ஆகிவிட்டது என முன்னர் கண்டோம். ஆனால் எவ்வளவு தூரம் வரை இவ்வகை ஆதிக்கம் உண்டு என்பது, எல்ரையோரக் கடலின் அகலத்தைப் பொறுத்துதான் அமைகிறது. அதாவது கரையொட்டிய நாட்டின் ஆதிக்கத்திற்குட்பட்ட பகுதி, கடலில் எவ்வளவு தூரம் உள்நோக்கிப் போகிறது என்பதைப் பொறுத்துதான் அந்நாட்டின் இறைமை அமைகிறது. மேலும் அதனை எவ்வாறு அளப்பது என்பதில் பலவித கருத்துக்கள் உலக நாடுகளிடையே நிலவின.

எல்லையோரக் கடலின் அகலம் பற்றிப் பல நாடுகள் பலவகையில் உரிமை கொண்டாடின. இது மூன்று மைல் முதல் நூறு மைல் வரை கூட இருந்தன. சில நாடுகள் பார்வை தூரம் (பதினான்கு மைல்) மற்றும் சில நாடுகள் பீரங்கி குண்டு பாயும் தூரம் (3 மைல்) எனவும் கூறி வந்தன. இவற்றில் பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மூன்று மைல் கொள்கை நாடுகளால் பரவலாக ஏற்கப் பட்டிருந்தது. பீரங்கி தொழில் நணுக்கத்தில் ஏற்பட்ட முன்னேற்றதின் காரணமாக குண்டு தாக்கும் தூரமும் அதிகாரிக்கவே மூன்று மைல் கொள்கையிலும் மாற்றமேற் படத் துவங்கியது. 1930–ஆம் ஆண்டின் ஹேக் மாநாட்டில் மூன்று மைல் அகலம் பற்றிய பொதுவான எண்ணம் நாடுகளுக்கு இருந்தபோதிலும் சில நாடுகளின் மாறுபட்ட போக்கினால் இது பற்றிய கருத்தொற்றுமை காண முடியாமல் போயிற்று. எனவே, அம்மாநாட்டில் இதற்கான ஏற்பு விதிகள் வரைவு நிலையுடனேயே ஏற்கப் படாமல் கைவிடப்பட்டன. 1958–ஆம் ஆண்டிலும் 1960–ஆம் ஆண்டிலும் ஜெனீவாவில் (கடல் சட்டத் தொகுப்பிற்காக) கூடிய மாநாட்டிலும் கருத் தொற்றுமை ஏற்படவில்லை. 1960–ஆம் ஆண்டு மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன் மற்றும் பல நாடுகள் 6 மைல் அகலக் கொள்கையை ஆதரித்தன. இவ்விரண்டு கருத்துக்களுக்குமிடையே ஆறு மைல் அகல எல்லைக்கும், பனிரெண்டு மைல் மீன் பிடிப்புப் பகுதிக்கு வழி வகுக்கும் வகையில் தெரிவிக்கப்பட்ட சமரசக் கருத்தும் ஆதரவு பெறவில்லை.

இறுதியாக 1982–ஆம் ஆண்டு நடந்த கடல் சட்டம் பற்றிய அய்க்கிய நாடுகள் ஏற்பு மாநாட்டில் (U.N. Covention on the Law of Sea, 1982) எல்லையோரக் கடலின் அகலம் 12 மைல் என நிருணயிக்கப்பட்டது. பொதுவாக எல்லையோரக் கடல் 12 மைல்களுக்கு அப்பால் நீட்டிக்கப்பட்டால், அது நாட்டிடைச் சட்டத்திற்கு முரணானதாகக் கொள்ள வேண்டும்.

எல்லையோர கடலின் அகலத்தை அளக்கும் முறை :

பல நாடுகள் (இந்தியா உள்பட) வற்றிய நீர் நிலையை (Low Water Mark Line) ஒட்டிக் கடற்கரையிலிருந்து எல்லையோரக் கடலின் அகலத்தை அளக்க வேண்டும் என்கின்றன. இதன்படி எல்லையோரக் கடலின் எல்லையும் கடற்கரையின் எல்லை போலவே வளைந்து வளைந்து இருக்கும். சில நாடுகள் (நார்வே உள்பட) இது கடற்கரையின் எல்லா வளைவுகளையும் ஒட்டி இருக்க வேண்டியதில்லையென்றும், கடற்கரையின் வெளிமுனைகளை ஒரு நேர்க் கோட்டால் இணைத்து அந்த நேர்க்கோட்டியிலிருந்து எல்லையோரக் கடலின் அகலம் அளக்கப்பட வேண்டுமென்றும் கூறுகின்றன. 1959–ஆம் ஆண்டில் ஜெனீவாவில், அய்க்கிய நாடுகள் சபையில் நடந்த கூட்டத்தில், பொதுவாக நாட்டின் கரையிலிருந்து வற்றிய நீர் நிலையை ஒட்டி எல்லா வளைவுகளையும் தொடர்ந்து அளக்க வேண்டுமென்றும்; நாட்டின் கடற்கரை மிகவும் வளைந்தும், ஒடிந்தும், பல தீவுகளை அருகே உடையதாகவுமிருந்தால், கரையின் பொதுவான திசையில் வரையப்படும் நேர்க் கோட்டிலிருந்து அளக்க வேண்டும் என்றும் முடிவானது. மேலும், இக்கூட்டத்தில் இந்தியாவும், மெக்ஸிகோவும் எல்லையோரக் கடலின் அகலத்தை அந்தந்த அண்டை நாடுகள் அவற்றின் வசதியைப் பொறுத்து நிருணயித்துக் கொள்ளலாமென்றும், ஆனால் அது அதிகப்படியான தூரமாகிய 12 மைலுக்கு மேற்படக்கூடாது என்றும் கூறியிருப்பது கவனத்திற்குரியது.

தீங்கற்ற வழியுரிமை (Right of Innocent Passage) :

எல்லையோரக் கடலைப் பொருத்தவரை, கரையோர நாடு பூரண ஆதிக்கம் செலுத்தலாம். ஆனால் இது மற்றைய நாடுகளின் கப்பல்களுடைய தீங்கற்ற வழியுரிமைக்குக் கட்டுப்பட்டதாகும். மற்றைய நாடுகள் கடலோர நாட்டிற்கு தீங்கு விளைவிக்காவண்ணம் எல்லையோரக் கடலில் தங்களது கப்பல்களைச் செலுத்திச் செல்லலாம். நீர் முழ்கிக் கப்பலாயிருப்பின் எல்லையோரக் கடலில் செல்லுகையில் கடலின் மட்டத்திற்கு மேல் தோன்றி அதனுடைய கொடியைக் கடலோர நாட்டிற்குக் காட்டிக் செல்ல வேண்டும்.

(b) கண்டத் திட்டு (Continental Shelf) :

ஒரு கண்டத்தின் நிலப்பகுதி, கடலுக்குக் கீழும் அதே தன்மையுடன் தொடருகிறது. கடலுக்குள் கீழ் கண்டத்தின் தொடர்ச்சி, சீரான சாய்வுடன் ஆழ் கடல் நோக்கிச் செல்கிறது. அது, கடலின் ஆழம் ஏறத்தாழ 200 மீட்டரை அடையும்

பொழுது திடீரென கடலுக்குக் கீழுள்ள நிலம் அதிகம் சரிவுற்று ஆழ்கடலின் அடிப்பாகம் நோக்கிச் செல்கிறது. அவ்விடத்தில் கண்டத்தின் தொடர்ச்சி, அற்றுப் போகிறது. வேற்றுத் தன்மையுடைய கடல், கீழ்ப்பகுதியில் காணப்படுகிறது. கண்டத் தொடர்ச்சித் திடீரென சரிந்து போகின்ற வரையிலுள்ள பகுதி **'கண்டத் திட்டு' (Continental Shelf)** எனப்படும். அதன் பிறகு ஆழ்கடலின் ஆழம் திடீரென அதிகரித்து அளவிட முடியாத ஆழத்தை அடைகிறது. கண்டத்திட்டின் கடல் படுகையிலும் (Sea bed), அடிநிலத்திலும் (Sub Soil) இயற்கை வளங்கள் அளவற்று உள்ளன. 1945–ஆம் ஆண்டு வரை கண்டத்திட்டு வளங்கள் மீது எவ்வுரிமையையும் எந்நாடும் கொண்டாடவில்லை.

முதன்முதலாக 1945–ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் அமெரிக்க சனாதிபதி **ட்ரூமன் (Truman)** அமெரிக்காவின் கண்டத்திட்டுப் பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் அமெரிக்காவிற்கே உரியதென்றும், மற்ற நாட்டினருக்கு அவற்றை (சுரண்டி) எடுப்பதற்கு உரிமையில்லையென்றும் பிரகடனப்படுத்தினார். இப்பிரகடனத்தைத் தொடர்ந்து மற்றைய நாடுகளும் அவைகளுடைய கண்டத் திட்டு பகுதியிலுள்ள இயற்கை வளங்கள் மீது தனியுரிமை கொண்டாடத் தொடங்கின. ஆனால் இக்கண்டத்திட்டு பகுதியின் மேலுள்ள நீர்ப்பகுதி ஆழ்கடலின் பகுதியாகவே இருக்கும். மற்ற நாடுகளுக்கு ஆழ்கடலில் என்னென்ன உரிமைகளும் சலுகைகளும் உண்டோ, அவை இதனால் பாதிக்கப்படாது. ஆனால் சில இலத்தீன் அமெரிக்க நாடுகள் கண்டத்திட்டுக்கு மேலுள்ள கடலிலும் சில உரிமைகளைக் கோருகின்றன. எனினும் அத்தகைய வாதம் நாட்டிடைச் சட்டத்திற்குப் புறம்பானது.

ஜெனீவா மாநாடு (1958) :

1958–ஆம் ஆண்டில் ஜெனீவாவில் கூடிய மாநாட்டில் கண்டத்திட்டு பற்றி சில ஏற்பு விதிகள் தொகுக்கப்பட்டன. அவை வருமாறு.

சரத்து 1 – கண்டத்திட்டின் விளக்கம் :

(அ) கரையோர நாட்டின் கரையை ஒட்டியதாகவும், அதே சமயத்தில் எல்லையோரக் கடலைத் தாண்டி நீளமாக ஆழ்கடலை நோக்கியும் அமைந்துள்ள அடித்தளமும் (Sea Bed), கீழ் மண்ணும் (Sub Soil) 'கண்டத் திட்டு' எனப்படும். இக்கண்டத் திட்டு எந்த இடத்தில் கடலின் மேல் நீர் மட்டத்திலிருந்து அடித்தளம் இருநூறு மீட்டர் ஆழத்தில் அமிழ்ந்துள்ளதோ அங்கே முடிவதாகக் கருதப்படும்.

(ஆ) நாடுகளுக்குரிய தீவுகளைச் சுற்றியும் இக்கண்டத் திட்டு உண்டொன்றும் இச்சரத்து கூறுகிறது.

சரத்து 2 :

கண்டத்திட்டு பகுதியில் கரையோர நாட்டின் ஒப்புதலின்றி வேறு எந்நாடும் இயற்கைக் கனிம வளத்தைப் பயன்படுத்த முடியாது.

சரத்து 3 :

இந்த ஏற்பு விதி கரையோர நாட்டிற்குக் கண்டத் திட்டின் மீதுண்டான உரிமை, மேல் நீர்ப் பகுதியையும் அதன் மேலுண்டான வான்மண்டலத்தின் தன்மையையும் எவ்விதத்திலும் பாதிக்காது என்று தெளிவுபடுத்துகிறது.

சரத்து 4 :

கரையோர நாடு, கண்டத்திட்டைப் பயன்படுத்தும் விதம் அப்பகுதியில் மற்ற நாடுகளுக்குண்டான நீர் வாழ்வுரிமை, மீன் பிடியுரிமை இவைகளைப் பாதிக்கும் வகையிலோ, கடலடி குழாயமைப்புகள் (Submarine Pipe Lines) அல்லது கடலடி செய்திப் போக்குவரத்துக் கம்பி இணைப்புகள் ஆகியவற்றை (Submarine Cables) பாதிக்கும் வகையிலோ அமையக்கூடாது என்றும் இச்சரத்து கூறுகிறது.

இம்மாநாட்டு ஏற்பு விதிகள், இரண்டோ அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளோ ஒரு குறிப்பிட்ட பகுதியில் 'கண்டத்திட்டு' உரிமை பெற்றிருந்தால் அவற்றின் எல்லைகளை எவ்வாறு வரையறுப்பது என்பது பற்றியும் கூறுகிறது. அச்சமயங்களில் ஒன்றுக்கொன்று தங்கள் பரப்பளவையும், எல்லைகளையும் உடன்படிக்கை மூலமோ, அவ்வாறு உடன்படிக்கை இல்லாதவிடத்து ஒவ்வொரு நாட்டின் கரையிருந்தும் சமதூரம் இருக்கும் வகையில் வரையப்படும் மைய அடிக் கோடு இரு நாட்டுக் கண்டத்திட்டின் பரப்பளவைப் பிரிக்கும் எல்லைக் கோடால் வகுக்கப்படும் என்றும் (Median line, every point of which is equal distant from the nearest points of Base lines) அவ்வேற்பு விதிகள் கூறுகின்றன.

கண்டத்திட்டு பற்றிய சட்டத்தில் அண்மைக் கால முன்னேற்றங்கள்:

1968–ஆம் ஆண்டில் அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபையானது, நாடுகளின் ஆதிக்கத்திற்குட்படாத கடலடி நிலமும் கீழ் மண்ணும் மனித இனத்தின் பொது நன்மைக்காக மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என்றொரு தீர்மானத்தை ஏற்றது. இதே கருத்தை வலியுறுத்தவும், செயல்படுத்தவும் 1970–ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் அய்க்கிய நாடுகளின் பொதுச் சபையானது, மீண்டும் ஓர் தீர்மானத்தை ஏற்றது. இதையொட்டி புது விதிகளைத் தோற்றுவிக்க 1973–ஆம் ஆண்டில் ஒரு மாநாடும் கூட்டப்பட்டது. அதன் பிறகு 1982–ஆம் ஆண்டு கடல் சட்டம் பற்றிய அய்க்கிய நாடுகள் ஏற்பு விதியில், கண்டத் திட்டானது எல்லையோரக் கடலுக்கப்பால் அக்கண்டத் தொடர்ச்சியின் (Continental Margin) வெளி முனை முடியும் வரை தொடர்ந்திருக்கும் அல்லது எங்கிருந்து எல்லையோரக் கடலின் அகலம் அளக்கப்படுகிறதோ அங்கிருந்து 200 நாட்டிகல் மைல் தூரம் வரை கண்டத் திட்டு நீண்டிருக்கும். கண்டத் தொடர்ச்சி அதற்கு மேலும் நீண்டிருந்தாலும் மேற்படி 200 நாட்டிகல் மைல் (nautical miles) தூரத்துடன் கண்டத்திட்டு நின்றுவிடும். அதற்கும் மேல் நீளாது.

(c) தனி உரிமை கொண்ட பொருளாதாரப் பகுதி (Exclusive Economic Zone):

1971–ஆம் ஆண்டில் ஆசிய–ஆப்பிரிக்க சட்ட கலந்துரைக் குழு (Asian - African Legal Consulative Committee), கொழும்பு நகரில் நடத்திய கூட்டத்தில், கடல் பகுதியில் கரையோர நாடுகளுக்கென தனிப் பொருளாதாரப் பகுதி கரைக்கருகாமையில் ஒதுக்கப்பட வேண்டுமெனவும், அப்பகுதியில் கரையோர நாட்டினைத் தவிர மற்றைய நாடுகளுக்கு எத்தகைய பொருளாதார உரிமையும் இருத்தலாகாதெனவும் எடுத்துரைத்து. இக்கருத்து மேலும் சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு ஜெனீவாவில் 1972–ஆம் ஆண்டில் கடல் அடிப்பகுதி பற்றி விவாதிக்க கூட்டப்பட்ட அய்க்கிய நாடுகள் கூட்டத்தில் கென்யா விளக்கியது. அதன் கருத்துப்படி, கடல் பொருளாதாரப் பகுதி, ஒவ்வொரு கடலோர நாட்டிற்கும் கடலோரத்திலிருந்து 200 நாட்டிகல் மைல்களுக்கு நிர்ணயிக்கப்படும். இந்த கடலோரப் பொருளாதாரப் பகுதியில் கடலோர நாடு தனியுரிமை பெற்றிருக்கும். இந்த தனியுரிமை கொண்ட கடலோர பொருளதாரப் பகுதியில் உள்ள வளங்களை வேறு நாடுகள் அனுபவிக்க (சுரண்டிச் செல்ல) அனுமதிக்கப்பட மாட்டாது. இப் பகுதியில் ஆய்வுகளை நடத்தவும், மீன் பிடித்தல், எண்ணெய் எடுத்தல், கனிம வளங்களை வெட்டியெடுத்தல் போன்றவற்றிற்கு கரையோர நாட்டிற்கு முழு ஆதிக்கம் உண்டு.

1982-ஆம் ஆண்டின் கடல் சட்டம் பற்றிய அய்க்கிய நாடுகள் மாநாடு (U.N. Conference on the Law of the Sea, 1982) :

இம்மாநாட்டில் எதிரெதிர் உள்ள கடலோர நாட்டின் தனியுரிமைப் பொருளாதார பகுதியின் அளவை நிர்ணயித்து (Delimitation) ஒரு தீர்வுக்கு வருவதற்கு தொடர்புடைய இருநாடுகளும் உடன்படிக்கை செய்து கொள்ளலாம் என்றும், ஆனால் அவ்வுடன்படிக்கை நாட்டிடைச் சட்டத்திற்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்றும் கூறப்பட்டது.

Case concerning Continental Shelf (Libyan Arab Jahahiriya/Malta[1] 'கண்டத்திட்டு வழக்கு' என அழைக்கப்படும் இவ்வழக்கில், எதிரெதிர் உள்ள கரையோர நாடுகளின் கண்டத்திட்டின் தூரத்தை வரையறுப்ப தற்கு, தொடர்புடைய நாடுகளின் பொருளதார நிலையினை கருத்தில் கொள்ள வேண்டும் என்ற கருத்தினை தவறென்று சர்வதேச நீதிமன்றம் மறுத்துவிட்டது. ஆனால் தொடர்புடைய நாடுகளின் பாதுகாப்பு மற்றும் பலத்தை கருத்தில் கொள்ள வேண்டும் என்ற கூற்றை சர்வதேச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டது.

தனியுரிமை பொருளாதாரப் பகுதி, கண்டத் திட்டு - வேறுபாடு :

தனியுரிமை பொருளாதாரப் பகுதிக்கும் கண்டத் திட்டிற்குமிடையே அநேக

1. Judgment of the I.C.J. of 21 March, 1984

வேறுபாடுகள் உள்ளன. கண்டத் திட்டு, கடல் ஆழத்தின் அடிப்படையிலும், இயற்கையிலேயே கடலடி பூமியிலுள்ள மாறுபாடுகளின் அடிப்படையிலும் நிருணயிக் கப்படுகிறது. கண்டத் திட்டு என்பது, கடல் தூரத்தின் அடிப்படையில் நிர்ணயிக் கப்படுவதில்லை. எனவே, கண்டத் திட்டு 200 நாட்டிகல் மைல்களுக்கு அதிகமாகவும் இருக்கலாம். குறைவாகவும் இருக்கலாம். ஆனால், தனியுரிமை கடல் பொருளாதாரப் பகுதியானது, தூரத்தினை மட்டுமே அளவுகோலாக வைத்து நிருணயிக்கப் படுகிறது. கடலோரத்திலிருந்து 200 நாட்டிகல் மைல் தூரம் கடலோரப் பொருளா தாரப் பகுதியாக கணக்கிடப்படுகிறது. இது கடலோர நாட்டிற்கு நாடு வேறுபடுவ தில்லை. ஆனால் கண்டத்திட்டின் தூரம் ஒவ்வொரு கடலோர நாட்டின் கடலாழத்தையும், கடலின் இயற்கைச் சரிவையும் பொறுத்து மாறுபடும்.

முடிவுரை:

உலகின் முக்கால் பகுதி கடல் சூழ்ந்தது என்பார்கள். கடலுக்கடியில் பல வளங்கள் உள்ளன. ஒரு நாட்டிற்கு ஆள்நிலம் எவ்வளவு முக்கியமோ, அதுபோல் கடலில் எவ்வளவு தூரத்திற்கு ஒரு நாட்டிற்கு ஆதிக்கம், கோண்மை, இறைமை உண்டு என்பதும் முக்கியம். அந்த வகையில் எல்லையோரக் கடல், கண்டத் திட்டு, தனியுரிமை பொருளதாரப் பகுதி குறித்து நாட்டிடைச் சட்டத்தில் சமீப காலமாக பல மாநாடுகள் நடந்து வருகின்றன; ஏற்புவிதிகள் தொகுக்கப்பட்டு வருகின்றன; சர்வதேச உடன்படிக்கைகள் பலவும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, "கடந்த பத்தாண்டுகளில் கடல் பற்றிய சட்டத்தைப் போன்று புரட்சிகரமான மாறுதலுக்குள்ளான சர்வதேசச் சட்டத்தின் பிரிவு வேறொன்றும் இல்லை" என்று கூறுவதில் மிகையொன்றுமில்லை.

34. Contiguous Zone - Write short notes. (கரையொட்டின கடல் பகுதி – சிறு குறிப்பு எழுதுக.)

கரையொட்டிய கடல் என்பது, 'கடலோரக் கடல் கச்சைப் பகுதியை' (Territorial Marine Belt) அடுத்து அமைந்துள்ள ஆழ்கடலின் பகுதியாகும். இப்பகுதி திறந்த ஆழ்கடலுக்கும் (Open High Sea), எல்லையோரக் கடலுக்கும் இடைப்பட்ட பகுதி. இப்பகுதியின் மீது கரையோர நாட்டிற்கு கோண்மை இல்லையெனினும், இதன்மீது சில நெறிமுறைகளையும், கட்டுப்பாடுகளையும், விதிக்கக் கரையோர நாட்டிற்கு உரிமை உண்டு. உதாரணமாக தனது சுங்கச் சாவடி நன்மைக்காகவும், பொருளாதார நன்மைக்காகவும், உடல் நலக் காரணத்திற்காகவும் கட்டுப்பாடு விதித்தல்.

'கரையொட்டிய கடல்' பற்றியும் நாடுகள் பல்வேறு வகையான அளவு அகலங்களைப் பழக்கத்தில் கொண்டு வரவே, இதற்கான சட்டத் தொகுப்பை ஏற்படுத்தவும் 1958–ஆம் ஆண்டின் ஜெனீவா மாநாட்டில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டன. இம்மாநாட்டின் 24–வது விதி இக்கடல் பகுதியின்

தன்மையையும் நாடுகளுக்கு அவற்றின் மீதுண்டான அதிகாரவரம்பையும் விளக்குகிறது. இம்மாநாடு இக்கரையொட்டிய கடல் பகுதியின் அகலம் தரையிலிருந்து பனிரென்டு மைல்களுக்கு மேல் இருக்ககூடாதென்றும் கூறுகிறது. இப்பகுதி, ஆழ்கடலின் பகுதியே என்று முதலிலேயே கண்டோம். எனவே மற்ற நாடுகளுக்கும் இப்பகுதியில் மீன் பிடிக்கும் உரிமை உண்டு என பெரும்பாலான நாடுகள் கூறுகின்றன. ஆனால் இக்கருத்து ஜெனீவா மாநாட்டில் ஏற்கப்படவில்லை. எனினும் தற்போது இவ்வகை உரிமையை நாடுகள் உடன்படிக்கைகள் மூலம் நெறிப்படுத்தி வருகின்றன. இதற்கு எடுத்துக்காட்டாக இலண்டனில் 1964–ஆம் ஆண்டில் கையெழுத்தான அய்ரோப்பிய மீன்பிடி ஒப்பந்ததைக் கூறலாம்.

35. Cabotage - Write short notes. (பயனுரிமை ஒதுக்கம் சிறு குறிப்பு எழுதுக.)

எல்லையோரக் கடல் கச்சையில் கரையோர நாடுகளுக்கு முழு இறைமை உண்டு எனும் கொள்கையினடியாக இரு முக்கிய உரிமைகள் கரையோர நாடுகளுக்கு உண்டு. அவை 'பயனுரிமை ஒதுக்கம்' **(Cabotage)** எனப்படுகிறது.

1. கரை நாட்டிற்குத் தனது எல்லையோரக் கடல் பகுதியில் மீன்பிடித்தல், முத்துக் குளித்தல் போன்ற பயன்தரு துறைகளில் ஈடுபட்டுத் தொழில் புரியும் உரிமையை முற்றிலும் தன்னாட்டு மக்களுக்கே ஒதுக்கீடு செய்து கொள்ளும் உரிமை உண்டு. பயனுரிமை ஒதுக்கம் என்றழைக்கப்படும் இதன் மூலம் நாடுகள் தன் இரு கரைகளுக்கும் இடைப்பட்ட பகுதி அனைத்திலும் பயன் பெறும் உரிமையைத் தன் மக்களுக்கே முற்றிலும் ஒதுக்கி வந்தன.

2. வேறு நாடுகளுடன் கரை நாடு இதற்கெனத் தனி ஒப்பந்தம் செய்து கொள்ளாதவிடத்து கரை நாடு, வேறு நாட்டைச் சேர்ந்த மீனவர்களை இப்பகுதியில் மீன் பிடிப்பதிலிருந்து தடுக்கும் உரிமையும் ஆற்றலும் பெற்றது.

இவை அன்றி மேலும் இரண்டு உரிமைகளையும் கூறலாம்.

3. கரை நாடு தன் நன்மை கருதிக் கப்பல் போக்குவரத்திற்குக் கட்டுப்பாடு விதிக்கவும், தன் காவலுக்குட்படுத்தவும், தன் கரைக் கோட்டை மற்றும் எல்லைப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு வேற்று நாட்டுக் கப்பல்களை குறிப்பிட்ட தடம் வழியாகத்தான் போக வேண்டும் என்று ஆணையிடவும் உரிமை பெற்றவை.

4. தன் எல்லையோரக் கடலில் நுழையும் வேற்று நாட்டு வணிகக் கப்பலினர் (Merchantmen), கரையோர நாட்டிற்கு மரியாதை தெரிவிக்க வேண்டிய விதிகளை உருவாக்கும் உரிமையும் பெற்றவை.

36. Examine with reference to decided cases, the concept of State Servitudes in International Law. (நாட்டிடைச் சட்டத்தில் நாட்டு வசதியுரிமை கருத்து வடிவத்தை தீர்ப்பான வழக்குகளைக் கொண்டு ஆராய்க.)

(அல்லது)

International Servitudes - Write Short Notes. (சர்வதேச வசதியுரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Servitudes - Write short notes. (வசதியுரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

வசதியுரிமை விளக்கம் :

ஒரு நாடு தனது அரசோச்சும் இயைமைதிகாரத்தை மற்ற நாட்டின் நன்மையைக் கருதி குறுக்கிக் கொள்வதோ அல்லது தனது ஆள்நிலப்பரப்பின் ஒரு பகுதியை, மற்றொரு நாடு அதனது இறைமை அதிகாரத்தின் அடிப்படையில் எழும் செய்கைகளைச் செய்வதற்கு அனுமதிப்பதன் வாயிலாக தனது அரசோச்சும் அதிகாரத்தை வரையறைக்குட்படுத்திக் கொள்வதோ **'வசதியுரிமை'** என அழைக்கப்படுகிறது.

சிறந்த எடுத்துக்காட்டு :

அல்சேஸ் மாகாணத்திலிருக்கும் (Alsaces) உறியூனின்ஜன் (Hieningen) எனும் எல்லை நகரத்தில், சுவிட்ஜர்லாந்தின் பகுதியாகிய பாஸில் நாட்டின் பாதுகாப்பிற்காக, கோட்டை கொத்தளங்களை, தாம் என்றுமே எழுப்புவதில்லை என்று உடன்படிக்கை மூலம் அல்சேஸ் மாகாண அரசு ஒத்துக் கொண்டிருப்பது, இதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமைகிறது.

உலகம் சுட்டிய உரிமை :

வசதியுரிமை என்பது உலகத்திற்கெதிராக ஏற்படும் உரிமை. இது **'உலகம் சுட்டிய உரிமை' (Right in rem)** என்றழைக்கப்படும். இவ்வாறு ஒரு நாட்டிற்குத் தன்னாட்டில் வசதியுரிமை வழங்கும் நாடு, தன்னுடைய இறைமையதிகாரத்தைக் குறுக்கிக் கொண்டு ஏற்படுத்திக் கொண்ட ஒப்பந்த நிபந்தனைப்படி ஒரு சில செயல்களைச் செய்யவோ, அன்றி செய்யாமலிருக்கவோ கடமைப்பட்டது. உதாரணமாக, ஒரு நாடு தன்னாட்டு எல்லைக் கடலில் மற்ற நாட்டிற்கு மீன் பிடிக்கும் உரிமை வழங்குவது, தன் நிலப்பரப்பில் இரயில் நிலையங்களை அமைக்கும் உரிமை வழங்குவது, தன் துறைமுகத்தையோ, ஆறுகளையோ, விமான நிலையங்களையோ பயன்படுத்த அனுமதிப்பது ஆகியவற்றைக் கூறலாம்.

சமீப காலத்திய வளர்ச்சி :

நாடுகள், மற்ற நாடுகளுக்குத் தன் நிலத்தில் வசதியுரிமை வழங்குவது அண்மைக் காலந்தொட்டுத்தான் உலக நாடுகளுக்கிடையே வழக்கம் பெற்று வருகிறது. முன்னதாக 1910–ஆம் ஆண்டில் வட அட்லாண்டிக் கரையோர மீன்

பிடிப்பு இசைவுத் தீர்வில் (North Atlantic Coast Fisheries Arbitration), நிலையான இசைவுத் தீர்வுக்குழு (Permanent Court of Arbitration) 1818–ஆம் ஆண்டு வரை அமெரிக்க வழக்கத்திலோ பிரிட்டன் வழக்கத்திலோ இவ்வாறு வசதியுரிமை வழங்கும் பழக்கம் நடைமுறையில் இல்லை என்று கூறித் தீர்ப்பு வழங்கிற்று. எனினும் பின்னிட்டு நாட்டிடை வசதியுரிமை என்பது நாடுகளுக்கிடையே வழங்கிக் கொள்ளக்கூடிய ஒரு உன்னதமான சலுகை எனும் கருத்து வளர்ச்சி பெற்றது. இதன் அடிப்படையில் 1960–ஆம் ஆண்டில் எழுந்த 'இந்திய நிலப்பரப்பின் மேல் கடந்து செல்லும் வழியுரிமை' எனும் வழக்கில், நாடுகளுக்கிடையிலான வசதியுரிமையை சர்வதேச நீதிமன்றம் அங்கீகரித்தது.

வசதியுரிமையின் வகைகள் :

1. செயலாக்க வசதியுரிமை **(Affirmative or Positive Servitudes):** ஒரு நாடு தனது துறைமுகத்தையோ, இரயில் நிலையங்களையோ அல்லது தன் கரையோரக் கடலில் மீன்பிடிக்கவோ, மற்ற நாடுகளுக்கு உரிமை வழங்குவது இவ்வகை வசதியுரிமைக்கு உதாரணம்.

2. மறுதலை வசதியுரிமை **(Negative Servitude) :** இவ்வகை சலுகையை வழங்கும் நாடு தன் செயல் திறனைக் குறுக்கிக் கொண்டு ஒரு சில செயல்களை மற்ற நாட்டின் நலன் கருதி செய்யாமலிருக்க ஒப்புக்கொள்கிறது. இதற்கு முன்னமேயே கூறிய அல்சேஸ்–சுவிட்சர்லாந்து உடன்படிக்கை உதாரணம்.

3. இராணுவ வசதியுரிமை **(Millitary Servitude) :** இராணுவக் காரணங்களுக்காக வழங்கும் வசதியுரிமைகள் இவ்வகைப்படும். இதற்கு உதாரணமாக, ஒரு நாட்டின் வழியாகப் படை நடத்திச் செல்லவோ, பாசறை அமைக்கவோ, கோட்டை கட்டிக் கொள்ளவோ அனுமதிப்பதைக் கூறலாம்.

4. பொருளாதார வசதியுரிமை **(Economic Servitude):** வாணிபப் போக்குவரத்து வளர்ச்சிக்காகவும், நன்மைக்காவும் ஒரு நாடு மற்ற நாட்டிற்கு வழங்கும் உரிமைகள் இவ்வகைப்படும். உதாரணமாக, தன் கடலில் மீன் பிடிக்கும் உரிமை, தன் கடலில் கப்பல் செலுத்தும் உரிமை ஆகியவற்றை மற்ற நாட்டிற்கு வழங்குவது.

முக்கிய வழக்குகள் :

வட அட்லாண்டிக் கரையோர மீன் பிடிப்பு வழக்கிலும் (North Atlantic Coast Fisheries Arbitration), விம்பிள்டன் வழக்கிலும் (Wimbledon 1923) வழக்கிலும் நீதிமன்றங்கள் இவ்வசதியுரிமையை அங்கீகரிக்க மறுத்து விட்டன. ஆனால் 1960–ஆம் ஆண்டில் முதன்முதலாக சர்வதேச நீதிமன்றம் வசதியுரிமைக் கொள்கைக்கு 'இந்திய நிலப்பரப்பின் மேல் கடந்து செல்லும்

வழியுரிமை' வழக்கில் (Right of Passage over Indian Territory Case) ஆதரவும் அங்கீகாரமும் கொடுத்தது.

வசதியுரிமையை முடிவுக்குக் கொண்டு வரல் :

சம்பந்தப்பட்ட நாடுகளுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கைகளின் வாயிலாக அல்லது வசதியுரிமையைப் பெற்ற நாடு வெளிப்படையாகவோ, மறைமுகமாகவோ தனது இவ்வுரிமையை துறந்து விடுவதாலோ, வசதியுரிமை முடிவுக்கு வரும்.

37. Right of Passage case or Right of Passage over Indian Territory Case - Write Short Notes. (இந்திய எல்லை மீது வழியுரிமை வழக்கு – சிறு குறிப்பு எழுதுக.)

இந்திய எல்லை மீது வழியுரிமை வழக்கு:

முக்கியத்துவம்: Portugal v. India[1] என வழங்கப்பட்டு வரும் இவ்வழக்கில் அனுபோக வசதியுரிமைக் கொள்கைக்கு (Servitude) முதன் முதலாக சர்வதேச நீதிமன்றம் அங்கீகாரமும் ஆதரவும் அளித்தது.

மேற்படி வழக்கின் பொருண்மைகள் வருமாறு : போர்சுகீசிய மக்களும், அதிகாரிகளும் மற்றும் பொருட்களும் டாமனிலிருந்து (Daman) இந்திய எல்லைக்குள் இருந்த போர்ச்சுகலுக்குச் சொந்தமான ஒரு நகரத்திற்கு இந்திய எல்லையைக் கடந்து செல்லும் வழியுரிமையை வழக்கமாகப் பெற்றிருந்தனர். இவ்வழியுரிமை, போர்ச்சுகலுக்குள்ள அனுபோக வசதியுரிமையாகும் (Servitude by Prescription) என சர்வதேச நீதிமன்றம் அறிவித்து, அதனை அங்கீகரித்தது.

மாறுபட்ட கருத்து : இந்திய எல்லை மீது செல்வதற்குண்டான வழியுரிமையானது, போர்ச்சுகலுக்கு உள்ள அனுபோக வசதியுரிமையாகும் என்று மேற்கண்டவாறு சர்வதேச நீதிமன்றம் அங்கீகரித்தாலும், இது ஒரு பொது உரிமை (general right) அல்ல என அம்மன்றம் விளம்பியது. ஏனெனில் போர்சுகீசிய ஆயுதப்படையோ அல்லது காவற்படையோ அல்லது ஆயுதங்களோ இந்திய எல்லை மீது கடந்து செல்ல உரிமை பெற்றதல்லவென்றும், இவ்வுரிமை இந்திய அரசின் கட்டுப்பாட்டிற்குட்பட்டதாகும் என்றும் சர்வதேச நீதிமன்றம் கூறியது. ஆகவே இதனை ஒரு அனுபோக வசதியுரிமை என முற்றிலும் கூறிவிட முடியாது எனவும் சர்வதேச நீதிமன்றம் மேலும் பகர்ந்தது.

-o0o-

1. I.C.J. Rep. (1960) p. 6

15

நாட்டின் ஆள்நில ஆதிக்கவரம்பு
[State Jurisdiction]

38. Explain the various kinds of State jurisdiction. (நாட்டின் எல்லை சம்பந்தப்பட்ட பல்வேறு வகை எல்லைகளை விளக்குக.)

(அல்லது)

Territorial Jurisdiction - Write short notes. (ஆள்நில ஆதிக்கம் - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Franconia Case - Write short notes. (ஃபிராங்கோனியா வழக்கு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Floating Island Theory - Write short notes. (மிதக்கும் தீவுக் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

The Lotus Case - Write short notes. (லோட்டஸ் வழக்கு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Chung Chi Cheung v. Rex - Write Short notes. (சூங் சி செளங் – எதிர் ரெக்ஸ் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What is maritime belt? Discuss the nature and extent of State

jurisdiction over maritime belt. (கடல் கச்சைப் பகுதி என்றால் என்ன? கடல் கச்சைப் பகுதி மீது நாட்டின் அதிகாரவரம்பின் இயல்புகளையும் அளவையும் ஆராய்க.)

நாட்டின் ஆள்நில ஆதிக்க வரம்பு - பிரிவுகள் (அல்லது) வகைகள் [State Jurisdiction - Divisions (or) Kinds]:

ஒவ்வொரு நாடும் தனது எல்லைக்குட்பட்ட ஆள்நிலத்தில் (State Territory) காணப்படும் சொத்து, சுதந்திரம், மனிதர்களைப் பொருத்தவரையில் முழுதளவில் ஆதிக்கம் செலுத்தலாம். சில சமயங்களில் நாடுகள் தங்கள் எல்லைக்கு அப்பாலிருக்கும் சொத்து, மனிதர்கள் மீதும் ஆட்சி செலுத்துகின்றன. ஆனால் இவை முழுதளவிலான ஆதிக்கம் அல்ல. மற்றொரு நாட்டுடன் பகிர்ந்து கொள்ளும் அதிகாரமேயாகும். எனினும் பொதுவாக ஒரு நாட்டின் ஆள்நில ஆதிக்கவரம்பானது (State Jurisdiction) பின்வரும் ஆறு தலைப்புகளின்கீழ் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன :

1. ஆள்நில ஆதிக்கம் (Territorial Jurisdiction);
2. ஆள்நில ஆதிக்கத்திலிருந்து காப்புரிமைகள் (Immunities from the Territorial Jurisdiction);
3. நபர் ஆதிக்கம் (Personal Jurisdiction);
4. காப்பு கொள்கை முறையில் ஆதிக்கம் (Jurisdiction according to the protection principle);
5. ஆழ்கடல் ஆதிக்கம் (Jurisdiction on the High Seas); மற்றும்
6. உலகெதிர் ஆதிக்கக் கொள்கை (Jurisdiction according to the Universal principle).

ஆள்நில ஆதிக்கம் (Territorial Jurisdiction) :

ஒரு நாட்டில் ஆள்நில ஆதிக்கமானது, அதன் நிலப்பரப்பின் மீது மட்டும் பாயாமல், பின்வரும் வேறு சில இடங்களின் மீதும் ஆளுகை கொண்டுள்ளது. அவை வருமாறு.

(1) எல்லையோரக் கடல் (Territorial Sea or Maritime Belt):

எல்லையோரக் கடலில் வேற்று நாட்டுக் கப்பல்களுக்குத் தீங்கிலா வழியுரிமை (inncocent passage) உண்டு என்று நாம் முன்பே கண்டோம். எனினும், எல்லையோரக் கடலில் பயணம் செய்யும் வெளிநாட்டுக் கப்பல்கள் புரியும் குற்றத்தைத் தண்டிக்கும் உரிமை கரையோர நாட்டிற்கு உண்டா எனும் அய்யம் 19–ஆம் நூற்றாண்டில் எழுந்தது. இது குறித்த ஒரு முக்கிய வழக்கு வருமாறு.

Rex v. Keyn (Franconia Case)[1] - இவ்வழக்கில் இங்கிலாந்து நாட்டின் எல்லையோரக் கடலில் 'ஃபிரான்கோனியா' எனும் செர்மானியக் கப்பல், இங்கிலாந்து கப்பலொன்றின் மீது மோதி அதிலிருந்த பொருளுக்கும் உயிர் களுக்கும் சேதம் விளைவித்துவிட்டது. எனவே இக்குற்றத்திற்காக அக்கப்பலின் தலைவனைக் (Captain) கைது செய்து இங்கிலாந்து நாட்டின் குற்ற நீதிமன்றத்தின் முன் விசாரணைக்கு கொண்டு வந்த போது அந்நீதிமன்றங்கள், அப்பகுதியில் நடக்கும் குற்றங்களை விசாரிக்கும் ஆற்றலைத் தங்களுக்கு அளிக்கும் வகையில் பாராளுமன்றம் சட்டம் எதுவும் செய்யவில்லை எனவும், எனவே தாங்கள் அவ்வழக்கை விசாரிக்க இயலாது என்றும் கூறிவிட்டன.

எனவே, இவ்வகை வழக்குகளை விசாரிக்கும் ஆற்றலை வழங்குவதற் காக 1878–ஆம் ஆண்டில் இங்கிலாந்து பாராளுமன்றம், **எல்லையோரக் கடல் நீர்ப் பகுதி மீது ஆதிக்கம் வழங்கும் சட்டம் (Territorial Waters Jurisdiction Act 1878)** ஒன்றினை இயற்றியது. இதன் பிறகு ஏற்பட்ட முக்கிய வழக்கொன்றின் நிலை பின்வருமாறு :

Chung Chi Cheung v. Rex[2] – இவ்வழக்கில் சீன அரசுக்கு சொந்தமான கப்பலொன்று, இங்கிலாந்து அரசின் காலனி ஆதிக்க நாடான ஹாங்காங்–ன் (தற்பொழுது சீனாவிடமே ஒப்படைக்கப்பட்டுவிட்டது.) எல்லையோரக் கடல் நீரில் பயணம் செய்து கொண்டிருந்தபொழுது, அதில் பணி புரிந்து கொண்டிருந்த கேபின் சிறுவன் ஒருவன் அக்கப்பல் தலைவனை சுட்டுக் கொன்றுவிட்டான். ஹாங்காங் நீதிமன்றம் அக்கேபின் சிறுவனை விசாரித்து அவனுக்கு மரண தண்டனை விதித்தது. இதை எதிர்த்து அக்கேபின் சிறுவன் பிரிவி கவுன்சிலிடம் மேல்முறையீடு செய்து கொண்டதில், ஹாங்காங்கின் எல்லையோரக் கடலில் குற்றம் நிகழ்ந்திருப்பதால், அக்குற்றத்தினை விசாரித்து, குற்றவாளிக்கு தக்க தண்டனை வழங்க ஹாங்காக்–ற்கு ஆள்நில ஆதிக்கவரம்பு உண்டு எனக் கூறி, கீழ் நீதிமன்றத் தீர்ப்பை ஊர்ஜிதம் செய்தது.

ஜெனீவா மாநாடு (1958) : ஆனால் 1958–ஆம் ஆண்டில் ஜெனீவாவில் நடந்த எல்லையோரக் கடல் மற்றும் கரையோரக் கடல் பகுதிகள் பற்றிய மாநாட்டின் 19, 20, 21, 22–வது ஏற்பு விதிகள் எல்லையோரக் கடல் நாட்டிற்கு அவ்வழிச் செல்லும் கப்பல்கள் மீது இருந்த முழு ஆற்றலைத் தற்போது பெருமளவு குறைந்து விட்டன. அதன்படி கரையோர நாடு இக்கப்பல்கள் மீது மிக அவசியமான காரணங் களுக்காக மட்டுமே மேற்கூறிய தங்கள் ஆதிக்கத்ததைப் பயன்படுத்தலாம்.

(2) நாட்டின் தேசியக் கொடி தாங்கிய கப்பல் (A Ship bearing its national flag):

ஒரு கப்பல் எந்த நாட்டைச் சேர்ந்ததோ அந்த நாட்டுக் கொடியை பறக்க

1. (1876) Ex.D. 63
2. (1939) A.C. 160 : A..I.R. 1939 P.C. 69

விட்டிருந்தால் அது அந்நாட்டின் 'மிதக்கும் தீவாக' **(Floating Island)** கருதப் படும். அதாவது, கப்பல்கள் அது பறக்க விட்டிருக்கும் கொடி நாட்டின் நிலப் பகுதியிலிருந்து பெயர்த்து எடுத்து மிதக்க விடப்பட்ட ஒரு சிறு நிலப்பரப்பு. எனவே அது ஒரு மிதக்கும் தீவாக கருதப்பட்டது.

அரசுப் பணிகளுக்காகவும் மற்றும் போர்ப் பணிகளுக்காகவும் பயன் படுத்தப்படும் கப்பல்கள், மிதக்கும் தீவுகளாகக் கருதப்பட்டு ஆழ்கடலிலும் எல்லையோரக் கடலிலும் அனைத்து நாட்டு ஆதிக்கதிலிருந்தும் விலக்கப்பட்டதாக கருதப்படும். இது **'மிதக்கும் தீவுக் கோட்பாடு' (Floating Island theory)** எனவும் அழைக்கப்படுகிறது. இதன் தொடர்பாக பின்வரும் ஒரு பிரபலமான வழக்கினை அறிதல் மிகவும் இன்றியமையாதது.

The Lotus Case[1] – இவ்வழக்கில் பிரான்சு நாட்டின் **'லோட்டஸ்' (Lotus)** எனும் கப்பல், துருக்கி நாட்டின் கப்பல் மீது ஆழ்கடலில் மோதியது. இந்த மோதலுக்கு பிரான்சு நாட்டு கப்பலதிகாரியின் கவனக்குறைவே காரணமாக இருந்தது. இதனால் துருக்கி நாட்டின் கப்பல் கடலில் முழ்கியது. அதிலிருந்த எட்டு பேர் இறந்துவிட்டனர். பிரான்சு நாட்டுக் கப்பலின் தலைவன் துருக்கியின் தலை நகரான கான்ஸ்டாண்டி நோபில்ஸ்–க்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு வழக்கு தொடுக்கப்பட்டது. பிரான்ஸ் அரசாங்கம் இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தது. வழக்கு நிரந்தர சர்வதேச நீதிமன்றத்திற்கு கொண்டு செல்லப்பட்டது. அம்மன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகள் துருக்கி நாட்டின் செயல், நாட்டிடைச் சட்டத்தின் நியதிகளுக்கு முராணானதாகும் என்று கூறினர்.

கப்பல்கள், அவை எந்நாட்டுக் கொடியைத் தாங்கிக் கொண்டு செல்கின்றவோ, அந்நாட்டின் மிதக்கும் தீவு (Floating Island) எனும் கொள்கை மேற்படி வழக்கில் ஏற்றுக் கொள்ளப்பட்டு தீர்வு காணப்பட்டது. ஆனால் இக்கொள்கை நாளடைவில் நாட்டிடைச் சட்டத்தால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. அறிஞர்கள் பலரின் விமர்சனத்திற்கு ஆளானது. அதற்கொப்ப புகழ்பெற்ற **சூங் சீ** சௌங் வழக்கிலும் 'மிதக்கும் தீவு கோட்பாடு' ஏற்றுக் கொள்ளப்படவில்லை.

Chung Chi Cheung v. Rex[2] – ஆள்நில ஆதிக்கவரம்பு பற்றி பல்வேறு கருத்துக்களை எடுத்தியம்பும் இம்முக்கிய வழக்கில், சீன அரசுக்கு சொந்தமான கப்பலொன்று, இங்கிலாந்து அரசின் காலனி ஆதிக்க நாடான ஹாங்காங்–ன் எல்லையோரக் கடல் நீரில் பயணம் செய்து கொண்டிருந்தபொழுது, அதில் பணி புரிந்து கொண்டிருந்த கேபின் சிறுவன் ஒருவன் அக்கப்பல் தலைவனை சுட்டுக் கொன்றுவிட்டான். ஹாங்காங் நீதிமன்றம் அக்கேபின் சிறுவனை விசாரித்து அவனுக்கு மரண தண்டனை விதித்தது. மேற்படி சீனக் கப்பலானது, அந்நாட்டினுடைய

1. P.C.I.J. Series A, No. 10 at pp. 18-19
2. (1939) A.C. 160 : A..I.R. 1939 P.C. 69

மிதக்கும் தீவாகும் (Floating Island). ஆகவே அதில் நடந்த குற்றத்தை விசாரிக்கும் அதிகாரவரம்பு வேற்று நாடாகிய ஹாங்காக்–ற்கு கிடையாது என்று மேற்படி கேபின் சிறுவன் பிரிவி கவுன்சிலிடம் மேல்முறையீடு செய்தான். ஆனால் இவ்வாதத்தை நிராகரித்து, ஹாங்காங் எல்லையோரக் கடல் நீரில் குற்றம் நிகழ்ந்துள்ளதால் அதனை விசாரிக்கும் ஆள்நில ஆதிக்கவரம்பு ஹாங்காங்–ற்கு உண்டு எனக்கூறி, அவனது தண்டனையை பிரிவி கவுன்சில் ஊர்ஜிதம் செய்தது.

(3) துறைமுகம் (Port):

துறைமுகம் உள்நாட்டு நீரில் அமைவதால் அது எல்லையோரக் கடலின் தன்மையிலிருந்து பெரிதும் வேறுபட்டது. வேற்றுநாட்டுக் கப்பல்கள், துறைமுக நாட்டுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளின் அடிப்படையில் அவை அந்நாட்டின் துறைமுகத்தைப் பயன்படுத்தலாம். தன் துறைமுகத்திற்குள் புகும் கப்பல்களின் மீதுண்டான ஆதிக்கம், அத்துறைமுகத்திற்கு நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படையிலானதல்ல. ஆனால் இவ்வாதிக்கம் அக்கப்பல்களின் வகையைப் பொருத்து அமையும்.

நாட்டின் ஆள்நில ஆதிக்கவரம்பின் பிற வகைகளை அடுத்து வரும் வினாக்களின் விடைகளில் காண்போம்.

39. Discuss the immunity from the territorial jusrisdiction conferred on Foreign States and Heads of Foreign States. (அயல் நாடுகளுக்கும், அயல்நாட்டு தலைவர்களுக்கும் உள்நாட்டு அதிகாரவரம்பிலிருந்து விலக்களிப்பு நிலையைப்பற்றி விவாதிக்க.)

(அல்லது)

Examine the rules relating to jurisdictional immunity of Foreign Sovereign. Describe breifly the exceptions to the rule of Immunity. (அயல்நாட்டுத் தலைவர்களுக்கு நீதிமன்ற அதிகாரவரம்பிலிருந்து அளிக்கப்பட்டுள்ள காப்புரிமை தொடர்பான விதிகளை ஆராய்க. இதற்கான விதிவிலக்குகளை சுருக்கமாக விளக்குக.)

அதிகாரவரம்பிலிருந்து விலக்களிப்பு:

பின்வரும் இரண்டு வகைகளின் கீழ் அயல் நாட்டிற்கும், அயல் நாட்டுத் தலைவர்களும் மற்றொரு நாட்டு நீதிமன்றங்களின் அதிகாரவரம்பிலிருந்து விலக்களிப்பு (காப்புரிமை) உள்ளன. அவை,–

(1) நீதிமன்ற நடவடிக்கைகளிலிருந்து விலக்களிப்பு (Immunity from the process of the Court):

ஒரு நாடோ அல்லது அதன் தலைவரோ ஒரு வழக்கில் அல்லது சட்ட நடவடிக்கையில் தரப்பினராக சேர்க்கப்படுதல் கூடாது. அவர்களுக்கு அதிலிருந்து

விலக்களிப்புரிமை உண்டு. இக்கூற்று **The Cristina**[1] எனும் வழக்கில் ரைட் எனும் நீதிப்பெருமகனாரால் **(Lord Wright)** பின்வருமாறு பகரப்பட்டது. அதாவது தன்னாட்சி பெற்ற ஒரு நாட்டின் ஒரு வரம்பிலிருந்து தன்னாட்சி பெற்ற மற்றொரு நாட்டின் விலக்களிப்புரிமை உண்டு, என்பதற்கான பொதுக் கோட்பாடுகள் நாட்டிடைச் சட்டத்தில் இருக்கின்றன, என்று அவர் கூறுகிறார். ஆனால் அதே சமயத்தில், ஒரு நாடும், அதன் தலைவரும் வேற்று நாட்டு நீதிமன்றங்களில் வழக்கு தொடரலாம். அதற்கு உரிமை உண்டு.

2. அயல்நாட்டைச் சார்ந்த சொத்துக்களுக்கு விலக்களிப்புரிமை (Immunity with respect in property belonging to Foreign State) :

ஒரு நாட்டின் அல்லது ஒரு நாட்டுத் தலைவரின் சொந்த சொத்துக்களை அல்லது அவர்களது கட்டுப்பாட்டில் உள்ள சொத்துக்களை, நீதிமன்றம் தனது அதிகாரவரம்பை பயன்படுத்தி பறிமுதல் செய்ய இயலாது. இதற்கு விலக்களிப்பு உரிமை உண்டு.

விலக்களிப்பு நிலைக்கு அடிப்படைக் காரணங்கள் :

மேற்கண்டவாறு உள்நாட்டு அதிகாரவரம்பிலிருந்து அயல்நாடுகளுக்கும், அயல்நாட்டுத் தலைவர்களுக்கும் விலக்களிப்பு நிலையை (Immunity) வழங்குவதற்கு அடிப்படையாக பின்வரும் இரண்டு காரணங்கள் உள்ளன. அவை,

1. ஒரு நாட்டிற்கே உரித்த அனைத்து குணாதிசயங்களையும் ஒருங்கே பெற்ற ஒரு நிறைநாடு அதனையொத்த மற்றொரு நிறைநாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. குறைநாடுகளின் மேல்தான் ஆதிக்கம் செலுத்த முடியும்.

2. நாடுகள் தங்களுக்குள் ஒன்றக்கொன்று பரஸ்பரம் மதிப்பளித்து நடந்து கொள்தல்.

வேறுவிதங்களில் இருக்கும் நாட்டுத் தலைமைக்கு விலக்களிப்பு உரிமைகள்:

பல்வேறுப்பட்ட மக்கள் சமுதாயம் ஒருங்கிணைந்து நாடாக (State) மலர்கிறது. அரசாங்கம் (Government) உருவாகிறது. ஒரு நாட்டின் அரசாங்கம் தனித்தன்மை உடையதாகவும் (Indendence), இறைமை (Sovereignty) வாய்ந்ததாகவும் விளங்க வேண்டும். இத்தகு தன்மை நிலை பெற, அரசாங்கத்தின் சார்பாக அந்நாட்டின் எல்லைகளுக்கு உள்ளும், வெளிநாடுகளிலும் செயல்பட நாட்டுத் தலைமை ஒன்று தேவை. இத்தகைய நாட்டுத் தலைமை இந்த வகையில் தான் இருக்க வேண்டுமென்று நாட்டிடைச் சட்டத்தில் வரையறை ஏதும் செய்யப் படவில்லை. ஆனால் உலக வழக்கில் இன்று இத்தலைமை முடியரசு நாடுகளில் முடிமன்னராகவோ (Sovereign), மக்களாட்சி நாடுகளில் மக்கள் தலைவராகவோ

1. (1938) A.C. 485

(President), அல்லது செயற்குழுவாகவோ (Council of Executives) இயங்கி வருகிறது. ஒரு நாட்டின் தலைமையாக (Head of State) இவர்களும் கருதப் படுவதால், இவர்களுக்கு அந்நிய நாட்டின் அதிகாரவரம்பிலிருந்து எந்த அளவிற்கு விலக்களிப்புரிமை உண்டு என்பதை பின்வருமாறு காண்போம்.

(1) முடிமன்னர்கள் (Sovereigns):

ஒரு நாட்டின் தலைமையானது, அந்நாட்டின் அரசியலமைப்பிற்கு ஏற்ப ஒரு முடிமன்னரின் கீழோ அல்லது மக்களாட்சித் தலைவரின் (சனாபதி) கட்டுப் பாட்டிலோ இருக்கலாம் என மேலே கண்டோம். அவ்வகையில் ஒரு நாட்டின் இறைமை (Sovereignty) அவர் மூலமாக உணரப்படும். நாட்டிடைச் சட்டத்தின் முன், உலகின் முடிமன்னர்கள் அனைவரும் சம இறைமையும், சம அதிகாரமும் பெற்றவர்கள்.

அமைதிக்காலத்தில் ஒரு நாட்டின் முடிமன்னர் வேற்று நாட்டின் அழைப்பின் பேரிலோ அல்லது அனுமதியின் பேரிலோ அந்நாட்டில் தங்கியிருக்கும் பொழுது, அதன் அதிகாரவரம்பிலிருந்து சில விலக்களிப்புரிமைகளும் சிறப்புரிமைகளையும் பெற்றவராவார். அவை வருமாறு,

(1) அவருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் தக்க மரியாதைகள் செய்ய அவ்வேற்று நாடு கடமைப்பட்டது;

(2) அவரது உயிருக்கும் உடைமைக்கும் தக்க பாதுகாப்புத் தரவும், அவரது கண்ணியம் காக்கவும், வழி வகைகளைச் செய்து தரவும் கடமைப்பட்டது. அவருக்கு இழைக்கப்படும் தீங்குகளோ, குற்றங்களோ கடுமையாக தண்டிக்கப்பட வேண்டும். ஆனால் அம்மன்னரும் அவரது பரிவாரமும், அவர்களை வரவேற்கும் நாட்டின் குற்றவியல் அதிகாரவரம்பின் ஆளுகைக்கு (Criminal Jusridisction) அப்பாற்பட்டவர்களாக கருதப்பட வேண்டும். அதாவது அவர்கள் மற்றவர்களுக்கு குற்றம் ஏதேனும் புரிந்தால், அவர்களை தண்டிக்க இயலாது;

(3) இறைமை பெற்ற முடிமன்னர் மீது மற்றொரு இறைமை பெற்ற நாடு ஆதிக்கம் செலுத்த முடியாது என்பதால், அம்முடிமன்னரை வரவேற்கும் நாடு அம்மன்னரையும், அவரது பரிவாரத்தையும் எல்லா வகையிலும் தன்னாட்டின் உள்நாட்டு அதிகாரவரம்பிற்கு அப்பாற்பட்டவர்களாகக் கருதுதல் வேண்டும் (exterritoriality of Sovereigns).

முடி இழந்த மன்னரின் நிலை:

இத்தகு விலக்களிப்புரிமைகள் தலைமைப் பொறுப்பிலிருந்து அகற்றப் பட்ட அல்லது வெளியேறிவிட்ட மன்னர்கட்கு அளிக்கப்பட வேண்டிய அவசியமில்லை. இதனால்தான் 1870–72–ஆம் ஆண்டுகளில் ஸ்பெயின் நாட்டரசி இசபெல்லா, நாடு கடத்தப்பட்டு பாரிஸில் வாழ்ந்திருக்கும் போது அவரிடமிருந்து வரவேண்டிய பணத்திற்காக, வாதிகள் பிரான்சு நாட்டு நீதிமன்றத்தில் தொடுத்த வழக்கை அம்மன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டது.

ஆனால் ஒரு நாட்டின் முடிமன்னர் மாற்றுடையில் வேற்று நாட்டில் வலம் வரும்போது இவ்விலக்களிப்புரிமைகளை அளிப்பதற்கு வாய்ப்பில்லை. ஆனால் அம்மன்னர் தனது மாறுவேடத்தை கலைத்து விட்டுத் தன் நிலைமைய வெளிப் படுத்துவரானால், அவரை வரவேற்கும் நாடு மேற்கூறிய விலக்களிப்புரிமைகள் அனைத்தையும் அவருக்கு வழங்கக் கடமைப்பட்டது என்கின்ற கருத்து **Mighell v. Sultan of Johore**[1] எனும் வழக்கில் வலியுறுத்தப்பட்டது.

அதேபோல் ஹாலந்து (Holland) நாட்டு மன்னர் வேற்றுடையில் கவிட்சர் லாந்து நாட்டில் வலம் வரும்போது ஏதோ சிறியதொரு குற்றத்திற்காக அபராதம் விதிக்கப்பட்டார். பின்னர் அவர் தம் நிலையை விளக்கியவுடன் அவருக்குரிய விலக்களிப்புரிமைகள் வழங்கப்பட்டு அபராத ஆணை செயல்படுத்தப்படாமல் கைவிடப்பட்டது.

(2) மக்களாட்சித் தலைவர்கள் (Presidents) :

மக்களாட்சியில் நாட்டின் இறைமை (Sovereignty) மக்களிடமே தங்கும். ஆனால் நாட்டுத் தலைமை மக்களாட்சித் தலைவரிடமோ (President) அல்லது ஒரு செயற்குழுவிடமோ (Council of Executives) இருக்கும். இவர்களே தன்னாட்டின் சார்பாக அயல்நாடுகளுடன் முழுமையாக செயல்பட வல்லவர்கள். இவர்கள் நாட்டுத் தலைமையாக (Head of State) கருதப்படுவதால், இவர்களுக்கும் சில விலக்களிப்புரிமை உண்டு. ஆனால் முடிமன்னர்களுக்குரிய விலக்களிப்புரிமைகள் சிலருக்குத் தரப்படுவதில்லை. எனினும் இது வெறும் ஏட்டளவில்தான். நடைமுறையில் முடிமன்னர்களுக்குரிய அனைத்து விலக்களிப்பு உரிமைகளும் சிறப்புரிமைகளும் இவர்களுக்குத் தரப்படுகின்றன என்பதே உண்மை.

விலக்களிப்புரிமைகளை விட்டுக்கொடுத்தல் (Waiver of Immunity):

தமக்கே உரித்தான விலக்களிப்புரிமைகளை ஒரு நாடோ அல்லது அதன் நாட்டுத் தலைமையோ விட்டுக் கொடுக்கலாம். விலக்களிப்பு உரிமைகளை விட்டுக் கொடுத்தல் என்பது, தம்மை ஏற்ற நாட்டின் உள்நாட்டு அதிகாரவரம்பின் ஆளுகைக்கு உட்படுதல் ஆகும். இது வெளிப்படையாகவோ (Express) அல்லது உட்கிடையாகவோ (Implied) இருக்கலாம். உட்கிடையாக விட்டுக் கொடுத்த லானது, சூழ்நிலைகளைக் கொண்டு அனுமானிக்கப்படும். ஆனால் பின்வருபவை விட்டுக் கொடுத்தலாகாது.

(1) இசைவுத் தீர்ப்பு மன்ற வடவடிக்கைகளுக்கு தம்மை சமர்ப்பித்துக் கொள்ளுதல் (Submission to arbitration proceedings);

(2) உள்நாட்டு அதிகாரவரம்பின் ஆளுகைக்குள் வாழ்ந்திருந்து

1. (1894) 1 Q.B. 149

அச்சமயங்களில் ஒப்பந்தங்களில் ஈடுபடுதல். உதாரணமாக, **Mighell v. Sultan of Johore**[1] எனும் வழக்கில் ஒரு அயல் நாட்டு முடிமன்னர், தான் ஒரு சாதாரண மனிதனாக வாழ எண்ணி மாறுவேடம் தரித்து தம்மை வரவேற்ற நாட்டின் அதிகார வரம்பில் வாழ்ந்து வந்தார். அச்சமயத்தில் கன்னியொருத்தியை திருமணம் செய்து கொள்வதாக அவளிடம் வாக்குறுதி அளித்தார். இவரது இச்செயல், தம்மை அந்த நாட்டு நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின் ஆளுகைக்கு உட்படுத்திக் கொண்டதாக கருதக் கூடாது எனக் கூறப்பட்டது.

(3) தங்கள் அதிகாரவரம்பில் வந்த ஒரு கப்பலை, அயல்நாட்டு முகவர்கள் (agents) பறிமுதல் செய்வது, விலக்களிப்பு உரிமையை விட்டுக் கொடுத்து விட்டதாக பொருளாகாது.

40. Personal Jurisdiction -Write Short notes. (நபர் ஆதிக்கம்– சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

What is the basis on which personal jurisdiction may be exercised? (நபர் மீதான அதிகாரவரம்பு எந்த அடிப்படையின் கீழ் செயல் படுகிறது?)

(அல்லது)

Active Nationality Principle - Write Short Notes. (குற்றமிழைத் தவன் நாட்டுரிமைக் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Passive Nationality Principle - Write Short Notes. (குற்றமிழைக் கப்பட்டவன் நாட்டுரிமைக் கோட்பாடு – சிறு குறிப்பு எழுதுக.)

நபர் ஆதிக்கம் - விளக்கம்:

சட்ட விரோதமான செய்கை நடந்த போது அந்தச் சட்ட விரோதமான செய்கையில் சம்பந்தப்பட்ட மனிதன் ஏதாவது ஒரு நாட்டின் குடிமகனாக இருப்பான். அந்நாடு அந்தச் சட்ட விரோதச் செய்கையில், அது எங்கு நடந்திருந்த போதிலும், ஆதிக்கம் செலுத்தலாம். இன்று இருக்கும் சர்வதேச நடைமுறைப்படி இந்த நபர் ஆதிக்கம் (Personal Jurisdiction), நாட்டுரிமை (Nationality) விதியினடிப்படையைத் துணை கொண்டே அமல் நடத்தப்படுகிறது.

எடுத்துக்காட்டு:

ஒரு செய்கையில் குற்றமிழைத்தவன் இந்தியன் என்றும், குற்றமிழைக்கப்

1. (1894) 1 Q.B. 149

பட்டவன் இலங்கை நாட்டவன் என்றும் வைத்து கொள்வோம். அக்குற்றம் நேபாளத்தின் ஆள்நிலப் பிரதேசத்தில் நடந்தாக வைத்துக் கொள்வோம். இதில் பின்வரும் இரண்டு கோட்பாடுகள் எழுகின்றன. அதையொட்டி நாட்டின் நபர் ஆதிக்கம் எவ்வாறு உள்ளது என்பதை பின்வருமாறு கவனிப்போம்.

குற்றமிழைத்த குடிமகனின் நாட்டுரிமைக் கோட்பாடு (Active Nationality Principle): மேற்கண்ட எடுத்துக்காட்டு வழக்கில் இந்தியா தனது ஆதிக்கத்தைச் செலுத்த விரும்பினால், அதாவது வழக்கை விசாரித்து முடிவு செய்ய முனைந்தால், அது குற்றமிழைத்த குடிமகனது நாட்டுரிமைக் கோட்பாடு (Active Nationality Principle) என்று சொல்லப்படும். அதாவது, இதில் குற்றம் புரிந்தவனின் நாடு ஆதிக்கம் செலுத்துகிறது.

குற்றமிழைக்கப்பட்ட குடிமகனின் நாட்டுரிமைக் கோட்பாடு (Passive Nationality Principle): மேற்படி வழக்கில், இலங்கை, தனது ஆதிக்கத்தைச் செலுத்த விரும்பினால், அதாவது வழக்கை விசாரித்து முடிவு செய்ய விரும்பினால் அது குற்றமிழைக்கப்பட்ட குடிமகனின் நாட்டுரிமைக் கோட்பாடு (Passive Nationality Principle) என்று சொல்லப்படும். அதாவது, இதில் அக்குற்றத்தால் பாதிக்கப்பட்டவனின் (குற்றமிழைக்கப்பட்டவனின்) நாடு ஆதிக்கம் செலுத்துகிறது.

இதே வழக்கை நோபாளம் விசாரித்தால், அது ஆள்நில ஆதிக்க (Territorial Jurisdiction) விதியின்படியாகும். இதில் குற்றச் செயல் நடந்த நாட்டின் ஆதிக்கம் பாய்கிறது.

இத்தகு நபர் ஆதிக்கம் குறித்து பின்வரும் முக்கிய வழக்கொன்றை கவனிப்போம்.

முக்கிய வழக்கு:

Chung Chi Cheung v. Rex[1] நாட்டிடைச் சட்டத்தில் ஆள்நில ஆதிக்கம் (State Jurisdiction) குறித்த முக்கியமானதொரு வழக்காக, மேற்படி வழக்கு கருதப்படுகிறது. இவ்வழக்கின் விரிவான பொருண்மைகள் வருமாறு :

சீன அரசுக்குச் சொந்தமான ஆயுதம் தாங்கிய கப்பலொன்று பிரிட்டிஷ் அரசின் காலனி ஆதிக்கத்தில் இருந்த ஹாங்காங்–ன் எல்லையோரக் கடல் (Territorial Waters) நீரின் வழியாக சென்று கொண்டிருந்தது. அப்பொழுது அக்கப்பலில் பணிபுரிந்து கொண்டிருந்த 'கேபின் சிறுவன்' (Cabin Boy), அக்கப்பல் தலைவனை (Captain) சுட்டுக் கொன்றுவிட்டான். மேலும் ஒரு கப்பலதிகாரியையும் சுட்டுக் காயப்படுத்தினான். உடனே அக்கப்பல், காவற் படையின் உதவிக்காக ஹாங்காங் நாட்டை நோக்கி திசை திருப்பப்பட்டது. காவற் படையினர், சூங் சி சௌங் எனும் பெயருடைய அக்கேபின் சிறுவனை கைது

1. (1939) A.C. 160 : A..I.R. 1939 P.C. 69

செய்தனர். மேற்படி கேபின் சிறுவனும், மாண்டு போன கப்பல் தலைவனும் பிரிட்டிஷ் குடிமக்கள் ஆவார்கள். ஆனால் அரசிற்காக பணிபுரிபவர்கள். இது இவ்வாறிருக்க, சீன அரசு, மேற்படி கொலைக் குற்றமானது தங்களுக்குச் சொந்தமான கப்பலில் நடந்துள்ளதால் அக்கேபின் சிறுவனை தங்கள் வசம் மீட்டொப்படைக்கும்படி பிரிட்டிஷ் அரசிடம் கேட்டுக் கொண்டது. ஆனால் பிரிட்டிஷ் அரசோ மேற்படி கேபின் சிறுவன் தங்களது நாட்டைச் சார்ந்தவனென்றும், மேலும் அக்கொலைக் குற்றமானது தங்களது காலனி ஆதிக்கத்தில் உள்ள ஹாங்காங்–ன் எல்லையோரக் கடல் நீரில் நிகழ்ந்துள்ளது என்றும் கூறி, அக்கேபின் சிறுவனை மீட்டொப்படைக்க முடியாது, எனக் கூறிவிட்டது. அதன்பிறகு பிரிட்டிஷ் நீதிமன்றமே அவனை விசாரித்து மேற்படி கொலைக் குற்றத்திற்காக அவனுக்கு மரண தண்டனை விதித்தது.

ஆனால் இத்தீர்ப்பினை எதிர்த்து மேற்படி கேபின் சிறுவன் பிரிவி கவுன்சிலிடம் மேல்முறையீடு செய்தான். அவன் தனது மேல்முறையீட்டில், மேற்படி கொலையானது, ஒரு வெளிநாட்டு அரசுக்குச் சொந்தமான கப்பலில் நிகழ்ந்துள்ள தால் தன்னை விசாரித்து தண்டனை வழங்கும் அதிகாரம், பிரிட்டிஷ் (ஹாங்காங்) நீதிமன்றத்திற்கு கிடையாது என வாதிட்டான். ஆனால் பிரிவி கவுன்சிலின் நீதிக் குழுவானது (Judicial Committee of the Privy Council), மேற்படி கேபின் சிறுவன், ஒரு பிரிட்டிஷ் குடிமகன் என்பதாலும், மேற்படி கொலைக் குற்றமானது பிரிட்டிஷ் அரசுக்குச் சொந்தமான காலனி நாடான ஹாங்காங்–ன் எல்லையோரக் கடலில் நடந்திருப்பதாலும், மேற்படி கப்பலானது சீன அரசுக்குச் சொந்தமானதாக இருந்தாலும், பிரிட்டிஷ் (ஹாங்காங்) நீதிமன்றத்திற்கு அக்கேபின் சிறுவனை விசாரித்துத் தண்டனை வழங்கும் அதிகாரம் உள்ளது எனக் கூறி, அவனது மேல்முறையீட்டைத் தள்ளுபடி செய்தது. அவனது மரண தண்டனையும் ஊர்ஜிதம் செய்துவிட்டது.

இவ்வழக்கு நபர் ஆதிக்கக் கொள்கைப்படி (Personal Jurisdiction) முடிவு செய்யப்பட்டது. அதன்படி ஒவ்வொரு நாடும், அதனுடன் குடிமக்கள் என்ற முறையில் தொடர்பு கொண்டவர்களின் மேல், அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் ஆதிக்கம் செலுத்தலாம். அதாவது மக்கள் தாங்கள் செல்லுமிடங்களுக்கெல்லாம் தங்கள் நாட்டு சட்ட திட்டங்களைக் கொண்டு செல்கின்றனர் என்பது மேற்படி கொள்கையின் பொருளாகும்.

41. Jurisdiction according to the Protective Principle - Write Short Notes. (காப்புக் கொள்கை முறையில் ஆதிக்கம் – சிறு குறிப்பு எழுதுக.)

அந்நியன் ஒருவன் அயல் நாட்டில் இந்தியாவுக்கு எதிராகப் படை திரட்டுவதாக வைத்துக் கொள்வோம். இது நாட்டுக்கெதிரான இராஜத் துரோகக் குற்றமாகும். ஆனால் அவனோ அந்நியன். இந்தியன் எவருக்கும் தீங்கு ஏற்படுத்தும் வகையில், அவன் இன்னும் குற்றம் புரிந்து விடவில்லை. ஆகவே நபர்

ஆதிக்கத்தின்படி (Personal Jurisidiction) அவனைத் தண்டிக்கவியலாது. மேலும் இந்தியாவின் ஆள்நிலத்திலும் குற்றம் ஏதும் நடக்கவில்லை. எனவே ஆள்நில ஆதிக்கமும் (Territorial Jurisidiction) உதவி புரியாது. இந்த நிலையைக் கட்டுப்படுத்த, நாடுகளுக்கு நாட்டிடைச் சட்டம் காப்புக் கொள்கையின் மேல் (jurisdiction according to the protective priniciple) ஆதிக்கம் செலுத்த அனுமதி தருகிறது. இதன்படி, ஒவ்வொரு நாடும் தனது பாதுகாப்பு, நேர்மை, நற்பெயர், பொருளாதாரம் இவற்றைப் பாதிக்கும் வகையில் யார் குற்றமிழைத்தாலும் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி அக்குற்றத்தை விசாரித்துத் தண்டனை வழங்கலாம்.

42. Explain 'Freedom of the High Seas'. What are the rights and duties of States with regard to High Seas? ("ஆழ்கலின் சுதந்திரம்" என்றால் என்ன? ஆழ்கடல் குறித்து நாடுகளின் உரிமை மற்றும் கடமைகள் யாவை?)

(அல்லது)

Freedom of the High Seas - Write short notes. ("ஆழ்கடலின் சுதந்திரம்" – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Trace out the history of the Freedom of the High seas. Explain the rights and duties of States with regard to High Seas. (ஆழ்கடலின் சுதந்திரம் வளர்ந்த வரலாற்றையும், ஆழ்கடலில் நாடுகளின் உரிமை மற்றும் கடமைகளையும் விவரி.)

(அல்லது)

Explain the jurisdiction of a State on the High Seas. (ஆழ்கடல் பகுதியின் மீது ஒரு நாட்டிற்குள்ள ஆள்நில ஆதிக்கவரம்பை விளக்குக.)

(அல்லது)

High Seas - Write short notes. (ஆழ்கடல் பகுதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Explain the concept of freedom of open-sea in traditional International Law and point out the changes introduced in the law by contemporary developments. (திறந்தவெளி கடல் மீதான சுதந்திரம் குறித்து பாரம்பரியமான நாட்டிடைச் சட்டம் கூறும் கருத்தை விளக்கி அதில் தற்காலத்திய முன்னேற்றங்களால் கொண்டு வரப்பட்ட மாற்றங்களைச் சுட்டிக் காட்டுக.)

ஆழ்கடல் (High Seas) - விளக்கம் :

ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் (Territorial Sea) பகுதிக்கு அடுத்துள்ள பகுதி **'ஆழ்கடல் பகுதி' (High Seas)** எனப்படும். பொதுவாக, ஒரு நாட்டின் எல்லையோரக் கடலானது அதன் கரையிலிருந்து 12 மைல்கள் வரை அளாவி நிற்கும். அதற்கு மேற்பட்ட பகுதி, **'திறந்த வெளி ஆழ்கடல் பகுதி' (Open High Seas)** எனப்படும். ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் பகுதி வரை மட்டுமே அந்நாட்டின் ஆள்நில ஆதிக்கம் (State Jurisdiction) செல்லுபடியாகும். அதற்கு மேற்பட்ட ஆழ்கடல் பகுதியில் அந்நாட்டிற்கோ அல்லது வேறு நாட்டிற்கோ ஆள்நில ஆதிக்கம் கிடையாது.

ஆழ்கடலில் ஆதிக்கமும் அறிஞர் குரோஷியஸின் கருத்தும்:

வரலாற்றில் ஆழ்கடலின் வழியாகக் கப்பல் பயண வழி உரிமை எல்லா நாடுகளுக்கும் உண்டு. ஆனால், நிலவுலகின் மீது பல கண்டுபிடிப்புகள் நிகழ்ந்த பதினைந்து மற்றும் பதினாறாவது நூற்றாண்டுகளில் கடற்படை வலிவு பெற்றிருந்த நாடுகள் சில, திறந்தவெளி ஆழ்கடலின் மீதும் கோண்மை கொண்டாடத் துவங்கின. உதாரணமாக, போர்ச்சுகல் நாடு இந்து மகாக் கடல் முழுவதின் மீதும், அட்லாண்டிக் கடலின் பெரும் பகுதியிலும் கடல் கோண்மை கோரியது. அதேபோல், ஸ்பெயின் நாடும் மெக்ஸிகோ வளைகுடா, பசிபிக் கடல் ஆகியவற்றின் மீதுள்ள உரிமைகளை, தானே ஆக்கிரமிப்புச் செய்து கொண்டது.

இவ்வழக்கத்தை முதன்முதலாக நாட்டிடைச் சட்ட வல்லநர் குரோஸியஸ் என்பார் இரண்டு காரணங்களின் அடிப்படையில் வன்மையாகக் கண்டித்தார். முதலாவது ஆழ்கடல் ஒரு நாட்டின் சொத்தாகாது. ஏனெனில், எந்த நாடும் கையாளுகையின் மூலம் ஆதிக்கம் செலுத்தும் பொருட்டு அதைத் தன்னுடைய உடைமையாக்கிக் கொள்ள முடியாது. இரண்டவாதாக, அளவில் அடங்காததும், மனித சமுதாயத்தின் உறுப்பினர் அனைவராலும் பயன்படுத்துவதற்குரியதுமான எப்பொருள் மீதும் யாரும் தனி உரிமை கொண்டாட முடியாது.

நாடுகள் ஆழ்கடலின் மீது தங்கள் கோண்மையை நிலைநிறுத்த முயன்று கொண்டிருந்த அதே நேரத்தில் ஆழ்கடலின் சுதந்திரக் கொள்கையும் சிறிது சிறிதாக வலிவு பெறத் துவங்கியது. மேலும் ஆழ்கடலின் ஒரே பகுதியில் இரு நாடுகள் தங்களுக்கு கோண்மை இருப்பதாகக் கோரி வந்ததாலும், தாங்கள் வலிவு மிக்க பெரும் கடற்படையை வைத்திருந்தால் போரின் போது மட்டுமே பயன்படக் கூடிய இப்பகுதியின் மீது கோண்மை கோருவதால் எவ்வித பயனும் இல்லை என்பதை நாடுகள் உணர்ந்ததாலும், ஆழ்கடல் மீது கோண்மை கோரும் பழக்கம் வழக்கொழிந்தது.

ஆழ்கடல் பற்றிய ஏற்பு விதிகள் :

ஆழ்கடல் பற்றிய நாட்டிடைச் சட்ட விதிகள் 1958–ஆம் ஆண்டில் ஏப்ரல்

29–ஆம் நாளில் கையெழுத்தான ஜெனீவா மாநாட்டில் தொகுக்கப்பட்டு ஏற்கப் பட்டது. அம்மாநாட்டு ஏற்பு விதிகள், திறந்தவெளி ஆழ்கடல் தொடர்பான (Open High Seas) ஏற்பு விதிகளைத் தொகுத்ததோடு மட்டுமில்லாமல், முன்னேற்றமான மாறுதல்களையும் உண்டு செய்தது.

இம்மாநாட்டின் முதல் ஏற்பு விதி, திறந்த வெளி ஆழ்கடல் என்பது, நாடுகள் எதனின் ஆள்நில நீர்ப் பகுதிக்குட்பட்டோ (Internal waters) அல்லது எல்லையோரக் கடல் பகுதியாகவோ (Territorial Sea) அமையாத கடலின் மற்ற எல்லாப் பகுதிகளையும் உள்ளடக்கியதாகும் என்று கூறுகிறது. **ஆழ்கடலின் சுதந்திரக் கொள்கை (Freedom of the High Seas)** பற்றி 2–வது ஏற்பு விதி கூறுகிறது. அது பின்வருமாறு.

ஆழ்கடலின் சுதந்திரம் (Freedom of the High Seas):

(1) ஆழ்கடல் என்பது எப்பொழுதும் ஒரு நாட்டின் இறைமைக்குட்படக் கூடியது அல்ல.

(2) உலக நாடுகளின் போர்க் கப்பல், வாணிபக் கப்பல் இரண்டிற்குமே ஆழ்கடலில் தடையற்ற நீர் வழி உரிமை உண்டு.

(3) ஆழ்கடலில் தன்னாட்டுக் கொடிக் கப்பலைத் தவிர, வேறு எந் நாட்டுக் கப்பல் மீதும் ஒரு நாடு ஆதிக்கம் செலுத்த இயலாது.

(4) அனைத்து நாடுகளும் அதன் குடிகளும் மீன் பிடிக்கும் பயன்களுக் காகவோ, அறிவியல் காரணங்களுக்காகவோ, தொழில் நுணுக்கக் காரணங்களுக் காகவோ, ஆழ்கடலில் நீரினடியில் கம்பிகளை இட்டு செல்லவும், எண்ணெய்க் குழாய் அமைப்புகளை ஏற்படுத்தவும் உரிமை பெற்றன.

(5) ஆழ்கடலின் எப்பகுதியின் மீதும் எந்த நாடும் அது தனது ஆட்சித் துறை அதிகாரத்தை (Administration) அல்லது சட்டத்துறை அதிகாரத்தை (Legislation) அல்லது காவற்துறை அதிகாரத்தை செயல்படுத்த முடியாது.

(6) ஆழ்கடலின் எப்பகுதியையாவது தன்னுடைய ஆளுகைக்கு உட்படுத்திக் கொள்வதன் மூலம் (Occupation) எந்த ஒரு நாடும் தனது ஆள் நிலத்தை பெருக்கிக் கொள்ள முடியாது.

(7) ஆழ்கடலின் மேலான வான் மண்டலத்தில் அனைத்து நாடுகளின் வான ஊர்திகளும் பறந்து செல்ல முழுமையான சுதந்திர உரிமை உண்டு.

ஆழ்கடலின் சுதந்திரங்கள் மேற்கண்டவாறு இருப்பினும் எல்லையோரக் கடலிலும், கண்டத் திட்டுகளிலும், கரையோரக் கடல் பகுதிகளிலும் கரையோர நாடுகளின் உரிமை வளர்ந்திருப்பதால் அதற்கிணையாக அச்சுதந்திரங்களின் பயன்பாடு சற்று குறைந்துள்ளது என்றே கூற வேண்டும்.

ஆழ்கடல் சுதந்திரத்தின் மீதான வரையறைகள் (Limitations on the Freedom of High seas) (அல்லது) ஆழ்கடலின் மீது நாடுகளுக்குள்ள உரிமைகள் (Rights):

(1) (அ) கப்பல்களை மேற்பார்வையிடவும், பாதுகாக்கவும், அந்தக் கப்பல் எந்நாட்டு கொடியைப் பறக்கவிட்டுச் செல்கிறதோ அந்நாட்டிற்கு அவற்றின் மீது உரிமை உண்டு.

(ஆ) ஒரு கப்பல் எந்நாட்டுக் கொடியைப் பறக்க விட்டுச் செல்கிறதோ அந்தக் கொடி நாட்டிற்கும், அந்தக் கப்பலுக்கும் நியாயமான தொடர்பிருக்க வேண்டும். ஆகவே, எந்தக் கொடியையேனும் அந்நாட்டின் அனுமதியின்றிக் கப்பல்கள் பயன்படுத்துமானால், அந்தக் கொடி நாடு அத்தகைய கப்பல்களைக் கைப்பற்றி பறிமுதல் செய்யலாம்.

(இ) போர்க்கப்பல்கள் மீது சந்தேகமேற்படுமானால், அதன் நாட்டுக் கொடியைக் காட்டுமாறு கேட்கலாம். வணிகக் கப்பல் ஏதேனும் கடற் கொள்ளையிலோ (Piracy) அல்லது அடிமை வணிகத்திலோ ஈடுபட்டிருப்பதாக நியாயமான காரணங்களின் அடிப்படையில் அய்யமேற்படுமானால் அதில் ஏறிப் பார்க்கவும், தேடிப் பார்க்கவும் உரிமையுண்டு.

(2) துரத்திப் பிடிக்கும் உரிமை (Right of Hot pursuit) : எந்நாட்டு வணிகக் கப்பலேனும் ஒரு நாட்டு எல்லையோரக் கடலில், சட்டத்தை மீறும் வகையிலோ அல்லது குற்றம் புரியும் வகையிலோ நடந்து கொண்டு தப்பிச் செல்ல முயன்றால், எல்லையோரக் கடல் நாடு தன் போர்க் கப்பலின் துணைக் கொண்டு தவறிழைத்துவிட்டுத் தப்பிச் செல்லும் அயல்நாட்டு வணிகக் கப்பலை சூட்டோடு சூடாக பின்தொடர்ந்து சென்று பிடித்து வந்து, அவற்றின் மீது ஆழ்கடலில் நடவடிக்கை எடுக்கும் உரிமையே, **'துரத்திப் பிடிக்கும் உரிமை'** எனப்படும். எனினும், குற்றத்தைப் புரியும் கப்பல் ஆழ்கடல் பகுதியில் சென்றுவிட்டால், துரத்திவரும் நாட்டுக் கப்பலின் ஆள்நில ஆதிக்கப்பிடியிலிருந்து தப்பிவிடலாம் என்ற எண்ணம் இதன் மூலம் ஏற்பட்டு விடுகிறது.

(3) ஒரு வெளிநாட்டுக் கப்பலினால் தனது நாட்டுக்கு உடனடியாக ஆபத்து ஏற்படும் என்று ஒரு நாடு கருதுமானால், அது தனது நாட்டை தற்காத்து கொள்ளும் பொருட்டு அவ்வெளிநாட்டுக் கப்பலின்மீது, அது ஆழ்கடலில் நின்று கொண்டிருந்தாலும், அதன்மீது தனது ஆள்நில அதிகாரவரம்பபைச் செலுத்தலாம்.

(4) மேற்கண்டவை தவிர, நாடுகளின் நன்மை கருதி வேறு பல பொது ஏற்பு விதிகள் உண்டாக்கப்பட்டுள்ளன. அவை ஆழ்கடலில் நாடுகள் தங்களது ஆள் நில ஆதிக்கத்தை செலுத்தும் கடல் உரிமையை அளிக்கின்றன. உதாரணமாக, 1884–ஆம் ஆண்டு கடல் நீரடியில் இடப்பட்டுள்ள தொலைபேசிக் கம்பிகளின் பாதுகாப்பு பற்றிய ஏற்பு விதிகளைக் கூறலாம்.

ஆழ்கடலில் நாடுகளுக்கு உள்ள கடமைகள் :

1. மீன்பிடி துறையிலும், கடல் வாழ் உயிரினங்களைப் பயன்படுத்துவ திலும் ஏற்பட்டுள்ள அறிவியல் மற்றும் தொழில் நுணுக்கங்களில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தினால், அவை மிகவேகமாக மனித இனத்தால் குறைக்கப்பட்டு வருகின்றன. எனவே இதனைத் தவிர்க்கவும் ஆழ்கடல் உயிர் வாழினங்கள் அழிந்து விடாதபடி பொதுவாகப் பாதுகாக்கவும் அனைத்து நாடுகளும் கடமைப்பட்டுள்ளன.

2. கடலில் எண்ணெய் கலந்து அது மாசுபடுகிறது. இதனைத் தவிர்க்கும் பொருட்டு 1969–ஆம் ஆண்டில் இரண்டு ஏற்பு விதி மாநாடுகள் நடத்தப்பட்டன. இதன் மூலம் நாடுகள், கடலில் எண்ணெயை கலந்து மாசுண்டாக்குவதை தவிர்க்க வேண்டும் என்று ஏற்றுக் கொள்ளப்பட்டன.

43. Right of Hot pursuit - Write short notes. (துரத்திப் பிடிக்கும் உரிமை - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

கரையோர நாடுகளின் நன்மையைக் கருதி, துரத்திப் பிடித்தல் எனும் உரிமை, உலகில் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒன்றாக விளங்குகிறது.

துரத்திப் பிடிக்கும் உரிமை (Right of Hot pursuit) :

துரத்திப் பிடித்தல் என்றால், எந்நாட்டு வணிகக் கப்பலேனும் ஒரு நாட்டு எல்லையோரக் கடலில் சட்டத்தை மீறும் வகையிலோ அல்லது குற்றம் புரியும் வகையிலோ நடந்து கொண்டு தப்பிச் செல்ல முயன்றால், எல்லையோரக் கடல் நாடு தன் போர்க் கப்பலின் துணைகொண்டு தவறிழைத்து விட்டுத் தப்பிச் செல்லும் அயல்நாட்டு வணிகக் கப்பலை, சூட்டோடு சூட்டாக பின் தொடர்ந்து சென்று துரத்திப் பிடித்து வந்து, அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கும் உரிமை ஆகும்.

துரத்திப் பிடிக்கும் உரிமை குறித்த ஜெனீவா மாநாடு:

இவ்வகை உரிமை தற்போது ஆழ்கடல் பற்றிய ஜெனீவா மாநாட்டு ஏற்பு விதி 23–இல் இணைக்கப்பட்டுள்ளது. அதன்படி கரையோர நாடு, அயல் நாட்டுக் கப்பல் எதுவும் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் அந்த நாட்டின் சட்டத்தையோ, ஒழுங்குமுறையையோ மீறும் வகையில் நடந்திருப்பதாக நம்புவதற்கு நியாயமான காரணங்களிருந்தால், அந்தத் தவறிழைத்த கப்பல்களைத் துரத்திப் பிடித்து வரலாமென்கிறது. அது மேலும் கூறுவதாவது :

(1) அவ்வாறு துரத்திப் பிடிக்கும் உரிமையைச் செயல்படுத்த அந்தக் குற்றம் கரையோர நாட்டின் எல்லைக் கடலில் செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் குற்றம் புரிந்தவுடனே கரையோர நாடு அக்குற்றக் கப்பலைப் பிடிக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். அவ்வாறு துரத்திப் பிடித்தலை எல்லைக்

கடலிலேயே துவங்கி விட்டால், துரத்தல் அந்நாட்டின் எல்லைக் கடலைத் தாண்டி ஆழ்கடலிலும் தொடர்ந்து துரத்திப் பிடித்து வரலாம். ஆனால் அக்குற்றக் கப்பல் ஆழ்கடலைத் தாண்டி வேறு நாட்டு எல்லைக் கடலில் புகுந்து விடுமேயானால் துரத்தும் கப்பல், தனது பிடிக்கும் முயற்சியை அத்துடன் விட்டுவிடுதல் வேண்டும்.

(2) இத்துரத்தல் நிகழ்வு இடையீடோ, முறிவோ இன்றித் தொடர்ந்து இருக்க வேண்டும்.

44. Piracy - Write short notes. (கடற்கொள்ளை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"In its jurisdictional aspects, the offence of piracy jure gentium is quite unique". Explain. ("மனித இன நெறிமுறைக்கு எதிரான கடற் கொள்ளையானது அதிகாரவரம்பின் கண்ணோட்டத்தில் முக்கியத்துவம் வாய்ந்தது." விளக்குக).

(அல்லது)

Piracy jure gentium - Write short notes. (நாட்டிடைச் சட்டத்தில் கடற் கொள்ளை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Principles of Universal Jurisdiction - Write Short Notes. (உலக அதிகார வரம்புக் கொள்கை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Genocide - Write short notes. (மனித இன அழிவு - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

குற்றமொன்று உலக சமுதாய நலனிற்கு தீங்கிழைப்பதாக இருப்பின், அதனை அனைத்து நாடுகளுக்கும் எதிரான ஒரு குற்றமாக கருதுதல் வேண்டும். அத்தகு குற்றத்தின் மீது எந்தவொரு நாடும் தனது ஆள்நில அதிகாரவரம்பைச் செலுத்தி தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். இது **'உலக அதிகாரவரம்புக் கொள்கை' (Principle of Universal Jurisdiction)** எனப்படுகிறது. பின்வரும் இரண்டு குற்றங்களை உலகெதிர் குற்றங்களாக நாட்டைச் சட்டம் அறிவித்துள்ளது. அவை உலகெதிர் கடற்கொள்ளை (Piracy jure gentium) மற்றும் மனித இனத்திற்கெதிரான குற்றங்களும் போர்க் குற்றங்களும் (Genocide and War Crimes) ஆகும். இம்மாதிரியான குற்றங்கள் எங்கு எப்பொழுது செய்யப்பட்டாலும் உலக நாடுகளில் எந்த ஒரு நாடும் அக்குற்றத்திற்காக ஒருவரை கைது செய்யவோ அல்லது விசாரிக்கவோ உரிமை படைத்தது. இவ்விரண்டு குற்றங்களையும் பின்வருமாறு காண்போமா?

(1) உலகெதிர் கடற்கொள்ளை (Piracy Jure Gentium) :

தனியார் கப்பல் எதுவும், பொருட்களைக் கொள்ளையடிக்கும் நோக்குடன் வேற்றுக் கப்பல்களின் மீது வன்முறைத் தாக்குதல் நடத்துவதே கடற்கொள்ளை எனப்படும் என்று பெரும்பாலோர் கூறுகின்றனர். ஆனால் இவ்வரையறைக்குட் படாத வேறு சில நிகழ்ச்சிகளும் கடற்கொள்ளையாகக் கருதப்படுகிறது.

உதாரணமாக, ஒரு கப்பலில் சென்று கொண்டிருக்கும் பணிக் குழுவினர் (Crew) புரட்சி செய்து அக்கப்பலையும் அதன் பொருட்களையும் தங்கள் நன்மைக்குப் பயன்படுத்துவதற்காக தங்கள் ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வருவார்களேயானால், அதுவும் கடற்கொள்ளையாகவே கருதப்படும். இக்கொள்ளை ஆழ்கடல் பரப்பிலோ அல்லது வான்மண்டலத்தில் வானவூர்திகளுக்கு எதிராகவோ செய்யப்படுதல் கூடும். இத்தகைய கொள்ளைக்காரர்கள் தங்களின் நாட்டுறவையும், தங்கள் நாட்டின் பாதுகாப்பையும் இழந்துவிடுவர்.

1958–ஆம் ஆண்டில் ஆழ்கடல் பற்றிய ஜெனீவா மாநட்டின் 15–வது ஏற்பு விதி, கடற்கொள்ளை என்றால் என்ன என்பதைப் பற்றி விளக்குகிறது. அதன்படி முதன்மைக் குற்றத்தையொட்டி, சில கிளைக் குற்றங்களும் கூட கடற் கொள்ளையாகக் கருதப்படுகின்றன.

Re Piracy Jure Gentium[1] **– 'உலகெதிர் கடற்கொள்ளை வழக்கு'** என்றழைக்கப்படும் இவ்வழக்கில் பிரிவி கவுன்சில் நீதிமன்றம் (Privy Council), கடற்கொள்ளை நடந்ததாகக் கூறப்படுவதற்கு உண்மையிலேயே கொள்ளையடிக்கப்பட்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை என்றும், அவ்வாறு கொள்ளையடிப்பதற்கான முயற்சியில் ஈடுபட்டு அம்முயற்சியில் தோல்வியுற்றிருந் தாலும், அதுவும் கடற்கொள்ளையாகவே கருதப்படும் என்றும் கூறியது. இத்தீர்ப்பின் காரணமாக, இலாபம் கருதி செய்யப்படும் குற்றங்கள் மட்டுமல்லாமல் பழிவாங்கும் நோக்குடன் செய்யும் செயல்களும் கடற்கொள்ளையாக கருதும் வகையில் அதன் பொருள் விரிவு பெற்றுள்ளது. ஆனால் இப்பொழுது நடந்து வரும் விமானக் கடத்தல் கொள்ளைகள் (Aircraft Hijackings) அவற்றின் தனித் தன்மையின் காரணமாக, இவ்வகைக் கொள்ளைகளுக்கு உட்பட்டதாக கருத இயலாது என்று ஒரு கருத்து நிலவி வருகிறது.

உள்நாட்டு கடற்கொள்ளை (Piracy in Municipal Law) :

நாட்டிடைச் சட்டத்தின் கீழ் கூறப்பட்டுள்ள கடற்கொள்ளையானது உள்நாட்டுச் சட்டங்களில் கூறப்பட்டுள்ள கடற்கொள்ளையிலிருந்து பெரிதும் வேறுபட்டவை. நாட்டைச் சட்டத்தின் கீழ் எழும் கடற்கொள்ளை மட்டுமே உலகெதிர் குற்றமாகக் கருதப்படும். சில நாடுகளின் உள்நாட்டுச் சட்டம், சில செயல்களைக் கடற்கொள்ளையென விவரிக்கிறது. உதாரணமாக, இங்கிலாந்து நாட்டின்

1. (1934) A.C. 586

குற்றவியல் சட்டத்தில் இங்கிலாந்து மன்னரின் எதிரிகளுக்குக் கடலில் உதவி நல்கும் பிரிட்டிஷ் குடிமகனைக் கடற் கொள்ளைக்காரனாகவும், ஆழ்கடலில் அடிமை வாணிபம் நடத்த வசதி செய்து கொடுப்பது கடற்கொள்ளை என்றும் கூறப் பட்டுள்ளது.

(2) மனித இன அழிவும் போர்க் குற்றங்களும் (Genocide and War Crimes):

நாம் முதற்பத்தியில் ஏற்கனவே கண்டவாறு, மனித இன அழிவிற்கெதிரான குற்றங்களும், போர்க்குற்றங்களும் உலகெதிர் குற்றங்களாக (Jure Gentium) கருதப்படும். இதற்காக எந்நாடும் தக்க நடவடிக்கை எடுக்கலாம். எனவே இது **உலக அதிகாரவரம்புக் கொள்கையின்** பாற்பட்டது. முக்கிய வழக்கு வருமாறு.

Eichmann Case[1] செர்மனியில் வாழ்ந்து வந்த ஜூக்கள் (Jews) இனத்தவரை படுகொலைப் புரிந்து மனித அழிவு செய்ததற்காகவும் மற்றும் போர்க் குற்றங்களைப் புரிந்ததற்காகவும், செர்மானிய நாஜி அதிகாரி அடால்ஃப் அய்ச்மென் என்பார் கைது செய்யப்பட்டு, இஸ்ரேல் நாட்டுத் தலைமை நீதிமன்றத்தின் முன் விசாரணைக்காக நிறுத்தப்பட்டார். அப்பொழுது நடந்த விசாரணையில், மேற்படி அய்ச்மென் தன் மீது சாட்டப்பட்டுள்ள குற்றங்கள் நடந்த பொழுது இஸ்ரேல் என்ற பெயருடன் ஒரு நாடே இருக்கவில்லையென்றும், எனவே, தாம் அந்நாட்டிற்கெதிராக அக்குற்றங்களைச் செய்ததாகக் கருத இடமில்லை என்றும், ஆகவே இஸ்ரேல் நாடு தன்னை தண்டிக்கும் ஆற்றல் அற்றது என்றும் வாதித்தான். ஆனால் இஸ்ரேல் தலைமை நீதிமன்றம் இவ்வாதத்தை நிராகரித்து அய்ச்மென் செய்த குற்றங்கள் மனித இனத்திற்கும் உலக நாடுகளுக்கும் எதிரானதால் இஸ்ரேல் நாடு, அக்குற்றங்கள் இழைக்கப்பட்டபோது இருந்ததா, இல்லையா என்ற கேள்விக்கே இடமில்லாதது மட்டுமின்றி, குற்றம் புரிந்தோரை உலக நாடுகள் எதுவும் தண்டிக்கும் தகுதி பெற்றதென்றும் கூறியது.

45. Define Hijacking and examine the measure that are adopted in combating Hijacking in International law (விமானக் கடத்தல் கொள்ளை என்பதற்கு இலக்கணம் கூறி நாட்டிடைச் சட்டத்தில் விமானக் கடத்தல் கொள்ளைகளை எதிர்க்க ஏற்றுக்கொள்ளப்பட்ட செயல்முறைகளை ஆராய்க.)

(அல்லது)

Hijacking - Write short notes. (விமானக் கடத்தல் கொள்ளை - சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை :

தற்பொழுது அடிக்கடி நடைபெற்று வரும் விமானக் கடத்தல் கொள்ளைகள்,

1. Eichmann v. Attorney-General of the Government of Israel (1962) 136 I.L. 277.

நாட்டைடிச் சட்டத்தில் வானஊர்திகள் தொடர்பான ஆட்சி வரம்பில் சில மாறுதல் களையும் முன்னேற்றங்களையும் கொண்டு வந்துள்ளன. இது குறித்து ஏற்புவிதி மாநாடுகள் (Conventions) மும்முறை நடந்தன. அவை வருமாறு:

ஏற்புவிதி மாநாடுகள் (Coventions):

(1) 1963-ஆம் ஆண்டில் நடந்த டோக்கியோ மாநாடு (Tokyo Convention):

இம்மாநாட்டின் இரு நோக்கங்கள் வருமாறு :

(அ) ஏதேனும் ஒரு நாட்டின் ஆள்நில எல்லைக்கப்பாலோ அல்லது ஆழ் கடலின் மேற்பகுதியிலோ பறந்து கொண்டிருக்கும் விமானத்தை கடத்தி வான்வெளி மண்டலத்தின் பாதுகாப்புக்கு அபாயம் விளைவிக்கும் எந்நபரையும், அவரை விசாரித்து தண்டனை வழங்கும் ஆள்நில ஆதிக்க அதிகாரம் எந்நாட்டிற்கும் இல்லை என்ற ஒரு சிறிய காரணத்தினால், தண்டிக்கப்படாமல் விட்டுவிடப்படுதல் கூடாது.

(ஆ) இம்மாதிரியான விமானக் கடத்தல் கொள்ளையைத் தடுத்துப் பாதுகாக்கும் பொருட்டு வான ஊர்தி ஆணை அதிகாரி (Aircraft Commander) மற்றும் பணிக் குழுவினருக்கு சிறப்பான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும். அதில் பயணம் செய்பவர்களுக்கும் அந்தகு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

இவ்விரு நோக்கங்களைக் கொண்ட டோக்கியோ மாநாடு, இராணுவத்தினர், சுங்க இலாகாவினர் மற்றும் காவல்துறையினர் பயன்படுத்தும் வானவூர்திகளைப் பற்றி எதுவும் கூறவில்லை. மேலும் இம்மாநாடால் குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏதும் ஏற்படவில்லை.

(2) 1970-ஆம் ஆண்டில் நடந்த ஹேக் மாநாடு (Hague Convention):

இம்மாநாடு, சட்டத்திற்கு முரணாக விமானங்களைக் கைப்பற்றுவதை ஒடுக்குவதற்காகவே கூட்டப்பட்டது என்று சொன்னால் அது மிகையாகாது. இதில் முன்னேற்றமான சில ஏற்பு விதிகள் உருவாக்கப்பட்டன.

1. இம்மாநாட்டின் **முதலாவது ஏற்பு விதி** விமான கடத்தல் கொள்ளையின் வரையறையைத் தருகிறது. அதாவது, வன்முறையைப் பயன்படுத்தியோ அல்லது மிரட்டியோ அல்லது வேறு ஏதேனும் முறையில் அச்சுறுத்தியோ, பறந்து கொண்டிருக்கும் ஒரு வான்வூர்தியை சட்டத்திற்கு முரணாக கைப்பற்றுதல் அல்லது அதன் மீது சட்டத்திற்கு முரணாக கட்டுப்பாட்டைச் செலுத்துதல் அல்லது அவ்வாறான ஒரு செயலைச் செய்ய முயற்சித்தல், **'விமானக் கடத்தல் கொள்ளை'** எனப்படும். அச்செயலைச் செய்பவரோ அல்லது அதற்கு உடந்தையாக இருப்பவரோ **'விமானக் கடத்தல் கொள்ளையர்'** எனப்படுவர்.

2. **இரண்டாவது ஏற்புவிதி** தரப்பு நாடு ஒவ்வொன்றையும், இவ்வகைக் குற்றங்களைக் கடுமையாகத் தண்டிக்கும் கடமைக்குள்ளாக்குகிறது.

3. **மூன்றாவது ஏற்புவிதி** இத்தகு குற்றத்தையும், வேறு தொடர்புடைய வன்செயல்களைப் பயணிகள், விமானம் செலுத்துவோர் ஆகியோர் மீது புரிவதையும் தண்டிப்பதற்கு உண்டான ஆதிக்க உரிமையை நிலை நாட்டுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நாடுகள் மேற்கொள்ள வேண்டும், என்று கூறுகிறது.

4. விமானக் கடத்தல் கொள்ளை சம்பந்தப்பட்ட விஷயங்களில் ஆள்நில ஆதிக்கத்தை எவ்வாறு செலுத்துவது என்பது குறித்து நாடுகள் உடன்படிக்கை களில் ஈடுபடலாம்.

இம்மாநாடு சில முன்னேற்றமான விதிகளை மேற்கண்டவாறு ஏற்படுத்தி னாலும், கடல் கொள்ளையானது, எவ்வாறு உலகெதிர் குற்றமாக அறிவிக்கப்பட்டு எந்நாடும் அக்குற்றம் புரிவோரை தண்டிக்கலாம் என்ற வகையில் உலக அதிகார வரம்பின் (Universal Jurisdiction) கீழ் அது கொண்டு வரப்பட்டதோ அவ்வாறு விமானக் கடத்தல் கொள்ளை கொண்டு வரப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

(3) 1971-ஆம் ஆண்டில் நடந்த மான்ட்ரியல் மாநாடு (Montreal Convention) :

இம்மாநாடு விமானக் கடத்தல் கொள்ளையைப் பற்றி கூறியதோடு மட்டுமல்லாமல், வானவூர்திகளுக்கு எதிராக நடக்கும் ஆயுதத் தாக்குதல், நாச வேலைகள் மற்றும் பல்வேறுபட்ட வன்முறைகள் குறித்தும் கூறுகிறது. மேலும் இம்மாநாடு பறந்து கொண்டிருக்கும் (in service) வானவூர்திகளுக்கு உண்டாக்கப்படும் சேதங்களையும் குறிப்பிடுகிறது.

முடிவுரை :

இம்மாதிரியான விமானக் கடத்தல் கொள்ளைக் குற்றங்களைத் தக்கவாறு தண்டிப்பதற்கு இன்னமும் பலவிதமான கோணங்களிலிருந்து தடைகள் எழுந்த வண்ணம் உள்ளது. மாநாடுகள் பல நடக்கலாம். ஆனால் இத்தகு குற்றங்கள் தடுக்கவும், தண்டிக்கவும் தேவையானது என்னவென்றால், நாடுகளுக்கிடையிலான முழு ஒத்துழைப்பு ஒன்றுதான்.

-o0o-

16

நாட்டுரிமை
[Nationality]

46. Discuss the International importance of Nationality. Enumerate the various modes of acquiri ng and losing Nationality. (நாட்டுரிமையின் சர்வதேச முக்கியத்துவத்தைப் பற்றி விளக்குக. மேலும் நாட்டுரிமை பெறுவதற்கும் இழப்பதற்கும் உரிய முறைகளைப் பற்றி விவரிக்க.)

(அல்லது)

Examine the importance of nationality and write a note on the modes of acquiring and losing nationality. (நாட்டுரிமையின் முக்கியத்துவத்தை ஆராய்க. மேலும் நாட்டுரிமை பெறுவதற்கு அல்லது இழப்பதற்கும் ஆன முறைகள் பற்றி ஒரு குறிப்பு வரைக.)

(அல்லது)

Define Nationality and State how it is acquired and lost. (நாட்டுரிமையை பொருள் விளக்கம் செய்க. அது எவ்வாறு அடையப்படுகிறது என்பதையும் எவ்வாறு இழக்கப்படுகிறது என்பதையும் கூறுக.)

(அல்லது)

Explain in detail about the Law of Nationality. (நாட்டுரிமைச் சட்டம் பற்றி விரிவாக விளக்கம் தருக.)

(அல்லது)

Explain the five modes of acquiring and losing nationality (நாட்டுரிமையைப் பெறும் அல்லது இழக்கும் ஐந்து முறையினை விளக்குக.)

(அல்லது)

What are the different kinds of acquiring and losing Nationality? (நாட்டுரிமையை எந்தெந்த வகையில் பெறலாம் என்றும் எந்த வகையில் இழக்கலாம் என்பதையும் விளக்குக.)

(அல்லது)

"There are five possible modes of acquiring nationality and although no State is obliged to recognise all five, nevertheless all States in practice do so". Oppenheim. Explain with reference to the modes of acquiring nationality. ("தேசிய தன்மையை அடைவதற்குக் கூடுமான வரையில் ஐந்து வகைமுறைகள் இருக்கின்றன. எந்த நாடும் ஐந்து முறைகளையும் அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லையெனினும் நடைமுறையில் எல்லா நாடுகளுமே அவ்வாறு செய்கின்றன". ஒப்பன்ஹெய்ம். தேசிய தன்மை அடைவதற்கான வகைமுறைகளைக் குறிப்பிட்டு விளக்குக.)

(அல்லது)

Explain Nationality, Double Nationality and Statelessness. What are the modes acquiring Nationality? (நாட்டுரிமை, இரட்டை நாட்டுரிமை, நாடற்ற தன்மை என்பவற்றை விளக்குக. நாட்டுரிமை பெறுவதற்கான வழிகள் யாவை?)

(அல்லது)

Write and essay on Nationality, Loss of Nationality, Statelessness. (குடியுரிமை, குடியுரிமை இழத்தல், நாடற்ற தன்மை குறித்து ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

What do you mean by "Stateless person"? Consider the provisions of International Law which safeguards their interest. ("நாடில்லா நபர்" என்பதனால் நீர் அறிவது என்ன? நாட்டிடை சட்டத்தில் அவர்களுடைய நலன்களைப் பாதுகாக்கும் விதிமுறைகளை விளக்குக.)

(அல்லது)

Explain the various modes of acquiring and losing Nationality. What are the problems arising out of Double Nationality and Statelessness. (நாட்டுரிமை பெறுவதற்கும் இழப்பதற்கும் உரிய முறைகளை விளக்குக. இரு நாட்டுரிமை மற்றும் நாடின்மையால் ஏற்படும் பிரச்சனைகள் யாவை?)

(அல்லது)

Explain the effective nationality principle. (உறுதியான நாட்டுரிமைத் தத்துவத்தைப் பற்றி விளக்குக.)

(அல்லது)

Double Nationality - Write short notes. (இரட்டை நாட்டுரிமை - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Effective Nationality - Write short notes. (ஆக்கப்பூர்மான நாட்டுரிமை - சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Statelessness - Write short notes. (நாடற்ற தன்மை - சிறு குறிப்பு எழுதுக.)

நாட்டுரிமை-விளக்கம் :

'நாட்டுரிமை' என்பது ஒருவன் ஒரு குறிப்பிட்ட நாட்டின் உறுப்பினராக இருப்பதிலிருந்து எழும் ஒரு தன்மை அல்லது பண்பு ஆகும். இது அவனது அரசியல் தகுதியையும், அவன் அந்நாட்டின் மீது கொண்டுள்ள நம்பிக்கையையும் நிருணயிக்க உதவும் கூறாக விளங்குகிறது. எனவே ஒரு நபரின் உரிமைகளும், கடமைகளும் அவனது நாட்டுரிமையை வைத்தே முடிவு செய்யப்படும். நாட்டுரிமையின் அடிப்படையில்தான், அவனுக்கும் அவனது நாட்டிற்கும் இடையிலான தொடர்புகள் வரையறுக்கப்படுகின்றன.

அறிஞர் ஃபென்விக் (Fenwick) அவர்கள், 'நாட்டுரிமை என்பது ஒரு நபரையும், ஒரு நாட்டையும், இணைக்கும் பிணைப்பு ஆகும். இப்பிணைப்பு, அந்நபரை அந்நாட்டின் உறுப்பினராக்குகிறது. இதனால், அந்நபர் அந்நாட்டின் பாதுகாப்பைப் கோரும் உரிமையைப் பெறுகிறார். அதே சமயத்தில் அந்நபர் அந்நாட்டின் சட்டங்கள் உருவாக்கியுள்ள கடப்பாடுகளுக்கு கட்டுப்பட்டவருமாகிறார்'[1], என நாட்டுரிமை குறித்து கூறுகிறார்.

R.J.Lynch Claim[2] – இவ்வழக்கில் 'நாட்டுரிமை' எனும் பதத்திற்கு பிரிட்டிஷ்–மெக்ஸிகோ கோருரிமைக் குழு (British - Mexican Claims Commission) விளக்கமளித்துள்ளது. அதன்படி, ஒரு மனிதனின் நாட்டுரிமை என்பது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் வெளித் தோற்றமாக நிகழக்கூடிய செயலல்லாமல், தொடர்ச்சியான செயல் நிகழ்வுகளைக் கொண்டது. அதாவது நாட்டுரிமை என்பது, ஒரு புறம் இறைமை கொண்டதொரு நாட்டிற்கும் மற்றொரு புறம் அதன் குடிமகனுக்குமிடையே இடையே தொடர்ச்சியாக உள்ள சட்டப்பூர்வமான உறவினைக் குறிப்பதாகும். ஒரு தனித்தியங்கும் அரசியல் சமுதாயத்தில் அவன்

1. "Nationality may be defined as the bond which unites a person to a given State which constitutes his membership in the particular State, which gives him a claim to the protection of that State and which subjects him to the obligations created by the laws of that State" - **Fenwick.**

2. A.J.I.L. 25 (1931), p. 754.

பெற்றிருக்கும் உறுப்பினர் நிலையே நாட்டுரிமையின் அடிப்படை. இந்தச் சட்டப் பூர்வமான உறவினால், எத்தகு உரிமைகளும், அதற்கிணையான கடமைகளும் ஒரு குடிமகனுக்கு எழுகின்றனவோ, அதற்குச் சற்றும் குறைவில்லாமல் அவ்வாறே அத்தகு உரிமைகளும், கடமைகளும் அவனது நாட்டிற்கும் எழுகிறது.[1]

நாட்டுரிமையை நிருணயித்தல் (Determination of Nationality) :

நாட்டுரிமையை நிருணயிப்பதில் பல்வேறுபட்ட நாடுகள் பல்வேறான விதிமுறைகளைக் கையாள்கின்றன. எனினும் பொதுவாக, பின்வரும் விதிகள் நாட்டுரிமையை நிர்ணயிப்பதில் நாடுகளால் கையாளப்படுகின்றன. அவை,

1. மண்ணடி விதி அல்லது நிலப் பிணைப்பு விதி (Jus soli): இவ்விதியின்படி ஒரு நாட்டு எல்லைக்குள் பிறந்த எல்லாக் குழந்தைகளும், அது எந்நாட்டுக் குடிமக்களின் குழந்தைகளாக இருப்பினும், அந்நாட்டுக் குடி மக்களாகக் கருதப்படும்.

2. குருதியுறவு விதி அல்லது இரத்தபந்த விதி (Jus sanguinis): இவ்விதியின்படி ஒரு குழந்தை எந்நாட்டில் பிறந்தாலும், அக்குழந்தையின் தாய் தந்தையர் எந்நாட்டவர்களோ, அவர்களது நாட்டுக் குடிமகனாக அல்லது குடிமகளாக அக்குழந்தை கருதப்படும்.

3. சில சமயங்களில் மேற்கூறிய இரண்டு விதிகளின் அடிப்படையிலும் நாட்டுரிமை வழங்கப்படுவதுண்டு.

நாட்டுரிமையின் சர்வதேச முக்கியத்தும் :

'நாட்டுரிமை' என்பது நாட்டிடைச் சட்டத்துடன் பல்வேறு நிலைகளில் ஈடுபாடு கொண்டுள்ளது. எனவே பின்வரும் காரணங்களுக்காக ஒருவனது நாட்டுரிமையை அறிய வேண்டியது மிக மிக அவசியமாகும்.

1. ஒருவன், ஒரு நாட்டின் பாதுகாப்புக்கு உரியவனா இல்லையா என்பது அவனது நாட்டுரிமையை வைத்தே முடிவு செய்ய வேண்டியுள்ளது.

2. ஒருவன் மற்ற நாட்டவனுக்கு இழைக்கும் தீங்கனைத் தவிர்க்கவோ, தண்டிக்கவோ அவனது நாடு கடமைப்பட்டிருப்பதால் அவன் எந்நாட்டைச் சார்ந்தவன் என அறிய வேண்டியது அவசியம்.

---

1. "A man's nationality forms a continuing state of things and not a physical fact which occurs at a particular moment. A man's nationality is continuing legal relationship between the sovereign State on the one hand and the citizen on the other. The fundamental basis of a man's nationality is his membership of an independent political community. This legal relationship involves rights and corresponding duties upon both - on the part of the citizen no less than on the part of the State."

3. பொதுவாக தன்னாட்டுரிமை பெற்றவனை, அந்நாடு மீண்டும் அவன் தன்நாட்டெல்லைக்குள் வருவதைத் தவிர்ப்பதில்லை.

4. நாட்டுரிமை அவனை அந்நாட்டுக்குக் கடமைப்பட்டவனாக்குகிறது. எனவே, அவன் நாட்டைக் காப்பாற்றப் படையில் சேர்ந்து பணியாற்றக் கடமைப்பட்டவன்.

5. தன்னாட்டுரிமை பெற்றுள்ள ஒருவனை, அவன் அந்நிய நாடொன்றில் புரிந்த குற்றத்துக்காக மீட்டொப்படைக்க (extradite) மறுக்கும் பொதுவான உரிமை ஒரு நாட்டிற்கு உண்டு.

6. போர்க் காலங்களில் ஒரு குறிப்பிட்ட மனிதன் குறிப்பிட்ட நாட்டிற்கு நண்பனா–பகைவனா என்பது அவனது நாட்டுரிமையை கொண்டே நிருணயிக்கப் படும்.

7. நாட்டுரிமையை அடிப்படையாகக் கொண்டே நாடுகள் பெரும்பாலும் தங்களது அதிகாரவரம்பை (jurisdiction) செயலுறுத்துகின்றன.

சில சமயங்களில் ஒருவன் எந்நாட்டைச் சார்ந்தவன், அவனது நாட்டுரிமை என்ன என்பதில் அய்யப்பாடு எழக் கூடும். அப்பொழுது கூடவே சிக்கல்களும் உருவாகின்றன. எனவே, ஒருவன் எந்நாட்டைச் சார்ந்தவன் எனும் பிரச்சனையை, அவன் எந்நாட்டின் உள்நாட்டுச் சட்டப்படி தன்னை அந்நாட்டவன் என்று கோருகின்றனோ அல்லது அவன் அந்நாட்டைச் சார்ந்தவன் என்று சொல்லப் படுகிறதோ அதனைக் கொண்டு முடிவு செய்தல் வேண்டும் என்று **Stoeck v. Public Trustee**[1] எனும் வழக்கில் கூறப்பட்டது.

நாட்டுரிமையைப் பெறும் முறைகள்(Modes of Acquiring Nationality) :

ஒருவன் பின்வரும் அய்ந்து முறைகளின்படி நாட்டுரிமையை பெறலாம். அவை வருமாறு.

(1) பிறப்பினால் (By Birth):

ஒருவன் எந்நாட்டு எல்லைக்குள் பிறக்கின்றானோ, அவன் அந்நாட்டின் நாட்டுரிமையை மண்ணடி விதியினடிப்படையில் (Jus soli) பெறலாம் அல்லது அவனது தாய் தந்தையர் எந்நாட்டு குடியுரிமையை பெற்றுள்ளனரோ அந்நாட்டின் நாட்டுரிமையை குருதியறவு விதியினடிப்படையில் (Jus sanguinis) அவன் பெறலாம். இந்தியா உட்பட பல நாடுகளிலும் இவ்விரு விதிகளும் கடைப்பிடிக்கப் படுகின்றன.

(2) தன்குடியாக்கல் மூலம் (By Naturalisation):

ஒவ்வொரு நாடும் தனது சட்ட விதிகளுக்குட்பட்டு பிற நாட்டவனைத்

1. (1921) 2 Ch. 67.

தன்னாட்டவனாக்கலாம். வேறு விதத்தில் கூறுவதானால், அயலானுக்கு ஒரு நாடு தனது நாட்டுரிமையை அளித்து, அவனைத் தனது குடியாக்குவதாகும். இதுவே **'தன்குடியாக்கல்'** எனப்படுகிறது. இம்முறையிலான நாட்டுரிமை அயல் நாட்டவனுக்கு (alien) மட்டுமே வழங்கப்படும். இம்முறையில் நாட்டுரிமை பெறும் சில சந்தர்ப்பங்கள் வருமாறு :

(அ) திருமணம் (Marriage) : இருவேறு நாட்டுரிமை பெற்ற ஆணும், பெண்ணும் மணம் புரிந்தால், மனைவி கணவனது நாட்டுரிமையை பெறுவாள்.

(ஆ) முறையான மணப்பிறப்பு (Legitimation) : குழந்தைகள் சாதாரணமாக அவர்களுடைய தகப்பனது நாட்டுரிமையை பெறுவார்கள். எனினும் திருமண உறவில் பிறக்காத, முறையற்ற மணப்பிறப்பு குழந்தைகள் (Illegitimate children), தாயின் நாட்டுரிமையை பெற்றவர்களாக கருதப்படுவார்கள். ஆனால், பிற்காலத்தில், அக்குழந்தைகள் சட்டப்படியான திருமண உறவில் (legitimate) பிறந்தவைதாம் எனக் கூறி அவற்றினை தனது குழந்தைகளாக அவற்றின் தந்தை ஏற்றுக்கொள்ளும்போது அவை தமது தந்தையின் நாட்டுரிமையை பெறுகின்றன.

(இ) தேர்வுரிமை (Option) : பிறவியிலேயே இரு நாட்டுரிமைகளை ஒரு குழந்தை பெறலாம். தக்க வயதடைந்த பின்னர் ஒரு நாட்டுரிமையை விட்டுவிட்டு மற்றொன்றை தேர்ந்தெடுத்துக் கொள்ள அக்குழந்தைக்கு உரிமையுண்டு. இது தேர்வுரிமையினால் (Option) பெறப்படும் நாட்டுரிமை எனப்படுகிறது.

(ஈ) வாழ்வகம் பெறல் (Acquisition of Domicile) : ஒருவன் தன் நாட்டை விட்டுவிட்டு வேறொரு நாட்டில் குடியேறி அங்கேயே நிலையான வாழ்வகத்தை (Domicile) அமைத்துக் கொண்டு வாழ ஆரம்பித்தால், அவனுக்கு அந்நாட்டுரிமை வழங்கப்படலாம்.

(உ) அரசு அலுவலராக நியமிக்கப்படல் (Appointment as Govt. Official): ஒரு நாட்டவன் மற்றொரு நாட்டால் அதன் அரசாங்க அலுவலராக நியமிக்கப்பட்டால், அவன் அந்நாட்டின் குடியுரிமையை பெறும் வாய்ப்பினைப் பெறுவான்.

(ஊ) விண்ணப்பத்தின் பேரில் அளிக்கப்படல் (Grant on application to the State Authorities) : அயல் நாட்டவன், வேறொரு நாட்டின் சட்ட திட்டங்களுக்கு கட்டுப்பாடு, அதற்கு மதிப்பளித்து, அந்நாட்டில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு வாழ்ந்திருந்து, அந்நாட்டின் வளர்ச்சிக்கும், பொருளாதார மேம்பாட்டிற்கும் பாடுபடுவதாக உறுதியளித்து அந்நாட்டிற்கு விண்ணப்பித்துக் கொள்வதன் பேரில் அவனுக்கு அந்நாட்டுரிமை வழங்கப்படலாம்.

(3) திரும்பப் பெறுதல் மூலம் (By Redintegration or Resumption) :

பிறப்பால் ஒரு நாட்டைச் சேர்ந்தவன் பிறகு தன்குடியாக்கலால் வேற்று

நாட்டவனாகியிருக்கலாம். இப்படிப்பட்டவன் திரும்பத் தன் தாய் நாட்டுரிமையை பெற விரும்பலாம். இதன் பொருட்டு, அந்நாட்டின் (தன் தாய் நாட்டின்) உள்நாட்டுச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள சில விதிகளை, அவன் நிறைவேற்றினால், திரும்பவும் அவன் தனது தாய் நாட்டுரிமையைப் பெறலாம்.

(4) தன்வயப்படுத்தல் முலம் (By Subjugation) :

ஒரு நிலப்பரப்பை ஒரு நாட்டிலிருந்து போர் வெற்றியின் காரணமாக வேறு நாடு பெறுமானால் அந்நிலத்தில் வாழும் மக்கள், அதனை இணைத்துக் கொள்ளும் நாட்டின் நாட்டுரிமையை பெறுவார்கள். இது தன்வயப்படுத்தலால் பெறப்படும் நாட்டுரிமை எனப்படுகிறது.

(5) பிரிவினை செய்து கொடுத்தல் முலம் (By Cession):

ஒரு நாடு தனது ஆள்நிலத்தின் ஒரு பகுதியை மற்றொரு நாட்டுக்கு பிரிவினை செய்து கொடுத்துவிடலாம். இதனால், அப்பகுதி மக்கள் அதனைப் பெறும் நாட்டின் குடிமக்களாவார்கள். புதிய நாட்டுரிமையை தழுவ விரும்பாதவர்கள் தங்களது பழைய அதாவது ஆள்நிலம் கொடுத்த நாட்டின் நாட்டுரிமையை தக்க வைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுவார்கள். இது 'ஆள்நிலத்தை பிரிவினை செய்து கொடுத்தல் முலம் பெறப்படும் நாட்டுரிமை' (Nationality by cession of torritory) எனப்படுகிறது.

நாட்டுரிமையை இழக்கும் முறைகள் (Modes of Losing Nationality) :

நாட்டுரிமையைப் பெற எவ்வாறு அய்ந்து முறைகள் உள்ளனவோ, அவ்வாறே நாட்டுரிமையை இழப்பதற்கும் அய்ந்து முறைகள் உள்ளன. அவை வருமாறு.

1. விடுவிப்பின் முலம் (By Release) :

சில நாடுகள் தங்கள் மக்களுக்குக் 'குடிமகன்' எனும் கடப்பாட்டிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமையை அளித்துள்ளன. இப்படி தங்களை தம் நாட்டின் குடியுரிமையிலிருந்து விடுவித்துக் கொள்பவர்கள் அந்நாட்டின் நாட்டுரிமையை இழக்கின்றனர். உதாரணமாக, செர்மன் நாட்டைக் குறிப்பிடலாம்.

2. இழத்தலின் முலம் (By Deprivation) :

சில நாடுகளின் உள்நாட்டுச் சட்டத்தில், தங்கள் நாட்டுக் குடிமக்கள் சில குறிப்பிட்ட விதிகளை மீறினால் நாட்டுரிமையை இழந்து விடுவார்கள் என்று கூறுகின்றன. உதாரணமாக, அமெரிக்க நாட்டுச் சட்டம், அதன் குடிமகன் எவரேனும் அதன் அனுமதியின்றி அயல்நாட்டுப் படைத்துறை அல்லது நிருவாகத் துறையில் பணியாற்ற அமர்ந்தால் அவன் இத்தன்மையின் நாட்டுரிமையை இழந்தவனாகக் கருதப்படுவான் எனக் கூறுகிறது.

3. காலக்கடப்பின் மூலம் அல்லது அயல்நாட்டில் நீண்ட காலம் தங்கி வாழ்தல் (By Expiration or By Long Residence Abroad) :

ஒரு நாட்டின் குடிமக்கள், அனுமதியின்றி அயல்நாடு சென்றாலும், அல்லது அனுமதிக்கப்பட்டுள்ள கால வரையறைக்கு மேல் அங்கு தங்கி வாழ்ந்தாலும் அவர்களுடைய நாட்டுரிமை முடிவிற்கு வந்துவிட்டதாகக் கருதப்படும்.

4. துறத்தலின் மூலம் (By Renunciation) :

பிறக்கும்போதே சில குழந்தைகள் இரட்டை நாட்டுரிமைகளைப் பெறலாம். இந்தக் குழந்தைகள் தக்க வயது வந்ததும் அது விரும்பாத ஒரு நாட்டுரிமையைத் துறந்து விடலாம். எனவே ஒருவன் தனது நாட்டுரிமையை துறத்தலின் மூலமாகவும், அவனது நாட்டுரிமை இழந்ததாகிறது.

5. மாற்று உரிமை பெறல் மூலம் (By Substitution) :

ஒருவன் தன்குடியாக்கல் முறையில் வேற்று நாட்டு குடிமகனனால் முந்திய நாட்டுரிமையை இழப்பான் என்று பெரும்பாலும் எல்லா நாடுகளும் சட்டம் இயற்றியுள்ளன. இச்சட்டங்களின்படியும் ஒருவன் தனது நாட்டுரிமையை இழந்து மாற்று நாட்டுரிமையைப் பெறுகிறான்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் நாட்டுரிமையை இழத்தல் குறித்து இரண்டு சரத்துகளில் கூறப்பட்டுள்ளது. அவை (1) எவரேனும் ஒரு நபர் 1947–ஆம் ஆண்டு மார்ச் 1–ஆம் தேதிக்குப் பின்னர் இந்திய ஆட்சிப் பரப்பிலிருந்து பாகிஸ்தான் ஆட்சிப்பரப்புக்கு குடிபெயர்ந்து சென்றால் அவர் இந்திய நாட்டின் குடிமகனாகக் கருதப்படமாட்டார் **(சரத்து 7);** (2) இந்தியக் குடிமகன் எவரேனும் தானாக வலிய வேறு நாட்டின் குடியுரிமையைப் பெற்றால், அவன் இந்திய குடியுரிமையை இழப்பான் **(சரத்து 9).** இவ்விரண்டு சரத்துக்களைத் தவிர, **1955–ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய குடியுரிமைச் சட்டமும் (1955) (Indian Citizenship Act, 1955)** நாட்டுரிமை முடிவுறுதல் மற்றும் துறத்தல் குறித்த விதிகளைக் கூறுகிறது.

இரட்டை நாட்டுரிமை (Double Nationality) :

நாடுகளிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தினால் நாட்டுரிமைச் சட்டத்தில் வேறுபாடுகளும், சிக்கல்களும் நிறைந்து காணப்படுகின்றன. இச்சூழ்நிலை, சில சமயங்களில் ஒரு நபர் இரட்டை நாட்டுரிமையைப் (Double Nationality) பெறுவதற்கும், நாடற்றத் தன்மையை (Statelessness) அடைவதற்கும் வழி வகுக்கிறது என்று சொன்னால் அது மிகையாகா.

இரட்டை நாட்டுரிமையானது, பின்வரும் இரண்டு சூழ்நிலைகளில் பெரும் பாலும் ஏற்படுகிறது. அவை,– (1) தம்பதிகள் தங்கள் நாடல்லாத வேறு நாட்டில்

குழந்தை பெறுவதால்; (2) பெண்கள் தங்கள் நாட்டைச் சாராத ஆடவரை மணம் முடிப்பதன் மூலமாக.

முதலாவது சூழ்நிலையைப் பொறுத்தவரை முன்கண்ட மண்ணடி விதி (Jus soli) மற்றும் குருதியுறவு விதி (Jus sanguinis) இணைப்பின் காரணமாக **'இரட்டை நாட்டுரிமை'** ஏற்படுகிறது. உதாரணமாக, மணமான தம்பதிகள் இருவரும் இந்திய நாட்டைச் சார்ந்தவர்கள் எனக் கொள்வோம். அவர்கள் அமெரிக்கா சென்றிருக்கும் பொழுது அங்கு ஒரு குழந்தையை பெற்றேடுக்கின்றனர். தற்பொழுது அக்குழந்தை எங்கு பிறந்ததோ அந்நாட்டின் (அதாவது அமெரிக்கா–வின்) நாட்டுரிமையை மண்ணடி விதிப்படியும் (Jus soli), குழந்தையின் தாய், தந்தையர் எந்நாட்டுரிமையை பெற்றவர்களோ (அதாவது இந்தியாவின்) அந்நாட்டின் நாட்டுரிமையை குருதியுறவு விதிப்படியும் (Jus sanguinis) பெறும். இதன் மூலம் இரண்டு நாட்டு குடியுரிமையை அக்குழந்தை பெற்றதாகிறது. இதுவே **'இரட்டை குடியுரிமை' (Double Nationality)** எனப்படுகிறது.

இரண்டாவது சூழ்நிலையின் அடிப்படையில் உண்டாகும் இரட்டை நாட்டுரிமையானது, ஒரு நாட்டைச் சார்ந்த பெண்மணி பிறிதொரு நாட்டைச் சார்ந்த நபரை மணப்பதால் ஏற்படுகிறது. இச்சூழ்நிலையில் அப்பெண்மணி எந்நாட்டைச் சார்ந்தவளோ அந்நாட்டின் நாட்டுரிமையையும், திருமணத்திற்குப் பிறகு அவளது கணவன் எந்நாட்டை சார்ந்தவனோ அந்நாட்டின் நாட்டுரிமையையும் பெற்று, இரட்டைக் குடியுரிமை பெற்றவளாகிறாள்.

இரட்டை நாட்டுரிமைச் சிக்கலை தீர்ப்பது எவ்வாறு?

இவ்வாறு இரட்டை நாட்டுரிமை எழும்போது அதனை எவ்வாறு தீர்ப்பதென்று 1930–ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதத்தில் ஹேக் எனுமிடத்தில் கூடிய தொகுப்பு மாநாட்டில் (Hague Codification Conference, 1930) உருவாக்கப் பட்ட ஏற்புவிதிகள் (The Hague Convetion, 1930) தெளிவுபடுத்துகின்றன. அதன்படி இரட்டை நாட்டுரிமை கொண்டுள்ள குழந்தைகள், தக்க வயது வந்ததும், தமக்கு எந்நாட்டுரிமை தேவை என்பதை முடிவு செய்து கொள்ளலாம்.

மேலும் இரட்டை நாட்டுரிமை கொண்ட எவரேனும் அந்த இரு நாடுகளல்லாத வேறு ஒரு மூன்றாம் நாட்டில் இருக்கும்போது அந்நாட்டால், அவர் ஏதேனுமொரு நாட்டுடன் மட்டுமே பிணைப்பு கொண்டவராகக் கருதப்படுவார். அந்த மூன்றாவது நாடு, அவர் எந்நாட்டுடன் பெரிதும் பிணைப்பு கொண்டுள்ளவர் என்பதைக் கீழ்க்கண்ட காரணங்களின் அடிப்படையில் முடிவெடுக்கும். அவை,–

1. எந்நாட்டில் அவர் தொடர்ந்து வழக்கமாக வாழ்ந்து வருகிறாரோ (habitually resident), அந்நாட்டுரிமையை பெற்றவர் என்பது முதல் கருத்து.

2. சட்டத்தின் பார்வையில் அவர் எந்நாட்டுடன் பெரிதும் நெருக்கம்

கொண்டவராக (closely connected) கருதப்படுகிறாரோ, அந்நாட்டவரென்பது இரண்டாம் கருத்து.

மேற்கூறிய இரண்டு காரணங்களின் அடிப்படையில் இரட்டை நாட்டுரிமை பெற்ற ஒருவனது நாட்டுரிமை தீர்மானிக்கப்பட்டால், அது **'செயலார்ந்த அல்லது ஆக்கப்பூர்வமான நாட்டுரிமை' (Active or Effective Nationality)** எனப்படும். இது குறித்த முக்கிய வழக்கு வருமாறு. (பொதுவாக இரட்டை நாட்டுரிமை குறித்த வினாவிற்கு இவ்வழக்கை சுட்டிக் காண்பித்தல் நன்று.)

Canevaro Case[1] – இவ்வழக்கில் கேனிவரோ என்பவர் பிறப்பால் பெரு நாட்டைச் சார்ந்தவர். ஆனால் அவரது தந்தையோ, இத்தாலி நாட்டின் குடிமகன். ஆகவே மேற்படி கேனிவரோவுக்கு பெரு நாட்டு குடியுரிமையும், இத்தாலி நாட்டுக் குடியுரிமையுமாக இரண்டு நாட்டுரிமைகள் கிடைக்கின்றன. இந்நிலையில் இசைவுத் தீர்ப்புக்கான நிரந்தர நீதிமன்றம் (Permanent Court of Arbitration) மேற்படி கேனிவரோ, பெரு நாட்டுக் குடியுரிமையை மட்டுமே கொண்டவர் என்பதை பின்வரும் அடிப்படையில் நிருணயித்து தீர்ப்பு கூறியது. அதாவது, மேற்படி கேனிவரோ, பெரு நாட்டில் பல காலம் வாழ்ந்துள்ளார். பெரு நாட்டின் குடிமகனாக பலமுறை தம்மைக் காண்பித்துள்ளார். பெரு நாட்டின் குடிமகன் எனும் ரீதியில் அந்நாட்டு குடிமக்கள் மட்டுமே போட்டியிடக் கூடிய 'செனட்' (Senate) தேர்தலில் வேட்பாளராக நின்றுள்ளார். இவ்வாறு பெரு நாட்டின் **ஆக்கப்பூர்வமான நாட்டுரிமையை (Effective Nationality)** அவர் பெற்றிருப்பதால் மேற்படி கேனிவரோ என்பவர் பெரு நாட்டைச் சார்ந்த குடிமகன்தான் என்று தீர்ப்பளித்தது. மேலும் இத்தாலி நாட்டைச் சார்ந்தவன் என்ற கூற்றை மறுக்க பெரு அரசாங்கத்திற்கு சகல உரிமையும் உண்டு என்றும் அம்மன்றம் தீர்ப்பளித்தது.

மணமுற்ற பெண்மணிகளின் நாட்டுரிமை :

ஒரு மூன்றாம் நாடு எங்ஙனம் இரட்டை நாட்டுரிமையைப் பெற்ற ஒருவனின் நாட்டுரிமையை முடிவெடுக்கிறது என்பதற்குண்டான இரண்டு கருத்துக்களை நாம் முன்னர் கண்டோம். இது 1930–ஆம் ஆண்டின் ஹேக் மாநாட்டின் ஏற்பு விதிகளில் 5–வது சரத்ததாக கூறப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து **8 முதல் 11 வரையிலான சரத்துகள்**, மணமான பெண்மணிகளின் இரட்டை நாட்டுரிமை சிக்கலைத் தீர்த்து வைப்பதற்கு வழி பகர்கிறது. அதாவது மணமுற்ற பெண்மணிகள் தம் கணவரின் நாட்டுரிமையை பெறுவர் எனக் கூறுகிறது. இவ்விதி 1957–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட **மணமுற்ற பெண்டிர் நாட்டுரிமை ஏற்பு விதிகள்** மூலம் மேலும் சிறிது வளர்ச்சி பெற்றது. அதன்படி வெவ்வேறு நாட்டைச் சார்ந்த ஆணும், பெண்ணும் மணம் செய்து கொண்டு, பின்னர் மணமுறிவு செய்து கொண்டால், அத்திருமண உறவால் பெற்ற புதிய

1. Italy v. Peru, Permanent Court of Arbitration (1912)

நாட்டுரிமையினை மணமுறிவின் காரணமாக இழக்கக்கூடாதென்றும், மண வாழ்வின்போது (During the married life) கணவன் தன்னிச்சையாக வேற்று நாட்டுடன் பிணைப்பை ஏற்படுத்திக் கொண்டால், அச்செயல் மனைவியின் முந்தைய நாட்டுரிமையை பாதிக்காதென்றும் கூறப்பட்டது. மணமான பெண்டிர் நாட்டுரிமையை தீர்மானிப்பதைப் பொறுத்தவரை, மேற்கண்ட ஏற்பு விதிகள், ஒரு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றால் அது மிகையல்ல.

நாடின்மை (Statelessness):

ஒருவன் விடுவிப்பு (Release), இழத்தல் (Deprivation), காலக்கடப்பு (Expiration) ஆகிய முறைகளில் தனது நாட்டுரிமையை இழக்கலாம் என முன்னர்க் கண்டோம். அப்போது அவன் வேறெந்த நாட்டுரிமையையும் பெறாதவனாக இருந்தால் அவனுக்கு **'நாடின்மை' (Statelessness)** ஏற்படுகிறது. அவன் **'நாடற்றவன்' (Statelessness Person)** ஆகிறான். பிறக்கும் பொழுதே கூட ஒரு குழந்தை சட்டக் குழப்பங்களினால் தனது நாட்டுரிமையை இழந்து நாடற்றுப் போக வாய்ப்பு உண்டு.

உதாரணமாக, 'A' என்ற நாடு அதன் ஆள்நிலத்தில் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டுமே குடியுரிமை வழங்குவதாகவும், **'B'** என்ற நாடு தனது குடிமக்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு மட்டும் குடியுரிமை வழங்குவதாகவும் வைத்துக் கொள்வோம். இந்நிலையில் **'A'** நாட்டின் குடிமக்களுக்கு **'B'** நாட்டில் பிறக்கும் குழந்தைகள் நாட்டுரிமை இல்லாத குழந்தைகளாக, நாடற்றவைகளாக, கருதப்படுவார்கள்.

இந்த நாடற்ற தன்மை, இரு நாடுகளிடையே தத்தம் நாட்டுரிமைச் சட்டத்தில் கொண்டுள்ள முரண்பாடுகள் காரணமாகவோ அல்லது சில நாடுகள் தன்னாட்டு மக்களின் ஒரு பகுதியினரைத் தன்னாட்டவர்கள் அல்லவரென திடீரென அறிவித்து விடுவதாலும் ஏற்படுவதுண்டு. இதைத் தவிர்க்கும் பொருட்டு, மனித உரிமை பற்றிய அனைத்துலக பிரகடனத்தின் (The Universal Declaration of Human Rights, 1948) **15–வது சரத்து,** 'ஒவ்வொருவருக்கும் ஒரு நாட்டைச் சேர்ந்து வாழும் உரிமை உண்டு. எவரொருவது நாட்டுரிமையையும் ஏதேச்சதிகாரமான வகையில் பறிக்கக் கூடாது அல்லது அவர் தனது நாட்டுரிமையை மாற்றிக் கொள்ளும் உரிமையை மறுக்கக் கூடாது',[1] என்று பிரகடனம் செய்கிறது.

நாடற்ற தன்மையை குறைக்கவும் போக்கவும் எடுக்கப்பட்டுள்ள முயற்சிகள் :

1. 1930–ஆம் ஆண்டில் ஹேக் தொகுப்பு மாநாடு (Hague Codifica-

1. Everyone has the right to a nationality. No one shall be arbitrarily deprived of his nationality nor denied the right to change his nationality - Art. 15 of the Universal Declaration of Human Rights, 1948.

tion Conference), இரட்டை நாட்டுரிமை, நாடற்ற தன்மை ஆகிய நிலைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்க விழைந்தது. நாட்டுரிமையற்ற அல்லது நாட்டுரிமையை அறியாத பெற்றோர் பெற்றெடுத்த குழந்தை அல்லது பெற்றோர் எவர் என்று தெரியாத குழந்தை, எந்நாட்டில் பிறந்ததோ அந்நாட்டின் குடியுரிமையைப் பெறும் என்று மேற்படி மாநாட்டின் ஏற்புவிதிகள் கூறுகின்றன.

2. 1951–ஆம் ஆண்டு சனவரி 18–ஆம் தேதிக்கு முன்னதாக அகதிகளான நபர்களைப் பாதுகாப்பதற்காக ஏற்கப்பட்ட அகதிகள் நிலை பற்றிய ஏற்புவிதிகள் (Convention on the Status of Refugees), அகதிகள் நாடுவிட்டு நாடு சென்று வரவும், எந்நாட்டில் வாழ்கின்றார்களோ அங்கே ஏதேனும் வாணிபத்திலோ, தொழில்களிலோ ஈடுபடும் உரிமையையும் நல்கியது. மேலும் அவர்கள் அகதிகளாக வந்து சேர்ந்த நாட்டின் நாட்டுரிமை பெற்றவர்களுடன் தொடக்கநிலைக் கல்வி, அரசு நிவாரணம், சமூகப் பாதுகாப்பு ஆகிய விஷயங்களில் சமமாக பாவிக்கப்பட வேண்டும்; சமயச் சுதந்திரம் அளிக்கப்பட வேண்டும் என்பதற்கான விதிகள் வகுக்கப்பட்டன. 1954–ஆம் ஆண்டில் நியூயார்க் நகரில் கூடிய நாடற்றவர்கள் நிலை பற்றிய மாநாட்டிலும் இதேபோன்று சில நன்மைகளை வழங்கும் ஏற்பு விதிகள் ஏற்கப்பட்டன.

3. நாட்டிடைச் சட்ட ஆணையம் 1952 மற்றும் 1954–ஆம் ஆண்டிற்கிடையே நாடற்ற தன்மை குறித்த நிலையை நாட்டுரிமையுடன் தொடர்புபடுத்தி பரிசீலனை செய்தது. இதன் விளைவாக 1954–ஆம் ஆண்டில் அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை நாடற்ற தன்மையை குறைப்பதற்கான ஏற்புவிதிகளை உருவாக்கும் பொருட்டு, மாநாடு ஒன்றைக் கூட்ட முடிவு செய்தது. இம்மாநாடு 1959–ஆம் ஆண்டில் நடந்தது. அதன் ஏற்புவிதிகள் பலவும் 1961–ஆம் ஆண்டில் உலக நாடுகள் பலவற்றாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது (Convention on the Reduction of Statelessness, 1961). நாடற்றவராக உள்ள நபருக்கு அவர் எந்நாட்டில் பிறந்தாரோ அந்நாட்டின் நாட்டுரிமையை மேற்படி மாநாட்டின் தரப்பு நாடுகள் அளிக்க வேண்டும்; நாட்டை விட்டுச் செல்லல், அயல் நாட்டில் அதிக காலம் தங்கி வாழ்தல், அல்லது நாட்டுரிமை பெறுவதற்கான பதிவைச் செய்யத் தவறுதல் ஆகியவற்றின் காரணமாக ஒருவரது நாட்டுரிமையை மறுத்து, அவரை நாடற்றவராக ஆக்குதல் கூடாது ஆகியன அவ்வேற்பு விதிகளில் முக்கியமானவை யாகும்.

4. பெருந்தன்மை மிக்க நாடுகள், நாடற்றவர்களுக்குத் தங்கள் நாட்டுரிமையை வழங்குவதன் மூலம் நாடற்றோர் எண்ணிக்கையைக் குறைக்க முன் வந்தன.

5. நாடுகள் தன்னிச்சையாக மக்களைத் தன்னாட்டுரிமையை இழக்கச் செய்வதைத் தடுத்தல்.

-o0o-

மீட்டொப்படைத்தல்
[Extradition]

47. Examine the law relating to Extradition by referring to decided cases. (மீட்டொப்படைப்பு பற்றிய சட்டத்தினை முடிவுற்ற வழக்குகளை குறிப்பிட்டு விளக்கவும்.)

(அல்லது)

What is meant by "Extradition"? State the law and practice as to Extradition. (அயல்நாட்டிடம் ஒப்புவிப்பு என்றால் என்ன? இதற்குத் தொடர்பான சட்டத்தையும் வழக்கத்தையும் எடுத்துக் கூறுக?)

(அல்லது)

Examine the rules of International Law relating to extradition. What are "Extradition Crimes"? (மீட்டொப்படைத்தல் குறித்த நாட்டிடைச் சட்ட விதிகளை விவாதிக்க. 'மீட்டொப்படைத்தல் குற்றங்கள்' என்றால் என்ன?)

(அல்லது)

Define Extradition. State the procedure seeking extradition and the conditions to be satisfied before a person is extradited. (மீட்டொப்படைத்தலை வரையறு. மீட்டொப்படைக்கும்படி வேண்டுவதற்கான நடைமுறைகளையும் மற்றும் ஒரு நபர் மீட்டொப்படைக்கப்படுவதற்கு முன் பூர்த்தி செய்யப்பட வேண்டிய நிபந்தனைகளையும் குறிப்பிடுக.)

(அல்லது)

Double Criminality - Write Short Notes. (இரட்டைக் குற்ற விதி – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Extradition - Write Short Notes. (மீட்டொப்படைத்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Extradition Crimes - Write Short Notes. (மீட்டொப்படைத்தல் குற்றங்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

மீட்டொப்படைத்தல் – விளக்கம் :

ஒவ்வொரு நாடும் தனது ஆள்நிலப்பரப்பிற்குள் இருக்கும் மக்கள், பொருள்கள், செய்கைகள் ஆகியவற்றைப் பொருத்தவரை தனது விருப்பம்போல் நடந்து கொள்ளலாம். இதனால் கட்டுப்பாடில்லாத அதிகாரம் நாடுகளுக்கு உண்டு என்று நினைத்துவிடக் கூடாது. தன்னாட்டு மக்களைப் பொருத்தவரையில் உள் நாட்டுச் சட்டங்களையும், அந்நியர்களைப் பொருத்தவரை நாட்டிடைச் சட்டத்தையும் கடைப்பிடிக்க வேண்டும்.

ஒருவன் ஒரு நாட்டில் ஒரு குற்றம் புரிந்து விட்டு அயல் நாட்டிற்கு சென்று விட்டால், அந்த நாடு அவனைப் பிடித்து அவனை (விசாரணைக்கு) வேண்டுகின்ற நாட்டிடம் திருப்ப ஒப்படைக்க வேண்டுமென்று நாட்டிடைச் சட்டம் சொல்வதில்லை. எனினும் அவ்வாறு திருப்பித் தருவதற்கு சம்பந்தப்பட்ட இரு நாடுகளுக்கிடையே உடன்படிக்கை ஏதும் இருந்தால், தப்பியோடி வந்த அக்குற்றவாளியை திரும்ப ஒப்படைக்க வேண்டும். இத்தகு உடன்படிக்கை இல்லாவிட்டாலும் அப்படித் திருப்பித் தந்தால், அதுவும் நாட்டிடைச் சட்டத்துக்குப் புறம்பானதல்ல. இப்படித் திரும்பப் பிடித்துத் தருவது அல்லது திரும்ப ஒப்படைப்பது, **'மீட்டொப்படைப்பு' (Extradition)** எனப்படும்.

இதற்கெனப் பொதுவாக ஒவ்வொரு நாடும் உடன்படிக்கைகள் செய்து கொள்வது வழக்கம். இந்த உடன்படிக்கைகள் **'மீட்டொப்படைப்பு உடன்படிக்கைகள்' (Extradition treaties)** எனப்படும். இத்தகு உடன்படிக்கைகள் இல்லாத சமயத்தில் குற்றவாளிகளுக்கு ஒரு நாடு அடைக்கலம் கொடுத்தால் (அபயமளித்தால்), அது **'அடைக்கலம்' (Asylam)** எனப்படும். அடைக்கலம் வழங்கும் நாடு **'அடைக்கல நாடு'** எனப்படும்.

அறிஞர் குரோஷியஸின் கருத்து (View by Grotius):

குற்றமிழைத்தவன் யாராயிருந்தாலும் மனித சமுதாயத்தின் நன்மையைக் கருதி தண்டிக்கப்படுதல் வேண்டும். எனவே நாட்டிடை சட்ட அறிஞர்களில் முக்கிய மானவராக விளங்கும் குரோஷியஸ் (Grotius) என்பார், ஒரு நாடு தன்னிடம் புகுந்துள்ள வேற்று நாட்டுக் குற்றவாளியை தண்டிக்கவோ அல்லது தண்டனை தருவதற்காக குற்றமிழைக்கப்பட்ட நாட்டிடம் ஒப்புவிக்கோ கடமைப்பட்டதென்று கூறியுள்ளார்.

நாடுகளின் மாறுபட்ட நடைமுறைகள் :

அறிஞர் குரோஷியஸின் மேற்கண்ட கருத்து ஒருபுறமிருந்தாலும், நாடுகள் மாறுபட்ட நடைமுறையை பின்பற்றி வந்தன. அதாவது தங்கள் நாட்டிற்குத் தப்பி வந்த குற்றவாளிக்குத் தாங்கள் விரும்பினால் அபயமளித்து அடைக்கலம் தரத் தமக்கு உரிமை உண்டு எனக் கூறி வந்தன.

ஆனால் காலப்போக்கில் பொது நன்மையைக் கருதி, குற்றவாளியைத் திரும்பவும் ஒப்படைப்பதற்கு நாடுகள் தங்களுக்குள் உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் வழக்கத்தை மேற்கொண்டன. இவ்வாறு உடன்படிக்கை செய்து கொள்ளாத நாடுகளுக்கிடையே இவ்வாறு திருப்பி ஒப்படைக்கும் கடமையோ, திரும்பப் பெறும் உரிமையோ இல்லையெனக் கூறித் திருப்பி ஒப்படைப்பதில், தங்கள் விருப்பம் போல் நடந்து வந்தன. ஃபிரான்ஸ், செர்மனி போன்ற நாடுகள், தன்னாட்டு மக்கள் அயல் மண்ணில் குற்றம் ஏதேனும் செய்து மீண்டும் தன்னாட்டிற்குத் தப்பி வந்துவிட்டால் குற்றமிழைக்கப்பட்ட நாட்டிடம் ஒப்படைக்க மறுத்துத் தாமே தண்டனை வழங்கும் நடைமுறையைக் கொண்டிருந்தன. ஆனால் பிரிட்டன் போன்ற நாடுகள் அவை செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளுக்கு ஏற்பவோ அல்லது உடன்படிக்கை இல்லாதவிடத்துத் தம்நாட்டு மக்கள் என்றும் வேற்றுநாட்டு மக்களென்றும் வேற்றுமை பாராட்டாமல் பொது நடைமுறைப்படி நடக்கின்றன.

மீட்டொப்படைப்பு சட்டங்கள் (Extradition Laws) :

மீட்டொப்படைப்பதையொட்டிய முதல் உள்நாட்டுச் சட்டத்தை பெல்ஜியம் நாடு 1833–ஆம் ஆண்டில் தோற்றுவித்தது. 1870–ஆம் ஆண்டில் பிரிட்டனும், வேறு பல நாடுகளும் மீட்டொப்படைத்தல் தொடர்பாக தத்தம் உள்நாட்டுச் சட்டத்தை உருவாக்கிக் கொண்டன. தற்போது ஒவ்வொரு நாடும் தங்கள் நாட்டுச் சட்டத்தையொட்டியே குற்றவாளியைத் திருப்பித் தருவதா வேண்டாமா என்றும் முடிவு செய்கின்றன. இந்தியாவும் 1962–ஆம் ஆண்டில் ஒரு மீட்டொப்படைப்பு சட்டத்தை இயற்றியுள்ளது (Indian Extradition Act of 1962).

மீட்டொப்படைப்பதற்கு தேவையான நிபந்தனைகள் (Conditions to be fulfiled for extradition) :

குற்றமொன்றைப் புரிந்துவிட்டு தப்பிச் சென்றுவிட்ட ஒருவரை, திரும்ப ஒப்படைக்க வேண்டுமெனில், அங்கு பின்வரும் இரு முக்கிய நிபந்தனைகள் பூர்த்தியாகியிருக்க வேண்டும். (1) ஒரு நபர் மீட்டொப்படைப்படைக்கப்பட வேண்டியவராக இருத்தல் வேண்டும்; (2) அந்நபர் மீட்டொப்படைப்பு குற்றம் புரிந்திருக்க வேண்டும். இவையிரண்டும்தான் மீட்டொப்படைப்பதற்கு தேவையான நிபந்தனையாகும். இவற்றினை விரிவாக பின்வருமாறு காண்போம்.

(1) மீட்டொப்படைக்கப்பட வேண்டிய நபர் (Extraditable Person):

அயல் நாட்டில் குற்றம் புரிந்துவிட்டு வரும் அனைத்து நபர்களும் அந்த அயல் நாட்டிடம் ஒப்படைக்கப்பட வேண்டியவர்கள் அல்லர். அயல் நாட்டால் விசாரணைக்கு வேண்டப்பட்ட நபர், தன் குடிமகனாயிருந்தால் அவனை அயல் நாட்டிடம் ஒப்படைக்க வேண்டுமென்பதில்லை. இம்மாதிரியான தருணத்தில், தொடர்புடைய நாடு தன் குடிமகன் புரிந்த குற்றத்தை தானே விசாரித்து தீர்ப்பு வழங்கும். மாறாக அவனை அவ்வயல்நாட்டிடம் மீட்டொப்படைத்தால், அந்நாட்டுச் சட்டத்திற்கிணங்க, அந்நாட்டு நீதிபதியால் விசாரிக்கப்படுவான். அச்சமயத்தில் அவனுக்கு தக்க நீதி கிடைக்காமலும் போவதற்கு வாய்ப்புண்டு. இது **'பரஸ்பரத் தன்மைக் போட்பாடு' (Doctrine of Reciprocity)** எனப்படுகிறது. பெரும் பாலான நாடுகள் இக்கோட்பாட்டை பின்பற்றுகின்றன. உதாரணமாக, பிரான்ஸ், செர்மனி போன்ற நாடுகள், தன்னாட்டு மக்கள் அயல்நாட்டில் குற்றம் ஏதேனும் புரிந்துவிட்டு மீண்டும் தன்னாட்டுக்கு தப்பி வந்து விட்டால் குற்றமிழைக்கப்பட்ட நாட்டிடம் ஒப்படைக்க மறுத்து தாமே தண்டனை வழங்கும் நடைமுறையைக் கொண்டிருந்தன என்பதையும், பிரிட்டன் நாட்டு நடைமுறைகளையும் முன் சென்ற பத்திகளில் கண்டோம்.

(2) மீட்டொப்படைப்புக் குற்றங்கள் (Extradition Crimes) :

பொதுவாக மீட்டொப்படைப்படைப்புக்கு ஏற்றதென மிகச் சில குற்றங்களை மட்டுமே நாடுகள் கணக்கில் கொண்டுள்ளன. அதிலும் குறிப்பாக ஃபிரான்ஸ் போன்ற நாடுகள் குறிப்பிட்ட குறைந்தபட்ச தண்டனைக்குரிய குற்றங்களுக்காக மட்டுமே குற்றவாளியைத் திருப்பித் தரும் வழக்கமுடையவை. மேலும் எந்தெந்த குற்றங்களுக்காகத் திருப்பித் தர வேண்டும் என்பதை, நாடுகள் தாங்கள் செய்து கொள்ளும் மீட்டொப்படைப்பு உடன்படிக்கைகளிலேயே கூறிவிடுவது வழக்கம். பிரிட்டனைப் பொறுத்தவரையில் திருப்பித் தருவதற்குரிய குற்றங்களனைத்தும் அந்நாட்டின் 1870–ஆம் ஆண்டின் மீட்டொப்படைப்புச் சட்டத்தில் விரிவாகக் கூறப்பட்டுள்ளன.

பொதுவாக அரசியல் குற்றங்கள் (Political Crimes), இராணுவக் குற்றங்கள் (Military Offences) மற்றும் மதத்திற்கெதிரான குற்றங்கள் (Offences against Religion) ஆகியவை மீட்டொப்படைப்பதற்கு ஏற்ற குற்றங்களல்ல எனக் கருதப்படுகின்றன.

(அ) அரசியல் குற்றங்கள் (Political Crimes): ஒரு நபர் புரிந்த குற்றம், அரசியல் தன்மையுடையதாகக் கருதப்பட்டால், அக்குற்றம் 'அரசியல் குற்றமாக' கருதப்படுகிறது. அரசியல் குற்றம் புரிந்த நபர் தப்பியோடி வேறொரு நாட்டிற்குச் சென்றுவிட்டால் அவரை மீட்டொப்படைக்குமாறு கேட்டுக் கொள்ள முடியாது. (மேலும் விரிவாக அடுத்து வரும் வினாவில் காண உள்ளோம்.).

(ஆ) இராணுவக் குற்றங்கள் (Military Offences): பொதுவாக இராணுவக் குற்றங்களும், மதத்திற்கு எதிரான குற்றங்களும் மீட்டொப்படைக்கப் படுவதற்கு காரணமாக அமையும் குற்றங்களாவதில்லை. மிகச் சிறிய குற்றங்களுக் காகவும் (trifling crimes) குற்றவாளிகள் மீட்டொப்படைக்கப்படுவதில்லை.

(இ) குறித்தவகை விதி (Rule of Speciality) : ஒரு குற்றவாளியை எக்குற்றத்திற்காக மீட்டொப்படைப்படைக்கும்படி ஒரு நாடு கேட்டுக்கொள்கிறதோ அக்குற்றத்திற்காக மட்டுமே அந்நாடு அவனை விசாரிக்க வேண்டும். அதற்கு முரணாக அக்குற்றவாளி செய்த பிற குற்றங்களைப் பற்றி விசாரித்தல் கூடாது. இவ்வாறு அக்குற்றவாளி செய்த மீட்டொப்படைப்படைப்புக் குற்றம் குறித்து மட்டுமே விசாரிப்பதற்கு மேற்படி நிபந்தனை வழிவகுப்பதால், இது 'குறித்த வகை விதி' எனப்படுகிறது. இன்று பல நாடுகளும் தங்களது மீட்டொப்படைப்பு உடன் படிக்கையில் இவ்விதியைச் சேர்த்துள்ளன. இவ்விதிக்கு உதாரணமாக பின்வரும் வழக்கினைக் காண்போம்.

United States v. Rauscher[1] – இவ்வழக்கில் ராய்சர் என்பவர் ஒரு கப்பலோட்டி. அவர் மீது கொலைக் குற்றம் சுமத்தப்பட்டு பிரிட்டனிலிருந்து, அமெரிக்க அய்க்கிய நாடுகளிடம் மீட்டொப்படைக்கப்பட்டார். அவர் மீது அமெரிக்க நீதிமன்றம், கொடுங்காயம் விளைவித்தற்குண்டான குற்றச்சாட்டை சுமத்தி, அதன் படி அவரைத் தண்டித்தது. இத்தண்டனை உத்தரவை எதிர்த்து ராய்சர் அமெரிக்க தலைமை நீதிமன்றத்திடம் மேல்முறையீடு செய்து கொண்டார். அது, எக்குற்றத்திற் காக ஒரு குற்றவாளி மீட்டொப்படைக்கப்பட்டாரோ, அக்குற்றத்திற்காக மட்டுமே அவரை விசாரித்து தண்டிக்க வேண்டும் எனக்கூறி கீழ் நீதிமன்ற உத்தரவை இரத்து செய்து ராய்சரை விடுதலை செய்தது.

(ஈ) இரட்டைக் குற்ற விதி (Rule of Double Criminality) : மீட்டொப்படைக்கப்பட வேண்டிய நபர் செய்த குற்றமானது, அவர் குற்றம் புரிந்த நாட்டிலும் சரி, அவரை மீட்டொப்படைக்கும்படி கோரிக்கை விடுவிக்கும் நாட்டிலும் சரி, ஒரே குற்றமாக கருதப்படுதல் வேண்டும். உதாரணமாக ஒரு இந்தியன் அமெரிக்காவில் கையாடல் குற்றம் புரிந்தால், அவனது அக்குற்றச் செயல் இந்தியாவிலும் கையாடல் குற்றமாகவே கருதப்பட வேண்டும். அப்பொழுதுதான் அவனை மீட்டொப்படைக்க முடியும். இந்நிபந்தனை **'இரட்டைக் குற்ற விதி'** எனப் படுகிறது. உதாரணமாக பின்வரும் வழக்குகளைக் காண்போமா?

Factor v. Laubenheimer and Haggard[2] – ஜேக்கப் ஃபேக்டர் என்பார் இங்கிலாந்தில் மோசடியான வகையில் சேர்க்கப்பட்ட பணம் என அறிந்தும் அதைப் பெற்றுக் கொண்டு அமெரிக்காவிலுள்ள இல்லிநாய்ஸ் மாநிலத்திற்குச்

1. (1886) 119 U.S. 407.
2. (1933) 290 U.S. 276, 287.

சென்று விட்டார். அவரை அக்குற்றத்திற்காகத் திரும்ப ஒப்படைக்குமாறு இங்கிலாந்து, அமெரிக்காவை வேண்டிக்கொண்டது. ஆனால், தான் இங்கிலாந்தில் செய்த செயல் இல்லிநாய்ஸ் மாநிலச் சட்டப்படி ஒரு குற்றமல்ல என்பதால் தன்னை மீட்டொப் படைக்கக் கூடாது என ஃபேக்டர் புரிந்த வாதத்தை அமெரிக்கத் தலைமை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. மாறாக அவரது அச்செயல் பொதுவாக அமெரிக்கச் சட்டப்படி குற்றமாயிருப்பதனால், அதுவே போதும் என்று கூறி அவரை இங்கிலாந்திடம் ஒப்படைத்தது.

Eisler's Case[1] – இவ்வழக்கில் அய்ஸ்லெர் என்பவர் அமெரிக்காவில் **'பொய்யுரைத்தல்' (Perjury)** குற்றத்திற்காக கைது செய்யப்பட்ட பொழுது நியூயார்க்கிலிருந்து போலந்திற்குத் தப்பிச் சென்றான். அச்சமயத்தில் அவனை பிரிட்டிஷ் காவலர்கள் பிடித்து பிரிட்டிஷ் மாஜிஸ்ட்ரேட் முன் ஒப்படைத்தனர். அவனை விசாரித்த மாஜிஸ்ட்ரேட், அமெரிக்காவில் செய்யப்பட்ட பொய்யுரைத்தல் குற்றமானது, இங்கிலாந்து நாட்டு பொய்யுரைத்தல் குற்றத்திலிருந்து வேறு படுகிறது. இரண்டும் ஒரே குற்றமாகாது. ஆகவே, அய்ஸ்லெரை தண்டிக்க முடியாது என மேற்படி இரட்டைக் குற்ற விதியின் அடிப்படையில் விடுதலை செய்தார்.

(உ) வேறு குற்றத்திற்காக மீட்டொப்படைத்தல் கூடாது: மீட்டொப் படைக்கப்பட வேண்டிய குற்றவாளி புரிந்திருக்கும் குற்றமோ ஒன்று. ஆனால் அவனைத் தன்வசம் ஒப்படைக்கும்படி கோரிக்கை விடுக்கும் நாடு, அவன் மீது சுமத்தும் குற்றமோ வேறு. இச்சமயத்தில் அவனை மீட்டொப்படைக்கக் கூடாது.

(ஊ) முதன்மைத் தோற்றச் சான்றுகள் (*Prima facie* evidance): ஒரு குற்றவாளியை மீட்டொப்படைக்கும்படி அயல் நாட்டிடம் (அடைக்கல நாட்டிடம்) கோரிக்கை விடுப்பதற்கு முன், அவன் தமது நாட்டில் தண்டிக்கப்பட வேண்டிய குற்றமொன்றைப் புரிந்துள்ளான் என்பதற்கு முதன்மைத் தோற்றச் சான்றுகளை ஆதாரமாகக் காண்பித்தல் வேண்டும்.

மீட்டொப்படைப்பதற்குண்டான நடைமுறைகள்:

குற்றவாளியைத் திருப்பித் தரவேண்டும் எனக் கோரிக்கை விடுக்கும் நாடு, முதலில் தேவையான வேண்டுதல் முறைமைகளை (formalities) மேற் கொண்ட பின்னர், கோரிக்கை விடுக்கும் நாட்டிற்கும் திருப்பித்தரும் நாட்டிற்கும் இடையேயுள்ள உடன்படிக்கைக்கேற்பவோ, உடன்படிக்கை இல்லையென்றால் திருப்பித் தரும் நாட்டின் உள்நாட்டுச் சட்டத்திற்கேற்பவோ, குற்றவாளியை ஒப்படைப்பதா, வேண்டாமா என்று முடிவு செய்து, அவ்வாறு ஒப்படைப்பதானால், திருப்பித் தரும் காவலர்கள், கோரிக்கை விடுக்கும் நாட்டுக் காவலர்களிடம் குற்றவாளியை ஒப்படைத்தவுடன் மீட்டொப்படைத்தல் நடைமுறை முடிவுற்றதாகக் கருதப்படும்.

1. Eisler Extradition Case (1949)

திருப்பித் தரும் நாடு சில சமயங்களில் குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் திருப்பித் தருவது உண்டு. அப்பொழுது திரும்பப் பெற்ற நாடு எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் குற்றவாளியைப் பெற்றதோ, அந்த நிபந்தனைகளை மீறி குற்றவாளியைத் தண்டிக்க முயற்சித்தால் குற்றவாளியை ஒப்படைத்த நாடு மீண்டும் திருப்பிப் பெற உரிமை பெற்றதாகும். பின்வரும் வழக்கில் திரும்பப் பெறுதல் குறித்து முக்கிய கேள்வியொன்று எழுந்தது.

Savarkar's Case (France v. Great Britain)[1] – குற்றவாளிக்கு அபயமளித்து அடைக்கலம் தந்த நாடு, சிலசமயங்களில் குற்றவாளியை முறைதவறி ஒப்படைத்துவிட்டு, பின்னர் திரும்பக் கேட்பதுண்டு. இவ்வாறு கேட்பதற்கு அந்நாட்டிற்கு உரிமையுண்டா எனும் வினா மேற்படி வழக்கில் எழுந்தது. இவ்வினாவிற்குண்டான விடையை இவ்வழக்கின் பொருண்மைகளையும், முடிவையும் காணும் பொழுது புலனாகும். அவை வருமாறு :

சாவர்க்கார் என்பவர் ஒரு இந்தியனாகவும், பிரிட்டிஷ் குடிமகனாகவும் (an Indian and a British subject) விளங்கியவர். அவரை இராஜத் துரோகக் (Treason) குற்றத்திற்காக விசாரிக்கும் பொருட்டு 'மொரியா' (Morea) என்னும் பிரிட்டிஷ் கப்பலில், அவர் பிரிட்டனிலிருந்து இந்தியாவிற்கு கொண்டு வரும் வழியில், மேற்படி மெரியா கப்பலானது ஃபிரான்சு நாட்டில் உள்ள 'மார்செயில்ஸ்' (Marseilles) எனும் துறைமுகத்தில் நின்றது. அப்பொழுது மேற்படி சாவர்க்கார் அக்கப்பலிருந்து தப்பி ஃபிரான்சு நாட்டின் ஆள்நிலப்பரப்பிற்குள் ஓடிவிட்டார். அச்சமயத்தில் அக்கப்பலின் காவலர்கள் கூக்குரல் எழுப்பியதன் பேரில் ஃபிரான்சு நாட்டுக் காவலர்கள் சாவர்க்காரைப் பிடித்து மீண்டும் மேற்படி கப்பலில் இருந்த பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர். தகவல் அறிந்த ஃபிரான்சு நாட்டு மேலதிகாரிகள் சாவர்க்காரைத் திரும்ப ஒப்படைப்பதில் முறைகேடுகள் நடந்து விட்டதாகவும், பிரிட்டன் சாவர்க்காரைத் திரும்பவும் ஃபிரான்சு நாட்டிடம் ஒப்படைத்து விட்டு மீட்டொப்படைக்குமாறு வேண்டிக்கொள்ள வேண்டும் என்றும் ஃபிரான்சு நாடு பிரிட்டனைக் கேட்டது. ஆனால் அதற்கு பிரிட்டன் மறுத்துவிட்டது.

இவ்வழக்கு இசைவுத் தீர்ப்பிற்கான நிலையான நீதிமன்றத்தின் (Permanent Court of Arbitration) முன்னர் வந்த போது, ஃபிரான்சு நாட்டிடம் தனது கைதியை ஒப்படைத்துவிட்டு, ஃபிரான்சு கேட்டதைப் போல் பிரிட்டன் மறுபடியும் வேண்டித்தான் அவனைத் திரும்பப் பெற வேண்டும் எனும் அவசியமில்லை என்றும், அத்தகு கடப்பாடுகளும் நாட்டிடைச் சட்டத்தில் கிடையாது என்றும் பிரிட்டன் நாட்டிற்குச் சார்பாக தீர்ப்பு வழங்கியது.

Dharam Teja's Case – இவ்வழக்கில் தரம் தேஜா என்பவர் இந்தியாவில் கோடிக்கணக்கான ரூபாய்களை கையாடல் செய்து விட்டு கியூபா நாட்டிற்கு தப்பிச் சென்றுவிட்டார். மேற்படி குற்றவாளியை தங்களிடம்

1. Permanent Court of Arbitration, (1911) No. IX.

ஒப்படைக்கும்படி கியூபாவிடம், இந்திய அரசு கேட்டுக் கொண்ட பொழுது, கியூபா நாட்டு அரசு அவரை ஒப்படைக்க மறுத்துவிட்டது. (ஏனெனில் இந்தியாவிற்கும் கியூபா–விற்குமிடையே மீட்டொப்படைத்தல் உடன்படிக்கை கிடையாது). ஆனால் இதற்கிடையே தரம் தேஜா கியூபாவிலிருந்து இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்து அரசு இந்தியாவின் வேண்டுகோளின் பேரில் அவரை கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைத்தது. ஏனெனில் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்குமிடையே குற்றவாளிகளை மீட்டொப்படைத்தல் தொடர்பாக உடன்படிக்கை இருந்தது. மேலும், இந்திய அரசும் பிரிட்டிஷ் அரசும் மக்கள் பொது உரிமை அரசு நாடுகளில் (Common Wealth Countries) உறுப்பு நாடுகளாகும்.

Sucha Singh's Case – இவ்வழக்கின்படி, பஞ்சாப் மாநில முன்னாள் முதலமைச்சர் பிரதாப் சிங் கைரான் என்பவரை கொலை செய்ததாக சுச்சா சிங் என்பவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டது. இந்நியைில் சுச்சா சிங் இந்தியாவிலிருந்து நேபாள நாட்டிற்குத் தப்பிச் சென்றுவிட்டான். இந்திய அரசு வேண்டிக் கேட்டுக் கொண்டதற்கிணங்க, நேபாள அரசு தனது நாட்டுச் சட்டத்தின்படி அவனுக்கு எதிராக மீட்டொப்படைத்தல் நடவடிக்கைகளைத் தொடர்ந்து, அவனை இந்தியாவிடம் திரும்பவும் ஒப்படைத்தது. இவ்வாறு மீட்டொப்படைப்பதற்கு அடிப்படைக் காரணம் யாதெனில், தப்பி வந்த குற்றவாளிகளை மீட்டொப்படைக்க வேண்டும் என்று இரு நாடுகளுக்குமிடையே 'மீட்டொப்படைத்தல் உடன்படிக்கை' இருந்ததுதான் என்று சொன்னால் அது மிகையன்று.

மேற்கண்ட இரு வழக்குகளும் **மீட்டொப்படைத்தல் உடன்படிக்கையின் முக்கியத்துவத்தை** உணர்த்துகிறது.

48. Explain the meaning of 'Political offences' in the context of International law referring to deceided case. ('அரசியல் குற்றங்கள்' என்பதன் பொருளை நாட்டிடைச் சட்டத்தின் கண்ணோட்டத்தில் முடிவான வழக்குகளைச் சுட்டிக்காட்டி விளக்குக.)

அரசியல் குற்றங்கள் - விளக்கம் :

'அரசியல் குற்றங்கள்' என்பதை வரையறுப்பது என்பது அவ்வளவு எளிதான செயலல்ல. பல்வேறு நாடுகள் பல்வேறு விதங்களில் 'அரசியல் குற்றங்கள்' என்பதன் பொருளை வரையறுக்கின்றன. ஒரு சில நாடுகள் சம்பந்தப்பட்ட குற்றம், எந்த உள்நோக்கத்திற்காக (motive) புரியப்பட்டதென்றும், அந்நோக்கில் சிறிதளவேனும் அரசியல் தொடர்பு இருக்குமானால் அதனை 'அரசியல் குற்றம்' என வரையறுக்கின்றன. வேறு சில நாடுகள் குற்றத்தின் நேரடி விளைவை கண்டு, அது தனித்தவகை குற்றங்களின் (Specific offence) கீழ் வருகிறதா என ஆராய்ந்து, அது அரசியல் குற்றமா, இல்லையா என்பதைத் தீர்மானிக்கின்றன. இவ்வாறு தீர்மானிக்க வேண்டியதின் அவசியம் என்ன, இதற்கும் நாட்டிடைச்

சட்டத்திற்கும் என்ன தொடர்பு, என அடுத்தடுத்து வினா மனதில் எழுந்தால், அதில் வியப்பொன்றுமில்லை. இவ்வினாவிற்கு விடை கூற வேண்டுமெனில், சிறிது வரலாற்றுப் பின்னணியையும் காணுதல் இன்றியமையாததாகும்.

அரசியல் குற்றம் மற்றும் நாட்டிடைச் சட்டம் - தொடர்பு:

ஒரு நபர் தன்னாட்டில் அரசியல் குற்றம் ஏதேனும் புரிந்து விட்டு அயல் நாட்டிற்கு தப்பியோடிவிட்டால், அந்நபரை மீட்டொப்படைக்கும்படி அவனது தாய் நாடு கோரிக்கை விடுவிக்க முடியாது என்பது நாட்டிடைச் சட்ட நடப்பாகும். இதற்காகத்தான் 'அரசியல் குற்றம்' என்ற பதத்தின் பொருளை வரையறுப்பதில் சற்று குழப்பங்கள் ஏற்படுகின்றன.

இது குறித்து நாட்டிடை வரலாற்று பின்னணியை ஆயும் பொழுது அரசியல் புரட்சிகளிலிருந்து ஆரம்பித்தல் நன்று. வரலாற்றுச் சிறப்புமிக்க ஃபிரெஞ்சுப் புரட்சியின் துவக்கம் வரையில் 'அரசியல் குற்றங்கள்' (Political Crimes) என்றொரு குற்ற வகை வழக்கிலில்லை. ஆனால் எப்பொழுது மீட்டொப்படைக்கும் வழக்கம் ஏற்பட்டதோ அப்பொழுதிலிருந்து அய்ரோப்பாவின் பல்வேறு நாடுகளிலும் கொடுங்கோன்மை ஆட்சிக்கும், சர்வாதிகார ஆட்சிக்கும் எதிராக மக்கள் புரட்சி செய்யத் தொடங்கினர். அவ்வரசுகள் புரட்சியாளர்களைத் கடுந்தண்டனைக்கு உள்ளாக்கின. இதற்கு பயந்து மக்கள் அண்டை நாடுகளுக்கு தப்பியோடினர். துவக்க காலத்தில் இத்தகைய அரசியல் குற்றவாளிகளையும் அடைக்கல நாடுகள், குற்றம் இழைக்கப்பட்ட நாட்டிடம் திரும்ப ஒப்படைத்து வந்தன. ஆனால் இவ்வழக்கத்தை அடைக்கல நாட்டு மக்கள் எதிர்த்ததால், அடைக்கல நாடுகள் அரசியல் குற்றவாளிகளை மீட்டொப்படைப்பதிலிருந்து தவிர்த்தன.

ஃபிரான்ஸ் போன்ற நாடுகள், தங்கள் அரசியல் சட்டத்திலேயே (Article 120 of French Constitution of 1973) அயல் நாட்டில் விடுதலைப் புரட்சி செய்து அதன் காரணமாக தண்டனைக்குப் பயந்து ஃபிரான்ஸ் நாட்டில் அடைக்கலம் புகும் அரசியல் கைதிகள் காக்கப்பட வேண்டும் என்று வகை செய்திருந்தன. பெரும்பாலும் அயல்நாட்டுக்கு தப்பியோடியவர்கள் தங்கள் தண்டனையிலிருந்து காத்துக் கொள்ளும் பொருட்டு, தாம் புரிந்தது அரசியல் குற்றம் என எதிர்வாதம் (defence) புரிந்தனர் என்றால் அது மிகையல்ல.

நாடுகள் அரசியல் குற்றத்தை தீர்மானிக்கும் விதம் :

அரசியல் குற்றம் புரிந்து விட்டு தன் நாட்டில் அடைக்கலம் புகுந்த குற்றவாளிகளைத் திருப்பித் தருதல் கூடாது என்கின்ற கருத்தினை நாடுகள் பொதுவாக ஏற்றுக் கொண்டாலும் எது அரசியல் குற்றம் என்பதை முடிவு செய்வது பெரும் சிக்கலாய் இருந்தது. இதனை முன்னரே கண்டோம். எனினும் நாடுகள் பின்வருவனவற்றைக் கருத்தில் கொண்டு அரசியல் குற்றத்தை தீர்மானித்தது.

1. அக்குற்றம் புரிவதற்கான உள்நோக்கம்;

2. குற்றம் எச்சூழ்நிலையில் நிகழ்ந்தது?

3. குற்றத்தின் இயல்பு;

4. அக்குற்றம், குற்றவாளியை திருப்பித தர வேண்டிக் கொள்ளும் நாட்டின் அரசியல் அமைப்பிற்கெதிரான குற்றமா?

மேற்கண்டவற்றையெல்லாம் ஆராய்ந்து பார்த்துதான் ஒரு குற்றச் செயல், அரசியல் குற்றமா என்பதை நாடுகள் தீர்மானிக்கும்.

அரசியல் குற்றங்கள் குறித்த முடிவான வழக்குகள் :

In re Castioni[1] – கேஸ்டியோனி என்பவர் சுவிட்சர்லாந்து நாட்டவர். சுவிட்சர்லாந்தைச் சார்ந்த மக்கள் சுவிட்சர்லாந்து அரசியல் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்று விடுத்த வேண்டுகோள், அரசால் புறக்கணிக்கப்படவே வன்முறையில் ஈடுபட்டனர். கேஸ்டியோனி–யும் அக்கலக உறுப்பினர். வன்முறையின் பொழுது, அவர் தனது துப்பாக்கியால் சுட்டதால், அவ்வூர் நகராட்சி ஆணையாளர் கொலையுண்டார். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு கேஸ்டியோனி இங்கிலாந்து நாட்டுக்கு ஓடிவிட்டார். சுவிட்சர்லாந்து கேஸ்டியோனியைத் திருப்பித் தன்னிடம் ஒப்படைக்குமாறு இங்கிலாந்தை வேண்டிக்கொண்டது. அதன்பேரில் இங்கிலாந்து அரசு அவரைக் கைது செய்தது. கேஸ்டியோனி, அரசியின் நீதிமன்றப் பிரிவில் (Before Queen's Bench) ஆட்கொணர்விக்கும் நீதிப்போராணைக்காக (Writ of Habeas Corpus) செய்து கொண்ட மனுவின் பேரில் விசாரணை நடந்தபோது, அந்நீதிமன்றம், அது அரசியல் குற்றமாயிருப்பதால் அவனைத் திரும்ப சுவிட்சர் லாந்திடம் ஒப்படைக்க இயலாதெனவும், ஒரு அரசைக் கைப்பற்ற இரு குழுவினரின் போட்டியாலோ அல்லது அரசியல் நோக்கங்களுக்காகவோ ஈடுபட்டு செயலாற்றும் போது நடந்துவிடும் குற்றங்களுக்காக அக்குற்றவாளிகளை ஒப்படைப்பது இயலாதெனவும் கூறியது.

In re Meunier[2] – மியூனியே என்பவன் அரசாட்சியில் நம்பிக்கையற்ற ஒரு அராஜக விரும்பி (Anarchist). இவன் ஃபிரெஞ்சு நாட்டில் ஒரு சிற்றுண்டி விடுதியிலும் படை வீடொன்றிலும் வெடி குண்டு வீசி விட்டு, இங்கிலாந்திற்குத் தப்பிச் சென்று விட்டான். ஃபிரெஞ்சு அரசாங்கம் மியூனியே–வைத் திருப்பித் தருமாறு இங்கிலாந்தை வேண்டிக் கொண்டதன் பேரில், இங்கிலாந்தும் மீட்டொப்படைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடவே, மியூனியே தான் ஒரு அரசியல் குற்றவாளியானதால் தம்மை மீட்டொப்படைப்பது என்பது இயலாது என எதிர்வாதம் புரிந்தார். ஆனால் மியூனியே ஒரு அராஜக விரும்பி. அராஜக விரும்பிகளுக்கு

1. (1891) 1 Q.B. 149
2. (1894) 2 Q.B. 415

அரசியலிலோ அல்லது ஆட்சியிலோ நம்பிக்கை கிடையாது என்பது நியதி. எனவே அவனுக்கு எவ்வித அரசியல் நோக்கோ, எவ்வித அரசியல் அமைப்பிலும் நம்பிக்கையோ இருக்க வாய்ப்பில்லையென்பதால், மியூனியே–வின் குற்றத்தை அரசியல் குற்றமாகக் கருதவியலாது எனும் அடிப்படையில், மியூனியேவின் மேற்படி எதிர்வாதம் தள்ளுபடி செய்யப்பட்டு, அவனை பிரான்ஸ் நாட்டிடம் மீட்டொப்படைக்க இங்கிலாந்திற்கு ஆணையிடப்பட்டது.

R. v. Governor of Brixton Prison Case, Exparte Kolizynski[1] – இவ்வழக்கில், கேஸ்டியோனி, மியூனியே வழக்குகளில் கூறப்பட்ட கருத்துகள் மேலும் வலிவு பெற்றன. இவ்வழக்குகளில் அரசியல் குற்றங்கள் என்பதற்கு மிகவும் பரவலான பொருள் கொள்ளப்பட்டது. அதாவது சட்டப்படி நிறுவப் பட்ட அரசாங்கத்தை மாற்றியமைக்கும் நோக்கத்திற்காக அல்லாமல், அரசியல் நோக்கங் கருதியோ, அரசியல் கொடுமையைத் தவிர்க்கவோ செய்யும் குற்றங்களும் அரசியல் குற்றங்களாகக் கருதப்படும் என நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

In re Govt. of India and Mubarak Ali Ahmed[2] **(or) Mubarak Ali Ahmad v. State of Bombay**[3] – இவ்வழக்கில், பாகிஸ்தான் நாட்டைச் சார்ந்த முபாரக் அலி அஹமது, பொய்யாவணம் புனைந்த (Forgery) குற்றத்திற்காகவும், மோசடி (Fraud) செய்த குற்றத்திற்காகவும் இந்தியாவில் கைது செய்யப்பட்டு சிறையிலிருந்த பொழுது, அவர் இங்கிலாந்திற்குத் தப்பிச் சென்று விட்டார். முபாரக் அலி அஹமதை மீட்டொப்படைக்கும்படி இந்திய அரசு இங்கிலாந்தைக் கேட்டுக் கொண்டது. அப்பொழுது முபாரக் அலி அஹமது, தான் ஒரு பாகிஸ்தானிய ஒற்றன் என்றும், இந்திய அரசு தன்னை கைது செய்து பொய்யாக மோசடி வழக்கு தொடர்ந்திருப்பதாகவும் கூறி, இதனால் தம்மை ஒரு அரசியல் குற்றவாளியாக தீர்மானித்து, தம்மை மீட்டொப்படைக்கக் கூடாது என எதிர்வாதம் புரிந்தான். ஆனால் அவனது எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. இங்கிலாந்து அரசு அவனை ஒரு சாதாரண குற்றவாளியாக கருதி இந்தியாவிடம் மீட்டொப்படைத்தது.

49. Attentat Clause - Write short notes. (அட்டென்ட் பிரிவு – சிறு குறிப்பு எழுதுக.)

'அரசியல் குற்றங்கள்' சில சமயங்களில் கொலை, கொள்ளை, தீயிடல் போன்ற சாதாரண சமுதாய கொடுங்குற்றங்களோடு இணைத்துப் புரியப் படுவதுண்டு. அச்சமயத்தில் அத்தகைய இரு வகைக் குணங்களையும் கொண்ட குற்றத்தை அரசியல் குற்றமாகக் கொள்வதா அல்லது சமுதாயத்திற்கெதிரான குற்றமாக கருதிக் குற்றவாளியை மீட்டொப்படைப்பதா, எனும் சிக்கல்

1. (1955) 1 Q.B. 540.
2. (1952) 1 All. E.R. 1060
3. A.I.R. 1957 S.C. 867

தோன்றுவதுண்டு. இச்சிக்கலுக்குத் தீர்வு காணும் வகையில் எடுக்கப்பட்ட முயற்சியே **'அட்டென்ட் பிரிவாகும்' (Attentat Clause).** இது குறித்த வழக்கு வருமாறு :

Jacquin Case[1] – இவ்வழக்கில் பெல்ஜியத்தில் வாழ்ந்திருந்த ஃபிரெஞ்சு நாட்டினைச் சார்ந்த ஜூல்ஸ் ஜேக்வின், செலஸ்டின் ஜேக்வின் என்ற இருவரும், மூன்றாம் நெப்போலியனைக் கொல்லும் நோக்குடன் அவர் லில்லி, கலாய்ஸ் ஆகிய இரு நகரங்களுக்கிடையே புகை வண்டியில் சென்று கொண்டிருக்கும் போது, இருப்புப் பாதையை வெடிவைத்து தகர்க்கும் முயற்சியில் ஈடுபட்டனர். இக்குற்றத்திற்காக ஃபிரான்ஸ் நாடு பெல்ஜியத்திடம் அக்குற்றவாளிகள் இருவரையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு வேண்டிக் கொண்டது. அன்று நடைமுறையிலிருந்த பெல்ஜிய நாட்டு மீட்டொப்படைப்புச் சட்டம், அரசியல் குற்றவாளிகளை ஒப்படைக்க இடமளிக்காததால், ஃபிரான்ஸ் நாட்டின் வேண்டுகோளை நிராகரிக்க வேண்டி இருந்தது. எனவே எதிர்காலத்தில் இந்நிலை ஏற்படாதிருக்கத் தன்நாட்டுச் சட்டத்தில் அயல்நாட்டு ஆட்சித் தலைவரையோ, அவரது குடும்பத்தினரையோ கொலை புரிவது அரசியல் குற்றமாகக் கருதக் கூடாது எனும் வகையில் திருத்தப் பட்டது. இவ்வகையில் அச்சட்டத்தை திருத்திய பிரிவே **"அட்டென்டட் பிரிவு"** என அழைக்கப்பட்டது.

1933–ஆம் ஆண்டில் நடந்த மீட்டொப்படைத்தல் குறித்த மாண்டிவீடியோ மாநாடும் (Montevideo Convention on Extradition) இதனை தனது ஒரு ஏற்புவிதியாகச் சேர்த்துக் கொண்டது.

-o0o-

1. 1854.

18

அடைக்கலம்
[Asylum]

50. Explain the term asylum and comment on the Asylum's case (Columbia Vs. Peru) 1950 I.C.J.R.266. (அடைக்கலம் என்ற பதத்தை விளக்கி அடைக்கல வழக்கு (கொலம்பியா–எதிர்–பெரு) 1950 ஐ.சி.ஜே.ஆர். 266 மீது விளக்கவுரை தருக.)

(அல்லது)

Discuss asylum and types of asylum. (தஞ்சமளித்தல் பற்றியும் அதன் வகைகளையும் விளக்குக.)

(அல்லது)

Explain territorial asylum and extra-territorial asylum and point out the distinction between the two. (உள்நாட்டு புகலிடம், வெளிநாட்டு புகலிடம் என்றால் என்ன என்பதனை விளக்கி, இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகளை சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Explain fully the statement "the asylum stops where extradition begins". ("எங்கே மீட்டொப்படைத்தல் தொடங்குகின்றதோ அங்கே அடைக்கலம் முடிவுறுகிறது" – இக்கூற்றை முற்றிலும் விளக்குக.)

(அல்லது)

"Extradition ends where asylum begins" - Comment. ("புகலிடம் துவங்கும் போது மீட்டொப்படைத்தல் என்பது முடிகிறது" – விமர்சிக்க.)

(அல்லது)

Asylum - Write short notes. (புகலிடம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Columbia Vs. Peru (1950 I.C.J.R.266) - Write short notes. (கொலம்பியா–எதிர்–பெரு 1950 ஐ.சி.ஜே.ஆர். 266 – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Asylum Case - Write short notes. (அடைக்கல வழக்கு – சிறு குறிப்பு எழுதுக.)

அடைக்கலம் - விளக்கம் :

ஒரு நாடு தனது இறைமை பொருந்திய ஆட்சியின் கீழ், தன்னாட்டவர் அல்லாத வேறு யாரையும் தன் ஆட்சி நிலப்பரப்பிற்குள் ஏற்கவோ அல்லது தன்னாட்டில் நுழையும் அனுமதி மறுக்கவோ அதிகாரமும் உரிமையும் பெற்றது.

எவரேனும், ஒரு நாட்டில் குற்றமிழைத்துவிட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்பட்டு அதற்குண்டான தண்டனை வழங்கப்பட்ட பின்னரோ அல்லது அதற்கு முன்போ அயல் நாடொன்றின் ஆள்நிலப் பரப்பிற்குள் தப்பிச் சென்று விடுவதுண்டு. அச்சமயத்தில், அவ்வயல்நாடு அக்குற்றவாளிக்கு அபயமளித்து புகலிடம் அளித்தால், அது 'அடைக்கலம்' (Asylum) அளித்தல் எனப்படுகிறது. அவ்வயல் நாடு, 'அடைக்கல நாடு' என அழைக்கப்படுகிறது.

'எங்கே மீட்டொப்படைத்தல் தொடங்குகிறதோ அங்கே அடைக்கலம் முடிவுறுகிறது' - விளக்கம் :

அடைக்கலமளித்தலும், மீட்டொப்படைத்தலும் ஒன்றுக்கொன்று தொடர்பு கொண்டவையாகும். ஒரு நாட்டில் குற்றம் புரிந்து விட்டு மற்ற நாட்டு ஆள்நிலப் பரப்பிற்குள் எவராவது தப்பிப் புகுந்து விடுவாராயின், குற்றம் இழைக்கப்பட்ட நாட்டுக்கும் அடைக்கல நாட்டிற்கும் இடையே, மீட்டொப்படைப்பதை ஒட்டி உடன்படிக்கைகள் (Extradition treaties) இல்லையென்றால், அடைக்கல நாடு அக்குற்றவாளிக்கு அடைக்கலமும் பாதுகாப்பும் கொடுக்கலாம். அவ்வாறு கொடுப்பதற்கு அந்நாட்டிற்கு முழு உரிமை உண்டு. இதை மற்ற நாடுகள் தவறாக எடுத்துக் கொள்ள முடியாது.

நாட்டிடைச் சட்டத்தில் எந்த நாடும் அயல்நாட்டவர் எவருக்கும் அடைக்கலம் தரக்கூடாது என்ற கட்டுப்பாடு ஏதும் இல்லை. எனவே அடைக்கலம் தருவதோ அல்லது மறுப்பதோ மீட்டொப்படைக்கும் உடன்படிக்கையையொட்டியது. இதைத்தான் அறிஞர் ஸ்டார்க் அவர்கள் "எங்கே மீட்டொப்படைக்கும் கடமை தொடங்கிறதோ அங்கே அடைக்கலம் தரும் உரிமை முடிகிறது" என்று நுணுக்கமாக

கூறுகிறார். அதாவது மீட்டொப்படைக்கும் உடன்படிக்கை இருப்பின், அவ்வயல் நாட்டிற்குள்ள அடைக்கலம் தரும் உரிமை முடிவுக்கு வருகிறது.

அடைக்கலம் - இரு பெரும் வகைகள் :

1. ஆள்நில அடைக்கலம் (Territorial Asylum) :

ஒரு நாட்டின் ஆள்நிலத்திற்குள் அளிக்கப்படும் அடைக்கலம், 'ஆள்நில அடைக்கலம்' எனப்படுகிறது. இது அந்நாட்டின் இறைமையைச் சார்ந்து எழும் ஆற்றலும் உரிமையுமாகும். சில ஆண்டுகளுக்கு முன்பு திபேத்தின் தலைவர் தலாய் லாமா நாடிழந்து, இந்தியாவிற்கு ஒடிவந்த பொழுது அவருக்கு நம்நாடு அடைக்கலம் அளித்தது. இது ஆள்நில அடைக்கலமாகும்.

செர்மானியக் குடியரசுக் கூட்டாசி (Federal Republic of Germany), தனது அடிப்படைச் சட்டத்தின் 16(2)–ஆம் பிரிவில், தாய்நாட்டில் அரசியல் சித்திரவதைக்காளான எவரும் செர்மனி நாட்டில் அடைக்கலம் புகுந்து வாழலாம் எனக் கூறுகிறது. அமெரிக்காவும் அதன் உறுப்பு நாடுகளும், தாய் நாட்டில் அரசியல் கொடுமையினால் பாதிக்கப்பட்டவர்கள், அமெரிக்காவில் அடைக்கலம் புகுந்து வாழலாம் எனச் சட்டம் இயற்றியுள்ளன.

அதுபோல், 1948–ஆம் ஆண்டில் அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை ஒருமனதாக ஏற்று வெளியிட்ட மனித உரிமைகள் பற்றிய அனைத்துலக பிரகடனத்தின் (Universal Declaration of Human Rights) 14–வது சரத்தில், 'சித்ரவதையான தண்டனையிலிருந்து அகல பிற நாடுகளில் அடைக்கலம் கோரவும், அதைத் துய்க்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு'[1] என்று கூறப் பட்டுள்ளது.

ஆனால் இவ்வாறு அடைக்கலம் கோரும் உரிமை, நாட்டிடைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்படவில்லை என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அடைக்கலம் வழங்குவதும், வழங்காததும் அந்நாட்டின் விருப்புரிமையையும், அந்நாடு இது குறித்து பிற நாடுகளுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளையும் பொருத்த தாகும். எடுத்துக்காட்டாக, மீட்டொப்படைத்தல் உடன்படிக்கைகளைக் கூறலாம்.

2. ஆள்நிலத்திற்கப்பால் அடைக்கலம் (Extra-Territorial Asylum):

தவிர்க்க முடியாத சில சமயங்களில் இவ்வகை அடைக்கலம் வழங்கப் படுவதுண்டு. ஒரு நாடு தனது ஆள்நிலப்பரப்பல்லாமல் தனது வாணிபக் கப்பலிலோ, போர்க் கப்பலிலோ, தூதரக அலுவலகங்களிலோ, நாடுகளிடைப்பட்ட தலைமை அலுவலகத்திலோ அடைக்கலம் அளித்தால், அது இத்தகைய அடைக்கலமாகக் கருதப்படும். இதன் சில வகைகளை விரிவாகக் காண்போம்.

1. "Everyone has the right to seek and to enjoy in other countries asylum from persecution" - **Article 14 of the Universal Declaration on Human Rights.**

(அ) தூதரக அலுவலகங்களில் அடைக்கலம் (Asylum in Legations) : பொதுவாக தூதரகங்களில் அடைக்கலம் வழங்குவதை நாடுகள் அங்கீகரிப்பதில்லை. இம்மாதிரியான அடைக்கலம் தருவதற்கு நாடுகளுக்கும் பொதுவான உரிமை எதுவும் இல்லை. இக்கருத்து **'அடைக்கல வழக்கிலும்' (Asylum case)** வலியுறுத்தப்பட்டது. எனினும், சில விதிவிலக்கான சூழல்களில் தூதரகங்களில் அடைக்கலம் வழங்குவது நடைமுறையிலுள்ளது. அவை,–

1. கலக ஆட்சி ஏற்பட்டு அதனால் தனியொரு மனிதனின் உயிருக்கு ஆபத்து உள்ளது எனக் கூறும்படியான சந்தர்ப்பத்தில், ஒரு தற்காலிக நடவடிக்கையாக தூதரகங்களில் அடைக்கலம் வழங்கலாம்.

2. இவ்வாறு அடைக்கலம் வழங்குவது குறித்து நாடுகளிடையேயான இணக்கமான உடன்படிக்கை ஏதேனும் இருப்பின், தூதரகங்கள் அடைக்கலம் வழங்கலாம்.

3. தூதரகங்களில் அடைக்கலம் வழங்குவது, வட்டார வழக்கங்களின்படி அனுமதிக்கப்பட்டிருக்கும் பொழுது, அவ்வாறு அடைக்கலம் வழங்கலாம்.

மேற்கண்ட மூன்று விதிவிலக்கான சூழல்களில் தவிர தூதரகங்களில் அடைக்கலம் வழங்குவது ஏற்புடைய கொள்கையாக நாட்டிடைச் சட்டத்தில் அங்கீகரிக்கப்படவில்லை. இது குறித்த முக்கிய வழக்காக **'அடைக்கல வழக்கு' (Asylum case)** கருதப்படுகிறது. அதன் பொருண்மைகள் வருமாறு :

Colombia v. Peru (or) Asylum case[1] - ஹயா டி லா டோரே (Haya de la Torre) என்பார் பெரு நாட்டின் புரட்சிகர அரசியல் கட்சியொன்றின் தலைவர். இவர் மீது, பெரு நாட்டில் இராணுவ சிப்பாய்களை தூண்டிவிட்டு அவ்வரசுக்கு எதிராக கலகம் விளைவித்ததாக குற்றம் சாட்டப்பட்டது. இதன் தொடர்பாக காவலர்கள் அவரைப் பிடிக்க வந்த பொழுது, அவர் கொலம்பியா நாட்டு தூதரகத்தில் அடைக்கலம் புகுந்தார். அவருக்கு கொலம்பியா நாட்டு தூதுவரும் அடைக்கலம் வழங்கினார். இவ்வாறு இருக்கையில், மேற்படி ஹயா டி லா டோரே கொலம்பியா செல்வதற்கு தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்து தரும்படி கொலம்பியா நாட்டுத் தூதுவர், பெரு அரசிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் பெரு அரசாங்கம் அதற்கான ஏற்பாடுகளை செய்து தர மறுத்து விட்டது. ஆகவே கொலம்பியா அரசாங்கம் இப்பிரச்சனையை சர்வதேச நீதிமன்றத்திடம் கொண்டு சென்றது. இப்பிரச்சனைக்கு முடிவு தெரிவிக்கும் முகமாக சர்வதேச நீதிமன்றமானது, கொலம்பியா தூதரகம் ஹயா டி லா டோரே–விற்கு வழங்கிய அடைக்கலம் முறையற்றது என்றும், அத்தகு அடைக்கலம் வழங்குமளவிற்கு மேற்படி நபரின் உயிருக்கு எவ்வித ஆபத்தும் அச்சமயத்தில் பிறரால் இருக்கவில்லையென்றும், மேலும் அவ்வாறு அடைக்கலம் வழங்குவதற்கு எவ்வித அவசரமுமில்லையென்றும்

1. I.C.J. Reports (1950), p. 266

கூறி, இவ்வகையான அடைக்கலம் நாட்டிடைச் சட்டத்தில் ஏற்புடையதல்ல எனத் தீர்ப்பளித்தது.

(ஆ) போர்க்கப்பலில் அடைக்கலம் (Asylum in Warship): தனியொரு நபரின் உயிருக்கு பேராபத்து ஏற்படும் என்ற நிலையிருக்கும் பொழுது, மனிதாபிமான அடிப்படையில், போர்க் கப்பலில் அடைக்கலம் வழங்கலாம்.

(இ) வாணிபக் கப்பலில் அடைக்கலம் (Asylum in Merchant Vessels): வாணிபக் கப்பலில் அடைக்கலம் வழங்குவதற்கான பொதுவான உரிமை ஏதுமில்லை.

(ஈ) நாட்டிடை அமைப்புகளில் அடைக்கலம் (Asylum in International Institutions) : இங்கும் அத்தகு பொது உரிமை ஏதுமில்லை.

51. Explain the law relating to extradition and asylum - Refer to cases. (மீட்டொப்படைப்பு மற்றும் புகலிடம் பற்றிய சட்டங்களை விளக்குக. வழக்குகளை மேற்கோள் காட்டவும்)

(அல்லது)

Discuss fully the legal rules relating to Extradition and Asylum. (அயல் நாட்டிடம் ஒப்புவிப்பு மற்றும் புகலிடம் பற்றிய சட்ட விதிகளை முழுவதும் விவாதிக்கவும்.)

(வினா எண்கள். 47 மற்றும் 50–ன் கீழான விளக்கங்களை சுருக்கமாக எழுதுக.)

-o0o-

19

மனித உரிமைகள்
[Human Rights]

52. What are the principal instruments in which attempts have been made to enunciate or guarantee human rights standards? (எத்தகைய ஆவணங்கள் மூலம் மனிதர்களின் அடிப்படை உரிமைகளை வலியுறுத்தி உறுதியுரை செய்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன?)

(அல்லது)

Discuss the effectiveness of the measures taken for the international protection of human rights. (மனித உரிமைகளை நாடுகளிடையே பாதுகாப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனுறுதினைக் கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Explain the contributions made by the United Nations Organisation in promoting and preserving human rights. (மனித உரிமைகளை பாதுகாத்து வளர்ப்பதில் பன்னாட்டு சபையாற்றிய தொண்டினை விளக்குக.)

(அல்லது)

What are human rights? How the protection of Human Rights

முக்கியக் குறிப்பு: 'மனித உரிமைகள்' குறித்து இந்நூலாசிரியர் எழுதியதும் தமிழக அரசின் தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நூலுக்கான பரிசைத் தட்டிச் சென்றதுமான **'மனித உரிமைகளும் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டமும்'** எனும் நூலை தனியாக வாங்கிப் படிக்கவும். மனித உரிமைகள் தொடர்பான வினாக்களுக்கு அதில்தான் விரிவான விடையுள்ளது என்பதை கவனத்தில் கொள்க. இங்கு நாம் காண்பது அதன் சுருக்கம் மட்டுமே.

has become the concern of International Law? (மனித உரிமைகள் என்றால் என்ன? மனித உரிமைகளைப் பாதுகாப்பது எவ்வாறு நாட்டிடைச் சட்டத்தின் பொறுப்பாகிறது?)

(அல்லது)

Write an essay on the functioning of regional arrangements for the promotion and protection of Human Rights. (மனித உரிமைகள் பாதுகாக்கப்படவும் மேம்பாடடையவும் பகுதிவாரியான ஏற்பாடுகளின் செயல்பாடுகள் குறித்து கட்டுரை எழுதுக.)

மனித உரிமைகள் - தோற்றம் (Origin of Human Rights):

சமுதாய அமைப்பு ஏற்படாத பண்டைய கால கட்டங்களில், மனிதன் விலங்கியல்புடைய காட்டுமிராண்டியாக (brutish) வாழ்ந்து வந்தான். ஒன்று சரியா–தவறா, நீதியானதா–அநீதியானதா என்று பகுத்தறியும் உணர்வில்லா நிலை அவனிடத்தில் காணப்பட்டது. **"இயன்றால் கொல்; முடிந்த அளவு எடுத்துக் கொள்"** என்பதே அப்போதைய நிலைப்பாடாகத் திகழ்ந்தது. சீரற்ற, அமைதியற்ற, நிலையற்ற வாழ்க்கையே அப்பொழுது நிலவியது. மெதுவாக, மனிதன் மேற்படி விலங்கியல்புடைய இச்சைகளிலிருந்து (Animal instincts) விடுபட்டு, ஒரு சீரான சமுதாய அமைப்பை ஏற்படுத்தி, அமைதியான வாழ்வை நிலைப்படுத்திக் கொள்ள எண்ண ஆரம்பித்தான். அதன் விளைவே, ஒவ்வொருவரும் தங்களால் பரஸ்பரமாக ஒப்புக் கொள்ளப்பட்ட சட்ட திட்டங்களை வகுத்து, தங்களுக்குள் ஒரு **சமூக ஒப்பந்தத்தை (Social Contract)** ஏற்படுத்திக் கொண்டு வாழ ஆரம்பித்தனர். இதனால் அரசும் அரசாங்கமும் பிறந்தன. மக்கள் தங்களிடம் இயற்கையாக உள்ள உரிமைகளை **(Natural Rights)** அரசிடம் ஒப்படைத்தனர். அரசு, அந்த உரிமைகளுக்கு உத்திரவாதம் அளித்து பாதுகாப்பு தந்தது. ஒருவரின் உரிமைகளை மற்றொருவர் மீறினால், அவ்வாறு மீறியவரை அரசு தண்டித்தது. நாளடைவில் அந்த உரிமைகளே, அவர்கள் மனிதர்களாக, மதிப்புடனும்–தன்மானத்துடனும் வாழ வகை செய்யும் உரிமைகளென அவர்கள் இனம் கண்டு கொண்டனர். இத்தகு இயற்கை உரிமைகளே, பின்னர் ஏற்பட்ட காலச் சுழற்சியில் **"மனித உரிமைகள்" (Human Rights)** என்றாகின, என்று சொன்னால் அதில் மிகையொன்றுமில்லை.

மனித உரிமைகள் - எளிய வரையறை (Definition of Human Rights):

மேற்கண்ட பத்தியிலிருந்து, **எவ்வகையான உரிமைகள் இல்லாமல் நாம், மனித இனமாக வாழ முடியாதோ அவ்வகை உரிமைகளே மனித உரிமைகள் (those rights without which we cannot live as human beings),** என மனித உரிமைகளுக்கு பொதுவாகவும் சுருக்கமாகவும் வரையறை தரலாம்.

மனித உரிமைகளுக்கு சற்று நுணுக்கமாக பொருள் கூற வேண்டுமென்றால், மனிதன் பிறக்கும் போதே, அவனுடனே சேர்ந்து பிறந்த, **மாற்றியளிக்க முடியாத (inalienable)** மற்றும் **உள்ளார்ந்த (inherent)** உரிமைகளே மனித உரிமைகளாகும். எனவே, மனித உரிமைகள் என்பன யாரும் கொடுத்து, வாங்கும் உரிமைகள் அல்ல என்பது தெளிவு.

வேறு விதத்தில் கூறுவதானால், ஒரு மனிதன், அவன் ஒரு மனிதனாக வாழ அவன் விடுக்கும் கோரிக்கைகளின் மறு வடிவமே, மனித உரிமைகள். ஆனால், ஒரு மனிதனின் அனைத்து கோரிக்கைகளையுமே, மனித உரிமைகளாக கொள்ள முடியாது. எடுத்துக்காட்டாக, ஒருவன் தான் விரும்பிய விதத்தில் வாழ்வது, தான் விரும்பியதைச் செய்வது என்பனவெல்லாம், அவனது கோரிக்கைகள்தாம். ஆனால், இவற்றை மனித உரிமைகளாக கொள்வதிற்கில்லை. மனிதனின் எக்கோரிக்கைகள், அவனது தனிமனித மதிப்பை (human dignity) மேம்படுத்துவதாகவும், சமுதாயத்தாலும் சட்டத்தாலும் அங்கீகரிக்கப்பட்டதாகவும் (recognised by society and law) உள்ளதோ, அவையே மனித உரிமைகளாக கருதப்படும்.

மனிதனின் இந்த உரிமைகளுக்கு அரசானது உத்திரவாதம் அளித்து, தனது சட்டங்களின் மூலம் பேணிக் காக்கிறது. மேலும், மனித உரிமைகள் என்பது பிறப்பாலேயே ஒருவன் அடைவது என்பதால், இவை இனம், நிறம், மொழி, மதம் என்ற பாகுபாடு ஏதுமில்லாதது. அதாவது இன்றைய உலகில் மனித இனம் எங்கெல்லாம் தழைத்துள்ளதோ, அங்கெல்லாம் மனித உரிமைகளும் உண்டு. இவை உலகின் ஒட்டு மொத்த மனித இனத்திற்கும் பொருந்தக் கூடிய பொதுவான ஒரு கருத்துரு (Concept) ஆகும்.

இத்தகு மனித உரிமைகள் நமது அரசியலமைப்புச் சட்டத்தில் **"அடிப்படை உரிமைகள்" (Fundamental Rights)** என்ற மறு பெயரால் அழைக்கப்படுகின்றன.

மனித உரிமைகள் பழம் பெருமை வாய்ந்தவை:

இன்று இருக்கும் மனித உரிமைகளின் அடிப்படை, அன்றிருந்த இயற்கை உரிமைகள்தாம் என்பதை நாம் மேலே கண்டோம். ஆதியில் இத்தகு இயற்கை உரிமைகளையும், இயற்கைச் சட்டத்தையும் மேம்படுத்த, கி.பி. 1215–ஆம் ஆண்டில் இங்கிலாந்து அரசர் ஜான் என்பவரால் வெளியிடப்பட்ட **'பேருரிமைப் பட்டயம்' அல்லது 'மக்கள் மகா சாசனம்' (Magna Carta)** மிகவும் முக்கியத்துவமானது. ஏனெனில், இங்கிலாந்து நாட்டு மக்களின் அனைத்து உரிமைகளும், சுதந்திரங்களும் இப்பட்டயத்தின் வாயிலாகத்தான் பிறந்தன என்று இங்கிலாந்து மக்கள் எண்ணக் கூடிய வகையில் இது அமைந்திருந்தது. இப்பட்டயத்தில் மேலும் பல உரிமைகளை இங்கிலாந்து பாராளுமன்றம் சேர்த்து, அதனை கி.பி. 1628–ஆம் ஒரு சட்டமாக ஆக்கியது. அது **'உரிமைகளின் மனு' (Petition on Rights)** எனப்

படுகிறது. 1689–ஆம் ஆண்டில் மேற்படி உரிமைகளின் மனுவை, **'உரிமைகளின் சாசனமாக' (Bill of Rights)** இங்கிலாந்து பாராளுமன்றம் வெளியிட்டது.

இதற்கு இடைப்பட்ட சமயத்தில், நவீன நாட்டிடைச் சட்டத்தின் தந்தை (Father of the Modern International Law) என்றழைக்கப்படும் **ஹூயுகோ குரோஷியஸ் (Hugo Grotius) (கி.பி. 1583–1645)** அவர்கள் மேற்படி இயற்கை சட்டக் கோட்பாட்டை (Jus Naturale - Law of Nature) பயன்படுத்தி, **"அனைத்து மனிதர்களும் சமமானவர்கள் மற்றும் சுதந்திரமானவர்கள். மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் மற்றவர்களின் உரிமைகளுக்கு மற்றும் இறைமைகளுக்கு (நாடுகளுக்கு) இடையிலான சட்டத்திற்கும் மதிப்பு கொடுக்க வேண்டும்"** என்று கூறினார்.

அறிஞர் **ஹூயுகோ குரோஷியஸ்** போல், மனித உரிமைகளின் வளர்ச்சிக்கு அடிகோலியவர்களுள் மற்றொருவர் **ஜீன் ஜேக்குஸ் ரூசோ (Rousseau) (கி.பி. 1715–1778)** எனும் அரசியல் சிந்தனையாளர் ஆவார். இவர் உலகிற்கு எடுத்துச் கூறியது, **சமூக–ஒப்பந்தந்தக் கோட்பாடாகும் (Social Contract Theory)** . இக்கோட்பாட்டில், மக்கள் தங்கள் உரிமைகளுக்காக தங்களுக்குள் ஒரு ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொண்டதினால் தோன்றியதே, **"அரசு"** என்று கூறுகின்றார். இக்கோட்பாட்டில் மனித உரிமைகளின் அடிப்படையை உணர்த்தும் பல கருத்துகள் மிளிர்கின்றன. அமெரிக்காவில் மற்றும் ஃபிரெஞ்சில் ஏற்பட்ட புரட்சியின் காரணமாக விளைந்த பின்வரும் இரு பிரகடனத்தில், ரூசோ கூறிய மேற்படி கோட்பாட்டின் அடிப்படையில் மனித உரிமைகளுக்கு மதிப்பு கொடுக்கும் கருத்துகள் அமைக்கப்பட்டன என்றால் அது மிகையன்று. மனித உரிமைகளுக்கு குரல் கொடுத்த இவரது கருத்துக்களே, ஃபிரெஞ்சுப் புரட்சிக்கும் வழி வகுத்தன. அவ்விரு பிரகடனங்களில் ஒன்று, 1776–ஆம் ஆண்டில் பிரிட்டனின் ஆதிக்கப் பிடியிலிருந்து விடுபட்டு, மக்களாட்சி அமைக்க அமெரிக்க மக்கள் செய்த **அமெரிக்க சுதந்திர பிரகடனம் (The American Declaration of Independence);** மற்றொன்று, ஃபிரெஞ்சுப் புரட்சியின் விளைவாக 1789–ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதத்தில் **ஃபிரெஞ்சு தேசிய நிர்மாண சபையில் (French National Assembly)** செய்யப்பட்ட **"மானிட உரிமைகள் பிரகடனம்" (The Declaration of the Rights of Man)** ஆகும். இதில், மனித உரிமைகள் பல அழகுடன் மிளிர்கின்றன.

மனித உரிமைகளின் மீது உலகப் போர்கள் ஏற்படுத்திய தாக்கம் (Effect of World Wars on Human Rights):

ஆனால், மேற்கண்ட பிரகடனங்களுக்கு பின்னிட்டு வந்த காலகட்டங்களை, உலகம் சந்திந்த மிக துரதிர்ஷ்டமான காலம் என்றே கூற வேண்டும். 1914–ஆம் ஆண்டில் முதலாம் உலகப் போரையும், 1939–ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப்

போரையும் உலகம் சந்தித்தது. சர்வதேச அரசியலிலும், உறவுகளிலும் வன்முறைக்கு கட்டியங் கூறிய உலகளாவிய விபத்தாக அவை அமைந்தன. மனித இனமே பெரும் அச்சத்திற்கு உள்ளானது. மனித உரிமைகள் மதிக்கப்படவில்லை. மாறாக மிதிக்கப்பட்டன.

மனித உரிமைகளும் அய்க்கிய நாடுகள் சபையும் (Human Rights and United Nations Organisation):

மனித உரிமைகளை நாடுகளிடையே பாதுகாப்பதற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் பயனுறுதி (அல்லது) மனித உரிமைகளை பாதுகாத்து வளர்ப்பதில் அய்க்கிய நாடுகள் சபை ஆற்றிய தொண்டு:

1914–ன் முதலாம் உலகப் போரின் கொடும் விளைவுகளின் காரணமாக, உலக அமைதி காக்கும் நோக்கத்திற்காக சர்வதேச அளவிலான ஒரு அமைப்பினை உருவாக்குதல் அவசியம் என்பதை பல நாடுகளின் தலைவர்களும் உணர்ந்தனர். இதன் விளைவாக பிறந்ததுதான், **சர்வதேச சங்கம் (League of Nations).** இச்சங்கம் சில காலம் சிறப்பாக செயற்பட்டது. எனினும், நாடுகளுக்கிடையிலான உறவை பலப்படுத்த, இச்சங்கம் எடுத்த பல முயற்சிகள் தோல்வி அடைந்ததினால், உலகம், 1939–ல் மிகக் கொடுமையான இரண்டாம் உலகப் போரை சந்தித்தது. இதனால் இச்சங்கம் தொடர்ந்து நிலைபெற முடியவில்லை. எனினும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, மீண்டும் உலக அமைதி காக்கும் முயற்சியாக பல நாடுகளின் ஒப்புதலுடன் **1945–ஆம் ஆண்டு அக்டோபர் 24–ஆம் நாள், அய்க்கிய நாடுகள் சபை (United Nations Organisation)** உதயமானது. **அய்க்கிய நாடுகளின் சாசனமும்** (அய்க்கிய நாடுகள் அமைப்பின் பட்டயம்) **(United Nations Charter)** வடிவமைக்கப்பட்டு **1945–ஆம் ஆண்டு** முதல் செயலுக்கு வந்தது.

அய்க்கிய நாடுகள் சாசனம் மனித உரிமைகளுக்கு அளித்த முக்கியத்துவம் (The importance given by the United Nations Charter to Human Rights):

இரண்டாம் உலகப் போரின் போது ஏதேச்சதிகார அரசுகள் தாங்கள் ஆக்ரமித்த பகுதிகளில் மனித உரிமைகளை ஈவிரக்கமின்றி பறிப்பதில் ஈடுபட்டன. இனம், மதம், நாட்டுரிமை என்ற பெயரால் ஒரு சில மக்களை ஒழித்துக் கட்டுவதிலும் அவை முனைந்து நின்றன. இதனால் மனித உரிமைகள் பாதுகாப்பிற்கு சர்வதேச அளவில் நிர்ப்பந்தங்களை ஏற்படுத்தும் பொருட்டு, மேற்படி அய்க்கிய நாடுகளின் சாசனத்திலும் சரத்துகள் கொண்டு வரப்பட்டன. அதன் **முதல் சரத்தே,** " இனம், பால், மொழி அல்லது மதம் என்ற பாகுபாடு கருதாமல் அனைவருக்குமான மனித உரிமைகள் மீதும், அடிப்படைச் சுதந்திரங்கள் மீதும் மதிப்பை வளர்த்து ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதார, சமூக, கலாச்சார

அல்லது மனிதாபிமான தன்மை கொண்ட சர்வதேச பிரச்சனைகளைத் தீர்ப்பதில் சர்வதேச கூட்டுறவை ஏற்படுத்துவதற்கு அய்க்கிய நாடுகள் சபை பாடுபடும்," என்று குறிப்பிடுகிறது.

மனித உரிமைகளின் மீதான அய்க்கிய நாடுகளின் ஆணையமும், மனித உரிமைகளின் சர்வதேச மசோதாவும் (United Nations Commission on Human Rights and International Human Rights Bill):

இதைத் தொடர்ந்து அய்க்கிய நாடுகள் சபையின் பொருளாதார மற்றும் சமுதாயக் குழுவானது (Economic and Social Council of UNO) மனித உரிமைகள் மீதான அய்க்கிய நாடுகள் ஆணையம் (United Nations Commission on Human Rights) ஒன்றை 1946–ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில் நிறுவியது. மனித உரிமைகளையும் சுதந்திரங்களையும் திட்டவட்டமாக வரையறுத்துக் கூறும் "மனித உரிமைகளின் சர்வதேச மசோதா" (International Bill of Human Rights) ஒன்றை வரையும் பொறுப்பு இந்த ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டது.

மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனம் (Universal Declaration of Human Rights):

இந்த மசோதாவின் முதற்பகுதியைத்தான் "மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனம்" (Universal Declaration of Human Rights) என்ற பெயரில் 1948–ஆம் ஆண்டு டிசம்பர் 10–ஆம் நாளில் அய்க்கிய நாடுகளின் பொதுச் சபை (General Assembly) ஒருமனதாக ஏற்று வெளியிட்டது. இந்த பிரகடனத்தை அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பினர்களாக உள்ள அனைத்து நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. அதே சமயத்தில் அவ்வாறு உறுப்பினர்களாக இல்லாத நாடுகளும் ஏற்றுக் கொண்டுள்ளன. இப்பிரகடனம் பல நாடுகளிலும் மனித உரிமைகளின் ஒரு முன்மாதிரியாக ஏற்றுக்கொள்ளப்பட்டன. மேலும் நமது இந்திய நாடு உள்ளிட்ட பல நாடுகளின் அரசியலமைப்புகளிலும், மற்ற சர்வதேச ஆவணங்களிலும் மேற்படி பிரகடனத்தின் சரத்துகள் குறிப்பிடப்பட்டுள்ளன. இதிலிருந்தே இப்பிரகடனத்தின் செல்வாக்கையும், முக்கியத்துவத்தையும் நாம் உணரலாம். எனவே, இப்பிரகடனம் மனித உரிமைகள் தொடர்பான மிகவும் முக்கியமான ஒரு ஆவணம் எனலாம்.

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் இரண்டு சர்வதேச உடன்படிக்கைகள் (Two International Covenants giving respect to Human Rights):

இந்நிலையில் மேற்படி பிரகடனத்தைத் தொடர்ந்து, அதில் கண்டுள்ள மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் சரத்துகளுக்கு நாடுகள் கட்டுப்பட்டு நடக்க வேண்டி, அவற்றிற்கு ஒரு சட்ட விளைவைக் கொடுப்பதற்காக சில சர்வதேச

உடன்படிக்கைகளை தயாரிக்கும் பணியில் அய்க்கிய நாடுகள் சபை ஈடுபட்டது. இதனால் பின்வரும் இரண்டு சர்வதேச உடன்படிக்கைகள் **(International Covenants)** பிறந்தன. அவற்றை 1966–ஆம் ஆண்டு டிசம்பர் 16–ஆம் நாள் அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை ஒருமனதாக ஏற்றுக் கொண்டது.

1. **வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான சர்வதேச உடன்–படிக்கை,1966. (International Covenant on Civil and Political Rights, 1966) ;** மற்றும்
2. **பொருளாதார, சமுதாய மற்றும் கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேச உடன்படிக்கை,1966. (International Covenant on Economic, Social and Cultural Rights, 1966) .**

மேற்கண்ட உடன்படிக்கைகள் இரண்டும் முறையே 1976–ஆம் ஆண்டு, மார்ச் 23–ஆம் நாளிலும், 1976–ஆம் ஆண்டு, சனவரி 3–ஆம் நாளிலும் செயல் பாட்டிற்கு வந்தன.

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **(U.N.Charter)** 56–வது ஷரத்து, மனித உரிமைகள் உலகளாவிய மதிப்பு அடைய வேண்டும் என்பதற்காகவும் மற்றும் அவற்றை கடைப்பிடிப்பதற்காகவும் அய்க்கிய நாடுகள் சபையுடன் ஒத்துழைத்து, அதன் உறுப்பு நாடுகள் சேர்ந்தோ அல்லது தனியாகவோ நடவடிக்கை எடுக்க வேண்டும் எனும் கடப்பாட்டை அவ்வுறுப்பு நாடுகள் ஒவ்வொன்றின் மீதும் சுமத்துகிறது. இதன்படி, அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடாகிய நமது இந்திய நாடு, மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தில் கையொப்ப மிட்டுள்ளது. மேலும் அதன் மேற்படி இரு சர்வதேச உடன்படிக்கைகளையும் 1979–ஆம் ஆண்டு, ஏப்ரல் 10–ஆம் நாளில் ஒப்புறுதி ஆவணம் ஒன்றை அய்க்கிய நாடுகள் சபையில் வைப்பீடு **(by depositing the Instrument of Acces-sion)** செய்ததின் வாயிலாக ஏற்றுக் கொண்டு, மனித உரிமைகளுக்கு மதிப்பளித்து, அவற்றை கடைப்பிடிக்க உறுதி பூண்டது.

மனித உரிமைகளில் மீதான உலக நாடுகளின் ஆலோசனைக் கூட்டம் (World Conference on Human Rights):

இந்நிலையில் வியன்னா பிரகடனம் மற்றும் செயல் திட்டமானது **(Vienna Declaration and Programme of Action)**, 1993–ஆம் ஆண்டு ஜூன் 25–ஆம் நாளில் மனித உரிமைகள் மீதான உலக நாடுகளின் ஆலோசனைக் கூட்டத்தால் **(World Conference on Human Rights)** ஏற்றுக் கொள்ளப் பட்டது. இதில், **"மனித உரிமைகளும் அடிப்படை சுதந்திரங்களும் அனைத்து மனிதர்களின் பிறப்புரிமை" ("Human Rights and fundamental freedom are birth right of all human beings")** என்று பெருமைபட பிரகடனப் பட்டிருந்தது.

மனித உரிமைகள் பாதுகாக்கப்படவும் மேம்பாடு அடையவும் செய்யப்பட்ட வட்டார (பகுதிவாரியான) ஏற்பாடுகள் (Regional arrangements for the promotion and protection of Human Rights):

அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் சபை ஏற்று வெளியிட்ட "மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தினை" (Universal Declaration of Human Rights) வலியுறுத்திச் செயல்படுத்துவதற்காக பின்வரும் வட்டார ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அவை,–

(அ) மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களின் மீதான அய்ரோப்பிய ஏற்புவிதி மாநாடு (European Convention on Human Rights and Fundamental Freedoms): இம்மாநாடு அய்ரோப்பியக் குழுவால் (Council of Europe) கூட்டப்பட்டது. இதன் தரப்பு நாடுகள் 1960–ஆம் ஆண்டில் நவம்பர் 4–ஆம் தேதி உரோம் நகரில் இதனைக் கையெழுத்திட்டு ஏற்றன. இதில் ஒரு முகப்புரை தவிர மொத்தம் 66 சரத்துக்கள் உள்ளன. இவை மொத்தம் அய்ந்து பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இது மனித உரிமைகளில் பின்வரும் மேம்பாடுகளைச் செய்தது.

1. மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தில் கூறப்பட்டுள்ள பல உரிமைகளைப் பாதுகாக்க இம்மாநாட்டில் வழிவகைகள் செய்யப்பட்டது.

2.மனித உரிமைகளை நன்முறையில் செயல்படுத்த **'மனித உரிமைகளின் மீதான அய்ரோப்பிய ஆணையம்' ஒன்றை (European Commission on Human Rights)** இது உருவாக்கியது. மேற்படி மாநாட்டின் ஏற்புவிதிகள் மூலம் உறுதியளிக்கப்பட்டுள்ள மனித உரிமைகளையும், அடிப்படை சுதந்திரங்களையும் மீறி, அதன் தரப்பு நாடுகள் ஏதேனும் தனது குடிமக்களுக்கு பாதிப்பு எதையும் விளைவித்தால், அவ்வாறு பாதிக்கப்பட்டவர், இந்த ஆணையத்திற்கு புகார் செய்யலாம்; அதன் மூலம் புலனாய்வு செய்யக் கோரலாம். எனவே தனிமனிதன் ஒருவரும், தனது உரிமைகளை நாட்டிடைச் சட்டத்தின் கீழ் பெற, நேரடியாக சர்வதேச தீர்ப்பாயத்தை (இங்கு மேற்படி ஆணையம்) அணுக இம்மாட்டின் ஏற்பு விதிகள் வகை செய்துள்ளன.

3.இம்மாநாட்டின் ஏற்புவிதிகள், **'மனித உரிமைகளின் மீதான அய்ரோப்பிய நீதிமன்றம்' (European Court of Human Rights)** ஒன்றையும் அமைக்க வகை செய்துள்ளது. இது மனித உரிமை மீறல்களை விசாரித்துத் தீர்ப்புக் கூறுவதற்கான 'கட்டாய அதிகாரவரம்பு' (Compulsory Jurisdiction) பெற்ற ஒரு நீதிமன்றமாக விளங்கியது. இந்நீதிமன்றத்தில் மேற்படி மாநாட்டின் தரப்பு நாடுகள் மட்டுமே, தனது நாட்டுக் குடிமக்களின் மனித உரிமையை வேறொரு

தரப்பு நாடு மீறிவிட்டதாகக் கூறி புகார் செய்ய முடியும். மாறாக பாதிக்கப்பட்ட நபரே, மேற்படி ஆணையத்தில் தனிப்பட்ட விதத்தில் புகார் செய்வதைப் போல இங்கு செய்ய முடியாது.

(ஆ) மனித உரிமைகளின் மீதான அமெரிக்க ஏற்புவிதி மாநாடு (American Convention on Human Rights): இந்த ஏற்புவிதிகள், 1969–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 22–ஆம் தேதியில் சான் ஜோஸ், கோஸ்டா ரிகா எனுமிடங்களில் நடந்த 'மனித உரிமைகளின் மீதான அமெரிக்காவிற்குள்ளான சிறப்பார்ந்த மாநாட்டில்' (Inter-American Specialized Conference on Human Rights) அதன் தரப்பு நாடுகளால் ஏற்றுக் கையெழுத்திடப்பட்டன. இதன் ஏற்புவிதிகளில் மனித உரிமைகளைப் பாதுகாக்க பின்வரும் பரிந்துரைகளும், வழிவகைகளும் செய்யப்பட்டிருந்தன.

1. இம்மாநாடு பின்வரும் முக்கியப் பிரகடனம் ஒன்றைச் செய்தது. அதன்படி, ஒவ்வொருவரும் தனது பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார உரிமைகளையும், வாழ்வியல் மற்றும் அரசியல் உரிமைகளையும் துய்ப்பதற்கும், அவ்வுரிமைகளைப் பாதுகாப்பதற்கும் உண்டான வழிவகைகளை உருவாக்கினால்தான், அவர்கள் அவ்வுரிமைகளை அச்சமின்றி துய்க்க முடியும் என்று கூறிற்று.

2.இம்மாநாடு பின்வரும் இரு அங்கங்களை உருவாக்கியது. அவை, (1) அமெரிக்காவிற்குள்ளான மனித உரிமைகள் ஆணையம் (Inter-American Commission on Human Rights); (2) அமெரிக்காவிற்குள்ளான மனித உரிமைகள் நீதிமன்றம் (Inter-American Court on Human Rights).

(இ) ஆப்ரிக்க ஒற்றுமைக் குழு (Organisation of African Unity): இக்குழுவின் சாசனம், 'மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தில்' கூறப் பட்டுள்ள பல்வேறு மனித உரிமைகளையும், சுதந்திரங்களையும் உள்ளடக்கியுள்ளது.

இந்தியாவில் மனித உரிமைகள் (Human Rights in India):

நம் இந்திய நாட்டைப் பொறுத்தவரை, நாம் ஆரம்பத்தில் கண்டவாறு, நமது இந்திய அரசியலமைப்பில் மனித உரிமைகளுக்கு உத்திரவாதம் அளிக்கும் சட்ட சரத்துகள் சேர்க்கப்பட்டன. அதாவது, மேற்படி **மனித உரிமைகளின் அனைத்துலக பிரகடனத்தினை (Universal Declaration of Human Rights)** அடிப்படையாகக் கொண்டு, நமது **இந்திய அரசியலமைப்பின் முகப்புரை (Preamble), பகுதி III (Part III)**–ன் கீழான **அடிப்படை உரிமைகள் (Fundamental Rights), பகுதி IV (Part IV)**–ன் கீழான **அரசு நெறிமுறையுறுத்தும் கொள்கைகள் (Directive Principles of State Policy)** ஆகியவற்றில் மனித உரிமைக் கொள்கைகளான தனி மனித வாழ்க்கை, சுதந்திரம், சமத்துவம், மதிப்பு ஆகியவை சேர்க்கப்பட்டுள்ளன.

மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 1993 (The Protection of Human Rights Act, 1993):

மனித உரிமைகளை பாதுகாப்பதெற்கென மேற்கண்டவாறு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்தாலும், மனித உரிமைகளுக்கு மேலும் சிறந்த பாதுகாப்பை நல்கும் பொருட்டும், இந்தியாவில் மனித உரிமைகள் மீறல் ஏதேனும் நடப்பின் அதைப் கண்காணிக்கவும் புலனாய்வு செய்யவும் மற்றும் மனித உரிமைகளை பாதுகாப்பதற்காக தக்க தீர்வழி நடவடிக்கைகளை எடுக்கும் பொருட்டும் தேசிய மற்றும் மாநில மனித உரிமைகள் ஆணையத்தையும் (National and State Human Rights Commission), மனித உரிமைகள் நீதிமன்றத்தையும் (Human Rights Courts) ஏற்படுத்த நோக்கங் கொண்டு, 1993–ஆம் ஆண்டில் மனித உரிமைகள் பாதுகாப்புச் சட்டத்தை (The Protection of Human Rights Act) நமது இந்திய பாராளுமன்றம் இயற்றியுள்ளது.

மனித உரிமைகள் குறித்த பிற முக்கிய சர்வதேச ஏற்புவிதி உடன்படிக்கைகள் (The other key International Conventions on Human Rights):

(1) மனித இன அழிவுக் குற்றத்தைத் தடுத்தல் மற்றும் தண்டித்தல் பற்றிய ஏற்பு விதி உடன்படிக்கை (Convention on the Prevention and Punishment of Crime of Genocide): இது 1951–ஆம் ஆண்டில் ஏற்கப்பட்டது. இதன்படி, ஒரு குறிப்பிட்ட மதம், இனம், நிறம் சார்ந்த நாட்டு மக்களை பகுதியாக அல்லது பூண்டோடு அழிக்கக் கருதி செயல்படும் நபர்களின் மீது குற்ற வழக்கு தொடர்தல் பற்றிக் கூறுகிறது. இதற்கு மொத்தம் 103 நாடுகள், தரப்பு நாடுகளாக (State parties) உள்ளன.

(2) எவ்வடிவில் இருக்கும் நிறப்பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான சர்வதேச ஏற்புவிதி உடன்படிக்கை (International Convention on the Elimination of all forms of Racial Discrimination): நிறவெறி அல்லது நிறப்பாகுபாடு காட்டும் நிலைப்பாட்டை தடை செய்வதற்காக இவ்வுடன்படிக்கை 1969–ஆம் ஆண்டில் சர்வதேச அளவில் செய்து கொள்ளப்பட்டது. இதற்கு மொத்தம் 132 நாடுகள், தரப்பு நாடுகளாக உள்ளன.

(3) பெண்களுக்கெதிராக எவ்வடிவில் இருக்கும் பாகுபாடுகளையும் ஒழிப்பதற்கான ஏற்புவிதி உடன்படிக்கை (Convention on the Elimination of all forms of Discrimination against Women): குடும்பம், திருமணம், உடல்நலம், பணியமைப்பு, கல்வி, பொது வாழ்க்கை ஆகியவற்றில் பெண்களை பாகுபடுத்திப் பார்ப்பதை தடை செய்யும் பொருட்டு, இவ்வுடன்படிக்கை 1981–ஆம் ஆண்டில் செய்து கொள்ளப்பட்டது. இதில், 120 நாடுகள் கையெழுத்திட்டுள்ளன.

(4) சித்ரவதை மற்றும் பிற கொடுமையான, மனிதாபிமானமற்ற அல்லது தரக்குறைவான முறையில் நடத்துதல் அல்லது தண்டித்தல் ஆகிவற்றிற்கு எதிரான ஏற்புவிதி உடன்படிக்கை (Convention against Torture and other Cruel, Inhuman or Degrading Treatment or Punishment): இவ்வுடன்படிக்கை 1987–ஆம் ஆண்டில் 71 தரப்பு நாடுகளால் ஏற்கப்பட்டது. இதன்படி, தரப்பு நாடுகள் ஒவ்வொன்றும் தண்டனை எனும் பெயரில் கைதிகளை சித்ரவதை செய்தல், மனிதாபிமானமற்ற முறையில் நடத்துதல் ஆகியவற்றைத் தடுக்கப் பொறுப்புடையதாகும்.

(5) குழந்தைகளின் உரிமைகள் பற்றிய ஏற்புவிதி உடன்படிக்கை (Convention on the Rights of the Child): இவ்வுடன்படிக்கை 1990–ஆம் ஆண்டில் 126 நாடுகளால் ஏற்கப்பட்டது. இது குழந்தைகளுக்குள்ள உரிமைகளை விளக்குகிறது. அவற்றில் குழந்தைகளின் உடல் நலம் மற்றும் கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

மனித உரிமைகள் பற்றிய மேற்கண்ட ஏற்புவிதி உடன்படிக்கைகள் ஒரு உதாரணத்திற்காக மட்டுமே கூறப்பட்டுள்ளது. இவை போன்ற எண்ணற்ற உடன்படிக்கைகள் இதுகாறும் சர்வதேச அளவில் ஏற்பட்டுள்ளன. அவற்றை விவரிக்க ஆரம்பித்தால், அதுவே ஒரு தனி நூலாகிவிடும்.

மனித உரிமைகளை சர்வதேசமயமாக்கல் (Internationalisation of Human Rights):

மனித உரிமைகளுக்கும், அடிப்படை சுதந்திரங்களுக்கும் மதிப்பு கொடுக்க வேண்டும் என்று முதன் முதலில் வலியுறுத்தி பெருமை சேர்த்துக் கொண்ட ஒரு சர்வதேச ஆவணம், **அய்க்கிய நாடுகள் சாசனம்தான் (United Nations Charter).** இச்சாசனத்தின் முதல் சரத்தே, " இனம், பால், மொழி அல்லது மதம் என்ற பாகுபாடு கருதாமல் அனைவருக்குமான மனித உரிமைகள் மீதும், அடிப்படைச் சுதந்திரங்கள் மீதும் மதிப்பை வளர்த்து ஊக்குவிப்பதன் மூலம் பொருளாதார, சமூக, கலாச்சார அல்லது மனிதாபிமான தன்மை கொண்ட சர்வதேச பிரச்சனைகளைத் தீர்ப்பதில் சர்வதேச கூட்டுறவை ஏற்படுத்துவதற்கு அய்க்கிய நாடுகள் சபை பாடுபடும்," என்று குறிப்பிடுகிறது. மேலும், ஒரு நாட்டு குடிமகனின் மனித உரிமைகள் அவனது நாட்டைப் பொறுத்து மட்டுமல்லாமல், அனைத்து நாடுகளையும் பொறுத்த ஒரு விஷயம், என்பதையும் உலகிற்கு எடுத்துக் கூறிய பெருமை அய்க்கிய நாடுகள் சாசனத்தைத்தான் சாரும். சுருங்கக் கூறின் மனித உரிமைகள், அய்க்கிய நாடுகள் சாசனத்தால் சர்வதேசமயமாக்கப்பட்டன என்று சொல்வதில் தயக்கமேதும் கொள்ள வேண்டியதில்லை.

-o0o-

20

நாடும் பொருளாதார நலனும் [The State and Economic Interest]

53. International Economic Law - Write short notes.
(சர்வதேச பொருளதாரச் சட்டம் – சிறு குறிப்பு எழுதுக.)

முன்னுரை:

நாடுகளிடையே பொருளாதார முன்னேற்றம் இன்று பெருகிக் கொண்டு வருகிறது. ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகங்கள் பல இன்று திறம்பட நடந்து வருகின்றன. இப்படிப்பட்ட வளர்ச்சியும் முன்னேற்றமும்தான் சர்வதேச பொருளாதாரச் சட்டம் வளர வழி வகுத்து என்றால் அது மிகையல்ல.

பொருளாதார வளர்ச்சிக்கான சர்வதேச உடன்படிக்கைகள்:

நாடுகள் இன்று தங்களிடையே நிலவி வரும் பொருளாதார உறவுகளை திறம்பட அமைத்துக் கொள்வதற்கு பல்வேறு உடன்படிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றன. இம்மாதிரியான இருதலை உடன்படிக்கைகள் (bilateral) தவிர, சில உடன்படிக்கைகள் பொதுவாகவும் செய்து கொள்ளப்படுகின்றன. அவை, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகின்றன.

உதாரணமாக உலக நிதி நிறுவனத்தின் (International Monetary Fund) உடன்படிக்கை சரத்துகள் (Articles of Agreement), உலக வங்கியின் (International Bank for Re-construction and Development) உடன்படிக்கை சரத்துக்கள், சர்வதேச நிதிக் கழகத்தின் (International Finance Corporation) உடன்படிக்கை சரத்துக்கள் ஆகியனவற்றைக் குறிப்பிடலாம். மேலும் அய்ரோப்பிய பொருளாதார சமூகத்தை (European Economic Community) அமைக்கும் பொருட்டு 1957–ஆம் ஆண்டில் உருவான உரோம் உடன்படிக்கை

(Treaty of Rome), அதுபோல் 1947–ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட வியாபாரம் மற்றும் கட்டணம் குறித்த பொது உடன்படிக்கை (General Agreement on Tariff and Trade - GATT) ஆகியவற்றையும் கூறலாம்.

பொருளாதார வளர்ச்சிக்கான உடன்படிக்கைகளில் பொதிந்துள்ள நாட்டிடை பொருளதாரச் சட்ட விதிகள்:

மேற்கண்ட பல்வேறுபட்ட ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளில் நாட்டிடை பொருளாதாரச் சட்ட விதிகள் பொதிந்துள்ளது. அவை வருமாறு :

1. எந்த ஒரு நாடும், தொகை பாக்கி இருந்தாலொழிய, மற்றொரு நாட்டின் மீது எவ்விதமான நியாயமற்ற வியாபாரத் தடைகளையோ அல்லது வரிகளையோ விதிக்கக் கூடாது.

2. அயல்நாட்டினர் செய்யும் முதலீட்டைப் பொறுத்தவரை, எந்த ஒரு நாடும் அம்முதலீட்டில் இருந்து வரும் வருமானத்தை முதலீடு செய்யும் அவ்வயல் நாட்டினருக்கு செல்வதைத் தடுக்கக் கூடாது.

3. பொருட்களை சர்வதேச சந்தைக்கு வரவிடாமல் முடக்குவதோ அல்லது பொருட்களை கட்டுப்பாடில்லாமல் வெளியிட்டு பொருட்களின் தரத்தையும் விலையையும் குறைப்பதோ கூடாது. அது தவிர்க்கப்படுதல் வேண்டும்.

4. ஏற்றுமதி–இறக்குமதியில் சுங்க இலாகாவினரின் நடைமுறைகளும், நிர்வாகத்துறையில் கட்டுப்பாடுகளும் குறைக்கப்படுதல் வேண்டும். இவ்விதிக்கு அனைத்து நாடுகளிடமிருந்தும் அமோக வரவேற்பு உள்ளது.

முடிவுரை:

சர்வதேச பொருளாதார சட்டத்தின் மேற்படி விதிகள் யாவும் சூழலுக் கேற்றவாறு நெகிழக் கூடியவை. இவை திட்டவட்டமானதல்ல. எனினும் நாடுகள் இவைகளை கடைபிடிக்க முயலுகின்றன என்பது வரவேற்பிற்குரியது.

-o0o-

21

தூதாண்மை முகவர்கள்
[Diplomatic Agents]

54. Define 'Diplomatic Envoys'. How they are classified? What are the rights, privileges and immunities of diplomatic envoys.
('அயல்நாட்டு தூதுவர்கள்' வரையறுக்கவும். அவர்கள் எவ்வாறு பகுக்கப் படுகிறார்கள்? அயல்நாட்டுத் தூதுவர்களின் உரிமைகள், தனிச் சலுகைகள் மற்றும் காப்புரிமைகள் யாவை?)

(அல்லது)

Define Diplomacy and explain the classes of Diplomates.
(தூதாண்மையை வரையறுத்து தூதுவர்களின் வகைப்பாடுகளை விளக்குக.)

தூதாண்மை (Diplomacy) - பத விளக்கம்:

'Diplomacy' எனும் ஆங்கிலப் பதம் 'Diploma' எனும் கிரேக்க பதத்திலிருந்து தோன்றியதாகும். 'Diploma' என்றால், இரண்டாக மடிக்கப்பட்ட ஒரு கடிதம் – ஒரு ஆவணம்; ஒரு வகையான மதிப்பை அல்லது சிறப்புரிமையைத் தரும் ஒரு எழுத்துமூலமான பத்திரம். அந்த வகையில் 'Diplomacy' என்பதை, இரண்டு நாடுகளுக்கிடையே சுமூகமான பேச்சு வார்த்தைகள் நடத்தி, அதன் மூலம் நல்லுறவை வளர்த்துக் கொள்வதற்காக, எழுத்துமூலமான உடன்படிக்கைகள் செய்து கொள்ளும் ஒரு கலை எனலாம். இவ்வாறு ஒரு நாடு தனக்காக மற்றொரு நாட்டிடம் பேச்சு வார்த்தைப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்காக அந்நாடு நியமிக்கும் அரசு முறை பணியாளரே, **'தூதர்' (Diplomate)** எனப்படுகிறார். 'Diplomacy' எனும் இக்கலைக்கு தமிழில் **'தூதாண்மை'** என்கிறோம். எனவே, நாடுகளுக்கு இடையிலான உறவுகளில் முக்கிய அங்கம் வகிப்பது தூதாண்மையே என்று சர்வதேச அறிஞர்கள் கூறுகின்றனர். இது ஒரு நாட்டினுடைய வெளியுறவுக் கொள்கையை நிலைநாட்டப் பயன்படும் கருவியாகவும் கருதப்படுகிறது.

தூதாண்மை (Diplomacy) - வரையறை:

'தூதாண்மை' என்பதற்கு பல்வேறுப்பட்ட வரையறைகள் தரப்பட்டுள்ளன. **சர் எர்னெஸ்ட் (Sir Ernest)** எனும் அறிஞர், அரசாங்கங்களுக்கும் அரசுகளுக்கும் இடையிலான அதிகாரப்பூர்வமான உறவுமுறைகளைத் திறமையுடனும் மதி நுட்பத்துடனும் நடைமுறைப்படுத்தலே 'தூதாண்மை' ஆகும் எனக் கூறுகிறார். போர் நிகழும் வாய்ப்பிருக்கின்ற ஒரு அரசியல் முறையமைவில் குறைந்த செலவில் தமது குறிக்கோள்களை அதிக அளவில் வெற்றி பெற சர்வதேச அளவில் செய்யப் படும் ஒரு இடர் நீக்கும் கலையே தூதாண்மை, என **குயின்சி ரைட் (Quency wright)** வரையறுக்கிறார்.

தூதர் அல்லது தூதுவர் - விளக்கம் :

தூதாண்மைப் பணியினைச் செயற்படுத்துபவர்கள், 'தூதர்கள்' அல்லது 'தூதுவர்கள்' எனப்படுகின்றனர். இவர்கள் தூதாண்மைப் பணியினைச் செய்யும் பொருட்டு ஒரு நாட்டின் பிரதிநிதியாக வேறொரு நாட்டில் நியமிக்கப்படுபவர்கள் ஆவார்கள். நிலையான தூதரகங்கள் வழக்கிற்கு வந்த பின்னரே நிலையான தூதர் நியமனமும் செயலுக்கு வந்தது. இந்நிலையான தூதரகங்கள் 18–ஆம் நூற்றாண்டிற்கு பின்னரே அய்ரோப்பிய நாடுகளுக்கிடையே செயலுக்கு வந்தது. ஆனால் தமிழ்நாட்டில் சங்க காலத்திற்கு முன்பே தூதாண்மையைப் பற்றி திருவள்ளுவர் தமது திருக்குறளில் இயம்பியுள்ளார். இன்று தன்னாட்சி பெற்ற எல்லா நாடுகளுமே வெளிநாடுகளில் தங்கள் தூதரகங்களை நிறுவியுள்ளன. இத்தூதுவர்கள்தாம் இன்று நாடுகளுக்கிடையே நிலவும் எண்ணற்ற கருத்து வேறுபாடுகளை களைந்து நல்லுறவுகளை வளர்க்கும் பாலமாக செயல்படுகின்றனர் என்று சொன்னால் அது எள்ளளவும் மிகையன்று.

தூதர்களின் வகைப்பாடு (Classification of Diplomates or Diplomatic Agents) :

தூதுவர்களின் தகுநிலை அல்லது பணி, அவர்களை அனுப்பும் நாடு அல்லது ஏற்கும் நாட்டின் தகுதிகேற்ப அமையும். சில சமயங்களில் அவர்கள் என்ன காரணத்திற்காக நியமிக்கப்படுகிறார்களோ, அதனையொட்டியும் அமையும். ஒரு நாடு பிறிதொரு நாட்டிற்கு அனுப்பும் தூதுவர்களை **(1) அரசியல் தூதுவர்கள் (Political Diplomates)** என்றும், **(2) வாணிபத் தூதுவர்கள் (Consuls)** என்றும் இரு பெரும் பிரிவினராகப் பிரிக்கலாம். இதில் முன்வகையினரான அரசியல் தூதுவர்களை அவரவர் தகுதிக்கும், பணிக்குமேற்ப மேலும் மூன்று வகையினராகப் பிரிக்கலாம். அவர்கள் வருமாறு.

(1) அரசியல் தூதுவர்கள் (Political Diplomates):

(i) நிலைத் தூதர்கள் (அல்லது) அம்பாஸிடர்கள் (Ambassadors):

இவர்கள், தங்களை நியமிக்கும் நாட்டுத் தலைமையின் நேரடிப் பிரதிநிதிகள் ஆவார்கள். இவர்கள் தங்களை ஏற்கும் நாட்டின் ஆட்சித் தலைமையை நேரிடையாக சந்தித்து பரஸ்பரம் பேச்சு வார்த்தைகளில் ஈடுபடுவதற்குண்டான சிறப்புரிமையை பெற்றவர்கள். இவர்கள் ஒரு நாட்டின் சார்பாக வேற்று நாட்டில் நிலையாக இருப்பதால், இவர்களை 'நிலைத் தூதர்கள்' என்பர். இவர்கள் எந்நாட்டிற்கு தூதராக அனுப்பப் பட்டார்களோ, அந்நாட்டின் தலைநகரை வந்தடைந்த பிறகு, தங்கள் அலுவலகத் தகுதி அதிகாரத்தை வழங்கியிருக்கும் அரசு முத்திரையிடப்பட்ட நம்பிக்கைக் கடிதத்தை (Letter of Credence) ஒப்படைத்தவுடன், இவர்கள் அந்நாட்டுத் தலைமையுடன் பகிரங்கப் பேச்சு வார்த்தை நடத்தலாம். இவர்கள் தங்களை நியமிக்கும் நாட்டுத் தலைமையின் நேரடிப் பிரதிநிதி என்பதால், இவர்களுக்கு சிறப்பு மரியாதைகள் (Special Honours) உண்டு. மேலும் இவர்களுக்கு 'மேதகு' (Excellency) என்ற பட்டமும் அளிக்கப்படுகிறது. அரசு மரியாதைப் (Royal Honours) பெறுகின்ற நாடுகள் மட்டுமே, 'நிலைத் தூதர்களை' (அம்பாஸிடர்களை) வேற்று நாட்டிற்கு அனுப்ப முடியும்.

(ii) அமைச்சரவையின் முழு அதிகாரம் பெற்ற தூதர்கள் மற்றும் தூதுவருக்கு அடுத்தபடியான உயர் பதவியாளர் (Ministers Plenipotentiary and Envoys Extraordinary) : இவ்விரு வகையினரும் 'நிலைத் தூதர்களைப்' (அம்பாஸிடர்களைப்) போல நாட்டுத் தலைமையின் நேரடியான மற்றும் நிலையான பிரதிநிதிகள் அல்லர். எனினும் இவர்களை எந்நாடு நியமிக்கிறதோ, அந்நாட்டுத் தலைமையால் ஒரு தூதராக முறைப்படி அனுப்பப்படுபவர்கள். இவர்கள் எந்நாட்டிற்கு அனுப்பப்படுகிறார்களோ, அந்நாட்டின் தலைநகரை வந்தடைந்து, தங்களுக்கு அளிக்கப்பட்ட அமைச்சரவை நம்பிக்கைக் கடிதத்தை ஒப்படைத்தவுடன், இவர்கள் அந்நாட்டுத் தலைமையுடன் தனிப்பட்ட முறையில் பேச்சு வார்த்தைகள் செய்ய உரிமை படைத்தவர்கள். ஆனால் இவர்கள் 'நிலைத் தூதர்களைப்' போல நாட்டுத் தலைமையின் நேரடிப் பிரதிநிதிகள் அல்லர் என்பதால், இவர்களுக்கு, நிலைத் தூதர்களுக்குண்டான சிறப்பு மரியாதைகள் (Special Honours) அளிக்கப்படுவதில்லை. எனினும் இவர்களின் மதிப்பு கருதி 'மேதகு' (Excellency) என்ற பட்டம் இவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது. தூதர்களின் வகையில் 'நிலைத் தூதர்கள்' (அம்பாஸிடர்கள்) என்பவர்கள் உயர் நிலையில் உள்ளவர்கள். இவர்களுக்கு அடுத்தபடியான நிலையில், மேற்கண்ட இரு வகைத் தூதர்கள் உள்ளனர் எனலாம்.

(iii) வெளியுறவுப் பணித் தூதர் (Charges d' Affairs) : இவர்கள் ஒரு நாட்டு தலைமையால் மற்ற நாட்டுத் தலைமைக்கு அனுப்பப்படும் தூதுவரல்லர். ஒரு நாட்டு வெளியுறவு அமைச்சரால், மற்ற நாட்டு வெளியுறவு அமைச்சருக்கு அனுப்பப்படும் தூதுவர்கள். இவர்கள் எந்நாட்டிற்கு அனுப்பப்படுகிறார்களோ, அந்நாட்டின் தலைநகரை வந்தடைந்து, தங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள நம்பிக்கைக் கடிதத்தை அந்நாட்டின் வெளியுறவு அமைச்சரிடம் ஒப்படைக்க வேண்டும்.

(2) வாணிபத் தூதுவர்கள் (Consuls):

இவர்களின் விளக்கத்தை நாம் வினா எண். 56–ன் விடையில் காண்போம்.

55. Discuss fully the rights, privileges and immunities of diplomatic envoys. (வெளிநாட்டுத் தூதுவர்களின் உரிமைகள், சிறப்புரிமைகள், சட்ட விலக்களிப்புரிமைகளைப் பற்றி விவாதிக்க.)

தூதாண்மையின் சிறப்பு :

"அடே இராவணா! இராமஸ்வாமி தூதன் நானடா" என இராமாயணக் காலத்திலேயே இராமபிரானின் தூதனாக அனுமான் இராவணனிடம் தூது சென்றத்தைப் பார்க்கும்பொழுது, தூதாண்மை (Diplomacy) என்பது இன்று நேற்று வளர்ந்ததல்ல என்பது புரியும். இதைவிட திருவள்ளுவப் பெருந்தகை, தூதாண்மையின் சிறப்பை விளக்கும் பொருட்டு 'தூதியியல்' எனும் தனி அதிகாரத்தையே திருக்குறளில் சேர்த்துள்ளார்.

தூதுவரின் சிறப்பு :

ஒரு பிரச்சனையைப் பற்றி சம்பந்தப்பட்டவர்கள் நேரிடையாகப் பேசிக் கொள்வதைவிட, இடையே ஒரு தூதுவரை வைத்து பரிமாறிக் கொள்வதன் மூலம் அப்பிரச்சனைக்கு தீர்வு காண முடியும். நாடுகளும் இதைத்தான் பின்பற்றுகின்றன. தூதுவர் என்பவர் ஒரு நாட்டின் பிரதிநிதி (Representative). வேகமான வளர்ந்து வரும் தற்கால நடைமுறைப்படி, வெளிநாட்டில் வேறொரு நாடு நிரந்தர தூதர் அலுவலகங்கள் அல்லது தூதுரகங்கள் (Diplomatic Missions) அமைத்துக் கொண்டு, அங்கு தங்களது நாட்டின் (வேறொரு நாட்டின்) பிரதிநிதியாக செயல் பட்டு தங்களது நாட்டிற்கும் அவ்வெளிநாட்டிற்கும் நல்லுறவை வளர்த்து, வலுப் படுத்துவதே தூதவர் ஒருவரின் சிறப்பாகும். சர்வதேச அரங்கில் நாடுகளிடையே இணக்கமைவு உறவு ஏற்படக் காரணமாக இருப்பவர்களே தூதுவர்தாம் என்றால் அது மிகையாகாது. இத்தகு முக்கியமான இடத்தைப் பெற்றுள்ள இவர்களுக்கு தங்களது பணியை செவ்வனே ஆற்றவும், தங்களது நாட்டின் பெருமையை வெளிநாட்டில் காக்கவும் பல சிறப்புரிமைகள் அளிக்கப்பட்டுள்ளன.

தூதுவரின் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் சட்ட விலக்களிப்புகள் :

1. தனிப்பட்ட பாதுகாப்பு (Personal Safety) :

தூதுவருக்கு சிறந்த பாதுகாப்பு அளிக்கப்பட வேண்டும். தூதுவருக்கு, எவரேனும் தீங்கு விளைவித்துவிட்டால், அது அவருக்கு மட்டும் இழைக்கப்பட்ட தீங்காக கருதப்படமாட்டாது. மாறாக அவர் சார்ந்த நாட்டிற்கே இழைக்கப்பட்ட தீங்காக கருதப்படும். ஒரு நாட்டிற்கு தன்னாட்டு மக்களை காப்பதைவிட, ஒரு

வெளிநாட்டுத் தூதுவரை பாதுகாக்கும் கடமையே அதிகமாக உள்ளது, எனக் கூறினால் அது மிகையாகாது. நம்முடைய எதிரி நாட்டின் தூதுவருக்குக்கூட தீங்கு விளைவித்தல் கூடாது என **Palachie வழக்கில்** கூறப்பட்டது. ஆனால் தூதுவர் ஒருவர் தன்னை ஏற்றுக்கொண்ட வெளிநாட்டிற்கு விரோதமாக சதித் திட்டம் தீட்டி உளவு வேலைகளில் ஈடுபட்டிருப்பதாக கண்டறியப்படுமானால், அவரை வெளியேற்றவோ, வேண்டுமானால் அவரை கைது செய்து அவரது நாட்டிற்கு அனுப்பவோ, அவ்வெளிநாட்டிற்கு அதிகாரம் உண்டு.

2. குற்றவியல் நீதிவரம்பிலிருந்து விலக்களிப்புரிமை (Immunity from Criminal Jurisdiction) :

வெளிநாட்டில் தூதுவராக பணிபுரியும்போது அந்நாட்டின் குற்றவியல் நீதிமன்றங்களின் நீதிவரம்பிலிருந்து அவர் விலக்கப்பட்டு, அவருக்கு சில சிறப்பு சலுகைகள் வழங்கப்படுகின்றன. பிறிதொரு நாட்டின் பிரதிநிதி என்ற காரணத்தால் அந்நாட்டின் நீதிமன்றங்கள், அவர் மீது குற்றம் சுமத்தி, அவரைக் கைது செய்ய முடியாது. எனினும் தூதுவர் எவரேனும் குற்றச் செயல்களைப் புரிவாராயின், அதற்கு அவ்வெளிநாட்டிற்கு கிடைக்கும் ஒரே தீர்வழி யாதெனில், அத்தூதுவர் குற்றச் செயல் புரிந்த விபரத்தினை அவரது தாய்நாட்டிற்கு விளக்கமாக எழுதி, தாய் நாட்டிடம் அப்பிரதிநிதியை திரும்ப அழைத்துக் கொள்ளுமாறு வேண்டுதலே யாகும். **உதாரணமாக** 1967–ஆம் ஆண்டில், ஆப்பிரிக்க நாட்டைச் சார்ந்த மூன்று தூதுவர்கள் கள்ளக்கடத்தலில் ஈடுபட்டார்கள். இந்திய அரசு, அந்நாட்டிற்கு இது பற்றி எழுதியது. இதனால் அவர்களை ஆப்பிரிக்க நாடு திரும்பவும் தம்மிடம் அழைத்துக் கொண்டது.

3. உரிமையியல் நீதிவரம்பிலிருந்து விலக்களிப்புரிமை (Immunity from Civil Jurisdiction) :

ஒரு தூதுவர் மீது எவ்விதமான உரிமையியல் வழக்கினையும் தொடர முடியாது. மேலும் உரிமையியல் வழக்குத் தொடர்பாக, அவரை தூதுவராக ஏற்றுக் கொண்ட நாட்டு (Accredited State) நீதிமன்றங்களின் முன், அவரை பிரதிவாதியாக நிறுத்தவும் முடியாது. ஆனால் தூதுவர் ஒருவர் தன்னுடைய இந்த சிறப்புரிமையை விட்டுக் கொடுப்பதாக (Waive) உறுதியளித்தால், அவரை ஒரு சாதாரண குடிமகனாகக் கருதி, உரிமையியல் நீதிமன்றங்கள் தங்களது நீதிவரம்பை அவர் மீது செலுத்தும்.

4. அழைப்பாணையின் பேரில் சாட்சியமளித்தலிலிருந்து விலக்கு (Exemption from subpoena as witness) :

நீதிவரம்பிலிருந்து விலக்குரிமை பெற்ற தூதுவர்கள், உரிமையியல், குற்றவியல் அல்லது நிருவாகத்துறை நீதிமன்றங்களின் முன் அழைப்பாணையின் பேரில் ஆஜராகி எவ்வழக்குகளிலும் சாட்சியமளிக்க விலக்குரிமை பெற்றவர்கள்

ஆவார்கள். அவர்கள் அழைப்பாணையை ஏற்கவோ அல்லது சாட்சியமளிக்கவோ மறுக்கலாம்.

5. தூதுவரின் பரிவாரத்திற்கு விலக்களிப்புரிமை (Immunity of Envoy's Retinue) :

தூதுவரின் பரிவாரம் என்பதில், அவரது மனைவி மக்கள் மற்றும் அவருடன் வாழும் குடும்ப உறுப்பினர்கள், அவருடைய அலுவல் அதிகாரிகள் மற்றும் அவருடைய அந்தரங்க பணியாட்கள் (Private Servants) முதலானோர் அடங்குவர். ஒரு தூதுவர் என்னென்ன சிறப்புரிமைகளை பெற்றுள்ளாரோ அவையனைத்தும், அவரது, மேற்படி பரிவாரத்திற்கும் கிடைக்கும்.

6. வசிப்பிடம் தொடர்பான விலக்களிப்புரிமை (Immunity connected with residence) :

ஒரு தூதுவரின் வசிப்பிடமும், அவரது அலுவலகமும், ஒரு வெளிநாட்டில் இருப்பதாகக் கருதப்பட்டாலும், அது அத்தூதுவரின் தாய்நாட்டுப் பகுதியாகவே உணரப்படும். அவ்விடத்தில் அவ்வெளிநாட்டின் உள்நாட்டுச் சட்டங்கள் ஏதும் பாயா. ஏனெனில் அவ்விடம்தான் தூதுவரின் தாய்நாட்டுப் பகுதியாக உணரப் படுகிறதே. தூதுவராக தன்னை ஏற்றுக் கொண்ட வெளிநாட்டில், தன்னாட்டு மக்களுக்கு எதிராக கலவரம் நடக்கும்பொழுது, அவர்களுக்கு தனது தூதரலுவலகத்தில் தஞ்சமளிக்கலாம். தூதரலுவகத்தையோ அல்லது தூதுவரின் வசிப்பிடத்தையோ தாக்குவது நாட்டிடைச் சட்ட விரோதமாகும். எனவே அவர்கள் அங்கு தக்க பாதுகாப்பு பெறுவார்கள். ஆனால் ஒரு குற்றவாளிக்கு தஞ்சமளித்தல் கூடாது. இது குறித்த வழக்கு வருமாறு.

Case concerning United States Diplomatic and Consular Staff in Tehran[1] – இவ்வழக்கில், தூதரகத்தில் தஞ்சடைந்த ஒரு நபர் காவல்துறையால் தேடப்பட்டு வருபவராக இருந்து, கைது செய்யப்படுவதிலிருந்து அவருக்கு எவ்வித விலக்குரிமையும் இல்லையெனில், அந்நபரை அத்தூதரகத்தின் தூதுவர் காவல்துறையிடம் ஒப்படைப்பதே சரியான முறையாகும், என்று சர்வதேச நீதிமன்றம் கருத்துரைத்தது.

Public Prosecutor v. Hjelmaland and Blong – இவ்வழக்கு தூதுவரின் வசிப்பிட மேன்மையை விளக்குகிறது. இவ்வழக்கில் நார்வே நாட்டின் ஒசோ என்ற இடத்திலிருந்த சோவியத் நாட்டுத் தூதரகத் தோட்டத்தினுள் இருவர் குண்டுகளை வீசினர். வழக்கை விசாரித்த நார்வே நாட்டுத் தலைமை நீதிமன்றம், அன்னிய நாட்டுத் தூதுவரகங்கள் தனிக் கவனத்துடன் பாதுகாக்கப்பட வேண்டுபவை; எனவே அதற்கு எதிரான குற்றங்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பு அளித்தது.

1. I.C.J. Reports (1980) p. 3

7. வரிகளிலிருந்து விலக்கு (Exemption from Taxes) :

தூதுவர்களுக்கு வீட்டுவரி கிடையாது. ஏனெனில் முன்கண்டவாறு, அவரது வசிப்பிடம் வெளிநாட்டு நீதிவரம்பிலிருந்து விலக்குரிமை பெற்றதாகும். ஆனால், அவர் தண்ணீர் வரி, மின்சார வரி முதலியவற்றை செலுத்த வேண்டும் என எதிர்பார்க்கப்படுவார். எனினும் அவரை, அவ்வரிகளை செலுத்தக் கோரி, அறிக்கை அனுப்பி கட்டாயப்படுத்தக் கூடாது. ஒரு தூதுவர் தன்னுடைய சொந்த உபயோகத்திற்காக வேற்று வெளிநாட்டிலிருந்து பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். அதற்கு சுங்க வரி கிடையாது. அப்பொருட்களும் சுங்க இலாகாவின் பரிசோதனைக்கு அப்பாற்பட்டது.

8. பொருட்களைப் பறிமுதல் செய்வதிலிருந்து விலக்கு (Exemption from seizure of goods) :

தூதுவர் எவரேனும், தாம் தூதுவர் பதவியில் இருக்கும்பொழுதோ அல்லது அதற்கும் முன்போ கடன்கள் ஏதேனும் வாங்கியிருந்தால் அதனைத் திரும்பப் பெற வேண்டி கடன் கொடுத்தவர், அவர் மீது வழக்குத் தொடர முடியாது. மேலும் அதற்காக அவரை கைது செய்யவோ அல்லது அவரது உடைமைகளை பறிமுதல் செய்யவோ முடியாது.

9. ஆண்டவனைத் தொழ உரிமை (Right to worship) :

ஒரு தூதுவர் தாம் தங்கியிரும் நாடு எம்மதத்தைச் சார்ந்திருந்தாலும், தன் மதத்தின் கடவுளைத் தம் முறைப்படி தொழுவதற்கு சகல உரிமைகளும் உண்டு.

10. தகவல் தொடர்பில் சுதந்திரம் (Freedom of Communication) :

தன்னுடைய பணியை செவ்வனே செய்யும் பொருட்டு தன் தாய் நாட்டுடன் தகவல் தொடர்பு பரிவர்த்தனை செய்து கொள்வதற்கு, ஒரு தூதுவருக்கு முழு சுதந்திரம் அளிக்கப்பட்டுள்ளது. அவரது தகவல் தொகுப்பு அடங்கிய பையானது (Bag) அஞ்சல் துறையின் தணிக்கைக்கும், அது கடந்து செல்லும் மூன்றாவது நாட்டின் தணிக்கைக்கும் அப்பாற்பட்டதாகும்.

தூதாண்மை உறவு பற்றிய வியன்னா மாநாடு, 1961 (Vienna Convention on Diplomatic Relation, 1961) :

அய்க்கிய நாடுகள் சபையின் நாட்டிடைச் சட்ட ஆணையமானது தூதாண்மையுறவு, தூதுவரின் சிறப்புரிமைகள் பற்றி நடைமுறையில் வழங்கி வரும் விதிகளைத் தேவைக்கேற்ப மாற்றி அமைத்து, அவற்றை ஒரு தொகுப்பாக வெளியிட்டது. அய்க்கிய நாடுகள் சபை இதற்கென வியன்னாவில் 1961–ஆம் ஆண்டில் கூட்டிய மாநாடொன்றில் பங்கு கொண்ட 81 நாடுகளில் 45 நாடுகள் உடனடியாகவும் மற்றும் பல நாடுகள் பின்னரும் ஏற்றுக்கொண்டன. இந்த ஏற்பு

விதிகளின் பல சரத்துகள் தூதுவரின் சிறப்புரிமைகளைப் பற்றி கூறுகின்றன. கூடவே அவை மீதான சில கட்டுப்பாடுகளையும் கூறுகின்றன. அவை வருமாறு.

1. தூதுவர்கள் தம்மை ஏற்கும் வெளிநாட்டின் குற்றவியல் நீதிமன்றங்களின் நீதிவரம்பிலிருந்து (Criminal Jurisdiction) முற்றிலும் விடுபட்டவர்கள். ஆனால் அதே சமயத்தில் இத்தகு முழுச் சலுகை, உரிமையியல் நீதிமன்றங்களின் நீதிவரம்பின் ஆளுகைக்கோ (Civil Jurisdiction) அல்லது நிருவாகத் துறை நீதிவரம்பின் ஆளுகைக்கோ (Administrative Jurisdiction) கிடையாது. இவை ஒரு சில கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டவையாகும்.

2. ஏற்கும் நாட்டின் ஆளுகையிலிருந்து தூதுவரக உடைமைகள் விலக்குரிமை பெற்றதாகும். அவற்றின் மீது எவ்வித ஆதிக்கமும் செலுத்தக் கூடாது. ஆனால் தூதுவரின் தனிப்பட்ட அல்லது வாணிக சம்பந்தப்பட்ட சொத்துகளுக்கு அவ்வித சிறப்புரிமை கிடையாது. **(வியன்னா ஏற்பு விதி, சரத்து 31)**

3. தூதுவர், ஏற்கும் நாட்டின் எல்லைக்குள் எங்கும் செல்லலாம். ஆனால் அந்த நாட்டின் பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் செல்லும் உரிமை கிடையாது. **(சரத்து 42)**

4. தூதுவரகப் பொருட்கள் நீதிமன்ற சோதனைக்கோ அல்லது கைப் பற்றுகைக்கோ இலக்காக்கப்படுதல் கூடாது. **(சரத்துகள் 23 மற்றும் 24)**

5. தூதுவரின் ஆவணப் பேழை (Diplomatic Pouches), செய்தித் தொடர்பு பை (Diplomatic bag) இவைகளுக்கு ஆள்நில ஆதிக்கத்திலிருந்து எவ்வித இடையீடுமின்றி விலக்களிக்கப்படுதல் வேண்டும். **(சரத்து 27)**

6. தூதுவரும் அவரது அலுவலகப் பணியாளர்களும் அவர்களை ஏற்கும் வெளிநாட்டின் வரிவிதிப்பதற்கு அப்பாற்பட்டவர்கள். **(சரத்துகள் 34 மற்றும் 36)**

இதுநாள் வரை வழக்கிலிருந்து வந்த தூதுவரின் சிறப்புரிமை பற்றிய விதிகளை வியன்னா ஏற்பு விதி மாநாடு, சில திருத்தங்களுடனும், வரையறுக்குட் பட்டும் மேற்கண்டவாறு ஏற்றுக் கொண்டுள்ளது.

56. Consuls - Write short notes. (வாணிபத் தூதர்கள் – சிறு குறிப்பு எழுதுக.)

வாணிபத் தூதர்களின் நியமனம் - வளர்ச்சி :

நிலையான அரசியல் தூதுக் குழுக்களை விட, வாணிபத் தூதுர்கள் நியமனம் பழமையானது. இது உலக நாடுகளிடையே கடல் நில வாணிபம் பெருகப் பெருக வாணிபத் தூதுர்களை நியமிப்பது 17, 18–ஆம் நூற்றண்டில் நிலையான தூதுக் குழுக்கள் நியமனத்தால் சற்றுக் குறைவுற்ற போதிலும், தொழிற்புரட்சியின்

காரணமாக ஒங்கி வளர்ந்த உலக வாணிபம் இத்தகு வாணிபத் தூதுர்களின் இன்றியமையாத் தன்மையை உணரச் செய்தது. அது முதல் வாணிபத் தூதுர்கள் மீண்டும் முக்கியத்துவம் பெறலாயினர்.

பெரும்பாலான உலக நாடுகள் தங்களுக்குள் செய்து கொண்ட உடன்படிக்கை ஒப்பந்தங்களின் மூலம் வாணிபத் தூதுவரின் சலுகைகள், உரிமைகள், தகுதிகள், பணிகள் ஆகியவற்றை நிருணயித்துக் கொண்டன.19–ஆம் நூற்றாண்டு இறுதியில் அநேகமாக உலக நாடுகளனைத்தும் தங்களுடைய வாணிபத் தூதுவர்களை நியமித்திருந்தன. அரசியல் தூதாண்மையும், வாணிபத் தூதாண்மையும் ஒரு நாட்டின் வெளியுறவு அமைச்சகத்தின் கீழ் இயங்கினாலும், ஒன்றன் மீது மற்றொன்றிற்கு ஆதிக்கம் இல்லாதிருந்தது. ஆனால் அண்மைக் காலங்களில் உலக முன்னோடி நாடுகள் இவ்விரு அமைப்புகளையும் மாறுபட்டவை யாகக் கொள்ளாமல், இரண்டையும் இணைத்துவிட்டன. அவற்றில் குறிப்பிடத் தக்கவை இத்தாலி – ஜப்பான், நார்வே, – ஃபிரான்ஸ், ரஷ்யா–அமெரிக்க அய்க்கிய நாடுகள் ஆகியவைகளாகும்.

வாணிபத் தூதர்களின் பணிகள் :

இவர்கள் அரசியல் தூதர்களைப் போல் ஒரு நாட்டால் மற்ற நாட்டிற்கு நியமிக்கப்பட்டு நாடுகளிடையேயான உறவுகளைக் காப்பாவர்களல்லர். இவர்கள் முற்றிலும் வாணிப வளர்ச்சிக்காகவும், வணிகர்களின் நன்மையைப் பேணவும், வணிகர்களின் குறைகளைக் களைந்து காக்கவும், வணிகர்களுக்காகப் பொதுவாகப் செயல்படும் பொருட்டும் நியமிக்கப்படுவர்கள். இவர்கள் தன்னாட்டு வணிகர்களின் மீது குற்றவியல் நீதிவரம்பையும் (Criminal Jurisdiction) உரிமையியல் நீதிவரம்பையும் (Civil Jurisdiction) நிருவாக நீதிவரம்பையும் (Administrative Jurisdiction) பெற்று செயல்பட்டு வந்தனர்.

வாணிபத் தூதுர் உறவுகளைப் பற்றிய 1963–ஆம் ஆண்டின் வியன்னா ஏற்பு விதிகள் மாநாடு (Vienna Convention on Consular Relations) இவர்களின் பணியைப் பற்றித் தெளிவாக விளக்கியுள்ளது. அம்மாநாட்டின் 5–வது சரத்தின்படி இவர்களது பணிகளாவன :

1. வாணிபப் பாதுகாப்பும் வளர்ச்சியும்.

2. வாணிபத்தில் ஈடுபட்டுள்ள கப்பல், விமானம் ஆகியவற்றைப் பழுது பார்த்தலும், அவற்றின் பணியாளர்களின் உடல் நலம், சுகாதாரம் ஆகியவற்றை உள்நாட்டுச் சட்டத்திற்கொப்பப் பேணுதலும்.

3. தம்மை வாணிபத் தூதர்களாக ஏற்கும் நாட்டு அதிகாரிகளின் முன்னர் தம் நாட்டு வணிகர்களின் உரிமைகளையும், நலனையும் காத்து உதவுதல்.

4. பொதுவாக இரு நாட்டு வணிக நலம் பேணும் பணிகளில் ஈடுபடுதல்.

வாணிகத் தூதர்களின் சிறப்புரிமைகள் மற்றும் விலக்குரிமைகள் :

இதனையொட்டிய சரத்துகள் 1963–ஆம் ஆண்டு வியன்னா ஏற்பு விதிகள் மாநாட்டில் வரையறுக்கப்பட்டுள்ளன.

1. சில நிபந்தனைகளுக்குட்பட்டு வாணிபத் தூதர்கள் தங்கள் நாட்டின் சார்பாகச் செய்யும் அலுவல் பணிகளானது, ஏற்கும் நாட்டின் உரிமையியல் நிருவாக நீதிவரம்பிற்கு (Civil Administrative Jurisdiction) உட்படுதல் கூடாது. **(சரத்து 43)**

2. வாணிபத் தூதர்களின் சுதந்திரமும் கண்ணியமும் காக்கப்படுதல் வேண்டும். **(சரத்து 40)**

3. வாணிபத் தூதர்கள் கொடுங் குற்றங்களைப் புரிந்தாலொழிய, அவர்களை ஏற்ற வெளிநாட்டின் குற்றவியல் நீதிவரம்பிற்கு (Criminal Jurisdiction) அவர்கள் ஆளாக்கப்படுதல் கூடாது. **(சரத்து 41)**

4. வாணிபத் தூதர்கள் தம் அலுவலையொட்டி ஆற்றிய பணிகள் பற்றி சான்று எதனையும் பகர மறுக்கும் உரிமை பெற்றவர்கள். அத்துடன் உரிமையியல் அல்லது குற்றவியல் (Civil or Criminal Cases) வழக்குகளில் வாணிபத் தூதுவர்களை ஒரு சாட்சியாக (Witness) இருக்கும்படி வற்புறுத்தல் கூடாது. ஆனால் அவர்கள் விரும்பினால், இதற்கென ஒரு குழு நியமித்து, அவரது இல்லத்திற்கோ, அலுவலகத்திற்கோ சென்று சாட்சியம் பெறலாம். **(சரத்து 44)**

5. தூதுவர்களை ஏற்கும் வெளிநாட்டு அதிகாரிகள் வாணிப தூதரகத் தலைவரின் முன்னனுமதியின்றி தூதரகக் கட்டிடத்திற்குள் நுழைதல் கூடாது. **(சரத்து 31)**

6. வாணிபத் தூதுக் குழுவின் உறுப்பினர்கள், ஏற்கும் நாட்டின் எல்லைக்குள் எங்கும் செல்ல உரிமை பெற்றவர்கள். ஆனால் இவ்வுரிமை உள்நாட்டுச் சட்டத்திற்கும், பாதுகாக்கப்பட்ட பகுதிகளின் வரையறைக்கும் உட்பட்டது. **(சரத்து 34)**

57. Explain the modes of termination of Diplomatic Mission (தூதர்குழு முடிவுறுதல் குறித்த முறைகளை விளக்குக.)

முன்னுரை:

பின்வரும் பல்வேறு முறைகளில் ஏதேனுமொன்றின்படி தூதர்குழு முடிவுக்கு வரலாம். அவை,–

தூதர் குழு முடிவுக்கு வரும் முறைகள்:

1. அனுப்பும் நாடு திரும்ப அழைத்தல் (Recall of Envoy) :

அனுப்பும் நாடு பல்வேறு காரணங்களுக்காக தான் அனுப்பிய தூதரைப் திரும்ப அழைத்துக் கொள்ளலாம். உதாரணமாக, தூதரைப் பதவி உயர்வுக்காக மாற்றி வேறு நாட்டில் நியமனம் செய்வதற்காக திரும்ப அழைக்கலாம். சில சமயங்களில், நாட்டிடைப் பூசல் முளைக்குமிடத்தும் தூதர்களைத் திரும்ப அழைப்பதுண்டு. தங்களது மனக்கசப்பைக் காட்ட இதை ஒரு முறையாக நாடுகள் கையாளுகின்றன.

2. தூதர் குழுவின் நோக்கம் பூர்த்தியாதல் (Fulfilment of the object): குறிப்பிட்ட நோக்கத்திற்காக அனுப்பப்பட்ட தூதுக் குழுக்கள், அந்நோக்கம் பூர்த்தியானவுடன் முடிவுக்கு வந்துவிடும். இம்மாதிரியான குழுக்கள் மாநாட்டில் கலந்து கொள்வதற்காகவோ அல்லது சர்வதேச விழாக்களில் கலந்து கொள்வதற் காகவோ அனுப்பப்பட்டிருக்கலாம். மாநாடு முடிவுற்றதும் தூதுக்குழுவும் முடிவுறும்.

3. ஏற்றுக் கொண்ட நாடு, அனுப்பிய நாட்டைத் திருப்பி அழைத்துக் கொள்ளும்படி கேட்டல் (Demand of recall by the accredited State): தூதர் விரும்பத் தகாதவராகத் தெரிந்தால் திருப்பியழைத்துக் கொள்ளும்படி கேட்பதுண்டு. ஏற்றுக் கொண்ட நாட்டிலிருக்கும் போது உளவு வேலைகளில் ஈடுபடுவது, சதித் திட்டம் தீட்டுவது போன்ற விரும்பத்தகாத செயல்களில் தூதர்கள் ஈடுபட்டால் அவர்களைத் திருப்பி அனுப்ப இது ஒரு முறை.

4. போர் மூளுதல் (War) : போர் மூளும் போது போரிடப் போகும் நாடுகள், கடவுச் சீட்டுக்களை (Pass-ports) திரும்பக் கொடுத்து, தூதர்களை திருப்பி அனுப்பி விடுவதுண்டு. இதனாலும் தூதுக் குழு முடிவுறுகிறது.

5. நம்பிக்கை கடிதம் காலாவதியாதல் (Expiration of Letters of Credence): நம்பிக்கைக் கடிதம் குறிப்பிட்ட காலத்திற்கெனக் கொடுக்கப் பட்டு, அக்காலம் காலவதியடைந்தவுடன் தூதுக் குழுவும் முற்றுப்பெறும்.

6. கடவுச் சீட்டு வேண்டுதல் (Request for a passport) : தன்னை தூதுவராக ஏற்றுக் கொண்ட நாடு, தன்னை சரியான விதத்தில் கவனிக்காமல் மரியாதைக் குறைவாக நடத்தியது என்ற காரணத்தைக் காண்பித்து கடவுச்சீட்டு வேண்டினால், அத்தூதுக்குழு முடிவுறும்.

7. இறப்பு (Death of the envoy) : தூதுக் குழுத் தலைவர் இறந்தாலும் தூதுக்குழு தற்காலிமாக முற்றுப் பெற்றதாக கருதப்படும்.

8. நாடழிதல் (Extinction of State) : ஒரு நாடு மற்றொரு நாட்டுடன் கலந்து அதனுடன் அய்க்கியமாகி விடுவதாலோ (Merger) அல்லது சேர்ந்து விடுவதாலோ (Annexation) அய்க்கியமான நாடு அழிந்துவிட்டதாகத் கருதப் படும். அச்சமயத்தில் தூதுக்குழுவும் தானாகவே முடிவுக்கு வந்துவிடும்.

9. நீக்கல் (Dismissal) : தூதுவரை ஏற்கும் நாடு, தான் ஏற்ற தூதுவரை நீக்க ஆணையிட்டாலும், அத்தூதுக் குழு முடிவுற்றதாக கருதப்படும்.

10. *நிரந்தரத் தூதுவர் தனது பதவிக்கு திரும்புதல்* (Return of the regular Minister to his Post) : ஒரு தூதுவர் தற்காலிமாக நியமிக்கப் பட்டிருக்கும் பொழுது, நிரந்தர தூதுவர் தனது பதவிக்கு திரும்பினால் அத்தூதுக் குழு முடிவுக்கு வரும்.

58. Right to Innocent Passage - Write short notes. (மாசற்றோர் வழிப்பாதை உரிமை – சிறு குறிப்பு எழுதுக.)

தூதுவராக நியமிக்கப்பட்டவர்களுக்கு பல்வேறுபட்ட சிறப்புரிமைகள், காப்புரிமைகள் உண்டு. தூதுவர்களாக அவர்களை ஏற்றுக்கொண்ட வெளிநாடுகள் அத்தகு சிறப்புரிமைகளையும் காப்புரிமைகளையும் வழங்கக் கடமைப்பட்டன. இது மட்டுமல்லாது தூதுவராக நியமிக்கப்பட்டவர் தன்னுடைய நாட்டிலிருந்து, தாம் நியமிக்கப்பட்ட வெளிநாட்டிற்கு செல்லும் பொழுது, இடையே வரும் மூன்றாம் நாடுகளும் தூதுவர்களுக்குண்டான சிறப்புரிமைகளைத் தரக் கடமைப்பட்டன. அதாவது தூதுவர், தம்மனதில் எவ்வித கள்ளம் கபடமில்லாமல் மாசற்று தம் நாட்டிலிருந்து, தம்மை ஏற்றுக் கொண்ட நாட்டிற்கு பணியின் நிமித்தமாக செல்கின்றார். அவ்வாறு அவர் கடந்து செல்லும் வழிப்பாதையில் வரும் நாடுகளிடமிருந்து சிறப்புரிமைகளைப் பெற உரிமை பெற்றவர் ஆவார். இதுவே **'மாசற்றோர் வழிப்பாதை உரிமை'** எனப்படுகிறது. இவ்வாறு நாடுகளை கடந்து செல்லும்போது, தூதுவர் எவருக்கேனும் தீங்கு விளைவிக்கப்பட்டால், அது அவரை அனுப்பிய நாட்டிற்கும் அவரை ஏற்றுக்கொண்ட வெளிநாட்டிற்கும் இழைத்த பெரும் தீங்காக கருதப்படும். இதனால் பெரும் பகையே ஏற்பட்டாலும் வியப்பில்லை. இது குறித்த முக்கிய வழக்கு வருமாறு.

Birgman v. De Sieyes[1] – இவ்வழக்கில் டி சியாஸ் என்பார் பிரான்சு தூதுவர். இவர் பொலிவியா நாட்டில் தூதுவராக செயல்படுவதற்காக அனுப்பப் பட்டார். இதன் பொருட்டு, பிரான்சிலிருந்து பொலிவியாவிற்கு செல்லும் பொழுது, நியூயார்க்கை கடந்து செல்ல நேரிட்டது. அச்சமயத்தில், நியூயார்க்கில் மேற்படி தூதுவர் மீது பிர்ஜ்மேன் என்பார் உரிமையியல் வழக்கு தொடுத்தார். ஆனால் தூதுவர் ஒருவர் தன்னாட்டிலிருந்து, தம்மை ஏற்றுக்கொண்ட வெளிநாட்டிற்கு செல்லும் வழியில் வரும் இடைப்பட்ட மூன்றாவது நாடும் அவருக்குண்டான சிறப்புரிமைகளைத் தரக் கடமைப்பட்டது என்றும், இதனால் மேற்படி தூதுவர் மீது மூன்றாவது நாட்டின் நீதிமன்றங்களுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது என்றும், அவருக்கு மாசற்றோர் வழிப்பாதை உரிமை உண்டென்பதால் அவர் மீது பிரிஜ்மேன் என்பார் தொடுத்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

-o0o-

1. (1946) 71 F. Sup. 334

22

உடன்படிக்கைகள் [Treaties]

59. What is a treaty? Write about the kinds of treaties. (உடன் படிக்கை என்றால் என்ன? உடன்படிக்கைகளின் வகைகளை பற்றி எழுதுக.)

(அல்லது)

Write a brief note on the Law making treaties. ('சட்டம் இயற்றும் உடன்படிக்கை' பற்றி ஒரு சுருக்கமான சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What is the meaning of the word treaty and consider the difference between a bilateral and a multilateral treaty. (உடன்படிக்கை என்ற வார்த்தைக்குப் பொருளென்ன? இரு நாட்டு உடன் படிக்கைக்கும் பன்னாட்டு உடன்படிக்கைக்குமுள்ள வேறுபாடுகளைக் கூறுக.)

உடன்படிக்கை (Treaty) - விளக்கம் :

இன்றைய சாதாரண சமுதாய வாழ்வில் பணத்தைக் கடன் பெறவோ, அசையாச் சொத்துக்களான நிலம், வீடு ஆகியவற்றை வாங்கவோ, விற்கவோ, அடைமானம் வைக்கவோ அல்லது வாடகைக்கு விடவோ சாமானிய மக்கள் ஒப்பந்தப் பத்திரம் எழுதி, அதன் வாயிலாக உடன்படுகின்றனர். இது போன்றுதான் நாடுகளுக்கிடையிலான சர்வதேச உறவில், நாடுகள் தங்களது சுமூகமான உறவை பிற நாட்டவர்களுக்கு அறிவிக்க, கடன் வாங்க, ஆள்நிலம் விற்க, குத்தகைக்கு விட, போர் நிற்பின் அமைதியை நிலைநாட்ட, வாணிபத்தையும் பொருளாதாரத்தையும் உயர்த்திக் கொள்ள போன்ற பல செயல்களுக்காகவும் நாடுகள் ஒத்துக்கொண்டு எழுதிக் கொள்ளும் ஒப்பந்தப் பத்திரம்தான் 'உடன்படிக்கை' (Treaty) எனப்படுகிறது.

நாட்டிடைச் சட்டத்தின் தோற்றத்திற்கே இந்த உடன்படிக்கைகள்தாம் கருநிலை மூலமாக (Source) கருதப்படுகிறது. இதனால் நாட்டிடைச் சட்டம் தோன்றுவதற்கு முன்பிருந்தே 'உடன்படிக்கைகள்' செய்து கொள்ளும் வழக்கத்தை நாடுகள் கொண்டிருந்தது புலனாகும். சற்று நுணுக்கமாக கூறுவதெனில், நாடு களுக்கிடையே அல்லது அரசு அங்கங்களுக்கிடையே (State organs) சர்வதேச அரங்கில் சட்ட உரிமைகளையும், கடப்பாடுகளையும் ஏற்படுத்தும் வகையில் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்களே, 'உடன்படிக்கைகள்' ஆகும்.

உடன்படிக்கை (Treaty) - வரையறை:

அறிஞர் **ஒப்பன்ஹெய்ம்** அவர்கள், 'ஒரு ஒப்பந்தத்தின் தன்மையில் அமைந்த, அதன் தரப்பினர்களுக்கிடையே சட்டப்படியான உரிமைகளையும் கடப்பாடுகளையும் உருவாக்கும் வகையில், இரண்டு நாடுகளிடையே, அல்லது நாடுகளின் அமைப்புகளிடையே ஏற்படும் உடன்படிக்கைகளே,சர்வதேச உடன்படிக்கைகள் எனப்படுகின்றன'[1] என்று வரையறுக்கிறார்.

அறிஞர் **ஸ்டார்க்** அவர்கள், 'இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகள் தங்களுக்கிடையே நாட்டிடைச் சட்டத்தின் கீழ் ஒரு உறவுமுறையை ஏற்படுத்திக் கொள்வதற்காக அல்லது ஏற்படுத்திக் கொள்ள விழைந்து செய்து கொள்ளும் ஒரு உடன்பாடே, உடன்படிக்கை எனப்படுகிறது. ஒரு ஆவணம் அல்லது பத்திரம் அது எந்த சொற்றொடர்களைக் கொண்டு எந்த வடிவில் எழுதப்பட்டிருந் தாலும், அது இரு நாடுகளுக்கிடையிலான ஒரு உடன்பாட்டைக் குறிப்பிடுவதாக இருக்கும் வரை, அது ஒரு உடன்படிக்கையே',[2] என்று கூறுகிறார்.

வியன்னா மாநாட்டின் ஏற்பு விதிகள் :

1969–ஆம் ஆண்டுக்கு முன் வரை உடன்படிக்கைகள் பெரும்பாலும் நாட்டிடைச் சட்டத்தின் வழக்கத்தின்பாற்பட்ட விதிகளையே (Customary Rules) உள்ளடக்கி இருந்தன. ஆனால் உடன்படிக்கைகளையொட்டிய விதிகள் 1969–ஆம் ஆண்டு வியன்னாவில் கூடிய உடன்படிக்கைகள் சட்டம் பற்றிய மாநாட்டில் சீரமைக் கப்பட்டு, தொகுத்தேற்கப்பட்டுள்ளது. எனினும், இம்மாநாட்டு விதிகளின் முகப்புரை யானது இதில் கூறப்படாத பொருள்களையொட்டி நாட்டிடைச் சட்டத்தில் முன்பிருந்த வழக்கு விதிகளே தொடர்ந்து வழங்கி வருதல் வேண்டும் என்று கூறுகிறது.

---

1. "International treaties, are agreements, of a contractual character, between States, or organisations of States, creating legal rights and obligations between the parties' - **Oppenheim : International Law, Vol. 1, 8th Edn., p. 877.**

2. 'A treaty is an agreement whereby two or more States establish or seek to establish a relationship under International Law between themselves. So long as it attests an agreement between States, any kind of instrument or document may be a treaty irrespective of the form with which the text is clothed' - **Starke : An Introduction to International Law, 4th Edn., p. 280**

உடன்படிக்கைகளின் வகைகள் (Kinds of Treaties)

உடன்படிக்கைகளை (அ) சட்டமியற்றும் உடன்படிக்கைகள் (Law making treaties) என்றும், (ஆ) வேறு நோக்கங்களுக்காக செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் (Treaties for any other purposes) என்றும் இரண்டு வகைகளாக அறிஞர் **ஓப்பன்ஹெய்ம்** பிரிக்கிறார்.

(அ) சட்டமியற்றும் உடன்படிக்கைகள் (Law making treaties) :

உள்நாட்டில் சட்டம் செய்ய சட்டமன்றம் இருக்கிறது. ஆனால் சட்டங்களை இயற்றித் தரும் சட்டமன்றம் போன்ற அமைப்பு சர்வதேச அரங்கில் இல்லை. எனவே சர்வதேச அரங்கில் இப்பணியை சட்டமியற்றும் உடன்படிக்கைகள் செய்கின்றன என்றால் அது மிகையல்ல. நாடுகள் தங்களின் நடத்தையையும் உறவு முறைகளையும் நெறிப்படுத்துவதற்காக பொதுவான விதிகளை (General Rules) உள்ளடக்கும் வகையில் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள், 'சட்டமியற்றும் உடன்படிக்கைகள்' எனப்படுகின்றன.

உடன்படிக்கைகள் குறித்து அறிஞர் **மெக் நாயர் (Mc Nair)**[1] என்பார் செய்த வகைப்பாடே, சிறந்த வகைப்பாடு எனக் கருதப்படுகிறது. அவர் உடன் படிக்கைகளை, (அ) நாடுகளிடையே போக்குவரவு சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகள் (Character of conveyances); (ஆ) நாடுகளிடையே இணக்க ஒப்பந்தத் தன்மையை உண்டாக்கும் உடன்படிக்கைகள் (Character of contracts); (இ) சட்டமியற்றும் உடன்படிக்கைகள் (Law making treaties) எனப் பகுக்கிறார். இவற்றில் இறுதியாகக் கூறப்பட்ட சட்டமியற்றும் உடன்படிக்கைகளை மேலும் அவர் மூன்று உட்பிரிவுகளாக பின்வருமாறு பிரிக்கிறார்.

(a) அரசமைப்புச் சட்டத்தை உண்டாக்கும் உடன்படிக்கைகள் (Treaties creating Constitutional Law). இதற்கு உதாரணமாக **சர்வதேச நீதிமன்ற சாசனச் சட்டத்தைக்** குறிப்பிடலாம்.

(b) சட்டமியற்றுவதை மட்டுமே நோக்கமாகக் கொண்ட உடன்படிக்கைகள் (Pure Law making treaties). இதற்கு உதாரணமாக **சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)** நடத்திய பல மாநாட்டு ஏற்பு விதிகளைக் கூறலாம்.

(c) அனைத்து நாட்டிலும் பதிவு செய்ய உகந்த உடன்படிக்கைகள். இதற்கு உதாரணமாக **அனைத்துலக அஞ்சல் ஒன்றியத்தை (Universal Postal Union, 1874)** உருவாக்கிய உடன்படிக்கையைக் கூறலாம்.

இந்த வகையில், 1921–ஆம் ஆண்டில் போரை ஒழிப்பதற்காக செய்து கொள்ளப்பட்ட **'பாரிஸ் உடன்படிக்கை' (Pact of Paris)** ஒரு சட்டமியற்று உடன்படிக்கையாகும்.

1. British Year Book of International Law (1930)

1945–ஆம் ஆண்டில் ஏற்பட்ட அய்க்கிய நாடுகள் சாசனம் (U.N. Charter) ஒரு சட்டமியற்றும் உடன்படிக்கையாகும். இது, அதன் உறுப்பு நாடுகளுக்கு சர்வதேச உறவினைப் பொறுத்த வரையில் இன்னமுறையில் ஒழுக வேண்டும் என்று கூறுகிறது.

1969–ஆம் ஆண்டு உடன்படிக்கைகள் பற்றிய சட்டத்தின் ஏற்பு விதிகளை உருவாக்க உலகின் 110 நாடுகள், வியன்னாவில் நடைபெற்ற மாநாட்டில் கலந்து கொண்டு உடன்படிக்கைகளில் ஈடுபடுவது குறித்து உடன்பட்டன. இதுவே ஒரு சட்டமியற்றும் உடன்படிக்கையாகும்.

(ஆ) வேறு நோக்கங்களுக்கான உடன்படிக்கைகள் (Treaties for any other purposes) :

சட்டமியற்றும் நோக்கமில்லாத பிற நோக்கங்களுக்காக செய்து கொள்ளப் படும் உடன்படிக்கைகள் "வேறு நோக்கங்களுக்கான உடன்படிக்கைகள்" எனப் படுகிறது. உதாரணமாக நிதி கடன் வாங்கும் ஒப்பந்தம், தொழில் நுட்ப ஒப்பந்தம், செயற்கைக் கோள் செலுத்தல் உடன்படிக்கை ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

அறிஞர் ஸ்டார்க் கூறும் உடன்படிக்கைகளின் வகைப்பாடு :

அறிஞர் ஸ்டார்கே என்பார், வேறு நோக்கங்களுக்கான உடன்படிக்கைகளை பின்வருமாறு வகைப்படுத்துகிறார். அவை,–

1. இரு நாடுகளின் தலைவர்களிடையே ஏற்படும் உடன்படிக்கைகள் (Treaties between Heads of two States).

2. இரு அரசாங்கங்களுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கைகள் (Treaties between Governments). இது பெரும்பாலும் தொழில் நுட்பம் மற்றும் அரசியல் அல்லாத நோக்கங்களுக்காக செய்து கொள்ளப்படுகின்றன.

3. அமைச்சர்களிடையே ஏற்படும் உடன்படிக்கைகள் (Treaties between Ministers). தொடர்புடைய நாடுகளின் அமைச்சர்களால் பேச்சு வார்த்தை செய்யப்பட்டு கையெழுத்திடப்படும் உடன்படிக்கைகள் இவ்வகையைச் சார்ந்தது.

4. நாடுகளுக்கிடையிலான உடன்படிக்கைகள் (Treaties between States).

5. அரசாங்கத்தின் குறிப்பிட்ட துறைகளுக்கிடையே ஏற்படும் உடன் படிக்கைகள். (Treaties between particular Governmental Departments).

இருநாட்டு மற்றும் பன்னாட்டு உடன்படிக்கை:

இரண்டு நாடுகள் மட்டும் செய்து கொள்ளும் உடன்படிக்கை, இரு நாட்டு உடன்படிக்கை எனப்படுகிறது. பல நாடுகள் சேர்ந்து செய்து கொள்ளும் உடன்

படிக்கை பன்னாட்டு உடன்படிக்கை எனப்படுகிறது. இரு நாட்டு உடன்படிக்கைகள் பெரும்பாலும், அவ்விரு நாடுகளுக்கிடையிலான நல்லுறவை வளர்ப்பதற்காகவும், தொழில் நுட்ப வளர்ச்சிக்காகவும் செய்து கொள்ளப்படுகிறது. இதில் அரசியலின் பூச்சு ஏதுமிருப்பதில்லை. ஆனால் பன்னாட்டு உடன்படிக்கைகள் பெரும்பாலும் அரசியல் காரணங்களுக்காக செய்து கொள்ளப்படுகின்றன. இத்தகு பன்னாட்டு உடன் படிக்கைகள், சர்வதேச மாநாடுகளின் முடிவில் செய்து கொள்ளப்படுகின்றன. இரு நாட்டு உடன்படிக்கைகள், அதில் சம்பந்தப்பட்ட இரண்டு நாடுகளை மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியதாகும். ஆனால் பன்னாட்டு உடன்படிக்கைகள், அவற்றில் கையொப்பம் செய்து, ஏற்புறுதி செய்து கொண்ட நாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தக் கூடியதாகும்.

உடன்படிக்கைகளின் வேறு பெயர்கள் :

நாடுகளுக்கிடையே ஏற்படும் உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களின் தன்மை, தகுதி, நோக்கம் இவையெல்லாம் பொதுவானதுதான் என்றாலும், சிற்சில வேறுபாடுகளுக்கேற்ப அவ்வுடன்படிக்கைகளின் பெயரும் மாறுபடுகிறது. அவை வருமாறு :

(1) மாநாடு மூலம் ஏற்கும் விதிகள் (Conventions):

சில சமயங்களில் உடன்படிக்கைள் 'ஏற்பு விதிகள்' எனப்படுகின்றன. பல நாடுகள் சேர்ந்து மாநாட்டின் வாயிலாக செய்து கொள்ளும் ஒரு பொது ஏற்பாட்டிற்கு இந்தப் பெயர் கொடுக்கப்படுகிறது.

(2) துணைஏற்பு விதிகள் (Protocols):

ஒரு மாநாட்டில் முதன்மையாக ஏற்படுத்தப்படும் ஏற்பு விதிகளுக்குத் துணை விதிகளாக அல்லது அவற்றிற்குத் தேவையான இணை விதிகளாக ஏற்படுத்தப்படும் விதிகளைத் **"துணை ஏற்பு விதி"** என அழைக்கிறோம். ஒரு உடன்படிக்கையே சில சமயங்களில் "புரோடோகால்" என அழைக்கப்படுவதுண்டு.

(3) உடன்பாடு (Agreement) :

உடன்பாடு என்பது நாட்டுத் தலைவர்களாலன்றி அவர்களுடைய சாதாரணப் பிரதிநிதிகளால் முடித்துக் கொள்ளப்படுவதாகும். சில சமயங்களில், இது ஏற்பாடு (Arrangement) எனவும் அழைக்கப்படுகிறது.

(4) பேச்சு வார்த்தைத் தொகுப்பு குறிப்பு (Process - Verbal) :

பலநாட்டு அரசியல் தூதுவர்கள் அடங்கிய கூட்டங்களில் எடுக்கப்படும் பேச்சுவார்த்தைக் குறிப்புகளின் தொகுப்புக்கு இந்தப் பெயர் கொடுக்கப்படுகிறது.

(5) அமைப்புச் சட்டங்கள் (Statutes) :

தற்போது உலகில் சர்வதேச அமைப்புகள் பல தோன்றிய வண்ணம்

உள்ளன. அவ்வமைப்புகளைத் தோற்றுவித்து அதன் அதிகாரங்கள் மற்றும் பணிகளை விவரிக்கும் அடிப்படைச் சட்டத்தை 'அமைப்புச் சட்டம்' என்கிறோம். இதற்கு உதாரணமாக 1945–ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்ட சர்வதேச நீதிமன்றத்தின் அமைப்புச் சட்டத்தைக் கூறலாம்.

(6) பிரகடனங்கள் (அல்லது) விழைவு அறிக்கைகள் (Declarations):

பல நாடுகள் கூடி தங்கள் எண்ணத்தையோ, கருத்தையோ அல்லது விழைவையோ அல்லது எதிர்காலத்தில் தாங்கள் நடந்து கொள்ளப்போகும் முறையையோ ஒழுங்குபடுத்தி ஒரு அறிக்கையாக மற்ற உலக நாடுகளுக்குத் வெளியிடலாம். இவ்வாறு உலக நாடுகளுக்கு தெரியப்படுத்துவதால், இதனை **'பிரகடனம்'** என்று கூறுகிறோம். மேலும் நாடுகள் தங்கள் விழைவினை ஒரு அறிக்கையாக உலக நாடுகளுக்கு அறிவிப்பதால் இதனை 'விழைவு அறிக்கை' என்றும் கூறுவதுண்டு. இதற்கு முதல் உதாரணமாக 1856–ஆம் ஆண்டில் செய்யப்பட்ட 'பாரிஸ் பிரகடனத்தையும்', 1948–ஆம் ஆண்டில் செய்யப்பட்ட மனித உரிமைகளின் மீதான அனைத்துலக பிரகடனத்தையும் (Universal Declaration on Human Rights) குறிப்பிடலாம். அண்மையில் செய்யப்பட்ட டெல்லி பிரகடனத்தையும் (Delhi Declaration) சுட்டிக் காட்டலாம்.

(7) முன்னோடிக் குறிப்பு (Modus Vivendi) :

உடன்படிக்கை செய்துகொள்வதற்கு முன் நாடுகள் தாங்கள் ஒத்துக் கொண்ட விஷயங்களைக் குறித்து தற்காலிமாக ஓர் ஏற்பாடு செய்து கொள்ளலாம். அது குறித்த ஒரு உடன்படிக்கை பின்னர் கையெழுத்தாகும் வரை, அந்த தற்காலிக ஏற்பாட்டே உடன்படிக்கையாக பாவிக்கப்படுகிறது. இந்த ஏற்பாடு **"முன்னோடிக் குறிப்பு"** எனப்படுகிறது.

(8) குறிப்புகளின் பரிமாற்றம் (Exchange of Notes) :

நாடுகளிடையே அவ்வப்போது நிருவாக வசதிக்காகவும், நல்லெண்ணத்திற் காகவும் ஏற்படுத்திக் கொள்ளும் கருத்துப் பரிமாற்றங்கள் **'குறிப்புகளின் பரிமாற்றம்'** எனப்படுகிறது.

(9) முடிவு சட்டம் (Final Act) :

ஏற்பு விதிகளைத் தோற்றுவிப்பதற்காக கூட்டப்படும் மாநாட்டின் நடவடிக்கைகளைப் பதிவு செய்து வைக்கும் ஆவணம், **'முடிவுச் சட்டம்'** எனப்படுகிறது.

60. State how a treaty is formed in international law. (நாட்டிடைச் சட்டத்தில் எவ்வாறு ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறது என்பதைக் கூறவும்.)

(அல்லது)

Explain the various steps in the formation of a treaty.

(உடன்படிக்கை உருவாக்கத்தின் முக்கிய கட்டங்களைக் குறிப்பிட்டு எழுதுக.)

(அல்லது)

Explain the different stages for concluding a treaty. (ஒரு உடன்படிக்கையை முடிக்கப் பெறுவதற்கான பல்வேறு கட்டங்களை விளக்குக.)

(அல்லது)

What are the steps to be taken for concluding a Treaty between two states? What is the effect of such treaties on third states? (இரண்டு நாடுகளுக்கிடையே ஒரு உடன்படிக்கையை உருவாக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை? அத்தகு உடன்படிக்கைகளின் மீது மூன்றாம் நாடுகளுக்கு உள்ள விளைவுகள் யாவை?)

முன்னுரை:

ஒரு உடன்படிக்கை முழுமை பெற பல்வேறு கட்டங்களை படிப்படியாகக் கடந்து வர வேண்டியுள்ளது. அவை பின்வருமாறு :

பல்வேறு கட்டங்கள்:

1. *பிரதிநிதிகளை நியமித்து அனுப்புதல்* (Accrediting of Representatives) : உடன்பாட்டுக்கு உண்டான தரப்பு நாடுகள் உடன்பாட்டுப் பொருள் பற்றிய பேச்சு வார்த்தைகள் நடத்தவும், ஒரு முடிவுக்கு வரவும் தம் நாட்டின் சார்பாகச் செயற்படுவதற்கு பிரதிநிதிகளை நியமித்து அனுப்புகிறது.

2. பேச்சு வார்த்தை நடத்தல் (Negotiation) : இக்கட்டத்தில் உடன்படிக்கைக்குண்டான பொருள் பற்றி பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்துகின்றனர்.

3. கையெழுத்திடல் (Signing) : உடன்படிக்கையில் எழுதப்பட வேண்டிய நிபந்தனைகள், வாசகங்கள் குறித்து பேச்சு வார்த்தையால் முடிவுக்கு வந்த பின் அவை உடன்படிக்கையாக எழுதப்படும். பேச்சு வார்த்தை செய்வதற்காக வந்து கலந்து கொண்ட பிரதிநிதிகள், இதில் கையொப்பமிடுவார்கள்.

4. *ஏற்புறுதி* (Ratification) : கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கை, சம்பந்தப்பட்ட தரப்பு நாடுகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டதற்கு உண்டான ஏற்பு விதியை வழங்க வேண்டும். அதன் பின்னரே அவ்வுடன்படிக்கை செயலுக்கு வரும். கையெழுத்திடப்பட்ட உடன்படிக்கைகளை தரப்பு நாடுகள் ஏற்புறுதி தந்து ஏற்றுத் தீர வேண்டும் என்பதில்லை. பிரதிநிதிகள் ஏமாற்றி உடன்படிக்கை செய்து கொள்ளல் போன்ற காரணங்களுக்காக, தரப்பு நாடுகள் ஏற்புறுதி தருவதை தவிர்க்கலாம்.

ஏற்புறுதி பெறாத உடன்படிக்கை செயலுக்கு வராது. அதுபோல் ஏற்புறுதி கொடுத்து, அதனை ஏற்றுக் கொள்ளாத நாடுகள், இவ்வுடன்படிக்கையை தங்களுக்கு ஆதரவாக பயன்படுத்திக் கொள்ள முடியாது.

5. ஏற்றல் அல்லது இணைத்தல் (Accession or Adhesion): சில நாடுகளிடையே செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கைகளுக்கு வேற்று நாடு ஏதேனும் தரப்பு நாடாக விரும்பினால், உடன்படிக்கைக்குரிய மூல நாடுகளின் ஒப்புதலோடு, அந்நாடும் ஒரு புதுத் தரப்பு நாடாகலாம்.

6. உடன்படிக்கை செயலுக்கு வரல் (Coming into force of treaty): உடன்படிக்கையில் ஏற்புறுதி வழங்காமலேயே அவ்வுடன்படிக்கை செயலுக்கு வரலாமென்று ஒப்பந்தம் இருக்குமானால் கையெழுத்து ஆனவுடனேயே செயலுக்கு வரும். இரு நாடுகளுக்கிடையேயான உடன்படிக்கை என்றால் அவ்விரு நாடுகளும் ஒன்றுக்கொன்று பரஸ்பரம் ஏற்புறுதி வழங்கியபின் அது செயலுக்கு வரும் அல்லது அவ்வுடன்படிக்கைக்குப் பல தரப்பு நாடுகள் இருக்குமானால் அவ்வுடன்படிக்கையில் கூறப்பட்டுள்ளபடி எத்தனை நாடுகள் ஏற்புறுதி வழங்க வேண்டுமோ அத்தனை நாடுகளும் ஏற்புறுதி வழங்கிய பின் அது செயலுக்கு வரும்.

7. பதிவு செய்தலும் வெளியிடலும் (Registration and Publication): மேற்கண்ட அனைத்து கட்டங்களையும் விட இக்கட்டம் மிகவும் முக்கிய மானதாகும். உடன்படிக்கைகளை பதிவு செய்து வெளியிட வேண்டும் என்பது தற்காலத்தில் தோன்றிய கருத்தாகும். நாடுகள் தங்களுக்குள் இரகசிய உடன்படிக்கைகள் செய்து கொள்வதை தவிர்க்கும் பொருட்டே இந்நிபந்தனை ஏற்படுத்தப்பட்டது. மேலும் துரதிர்ஷ்டவசமாக நிகழ்ந்த இரண்டு உலகப் போர்களுக்கு இரகசிய உடன்படிக்கைகளே காரணம் எனக் கருதப்பட்டது. இதனைக் களையும் பொருட்டே, அய்க்கிய நாடுகள் சாசனத்தில் 102–வது சரத்து அமைக்கப்பட்டது என்றால் அது மிகையன்று.

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 102–வது சரத்து (Article 102 of U.N.Charter) : அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 102–வது சரத்து, "அய்க்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளும் தங்களுக்குள்ளாக செய்து கொள்ளும் உடன்படிக்கைகளையும், எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அய்க்கிய நாடுகள் சபையின் செயலகத்தில் பதிவு செய்து கொண்டு வெளி உலகுக்கு வெளியிட வேண்டும்" என்று திட்டவட்டமாகக் கூறுகிறது.

உடன்படிக்கைகளை அய்க்கிய நாடுகள் சபையின் செயலகத்தில் பதிவு செய்யாததால் ஏற்படும் விளைவுகள்: அய்க்கிய நாடுகள் சபையின் செயலகத்தில் பதிவு செய்யப்படாத உடன்படிக்கைகளை அதன் தரப்பு நாடுகள் அய்க்கிய நாடுகள் சபையின் எந்த ஒரு அங்கத்தின் (Organ of U.N.O.) முன்பும் பயன்படுத்த முடியாது. மேலும், சர்வதேச நீதிமன்றத்தின் முன் அவ்வுடன்படிக்கையை ஒரு

ஆதாரமாக காண்பிக்க முடியாது. ஆனால் பதிவு செய்யாதது ஒன்று மட்டுமே அவ்வுடன்படிக்கையை செல்லாததாக்கிவிடாது.

8. பொருத்துதலும் செயலாக்கலும் (Application and Enforcement): இதுவே உடன்படிக்கையை உருவாக்கும் பணியில் இறுதிக் கட்டமாகும். உடன்படிக்கைகளைக் செய்து கொண்டால் மட்டும் போதாது. தரப்பு நாடுகள் அதைச் செயலுக்கு கொண்டு வருவதற்கு ஏதுவாக அதற்குரிய உள்நாட்டுச் சட்டத்தை இயற்றிக் கொள்ள வேண்டும் அல்லது ஏற்கனவே இருக்கும் சட்டங்களில் உரிய திருத்தங்களைக் கொண்டு வர வேண்டும்.

61. Critically examine the several principles of interpretation of treaties. (உடன்படிக்கைகளுக்கு பொருள் விளக்கம் தருவதற்கான பொதுக் கோட்பாடுகளை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Explain the principles of interpretation of treaties. (நாட்டிடை ஒப்பந்தங்களை பொருள் கொள்வதற்கான பொருள் விளக்கக் கொள்கைகளை விளக்கவும்.)

(அல்லது)

Summarise the general priniciples of treaty interpretation. (நாட்டிடை உடன்படிக்கைகளின் பொருளடக்கத்தை விளக்குவதற்குரிய கோட்பாடுகளைப் பற்றி சுருக்கிக் கூறுக.)

உடன்படிக்கைக்கு பொருள் விளக்கம் அளித்தலின் அவசியம்:

உடன்படிக்கை செய்து கொள்ளும் தரப்பு நாடுகள், அதன் சரத்துக்களை தவறாமல் கடைப்பிடித்தால் எவ்வித பிரச்சனையும் எழுவதில்லை. ஆனால் உடன் படிக்கையின் தரப்பு நாடுகள், அதன் சரத்துக்களை கடைப்பிடிக்காமல் தவறும் பொழுதோ அல்லது தங்களுக்குள் கருத்து வேறுபாடு கொள்ளும்பொழுதோ பிரச்சனைகளும், சிக்கலும் எழுகின்றன. அப்பொழுதெல்லாம் சர்வதேச நீதி மன்றத்தாலோ அல்லது அய்க்கிய நாடுகள் சபையின் அங்கங்களாலோ அல்லது அதற்கென நியமிக்கப்படும் சட்ட நிபுணர்களை உள்ளடக்கிய குழுக்களாலோ உடன்படிக்கைகளின் பொருளடக்கம் விளக்கப்பட வேண்டிய அவசியம் எழுகிறது. இதைத்தான் **'உடன்படிக்கைகளுக்கு பொருள் விளக்கம் அளித்தல்' (Interpreation of treaties)** என்கிறோம்.

பெரும்பாலான உடன்படிக்கைகளின் பின்னனிணைப்புகள் அவ்வுடன் படிக்கைகளுக்கு எவ்வாறு பொருள் விளக்கம் அளிக்க வேண்டும் என்பது பற்றி கூறுவதுண்டு. உடன்படிக்கைகள் பல்வேறு மொழிகள் இருக்குமானால் எம்மொழியில்

உள்ள உடன்படிக்கையை பொருள் விளக்கம் கொள்வதற்கு அடிப்படையாகக் கொள்ள வேண்டும் என்பது பற்றியும் அவ்வுடன்படிக்கையிலே கூறப்படுவதுண்டு. எனினும் உடன்படிக்கைகளுக்கு பொருள் விளக்கம் தருவதில் சில பொதுக் கோட்டுபாடுகள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. அவை வருமாறு :

(1) இலக்கணரீதியாக பொருள் விளக்கம் கொள்தல் (Grammatical Interpretation) :

இதன்படி உடன்படிக்கையில் வரும் சொற்களுக்கும் சொற்றொடர் களுக்கும் நேரிடையானதும், இயற்கையானதுமான பொருளையே கொள்ள வேண்டும். ஆனால் இவ்வாறு முற்றிலும் இலக்கணரீதியாகப் பொருள் கொள்வது சில வேளைகளில் விபரீதமான அல்லது உடன்படிக்கையின் மற்ற பகுதிகளிலிருந்து கண்கூடாக முரண்பட்டுள்ள பொருள்களைத் தருவதும் உண்டு. அப்பொழுதெல்லாம் தரப்பு நாடுகள் எதை மனதில் கருதி உடன்பாடு செய்து கொண்டனவோ அதன் அடிப்படையில் பொருள் விளக்கம் கொள்ளுதல் வேண்டும்.

(2) உடன்படிக்கையின் நோக்கமும் சூழ்நிலைகளும் :

உடன்படிக்கையை பொருள் விளக்கம் கொள்வதில், எவை குறித்தாவது அய்யம் ஏற்படுமானால் உடன்படிக்கை செய்து கொண்டதற்கான நோக்கம், அது செய்து கொள்ளப்பட்ட சூழல் ஆகியவற்றின் அடிப்படையில் பொருள் கொள்ளலாம்.

(3) நியாயமான காரண காரியங்களின் அடிப்படையில் பொருள் விளக்கம் கொள்தல் :

உடன்படிக்கைகளை விளக்கும்போது அதில் கண்டுள்ள சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் நியாயமான மற்றும் உரிய பொருளைக் கொள்வேதாடு, உடன்படிக்கைகளின் பல பகுதிகளுக்கும் ஒன்றோடொன்று முரண்பாடில்லாத பொருளையே கொள்ள வேண்டும். இதனடிப்படையில் நாட்டிடைச் சட்டத்திற்குப் பொருந்தும் வகையில் உடன்படிக்கையின் பொருள் விளக்கம் அமைய வேண்டும். உதாரணமாக, நாடுகள் தங்கள் இறைமையைக் கட்டுப்படுத்திக் கொள்வதாயின், அது குறித்து அவ்வுடன்படிக்கையிலேயே வெளிப்படையாக கூறப்பட்டிருக்கும். அவ்வாறு இல்லாதபோது நாடுகள் தங்கள் இறைமையைக் கட்டுப்படுத்த ஒப்புக் கொள்ளமாட்டா என்பதே உட்கிடையாக அமைந்த பொருளாகும். எனவே ஆவண வாசகத்தில் பொருள் மயக்கம் காணப்படும்போது, நாடுகளின் இறைமையை கட்டுப்படுத்தாத முறையிலும், அவற்றின் மீது கடினமான கடப்பாடுகளையோ, பொறுப்புகளையோ சுமத்தாத முறையிலும் பொருள் கொள்ள வேண்டும். மேலும் உடன்படிக்கையில் தனிப்பட்ட வாசகப் பகுதிகள் இருக்குமாயின், அவை பொதுவான வாசகப் பகுதியைக் கட்டுப்படுத்தும்.

(4) செயற்கூறு பொருள் விளக்கம் :

உடன்படிக்கைகள் சில செயல் வகைகளுக்காக செய்து கொள்ளப்படுவன

வாகும். எனவே உடன்படிக்கையின் எப்பகுதியேனும், அதன் நோக்கத்திற்கு முரண்பாடாக அர்த்தமற்ற பொருள் தருமானால், அதை ஒதுக்கிவிட்டு ஆக்கப்பூர்வமான முறையில் பொருள் விளக்கம் காண வேண்டும்.

(5) புறப் பொருளின் அடிப்படையில் பொருள் கொள்தல் :

பொதுவாக உடன்படிக்கை வாசகத்தின் அடிப்படையிலேயே பொருள் கொண்ட போதிலும், சில வேளைகளில் பொருள் விளக்கம் கொள்வதற்குக் கீழ்க் கண்ட புறப் பொருள்களையும் கருத்தில் கொள்ளலாம்.

(a) அவ்வுடன்படிக்கையின் தரப்பு நாடுகளுக்கிடையில் அல்லது அத்தரப்பு நாடுகள் மூன்றாம் நாடுகளுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கைகளைப் பொருத்து, அவற்றின் கடந்த கால வரலாறு, அதையொட்டி வரலாற்றில் காணும் வழக்காறு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொருள் விளக்கம் கொள்வது.

(b) அவ்வுடன்படிக்கை ஏற்படுவதற்கு முன்னர் துவக்க நிலையில் நடந்த விவாதங்கள் (Debats), திருத்த வரைவுகள் (Amended Drafts) ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு பொருள் விளக்கம் கொள்வது.

62. Enumerate the ways by which a treaty comes to an end.
(எந்த வகைகளில் ஒரு ஒப்பந்தம் முடிவுக்குக் கொண்டு வரப்படுகிறது என்பதை விளக்குக.)

(அல்லது)

State how treaties may be terminated by operation of law.
(சட்டச் செயல்களால் எவ்வாறு நாட்டிடை உடன்படிக்கைகள் முடிவுறுகின்றன?)

நாட்டிடை உடன்படிக்கைகள் முடிவுறுதல் :

நாட்டிடை உடன்படிக்கைகள் முடிவுறுதல் என்பது, அவை காலாவதி அடைதலைக் குறிக்கும். இந்த வகையில் ஒரு உடன்படிக்கையை பின்வரும் இரண்டு விதங்களில் முடிவுக்கு கொண்டு வரலாம். அவை, (1) சட்டத்தின் செயற்பாட்டின் மூலம் முடிவுக்குக் கொண்டு வருதல் (By operation of Law); (2) உடன்படிக்கையின் தரப்பு நாடுகளின் செயல்களின் மூலமாக முடிவுக்கு கொண்டு வருதல்.

(1) சட்டத்தின் மூலமாக முடிவுக்கு கொண்டு வரல் :

(a) உடன்படிக்கையின் தரப்பு நாடுகள் இரண்டாக இருந்து, அவற்றில் ஒரு தரப்பு நாடு, தனது நாட்டிற்குரிய தன்மையையும், உலக நபரத்துவத்தையும் (International Personality) இழந்து அழிந்து போதல் (Extinict). உதாரணமாக, அமெரிக்காவும், திரிபோலியும் (Tripoli) 1805–ஆம் ஆண்டில் உடன்படிக்கை ஒன்றில் ஈடுபட்டன. சில காலத்திற்குள் இத்தாலி திரிபோலியை வென்று தன்னுடன் இணைத்துக் கொண்டது. நாடே இல்லாதபோது உடன்படிக்கை எப்படி இருக்க முடியும்?

(b) உடன்படிக்கைக்குரிய தரப்பு நாடுகளுக்குள் போர் மூளுதல்.

(c) மனிதாபிமான நோக்கங்களுக்கன்றி, வேறு நோக்கங்களுக்காக செய்து கொள்ளப்பட்ட இரு நாட்டு உடன்படிக்கையில் ஏதேனும் ஒரு தரப்பு நாடு உடன்படிக்கையின் கோட்பாடுகளை மீறுமானால் அவ்வுடன்படிக்கை செயல் இழந்து முடிந்து போகும். **(வியன்னா மாநாட்டு ஏற்பு விதி 60).**

(d) அவ்வுடன்படிக்கையைச் செயற்படுத்துவதற்கு அடிப்படையான பொருள் நிரந்தரமாக மறைந்து அல்லது அழிந்து போவதன் மூலம் அவ்வுடன் படிக்கையை நிறைவேற்றுவதில் இயலாமை ஏற்படுமானால், அதன் காரணமாக அவ்வுடன்படிக்கை முடிவுக்கு வந்துவிடும். ஆனால் இங்குக் கூறப்பட்டுள்ள காரணம் தரப்பு நாட்டின் தவறான நடவடிக்கையினால் நிகழ்ந்திருக்கக்கூடாது. **(வியன்னா மாநாட்டு ஏற்பு விதி 61)**

(e) உடன்படிக்கை செய்து கொள்ளும்பொழுது அதனையொட்டி அதற்கு ஆதாரமாக நிலவிய சூழ்நிலைகள் எவ்வளவு காலம் தொடர்ந்து இருக்கின்றனவோ, அதுவரையில்தான் அந்த உடன்படிக்கைக்கு, கட்டுப்படுத்தும் செயலாற்றல் உள்ளது **(Conventio Omnis Intelligtur Rebus Sic Stantibus).** இக் கொள்கையின் மூலம் எதன் காரணமாக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப் படுகின்றனவோ, அவற்றில் அடிப்படையான மாறுதல் ஏற்படுமானால் அதனைக் காரணமாகக் கொண்டு, அவ்வுடன்படிக்கையை முடித்துக் கொள்ளலாம் எனும் கருத்து தெளிவாகிறது. இதனையொட்டி, உடன்படிக்கைகள் மூலம் ஏற்படக்கூடிய கடப்பாடுகள் அதற்குண்டான அவசியமான சூழ்நிலைகளில் எவ்வித மாற்றமும் ஏற்படாத வரையில்தான் செயலாற்றல் உடையவை என்றும் மற்றொரு கொள்கை விளக்கி வருகிறது **(Clausula Rebus Sic Statibus).** இந்த இரண்டாவது கொள்கையை 1966–ஆம் ஆண்டில் சர்வதேச சட்ட ஆணையம் நிராகரித்துவிட்டது. இப்பொருள் தற்போது வியன்னா மாநாட்டின் 62–வது ஏற்பு விதியால் எடுத்தாளப்படுகிறது. இவ்விதியின்படி மேற்கூறிய கொள்கை தற்போது ஒரு சில நிபந்தனைகளுக்குட்பட்டுதான் செயல்பட முடியும்.

(f) ஒரு குறிப்பிட்ட கால வரையறைக்குட்பட்டு செய்து கொள்ளப்படும் உடன்படிக்கை அந்த காலக்கட்டம் முடிந்ததும், செயலிழந்து விடும் (on expairy of the specified period).

(g) உடன்படிக்கை எந்நோக்கத்திற்காக ஏற்பட்டதோ, அந்நோக்கம் பூர்த்தியடைந்தவுடன், அவ்வுடன்படிக்கையும் முடிவுக்கு வருகிறது (Fulfilment).

(h) அய்க்கிய நாடுகள் சாசனத்தின் கொள்கைக்கு ஒத்துப் போகாமல், முரண்பட்டதாக (Incompatiable with U.N.Charter) இருக்கும் எவ்வுடன் படிக்கையும் முடிவுக்கு வந்துவிட்டதாக கருதப்படும்.

(2) தரப்பு நாடுகளின் செயல் அல்லது செயல்களின் மூலமாகச் செயலிழக்கச் செய்தல் :

(a) உடன்படிக்கையின் தரப்பு நாடு ஒன்றை அதிலிருந்து விலகிக் கொள்ள விரும்பினால், விருப்பமற்ற அந்நாடு மற்ற தரப்பு நாடுகளுக்குத் தெரிவித்துவிட்டு விலகிக் கொள்ளலாம். **(ஏற்பு விதி 54).**

(b) ஏதேனும் பொருள்பற்றி ஏற்கனவே உடன்படிக்கை இருந்து அதே பொருள் பற்றி அந்நாடுகளுக்கிடையே பொது உடன்படிக்கை ஏற்படுமானால் பழைய உடன்படிக்கை செயலிழந்ததாக, முடிந்து போனதாக கருதப்படும் **(ஏற்பு விதி 53).**

63. Jus Cogens - Write Short Notes. (ஜஸ் கோஜன்ஸ் – சிறு குறிப்பு எழுதுக.)

பொது நீதி விதி (Jus Cogens) - விளக்கம் :

நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை பொது நீதி விதிக்கு (Jus Cogens) மாறுபட்டும் முரண்பட்டும், ஒரு உடன்படிக்கை இருந்தால், அவ்வுடன்படிக்கை செல்லத்தக்கதல்ல. நாட்டிடைச் சட்டத்தின் முன் அவ்வுடன்படிக்கைக்கு எவ்வித வலிவும் கிடையாது. ஆனால் நாட்டிடைச் சட்டத்தில் அடிப்படை பொது நீதி விதிகளில், எவையெவை அடங்கும் என்பதில் சற்று குழப்பம் உள்ளது. அதாவது ஒரு விதி, உலக நாடுகளின் சமுதாயத்தால் ஏற்றுக் கொள்ளப்பட்டு, அங்கீகரிக்கப் பட்டிருக்க வேண்டும். அவ்விதியின் சட்டத் தன்மையை குறைத்து மதிப்பிடுவது அனுமதிக்கப்பட்டிருக்கக் கூடாது. அவ்விதியினை மாற்ற வேண்டுமெனில் நாட்டிடைச் சட்டத்தின் மற்றொரு விதியால்தான் மாற்ற வேண்டும். இப்படிப்பட்ட தகுதியினைக் கொண்டது, நாட்டிடைச் சட்டத்தின் அடிப்படை 'பொது நீதி விதி' எனப்படுகிறது.

வியன்னா ஏற்பு விதி (Vienna Convention) :

1969–ஆம் ஆண்டைய உடன்படிக்கைகள் பற்றிய வியன்னா ஏற்பு விதியானது, ஒரு உடன்படிக்கை தற்பொழுது அமுலில் இருக்கும்பொது நீதி விதிக்கு முரணானதாக அல்லது பின்னர் எழும் பொது நீதி விதிக்கு முரண்பட்டு இருக்குமானால், அந்த உடன்படிக்கை செல்லத்தக்கதல்ல எனக் கூறுகிறது.

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் சரத்துகள் :

எவையெவை பொது நீதி விதியில் அடங்கும் எனத் தெளிவாக கூறப்படா விட்டாலும், அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 2(3) மற்றும் 2 (4) ஆகிய சரத்துகளில் குறிப்பிடப்பட்டுள்ள கோட்பாடுகளும் (முறையே அமைதி வழியில் தகராறுகளைத் தீர்த்தலும், அமைதிக்கு பங்கம் விளைவிக்கா வகையில் நடந்து கொள்ளலும்)

மற்றும் கட்டுப்பட்டுக் கொண்ட முறையில் உடன்படிக்கைகளை நிறைவேற்றுதலும் (Pacta Sunt Servanda) பொது நீதி விதியின்பாற்படுமென அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

64. Pacta terties nec nocent nec prosunt - Write Short Notes. (ஒரு உடன்படிக்கை அதன் தரப்பினரை மட்டுமே கட்டுப்படுத்தும் – சிறு குறிப்பு எழுதுக.)

கோட்பாட்டின் விளக்கம் :

'Pacta terties nec nocent nec prosunt' எனும் இலத்தீன் முது மொழியானது, **ஒரு உடன்படிக்கை, அதில் கலந்து கொண்ட தரப்பு நாடுகளைத்தான் கட்டுப்படுத்தும்** என்று கூறுகிறது. அதாவது, உடன்படிக்கைகள், அதன் தரப்பு நாடுகளுக்குத்தான் உரிமைகளையும், கடமைகளையும் உண்டு செய்யும்; மூன்றாம் நாட்டிற்கு அதில் உரிமைகளும் கடமைகளும் கிடையாது என்பது இதன் உட்பொருள்.

இக்கோட்பாட்டிற்குள்ள விதிவிலக்குகள் :

மேற்படி கோட்பாட்டிற்கு சில விதிவிலக்குகள் உள்ளன. அவை வருமாறு:

1. துறைமுகங்கள், நீர்வழிகள், ஆள்நிலங்கள், நடுமை நாடுகள் ஆகிய இவைகளுக்கு ஒரு சர்வதேச தகுதி அளிப்பதற்காக மேற்கொள்ளப்படும் உடன்படிக்கைகள் அதில் கலந்து கொள்ளாத நாடுகளையும் கட்டுப்படுத்தும்.

2. பழக்க வழக்கத்தின் அடிப்படையில் வளர்ந்த ஒரு நாட்டிடைச் சட்ட விதியை எடுத்தியம்பும் முகமாக பல நாடுகளால் ஒரு உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டால், அவ்வுடன்படிக்கை அதில் கலந்து கொள்ளாத நாடுகளையும் கட்டுப்படுத்தும். நாட்டிடைச் சட்ட விதியானது, உலக நாடுகள் அனைத்தையும் கட்டுப்படுத்தும் என்பது அய்யமில்லா உண்மை.

3. நாட்டிடைச் சட்டத்தில் புது விதிகளை உண்டாக்குவதற்காக பல நாடுகள் சேர்ந்து செய்து கொள்ளும் உடன்படிக்கைகளும், அனைத்து நாடுகளையும் கட்டுப் படுத்தும். 1928–ஆம் ஆண்டின் பாரிஸ் ஒப்பந்தத்தை (Pact of Paris, 1928) இதற்கு உதாரணமாகக் கூறலாம்.

4. அனைத்துலகிற்கும் பொருந்தும் என்ற அறிக்கையுடன் செய்து கொள்ளப் படும் பல நாட்டு உடன்படிக்கைகளும் மற்றும் நாட்டிடை அமைப்புகளால் செய்து கொள்ளப்படும் ஏற்பு விதிகளும், அதில் கலந்து கொள்ளாத மற்ற நாடுகளையும் கட்டுப்படுத்தும். அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 2–வது ஷரத்தின் 6–வது தொகுதியில் இக்கருத்து கூறப்பட்டுள்ளது.

65. Rebus sic stantibus - Write Short Notes. (அடிப்படை சூழல் மாறல் – சிறு குறிப்பு எழுதுக.)

'Rebus sic stantibus' என்ற இலத்தீன் முதுமொழியின் பொருள் யாதெனில் **'அடிப்படைச் சூழ்நிலை மாறல்'** என்பதாகும். அஃதாவது, இரு நாடுகள் உடன்படிக்கை செய்து கொண்ட பொழுது இருந்த அடிப்படை சூழ்நிலைகளில் மாற்றங்கள் ஏற்பட்டதென்றால், அவ்வுடன்படிக்கை செல்லாததாகிவிடும். இதனை பின்வரும் ஒரு உதாரணம் தெளிவாக விளக்கும்.

இந்தியாவிற்குச் சொந்தமான ஒரு தீவு இந்தியாவிற்கும் மாலத்தீவிற்கும் இடையே இருப்பதாகக் கொள்வோம். அதில் ஒரு துறைமுகம் இருப்பதாகவும் கொள்வோம். அந்தக் துறைமுகத்தை நூறு ஆண்டுகளுக்கு இந்தியா, மாலத் தீவிற்கு குத்தகைக்கு விட்டிருப்பதாக வைத்துக் கொள்வோம். இந்நிலையில், அத்தீவிலுள்ள ஓர் எரிமலை வெடித்து அத்தீவு கடலில் மூழ்கிப் போனால் மேற் சொன்ன துறைமுகக் குத்தகை உடன்படிக்கை செல்லாததாகிவிடும்.

இந்த அடிப்படை சூழ்நிலை மாறல் கோட்பாடு குறித்து சட்ட நிபுணர்களின் கருத்துக்கள் முரண்பட்டுள்ளன. அதில் பல சூழப்பங்கள் இருப்பதாக அவர்கள் கருதுகின்றனர். இருந்தாலும், 1969–ஆம் ஆண்டின் உடன்படிக்கைகள் சட்டம் பற்றிய வியன்னா ஏற்புவிதியின் (The Vienna Convention on the Law of Treaties, 1969) 62–வது பிரிவில் அடிப்படைச் சூழ்நிலை மாறல் கோட்பாடு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதன்படி அடிப்படைச் சூழ்நிலை மாறல் கோட் பாட்டின் மூலமாக உடன்படிக்கைப் பிணைப்புகளிலிருந்து விடுவிப்பு பெற மூன்று தேர்வுகளை, சம்பந்தப்பட்ட நாடு பூர்த்தி செய்திருக்க வேண்டும். அவை வருமாறு:

1. அகவுணர்வு நிலைக்குரிய தேர்வு (Subjective Test) :

இத்தேர்வில் எழும் கேள்வி யாதெனில், உடன்படிக்கையை அமலாக்க இறங்கும் போது, சம்பந்தப்பட்ட நாடுகள் அப்போது உள்ள அடிப்படைச் சூழ்நிலை, அவ்வாறே தொடர்ந்து இருக்குமென்று எண்ணங்கொண்டு உடன்படிக்கையை மேற்கொள்ள முனைந்தனவா?

2. புறப்பொருள் மெய்மை தேர்வு (Objective Test) :

இத்தேர்வில் எழும் கேள்வி யாதெனில், அடிப்படை சூழ்நிலை மாற்ற மானது, சம்பந்தப்பட்ட நாடுகளுடைய பிணைப்புகளை அடிப்படையிலேயே மாற்றம் செய்து விட்டதா?

3. ஊறு தேர்வு (Injury Test) :

இத்தேர்வில் எழும் கேள்வி யாதெனில், அடிப்படை சூழ்நிலை மாறிய பிறகு உடன்படிக்கையின் சட்டப் பிணைப்புகளை தொடர்ந்து நிறைவேற்றுவதால், ஒரு தரப்பு நாட்டினருக்கு ஈடு செய்ய முடியாத ஊறு ஏற்படுமா?

மேற்கண்ட மூன்று கேள்விகளுக்கும் பதில் 'ஆம்' என்றிருப்பின் அடிப்படைச் சூழ்நிலை மாறல் கோட்பாட்டின் மூலமாக சம்பந்தப்பட்ட நாடு உடன்படிக்கையிலிருந்து விடுவிப்பு பெறலாம்.

உடன்படிக்கையிலுள்ள சட்டப் பிணைப்பினை, அந்தக் குறிப்பிட்ட நாடு அறிக்கை ஒன்றினைக் கொடுப்பதன் மூலமாக துண்டித்துக் கொள்ள முடியாது. உடன்படிக்கையின் மற்றைய நாடுகளின் சம்மதத்தில் பேரிலோ அல்லது அதன் தரப்பு நாடுகளின் சம்மதத்தின் பேரிலோ அல்லது உடன்படிக்கையில் கண்டுள்ளபடி நீதித்தீர்ப்பின் மூலமாகவோதான் அவ்வாறு விடுவிப்பு பெற முடியும்.

எனினும், இந்த அடிப்படைச் சூழ்நிலை மாறல் கோட்பாடு பின்வரும் உடன்படிக்கைகளுக்குப் பொருந்தாது. (1) உடன்படிக்கை இரு நாடுகளுக்கிடையே எல்லையை வரையறுக்குமானால், அடிப்படைச் சூழ்நிலை மாறல் கோட்பாட்டின் மூலமாகச் சட்டப் பிணைப்பிலிருந்து ஒரு நாடு வெளியேற முடியாது; (2) அடிப்படைச் சூழ்நிலை மாறலானது ஒரு நாட்டின் செய்கை அல்லது நடத்தை மூலமாகத் தோன்றினால், அந்த நாடு சட்டப் பிணைப்பிலிருந்து, மேற்படி கோட்பாட்டின் மூலமாக விடுவிப்பு பெற முடியாது.

66. Pacta sunt servanda - Write Short Notes. (ஒப்பந்தங்களை நல்லெண்ணத்துடன் நிறைவேற்ற வேண்டும் – சிறு குறிப்பு எழுதுக.)

விளக்கம்:

'Pacta sunt servanda' எனும் கோட்பாடு உரோமானியச் சட்டத்திலிருந்து பெறப்பட்டதாகும். நாட்டிடைச் சட்டத்தில் உடன்படிக்கைகளைப் பொறுத்தவரை இது ஒரு முக்கியமான கோட்பாடாகக் கருதப்படுகிறது. இக்கோட்பாட்டின் பொருள் யாதெனில், உடன்படிக்கையின் சரத்துக்களை, அதன் தரப்பு நாடுகள் நல்லெண்ணத்துடன் கடைபிடித்தே தீர வேண்டும் (the parties ot a treaty are bound to observe its terms in good faith) என்பதாகும். சுருங்கக்கூறின் உடன்பட்ட மாதிரி செயல்பட வேண்டும்; உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டு நடக்க வேண்டும்.

அறிஞர்களின் கருத்துக்கள் :

உடன்படிக்கைகளுக்கும், ஒப்பந்தங்களுக்கும் அதன் தரப்பு நாடுகள் கட்டுப்பாடு நடந்து கொள்வது, ஒரு சர்வதேச ஒழுங்கு முறையை ஏற்படுத்தும் என அறிஞர் **Cordell Hull** கூறுகிறார். ஒரு நாடு கொடுத்த வாக்கை மற்ற நாடுகள் நம்பவில்லையென்றால் சர்வதேச சமுதாயமே அழிவதோடு மட்டுமல்லாமல், நாட்டிடைச் சட்டமும் காணாது போகும் என்று அறிஞர் **Fenwick** கூறுகின்றார்.

உடன்படிக்கைக்கும் உள்நாட்டுச் சட்டத்திற்கும் முரண்பாடு :

ஒரு நாடு உடன்படிக்கையின் வாயிலாக மற்றொரு நாட்டுடன் உடன் பட்டுக் கொண்டால், அவ்வுடன்படிக்கையின் சரத்துக்களை இரு நாடுகளும்

கடைபிடித்து நிறைவேற்றியே தீர வேண்டும் என்று விதி கூறுகிறது. எனவே இதன்படி, உடன்படிக்கையின் தரப்பு நாடுகளில் ஒன்று, தனது உள்நாட்டு சட்டத்தை (Municipal Law) ஆதாரமாகக் காண்பித்து, உடன்படிக்கையின் சரத்துக்களை நிறைவேற்றுவதிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. உடன்படிக்கையின் சரத்துக்களே அங்கு மேலோங்கி நிற்கும்; அதற்கே வலிமை அதிகம் என சர்வதேச நீதிமன்றம் பல வழக்குகளில் அறிவுறுத்தி உள்ளது.

மேற்படி கோட்பாட்டிற்கு விதிவிலக்கு :

உடன்படிக்கையின் சரத்துக்களுக்கு கட்டுப்பட்டு நட, என்று மேற்படி கோட்பாடு ஆணையிடுகிறது. ஆனால், அதற்கு விதிவிலக்காக, உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்ட காலத்தில் இருந்த அடிப்படை சூழ்நிலையில் தற்பொழுது மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டால், அவ்வுடன்படிக்கை செல்லாது மற்றும் அதன் சரத்துக்களைப் பின்பற்றத் தேவையில்லை என்று நாம் முன்னதாக கண்ட 'Rebus sic stantibus' எனும் கோட்பாடு கூறுகிறது.

-o0o-

முக்கிய கவனத்திற்கு:

'உடன்படிக்கைகள்' எனும் இந்த அத்தியாயத்திலிருந்து மட்டும் தேர்வு வினாத்தாளில் **(a)** மற்றும் **(b)** எனும் இரண்டு வினாக்கள் ஒன்றாக ஒரே வினா எண்ணின் கீழ் கேட்கப்படுகின்றன. அதுபோல் இரண்டு வினாக்கள் ஒரே வினா எண்ணின் கீழ் சேர்த்தும் கேட்கப்படுகின்றன. அவ்வாறு கேட்கப்பட்ட வினாக்கள் இங்கு பின்வருமாறு ஒரு பார்வைக்காக கொடுக்கப்பட்டுள்ளன. எனவே அவற்றை கவனித்துக் கொள்ளவும். அதற்கான விடைகளை நாம் இந்த அத்தியாயத்தில் இதுகாறும் கண்ட விளக்கங்களிலிருந்து படித்தறிந்து கொள்ளவும்.

(a) Write a brief note on the Law making treaties ('சட்டம் இயற்றும் உடன்படிக்கை' பற்றி ஒரு சுருக்கமான சிறு குறிப்பு வரைக.)

(b) What are the consequences of non - registration of a treaty with the Secretariat of the United Nations Organisation? (ஐக்கிய நாடுகள் சபையின் செயலகத்துடன் ஓர் உடன்படிக்கை பதிவு செய்யப்படாவிட்டால் ஏற்படும் விளைவுகள் யாவை?)

(அல்லது)

(a) State how a treaty is formed in international law. (பன்னாட்டு சட்டத்தில் எவ்வாறு ஒரு ஒப்பந்தம் உருவாக்கப்படுகிறது என்பதைக் கூறவும்.)

(b) Summarise the general principles of treaty interpre-

tation. (நாட்டிடை உடன்படிக்கைகளின் பொருளடக்கத்தை விளக்குவதற்குரிய கோட்பாடுகளைப் பற்றி சுருக்கிக் கூறுக.)

(அல்லது)

(a) Summarise the general principles of treaty interpretation. What is the effect of non-registration of a treaty with the Secretariat of the United Nations? (நாட்டிடை உடன்படிக்கைகளின் பொருளடக்கத்தை விளக்குவதற்குரிய கோட்பாடுகள் யாவை? ஐக்கிய நாடுகள் சபையின் செயலகத்துடன் ஒரு நாட்டிடை ஒப்பந்தம் பதிவு செய்யப் படாமையினால் ஏற்படும் விளைவுகள் யாவை?)

(b) What are the modes of termination of treaty? (ஒரு உடன்படிக்கை முடிவு பெறுவதற்குண்டான பல்வேறு வழிமுறைகள் யாவை?)

(அல்லது)

(a) How is a treaty formed? (ஒரு உடன்படிக்கை எவ்வாறு ஏற்படுத்தப்படுகிறது?)

(b) How is a treaty determined? (ஒரு உடன்படிக்கை எவ்வாறு முடிக்கப்படுகிறது?)

(அல்லது)

Explain the different kinds of International treaties and point out the general principles of treaty interpretations. (நாட்டிடை உடன்படிக்கையின் பல்வேறு வகைகளை விளக்கி நாட்டிடை உடன்படிக்கைகளின் பொருள் விளக்கம் காண்பதற்கான பொதுக் கோட்பாடுகளை குறிப்பிடுக.)

(அல்லது)

Describe the different kinds of treaties and rules of International law concerning their formation, termination and interpretation. (உடன்படிக்கைகளின் பல்வேறு வகைகளை விளக்கி, அவற்றை உருவாக்கல், முடித்தல் மற்றும் பொருள் விளக்கமளித்தல் குறித்த நாட்டிடைச் சட்ட விதிகளை விவரிக்க.)

(அல்லது)

Give an account of the interpretation of Treaties and explain the circumstances in which treaties could be terminated. (உடன்படிக்கைகளின் பொருள் விளக்கத்தை சார்ந்த விதிகளை விளக்குக. எந்த சூழ்நிலையில் உடன்படிக்கைகளை ரத்து செய்ய முடியும் என்பதை பற்றியும் விளக்குக.)

சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் [International Criminal Court]

67. International Criminal Court - Write short notes. (சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் – சிறு குறிப்பு எழுதுக.)

போர்க்கால குற்றங்கள், மனித இனத்தை பூண்டோடு அழித்தல், இனப் படுகொலை, பாலியியல் அடிமைத்தனம், போரில் ஈடுபடாதவர்கள், பெண்கள் மற்றும் குழந்தைகளின் உடல் உறுப்புகளை துண்டித்து முடமாக்குதல் போன்ற சர்வதேச குற்றங்களை விசாரித்து குற்றவாளிகளை தண்டிக்க ஒரு 'நிலையான சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்' தேவை எனும் கருத்து உலக நாடுகளின் மனதில் எழுந்த வண்ணம் இருந்தது. இத்தேவையை 1948–ஆம் ஆண்டில் அய்க்கிய நாடுகளின் பொதுச் சபை முதலில் அங்கீகரித்தது. இது, தொடர்ந்து ஏற்பட்ட பல்வேறு மாநாடுகள், உடன்படிக்கைகள், ஏற்புவிதிகள் ஆகியவற்றின் வாயிலாக வலுப்பெற்றது.

இறுதியாக 1998–ஆம் ஆண்டு உரோம் நகரில், அய்க்கிய நாடுகளின் 120 உறுப்பு நாடுகள் உலக வரலாற்றில் முதல்முறையாக ஒரு நிலையான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை நிறுவவதற்கான உடன்படிக்கையில் கையொப்பம் செய்தன. (இன்று இவ்வாறு கையொப்பம் செய்துள்ள நாடுகளின் எண்ணிக்கை 139 ஆக உயர்ந்துள்ளது.) இதன் விளைவாக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தை உருவாக்கும் பொருட்டு, **உரோம் மாநாட்டின் இறுதிச் சட்டத்தின் (Final Act of the Rome Conference)** தீர்மானம் வாயிலாக **'ஆயத்த ஆணையம்' (Preparatory Commission)** ஒன்று 1998–ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இதனிடம் சர்வதேச நீதிமன்றத்தை நிறுவுதல் மற்றும் அதனை திறம்பட இயங்க வைத்தல் குறித்து முடிக்கப்பட வேண்டிய பல்வேறு பணிகள் ஒப்படைக்கப்பட்டன. இப்பணியை மேற்படி ஆணையம் 2002–ஆம் ஆண்டில் முடித்தது. தனது அறிக்கையை உரோம் சட்டத்தின் தரப்பு நாடுகளின் அமைப்பிடம் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையின் அடிப்படையில்

மேற்கண்ட உரோம் மாநாட்டு உடன்படிக்கையை மேலும் 60 நாடுகள் ஏற்புறுதி (ratification) மூலம் ஏற்றுக் கொண்ட 60 தினங்கள் கழித்து, அது 2002–ஆம் ஆண்டு சூலை மாதம் முதல் தேதி முதல் அமலுக்கு வந்தது. (இன்று இவ்வாறு ஏற்புறுதி செய்துள்ள நாடுகளின் எண்ணிக்கை தற்பொழுது 89–ஆக உயர்ந்துள்ளது). இதன் தொடர்ச்சியாக **'சர்வதேச குற்றவியல் நீதிமன்றம்' ஒன்று அய்க்கிய நாடுகள் சபையால் 2002–ஆம் ஆண்டு, சூலை மாதம் முதல் தேதியில்** நிறுவப்பட்டது.

இதன் அதிகாரவரம்பிற்கு உட்பட்டவர்கள் மேற்கண்ட சர்வதேச குற்றங்களைப் புரியும் தனிநபர்களே; நாடுகள் அல்ல. அத்தனிநபர், ஒரு நாட்டின் தலைவராக இருந்தாலும், இந்நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்குட்பட்டவரே. இந் நீதிமன்றம் நிறுவப்பட்ட மேற்கண்ட தேதிக்குப் பின்னிட்டு (அதாவது 01–07–2002–க்குப் பின்னர்) நிகழும் குற்றங்களை மட்டுமே சர்வதேச நீதிமன்றம் தனது விசாரணைக்கு எடுத்துக் கொள்ளும். அதற்கு முன்னதாக நிகழ்ந்த குற்றங்களை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைக்கு கொண்டுவர முடியாது.

இந்நீதிமன்றம் நெதர்லாந்தில் உள்ள "ஹேக்" எனும் இடத்தில் அமைக்கப் பட்டுள்ளது. 30000 சதுர மீட்டர் பரப்பளவில், இந்நீதிமன்றத்திற்கான புதிய கட்டிடம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. அப்பணி 2007–ஆம் ஆண்டில் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நீதிமன்றத்திற்கு கடந்த 21–04–2003–ஆம் தேதியில் அர்ஜென்டைனா நாட்டைச் சார்ந்த, **லூயிஸ் மொரினோ ஓகாம்போ (Luis Moreno Ocampo)** என்பவர் முதல் குற்றத்துறை தலைமை வழக்குரைஞராக (Chief Prosecutor) நியமனம் செய்யப்பட்டார். அதுபோல் இதற்கு 18 நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

'ஒரு நிலையான சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கான நீண்ட நாளைய கனவு விரைவில் நனவாகிவருகிறது' என அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் **கோஃபி அன்னன்** அவர்கள் பெருமைபடக் கூறினார். அவர், 'குற்றவாளிகளை தண்டிப்பதன் மூலம், சர்வதேச குற்றவியல் நீதிமன்றம், எஞ்சி வாழும் பாதிக்கப்பட்டவர் களுக்கும், சமுதயாங்களுக்கும் சில வசதிகளை கொண்டு சேர்க்கும் என நாங்கள் நம்புகிறோம். மிக முக்கியமாக இது எதிர்கால போர்க்கால குற்றவாளிகளை அச்சுறுத்தும் என்றும், ஆட்சியாளர் எவரும், நாடு எதுவும், நிருவாகத்துறை எதுவும், படை எதுவும் எங்கும் மனித உரிமைகளை துஷ்பிரயோகம் செய்ய இயலாத நாளை விரைவில் கொண்டு வரும் என்றும் நாங்கள் நம்புகிறோம் என்றும்"[1] கூறுகிறார்.

---

1. "The long-held dream of a permanent International Criminal Court is nearing reality," United Nations Secretary-General Kofi Annan said recently. "Our hope is that, by punishing the guilty, the ICC will bring some comfort to the surviving victims and to the communities that have been targeted. More important, we hope it will deter future war criminals, and bring nearer the day when no ruler, no State, no junta and no army anywhere will be able to abuse human rights with impunity." - **Kofi Annan.**

24

அய்க்கிய நாடுகள் சபை
[United Nations Organisation]

68. Discuss the powers and functions of the General Assembly of United Nations and assess its role in the maintenance of world peace. (ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் அதிகாரங்கள் மற்றும் அலுவல்களை விவாதிக்கவும். உலக அமைதியை நிலைநாட்டுவதில் அதன் பங்கை மதிப்பிடவும்.)

முன்னுரை :

நமது உலக அரசியல் வரலாற்றில் மிகவும் துரதிர்ஷ்டவசமான காலகட்டம் எது என்று கூறினால், அது 1914–ஆம் ஆண்டில் முதல் உலகப் போர் நடந்த கால கட்டமும், 1939–ஆம் ஆண்டில் இரண்டாம் உலகப் போர் நடந்த கால கட்டமும் என்றுதான் கூற வேண்டும். அவ்விரு போர்களும், சர்வதேச அரசியலிலும், உறவுகளிலும் வன்முறைக்கு கட்டியங் கூறிய உலகளாவிய விபத்தாக அமைந்தன. மனித இனமே பெரும் அச்சத்திற்கு உள்ளானது.

1914–ஆம் ஆண்டின் முதல் உலகப் போரின் கொடும் விளைவுகளின் காரணமாக, உலக அமைதி காக்கும் நோக்கத்திற்காக சர்வதேச அளவிலான ஒரு அமைப்பினை உருவாக்குதல் அவசியம் என்பதை பல நாடுகளின் தலைவர்களும் உணர்ந்தனர். இதன் விளைவாகப் பிறந்ததுதான் **'சர்வதேச சங்கம்' (League of Nations).**

இச்சங்கம் சில காலம் சிறப்பாக செயல்பட்டது. எனினும் நாடுகளுக்கிடையிலான உறவுகளைப் பலப்படுத்த, இச்சங்கம் எடுத்த பல முயற்சிகள் தோல்வியில் முடிந்தன. எனவே, உலகம், 1939–ஆம் ஆண்டில் மிகக் கொடுமையான இரண்டாம் உலகப் போரை சந்தித்தது. இதனால் இச்சங்கம் தொடர்ந்து நிலைபெற முடியவில்லை.

எனினும் இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, மீண்டும் உலக அமைதி காக்கும் முயற்சியாக பல நாடுகளின் ஒப்புதலுடன் 1945–ஆம் ஆண்டு அக்டோபர் 24–ஆம் நாள், அய்க்கிய நாடுகள் சபை (United Nations Organisation) உதயமானது. அக்கிய நாடுகள் சாசனமும் (United Nations Charter) வடிவமைக்கப்பட்டு, செயலுக்கு வந்தது.

அய்க்கிய நாடுகள் சபையின் நோக்கங்கள் (The Purposes of United Nations Organisation):

அய்க்கிய நாடுகள் சபையை நிருமாணித்த அய்க்கிய நாடுகள் சாசனத்தின் முதல் சரத்தில், அதன் நோக்கங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. அவை (1) சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பராமரிப்பது; (2) அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் செயல்களைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது; (3) நீதி மற்றும் நாட்டைச் சட்ட அடிப்படையில் நாடுகளுக்கிடையிலான பிணக்குகளைத் தீர்ப்பது; (4) நாடுகளுக்கிடையிலான நட்புறவை வளர்ப்பது; (5) சர்வதேச அளவிலான பொருளாதார, சமுதாய, கலாச்சார, மனிதாபிமானப் பிரச்சனைகளைத் தீர்ப்பதில் சர்வதேச ஒத்துழைப்பை உருவாக்குவது; (6) மேற்கண்ட நோக்கங்களில் நாடுகளின் செயற்பாட்டை இணக்கப்படுத்தும் ஒரு மையமாகச் செயற்படுவது.

அய்க்கிய நாடுகள் சபையின் கொள்கைகள் (The Principles of United Nations Organisation):

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் இரண்டாம் சரத்து, அய்க்கிய நாடுகளின் கொள்கைகளைக் குறிப்பிடுகிறது. அவை வருமாறு. (1) அனைத்து உறுப்பு நாடுகளும் இறைமை பெற்ற சமமான நாடுகள்; (2) உறுப்பு நாடுகள் மேற்படி சாசனத்தில் குறிப்பிட்டுள்ளபடி தமது கடப்பாடுகளை நிறைவேற்றுதல் வேண்டும்; (3) அனைத்து உறுப்பு நாடுகளும் தங்களுக்கிடையிலான பிரச்சனைகளை அமைதியான வழிமுறைகளில் தீர்த்துக் கொள்ளுதல் வேண்டும்; (4) அனைத்து உறுப்பு நாடுகளும் சர்வதேச உறவுகளில் வன்முறையைப் பயன்படுத்துவதைத் தவிர்ப்பதுடன் எவ்விதத்திலும் அய்க்கிய நாடுகள் சபையின் நோக்கங்களுக்கு எதிரான செயல் எதனையும் தவிர்த்தல் வேண்டும்; (5) மேற்படி சாசனத்தின் அடிப்படையில் அய்க்கிய நாடுகள் சபை மேற்கொள்ளும் அனைத்து செயல்கட்கும் அனைத்து உறுப்பு நாடுகளும் உதவிகள் செய்தல் வேண்டும். அதே போன்று அய்க்கிய நாடுகள் சபை எந்த நாட்டிற்கும் எதிராகத் தடை நடவடிக்கைகளை மேற்கொண்டால், அந்நாட்டிற்கு உறுப்பு நாடுகள் உதவி செய்யா; (6) இச்சபையில் சேராத நாடுகளும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பினைப் பராமரிக்க மேற்கூறப்பட்டுள்ள கொள்கைகளைக் கடைப்பிடிக்கும் வண்ணம் இச்சபை செயற்படும்; (7) எக்காரணம் கொண்டும் இச்சபை ஒரு நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுதல் கூடாது.

அய்க்கிய நாடுகள் சபையின் அங்கங்கள் (The Organs of United Nations Organisation):

அய்க்கிய நாடுகள் சபையானது, பின்வரும் ஆறு முக்கிய அங்கங்களை உள்ளடக்கியது. அவை, (1) பொதுச் சபை (இதனை பொதுப் பேரவை என்றும் அழைப்பர்) (General Assembly); (2) பாதுகாப்புச் சபை (Security Council); (3) பொருளாதார சமூகக் குழு (Economic and Social Council); (4) பொறுப்பாண்மைக் குழு (Trusteeship Council); (5) சர்வதேச நீதிமன்றம் (International Court of Justice); (6) செயலகம் (The Secretariat). இவற்றில் மிக முக்கியமானதும், முதன்மையானதுமான பொதுச் சபையின் அமைப்பு, அதிகாரங்கள் மற்றும் அலுவல்களை பின்வருமாறு காணலாம்.

அய்க்கிய நாடுகள் சபையின் ஆறு முக்கிய அங்கங்கள்:



பொதுச் சபையின் அமைப்பு (Composition of General Assembly) :





பொதுச் சபை அரங்கைக் காட்டும் படங்கள்
[Photos showing the two views of Chamber of the General Assembly]

1945–ஆம் ஆண்டில் 51 நாடுகளை உறுப்பினர்களாக கொண்டு ஆரம்பிக்கப்பட்ட அய்க்கிய நாடுகள் சபையில், இன்று 191 நாடுகள் உறுப்பினர்களாக உள்ளன. இந்த உறுப்பு நாடுகள் அனைத்தும், பொதுச் சபையிலும் இடம் பெறுகின்றன. இது அய்க்கிய நாடுகள் சபையின் சட்டமன்றம் (Legistative body) போன்று அமைந்துள்ளது. ஒவ்வொரு உறுப்பு நாடும் இதற்கு அய்ந்து பிரதிநிதிகளை அனுப்பலாம். ஆனால் ஒவ்வொரு நாட்டிற்கும் ஒரு வாக்குதான் (vote) உண்டு. அய்க்கிய நாடுகள் சாசனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயங்களில் எதனைப் பற்றி வேண்டுமானாலும் பொதுச் சபை விவாதிக்கலாம். தனது பரிந்துரைகளை உறுப்பு நாடுகட்கோ அல்லது பாதுகாப்புச் சபைக்கோ அனுப்பலாம்.

வாக்களிக்கும் நடைமுறை (Voting Procedure):

பொதுச் சபையின் ஒவ்வொரு உறுப்பு நாட்டுக்கும் ஒரு வாக்குதான் (Vote) உண்டு. பொதுச் சபையின் தீர்மானத்திற்காக வரும் விஷயங்களை (1) முக்கியப் பிரச்சனைகள்; (2) நடைமுறை குறித்த ஏனைய பிரச்சனைகள் என்று இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரித்தல், பாதுகாப்புச் சபைக்கு நிரந்தரமில்லாத உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், பொருளாதார மற்றும் சமூகக் குழுவிற்கும், பொறுப்பாண்மைக் குழுவிற்கும் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தல், அய்க்கிய நாடுகளில் புதிய உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ளல், உறுப்பினருக்கான உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை நிறுத்தி வைத்தல், உறுப்பினர்களை வெளியேற்றல், பொறுப்பாண்மை முறை (Trusteeship system) செயற்படும் விதம் குறித்த பிரச்சனைகள், வரவு–செலவு பிரச்சனைகள் ஆகியன முக்கியப் பிரச்சனைகளாகப் கருதப்படும்.

முக்கிய பிரச்சனைகள் பற்றிய தீர்மானங்கள் பொதுச் சபையில் வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பு நாடுகளின் மூன்றில் இரண்டு பங்கினரின் வாக்குகளைப் பெற்று பெரும்பான்மை பெற்றால்தான், நிறைவேறியதாகக் கருதப்படும்.

பொதுச் சபையில் நடைமுறை குறித்த பிரச்சனைகள், முக்கியமற்ற பிரச்சனைகளாகக் கருதப்படும். இப்பிரச்சனைகள் பற்றிய தீர்மானங்கள், பொதுச் சபைக்கு வந்திருந்து வாக்களிப்போரில் பெரும்பாலோரின் வாக்குகளைப் பெற்றாலே நிறைவேறியதாகக் கருதப்படும்.

பொதுச் சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் (Functions and Powers of General Assembly) :

பேராசிரியர் லியோனார்டு என்பவர் பொதுச் சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்களை பின்வரும் அய்ந்து தலைப்புகளின் கீழ் வகைப்படுத்துகிறார். அவை,

(1) கலந்தாய்வுப் பணிகள் (Deliberative Functions):

சர்வதேச பிரச்சனைகளை கலந்து பேசுதல், ஆய்வு செய்தல், பரிந்துரைத்தல், தீர்மானம் நிறைவேற்றுதல் ஆகியன பொதுச் சபையின் கலந்தாய்வுப் பணிகளில் அடங்கும்.

(அ) முக்கியமாக அய்க்கிய நாடுகள் சாசனத்தின் எல்லைக்குட்பட்ட எப்பிரச்சனையையும் அல்லது விஷயத்தையும் பொதுச் சபை, உறுப்பு நாடுகளுடன் கலந்து பேசுகிறது. அதுபோல் அய்க்கிய நாடுகள் சாசனத்தின் மூலம் அமைக்கப் பட்டுள்ள அய்க்கிய நாடுகள் சபையின் அங்கங்கள் எதன் அதிகாரங்களையும் பணிகளையும் விவாதிக்கிறது **(சரத்து 10).**

(ஆ) மேலும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதில் கூட்டுறைவை ஏற்படுத்தும் பொதுக் கொள்கைகளையும், படைக் குறைப்பு மற்றும் ஆயுதங்களைப் பயன்படுத்தல் தொடர்பான விதிமுறைகளை உருவாக்கும் கொள்கைகளையும் பரிசீலனை செய்து அதற்குண்டான பரிந்துரைகளை அதன் உறுப்பு நாடுகளுக்கு அல்லது பாதுகாப்பு சபைக்கு அல்லது மேற்கண்ட இரண்டிற்கும் செய்கிறது. **[சரத்து 11(1)].**

(இ) சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அநேகமாக அபாயம் நேரக் கூடிய சூழல் ஏதும் இருப்பின், அதில் கவனம் செலுத்துமாறு பாதுகாப்புச் சபைக்கு அறிவுரைக்கிறது. **[சரத்து 11(3)].**

(ஈ) அதுபோல் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அநேகமாக அபாயம் நேரக் கூடிய விஷயங்கள் அல்லது பிரச்சனைகளை தன்னாய்வுக்கு எடுத்துக் கொண்டு, அதற்குண்டான பரிந்துரைகளைச் செய்ய பொதுச் சபை அதிகாரம் பெற்றது.

(உ) அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **13–வது சரத்து** பொதுச் சபையிடம் பின்வரும் சில பொறுப்புகளை ஒப்படைத்துள்ளது. அதன்படி பொதுச் சபையானது பின்வரும் விஷயங்களை ஆய்வு செய்து, அதற்குண்டான பரிந்துரைகளைச் செய்தல் வேண்டும். அவை, (i) அரசியலில் சர்வதேச நட்புணர்வை மேம்படுத்தல் மற்றும் நாட்டிடைச் சட்டத்தையும், அதனைத் தொகுத்தளித்தலையும் வளர்ச்சியுறச் செய்தல்; (ii) பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், கல்வி ஆரோக்கியம் ஆகிய மற்றும் துறைகளில் சர்வதேச ஒத்துழைப்பை வளர்ச்சியுறச் செய்தல் மற்றும் இனம், பால், மொழி மற்றும் மதம் ஆகியவற்றில் பாகுபாடின்றி அனைவரும் மனித உரிமைகளையும், அடிப்படைச் சுதந்திரங்களையும் துய்க்க உதவி புரிதல்.

மேற்கண்ட பணிகள் மற்றும் அதிகாரங்களிலிருந்து பொதுச் சபையானது, அய்க்கிய நாடுகள் சபையின் சக்தி வாய்ந்த ஒரு அங்கம் என்பது புலப்படும். இவை நாளுக்கு நாள் வளர்ச்சியுற்று வருகின்றன. அந்த வகையில் பொதுச் சபை இதுகாறும் பல்வேறு முக்கியப் பணிகளை ஆற்றியுள்ளது எனில் அது மிகையன்று.

(2) கண்காணிப்புப் பணிகள் (Supervisory Functions):

அய்க்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கங்கள் பிறவற்றின் மற்றும் தனிச் சிறப்பு முகமைகளின் (Specialised Agencies) பணிகளை பொதுச் சபை கண்காணித்து மேற்பார்வையிடுகிறது. குறிப்பாக பொருளாதார மற்றும் சமூகக் குழு, பொறுப்பாண்மைக் குழு எனும் இரண்டு முக்கிய அங்கங்களின் செயற்பாடுகளின் மீது பொதுச் சபை முறையான கண்காணிப்பை மேற்கொள்கிறது. இவையிரண்டும், பொதுச் சபையின் துணை நிலை அங்கங்கள் (Subordinate Organs). எனவே, அவற்றைக் கண்காணிக்க வேண்டியது பொதுச் சபையின் தலையாய பணியாகிறது. மேலும் பாதுகாப்புச் சபையும், பிற அங்கங்களும் தங்கள் ஆண்டறிக்கையை பொதுச் சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும். இந்த அறிக்கையை பரிசீலனை செய்து, இதன் பேரில் பொதுச் சபை விவாதிக்கிறது. மேலும் அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் மீதும் பொதுச் சபை ஒரு சில கட்டுப்பாடுகளை மேற்கொள்கிறது.

(3) நிதிநிலைப் பணிகள் (Financial Functions):

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **17–வது சரத்து,** அய்க்கிய நாடுகள் சபையின் வரவு–செலவு குறித்த நிதிநிலை அறிக்கையை (budget) பொதுச் சபை பரிசீலனை செய்து, அதனை அங்கீகரித்தல் வேண்டும் என்று கூறுகிறது. மேலும் சபையின் செலவினங்களை பொதுச் சபை நிர்ணயம் செய்யும் விகிதாச்சாரத்தின்படி, உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறது.

(4) தேர்ந்தெடுப்புப் பணிகள் (Elective Functions):

பொதுச் சபை இரண்டு விதமான தேர்ந்தெடுப்பு பணிகளை செய்கிறது. அவை, (1) அய்க்கிய நாடுகள் சபைக்கு புதிய உறுப்பினர்களைச் சேர்த்தல் தொடர்பாக; (2) அய்க்கிய நாடுகள் சபையின் பிற அங்களின் உறுப்பினர்களுக்கான தேர்தல்.

அய்க்கிய நாடுகள் சபையில் ஒரு புதிய நாட்டை சேர்த்துக் கொள்ளல் என்பது தேர்தலின் மூலமே நடைபெறுகிறது. எனவே, மேற்கண்டவற்றில் முதல் பணியைப் பொறுத்தவரை, பாதுகாப்புச் சபை செய்யும் பரிந்துரையின் பேரில் பொதுச் சபைக்கு வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பு நாடுகளில் மூன்றில் இரண்டு பங்கினர் அளிக்கும் பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் பொதுச் சபை எடுக்கும் தீர்மானத்தின் பேரில் ஒரு புதிய நாடு, அய்க்கிய நாடுகள் சபையில் சேர்த்துக் கொள்ளப்படுகிறது.

அய்க்கிய நாடுகள் சபையின் பிற அங்களுக்கான உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் இரண்டாம் பணியைப் பொருத்த வரை பொதுச் சபை பின்வரும் பணிகளை மேற்கொள்கிறது. (1) பாதுகாப்புச் சபைக்கு 10 நிரந்தரமல்லாத உறுப்பினர்களை பொதுச் சபை தேர்ந்தெடுக்கிறது; (2) பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவிற்கு 54 உறுப்பினர்களை பொதுச் சபை தேர்ந்தெடுக்கிறது; (3) பொறுப்பாண்மைக் குழுவிற்கு சில உறுப்பினர்களைத் தேர்தெடுக்கிறது; (4)

சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதிகளை தேர்ந்தெடுப்பதிலும் பொதுச் சபை பங்கேற்கிறது; (5) அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளரை நியமனம் செய்வதிலும் பொதுச் சபை பங்கேற்கிறது. அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **97–வது சரத்து,** பாதுகாப்புச் சபை செய்யும் பரிந்துரைகளின் பேரில், பொதுச் சபை அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளரை நியமனம் செய்தல் வேண்டும், என்று கூறுகிறது.

(5) சாசன நிருணய பணிகள் (Constituent Functions):

அய்க்கிய நாடுகள் சாசனத்தில் திருத்தம் கொண்டு வரும் பணியில் பொதுச் சபையும் பங்கேற்கிறது. இதுகாறும் மூன்று முறை அச்சாசனம் பொதுச் சபையின் பெரும்பான்மை உறுப்பு நாடுகளின் ஏற்புறுதியுடன் திருத்தப்பட்டுள்ளது.

உலக அமைதியை நிலைநாட்டுவதில் பொதுச் சபையின் பங்கு :

பொதுச் சபையானது, சட்டமியற்றும் அமைப்பு போன்றது என முன்னரே கண்டோம். அதற்கேற்ப சர்வதேச அமைதி, பாதுகாப்பு, முன்னேற்றம் ஆகியவற்றிற்கு உண்டான திட்டங்களைத் தீட்டி, பல்வேறுபட்ட பரிந்துரைகளைச் அதன் உறுப்பு நாடுகளுக்கும், பாதுகாப்புச் சபைக்கும் செய்கிறது. ஆனால் இவற்றையெல்லாம், நிருவகித்து, நிறைவேற்றுவது பாதுகாப்பு சபை (Security Council) ஆகும். எனினும் பல்வேறுபட்ட நிருவாகப் பணிகளை அய்க்கிய நாடுகளின் பொதுச் சபையும், பாதுகாப்புச் சபையும் இணைந்தே செய்கின்றன.

உலக அமைதி மற்றும் பாதுகாப்பை பேணிக்காப்பதில் முதன்மையான பொறுப்புடையது பாதுகாப்புச் சபையேயாகும் என்றாலும், அது குறித்து தனது கருத்துக்களையும் பரிந்துரைகளையும் எடுத்துக் கூறுவதற்கு பொதுச்சபை (General Assembly) சில அதிகாரங்களைப் பெற்றுள்ளது. உலக அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவதற்குண்டான கூட்டுறவுக் கொள்கைகளை தீர்மானிக்கவும், படைக்குறைப்பு பற்றிய விதிகளை ஆயவும், பின் அதற்கொப்ப தகுந்த பரிந்துரைகளை பாதுகாப்புச் சபைக்கு எடுத்துக் கூறவும் பொதுச்சபை அதிகாரம் பெற்றுள்ளது, என அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **11–வது** சரத்து கூறுகிறது. உலக அமைதி மற்றும் பாதுகாப்பை பேணிக்காப்பது தொடர்பாக எந்த விஷயங்கள் குறித்தும் பொதுச்சபை விவாதிக்கலாம். அது குறித்து தனது பரிந்துரைகளை சம்பந்தப்பட்ட நாட்டிற்கு தெரிவிக்கலாம். உலக அமைதிக்கு பங்கம் ஏற்படும் சூழ்நிலை இருப்பது பொதுச் சபைக்கு தெரிய வந்தால், அது பாதுகாப்புச் சபையை உஷார்படுத்தி, தக்க நடவடிக்கை எடுக்குமாறு கூறலாம். சுருங்கக் கூறின், நாம் 'பொதுச் சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள்' எனும் தலைப்பின் கீழ் முதலாவதாக கண்ட கலந்தாய்வுப் பணிகள் அனைத்தும் உலக அமைதி மற்றும் பாதுகாப்பை கொண்டு வருவதற்காக பொதுச் சபை எடுத்து வரும் நடவடிக்கைகளேயாகும்.

உலக அமைதியைக் காக்கும் பொருட்டு, 1950–ஆம் ஆண்டு, நவம்பர் 3–ஆம் நாளில் பொதுச் சபை 'அமைதிக்காக ஒன்று சேர்க்கும் தீர்மானம்' (Uniting for Peace Resolution) ஒன்றையும் கொண்டு வந்தது. மேலும் இதுவரை சூயாஸ் கால்வாய்ப் பிரச்சனை (1950), ஹங்கேரிச் சிக்கல் (1950), காங்கோ பிரச்சனை (1960) போன்ற பல சர்வதேச பிரச்சனைகளில் தலையிட்டு தீர்த்து வைத்துள்ளது.

முடிவுரை :

அய்க்கிய நாடுகளின் பொதுச் சபையை ஒரு சொற்போர் சபை என்று சொன்னால் அது மிகையாகாது. ஏனென்றால் இந்த சொற்போர்தான் ஓரளவுக்குத் தடுத்துள்ளது உண்மைப்போரை.

69. What are the conditions for admission of a State to membership of the United Nations? Can a member of the United Nations withdraw from the Organisation? (ஒரு நாடு ஐக்கிய நாடுகளின் உறுப்பினராக அனுமதி பெறுவதற்கான நிபந்தனைகள் யாவை? ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் ஒருவர் அந்த அமைப்பிலிருந்து விலகிக் கொள்ள இயலுமா?)

(அல்லது)

Explain the procedure relating to admission, expulsion and withdrawal of States in United Nations Organisation. (ஒன்றிய நாடுகளவையில் நாடுகளின் சேர்க்கை, வெளியேற்றுதல் மற்றும் அவையிலிருந்து தானாக வெளியேறுதல் குறித்த நடைமுறையை விளக்குக.)

முன்னுரை:

அய்க்கிய நாடுகள் சாசனத்தின்படி, அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்கள் இரு வகைப்படுவர். அவ்வுறுப்பினர்கள் வருமாறு.

(1) துவக்க உறுப்பினர்கள் (Original Members) :

துவக்க உறுப்பினர்கள் என்போர், (அ) 1945–ஆம் ஆண்டில் சான் பிரான்ஸிஸ்கோவில் நடந்த சர்வதேச சபை குறித்த அய்க்கிய நாடுகள் மாநாட்டில் கலந்து கொண்டு அய்க்கிய நாடுகள் சபையை தோற்றுவிக்கும் பணியில் பங்கு கொண்ட நாடுகளும், அல்லது (ஆ) 1942–ஆம் ஆண்டு சனவரி மாதம், முதல் நாளில் செய்யப்பட்ட அய்க்கிய நாடுகள் பிரகடனத்திலும், தற்பொழுதைய அய்க்கிய நாடுகள் சாசனத்திலும் கையொப்பமிட்டு, அதன் 110–வது சரத்தின்படி ஏற்புறுதி செய்த நாடுகளும். (சரத்து 3).

(2) பின்னர் சேர்க்கப்பட்டவர்கள் (Memebers subsequently admitted) :

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **4–வது சரத்தின்படி,** பாதுகாப்புச் சபையின் நேர்மறையான பரிந்துரைகளின் (affirmative recommendations) பேரிலும் மற்றும் பொதுச் சபையின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அளித்த பெருவாரியான வாக்கின் பேரிலும், நாடுகள் அய்க்கிய நாடுகள் சபையின் புது உறுப்பினர்களாக சேர்க்கப்படலாம்.

அய்க்கிய நாடுகள் சபையில் புது நாடுகளை அதன் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொள்வது என்பது ஒரு முக்கியமான நிகழ்வு என்பதால், பாதுகாப்புச் சபையின் மேற்படி நேர்மறையான பரிந்துரையானது, அதன் 5 நிரந்தர உறுப்பினர்கள் உள்ளிட்ட 9 உறுப்பினர்களால் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

உறுப்பினராக சேர்த்துக் கொள்ளப்பட நிபந்தனைகள் அல்லது தகுதிகள் (Qualifications of Members to be admitted) :

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 4–வது சரத்தின் முதல் பத்தி (Para 1) ஒரு நாட்டை அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்வதற்கு பின்வரும் அய்ந்து தகுதிகளை அல்லது நிபந்தனைகளை விதிக்கிறது. அவற்றை அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பினராக விழையும் ஒரு நாடு கொண்டிருத்தல் வேண்டும். அவை,–

(1) முதலில் அது ஒரு நாடாக இருத்தல் வேண்டும் (It must be State); அதாவது ஒரு நாட்டிற்குரிய பண்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

(2) அந்நாடு அமைதியை விரும்பும் ஒரு நாடாக இருக்க வேண்டும் (It must be peace - loving);

(3) அய்க்கிய நாடுகள் சாசனத்தில் கூறப்பட்டுள்ள கடப்பாடுகளை ஏற்றுக் கொள்ளும் நாடாக இருத்தல் வேண்டும் (It must accept the Obligations of the Charter);

(4) அய்க்கிய நாடுகள் சாசனக் கடப்பாடுகளை ஏற்றுக் கொள்வதோடு மட்டுமல்லாமல் அதனை செயல்படுத்தும் விருப்பம் கொண்டதாக இருக்க வேண்டும். (It must be willing to carry out those obligations of the Charter); மற்றும்

(5) அய்க்கிய நாடுகள் சாசனக் கடப்பாடுகளை நிறைவேற்றும் ஆற்றல் உடைய நாடாக இருத்தல் வேண்டும் (It must be able to carry out those obligations).

மேற்கண்ட நிபந்தனைகளை ஒரு நாடு பூர்த்தி செய்தால்தான், அந்நாடு அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடாவதற்கு அனுமதி பெற முடியும். எனவே,

எந்நாடும், தான் அய்க்கிய நாடுகள் சபையில் அனுமதிக்கப்பட்டே ஆக வேண்டும் என்று கோரும் உரிமையற்றது. எனினும் அய்க்கிய நாடுகள் சபை, அனுமதி மறுப்பதில் நல்லெண்ணத்துடன் செயல்பட வேண்டிய கடப்பாடு கொண்டுள்ளது.

புது உறுப்பினர்களை அனுமதிப்பதில் ஏற்பட்ட சிக்கல்:

புதிய நாடுகளை உறுப்பினர்களாக அனுமதிப்பதற்காக வாக்களிக்கும் போது நாடுகள் சில நிபந்தனைகளை விதித்தன. அவை அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 4–வது சரத்தில் கூறப்பட்டுள்ள வகைமுறைகளுக்கு (உறுப்பினராக சேருவதற்குண்டான தகுதிகளுக்கு) முரண்பட்டதாக இருந்தன. எடுத்துக்காட்டாக, இத்தாலியையும், ஃபின்லாந்தையும் அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பினர்களாக சேர்த்துக் கொள்வதற்காக வாக்களிக்கும் போது, பல்கேரியா, ஹங்கேரி மற்றும் ருமானியா நாடுகளையும் அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பினர்களாக சேர்த்துக் கொண்டால்தான், தனது வாக்கை சாதகமாக அளிக்க முடியும் என்று இரஷ்யா நிபந்தனை விதித்தது. எனவே அய்க்கிய நாடுகளின் பொதுச் சபை இப்பிரச்சனையை 1948–ஆம் ஆண்டில் ஆலோசனை அபிப்பிராயம் (Advisory opinion) கோரி சர்வதேச நீதிமன்றத்திற்கு அனுப்பியது.

இப்பிரச்சனை **'அய்க்கிய நாடுகளில் சபையில் நாடுகளை உறுப்பினர் களாக சேர்த்துக் கொள்ளல் குறித்த சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை அபிப்பிராயம்' (International Court of Justice in its advisory opinion on Admission of States to Membership in the United Nations)**[1] என்று அழைக்கப்படுகிறது. இதில், அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 4(1)–வது பிரிவில் கண்டுள்ள நிபந்தனைகளைத் தவிர வேறு எந்த நிபந்தனைகளையும் புது உறுப்பு நாடுகளை அனுமதிப்பதற்குப் பழைய உறுப்பு நாடுகள் விதிக்கக்கூடாது என்று சர்வதேச நீதிமன்றம் கூறியது. அச்சரத்து, ஒரு நாட்டை அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்வதற்கு அந்நாடு பூர்த்தி செய்திருக்க வேண்டிய நிபந்தனைகளைக் கூறுகிறது. (அவற்றை நாம் ஏற்கனவே சென்ற பக்கத்தில் கண்டுள்ளோம்).

மற்றொரு பிரச்சனையில் இதுபோல் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை அபிப்பிராயம் கோரப்பட்டது. அப்பிரச்சனை **'அய்க்கிய நாடுகளில் சபையில் ஒரு நாட்டை உறுப்பினராக சேர்த்துக் கொள்ளல் குறித்த பொதுச் சபையின் தகுதி தொடர்பான சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை அபிப்பிராயம்' (International Court of Justice in its advisory opinion regarding competence of the General Assembly regarding the Admission of State to the United Nations)**[2] என வழங்கப்படுகிறது.

1. I.C.J. Reports (1948), p. 4
2. I.C.J. Reports (1950), p. 4

இதில் ஒரு நாட்டை அய்க்கிய நாடுகளின் உறுப்பினராக சேர்த்துக் கொள்வதற்கு, பாதுகாப்புச் சபை எவ்வாறு நேர்மறையான பரிந்துரை செய்கிறதோ, அவ்வாறே பொதுச் சபையும் அப்பரிந்துரையை செய்தல் வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் ஆலோசனை வழங்கியது. அஃதாவது பாதுகாப்புச் சபை பரிந்துரை செய்யாமல், பொதுச் சபையானது தனது பெரும்பான்மை வாக்கினால் ஒரு புதிய நாட்டை அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக சேர்த்துக் கொள்ள முடியாது என்பது இதன் உட்பொருளாகும். சர்வதேச நீதிமன்றம் தனது இந்த ஆலோசனை அபிப்பிராயத்தை, 1950–ஆம் ஆண்டு, மார்ச் மாதம் 5–ஆம் நாளில் செய்தது.

சர்வதேச நீதிமன்றத்தின் மேற்கண்ட இரு வழிகாட்டு ஆலோசனைகளின் காரணமாக, புது உறுப்பினர்களைச் சேர்ப்பதில் இருந்த சிக்கல் மறைந்தது.

உறுப்பினர் நிலையிலிருந்து ஒரு நாட்டை விலக்கி வைத்தல் (Suspension of a Member from the United Nations):

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **5–வது சரத்தின்படி** அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடு எதன் மீது பாதுகாப்புச் சபையால் தடுப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோ, அது தனது உறுப்பினருக்கான உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளைச் செயல்படுத்துவதிலிருந்து, அந்நாட்டை பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில், பொதுச் சபையானது விலக்கி வைக்கும். ஆனால் அத்தகு உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் மீண்டும் அந்நாட்டிற்கு அளிக்கும் அதிகாரம் பாதுகாப்புச் சபைக்கு உண்டு. இங்கு பாதுகாப்புச் சபையானது பொதுச் சபையின் ஒப்புதலைப் பெற வேண்டிய அவசியமில்லை. உறுப்பு நாடு ஒன்றை அய்க்கிய நாடுகள் சபையிலிருந்து விலக்கி வைத்தல் என்பது ஒரு முக்கியமான பிரச்சனை என்பதால், பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பினர்கள் உள்ளிட்ட 9 உறுப்பினர்களின் நேர்மறையான வாக்குகளும், அதுபோல் பொதுச் சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்கும் இத்தீர்மானத்திற்கு வருவதற்கு தேவையாகும்.

உறுப்பினர் நிலையிலிருந்து ஒரு நாட்டை வெளியேற்றல் (Expulsion of a Member State from the United Nations):

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் **6–வது சரத்தின்படி,** அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடும் எதுவும் அச்சாசனத்தில் கூறப்பட்டுள்ள கொள்கையை தொடர்ந்து மீறி வந்தால், பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில், அந்நாட்டை பொதுச் சபையானது அய்க்கிய நாடுகள் சபையிலிருந்து வெளியேற்றும். எவ்வாறு உறுப்பு நாடு ஒன்றை விலக்கி வைத்தல் முக்கியப் பிரச்சனையாகக் கருதப்படுகிறதோ, அவ்வாறே உறுப்பு நாடு ஒன்றை வெளியேற்றுதலும் முக்கியப் பிரச்சனையாகும். எனவே அங்கு பின்பற்றப்படும் வாக்களித்தல் நடைமுறைகளே (voting procedure) இங்கும் பின்பற்றப்பட வேண்டும்.

உறுப்புநாடு ஒன்று அய்க்கிய நாடுகள் சபையிலிருந்து விலகிக் கொள்ள முடியுமா? (Is withdrawal of a member-State from the United Nations possible?):

அய்க்கிய நாடுகள் சபை உதிப்பதற்கு முன்னதாக இருந்த சர்வதேச சங்கத்தின் உடன்படிக்கையில் (Covenant of League of Nations), அதன் உறுப்பு நாடு ஒன்று அதிலிருந்து விலகிக் கொள்ள சில நடைமுறைகள் வகுக்கப் பட்டிருந்தன. இதன் காரணமாக ஒரு கட்டத்தில் சர்வதேச சங்கத்தில் 62 நாடுகள் உறுப்பினர்களாக இருந்த நிலை மாறி, 32–ஆக குறைந்து போனது. அச்சங்கமே இதனால் பின்னிட்டு வலுவிழந்து போனது. இதுவும் இரண்டாம் உலகப் போர் வெடிக்க ஒரு காரணமாக அமைந்தது என்று கூறலாம். இதனால்தான் என்னமோ, அய்க்கிய நாடுகள் சபையை தோற்றுவித்த அய்க்கிய நாடுகள் சாசனத்தில் இதற்கான வகைமுறைகள் ஏதும் செய்யப்படவில்லை. உறுப்பு நாடு ஒன்று அய்க்கிய நாடுகளிலிருந்து தன்னிச்சையாக விலகிக் கொள்ள வழி வகுக்கும் சரத்துகள் எதுவும் அய்க்கிய நாடுகள் சாசனத்தில் எங்கும் கிடையா. முன்னதாக 1945–ஆம் ஆண்டில் சான்ஃபிரான்ஸிஸ்கோ மாநாட்டில், அய்க்கிய நாடுகள் சாசனத்தை வடிவமைக்கும் பொழுது, உறுப்பு நாடு ஒன்று அய்க்கிய நாடுகளிலிருந்து விலகிக் கொள்வதற்கான வழிமுறைகள் அச்சாசனத்தில் செய்யப்பட வேண்டும் என்று ஒரு சில நாடுகளும், அவ்வாறு விலகிக் கொள்வதை முற்றிலும் தடை செய்ய வேண்டும் என்று வேறு சில நாடுகளும் கூறி கடுமையாக விவாதித்தன. இறுதியாக மேற்கண்டவாறு, உறுப்பு நாடு ஒன்று தானாக விலகிக் கொள்வது தொடர்பாக எவ்வகைமுறைகளும் அய்க்கிய நாடுகள் சாசனத்தில் சேர்க்கப்படவில்லை.

எனினும், உறுப்பு நாடு ஒன்று தானாக விலகிக் கொள்வதற்குண்டான சில 'சிறப்பு சூழ்நிலைகள்' (Special Circumstances) அடங்கிய அறிக்கை ஒன்று முறைப்படி வெளியிடப்பட்டது. அதன்படி அத்தகு சிறப்பு சூழ்நிலைகளின் கீழ் ஒரு உறுப்பு நாடு அய்க்கிய நாடுகளிலிருந்து விலகிக் கொள்ளலாம்.

அறிஞர் ஃபென்விக் அவர்கள், பின்வரும் இரண்டு சூழ்நிலைகளில் உறுப்பு நாடு ஒன்று அய்க்கிய நாடுகளிலிருந்து விலகிக் கொள்ளலாம் என்று கருத்துரைக்கிறார். அவை, (1) அய்க்கிய நாடுகள் சபையானது தன்னால் அமைதியை நிலைநாட்ட இயலவில்லை என்றோ அல்லது அதனை சட்டம் மற்றும் நீதியின் அடிப்படையில் மட்டுமே செய்யவியலும் என்றோ கருத்து வெளியிட்டால், விலகிக் கொள்ளல் அல்லது ஒரு விதமான கலைப்பு தவிர்க்க முடியாததாகும்; (2) சாசனத் திருத்தத்திற்கு உறுப்பு நாடு எதுவும் தனது ஒப்புதலை தரவில்லை என்றலோ அல்லது அதற்கு எதிராக வாக்களித்தாலோ அல்லது அத்திருத்தத்தை தன்னால் ஏற்றுக் கொள்ள முடியாத சூழலில் அது இருந்தாலோ, அது அய்க்கிய நாடுகள் சபையிலிருந்து விலகிக் கொள்ள உரிமை படைத்ததாகும்.

அய்க்கிய நாடுகள் சபை வரலாற்றில் இதுகாறும் ஒரு முறை மட்டுமே மேற்கண்டவாறு விலகிக் கொள்ளும் நிகழ்வு நடந்தேறியுள்ளது. அதன்படி இந்தோனேஷியா, அய்க்கிய நாடுகளிலிருந்து விலகிக் கொள்வதாக பிரகடனம் செய்தது. ஏனெனில் மலேசிய நாடு அய்க்கிய நாடுகளின் நிரந்தரமல்லாத உறுப்பினர்களில் ஒன்றாக தேர்ந்தெடுக்கப்பட்டது. இது இந்தோனேஷியாவிற்கு பிடிக்கவில்லை. மேலும், மலேசியாவின் உடைமையில் உள்ள ஒரு பகுதி ஆள் நிலப்பரப்பை இந்தோனேஷியா சொந்தம் கொண்டாடி வந்தது. எனினும் பின்னிட்டு, எதுவுமே நடக்காததைப் போன்று, இந்தோனேஷியா மீண்டும் 1966–ஆம் ஆண்டில் அய்க்கிய நாடுகளில் தனது இடத்தில் வந்து சேர்ந்து கொண்டது. ஆனால் "இவ்வாறு அய்க்கிய நாடுகளில் சேர்ந்து கொண்டது இல்லாநிலையது என்றும், அது அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 4–வது சரத்தின்படி தன்னை மீண்டும் சேர்த்துக் கொள்ளக் கோரி அய்க்கிய நாடுகளிடம் விண்ணப்பித்திருக்க வேண்டும் என்றும்" அறிஞர் **Michael Akehurst** கூறுகிறார்.

எனினும், உறுப்பு நாடு ஒன்று மேற்கண்டவாறு விலகிக் கொள்வது குறித்த வகைமுறை எதுவும் அய்க்கிய நாடுகள் சாசனத்தில் இல்லாததால், அது இன்றளவும் ஆய்விற்குரிய ஒரு விஷயமாக உள்ளது என்று சொன்னால் அது மிகையன்று.

70. Write an essay about the constitution, powers and functions of Security Council of the United Nations. (ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் அமைப்பு, அதிகாரங்கள், அலுவல்கள் பற்றி ஒரு கட்டுரை எழுதுக.)

(அல்லது)

Examine the contribution of the security council of the United Nations to the maintenance of International peace and security? (சர்வதேச பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டுவதில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் பங்களிப்பை ஆராய்க.)

(அல்லது)

What are the powers and functions of Security Council? (பாதுகாப்பு சபையின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் குறித்து விவாதி.)

(அல்லது)

Examine the powers and functions of the U.N. Security Council and its voting procedure. (ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு மன்றத்தின் அதிகாரங்கள், கடமைகள் மற்றும் அதனுடைய வாக்களித்தல் பற்றிய நடைமுறைகளை விவாதிக்க.)

(அல்லது)

Discuss the role of the Security Council of the United Nations in the maintenance of International peace and security? (சர்வதேச பாதுகாப்பு மற்றும் அமைதியை நிலைநாட்டுவதில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையின் பங்கை விவாதிக்க.)

(அல்லது)

Security Council - Write short notes. (பாதுகாப்பு அவை – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Voting in the United Nations Security Council - Write short notes. (ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அவையில் வாக்களித்தல் – சிறு குறிப்பு எழுதுக.)

பாதுகாப்பு சபையின் அமைப்பு (Composition of Security Council):

பாதுகாப்புச் சபை அரங்கின் படம்
[Chamber of the Security Council]

அய்க்கிய நாடுகள் சபையின் நிருவாகப் பிரிவு (Governing body of U.N.O.) போன்று செயற்படுவது பாதுகாப்புச் சபையாகும். இச்சபை குறித்து அய்க்கிய நாடுகள் சாசனத்தின் V–வது அத்தியாயத்தின் கீழான 23 முதல் 32

வரையுள்ள சரத்துகள் குறிப்பிடுகின்றன. இதில் மொத்தம் 15 உறுப்பு நாடுகள் உள்ளன. இவற்றில் 5 நாடுகள் நிரந்தரமான உறுப்பு நாடுகளாகும். மீதி 10 நாடுகள் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளாகும். பிரிட்டன், பிரான்சு, அமெரிக்க அய்க்கிய நாடுகள், சீனா, சோவியத் கூட்டரசு ஆகிய அய்ந்து நாடுகளும், நிரந்தர உறுப்பு நாடுகளாகும். மற்ற உறுப்பு நாடுகளிலிருந்து 10 நாடுகளை பொதுச் சபை, நிரந்தரமற்ற உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கிறது. இந்நாடுகளின் உறுப்பினர் காலம், இரண்டாண்டுகள் ஆகும். இவ்வாறு தேர்ந்தெடுக்கும்போது பரவலாக உலகின் எல்லா பகுதிகளுக்கும் பிரதிநிதித்துவம் கிடைக்கும் வகையில் பார்த்துக் கொள்ளப்படுகிறது. ஒவ்வொரு உறுப்பு நாட்டிற்கும் ஒரு வாக்குதான் உண்டு. அது போல் உறுப்பு நாடு ஒவ்வொன்றும் தலா ஒரு பிரதிநிதியை இச்சபைக்கு அனுப்பலாம். சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதே பாதுகாப்புச் சபையின் முதன்மை நோக்கமாகும்.

வாக்களிக்கும் நடைமுறை (Voting Procedure) :

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 27(2)–வது சரத்தின்படி, பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடு ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கு உண்டு. நடைமுறை குறித்த விஷயங்களில் **(Procedural Matters)** ஒரு முடிவிற்கு வர பாதுகாப்புச் சபையின் 9 உறுப்பு நாடுகள் தங்கள் நேர்மறையான வாக்குகளை **(affirmative votes)** அளிக்க வேண்டும். ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் **(Substantial Matters)** ஒரு முடிவிற்கு வருவதற்கு பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தரமான நாடுகள் உள்ளிட்ட 9 உறுப்பு நாடுகள் தங்கள் நேர்மறையான வாக்குகளை அளிக்க வேண்டும். எனினும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில், எதிர்மறையான வாக்கை (negative vote) அளிக்க 5 நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு உரிமை உண்டு. அதாவது நேர்மறையான வாக்களிக்க மறுக்கலாம். இது நிரந்தர உறுப்பு நாடுகளின் 'மறுப்பாணை அதிகாரம்' **(Veto Power)** எனப்படுகிறது. (இது குறித்து பின்னர் விரிவாகக் காண உள்ளோம்.)

பாதுகாப்புச் சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்கள் (Functions and Powers of the Security Council):

பாதுகாப்புச் சபையின் பணிகள் மற்றும் அதிகாரங்களை பின்வரும் தலைப்புகளின் காணுதல் எளிதாகும். அவை, –

(1) சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பராமரித்தல் (Maintenance of International Peace and Security):

அய்க்கிய நாடுகள் சாசன முகப்புரையின் 7–வது பத்தி, 'அய்க்கிய நாடுகளின் மக்களாகிய நாம் .... சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப் பதற்காக நமது பலத்தை ஒன்றிணைக்க தீர்மானித்துள்ளோம்' என்று கூறுகிறது. எனவே, அய்க்கிய நாடுகள் சபையின் நோக்கமே, உலக அமைதியும், சமாதானமும்

என்றால் அது மிகையன்று. அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 24–வது சரத்தானது, "அய்க்கிய நாடுகளால் எடுக்கப்படும் முறையான மற்றும் செயல்திறமுடைய நடவடிக்கையை உறுதி செய்வதற்காக, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதற்கான முதன்மைப் பொறுப்பை **(primary responsibility)** பாதுகாப்புச் சபையிடம் உறுப்பு நாடுகள் ஒப்படைத்துள்ளன என்றும், மேலும் உறுப்பு நாடுகள் மேற்கண்ட பொறுப்பின் கீழ் தங்களை கடமைகளை நிறைவேற்றுவதில், தங்கள் சார்பாக பாதுகாப்புச் சபை செயற்படும் என்று ஒப்புக் கொண்டுள்ளன என்றும்" கூறுகிறது.

இத்தகு முதன்மைப் பொறுப்பை நிறைவேற்றும் பொருட்டு, அய்க்கிய நாடுகள் சாசனத்தின் நோக்கம் மற்றும் கொள்கைகளின்படி பாதுகாப்புச் சபை செயற்படுகிறது. அதற்கான அதிகாரங்கள், மேற்படி சாசனத்தின் VI, VII, VIII மற்றும் XII–வது அத்தியாயங்களில் கொடுக்கப்பட்டுள்ளன.

இவற்றில் அத்தியாயம் **VI**, (சரத்துகள் 33 முதல் 38 வரை) தகராறுகளை அமைதி வழியில் தீர்வுகாண **(Pacific Settlement of Disputes)** முயற்சித்தல் குறித்து கூறுகிறது. சரத்து 33–ஆனது, நாட்டிடை தகராறு ஒன்று தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பிற்கு அநேகமாக அபாயம் ஏற்படுத்தலாம் என்ற நிலை இருக்கும் பொழுது, அத்தகராறுக்குரிய உறுப்பு நாடுகள் முதலில் அதனை பேச்சுவார்த்தைகள், விசாரணை, சமாதான முறை, சமரச முறை, இசைவுத்தீர்வு, நீதிமுறை தீர்வு, சுமூகத் தீர்விற்காக வட்டார அமைப்புகளை நாடுதல் அல்லது அவர்கள் விரும்பும் வேறு எந்த அமைதி வழிகளின் மூலமாகவும் தீர்த்துக் கொள்ள முயல வேண்டும் என்று கூறுகிறது. அவ்வாறு அவ்வுறுப்பு நாடுகள் செயற்பட்டும், தங்கள் தகராறைத் தீர்த்துக் கொள்ள முடியவில்லையெனில், தாம் அத்தகராறை தீர்த்து வைத்தல் அவசியம் என்று பாதுகாப்புச் சபை கருதுமிடத்து, அவ்வுறுப்பு நாடுகளை அழைத்து மேற்படி வழிமுறைகளைக் கையாண்டு பேசி அத்தகராறை தீர்த்து வைக்கலாம். சரத்து 37–ஆனது, பாதுகாப்புச் சபை கூறும் தீர்விற்கு உறுப்பு நாடு ஒத்து வரவில்லையெனில், அதன் மீது நடவடிக்கை எடுப்பதா அல்லது தான் பொருத்தமெனக் கருதும் தீர்விற்கான அத்தகு நிபந்தனைகளை அதற்கு பரிந்துரை செய்வதா என்பது குறித்து பாதுகாப்புச் சபை முடிவெடுக்கும் அதிகாரம் படைத்தது.

அதுபோல் சரத்து 34–ன்படி, ஒரு தகராறு அல்லது சூழல் தொடர்ந்து நடந்து கொண்டிருப்பது, சர்வதேச அமைதிக்கும் பாதுகாப்பிற்கும் அநேகமாக அபாயம் விளைவிக்குமா என்பதை தீர்மானிப்பதற்காக அத்தகு தகராறு அல்லது சூழலை புலனாய்வு (investigate) செய்ய பாதுகாப்புச் சபை அதிகாரம் படைத்தது.

மேலும் சரத்து 35–ன்படி, மேற்கண்ட தன்மையுடைய தகராறு அல்லது சூழலை, அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் எதுவும் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்கு கொண்டு வரலாம்.

அத்தியாயம் **VII**, (சரத்துகள் 39 முதல் 51 வரை) அமைதிக்கு விளைவிக் கப்படும் அச்சுறுத்தல், அமைதி மீறல் மற்றும் வலுச்சண்டைக்கு இழுக்கும் செயல்கள் ஆகியவை குறித்து பாதுகாப்புச் சபை எடுக்கும் நடவடிக்கையையும் அல்லது வலுச் சண்டையிடும் ஆக்ரமிப்பாளருக்கு எதிராக பாதுகாப்புச் சபை விதிக்கும் தடைகளையும் **(Santions against aggressor or action with respect to threats to peace, breach of peace and acts of aggression)** குறித்து கூறுகிறது. சரத்து 39–ன்படி, அமைதிக்கு அச்சுறுத்தல் போன்ற மேற்கண்ட சூழல் நிலவுகிறதா என்பதை பாதுகாப்புச் சபை முதலில் கண்டறியும். அவ்வாறு இருப்பின் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிக்க அல்லது மீண்டும் நிலை பெறச் செய்ய என்ன நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட வேண்டும் என்பதை பாதுகாப்புச் சபை பரிந்துரை செய்யலாம்.

தனது தீர்மானத்தை ஆயுதப்படையை பயன்படுத்தாமல் எத்தகு வழி முறைகளைக் கையாண்டு அமைதியை குலைக்கும் நாட்டின் மீது செயல்படுத்துவது என்பது குறித்து பாதுகாப்புச் சபை முடிவெடுக்கலாம். அச்சமயத்தில் அந்நாட்டின் மீது முழுமையான அல்லது பகுதியான பொருளாதார, போக்குவரத்து, தகவல் தொடர்பு தடைகளை விதிக்கும்படியும், அந்நாட்டுடன் உள்ள தூதாண்மை உறவுகளைத் துண்டித்துக் கொள்ளும்படியும் பாதுகாப்புச் சபையானது, அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கலாம், என்று சரத்து 41 குறிப்பிடுகிறது. இது அமைதியைக் குலைக்கும், வலுச்சண்டைக்கு இழுக்கும், சமாதானத் தீர்விற்கு ஒத்துவராத நாட்டின் மீது பாதுகாப்புச் சபை விதிக்கும் தண்டனையாக கருதப்படுகிறது.

மேற்கண்ட தடைகள் போதுமானதாக இல்லை என்று பாதுகாப்புச் சபை கருதுமிடத்து, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதற்கு அவசியமாக உள்ள அத்தகு வான்வெளி, கடல்வழி மற்றும் தரைவழி படைகளின் மூலம் அந்நாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம் என்று சரத்து 42 கூறுகிறது.

மேலும் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை நிலைநிறுத்தும் பொருட்டு, அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளின் படைகளை தயார் நிலையில் வைத்திருக்கும் படி பாதுகாப்புச் சபை கேட்டுக் கொள்ளலாம், என்று சரத்து 43 கூறுகிறது. இவ்வாறு அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளின் படைகளைக் கொண்டு உருவாக்கப்படும் படை 'அமைதி நிலைப் படை' **(Peace Keeping Force)** எனப்படுகிறது.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பைப் பராமரிப்பதற்கான இராணுவத் தேவைகள், இராணுவப் பணியாளர் நியமனம், படையை தலைமையேற்று நடத்தல், ஆயுதமேந்துதல் மற்றும் ஆயுதக் குறைப்பு விதிமுறைகள் ஆகியவை குறித்த பிரச்சனைகள் தொடர்பாக பாதுகாப்புச் சபைக்கு ஆலோசனையும் உதவியும் வழங்க 'இராணுவப் பணியாளர் குழு' **(Military Staff Committee)** ஒன்றை அமைக்க சரத்து 47 வகை செய்கிறது.

இந்த இராணுவப் பணியாளர் குழுவை உருவாக்கும் பொறுப்பு, சரத்து 26–ன்படி பாதுகாப்புச் சபையையே சாரும்.

சரத்து 25–ன்படி, அய்க்கிய நாடுகள் சாசனத்தின் கீழ், அய்க்கிய நாடுகளின் அனைத்து உறுப்பு நாடுகளும் பாதுகாப்புச் சபை எடுக்கும் முடிவுகளை ஏற்றுக் கொள்வதாக ஒத்துக் கொண்டுள்ளன. இங்கு ஒரு வேறுபாட்டை கருத்தில் கொள்வது நலம். அஃதாவது, அய்க்கிய நாடுகளின் பிற அங்கங்கள், தங்கள் பரிந்துரைகளை உறுப்பு நாடுகளின் அரசாங்கத்திற்கு செய்கின்றன. ஆனால் பாதுகாப்புச் சபை மட்டும், தான் எடுக்கும் முடிவுகளை உறுப்பு நாடுகள் நிறைவேற்ற வேண்டும் என்று கட்டாயப்படுத்தும் அதிகாரம் கொண்டதாகும்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிக்கும் விதத்தில் பாதுகாப்புச் சபை இதுகாறும் பல்வேறு சர்வதேச பிரச்சனைகளில் தலையிட்டு தகராறுகளைத் தீர்த்து வைத்துள்ளது. எடுத்துக்காட்டாக, கொரியப் பிரச்சனை (1948), இந்தியா–பாகிஸ்தான் தகராறு (1949, 1965 மற்றும் 1971), காங்கோ பூசல் (1960–61), சைப்ரஸ் சிக்கல் (1964), அரேபியா–இஸ்ரேல் பிரச்சனை (1973), குவைத் பிரச்சனை (1990), போஸ்னியா பிரச்சனை (1993–94), இஸ்ரேல்–பாலஸ்தீனப் பிரச்சனை (1994), கிழக்கு தைமூர் பூசல் (1999) என்று கூறிக் கொண்டே போகலாம். எனவே 'பாதுகாப்புச் சபையை உலக அமைதிக்கு உற்ற தோழன்' என்றே வருணிக்கலாம்.

(2) தேர்ந்தெடுப்புப் பணிகள் (Elective Functions):

பாதுகாப்புச் சபை, பொதுச் சபையுடன் இணைந்து, சர்வதேச நீதிமன்ற நீதிபதிபகளை தேர்ந்தெடுத்தல் வேண்டும். மேலும் சரத்து 97–ன்படி, பாதுகாப்புச் சபை செய்யும் பரிந்துரையின் பேரில், பொதுச் சபை அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளரை நியமனம் செய்கிறது. எனவே பொதுச் செயலாளர் நியமனத்திலும் பாதுகாப்புச் சபை பங்கேற்கிறது.

(3) கண்காணிப்புப் பணிகள் (Supervisory Functions):

பாதுகாப்புச் சபையும் சில கண்காணிப்பு பணிகளை மேற்கொள்கிறது. பாதுகாப்புச் சபையால் எடுக்கப்பட்ட தடுப்பு நடவடிக்கைக்குள்ளான உறுப்பு நாடு ஒன்று, அது அய்க்கிய நாடுகள் சாசனத்தின் கீழ் தனக்குண்டான உரிமைகளையும் சிறப்புரிமைகளையும் பயன்படுத்துவதிலிருந்து, பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் பொதுச் சபை விலக்கி வைக்கலாம் (suspension) என்று சரத்து 5 கூறுவதை நாம் முன்னரே கண்டோம். எனினும் மேற்கண்ட உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் பொதுச் சபையிடம் கலந்தாராயமல் அந்நாட்டிற்கு மீண்டும் அளிக்க பாதுகாப்புச் சபை அதிகாரம் பெற்றது. அதுபோல் சரத்து 6–ன்படி பாதுகாப்புச் சபை செய்யும் பரிந்துரையின் பேரில்தான், அய்க்கிய நாடுகள் சபையிலிருந்து உறுப்பு நாடு ஒன்றை பொதுச் சபை வெளியேற்றுகிறது (expulsion). இவ்வாறு உறுப்பு நாடுகளை

அய்க்கிய நாடுகளிலிருந்து விலக்கி வைக்க அல்லது வெளியேற்ற பரிந்துரை செய்ய வேண்டுமெனில், பாதுகாப்புச் சபை அய்க்கிய நாடுகள் சபையின் அனைத்து உறுப்பு நாடுகளின் மீதும் தனது தொடர்ந்த கண்காணிப்பை செலுத்தி வர வேண்டும். அத்தகு பணியை, பாதுகாப்புச் சபை செவ்வனே செய்து வருகிறது. மேலும் அய்க்கிய நாடுகளின் பொறுப்பாண்மை முறையின் (Trusteeship System) கீழ் ஒப்படைக் கப்பட்டுள்ள பொறுப்பாண்மை நிலப்பரப்புகளின் (Trust territories) மீதான கட்டுப்பாட்டிற்கும், கண்காணிப்பிற்கும் பாதுகாப்புச் சபையே பொறுப்புடையதாகும்.

(4) சாசன நிருணய பணிகள் **(Constituent Functions):**

அய்க்கிய நாடுகள் சாசனத்தில் திருத்தம் கொண்டு வரும் பணியில் பாதுகாப்புச் சபையும் பங்கேற்கிறது. பாதுகாப்புச் சபையின் அனைத்து நிரந்தர உறுப்பு நாடுகளும் தங்கள் நேர்மறையான வாக்குகளை அளிக்கும் வரையிலும், பின்னிட்டு அந்நாடுகளின் அரசாங்கத்தால் ஏற்புறுதி (ratification) செய்யப்படும் வரையிலும், அய்க்கிய நாடுகளின் சாசனத்தில் செய்யப்பட்ட எத்திருத்தமும் அமலுக்கு வராது என்று சரத்து 108 கூறுகிறது.

71. Examine the role of the General Assembly and the Security Council of the United Nations in preserving international peace and security. (உலக அமைதியையும் பாதுகாப்பையும் காப்பாற்றுவதில் ஐக்கிய நாட்டின் பொதுச் சபை மற்றும் பாதுகாப்புச் சபையின் பங்கை ஆராய்க.)

(அல்லது)

Critically examine the role played by the United Nations Organisation in preserving International peace and security. (நாடுகளிடையே அமைதியையும் பாதுகாப்பையும் பேணுவதில் ஐக்கிய நாடுகள் சங்கத்தின் பங்கினை திறனாய்வு செய்க.)

(அல்லது)

Describe the relationship between the General Assembly and the Security Council with special reference to

(a) Powers and functions, and

(b) The voting procedure.

பொதுச் சபைக்கும் பாதுகாப்புச் சபைக்கும் உள்ள உறவை

(அ) பணிகள் மற்றும் அலுவல்கள்

(ஆ) வாக்களிக்கும் முறை ஆகியவை குறித்து விவரிக்க.

(முந்தய இரண்டு வினாக்களின் விடைகளிலிருந்து மேற்படி வினாக்களுக்கு பொருத்தமாக உள்ள பகுதிகளை கண்டு பயில்க.)

72. Economic and Social Council - Write short notes. (பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு – சிறு குறிப்பு எழுதுக.)

பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவின் அமைப்பு (Composition of ECOSOC):



பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு அரங்கின் படம்
[Chamber of the Economic and Social Council]

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 61 முதல் 71 வரையுள்ள சரத்துக்கள் 'பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு' குறித்து விளக்குகிறது. இது அய்க்கிய நாடுகள் சபையின் மற்றொரு முக்கிய அங்கமாகும். இதில் பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப்பட்ட 54 நாடுகள், உறுப்பினர்களாக உள்ளன. இவர்களில் மூன்றில் ஒரு பங்கு உறுப்பினர்கள் (அதாவது 18 உறுப்பினர்கள்) ஆண்டிற்கு ஒரு முறை மூன்றாண்டு கால உறுப்பினர் பதவிக்காக பொதுச் சபையால் தேர்ந்தெடுக்கப் படுகின்றன. இதன் உறுப்பு நாடு ஒவ்வொன்றும் தலா ஒரு பிரதிநிதியை இதற்கு அனுப்ப உரிமை படைத்தது. மேலும் இதன் உறுப்பினர் பதவிக்கு, உலக நிலவியல் அடிப்படையில் பிரதிநிதித்துவம் அளிக்கப்படுகிறது. அஃதாவது, ஆப்ரிக்க நாடுகளுக்கு 14 உறுப்பினர் இடங்களும், ஆசிய நாடுகளுக்கு 11–ம், கிழக்கு அய்ரோப்பிய நாடுகளுக்கு 6–ம், இலத்தீன் அமெரிக்கா மற்றும் கரிபியன் நாடுகளுக்கு 10–ம், மேற்கு அய்ரோப்பிய நாடுகள் மற்றும் இதர நாடுகளுக்கு 13–ம் ஆக மொத்தம் 54 உறுப்பினர் இடங்கள் ஒதுக்கப்படுகின்றன. இக்குழுவிலிருந்து பதவிக் காலம் முடிந்து வெளியேறும் உறுப்பு நாடு, உடனடியாக மீண்டும் தேர்ந் தெடுக்கப்படுவற்காக விண்ணப்பிக்க தகுதி (re-election) படைத்தது.

இக்குழுவின் தலைவராக (President) தற்போது போட்ஸ்வானா நாட்டைச்சார்ந்த மேதகு கோளென் விக்ஸன் கேளபைல் என்பவர் பதவி வகிக் கிறார். போட்ஸ்வானா இக்குழுவில் ஒரு உறுப்பினராகும்.

பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவின் தற்போதைய தலைலர் மேதகு கோளென் விக்ஸன் கேளபைல் [His Excellency Collen Vixen Kelapile, President of the Economic and Social Council]

வாக்களிக்கும் நடைமுறை (Voting Procedure):

இக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொன்றும் தலா ஒரு வாக்கைப் பெற்றதாகும். இக்குழுவிற்கு வந்திருந்து, வாக்களிக்கும் உறுப்பினர்களில் பெரும் பான்மை வாக்குகள்படி, இக்குழுவின் முடிவுகள் அமைகின்றன. (சரத்து 67).

பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவின் அதிகாரங்கள் மற்றும் பணிகள் (Powers and Functions of ECOSOC):

(1) இக்குழு சர்வதேச பொருளாதாரம், சமூகம், கலாச்சாரம், கல்வி, சுகாதாரம் மற்றும் அது தொடர்பான விஷயங்கள் குறித்து ஆய்வு செய்து அய்க்கிய நாடுகளின் பொதுச் சபைக்கு அறிக்கை சமர்ப்பிக்கிறது. மேலும் அவை குறித்த பரிந்துரைகளையும் பொதுச் சபைக்கு, அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளுக்கு மற்றும் அதன் சிறப்பு முகமைகளுக்குச் (Specialised Agencies) செய்கிறது. (சரத்து 62 பத்தி 1).

(2) இக்குழு மனித உரிமைகளை கடைப்பிடித்து அதற்கு மதிப்பளித்தலை மேம்படுத்தவும் மற்றும் அனைவருக்கும் அடிப்படை சுதந்திரங்கள் கிடைக்கச் செய்யவும் உண்டான பரிந்துரைகளைச் செய்ய அதிகாரம் படைத்தது. (சரத்து 62 பத்தி 2).

(3) இக்குழு தனது எல்லைக்குள் வரும் விஷயங்களின் மீது வரைவு உடன்படிக்கைகளை வரைந்து, அதனை பொதுச் சபைக்கு சமர்ப்பிக்கலாம். (சரத்து 62 பத்தி 3).

(4) இக்குழு தனது எல்லைக்குள் வரும் விஷயங்களின் மீது, அய்க்கிய நாடுகள் வகுத்துள்ள விதிகளின்படி, சர்வதேச மாநாட்டிற்கு அழைப்பு விடுக்கலாம். (சரத்து 62 பத்தி 4).

(5) இக்குழு பாதுகாப்புச் சபை கோரும் விஷயங்களின் மீது அதற்கான தகவலை அளித்து அதற்கு துணை புரியலாம். (சரத்து 65).

(6) பொதுச் சபையின் பரிந்துரைகளை ஏற்று, தனது எல்லைக்குள் வரும் அத்தகு பணிகளை இக்குழு செய்யலாம். (சரத்து 66 பத்தி 1).

(7) இக்குழு பொதுச் சபையின் ஒப்புதலுடன், அய்க்கிய நாடுகளின் மற்றும் சிறப்பு முகமைகளின் உறுப்பினர்கள் செய்யும் வேண்டுகோளின் பேரில் அத்தகு சேவைகளைப் புரியலாம். (சரத்து 66 பத்தி 2).

(8) இக்குழு அய்க்கிய நாடுகளின் சாசனத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் அல்லது பொதுச் சபை அதனிடம் ஒப்படைத்துள்ள அத்தகு பிற பணிகளையும் செய்யலாம். (சரத்து 66 பத்தி 3).

ஏழ்மை, பிணி மற்றும் கல்லாமையினால் பாதிக்கப்பட்ட மக்கள் சமூகத்தை மேம்படுத்தி, அதன் மூலம் உலக சமாதானத்தை நிலைநிறுத்த இக்குழு சர்வதேச அளவில் பாடுபடுகிறது. இக்குழு, மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த பல்வேறு வழிகளில் முயற்சிக்கிறது. மேலும் அய்க்கிய நாடுகளின் பல்வேறு சிறப்பு முகமை நிறுவனங்களின் பணிகளை ஒருங்கிணைத்து, அவை எதற்காக அமைக்கப் பட்டனவோ, அதன் பொருட்டு செயற்பட வழிகாட்டுகிறது. அவற்றின் பணிகளை வரைமுறைப்படுத்தி, எளிமையாக்கிக் கொடுக்கிறது. உலக மக்களின் சமூக மற்றும் பொருளாதார நிலைகளை மேம்படுத்தி, அனைவருக்கும் வேலை வாய்ப்பை ஏற்படுத்தி, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் பெரும் பொறுப்பு, இக் குழுவையேச் சாரும்.

இது தனது பணிகளை சிறப்புற செய்யும் முகமாக பின்வரும் நான்கு வட்டார ஆணையங்களை (Regional Commissions) ஏற்படுத்தியுள்ளது. அவை, (1) அய்ரோப்பிய பொருளாதார ஆணையம் (Economic Commission for Europe - ECE); (2) ஆசிய மற்றும் தூரக் கிழக்கு நாடுகளுக்கான பொருளா தார ஆணையம் (Economic Commission for Asia and Far East - ECAFE); (3) ஆப்ரிக்க பொருளாதார ஆணையம் (Economic Commission for Africa); மற்றும் (4) இலத்தீன் அமெரிக்க பொருளாதார ஆணையம் (Economic Commission for Latin America - ECLA).

இந்த வட்டார ஆணையங்கள் மட்டுமல்லாது, இக்குழுவின் கீழ் செய்தி மற்றும் போக்குவரத்து ஆணையம், புள்ளியியல் ஆணையம், சமுதாய வளர்ச்சி ஆணையம், மனித உரிமைகள் ஆணையம், பெண்களின் தரநிலை ஆணையம் போன்ற ஒன்பது ஆணையங்கள் செயற்படுகின்றன.

73. Trusteeship Council - Write short notes. (பொறுப்பாண்மைக் குழு – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Trusteeship System - Write short notes. (பொறுப்பாட்சி முறை – சிறு குறிப்பு எழுதுக.)

பொறுப்பாண்மைக் குழு - முன்னுரை:



பொறுப்பாண்மைக் குழு அரங்கின் படம்
[Chamber of the Trusteeship Council]

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 75 முதல் 85 வரையிலான சரத்துக்கள் 'பொறுப்பாட்சி முறை' **(Trusteeship System)** குறித்தும், 86 முதல் 91 வரையிலான சரத்துகள், 'பொறுப்பாண்மைக் குழு' **(Trusteeship Council)** குறித்தும் கூறுகின்றன. இது அய்க்கிய நாடுகள் சபையின் மற்றொரு முக்கிய அங்கமாகும். முதல் உலகப் போரின் முடிவில் தோல்வியுற்ற நாடுகளிடமிருந்து பறிக்கப்பட்ட நிலப் பகுதிகளை (குடியேற்றங்களை) நிருவகிக்கப் பொறுப்பதிகாரம் பெற்ற நாடுகள் சர்வதேச சங்க உடன்படிக்கையின் கீழ் நியமிக்கப்பட்டன. ஆனால் தொடர்ந்து இரண்டாம் உலகப் போர் ஏற்பட்டுவிட்டது. எனவே அதன் பின்னிட்டு தோன்றிய அய்க்கிய நாடுகள் சபையானது, அவ்வாறு போரினால் பறிக்கப்பட்ட நிலப் பகுதிகளை நிருவகிப்பதற்கென தனியாக ஒரு அமைப்பு தேவையெனக் கருதி ஏற்படுத்தியதே, 'பொறுப்பாண்மைக் குழு' ஆகும். அந்நிலப்பரப்புகளின் மீது இக்குழு நடத்தும் ஆட்சி முறைக்கு, 'பொறுப்பாட்சி முறை' என்று பெயர்.

பொறுப்பாண்மைக் குழு நடத்தும் பொறுப்பாட்சி முறையின் நோக்கங்கள் (Objectives of Trusteeship System):

இம்முறையின் நோக்கங்களை அய்க்கிய நாடுகள் சாசனம், தெளிவு படுத்துகிறது. இம்முறை சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்டுள்ளது. மேலும் பொறுப்பாட்சியில் விடப்பட்டுள்ள பகுதிகளின் அரசியல், பொருளதார, சமுதாய, கல்வி வளர்ச்சியை மேம்படுத்தி அவற்றைச் சுதந்திரமான வாழ்க்கைக்கு மற்றும் சுயாட்சிக்குத் தயாராக்குவது, மனித உரிமைகள் மற்றும் அடிப்படை சுதந்திரங்களுக்கு மதிப்பளித்தலை ஊக்கப்படுத்தல் ஆகியவையும் இதன் நோக்கங்களாகும். (சரத்து 76).

பொறுப்பாண்மைக் குழுவின் அமைப்பு (Composition of Trusteeship Council):

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 86–வது சரத்தில் வகை செய்யப் பட்டுள்ளவாறு, பொறுப்பாண்மைக் குழுவில் அய்க்கிய நாடுகளின் பின்வரும் உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். அவை (1) பொறுப்பாட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளை நிருவகிக்கும் உறுப்பு நாடுகள்; (2) பொறுப்பாட்சிப் பகுதிகளை நிருவகிக்காத, பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகள்; (3) பொதுச் சபையால் மூன்றாண்டு காலத்திற்காக தேர்ந்தெடுக்கப்படும் அத்தகு உறுப்பு நாடுகள். பொறுப்பாட்சிப் பகுதிகளை நிருவகிக்கும் அதிகாரம் (Administrating Authority) பெற்றுள்ள அமெரிக்க அய்க்கிய நாடுகளும், பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள சீனா, ஃபிரான்சு, இரஷ்ய கூட்டரசு, பிரிட்டன் ஆகியவையும் இக்குழுவின் உறுப்பினர்களாக தற்பொழுது உள்ளன. இக்குழுவின் உறுப்பினர் ஒவ்வொன்றும் தலா ஒரு தகுதியான பிரதிநிதியை இக்குழுவிற்கு அனுப்பலாம்.

வாக்களிக்கும் நடைமுறை (Voting Procedure):

இக்குழுவின் உறுப்பு நாடு ஒவ்வொன்றுக்கும் தலா ஒரு வாக்கு உண்டு. இக்குழுவிற்கு வந்திருந்து வாக்களித்த உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் வாக்குகள்படி இக்குழுவின் முடிவுகள் அமைகின்றன. (சரத்து 89).

பணிகள் மற்றும் அதிகாரங்கள் (Functions and Powers):

(1) பொறுப்பாட்சிக்குட்பட்ட பகுதிகளை நிருவகிக்கும் அதிகாரம் பெற்ற உறுப்பு நாடு சமர்ப்பிக்கும் அறிக்கைகளை இக்குழு பரிசீலிக்கும் அதிகாரம் பெற்றது. [சரத்து 87 (a)].

(2) இக்குழு மனுக்களைப் பெற்றுக் கொண்டு, அவை குறித்து நிருவாக அதிகாரம் பெற்ற உறுப்பு நாடுடன் கலந்தாலோசிக்கலாம். [சரத்து 87 (b)].

(3) இக்குழு, நிருவாக அதிகாரம் பெற்ற உறுப்பு நாடுடன் ஒப்புக் கொண்டுள்ள காலகட்டங்களில் பொறுப்பாட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு அதற்குரிய காலங்களில் சென்று, பார்வையிடலாம். [சரத்து 87 (c)].

(4) இக்குழு, பொறுப்பாட்சி உடன்படிக்கைகளின் வரைமுறைகளுக்கு ஏற்ற விதத்தில் உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம். [சரத்து 87 (d)].

(5) இக்குழு, பொறுப்பாட்சிக்குட்பட்ட நிலப்பகுதிகளுக்கென ஒரு வினாப் பட்டியலை (questionnaire) வடிவமைத்து, அதற்களிக்கப்படும் விடைகளின் அடிப்படையில் ஆண்டறிக்கை ஒன்றை தயாரித்து, அதனை பொதுச் சபைக்கு அளிக்கலாம். (சரத்து 88).

(6) இக்குழு, தேவையெனில் பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு மற்றும் அய்க்கிய நாடுகளின் சிறப்பு முகமை ஆகியவற்றின் உதவியை, அவை குறித்த விஷயங்களைப் பொருத்து நாடலாம். (சரத்து 91).

முடிவுரை:

முன்னதாக சர்வதேச சங்கத்தால் (Legue of Nations) பொறுப்பாட்சியின் கீழ் விடப்பட்ட பகுதிகள், இரண்டாவது உலகப் போரின் முடிவில் தோல்வியுற்ற நாடுகளிடமிருந்து பறிக்கப்பட்ட குடியேற்ற நிலப்பகுதிகள், தாமாகவே இப்பகுதி யாகத் தம்மை அறிவித்துக் கொண்ட பகுதிகள் என மொத்தமிருந்த பதினொரு பகுதிகள் தற்பொழுது சுதந்திரம் பெற்று விட்டன. ஆனால் 'மைக்ரோனிசியா' (Micronesia) எனப்படும் பசிபிக் தீவுகள் (Pacific Islands) மட்டும் அமெரிக்க அய்க்கிய நாடுகளின் பொறுப்பாண்மையில் உள்ளது.

74. State the nature of the jurisdiction of the International Court of Justice. How are the decisions of the Court enforced? (சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பின் இயல்பை குறிப்பிடுக. எவ்வாறு நீதிமன்றத்தின் தீர்ப்புகள் செயல்படுத்தப்படுகின்றன?)

(அல்லது)

Explain the composition and jurisdiction of International Court of Justice. How far the judgments of the court have binding force? (சர்வதேச நீதிமன்றத்தின் அமைப்பு மற்றும் அதிகாரவரம்பை விளக்குக. அந்நீதிமன்றத்தின் தீர்ப்புகள் எந்த அளவிற்கு கட்டுப்படுத்தும் தன்மை கொண்டதாக உள்ளது?)

(அல்லது)

Examine the scope of the Compulsory and Advisory jurisdictions of the International Court of Justice. (நாட்டிடை நீதிமன்றத்தின் கட்டுப்பாடுடைய மற்றும் ஆலோசனை அதிகாரவரம்பின் அளாவுகையை ஆய்க.)

(அல்லது)

International Court of Justice - Write short notes. (பன்னாட்டு நீதிமன்றம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

Compulsory Jurisdiction of International Court of Justice. - Write short notes. (சர்வதேச நீதிமன்றத்தின் கட்டாய அதிகாரவரம்பு – சிறு குறிப்பு எழுதுக.)

சர்வதேச (நாட்டிடை) நீதிமன்றத்தின் அமைப்பு (Composition of the International Court of Justice):



சர்வதேச நீதிமன்ற அறையின் படம்
[Hall of International Court of Justice]

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் அத்தியாயத்தின் கீழான 92 முதல் 96 வரையிலான சரத்துக்கள் 'சர்வதேச நீதிமன்றம்' குறித்து விளக்குகின்றன. அச்சாசனத்தின் பின்னிணைப்பாக 'சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டம்' (Statute of International Court of Justice) சேர்க்கப்பட்டுள்ளது.

நாடுகளிடையே எழும் தகராறுகளை, பிரச்சனைகளை, பிணக்குகளை, பூசல்களை அமைதியான முறையிலும், சுமூகமாகவும் தீர்வு காண்பதற்காக அமைக்கப்பட்டதே, சர்வதேச நீதிமன்றமாகும். அய்க்கிய நாடுகள் சபையின் ஆறு முக்கிய அங்கங்களில், சர்வதேச நீதிமன்றமும் ஒன்றாகும். அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் அனைத்தும், சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் தரப்பு நாடுகளாகும் [சரத்து 93(1)]. எனவே அவ்வுறுப்பு நாடுகள் அனைத்தும் இந்நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டதாகும். எனினும் அய்க்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக சேராத நாடு கூட, சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தை ஏற்புறுதி செய்து இசைவளிப்பதன் மூலம் அதன் தரப்பு நாடானால், அந்நாடும் சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு உட்பட்டதாகும். இதனால் அந்நாடு தனது பிரச்சனைக்காக சர்வதேச நீதிமன்றத்தை உரிமையுடன் அணுகலாம். எனவே, அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பினராக இல்லாமலும், சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தை ஏற்று இசைவளிக்காமலும் இருக்கும் ஒரு நாடு, சர்வதேச நீதிமன்றத்தை அணுக இயலாது.

இந்நீதிமன்றம், 15 நீதிபதிகளைக் கொண்டதொரு அமைப்பாகும். இந்நீதிபதிகள், பாதுகாப்புச் சபையாலும், பொதுச் சபையாலும் தனித்தனியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகளிலிருந்து 5 நபர்கள் நீதிபதிகளாக தேர்ந்தெடுக்கப்படுவது வழக்கமாக உள்ளது. இவர்கள் 9 ஆண்டு காலத்திற்கு பதவி வகிப்பார்கள். பதவிக் காலம் முடிவடைந்தவுடன் மீண்டும் அவர்களே தேர்ந்தெடுக்கப்படலாம். மேற்கண்ட 15 நீதிபதிகளில் எந்த இருவரும் ஒரே நாட்டுக் குடியுரிமையைக் கொண்டவர்களாக இருத்தல் கூடாது.

இந்நீதிமன்றம் தனக்கு ஒரு தலைவரையும் (President), துணைத் தலைவரையும் (Vice-President) மூன்றாண்டு பதவிக் காலத்திற்காக தேர்ந்தெடுக்கிறது. மேலும் இந்நீதிமன்றம் தனக்குரிய பதிவாளர் (Registrar) ஒருவரையும், பிற பணியாளர்களையும் பணிக்கு அமர்த்திக் கொள்ள உரிமை படைத்தது.

இந்நீதிமன்றத்தின் தீர்ப்புகள், பெரும்பான்மை நீதிபதிகளின் கருத்தின் அடிப்படையில் அமைகிறது.

சர்வதேச நீதிமன்றத்தின் நீதிபதி ஒருவரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டுமெனில், மற்ற நீதிபதிகள் அனைவரும் அவர் பதவியில் இருக்கத் தகுதியற்றவர் என்ற கருத்தினைக் கூற வேண்டும்.

இந்நீதிமன்றம் செயற்படும் தலைமையிடம் "ஹேக்" **(The Hague)** ஆகும். எனினும், அவசர நிமித்தம் காரணமாக, வெவ்வேறு இடங்களில் இந்நீதிமன்றம் தனது அலுவலைப் புரியலாம். இது, விடுமுறை காலம் தவிர பிற காலங்களில் நிரந்தரமாகப் பணி புரியும்.

சர்வதேச நீதிமன்றத்தின் நீதிவரம்பு (அல்லது) அதிகார வரம்பு :

சர்வதேச நீதிமன்றத்திற்கு இரண்டு முக்கிய அதிகாரவரம்புகள் உள்ளன. அவை,–

I. வாதத் தொடர்பான அதிகாரவரம்பு (Contentious Jurisdiction);
II. ஆலோசனை கூறும் அதிகாரவரம்பு (Advisory Jurisdiction).

இவற்றைச் சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

I. வாதத் தொடர்பான அதிகாரவரம்பு (Contentious Jurisdiction):

இந்த அதிகாரவரம்பின் கீழ் சர்ச்சைக்குள்ளாகியிருக்கும் நாட்டிடை வழக்குகள் பற்றி சர்வதேச நீதிமன்றம் விசாரித்து, தீர்ப்பளிக்கிறது. இங்கு தகராறுக் குரிய தரப்பு நாடுகள் இரண்டும், தங்களது வாதத்தை எடுத்துக் கூறி வாதிடுகின்றன. எனவே இதனை வாதத் தொடர்பான அதிகாரவரம்பு என்கிறோம். இந்த அதிகார வரம்பு மேலும் இரண்டு வகையாகப் பகுக்கப்படுகிறது. அவை வருமாறு.

1. தன்னிச்சையான அதிகாரவரம்பு (Voluntary Jurisdition) :

சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் 36–வது ஷரத்தின் உட்பிரிவு 1–ஆனது, சர்வதேச நீதிமன்றத்தின் தன்னிச்சையான அதிகாரவரம்பு குறித்து கூறுகிறது. அதன்படி, "அய்க்கிய நாடுகள் சாசனத்தில் அல்லது அமலில் உள்ள மாநாட்டு ஏற்பு விதிகளில் அல்லது உடன்படிக்கைகளில் தனிப்பட்ட முறையில் வகை செய்யப்பட்டுள்ள அனைத்து விஷயங்களையும் மற்றும் தரப்பு நாடுகள் சமர்ப்பிக்கும் அனைத்து வழக்குகளையும் இந்த அதிகாரவரம்பின் கீழ் சர்வதேச நீதிமன்றம் பரிசீலிக்கிறது." எனவே அய்க்கிய நாடுகளில் தன்னிச்சையாக இணைந்த உறுப்பு நாடுகள், தங்கள் தகராறுகளை, பிரச்சனைகளை இந்த அதிகாரவரம்பின் கீழ் சர்வதேச நீதிமன்றத்திடம் முறையிடலாம். மேற்படி அமைப்புச் சட்டத்தின் 59–வது சரத்தின்படி, சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பு, அவ் வழக்கிற்கு சம்பந்தப்பட்ட தரப்பு நாடுகளையும் மற்றும் அக்குறிப்பிட்ட வழக்கையும் மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியதாகும். அதாவது, அதன் தீர்ப்பு மற்ற நாடுகளையோ, பிற வழக்குகளையோ கட்டுப்படுத்தாது.

2. விருப்ப அதிகாரவரம்பு அல்லது கட்டாய அதிகாரவரம்பு (Optional Jurisdiction or Compulsory Jurisdition) :

சர்வதேச நீதிமன்றத்தின் மற்றொரு அதிகாரவரம்பு, 'விருப்ப அதிகார வரம்பாகும்'. இது 'கட்டாய அதிகாரவரம்பு' என்றும் அழைக்கப்படுகிறது. சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் 36–வது ஷரத்தின் உட்பிரிவு 2–ன்படி, மேற்படி அமைப்புச் சட்டத்தின் தரப்பு நாடுகள் எப்பொழுது வேண்டுமானாலும், தாங்கள்

சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு கட்டுப்படுவதாகக் கூறி, அத்தகு கடப்பாட்டை ஏற்றுக் கொள்ளும் எந்த நாட்டைப் பொறுத்தும் தங்களது விருப்பத்தை பிரகடனம் செய்யலாம். இதற்காக தனிப்பட்ட உடன்படிக்கை ஏதும் செய்து கொள்ள வேண்டியதில்லை. அதாவது அந்நாடுகள் சர்வதேச நீதிமன்றத் திற்கு தங்கள் வழக்குகளை விசாரிக்கும் கட்டாய அதிகாரவரம்பை விருப்பத்துடன் அளிக்கின்றன. அதன் தீர்ப்பிற்கு கட்டுப்படுவதாக பிரகடனம் செய்கின்றன. இதன் கீழ் பின்வரும் சட்டத் தகராறுகளில் எதனைக் குறித்தும் விசாரித்து தீர்ப்பளிக்கும் அதிகாரவரம்பை அத்தரப்பு நாடுகள் சர்வதேச நீதிமன்றத்திற்கு அளிக்கின்றன. அவை,

(a) உடன்படிக்கைக்கு பொருள் விளக்கம் அளிக்கும் வழக்குகள்;

(b) நாட்டிடைச் சட்டம் குறித்த பிரச்சனைகள்;

(c) மெய்ப்பிக்கப்பட்டால், அது ஒரு சர்வதேச கடப்பாட்டை மீறிய நிகழ்வை உருவாக்கத்தக்க பொருண்மை இருப்பது குறித்து;

(d) சர்வதேச கடப்பாடு ஒன்றின் மீறுகையால் ஏற்பட்ட இழப்புகளுக்கு அளிக்கப்படும் ஈட்டின் தன்மை மற்றும் அளவு குறித்து.

மேற்குறிப்பிட்டவாறு தரப்பு நாடுகள் செய்யும் பிரகடனம், நிபந்தனை ஏதுமற்றதாக இருக்கலாம் அல்லது குறிப்பிட்ட சில நாடுகளுடன் அல்லது பல நாடுகளுடன் பரஸ்பரம் இயைந்ததாக இருக்கலாம் அல்லது ஒரு குறிப்பிட்ட காலத்திற்கானதாக இருக்கலாம் என்று மேற்படி சர்வதேச நீதிமன்றத்தின் அமைப்புச் சட்டத்தின் சரத்து 36(3) கூறுகிறது.

மேற்கண்ட பிரகடனங்கள் அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளரிடம் வைப்பீடு (Deposit) செய்யப்படுதல் வேண்டும். அவர் அப்பிரகடனங்களின் நகல்களை, மேற்படி அமைப்புச் சட்டத்தின் தரப்பு நாடுகளுக்கும், சர்வதேச நீதிமன்றத்தின் பதிவாளருக்கும் அனுப்பி வைப்பார், என்று சரத்து 36(4) கூறுகிறது.

இவ்வாறு சர்வதேச நீதிமன்றம் மேற்கண்ட (a) முதல் (d) வரையிலான பிரச்சனைகளை விசாரிப்பதற்கு தங்களது விருப்பத்தை தெரிவித்து, மேற்கண்ட அமைப்புச் சட்டத்தின் தரப்பு நாடுகள் பிரகடனம் செய்வதால், இது 'விருப்ப அதிகார வரம்பு' **(Optional Jurisdiction)** எனப்படுகிறது. எப்பொழுது இப்பிரகடனம் அய்க்கிய நாடுகளிடம் சமர்ப்பிக்கப்பட்டுவிடுகிறோ, அந்த நிமிடத்திலிருந்து மேற்கண்ட அதிகாரவரம்பு 'கட்டாய அதிகாரவரம்பாக' **(Compulsory Jurisdiction)** மாறிவிடுகிறது.

மேற்கண்டவாறு செய்யப்படும் பிரகடனங்களில், சில நாடுகள், சில வழக்குகளை தங்கள் நாடு மட்டுமே, தங்களது உள்நாட்டு அதிகாரவரம்பின் (Domestic Jurisdiction) கீழ் விசாரிக்க அதிகாரம் படைத்தது என்று ஒதுக்கி

வைத்துக் கொள்வதும் உண்டு. எடுத்துக்காட்டாக, அமெரிக்க அய்க்கிய நாடுகள் இவ்வாறு ஒதுக்கி வைத்துக் கொண்டு, பிரகடனத்தைச் செய்துள்ளது. இவ்வாறு ஒதுக்கி வைத்துக் கொள்வதற்காக மேற்படி பிரகடனத்தில் சேர்க்கப்படும் கூறுகள், 'ஒதுக்கிக் கொள்ளும் கூறுகள்' **(Reservation Clauses)** எனப்படுகின்றன. இது 'கோனாலி திருத்தம்' **(Connally Amendment)** என்றும், 'கோனாலி ஒதுக்கம்' **(Connally Reservation)** என்றும் அழைக்கப்படுகிறது. இவ்வாறு ஒதுக்கி வைத்துக் கொண்ட விஷயங்களில், சர்வதேச நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு கிடையாது. அந்த வகையில் நமது இந்தியா நாடும் கடந்த 15–09–1974–ம் தேதியில் ஒதுக்கிக் கொள்ளும் கூறுகளுடன் தனது பிரகடனத்தை வைப்பீடு செய்துள்ளது.

இவ்வாறு இருப்பினும், ஒரு விஷயத்தில் சர்வதேச நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உண்டா, இல்லையா எனும் பிரச்சனை, சர்வதேச நீதிமன்றத்தின் முடிவைப் பொறுத்ததாகும் என்று மேற்படி சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் சரத்து 36(6) கூறுகிறது.

கர்ஃபூ கால்வாய் வழக்கு, அடைக்கல வழக்கு, வட அட்லாண்டிக் கண்டத் திட்டு வழக்கு போன்றவை சர்வதேச நீதிமன்றம், தனது வாதத் தொடர்பான அதிகாரவரம்பின் (Contentious Jurisdiction) கீழ் தீர்த்து வைத்த முக்கியமான வழக்குகளாகும்.

II. ஆலோசனை கூறும் அதிகாரவரம்பு (Advisory Jurisdiction):

சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் 65 முதல் 68 வரையுள்ள சரத்துகள் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை கூறும் அதிகாரவரம்பு குறித்து கூறுகின்றன. அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 96–வது சரத்தும் இது குறித்து விளக்குகிறது. சரத்து 96(1)–ன்படி, சட்டப் பிரச்சனை எது குறித்தும் ஆலோசனை அபிப்பிராயம் வழங்கும்படி இந்த அதிகாரவரம்பின் கீழ் சர்வதேச நீதிமன்றத்தை பொது சபை அல்லது பாதுகாப்பு சபை கேட்டுக் கொள்ளலாம். அதுபோல் சரத்து 96(2)–ன்படி, அய்க்கிய நாடுகளின் பிற அங்கங்கள் மற்றும் சிறப்பு முகமைகளும், தங்களது செயற்பாடுகளின் எல்லைக்குள் எழும் சட்டப் பிரச்சனை எதன் மீதும் ஆலோசனை அபிப்பிராயம் வழங்கும்படி, சர்வதேச நீதிமன்றத்தை பொதுச் சபையின் அங்கீகாரத்துடன் கேட்டுக் கொள்ளலாம். அந்த வகையில் அய்க்கிய நாடுகளின் பிற அங்கங்களான பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு, பொறுப் பாண்மைக் குழு மற்றும் அய்க்கிய நாடுகளின் கீழ் அமைக்கப்பெற்ற 16 சிறப்பு முகமைகள் சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனையைக் கோர உரிமை படைத்தன. ஆனால் அய்க்கிய நாடுகளின் செயலகம் (Secretariat), இத்தகு ஆலோசனையைக் கோர பொதுச் சபையால் அதிகாரமளிக்கப்படவில்லை. சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனையை எவ்வாறு கோருவது என்பதற்குண்டான நடைமுறையை அதன் அமைப்புச் சட்டத்தின் மேற்படி 65 முதல் 68 வரையுள்ள சரத்துகள் கூறுகின்றன.

வழக்குகளைத் தீர்க்க சர்வதேச நீதிமன்றம் பின்பற்ற வேண்டிய சட்டம் (Law applied by the ICJ):

சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் சரத்து 38(1)–ன்படி, சர்வதேச நீதிமன்றம் தன்னிடம் சமர்ப்பிக்கப்படும் வழக்குப் பிரச்சனைகளை நாட்டிடைச் சட்டத்தின்படி தீர்க்க வேண்டும். அதற்காக நாட்டிடைச் சட்டத்தின் மூலங்களை (sources) அவ்வரிசையிலேயே பயன்படுத்த வேண்டும். அவை வருமாறு.

1. உலக அரங்கில் நாடுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கைகள் (International Treaties). இவை உலக நாடுகளின் மாநாட்டு ஏற்பு விதிகளையும் (Conventions) உள்ளடக்கியதாகும்;

2. உலக நாடுகளால் சட்டமென ஏற்றுக் கொள்ளப்பட்ட சர்வதேச பழக்க வழக்கங்கள் (International Custom as evidence of a general practice accepted as Law);

3. நாகரிகமடைந்த நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான சட்டக் கொள்கைகள் (The General Principles of Law recognised by civilized Nations);

4. நீதிமன்றம் மற்றும் தீர்ப்பாயத்தின் தீர்ப்புகள் (Decisions of Judicial and Arbitral Tribunals);

5. சர்வதேச சட்ட வல்லுநர்களின் போதனைகள் மற்றும் சட்ட ஆய்வுரைக் கருத்துகள் (Teachings of the most highly qualified publicists of the various Nations and juristic works);

நாட்டிடைச் சட்டத்தையும் மேற்படி மூலங்களையும் பின்பற்றித்தான் ஒரு வழக்கை சர்வதேச நீதிமன்றம் தீர்க்க வேண்டுமென்பதில்லை. தரப்பு நாடுகள் உடன்பட்டால், சட்டத்திற்கு வெளியே சென்று, அவற்றின் பிரச்சனைகளை நல்லெண்ணத்துடனும் தீர்த்து வைக்கலாம் என்று, சரத்து 38(2) கூறுகிறது. இவ்வாறு 'வழக்குகளை சட்டத்திற்கு வெளியே நல்லெண்ணத்துடன் தீர்த்து வைத்தலை', உரோம் நாட்டுச் சட்டமானது, '**Ex aequo et bono**' என்று கூறுகிறது.

நடைமுறை (Procedure):

சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் தரப்பு நாடுகளாக உள்ள அனைத்து நாடுகளும், சர்வதேச நீதிமன்றத்தில் தங்களது நாட்டிடை வழக்குகளை முறையிடலாம். சர்வதேச நீதிமன்றத்தில் தொடுக்கப்படும் வழக்குகளில் தனி நபர் ஒருவர் தரப்பினராக இருக்க முடியாது. சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பே இறுதியானது. அதை எதிர்த்து மேல்முறையீடு செய்ய முடியாது. ஆங்கிலமும், பிரஞ்சும் சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரபூர்வமான மொழியாகும். இதனிடம் வழக்குகளை

முறையிடுதல் குறித்து நாடுகள் செய்து கொண்டுள்ள தனிப்பட்ட உடன்படிக்கையை அறிவிப்பதன் மூலம் அல்லது சர்வதேச நீதிமன்றப் பதிவாளரிடம் செய்து கொள்ளப் படும் எழுத்துமூலமான விண்ணப்பத்தின் மூலம், தரப்பு நாடுகள் தங்கள் வழக்குகளை சர்வதேச நீதிமன்றத்திடம் சமர்ப்பிக்கலாம். மேற்கண்ட இரண்டு நேர்வுகளிலும், தரப்பு நாடுகளின் பெயர்கள் மற்றும் வழக்கின் கருப்பொருள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். இவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பத்தை, சர்வதேச நீதிமன்றத்தின் பதிவாளர், தொடர்புடைய அனைத்து நாடுகளுக்கும் உடனடியாக தெரியப் படுத்துதல் வேண்டும். வழக்கை விசாரிக்கும் நீதிபதிகளில் பெரும்பான்மையினரின் முடிவே, சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பாகும். ஒரு வழக்கில் இரண்டு மாறுபட்ட முடிவுகளை சம எண்ணிக்கையில் உள்ள நீதிபதிகள் வழங்கினால், சர்வதேச நீதிமன்றத்தின் தலைவர் எம்முடிவை ஆதரித்து தனது 'முடிவு செய் வாக்கை' (casting vote) அளிக்கிறாரோ, அம்முடிவே சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பாகும். சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்பில், அத்தீர்ப்பிற்கான காரணங்களும், அதனை வழங்கிய நீதிபதிகளின் பெயர்களும் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். மேலும் அத்தீர்ப்பு சர்வதேச நீதிமன்றத்தின் தலைவர் மற்றும் பதிவாளரால் கையொப்பம் செய்யப்பட்டிருக்க வேண்டும். அத்தீர்ப்பு, உரியவர்களுக்கு அறிவிப்பு கொடுக்கப்பட்ட பின்னர், திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட வேண்டும். வழக்கின் தரப்பினர்கள் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குரிய செலவுத் தொகைகளை (Costs), அவர்களே ஏற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகளின் கட்டுப் படுத்தும் வலிமை (Binding Force of the Decisions of International Court of Justice):

சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புகள், சம்பந்தப்பட்ட தரப்பு நாட்டையும், சம்பந்தப்பட்ட வழக்குப் பிரச்சனையையும் மட்டுமே கட்டுப்படுத்தக் கூடியதாகும், என்று சர்வதேச நீதிமன்ற அமைப்புச் சட்டத்தின் 59–வது சரத்து கூறுகிறது. எனவே இதன் தீர்ப்புகள், வழக்கிற்கு சம்பந்தப்படாத நாடுகளை அல்லது அவ்வழக்குப் பிரச்சனையையொத்த மற்றொரு வழக்குப் பிரச்சனையை கட்டுப்படுத்தாது என்றே கூற வேண்டும். அதாவது சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகள், ஒரு முன் தீர்ப்பு நெறியாக (precedents), பின் எழும் அதையொத்த வழக்குகளுக்கு நிற்காது. எனவே இதனைக் கொண்டு சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளுக்கு மதிப்பே இல்லை என்ற கூறிவிட முடியாது. உண்மையில், சர்வதேச நீதிமன்றம் முன்னதாக வழங்கியுள்ள தீர்ப்புகள், பின் எழும் அதையொத்த வழக்குப் பிரச்சனைகளில் சம்பந்தப்பட்ட தரப்பு நாடுகளால் சுட்டிக்காட்டப்பட்டு வாதம் புரியப் படுகின்றன. இது நாடுகள் பின்பற்றும் ஒரு வழக்க நடைமுறையாக உள்ளது எனில் அது மிகையன்று. சர்வதேச நீதிமன்றத்தின் அதிகாரவரம்பை நாடுகள் அங்கீகரித்து ஏற்றுக் கொண்டுதான் ஆக வேண்டும் என்று எந்த கட்டாயமும் இல்லை. ஆனால்

ஒரு முறை அவ்வாறு ஏற்று சம்மதம் அளித்துவிட்டால், பின் சர்வதேச நீதிமன்றம் வழங்கும் தீர்ப்புகளுக்கு சம்பந்தப்பட்ட தரப்பு நாடுகள் கட்டுப்பட்டே ஆக வேண்டும்.

சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்புகளை செயலாக்கல் (En-forcement of the Decisions of I.C.J.):

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 94–வது சரத்தின்படி, சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை, வழக்கின் தரப்பு நாடுகளில் ஒன்று செயற்படுத்தத் தவறினால் அல்லது அவ்வழக்கின் மற்றொரு தரப்பு நாடு, அது குறித்து பாதுகாப்புச் சபையின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அத்தீர்ப்பை பாதுகாப்புச் சபை செயற்படுத்த அதிகாரம் படைத்தது.

இந்த அதிகாரத்தின் கீழ், சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு கட்டுப்படாத நாடுகள் மீது உரிய நடவடிக்கைகளை பாதுகாப்புச் சபை மேற்கொள்கிறது. அந்நாட்டின் மீது பொருளாதார தடைகளை மேற்கொள்வது, அந்நாட்டுடனான தூதாண்மை உறவுகளைத் துண்டித்துக் கொள்ள அய்க்கிய நாடுகளுக்கு அறிவுறுத்துவது அல்லது அய்க்கிய நாடுகளின் படையை அங்கு அனுப்பி அமைதியை நிலை நிறுத்துவது போன்ற நடவடிக்கைகளை பாதுகாப்புச் சபை மேற்கொள்ளலாம். சர்வதேச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பிற்கு, சம்பந்தப்பட்ட வழக்கின் தரப்பு நாடுகள் பொதுவாக கட்டுப்படவே செய்கின்றன. அத்தீர்ப்பின் கீழான தங்கள் கடப்பாடுகளை நிறைவேற்றிவிடுகின்றன.

75. Secretariat of United Nations - Write short notes. (அய்க்கிய நாடுகளின் செயலகம் – சிறு குறிப்பு எழுதுக.)

(அல்லது)

"The Secretary General may bring to the attention of the Security Council any matter in his opinion that may threaten the maintenance of International peace and security". - Discuss. ("ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர், எந்த வகையான செயல்கள் சர்வதேச சமாதானத்திற்கு ஊறு விளைவிக்கும் என்று தனக்குத் தோன்றுகிறதோ அவைகளை பாதுகாப்பு கவுன்சிலின் பார்வைக்கு கொண்டு வரலாம்".– விளக்குக.)

முன்னுரை:

அய்க்கிய நாடுகள் சபையின் மற்றொரு மிக முக்கிய அங்கம், அதன் செயலகம் ஆகும். இது நியூயார்க் நகரில் உள்ளது. செயலகத்தின் கம்பீரத்தை, இதன் வானாளவிய கட்டிடமே பறை சாற்றுகிறது. செயலகம் குறித்து அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 97 முதல் 101 வரையிலான சரத்துகள் விளக்குகின்றன.

தலைமைச் செயலகத்தின் கம்பீரமான தோற்றம்
[Head Quarters of the Secretariat of U.N.]

பொதுச் செயலாளர் (Secretary-General):

அய்க்கிய நாடுகளின் செயலகம், பொதுச் செயலாளர் ஒருவரையும், பிற பணியாளர்களையும் உள்ளடக்கியதாகும். இப்பொதுச் செயலாளரை, அய்க்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில் பொதுச் சபை நியமனம் செய்கிறது. இவர்தான் அய்க்கிய நாடுகள் சபையின் தலைமை நிருவாக அதிகாரி **(Chief Administrative Officer)** ஆவார் என்று சரத்து 97 கூறுகிறது. எனவே இவரை 'அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளர்' **(Secretary-General of the United Nations)** என்றழைக்கிறோம். இவரது பதவிக்காலம் 5 ஆண்டுகள் ஆகும். அய்க்கிய நாடுகள் சபையின் கீழ் பணியாற்றும் அனைத்து அதிகாரிகளும் இவருக்கு கட்டுப்பட்டவர்கள் ஆவர். பொதுச் சபை வகுத்துள்ள விதிமுறைகளின் கீழ், அவர்களை பொதுச் செயலாளர் நியமனம் செய்கிறார். [சரத்து 101 (1)].

பரப்பில் சிறிய மற்றும் நடுநிலை வகிக்கும் நாடுகளிலிருந்து பெருமை வாய்ந்த ஒரு நபரை, பொதுச் செயலாளராக தேர்ந்தெடுத்து நியமனம் செய்வது, அய்க்கிய நாடுகள் சபையின் நடைமுறையில் இருந்து வரும் வழக்கமாக உள்ளது. இவரது நியமனம் மிக முக்கியமான விஷயம் என்பதால், அதற்கு பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகளும் தங்களது ஏகோபித்த வாக்குகளை அளிக்க வேண்டும்.

அய்க்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் மேதகு. அன்டோனியோ குடெரெஸ்
[His Excellency António Guterres The Secretary-General of the United Nations]

டிரிக்வ் லை **(Trigve Lie)** என்பவர்தாம் அய்க்கிய நாடுகளின் முதல் பொதுச்செயலாளர் (1946 முதல் 1952 வரை) ஆவார். தற்போது அய்க்கிய நாடுகளின் ஒன்பதாவது பொதுச்செயலாளராக மேதகு அன்டோனியோ குடெரெஸ் **(H.E.**

António Guterres) என்பவர் 1/1/2017–இல் நியமனம் செய்யப்பட்டுள்ளார். போர்ச்சுகல் நாட்டில் லிஸ்பான் நகரில் 1949–இல் பிறந்த இவர், அய்க்கிய நாடுகள் சபை 1945–ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட பிறகு பிறந்து, இப்பதவியில் அமர்ந்த முதல் பொதுச்செயலாளர் என்ற சிறப்புக்குரியவராவார். அத்துடன் ஒரு நாட்டின் மேனாள் பிரதம அமைச்சராக இருந்து பொதுச்செயலாளர் பதவியில் அமரும் முதல் நபரும் இவரே. ஆம், இவர் 1995 முதல் 2002–ஆம் ஆண்டு வரை போர்ச்சுகல் நாட்டின் பிரதம அமைச்சராக பதவி வகித்தார்.

பொதுச் செயலாளரின் பணிகள் (Functions of the Secretary-General):

(1) இவர் அய்க்கிய நாடுகளின் தலைமை நிருவாக அதிகாரியாக (Chief Administrative Officer) பணியாற்றுகிறார். (சரத்து 97).

(2) இவர் பொதுச் சபை, பாதுகாப்புச் சபை, பொருளாதாரம் மற்றும் சமூகக் குழு, பொறுப்பாண்மைக் குழு ஆகியவற்றின் அனைத்து கூட்டங்களிலும் அய்க்கிய நாடுகள் சபையின் தலைமை நிருவாக அதிகாரி எனும் தகுதியில் செயற்படுகிறார். மேலும் மேற்கண்ட நான்கு அங்கங்களால் தன்னிடம் ஒப்படைக்கப்படும் பிற பணிகளையும் நிறைவேற்றுகிறார். (சரத்து 98).

(3) இவர் அய்க்கிய நாடுகள் சபையின் பணி குறித்த ஆண்டறிக்கையை தயார் செய்து, அதனை பொதுச்சபையிடம் சமர்ப்பிக்கிறார் (சரத்து 98). உண்மையில், இவர் தயாரித்தளிக்கும் மேற்படி ஆண்டறிக்கையின் மீதான கலந்துரையாடலுடன் தான் பொதுச் சபையின் ஆண்டுக் கூட்டத்தொடரே தொடங்குகிறது.

(4) ஒரு விடயம் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பின் பராமரிப்பை அச்சுறுத்துவதாக உள்ளது என்று பொதுச் செயலாளர் அபிப்பிராயப்பட்டால், அவ்விடயத்தை இவர் பாதுகாப்புச் சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். (சரத்து 99).

(5) இவர் உலக பொருளாதார நிலை குறித்த அனைத்து புள்ளி விபரங்களையும் சேகரித்து, அவ்விபரங்களை பொருளாதாரம் மற்றும் சமூகக் குழுவிற்கு அளிக்கிறார்.

(6) இவர் அய்க்கிய நாடுகளின் வரவு–செலவு நிதியறிக்கையை தயாரித்தல், நிதி ஒதுக்கல், உறுப்பு நாடுகளின் பங்களிப்பு தொகைகளை வசூலித்தல், செலவுகளின் மீது கட்டுப்பாடு கொண்டிருத்தல் போன்ற நிதிப்பணிகளையும் மேற்கொள்கிறார்.

(7) செயலகத்தின் நிருவாகத்திற்கு இவரே பொறுப்புடையவர். பல்வேறு நாடுகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அய்க்கிய நாடுகளின் அதிகாரிகளிடம் ஒரு குழுவுணர்வை (team spirit) ஏற்படுத்தி, அதனைப் பராமரிப்பதும் இவரது பணியே.

76. Write an essay about the constitution, powers and functions of International labour organisation. (உலகத் தொழிலாளர் அமைப்பின் அமைப்பு, அதிகாரங்கள், அலுவல்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.)

(அல்லது)

International Labour Organisation - Write short notes. (நாட்டிடை தொழிலாளர் அமைப்பாண்மை – சிறு குறிப்பு எழுதுக.)

சிறப்பு முகமைகள் (Specialised Agencies) - விளக்கம்

இதுகாறும் நாம் அய்க்கிய நாடுகளின் ஆறு முக்கிய அங்கங்கள் (Six Principal Organs of UNO) பற்றி கண்டோம். இவையன்றி பல்வேறு சிறப்பு முகமைகளும் (Specialised Agencies) அய்க்கிய நாடுகள் சபையை சார்ந்து இயங்கி வருகின்றன. அவற்றின் பணிகள் உலக நாடுகள் அனைத்திலும் பரவலாக நடைபெறுகின்றன. இத்தகு சிறப்பு முகமைகள் அரசாங்கங்களுக்கிடையிலான உடன்படிக்கைகளின் (inter-governmental agreements) வாயிலாக ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு இதுகாறும் 16 சிறப்பு முகமைகள் உருவாக்கப் பட்டுள்ளன. பெரும்பாலான நாடுகள் இந்த முகமைகளின் உறுப்பினர்களாக உள்ளன. மேலும் இம்முகமைகள் அனைத்தும் சிறப்பு உடன்படிக்கைகளின் வாயிலாக அய்க்கிய நாடுகளுடன் தொடர்புடையதாக ஆக்கப்பட்டுள்ளன. இவை ஒவ்வொன்றிற்குமென சாசனம் உள்ளது. அதில் இவற்றின் அமைப்பு, பணிகள், கடமைகள் ஆகியன விவரிக்கப்பட்டுள்ளன. மேலும் இவை ஒவ்வொன்றும் தனக்கென சொந்தமாக ஒரு செயலகத்தைக் கொண்டுள்ளன. எனவேதான் அய்க்கிய நாடுகளின் செயலகத்தை, நாம் தலைமைச் செயலகம் (UN Head Quarters) என்றும் அழைக்கிறோம். இவ்வாறு ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிறப்பு முகமைகளில் பிரபலமாக உள்ள ஒன்றுதான், உலகத் தொழிலாளர் அமைப்பாகும். இதனைப் பற்றி சற்று விரிவாகப் பின்வருமாறு காண்போமா?

உலகத் தொழிலாளர் அமைப்பு - கட்டமைப்பு (Composition of International Labour Organisation):

உலகத் தொழிலாளர் அமைப்பானது, 1919–ஆம் ஆண்டில் சர்வதேச சங்கத்தின் (League of Nations) தன்னாட்சி பெற்ற அமைப்பாக நிறுவப்பட்டது. இதன் தலைமை அலுவலகம் ஜெனீவா நகரில் உள்ளது. இது பின்னிட்டு செய்து கொள்ளப்பட்ட ஒரு சிறப்பு உடன்படிக்கையின் வாயிலாக, 1946–ஆம் ஆண்டில் அய்க்கிய நாடுகள் சபையுடன் இணைக்கப்பட்டது.

இதில் உலக நாடுகள் அனைத்தும் உறுப்பினராகலாம். பின்வருவன இதன் மூன்று முக்கிய உறுப்புகள் ஆகும். அவை (1) பொது மாநாடு அல்லது பொது அவை (General Conference), நிருவாகக் குழு (Governing Body), உலகத்

தொழிலாளர் அலுவலகம் அல்லது செயலகம் (International Labour Office or Secretariat).அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடுகளைத் தன் உறுப்பினர் களாக உலகத் தொழிலாளர் அமைப்பு நேரடியாக எடுத்துக்கொள்ளும். மற்ற நாடுகள் இதன் பொது அவை நடத்தும் தேர்தல் மூலம் உறுப்பு நாடாக்கப்படலாம்.

உலகத் தொழிலாளர் அமைப்பின் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றுக்கும் அதன் பொது அவையில் இடமுண்டு. உறுப்பு ஒவ்வொன்றும் இந்த அவைக்கு நான்கு பிரதிநிதிகளை அனுப்பலாம். இவர்களில் இருவர் அரசாங்கத்தின் பிரதிநிதிகள்; ஒருவர் தொழிலாளர் பிரநிநிதி; மற்றொருவர் முதலாளிகளின் பிரதிநிதி. இப் பிரதிநிதிகளுக்கு தலா ஒரு வாக்கு உண்டு. வந்திருந்து வாக்களிக்கும் உறுப்பினர் களில் பெரும்பான்மையினரின் வாக்குகளே, இந்த அவையின் முடிவாகும். இதன் முடிவுகள் பெரும்பாலும் ஏற்புவிதிகளாக மற்றும் பரிந்துரைகளாக (Conventions and Recommandations) உள்ளன.

நிருவாகக் குழுவில் 54 உறுப்பினர்கள் உள்ளனர். இது, அரசாங்கம், தொழிலாளிகள், முதலாளிகள் ஆகியோரின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். இக்குழு பொது இயக்குநரை நியமித்து, அமைப்பின் பணிகளை கண்காணிக்கிறது.

இறுதி உறுப்பான உலகத் தொழிலாளர் அலுவலகத்தின் தலைவர், பொது இயக்குநர் (Director General) ஆவார். இதன் தலைமை அலுவலகம் ஜெனீவா நகரிலும், கிளைகள் பல நாடுகளிலும் உள்ளன. இதன் முக்கியப் பணி, உலகத் தொழிலாளர்கள் மற்றும் தொழில் வாழ்க்கை தொடர்பான தகவல்களை சேகரித்த லாகும். மேலும் பொது அவை எடுக்கும் முடிவுகளுக்கு ஏற்ப புதிய தொழிற் சட்டங்களை உருவாக்க இது உறுப்பு நாடுகளுக்கு உதவி புரிகிறது.

பணிகள் (Functions) :

வேலை நேரத்தை வரையறுத்தல், வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கி, தொழிலாளர்களுக்கு உணவு, உடை, உறையுள், வாழ்க்கைத்தர உயர்வு மற்றும் நோயுற்றபோது மருத்துவ வசதி அளித்து தொழிலாளர் சமுதாயத்தை முன்னேற்றுதல். மேலும் சமதொழிலுக்கு சம ஊதியம் பெறச் செய்தல், தொழிற் கல்வியை அளித்தல் ஆகியன இந்த அமைப்பின் பணிகள் ஆகும்.

77. United Nations Educational, Scientific and Cultural Organisation - Write short notes. (ஐக்கிய நாட்டின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார மையம் – சிறு குறிப்பு எழுதுக.)

'யூனெஸ்கோ' (UNESCO) என்றழைக்கப்படும் 'அய்க்கிய நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சார அமைப்பு', அய்க்கிய நாடுகளின் மற்றொரு சிறப்பு முகமையாகும் (Specialised Agency). இது 1946–ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 14–ஆம் தேதியில் நிறுவப்பட்டது. பின்னிட்டு, இது அய்க்கிய நாடுகள் சபையுடன் ஒரு சிறப்பு உடன்படிக்கையின் வாயிலாக இணைக்கப்பட்டது.

அடிப்படைக் கல்வியை மேம்படுத்தல், அறிவியல் துறையில் ஆய்வுகளை மேற்கொள்வதை ஊக்கப்படுத்தல், நாடுகளிடையே கலாச்சார உறவுகளை வளர்த்தல் ஆகியன இந்த அமைப்பின் நோக்கங்களாகும். இந்த நோக்கங்களை எட்டும் பொருட்டு, இந்த அமைப்பு உலக நாடுகளுக்கும், நாடுகள் அல்லாத அமைப்புகளுக்கும் (Non-State institutions) துணையாக நின்று செயல்படுகிறது.

அய்க்கிய நாடுகளின் உறுப்பு நாடுகள் ஒவ்வொன்றும், இந்த அமைப்பின் உறுப்பினராகலாம். உலகத் தொழிலாளர் அமைப்பில் உள்ளதைப் போன்றே, இந்த அமைப்பிலும் (1) பொது அவை (General Conference), (2) நிருவாகக் குழு (Execuive Body), (3) செயலகம் (Secretariat) எனும் மூன்று உறுப்புகள் உள்ளன.

பொது அவையில் அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் பிரதிநிதித்துவம் உண்டு. இது ஓராண்டிற்கு இரு முறை தனது கூட்டத் தொடரை நடத்துகிறது. இது, மேற்படி அமைப்பின் கொள்கை முடிவுகளை (policy decisions) எடுக்கிறது. மேலும் இது நிருவாகக் குழுவின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கிறது. செயலகத்தின் பொது இயக்குநரை நியமனம் செய்கிறது. இது தனது உறுப்பினர்களின் எளிய பெரும்பான்மை (simple majority) வாக்குகளின் அடிப்படையில் தனது உறுப்பு நாடுகளுக்குண்டான பரிந்துரைகளைச் செய்கிறது.

நிருவாகக் குழுவில், மேற்படி பொது அவையால் தேர்ந்தெடுக்கப்பட்ட 24 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கின்றனர். இவற்றின் பதவிக் காலம் நான்காண்டுகள் ஆகும். பொது அவை எடுத்த முடிவுகளை இக்குழு நிறைவேற்றுகிறது.

இந்த அமைப்பின் மூன்றாவது உறுப்பான செயலகத்தின் தலைவர், இதன் பொது இயக்குநர் ஆவார். நிருவாகக் குழுவால் முன் மொழியப்படும் நபரை பொது அவை பொது இயக்குநராக தேர்ந்தெடுக்கிறது. இது பாரிஸ் நகரில் செயல்படுகிறது.

இவ்வமைப்பு வளரும் நாடுகளின் மேலாதிக்கத்தின் கீழ் செயற்படுவதாகவும், அரசியல் கண்ணோட்டத்துடன் நடந்து கொள்வதாகவும் குற்றஞ்சாட்டி, அமெரிக்க அய்க்கிய நாடுகள் இவ்வமைப்பிலிருந்து 1984–ஆம் ஆண்டில் விலகிக் கொண்டதாக அறிவித்தது. இதனைத் தொடர்ந்து இங்கிலாந்தும் விலகிக் கொண்டது. எனினும் இங்கிலாந்து இந்த அமைப்பில் 186–வது உறுப்பினராக மீண்டும் சேர்ந்து கொண்டது. ஆனால் அமெரிக்க அய்க்கிய நாடுகள் இந்த அமைப்பில் மீண்டும் சேரவில்லை. எது எவ்வாறு இருப்பினும் உலக நாடுகளின் கல்வி, அறிவியல் மற்றும் கலாச்சாரத்தை மேம்படுத்துவதில் இந்த அமைப்பு பல முனைப்பான சேவைகளை இதுகாறும் செய்துள்ளது; செய்து வருகிறது என்றே கூற வேண்டும்.

78. Veto Power - Write short notes. (மறுப்பாணை அதிகாரம் - சிறு குறிப்பு எழுதுக.)

அய்க்கிய நாடுகளின் பாதுகாப்பு சபையில் பதினைந்து நாடுகள் உறுப்பு நாடுகளாக உள்ளன. அவற்றில் அமெரிக்கா, பிரிட்டன், சீனா, பிரான்ஸ் மற்றும்

சோவியத் கூட்டரசு ஆகிய அய்ந்து வல்லரசுகளும் நிரந்தர உறுப்பு நாடுகளாகும் மற்ற பத்து உறுப்பு நாடுகள், நிரந்தரமற்றவையாகும்.

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் 27(2)–வது சரத்தின்படி, பாதுகாப்புச் சபையின் உறுப்பு நாடு ஒவ்வொன்றிற்கும் ஒரு வாக்கு உண்டு. நடைமுறை குறித்த விஷயங்களில் **(Procedural Matters)** ஒரு முடிவிற்கு வர பாதுகாப்புச் சபையின் 9 உறுப்பு நாடுகள் தங்கள் நேர்மறையான வாக்குகளை **(affirmative votes)** அளிக்க வேண்டும். ஆனால் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில் **(Substantial Matters)** ஒரு முடிவிற்கு வருவதற்கு பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தரமான நாடுகள் உள்ளிட்ட 9 உறுப்பு நாடுகள் தங்கள் நேர்மறையான வாக்குகளை அளிக்க வேண்டும். எனினும் முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்களில், எதிர்மறையான வாக்கை **(negative vote)** அளிக்க 5 நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு உரிமை உண்டு. அதாவது நேர்மறையான வாக்களிக்க மறுக்கலாம். இது நிரந்தர உறுப்பு நாடுகளின் 'மறுப்பாணை அதிகாரம்' **(Veto Power)** எனப்படுகிறது.

முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனையின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும் பொழுது, மேற்படி மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதில் தனக்குச் சம்மதமில்லை என்று நிரந்தர உறுப்பு நாடுகள் அய்ந்தில் ஏதேனுமொன்று வாக்களித்து விட்டாலும், அப்பிரச்சனையில் முடிவெடுக்க முடியாது. ஆனால், வாக்கெடுப்பின் போது, அந்நிரந்தர உறுப்பு நாடுகளில் ஏதேனுமொன்று நேர் மறையான அல்லது எதிர்மறையான வாக்குகளில் எதனையும் அளிக்காமல் பேசாமல் இருந்து விட்டால் அல்லது வாக்கெடுப்பு கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருந்து விட்டால், அது தனது சம்மதமில்லாமையைத் தெரிவித்ததாக எடுத்துக் கொள்ளப் படாது. அதாவது மறுப்பாணை அதிகாரத்தை பயன்படுத்தியதாகாது. இதனால் மறுப்பாணை அதிகாரமே பயனற்றதாகிவிடுகிறது.

79. Double Veto Power - Write short notes. (இரட்டை மறுப்பாணை அதிகாரம் - சிறு குறிப்பு எழுதுக.)

பாதுகாப்புச் சபையின் ஆய்வுக்கு வரும் விஷயங்கள் இரு வகைப்படும். அவை (1) நடைமுறை குறித்த விஷயங்கள் **(Procedural matters)**; (2) முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் **(Substantial Matters)**. ஒரு விஷயம் நடைமுறை குறித்தா அல்லது முக்கியத்துவம் வாய்ந்ததா என வினா எழும்போது, முதலில் பாதுகாப்புச் சபையின் தலைவர், இது குறித்து முடிவெடுப்பார். இந்த முடிவை பாதுகாப்புச் சபையின் அய்ந்து நிரந்தர உறுப்பு நாடுகளில் ஏதேனுமொன்று தங்களுக்குள்ள மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தி, எதிர்மறையான வாக்கை (negative vote) அளிக்கலாம். அப்பொழுது பாதுகாப்புச் சபையின் தலைவர் அவ்விஷயம் நடைமுறை குறித்தது என்று முடிவெடுத்திருந்தால், அது முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறும். இங்கு நிரந்தர உறுப்பு நாடுகள் முதன் முதலாக தங்களது மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன. அதாவது

பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப்பு நாடு ஒன்று, தனது மறுப்பாணை அதிகாரத்தை பயன்படுத்தி எதிர்மறையான வாக்கை அளித்ததன் மூலம் நடைமுறை சம்பந்தப்பட்ட விஷயத்தை முக்கியத்துவம் வாய்ந்த விஷயமாக மாற்றுகிறது.

எப்பொழுது ஒரு விஷயம் முக்கியத்துவம் வாய்ந்ததாகிவிட்டதோ, அங்கு ஒரு முடிவிற்கு வர, பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகள் உள்ளிட்ட 9 நாடுகள் வாக்களிக்க வேண்டும் என்பதை நாமறிவோம். எனவே அச்சமயத்தில் அந்த 5 நிரந்தர உறுப்பு நாடுகளில் ஏதேனுமொன்று தனது மறுப்பாணை அதிகாரத்தை மீண்டும் பயன்படுத்தி, அதன் மீது பாதுகாப்புச் சபை முடிவெடுப்பதை தடுக்கலாம். இங்கு அந்த நிரந்தர உறுப்பு நாடுகள் இரண்டாவது முறையாக தங்களது மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்துகின்றன. இதனால் அவ்விஷயம் ஒரு முடிவிற்கு வராமல் முடங்கிப் போகிறது. பாதுகாப்புச் சபையின் 5 நிரந்தர உறுப்பு நாடுகளாக உள்ள வல்லரசுகள், இவ்வாறு இரண்டு முறை தங்களது மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தும் உரிமையும் வலிமையும் பெற்றிருப்பதால், இது 'இரட்டை மறுப்பாணை அதிகாரம்' **(Double Veto)** எனப்படுகிறது. இந்த வகையில் இரஷ்யக் கூட்டரசானது கிரிஸ், செக்கோஸ்லோவாகியா மற்றும் ஸ்பெயின் நாட்டு விஷயங்களில், தனது மேற்கண்ட இரட்டை மறுப்பாணை அதிகாரத்தை பயன்படுத்தியுள்ளது.

80. Mandate system - Write short notes. (பாதுகாப்பாட்சி முறை – சிறு குறிப்பு எழுதுக.)

முதல் உலகப் போர் நடந்து கொண்டிருந்த போது நேச நாடுகள் (Allies), தாங்கள் நடத்தும் போர், நாடு பிடிக்கும் நோக்குடன் அல்லவென்றும், எதிரி நாடுகளே அந்நோக்கத்துடன் போரில் இறங்கியிருக்கின்றன என்றும் அறிக்கைகள் பல விடுத்தன. எனவே போர் முடிந்த பின், தோற்ற நாட்டின் ஆள்நிலங்களை வெற்றி பெற்ற நாடுகள், அடிமை நாடுகளாக எடுத்துக் கொள்ள முடியவில்லை. இதற்காக முதல் உலகப் போர் முடிவில் வகுக்கப்பட்ட முறையே 'பாதுகாப்பாட்சி முறையாகும்' (Mandate system). முதல் உலகப் போரினால் ஏற்பட்ட கசப்பான விளைவுகளின் காரணமாக, உலக நாடுகளிடையே அமைதியைக் காப்பதற்கும், நட்புணர்வையும், நல்லுறவையும் வளர்ப்பதற்காகவும் நிறுவப்பட்ட சர்வதேச சங்க உடன்படிக்கையில் (Covenant of League of Nations) இது பற்றி கூறப்பட்டுள்ளது.

சற்றே நுணுகிப் பார்க்குங்கால், முதல் உலகப் போரின் முடிவில் தோற்றுப் போன செர்மனி, துருக்கி ஆகிய நாடுகளின் ஆள்நிலத்திலிருந்து பறிக்கப்பட்ட ஆள்நிலப்பகுதிகளையும் (குடியேற்றப் பகுதிகள்), அந்நாடுகளின் அடிமை நாடுகளையும் அவை சுதந்திரமான தன்னாட்சி பெற்ற வாழ்க்கைக்கு தயாராகும் வரை, வெற்றி பெற்ற நாடுகளின் ஆட்சியின் கீழ் வைத்து மேற்பார்வையிட அப்பொழுது ஏற்படுத்தப்பட்ட முறையே 'பாதுகாப்பாட்சி முறை' **(Mandate System)** என்று கூறலாம்.

இவ்வாறு மேற்பார்வையிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட நாடுகள் (நேச நாடுகள்), சர்வதேச சங்கத்துடன் (League of Nations) இதற்கென ஓர் உடன்படிக்கை செய்து கொண்டது. இந்த உடன்படிக்கையின் சரத்துக்களை ஒட்டி ஆட்சி நடத்தி வந்தது. மேலும் சர்வதேச சங்கத்தின் மன்றத்திற்கு (Council of League of Nations) ஆண்டறிக்கை சமர்ப்பித்தது. சர்வதேச சங்கத்தின் இப்பொறுப்புகளை கவனிக்க 15 பேர் கொண்ட நிரந்தர பாதுகாப்பு ஆணையம் (Permanent Mandate Commission) ஒன்றும் அமைக்கப்பட்டது. குடியேற்றப் பகுதிகளாக பிற்பட்ட நிலையிலிருந்த ஆள்நிலப்பரப்புகள் முன்னேற இம்முறை ஓரளவு உதவியது என்றால் அது மிகையல்ல.

எனினும் பின்னிட்டு எழுந்த பல்வேறு காரணங்களால் சர்வதேச சங்கம் தனது நோக்கங்களை எட்ட முடியாமல் தோல்வியுற்றது. இதனால் உலகம், இரண்டாம் உலகப் போரை சந்தித்தது. இதனால் உலகில் மீண்டும் அமைதி காக்க, அய்க்கிய நாடுகள் சபை அவதரித்தது. சர்வதேச சங்கம் உருவாக்கிய மேற்படி 'பாதுகாப்பாட்சி முறை', அய்க்கிய நாடுகள் சபையின் கீழ் 'பொறுப்பாட்சி முறையாக' புது வடிவம் பெற்றது. இப்பொறுப்பாட்சியை கவனிக்க, 'பொறுப்பாண்மை குழு' (Trusteeship Council) எனும் அங்கம் ஏற்படுத்தப்பட்டதை நாம் முன்னரே கண்டுள்ளோம்.

81. Explain the status of non-self governing territories under the charter of the United Nations (ஐக்கிய நாடுகள் சாசனத்தின் கீழ் தன்னாட்சி செய்யாத ஆட்சிப் பரப்புகளின் நிலை என்ன என்பதை விளக்குக.)

(அல்லது)

Non-self governing territories - Write short notes. (தன்னாட்சியில்லாத ஆட்சிப் பரப்புகள் – சிறு குறிப்பு எழுதுக.)

அய்க்கிய நாடுகள் சாசனத்தின் XI-வது அத்தியாயத்தின் கீழான 73, 74 ஆகிய சரத்துகள், தன்னாட்சியல்லாத நிலப்பரப்புகள் குறித்த பிரகடனத்தைப் (Declaration regarding Non-Self Governing Territories) பற்றிக் கூறுகிறது.

ஒரு நிலப்பரப்பை ஆட்சி செய்ய முழுமையான அரசாங்கம் ஒன்று தேவை. இத்தகு அரசாங்கத்தைப் பெறாத நிலப்பரப்பு, தன்னாட்சியற்ற நிலப்பரப்பு (Non-Self Governing Territories) எனப்படுகிறது.

இப்படிப்பட்ட தன்னாட்சியில்லாத நிலப்பரப்புகளில் வாழும் மக்களின் மீதான ஆட்சி நிருவாகப் பொறுப்பை அய்க்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் சில ஏற்றுக் கொண்டுள்ளன. அந்நாடுகள், அந்நிலப் பரப்பில் வாழும் மக்களின் நலன் ஒன்றே முக்கியமானது எனும் கொள்கையை அங்கீகரிக்க வேண்டும் என்றும், மேற்படி சாசனத்தால் வகை செய்யப்பட்டுள்ள சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு முறைக்கு ஏற்ற வகையில், அவர்கள் நன் முறையில் வாழ்வதற்கு உண்டான முன்னேற்றங்களை இயன்றவரை செய்வதைத் தமது புனித கடப்பாடாக

ஏற்க வேண்டும் என்றும் சரத்து 73–ன் கீழான முதற்பத்தி கூறுகிறது. மேலும் இதன் பொருட்டு, தன்னாட்சியில்லாத நிலப்பரப்பை ஆளும் மேற்படி உறுப்பு நாடுகள்,–

(a) தன்னாட்சியில்லாத நிலப்பரப்புகளில் வாழும் மக்களுடைய கலாச்சாரத்திற்கு உரிய மதிப்பளிக்கப்படுகிறதா, அவர்களது அரசியல், பொருளாதாரம், சமூக மற்றும் கல்வி மேம்பாட்டிற்கு வகை செய்யப்படுகிறதா, அவர்கள் நியாயமான முறையில் நடத்தப்படுகிறார்களா, அவர்கள் துஷ்பிரயோகத் திற்கெதிராக பாதுகாக்கப்பட்டுள்ளார்களா என்பதை கவனித்து, அவற்றை உறுதி செய்தல் வேண்டும்;

(b) அவர்களது அரசியல் விருப்பங்களை உரிய முறையில் கவனத்தில் கொண்டு, அவர்கள் வாழும் நிலப்பரப்பின் குறிப்பிட்ட சூழ்நிலையின்படி அவர்கள் அமைத்துக் கொண்டுள்ள சுதந்திரமான அரசியல் அமைப்புகளை மேன்மேலும் வளர்ச்சியுறச் செய்வதற்கான உதவிகள் செய்தும், அதன் மூலம் அவர்களது தன்னாட்சி பெறும் வேட்கையை மேம்படுத்த வேண்டும்;

(c) மேற்கண்டவற்றின் வாயிலாக, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை மேம்படுத்த வேண்டும்;

(d) அவர்களது சமூக, பொருளாதார மற்றும் அறிவியல் நோக்கங்களில் நடைமுறைரீதியான முன்னேற்றம் காணும் பொருட்டு, சிறப்பு வாய்ந்த சர்வதேச குழுக்களுடன், பொருத்தமான சூழல் நிலவும் இடம் மற்றும் காலங்களில், ஒத்துழைத்து, அவற்றில் ஆய்வுகள் செய்யப்படுவதை ஊக்குவிக்க வேண்டும்; அவற்றின் முன்னேற்றத்திற்கான நிலையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்;

(e) அந்நிலப்பரப்புகளின் பொருளாதாரம், சமுகம் மற்றும் கல்வி குறித்த நிலைமைகள் தொடர்பான நுட்பமான தகவல்களையும், புள்ளி விபரங்களையும், தகவல் நோக்கங்களுக்காக அய்க்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கு தொடர்ந்து அனுப்பி வருதல் வேண்டும்.

இவ்வாறு அனுப்பப்படும் தகவல்களும், புள்ளி விபரங்களும் செயலகத்தால் தொகுக்கப்பட்டு, பகுத்தாராயப்படும். பின் இது பொதுச் சபையால் நியமிக்கப்பட்டுள்ள "தன்னாட்சியில்லாத ஆட்சிப் பரப்புகளிலிருந்து பெறப்படும் தகவல் குறித்த குழுவிற்கு" அனுப்பப்படும். அக்குழுவானது, தன்னாட்சியில்லாத ஆட்சிப் பரப்புகளில் வாழும் மக்களை, சுய ஆட்சியை நோக்கிக் கொண்டு செல்லத்தக்க பரிந்துரைகளை பொதுச் சபைக்கு அளிக்கும். இதை தன்னாட்சியில்லாத நிலப்பரப்புகளுக்கான சுதந்திர உரிமை விளம்பரம் எனலாம். மேற்கண்டவற்றை காணுறும் பொழுது, தன்னாட்சியில்லா மக்களும், தன்னாட்சியைப் பெறவும், அது வரையில் அவர்களை தன்னாட்சிக்கு தயார் செய்யவும் அய்க்கிய நாடுகள் சாசனம் வழி வகுத்துள்ளது என்பது தெளிவாகிறது.

82. Uniting for peace resolution - Write short notes. (அமைதிக்காக ஒன்று சேர்க்கும் தீர்மானம் – சிறு குறிப்பு எழுதுக.)

வல்லரசுகளுக்கிடையே ஒற்றுமை நிலவ வேண்டும் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டதே அய்க்கிய நாடுகள் சாசனமாகும். இச்சாசனம் அமலுக்கு வந்த ஆரம்ப காலகட்டத்தில் வல்லரசுகளுக்கிடையே ஒற்றுமை நிலவியது என்னவோ உண்மைதான். ஆனால், அய்க்கிய நாடுகள் சபையின் ஆயுதப்படை (Armed Force), பாதுகாப்பு சபையின் (Security Council) கட்டுப்பாட்டில் கொண்டு வரப்பட்டபொழுது, வல்லரசுகளுக்கிடையே இருந்த ஒற்றுமை குலைந்தது. ஏனெனில், பாதுகாப்புச் சபையைப் பொறுத்தவரை வல்லரசுகளாகிய பிரிட்டன், பிரான்சு, அமெரிக்க ஐக்கிய நாடுகள், இரஷ்யக் கூட்டரசு, சீனா ஆகிய 5 நிரந்தர உறுப்பு (Permanent Members) நாடுகளுக்கு இருந்த மறுப்பாணை (Veto Power) அதிகாரமே இதற்கு காரணமாகும். இதனால் ஒரு நாட்டின் மீது மற்றொரு நாடு செய்யும் வலுச் சண்டைத் தாக்குதலை (agression) தடுக்க அய்க்கிய நாடுகள் சபையின் ஆயுதப்படையை அனுப்புவதற்கு வல்லரசுகள் அனைத்தும் இசைந்து ஏகமானதாக செயல்பட முடியவில்லை. வேறு விதத்தில் கூறுவதானால், வல்லரசுகளின் மறுப்பாணை அதிகாரம், பாதுகாப்பு சபையின் செயல் சுதந்திரத்தை முடக்குகிறது எனலாம். எனவே அமெரிக்கப் பிரதிநிதியான அசெசன் ஒரு திட்டத்தை 1950–ஆம் ஆண்டில் கொண்டு வந்தார். இது 'அசெசன் திட்டம்' **(Achesen Plan)** எனப்படுகிறது. இதுவே 'அமைதிக்காக ஒன்று சேர்க்கும் தீர்மானம்' **(Uniting for Peace Resolution)** என்றும் அழைக்கப்படுகிறது.

இத்தீர்மானம் பின்வரும் மூன்று முக்கியப் பகுதிகளைக் கொண்டிருந்தது. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிக்கும் பணியிலிருந்து பாதுகாப்புச் சபையானது, மறுப்பாணை அதிகாரத்தின் மூலம் தடுக்கப்பட்டால், அவ்வாறு தடுக்கப்பட்டதிலிருந்து 24 மணி நேரத்திற்குள் பொதுச் சபையைக் கூட்ட வகை செய்தது, முதற்பகுதி. இத்தீர்மானத்தின் இரண்டாவது பகுதி, இரஷ்யக் கூட்டரசு உட்பட பதினான்கு உறுப்பு நாடுகளைக் கொண்ட 'அமைதிக்கூர் நோக்கு ஆணையம்' **(Peace Observation Commission)** ஏற்பட வகை செய்தது. மூன்றாவது பகுதி, 'கூட்டு நடவடிக்கைக் குழு' **(Collective Measures Committee)** ஒன்றும் ஏற்பட வகை செய்யப்பட்டது. இதிலும் பதினான்கு நாடுகள் உறுப்பு நாடுகளாய் அமைந்தன. கூட்டுப் பாதுகாப்பு நோக்கத்திற்காக உறுப்பு நாடுகள், தமது படைப்பிரிவுகளை அனுப்ப வேண்டிய கடப்பாட்டையும் இத்தீர்மானம் வலியுறுத்தியது.

-o0o-

பிரச்சனைகளும்
தீர்வுகளும்
[Problems and Solutions]

பிரச்சனைகளும் தீர்வுகளும்
[Problems and Solutions]

பிரச்சனை 1:

A group of pirates belonging to State 'A' were arrested 10 nautical miles off the coast of State 'X'. State 'A' requested State: 'X' to hand over the pirates for which State 'X' refused. State 'A' moved to the ICJ. Decide.

'X' நாடு தனது நிலப்பரப்பிலிருந்து 10 கடல் மைல்கள் தொலைவில் 'A' நாட்டை சார்ந்த கடல் கொள்ளையர்களை கைது செய்தது. அவர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு 'A' நாடு 'X' நாட்டைக் கேட்டுக் கொண்டது. ஆனால் 'X' நாடு அதை மறுத்தது. 'A' நாடு சர்வதேச நீதிமன்றத்தை நாடியது. தீர்மானிக்கவும்.

தீர்வு:

ஒரு நாட்டின் நில எல்லைப்பகுதி கடலையொட்டி முடிவதாகக் கொண்டால், அக்கடலில், கரையையொட்டி அமைந்துள்ள பகுதியே 'எல்லையோர கடல்' **(Territorial Water or Territorial Sea)** எனப்படுகிறது. இதனை 'கரையோர கடல் கச்சை' **(Maritime Belt)** என்றும் அழைப்பதுண்டு.

இந்த எல்லையோரக்கடலானது, அக்கடற்கரை நாட்டின் ஆள்நிலப்பகுதி எனவும், அது அந்நாட்டின் சொத்தெனவும், அதன் மீது அக்கரைபோர நாட்டிற்கு முழு ஆதிக்கம் உண்டெனவும், ஆனால் மற்ற நாட்டு வணிகக்கப்பல்களுக்கு தீங்கிலா வழியுரிமை மட்டுமே உண்டு என்றும் நாட்டிடைச்சட்டம் ஏற்கிறது.

மேற்கண்ட பிரச்சனைக்கு தீர்வு காண ஒரு நாட்டின் எல்லையோரக் கடல் பகுதி கடலில் எவ்வளவு தூரம் உள் நோக்கிச் செல்லும், அதாவது கடலில் எவ்வளவு அகலத்திற்கு அக்கடற்கரை நாட்டிற்கு ஆள்நில ஆதிக்கம் உண்டு என்பதற்கு சர்வதேச மாநாட்டு ஏற்பு விதிகள் ஏதும் உள்ளனவா என்பதை முதலில் இங்கு கவனிக்க வேண்டும்.

அந்த வகையில் கடலுக்குள் தூரத்தை நிர்ணயிப்பது குறித்து பல நாடுகள் பல வகைகளில் உரிமை கொண்டாடின. இது 3 மைல்கள் தொடங்கி வெவ்வேறுபட்ட அளவுகளில் நாடுகளால் நிர்ணயிக்கப்பட்டன; ஏற்கப்பட்டன; பின் மாற்றப்பட்டன.

இந்நிலையில் 1982–ஆம் ஆண்டில் கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் ஏற்பு மாநாடு **(U.N. Convention on the Law of Seas, 1982)** நடந்தது.

அம்மாநாட்டு உடன்படிக்கையின் 3–ஆவது உறுபானது **(Article 3)** கரையோர நாட்டிற்கான கடலின் ஆள்நில அகலம் 12 கடல் மைல்கள் (nautical miles) என நிர்ணயம் செய்கிறது. எனவே பொதுவாக எல்லையோரக் கடல் 12 மைல்களுக்கு அப்பால் நீட்டிக்கப்பட்டால், அது நாட்டிடைச்சட்டத்திற்கு முரணானது எனக் கருதப் படும்.

இப்போது நமது மேற்படி பிரச்சனைக்கு வருவோம். அதில் **'X'** நாடு தனது நிலப்பரப்பிலிருந்து 10 கடல் மைல்கள் தொலைவில் **'A'** நாட்டை சார்ந்த கடல் கொள்ளையர்களை கைது செய்தது. இங்கு மேற்கண்ட கடல் சட்டம் பற்றிய அய்க்கிய நாடுகள் ஏற்பு விதியின்படி **'X'** நாட்டிற்கு 12 கடல் மைல்கள் அகலத்திற்கு கடலில் ஆதிக்க உரிமை உண்டு. எனவே அது தனது கடற்கரை ஓரத்திலிருந்து 10 கடல் மைல்கள் தொலைவில் இருந்த 'A' நாட்டை சார்ந்த கடல் கொள்ளையர்களை கைது செய்ய முழு அதிகாரம் படைத்தது.

இங்கு மற்றொரு சங்கதியையும் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது, **'X'** நாட்டின் எல்லையோரக் கடலில் 12 கடல் மைல்களுக்குள் இருந்த **'A'** நாட்டை சார்ந்த நபர்கள் சாதாரண நபர்கள் அல்லர்; அவர்கள் மேற்படி பிரச்சனையில் கூறப்பட்டவாறு **'கடல் கொள்ளையர்கள்' (Pirates)**.

கப்பலைச்சூறையாடி கொள்ளையடிக்கும் நோக்கம் கொண்ட கடற் கொள்ளையர்களை நாட்டிடைச்சட்ட ஏற்பு விதிகள் மிகக் கடுமையான கண்ணோட்டத்துடன் அணுகுகின்றன. கடற்கொள்ளையை உலகெதிர் குற்றமாக நாட்டிடைச் சட்டம் பார்க்கிறது. எனவே இக்குற்றத்தின் மீது **உலக நாடுகள் அனைத்திற்கும் அதிகாரவரம்பு (Universal Jurisdiction)** உண்டு என்றும், அதன் மீது எந்த வொரு நாடும் தனது ஆள்நில அதிகாரவரம்பைச் செலுத்தி தக்க நடவடிக்கைகளை மேற் கொள்ளலாம் என்றும் நாட்டிடைச் சட்டம் வகுக்கிறது.

1982–ஆம் ஆண்டின் கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் ஏற்பு மாநாட்டின் உறுபு 100–ஆனது (Article 100 of U.N. Convention on the Law of Seas, 1982) ஆழ்கடலின் மீதான கடற்கொள்ளையை ஒடுக்குவதில் ஒத்துழைக்க வேண்டிய கடமை எல்லா நாடுகளுக்கும் உண்டு என்று கூறுகிறது. மேலும் இத்தகு கொள்ளைக்காரர்கள் தங்களின் நாட்டுரிமையையும், நாட்டின் பாதுகாப்பையும் பெற அருகதையற்றவர்கள் ஆவர் **(உறுபு 104).**

குறிப்பாக கடற்கொள்ளையர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கப்பலை பறிமுதல் செய்யவும், அக்கொள்ளையர்களைக் கைது செய்து அவர்களது குற்றத்திற் காக விசாரணை செய்யவும் அவ்வாறு பறிமுதல் செய்த நாட்டின் நீதிமன்றங்களுக்கு அதிகாரவரம்பு உண்டு என்றும் மேற்படி ஏற்பு மாநாட்டின் உறுபு **105** கூறுகிறது. இது கடற்கொள்ளையர்களுக்கு எதிராக உலக நாடுகள் அனைத்தும் தங்களது அதிகார வரம்பை செயலுறுத்தலாம் என்ற நிலைப்பாட்டைச் சுட்டிக்காட்டுகிறது (The jurisdiction exerciable in regard to pirates is of a 'Universal' nature).

எனவே மேற்கண்ட உறுபுகள் 3, 100, 104 மற்றும் 105–இன்படி இப்பிரச்சனையில் தான் பிடித்த அக்கடல் கொள்ளையர்களை 'A' நாட்டிடம் ஒப்படைக்க 'X' நாடு மறுத்தது சரியே ஆகும். இதற்காக 'A' நாடு சர்வதேச நீதிமன்றத்தை நாடுவது வீண் முயற்சி ஆகும். அக்கொள்ளையர்களை 'X' நாடு தனது உள்நாட்டு சட்டத்தின்படி விசாரித்து தண்டனை வழங்க உலக அதிகாரவரம்பு கொண்டுள்ளது.

பிரச்சனை 2:

State A captured the fishing vessel and arrested 10 fishermen of State B on the ground that fishing was taken up at a distance of 15 nautical miles from its base line, which is within its Exclusive Economic Zone. State B objected that State A has right only in its territorial waters. Decide.

'A' என்ற நாடு அதன் கரையொட்டிய அடிக்கோட்டிலிருந்து 15 கடல் மைல்கள் தூரத்தில் உள்ள அதன் தனியுரிமை பொருளாதாரப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த 'B' நாட்டைச் சேர்ந்த மீனவர்கள் 10 பேரை கைது செய்து அவர்களது கப்பலையும் கைப்பற்றியது. 'A' நாட்டிற்கு அதன் எல்லையோரக் கடல் நீரில் மட்டுமே உரிமை உள்ளது என்று 'B' நாடு ஆட்சேபித்தது. தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம் முதலில் 'தனியுரிமை கொண்ட பொருளாதார பகுதி' **(Exclusive Economic Zone)** என்பது ஒரு கடலோர நாட்டின் கரையொட்டிய அடிக்கோட்டிலிருந்து எவ்வளவு தூரத்திற்கு கடலில் உள்ளது என்பதை அறிதல் அவசியமாகும்.

இதற்கு கடல் அடிப்பகுதி பற்றி விவாதிக்க 1972–ஆம் ஆண்டில் ஜெனீவா–வில் கூட்டப்பட்ட ஐக்கிய நாடுகள் கூட்டத்தில் கென்யா நாடு கொடுத்த விளக்கம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது. அதன்படி, "ஒவ்வொரு கடலோர நாட்டிற்கும் கடலோரத்திலிருந்து 200 கடல் மைல்களுக்கு (370 கி.மீ.) கடல் பொருளாதார பகுதி நிர்ணயிக்கப்படும் என்றும், இந்தப்பகுதியில் கடலோர நாடு தனியுரிமை பெற்றிருக்கும் என்றும், இவ்வாறு தனியுரிமை கொண்ட கடலோர பொருளாதார பகுதியில் உள்ள வளங்களை வேறு நாடுகள் அனுபவிக்க (சுரண்டிச் செல்ல) அனுமதிக்கப்படமாட்டாது என்றும், இப்பகுதியில் கடலாய்வுகளை நடத்தவும், மீன் பிடித்தல், எண்ணெய் எடுத்தல், கனிம வளங்களை வெட்டியெடுத்தல் போன்றவற்றிற்கு அக்கரையோர நாட்டிற்கு முழு ஆதிக்கம் உண்டு என்றும்" கென்யா நாடு விளக்கியது.

இந்த விளக்கம் 1982–ஆம் ஆண்டின் கடல்கள் சட்டம் பற்றிய ஐக்கிய

நாடுகள் ஏற்பு மாநாட்டில் **(U.N. Convention on the Law of Seas, 1982)** மேலும் வலுப் பெற்றது. இம்மாநாட்டின் 3–ஆவது உறுபானது (Article 3) கரையோர நாட்டிற்கான கடலின் ஆள்நில அகலம் 12 கடல் மைல்கள் (nautical miles) என நிர்ணயம் செய்கிறது. அதாவது ஒரு நாட்டின் கரையோர கடலின் அகலமானது அதன் கரையோர அடிக்கோட்டிலிருந்து 12 கடல் மைல்கள் தூரத்திற்கு கடலில் செல்கிறது. இது **எல்லையோரக்கடல் (Territorial Water)** எனப்படுகிறது. (இது குறித்து நாம் சென்ற பிரச்சனையின் தீர்வில் விரிவாகக் கண்டுள்ளோம்.)

மேற்படி 1982–ஆம் ஆண்டு மாநாட்டில் வகுக்கப்பட்ட இன்னும் சில உறுபுகளை நாம் கண்டால் இப்பிரச்சனையின் தீர்வை நெருங்கிவிடலாம். அதற்கு முன்னால் பின்வரும் ஒரு படத்தை பார்வையிடுவது நமது புரிதலை எளிமையாக்கும்.



இப்போது 1982–ஆம் ஆண்டு மாநாட்டு உறுபுகளுக்கு (Articles) வருவோம். அவற்றின்படி,

(1) ஒரு நாட்டின் எல்லையோரக் கடலுக்கு (அதாவது 12 கடல் மைல்களுக் கும்) அப்பாலும், அடுத்ததாகவும் கடலில் உள்ள தூரமே சம்பந்தப்பட்ட கடலோர

நாட்டின் தனியுரிமை பொருளாதார பகுதி (The exclusive economic zone is an area beyond and adjacent to the territorial sea.....) என்று **உறுப்பு 55–ம்,**

(2) இத்தனியுரிமைப் பொருளாதாரப் பகுதியில் உயிர்வாழும் அல்லது உயிர்வாழில்லா இயற்கை வளங்களை தேடியறியவும் மற்றும் தன்னாட்டு நலனுக்காக முழுமையாக பயன்படுத்தவும், பாதுகாத்து மேலாண்மை செய்யவும், மேலும் அப்பகுதி கடல் நீர், கடலலைகள் மற்றும் காற்றிலிருந்து மின்சக்தி உற்பத்தி செய்யவும் கடலோர நாட்டிற்கு இறையாண்மை உரிமைகள் உண்டு (Coastal State has Sovereign rights for the purpose of exploring and exploiting, conserving and managing the natural resources, whether living or non-living, of the waters...., and with regard to other activities for the economic exploitation and exploration of the zone, such as the production of energy from the water, currents and winds) என்றும், அப்பகுதியில் செயற்கைத் தீவுகள், கட்டடங்கள் ஆகியவற்றை நிறுவி பயன்படுத்தல், கடல்சார் அறிவியல் ஆய்வுகளை மேற் கொள்ளல், கடல்சார் சுற்றுச்சூழலை பேணிப்பாதுகாத்தல் தொடர்பாக கடலோர நாட்டிற்கு அதிகாரவரம்பு உண்டு [Coastal State has jurisdiction with regard to (i) the establishment and use of artificial islands, installations and structures; (ii) marine scientific research; (iii) the protection and preservation of the marine environment] என்றும் **உறுப்பு 56–ம்,**

(3) இத்தனியுரிமை பொருளாதாரப் பகுதியானது எல்லையோரக்கடல் அகலத்தின் அடிக்கோட்டிலிருந்து 200 கடல் மைல்களுக்கு அப்பால் நீட்டிக்கப்பட லாகாது (The exclusive economic zone shall not extend beyond 200 nautical miles from the baselines from which the breadth of the territorial sea is measured) என்று **உறுப்பு 57–ம்** நமக்கு தெளிவாக்குகிறது.

சற்றே தொகுத்துச் சொல்வதெனில், உறுப்பு 3–இன்படி கடலோர நாட்டின் கரையோர அடிக்கோட்டிலிருந்து 12 கடல் மைல்கள் தூரம் அந்நாட்டின் எல்லையோரக் கடல் ஆகும், உறுப்பு 55 மற்றும் 57–இன்படி மேற்படி எல்லையோரக்கடலுக்கும் அப்பால் 200 கடல் மைல்கள் தூரம் அதன் தனியுரிமை பொருளாதார பகுதி ஆகும், இதில் உறுப்பு 56–இன்படி அந்நாட்டிற்கு மீன் பிடித்தல் உள்ளிட்ட பல்வேறு பொருளாதார தனியுரிமைகள் உள்ளன.

இப்போது நமது பிரச்சனைக்கு வருவோம். இதில் **'A'** நாடு கரையொட்டிய அடிக்கோட்டிலிருந்து 15 கடல் மைல்கள் தூரத்தில் உள்ள தனது தனியுரிமை கடல் பொருளாதார பகுதியில் மீன் பிடித்துக்கொண்டிருந்த **'B'** நாட்டின் மீனவர்கள் 10 பேரைக் கைது செய்து, அவர்களது கப்பலையும் கைப்பற்றுகிறது. இவ்வாறு செய்ய **'A'** நாட்டிற்கு அதன் எல்லையோரக்கடலில் மட்டுமே உரிமை உண்டு என்று **'B'** நாடு ஆட்சேபிக்கிறது. **இங்கு கவனிக்க வேண்டிய விடயம் 15 கடல் மைல்கள் தூரம்.** அதாவது **'A'** நாட்டின் கரையொட்டிய அடிக்கோட்டிலிருந்து 15 கடல் மைல்கள் தூரம் என்றால், முதல் 12 மைல்கள் தூரம் அதன் எல்லையோரக் கடல் ஆகும், அதற்கப்பால்

200 கடல் மைல்கள் வரை வரும் தூரம் அதன் தனியுரிமை பொருளாதாரப்பகுதி ஆகும், இதில் 15 கடல் மைல்களில் 12 கடல் மைல்கள் போக மீதமிருக்கும் 3 கடல் மைல் தூரம் **'A'**-யின் தனியுரிமை பொருளாதாரப்பகுதியில் வந்து விடுகிறது. எனவே இதனை எல்லையோரக்கடல் (Territorial Water) என்று **'B'** நாடு செய்யும் ஆட்சேபணை சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல.

மேலும் மேற்படி 1982–ஆம் ஆண்டு மாநாட்டின் **உறுபு 73–இன்படி,** தனது தனியுரிமை பொருளாதாரப்பகுதியில் (அதாவது எல்லையோரக்கடலிலிருந்து 200 கடல் மைல்களில்) அத்துமீறி நுழையும் பிற நாட்டுக்கப்பலில் நுழைய, சோதனையிட, மற்றும் அப்பிற நாட்டவர்களை கைது செய்து தன்னாட்டு சட்டதிட்டங்களின்படி நீதி முறை நடவடிக்கை எடுக்க கடலோர நாட்டிற்கு இறையாண்மை உரிமைகள் உண்டு (Coastal State may take such measures including, inspection, arrest, and judicial proceedings, as may be necessary to ensure compliance with the coastal State's laws and regulations - **Article 73**)

எனவே **'A'** நாடு தனது தனியுரிமை பொருளாதார பகுதியில் நுழைந்த **'B'** நாட்டின் 10 மீனவர்களைக் கைது செய்து அவர்களது கப்பலைக் கைப்பற்றிய செயலானது, மேற்கண்ட**1982–ஆம் ஆண்டின் கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள்** ஏற்பு மாநாட்டு (U.N. Convention on the Law of Seas, 1982) உறுபுகள் 3, 55, 56, 57 மற்றும் 73–இன்படி சரியானதே, நாட்டிடைச்சட்டத்தின்படி ஏற்புடையதே என்பதே இங்கு தீர்வாகும்;

'B' நாட்டின் ஆட்சேபணை நிலைக்காது; எனவே வெற்றி பெறாது.

பிரச்சனை 3:

River Jalan passes through State 'A' and State 'B'. 'A' and 'B' entered into a treaty in 1932 to construct dams across Jalan. In 2019 'B' was divided into two separate States 'B1' and 'B2'. Now State 'A' wants to execute the treaty but 'B1' in which river Jalan flows now refuses to entertain the treaty obligations. State 'A' moves to the ICJ against State 'B1'. Decide.

நாடுகள் 'A' மற்றும் 'B' வழியாக ஜலன் ஆறு பாய்கிறது. 1932-ம் ஆண்டு 'A' மற்றும் 'B' அவ்வாற்றின் மீது அணைகள் கட்ட ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது. 2019-ம் ஆண்டு 'B' நாடு இரண்டாக பிரிந்து 'B1' மற்றும் 'B2' ஆனது. தற்போது 'B1' நாட்டில் ஜலன் பாய்வதால் 'A' நாடு 'B1' நாட்டிடம் முந்தைய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த முற்பட்டபோது 'B1' நாடு அவ்வுடன்படிக்கையை ஏற்க மறுத்தது. 'A' நாடு சர்வதேச

நீதிமன்றத்தை நாடியது. தீர்மானி.

தீர்வு:

இப்பிரச்சனை, நாட்டிடை உடன்படிக்கைகள் (Treaties) தொடர்பானது.

1969–ஆம் ஆண்டுக்கு முன்பு வரை நாட்டிடை உடன்படிக்கைகள் பெரும் பாலும் நாட்டிடை வழக்கத்தின்பாற்பட்ட விதிகளையே உள்ளடக்கி இருந்தன. ஆனால் 23–05–1969–ஆம் தேதியில் வியன்னாவில் கூடிய உடன்படிக்கைகள் சட்டம் பற்றிய மாநாட்டில் நாட்டிடை உடன்படிக்கைகள் பற்றிய சட்டதிட்டங்கள் சீரமைக்கப்பட்டு, தொகுத்தேற்கப்பட்டது. இம்மாநாட்டு விதிகள் 27–01–1980–ஆம் தேதியில் செயல் விளைவுக்கு கொணரப்பட்டு, அதன் உறுப்பு நாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடியதா யின. (**Vienna Convention on the Law of Treaties,1969** - Done at Vienna on 23 May 1969 and Entered into force on 27 January 1980.)

எனினும் இதில் கூறப்படாத பொருள்களையொட்டி நாட்டிடைச்சட்டத்தில் முன்பிருந்த வழக்கச்சட்ட நெறிகளே தொடர்ந்து வழங்கி வருதல் வேண்டும் என்று இம்மாநாட்டு விதிகளின் முகப்புரை (Affirming that the rules of customary international law will continue to govern questions not regulated by the provisions of the present Convention) கூறுகிறது.

நமது மேற்படி பிரச்சனையில் A மற்றும் B நாடுகளுக்கிடையே ஒரு உடன் படிக்கை **1932–ஆம் ஆண்டில்** செய்து கொள்ளப்படுகிறது. அதாவது உடன் படிக்கைகள் பற்றிய சட்டத்திற்காக 1969–இல் வியன்னாவில் நடந்த மாநாட்டிற்கும் பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி உடன்படிக்கை செய்து கொள்ளப்படுகிறது. இங்கு வியன்னா மாநாட்டு ஏற்பு விதிகளின் **உறுபு 4** கூறுவதை கவனிக்க வேண்டும். அதன் படி, வியன்னா மாநாட்டு ஏற்பு விதிகள் செயல்விளைவுக்கு வந்த பிறகு நாடுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கு மட்டுமே அந்த ஏற்பு விதிகள் பொருந்தும் என்றும், அவற்றுக்கு கடந்த கால செயல்களைக் கட்டுப்படுத்தி முன்மேவிச் செல்லும் செயல்திறன் கிடையாது (**Article 4: Non-retroactivity of the present Convention** : ...the Convention applies only to treaties which are concluded by States after the entry into force of the present convention with regard to such States) என்றும் உறுபு 4 கூறுகிறது. எனவே நமது பிரச்சனைக்கு 1932–ஆம் ஆண்டில் நாடு களுக்கிடையிலான உடன்படிக்கைகள் தொடர்பாக இருந்த நாட்டிடை வழக்க நெறி விதிகளும், சட்ட முதுமொழிகளுமே பொருந்தும் என்பது தெளிவாகிறது.

இப்பிரச்சனையில் A மற்றும் B நாடுகளுக்கிடையே பாயும் ஜலன் ஆற்றின் மீது அணைகள் கட்ட அவையிரண்டும் ஒரு உடன்படிக்கையை 1932–ஆம் ஆண்டு செய்து கொள்கின்றன. இந்நிலையில் சுமார் 85 ஆண்டுகள் கழித்து அதாவது 2019–ஆம் ஆண்டில் B நாடு இரண்டாகப் பிரிந்து B1 நாடு, B2 நாடு என்றானது. மேலும் சம்பந்தப்பட்ட ஜலன் ஆறு இப்போது B1 நாட்டின் வழியாகப் பாய்கிறது.

நீதிமன்றத்தை நாடியது. தீர்மானி.

தீர்வு:

இப்பிரச்சனை, நாட்டிடை உடன்படிக்கைகள் (Treaties) தொடர்பானது.

1969–ஆம் ஆண்டுக்கு முன்பு வரை நாட்டிடை உடன்படிக்கைகள் பெரும் பாலும் நாட்டிடை வழக்கத்தின்பாற்பட்ட விதிகளையே உள்ளடக்கி இருந்தன. ஆனால் 23–05–1969–ஆம் தேதியில் வியன்னாவில் கூடிய உடன்படிக்கைகள் சட்டம் பற்றிய மாநாட்டில் நாட்டிடை உடன்படிக்கைகள் பற்றிய சட்டதிட்டங்கள் சீரமைக்கப்பட்டு, தொகுத்தேற்கப்பட்டது. இம்மாநாட்டு விதிகள் 27–01–1980–ஆம் தேதியில் செயல் விளைவுக்கு கொணரப்பட்டு, அதன் உறுப்பு நாடுகளைக் கட்டுப்படுத்தக்கூடியதா யின. (**Vienna Convention on the Law of Treaties,1969** - Done at Vienna on 23 May 1969 and Entered into force on 27 January 1980.)

எனினும் இதில் கூறப்படாத பொருள்களையொட்டி நாட்டிடைச்சட்டத்தில் முன்பிருந்த வழக்கச்சட்ட நெறிகளே தொடர்ந்து வழங்கி வருதல் வேண்டும் என்று இம்மாநாட்டு விதிகளின் முகப்புரை (Affirming that the rules of customary international law will continue to govern questions not regulated by the provisions of the present Convention) கூறுகிறது.

நமது மேற்படி பிரச்சனையில் A மற்றும் B நாடுகளுக்கிடையே ஒரு உடன் படிக்கை **1932–ஆம் ஆண்டில்** செய்து கொள்ளப்படுகிறது. அதாவது உடன் படிக்கைகள் பற்றிய சட்டத்திற்காக 1969–இல் வியன்னாவில் நடந்த மாநாட்டிற்கும் பல ஆண்டுகளுக்கு முன்பு மேற்படி உடன்படிக்கை செய்து கொள்ளப்படுகிறது. இங்கு வியன்னா மாநாட்டு ஏற்பு விதிகளின் **உறுபு 4** கூறுவதை கவனிக்க வேண்டும். அதன் படி, வியன்னா மாநாட்டு ஏற்பு விதிகள் செயல்விளைவுக்கு வந்த பிறகு நாடுகள் செய்து கொள்ளும் உடன்படிக்கைகளுக்கு மட்டுமே அந்த ஏற்பு விதிகள் பொருந்தும் என்றும், அவற்றுக்கு கடந்த கால செயல்களைக் கட்டுப்படுத்தி முன்மேவிச் செல்லும் செயல்திறன் கிடையாது (**Article 4: Non-retroactivity of the present Convention** : ...the Convention applies only to treaties which are concluded by States after the entry into force of the present convention with regard to such States) என்றும் உறுபு 4 கூறுகிறது. எனவே நமது பிரச்சனைக்கு 1932–ஆம் ஆண்டில் நாடு களுக்கிடையிலான உடன்படிக்கைகள் தொடர்பாக இருந்த நாட்டிடை வழக்க நெறி விதிகளும், சட்ட முதுமொழிகளுமே பொருந்தும் என்பது தெளிவாகிறது.

இப்பிரச்சனையில் A மற்றும் B நாடுகளுக்கிடையே பாயும் ஜலன் ஆற்றின் மீது அணைகள் கட்ட அவையிரண்டும் ஒரு உடன்படிக்கையை 1932–ஆம் ஆண்டு செய்து கொள்கின்றன. இந்நிலையில் சுமார் 85 ஆண்டுகள் கழித்து அதாவது 2019–ஆம் ஆண்டில் B நாடு இரண்டாகப் பிரிந்து B1 நாடு, B2 நாடு என்றானது. மேலும் சம்பந்தப்பட்ட ஜலன் ஆறு இப்போது B1 நாட்டின் வழியாகப் பாய்கிறது.

இந்நிலைப்பாட்டிற்கு **Rebus sic stantibus** என்ற இலத்தீன் முதுமொழி ஒன்றைப் பொருத்திப்பார்ப்பது அவசியமாக உள்ளது. இது **உடன்படிக்கையின் அடிப் படை சூழல் மாற்றத்தால் உடன்படிக்கை செல்லாததாகும்** (Unenforceability of a treaty due to fundamentally changed circumstances) என்று கூறுகிறது. இங்கு A நாடும் B நாடும் 1932–இல் ஒரு உடன்படிக்கையில் ஈடுபடுகின்றன. 2019–இல் B நாடு மறைந்து, அது B1, B2 என்ற இரண்டு நாடுகளாகப் பிரிந்துவிடுகிறது. உடன்படிக்கையின் ஒரு தரப்பு நாடான B நாடே இங்கு இல்லாமல் போய்விடுவது என்பது உடன்படிக்கையின் அடிப்படை சூழலே மாறிப்போவதைத்தான் குறிக்கிறது. எனவே அந்த B நாடு, A நாட்டுடன் செய்து கொண்ட மேற்படி உடன்படிக்கையும் மறைந்து போகிறது. இந்நிலையில் உடன்படிக்கையை ஒப்புக்கொண்டவாறு நிறைவேற்றும்படி ஜலன் ஆறு தற்போது பாயும் B1 நாட்டை A நாடு கோருவது மேற்படி அடிப்படை சூழல் மாற்றத்தால் உடன்படிக்கை விடுவிப்பு பெறும் என்ற இலத்தின் முது மொழியின்படி செல்லத்தக்கதல்ல. B1 நாடு அவ்வுடன்படிக்கையை ஏற்க மறுப்பது செல்லத்தக்கதே.

இங்கு நாட்டிடைச்சட்டத்தின் மற்றொரு கருத்துருவான **நாட்டு வாரிசுரிமை (State Succession)** பற்றி நாட்டிடைச்சட்டம் கூறும் நிலைப்பாட்டையும் ஆராய்வது நமது பிரச்சனையின் தீர்வுக்கு மேலும் வலு சேர்க்கும். அதாவது ஒரு நாடு பல பகுதி களாக உடைந்து, அந்த ஒவ்வொரு பகுதியும் ஒரு உலக நபராக உருமாறும் பொழுது, இத்தகு முழு வாரிசுரிமை உண்டாகிறது. அப்படி துண்டாக உடைந்த ஒவ்வொரு பகுதியும், தனது மூல நாட்டிற்கு வாரிசாகிறது. இதனை **முழு வாரிசுரிமை (Univer-sal Succession)** என்று நாட்டிடைச் சட்டம் கூறுகிறது. நமது பிரச்சனையில் B நாடு மறைந்து அது B1 நாடு, B2 நாடு என்ற இரண்டு நாடுகளாகப் பிறந்துள்ளதால், அவை இரண்டும் B நாட்டின் முழு வாரிசுகள் ஆகும். ஆனால் இதனைக்கொண்டு B நாடு A நாட்டுடன் செய்து கொண்ட உடன்படிக்கையில் கூறப்பட்ட கடப்பாடுகளுக்கு B1 நாடு, B2 நாடு வாரிசாகிவிடுமே என வினவினால், அதற்கு 'ஆகாது' என்று எதிர் மறையாகத்தான் பதிலளிக்க வேண்டி வரும்.

இதற்குக் காரணம், உடன்படிக்கையின் வாயிலாகப் பெறப்படும் உரிமை களுக்கும் கடப்பாடுகளுக்கும் வாரிசுரிமை குறித்து (Succession to Treaty Rights and Obligations) நாட்டிடைச்சட்டம் கூறும் நிலைப்பாடுதான். குறிப்பாக உடன்படிக்கை செய்து கொண்டு இன்னமும் நடைமுறைப்படுத்தப்படாத அதாவது இனிதான் நிறைவேற்ற வேண்டிய உடன்படிக்கைகளில் (Treaties of executory character) நாட்டு வாரிசுரிமை இல்லை என்பதுதான்.

சற்றே விளங்கச் சொல்வதெனில், ஒரு நாடு உடன்படிக்கையின் கீழான உரிமைகளை அடைய வேண்டிய நிலையில் இருக்கும் பொழுது அல்லது கடமைகளை நிறைவேற்ற வேண்டிய நிலையில் (executory character) இருக்கும் பொழுது, அந்நாடு மறைந்து, அதன் ஆள் நிலம் மற்றொரு நாட்டின் கட்டுப்பாட்டிற்குள் மாறிச்

சென்று விட்டால் (அல்லது நமது பிரச் சனையில் கண்டவாறு B நாடு மறைந்து அதன் ஆள்நிலம், B1, B2 என இரண்டு நாடுகளாகப் பிரிந்து விட்டால்), அத்தகு உரிமைகளும், கடமைகளும் அவ்வாறே அதனைக் கைக்கொண்ட நாட்டிற்கு (இங்கு B1, B2 நாடுகள்) வாரிசுரிமையாக மாறிச்செல்லாது. வேறு வகையில் கூறுவதெனில், இறந்து போன நாடு கொண்டிருந்த உடன்படிக்கையின் வாயிலாக எழவிருக்கும் உரிமைகளுக்கும், கடமைகளுக்கும் அந்நாட்டை கைக்கொண்ட அல்லது பிரித்துக் கொண்ட வாரிசு நாடு கட்டுப்பட்டதல்ல. நாடு இறக்கும் பொழுதே, அதனுடன் அத்தகு நிறைவேற்ற வேண்டிய உடன்படிக்கை உரிமைகளும் கடமைகளும் செல்லத்தகாதவை ஆகிவிடுகின்றன.

நமது மேற்படி பிரச்சனையில் ஜலன் ஆற்றில் அணை கட்ட A நாடும் B நாடும் உடன்படிக்கை செய்து கொள்கின்றன. ஆனால் அந்த அணை இன்னும் கட்டப்படவில்லை என்பது நம் பிரச்சனையிலிருந்து தெரிகிறது. எனவே இதில் பலன் எதையும் எந்நாடும் பெறவில்லை என்பதும், இது நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு உடன்படிக்கையே தவிர, நிறைவேறிய உடன்படிக்கை அல்ல (Not an executed treaty) என்பதும் தெளிவாகிறது. எனவே ஜலன் ஆற்றில் அணை கட்ட வேண்டும் என்ற கடப்பாடு B நாட்டின் மறைவின் காரணமாக பிறந்த B1 நாட்டிற்கோ, B2 நாட்டிற்கோ வாரிசு நிலையில் கைமாறுவதில்லை. **'நிறைவேற்ற வேண்டிய உடன் படிக்கைகளில்'** ஒரு நாடு மறைந்து அது இரண்டாகவோ, அதற்கும் மேற்பட்டோ பிரிந்து தனி நாடுகளாக ஆகும் பொழுது, தனது மூல நாடு மற்ற நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கை உரிமைகளுக்கும், கடப்பாடுகளுக்கும் அவை வாரிசுரிமை நாடுகளாக ஆவதில்லை. அவ்வாறு பிரிந்து போன நாடுகள் தனிச் சுதந்திர நாடு களாகி (Independent States), தங்களுக்கென புதிய உடன்படிக்கைகளில் ஈடு படும் தகுதி பெற்றவையாகி விடுகின்றன. [ஆனால் இது நிறைவேறிய உடன்படிக்கை களால் (Executed treaty) அடைந்த உரிமைகள் மற்றும் கடமைகளுக்குப் பொருந் தாது. அங்கு **நாட்டு வாரிசுரிமை (State Succession)** ஏற்பட்டுவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்].

இதனை, **'உடன்படிக்கைகள் குறித்த நாட்டு வாரிசுரிமை பற்றி 1978–இல் வியன்னாவில் கூடிய மாநாட்டு ஏற்பு விதிகள்' (Vienna Convention on Succession of States in respect of Treaties, 1978)** மேலும் தெளிவுபடுத்து கின்றன. அவற்றின் உறுபு 16–இன்படி, B நாடு செய்து கொண்ட உடன்படிக்கை, அது மறைந்த தால் பிறந்த B1, B2 நாடுகளுக்கு வாரிசுரிமையில் செல்லாது, அந்நாடுகள் அந்த உடன்படிக்கைக்கு கட்டுப்பட்டதும் அல்ல. (இந்த உறுபு 16 பற்றி அடுத்து வரும் பிரச்சனையின் தீர்வில் விரிவாகக் காண உள்ளோம்.)

மேற்சொன்ன பல்வேறு சட்ட நிலைப்பாடுகளின் அடிப்படையில், 'A' நாடு 'B' நாட்டுடன் செய்து கொண்ட உடன்படிக்கையை, அது இரண்டாகப் பிரிந்ததால் உருவான B1, B2 நாடுகளில் ஜலன் ஆறு பாயும் B1 நாட்டிற்கு எதிராக நடைமுறைப்

படுத்த முடியாது என்பதும், அவ்வுடன்படிக்கையை B1 நாடு ஏற்க மறுத்தது செல்லும் என்றும், இதற்காக A நாடு சர்வதேச நீதிமன்றத்தை நாடுவது வெற்றியைத் தராது என்பதுமே இப்பிரச்சனைக்குத் தீர்வாகும்.

(இப்பிரச்சனைக்கான தீர்வு சற்றே நீண்டு இருந்தாலும், இதில் மேலும் பல பிரச்சனைகளுக்கான தீர்வுகளும் அடங்கியுள்ளன. எனவே இத்தீர்வை நன்கு கவனித்து வாசித்து உள் வாங்கிக் கொண்டால், இது தொடர்பாக எவ்வாறு பிரச்சனை வினாக்கள் தேர்வில் கேட்கப்பட்டாலும் தீர்வளித்துவிடலாம். எடுத்துக்காட்டாக பின்வரும் சில பிரச்சனைகளைப் பார்க்கலாம் – **நூலாசிரியர் பிஆர்ஜெ**)

பிரச்சனை 4:

States X and Y entered into a political treaty of co-operation. Later on, a part of the territory of State X was formed as a new State Z. Now State Z wants to claim rights under the treaty of cooperation between States X and Y. Is it possible? Decide.

X மற்றும் Y நாடுகள் கூட்டுறவிற்கான அரசியல் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொண்டன. பின்னிட்டு, X நாட்டின் ஒரு பகுதியானது Z என்ற புதிய நாடாக மலர்ந்தது. தற்போது X மற்றும் Y நாடு செய்து கொண்ட கூட்டுறவு உடன்படிக்கையில் புதிய நாடான Z, உரிமைகளைக் கோர விழைகிறது. இது சாத்தியமா? தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனை இதற்கு முந்தைய பிரச்சனையைப்போன்றதுதான். இங்கு X மற்றும் Y நாடுகள் உடன்படிக்கை செய்து கொண்ட பிறகு, X நாட்டின் ஒரு பகுதி Z என்ற ஒரு புதிய நாடாக உருவெடுக்கிறது. இவ்வாறு ஒரு நாட்டின் பகுதி மற்றொரு புதிய நாடாக உருவெடுக்கும் சமயத்தில் அப்புதிய நாடு தனது மூல நாட்டின் வாரிசாக ஆக முடியுமா, என்று கேட்டால் பொதுவாக ஆக முடியும் என்று கூறிவிடலாம்.

ஆனால் இங்கு கவனிக்க வேண்டியது யாதெனில், அரசியல் உடன்படிக்கை யின் வாயிலாகப் பெறப்படும் உரிமைகளுக்கும் கடப்பாடுகளுக்கும் நாட்டு வாரிசுரிமை குறித்து (State Succession to Treaty Rights and Obligations) நாட்டிடைச் சட்டம் என்ன கூறுகிறது என்பதுதான். (இது குறித்து மேற்படி பிரச்சனையின் இறுதிப் பகுதியில் கண்டுள்ளோம்.)

இங்கு X நாட்டின் ஒரு பகுதி Z என்ற ஒரு புதிய நாடாக உருவெடுக்கிறது. அந்த Z என்ற நாட்டை, சுதந்திரம் பெற்ற ஒரு புதிய நாடாகவே அரசியல் காரணங் களுக்காக கருத வேண்டும். எனவே அது, தான் எந்த நாட்டிலிருந்து பிரிந்து வந்ததோ

அந்த நாடு பிற நாடுகளுடன் செய்து கொண்ட உடன்படிக்கைகளுக்கு கட்டுப் பட்டதல்ல என்று **'உடன்படிக்கைகள் குறித்த நாட்டு வாரிசுரிமை பற்றி 1978–இல் வியன்னாவில் கூடிய மாநாட்டு ஏற்பு விதிகளின்' உறுபு 16 (Article 16 of Vienna Convention on Succession of States in respect of Treaties, 1978)** பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

அதாவது, மூல நாட்டின் எந்த ஆள்நிலப் பகுதிக்கு வாரிசுரிமை தொடர்பு டையதாக உள்ளதோ அது குறித்து மூல நாட்டால் (பிற நாட்டுடன்) செய்து கொள்ளப் பட்ட உடன்படிக்கை ஒன்று, வாரிசுரிமை எழுகின்ற தேதியில், செயல்திறத்தில் (அமலில்) இருந்தது என்ற காரணத்தால் மட்டுமே, மூல நாட்டிலிருந்து பிரிந்து சுதந்திரம் பெற்ற புதிய நாடொன்று, **அவ்வுடன்படிகையின் செயல்திறத்தை பேணவோ, அல்லது அதில் ஒரு தரப்பினராகச் சேரவோ கடமைப்பட்டதல்ல** என்று உறுபு 16 மிகத் தெளிவாகக் கூறுகிறது. (Article 16 of the Vienna Convention on Succession of States in respect of Treaties, 1978 provides that a newly independent State is not bound to maintain in force, or to become a party to, any treaty by reason only of the fact that at the date of the succession of States the treaty was in force in respect of the territory to which the succession of States relates.)

எனவே நமது மேற்படி பிரச்சனையில் புதிதாக உருவான Z என்ற நாடு, X மற்றும் Y நாடுகளுக்கிடையே ஏற்பட்ட அரசியல் உடன்படிக்கையின் கீழ் உரிமைகள் ஏதும் கோர முடியாது. அப்புதிய நாடு தனது மூல நாடு செய்து கொண்ட மேற்படி உடன் படிக்கையின் ஒரு தரப்பினராகவும் ஆக முடியாது. எனவே அவ்வுடன்படிக்கையில் பொறுப்புகள், கடப்பாடுகள் ஏதும் இருந்தால், அது நாட்டு வாரிசுரிமையின் அடிப்படை யில் Z என்ற நாட்டை அடையவும் செய்யாது என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 5:

State X is a member of the UNO. State Y was formed by carving out a portion of State X. Now Y State claims the original membership of the UNO. Decide.

X நாடு ஐ.நா. சபையில் ஒரு உறுப்பினர். X நாட்டிலிருந்து ஒரு பகுதியை பிரித்தெடுத்து Y நாடு உருவாகிறது. தற்போது Y நாடு தான் ஐ.நா. சபையில் அசல் உறுப்பினர் என்று உரிமை கோருகிறது. தீர்மானி.

தீர்வு:

நாட்டு வாரிசுரிமை (State Succession) இரண்டு வகைகளில் ஏற்படும் என்றும், அவை, (1) முழு வாரிசுரிமை (Universal Succession) (2) பகுதி வாரிசுரிமை (Partial Succession). **முழு வாரிசுரிமை** என்பது ஒரு நாட்டை

மற்றொரு நாடு முழுமையாகக் கைப்பற்றுவதால் ஏற்படுகிறது. அதாவது இது ஒரு நாடு மற்றொரு நாட்டை போரிட்டு வென்று (Conquest) அல்லது அடிமைப்படுத்தி (subjugation) முற்றிலும் தன் வயப்படுத்திக் கொண்டால் அந்நாட்டைப் பொருத்த வரை, வெற்றி பெற்ற அல்லது அடிமைப்படுத்திய நாட்டிற்கு முழு வாரிசுரிமை கிடைக்கிறது.

நமது மேற்படி பிரச்சனையில் இவ்வாறு முழு வாரிசுரிமை ஏதும் ஏற்பட வில்லை. காரணம் இங்கு X நாட்டிலிருந்து ஒரு பகுதியை பிரித்தெடுத்து Y நாடு உரு வாகிறது. அதாவது X நாடு முழுமையாக மறைந்து அந்த இடத்தில் Y நாடு உருவாக வில்லை. எனவே இங்கு பகுதி வாரிசுரிமை (Partial Succession) மட்டுமே எழும். எடுத்துக்காட்டாக, 1776–ஆம் ஆண்டில் அமெரிக்க ஐக்கிய நாடுகள், அவற்றின் தாய் நாடான கிரேட் பிரிட்டனிலிருந்து பிரிந்ததைக் குறிப்பிடலாம். அதுபோல் ஒரு நாடு, மற்றொரு நாட்டின் ஒரு பகுதியை பிரிவினை (Cession) மூலமாகவோ அல்லது போரிட்டோ (Conquest) அடைந்தால், அங்கு பகுதி வாரிசுரிமை ஏற்படுகிறது. எடுத்துக்காட்டாக, (1) இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்து தனிச்சுதந்திர நாடாக ஆனதையும், (2) பாகிஸ்தானிலிருந்து வங்காளதேசம் பிரிந்து தனி நாடானதையும் குறிப்பிடலாம்.

இங்கு தற்போது நமது பரிசீலனைக்கு எழும் வினா யாதெனில், ஐக்கிய நாடுகள் சபையில் உறுப்பினராக இருக்கும் X நாட்டிலிருந்து தான் பிரிந்து உருவான தால், அதன் வாரிசு என்ற அடிப்படையில் தனக்கும் ஐக்கிய நாடுகள் சபையில் அசல் உறுப்பினராக உரிமை உண்டு என்று Y நாடு கோருவது ஏற்புடையதா என்பதே.

இதற்கு தீர்வளிக்க 1947–இல் நிகழ்ந்த இந்தியா–பாகிஸ்தான் பிரிவினை யின் போது ஐக்கிய நாடுகள் சபை முன் எழுந்த சர்ச்சையை ஆராய்வது அவசியமா கும். அதாவது பாகிஸ்தான் இந்தியாவிலிருந்து பிரிவினை ஆகிச்செல்லும் போது, ஐக்கிய நாடுகள் சபையில் இந்திய நாடு ஒரு உறுப்பினராக இருப்பதால் தானும் ஐ.நா. சபை யின் ஒரு உறுப்பினர்தான் என்று ஐக்கிய நாடுகள் சபையில் பாகிஸ்தான் கோரியது.

இதனை ஆராய்ந்த **அப்போதைய ஐ.நா. உதவிப் பொதுச்செயலாளர் டாக்டர் இவண் கெர்நோ, (Dr. Ivan Kerno, the Assistant Secretary-General for Legal Affairs of UNO)** இந்தியாவிலிருந்து பாகிஸ்தான் பிரிந்ததன் காரணமாக, ஐ.நா.சபையில் இந்தியாவின் தகுநிலையில் (Status) எவ்வித மாற்றமும் கிடையாது என்றும், அது தனது உடன்படிக்கைகள், உரிமைகள் மற்றும் கடப்பாடுகளுடன் ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு அசல் உறுப்பினராக தொடர்ந்து நீடிக்கலாம் என்றும், அதே நேரம் பாகிஸ்தான் ஒரு புதிய நாடாக ஆகிவிட்டதால், அது ஐக்கிய நாடுகள் சாசனத் தின் உறுபு 4–இன்படி (Article 4 of the UN Charter) ஐக்கிய நாடுகள் சபையில் ஒரு உறுப்பினராவதற்கு விண்ணப்பிக்க வேண்டும் என்றும், அதுவரை இந்தியா விற்கு ஐக்கிய நாடுகள் சபையில் இருப்பதைப்போன்ற உடன்படிக்கைகளோ, உரிமைகளோ,

கடப்பாடுகளோ பாகிஸ்தானுக்கு கிடையாது என்றும் சட்டக் கருத்துரை (Opinion) வழங்கினார். இது ஐக்கிய நாடுகள் சபையால் ஏற்கப்பட்டு முறைப்படி வெளியிடப் பட்டது. இங்கு பாகிஸ்தான் வைத்த பல்வேறு வாதங்களை ஐக்கிய நாடுகள் சபை ஏற்கவில்லை.

இம்மாதிரியான சூழல்களில் ஏற்கனவே இருக்கும் நாட்டிலிருந்து (existing State) பிரிந்து உருவான புதிய நாட்டுக்கு, அந்த இருக்கும் நாட்டிற்கு உள்ள உரிமைகளோ, கடப்பாடுகளோ மாறிச் செல்லாது; அதே நேரம் இருக்கும் நாட்டுக்கு பிரிவினைக்கு முன் எத்தகு சட்ட உரிமைகளும், கடப்பாடுகளும், உடன்படிக்கைகளும் இருந்தனவோ அவை எவ்வித பாதிப்பிற்கும் உள்ளாகாமல் அப்படியே அந்த இருக்கும் நாட்டிற்குத்தொடரும் என்பதே இங்கு ஐ.நா.சபையில் விளைந்த நாட்டிடைச்சட்டமா கும். (In these circumstances of cession, the portion which separated was considered as a new State, and the remaining portion continued as an existing State with all the rights and duties which it had before.)

சுருங்கச்சொன்னால், நாட்டு வாரிசுரிமை விடயத்தில், இருக்கும் நாடு ஐக்கிய நாடுகள் சபையில் கொண்டிருக்கும் உறுப்பினர் உரிமைகள், அதிலிருந்து பிரிந்து உருவாக புதிய நாட்டுக்கு மாறிச்செல்லாது. (In the case of succession, the UN Membership of the existing State doesn't get transferred to the newly formed State by carving out).

மேற்சென்ற கருத்துகள் மற்றும் நாட்டிடை எடுத்துக்காட்டுகளின்படி நமது மேற்படி பிரச்சனையில் X நாட்டிலிருந்து பிரிந்து உருவான Y நாடு, X நாட்டைப் போல தனக்கும் ஐ.நா.சபையில் அசல் உறுப்பினர் உரிமை உள்ளது என்று கோருவது சட்டப் படி ஏற்புடையதல்ல என்பதும், அது தனது வாதத்தில் வெற்றி பெறாது என்பதுமே இங்கு தேர்ந்த தீர்வாகும்.

பிரச்சனை 6:

Two countries 'A' and 'B' claims for a small Island 'X'. 'A' claims to have discovered the Island in 1684. 'B'' claims that it had a long and continuous display of sovereignty over the Island. The people of the Island speak the language of 'B', 'A' moves the ICJ to declare that the Island 'X' belongs to 'A' but was resisted by 'B'. Decide.

'A' மற்றும் 'B' ஆகிய இரு நாடுகள் 'X' என்கிற சிறு தீவின் மீது உரிமை கொண்டன. 1684 ஆம் ஆண்டு அத்தீவை கண்டுபிடித்ததாக 'A' உரிமை கொண்டாடுகிறது. 'B' நாடு அத்தீவு வெகுகாலமாக தொடர்ந்து தனது இறையாண்மையின் கீழ் உள்ளதாக உரிமை கோருகிறது. அத்தீவில் உள்ள மக்கள் 'B' நாட்டில் பேசும் மொழியை பேசுகிறார்கள். அத்தீவு தனக்கு

தான் சொந்தம் என்று விளம்பக்கோரி சர்வதேச நீதிமன்றத்தில் 'A' நாடு வழக்காடியது, அதை 'B' நாடு எதிர்த்தது. தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனை 'நாட்டின் ஆள்நிலம்' (State Territory) தொடர்பானது.

நாடுகளின் ஆள்நிலப்பரப்புகள் அதன் வலிமை மற்றும் செயல்களுக்கேற்ப அல்லது இயற்கையின் மாறுதலுக்கேற்ப அவ்வப்போது கூடவோ குறையவோ கூடியவை. எனவே ஒரு நாடு கூடுதலான நிலப்பரப்பை பல வகைகளில் அடைய முடியும். எனினும் அவற்றில் முக்கியமானது **'ஆட்சியின் கீழ் ஆள்நிலத்தை கொண்டு வரல்'. இதனை 'ஆண்டனுபவித்தல் மூலம் ஆள்நிலத்தை அடைதல்' (Acquisition of Territory by Occupation)** என்றும் கூறலாம்.

இதன்படி ஒரு நாடு தனது இறையாண்மையைச் செலுத்தி ஆளும் எண்ணத்துடன் ஒரு நிலப்பரப்பை தனது ஆட்சியின் கீழ்க்கொண்டு வரலாம். இந்த முறையில் சேர்க்கப்படும் நிலப்பரப்பு அதுவரை எந்த ஆட்சியின் கீழும் இருந்திருக்கக் கூடாது. ஆட்சியும் அரசும் இல்லா நிலப்பரப்புகளை நாடுகள் தங்கள் நாடாகக் கருதி அவற்றை அடையலாம்.

இதற்கு பின்வரும் சில முக்கிய நிபந்தனைகள் உள்ளன. அவை, (1) ஆட்சியின் கீழ் கொண்டு வரல் உண்மையானதாக இருக்க வேண்டும்; பெயரளவில் இருத்தல் கூடாது. (2) ஒரு நாடு தனது ஆட்சியின் கீழ் கொண்டு வந்த நிலப்பரப்பின் மீது உண்மையில் தனது இறையாண்மையை அதாவது ஆட்சி அதிகாரத்தை செலுத்தினால்தான், அந்நாட்டிற்கு அதன் மீதுள்ள முழுமையான அதிகாரம் அங்கீகரிக்கப் பட்டதாகும். (3) ஒரு நிலப்பரப்பை ஆட்சியின் கீழ் கொண்டு வருதல் அனைவருக்கும் தெரியக்கூடிய வகையில் இருத்தல் வேண்டும். மேலும் அது தொடர்ந்து நெடுங்கால மாக நீடித்திருக்க வேண்டும். அங்கு அந்நாடு அமைதியான முறையில் தனது ஆட்சியை செய்து கொண்டிருப்பதை வெளிக்காட்ட வேண்டும்.

சில சமயங்களில் புதிதாக கண்டுபிடிக்கப்படும் தீவுகள் அல்லது நிலப் பரப்புகள் மீதும் நாடுகள் மேற்சொன்ன வகையில் உரிமை கொண்டாடலாம். எனவே இவ்வாறு கண்டுபிடிக்குமிடத்து, கண்டுபிடித்த நாட்டிற்கு அதன் மீதான உரிமை உடனே வந்துவிடுவதில்லை. அக்கண்டுபிடிப்பு, கண்டுபிடித்த நாட்டுக்கு ஒரு முற்றுப் பெறாத உரிமையை மட்டுமே வழங்கும். கண்டுபிடித்த நிலப்பரப்பை ஆண்டனுபவிக் கும் எண்ணத்துடன் அதன் உடைமையைக் கைப்பற்றி அங்கு ஆட்சி நிறுவி, தொடர்ந்து தனது முழு ஆட்சி அதிகாரத்தையும் செலுத்தி கட்டுப்பாட்டில் (effective control and sovereignty) வைத்துக் கொண்டால், கண்டுபிடிப்பால் மலர்ந்த முற்றுப்பெறாத உரிமை, முற்றுப் பெற்றதாகக் கருதப்படும்.

இப்போது நமது மேற்படி பிரச்சனைக்கு வருவோம். இதில் 1684–ஆம் ஆண்டில் தீவைக்கண்டுபிடித்தது என்னவோ **'A'** என்ற நாடுதான். ஆனால் அந்த

தீவின் மீது இறையாண்மையை (ஆட்சி அதிகாரத்தை) செலுத்தி ஆண்டு வருவது 'B' என்ற நாடுதான். இதற்கு ஆதாரமாக அத்தீவில் உள்ள மக்கள் 'B' நாட்டில் பேசும் மொழியைப்பேசுகிறார்கள். நாம் ஏற்கனவே மேலே கண்டதைப்போல், கண்டுபிடிப்பால் ஒரு ஆள்நிலத்தின் மீது முற்றுப்பெற்ற உரிமை எழ வேண்டுமெனில், அதைக் கண்டு பிடித்த நாடு அதன் மீது தனது ஆட்சி அதிகாரத்தை நிறுவி, அதனை பல வெகு காலமாக ஆண்டனுவித்து இருக்க வேண்டும். இங்கு அத்தகு நிலையில் இருப்பது 'B' என்ற நாடுதான். எனவே அத்தீவு தனக்குத்தான் சொந்தம் என்று விளம்பக்கோரி 'A' நாடு சர்வதேச நீதிமன்றத்தில் வழக்காடுவது நிலைக்காது; அவரது வழக்கு தள்ளுபடி செய்வதற்குரியது. அத்தீவு 'B' நாட்டிற்கே சொந்தம் என்பதே இங்கு நாம் அளிக்கும் நிறைவான தீர்வாகும். இத்தீர்விற்கு ஆதரவாக பின்வரும் முக்கிய வழக்கொன்றை சுட்டிக்காட்டலாம்.

Island of Palmas Arbitration [Award of the Permanent Court of Arbitration (1929), Hudson Cases p. 361)] - இவ்வழக்கின் சங்கதிபடி, பஹாமாஸ் தீவு முதன்முதலாக ஸ்பெயின் நாட்டால் கண்டுபிடிக்கப்பட்டது. ஆனால் ஸ்பெயின் நாடோ அதன் மேல் தனது முழு ஆட்சி அதிகாரத்தையும் செலுத்தவில்லை. நாளடைவில் அத்தீவு நெதர்லாந்தின் ஆட்சி அதிகாரத்தின் கீழ் வந்தது. அதன் பிறகு நெதர்லாந்து நெடுங்காலம் அதனை ஆட்சி புரிந்தது. பின் அத்தீவை அது ஒரு உடன் படிக்கை மூலம் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்கு கொடுத்துவிட்டது. இதற்குகிடையே ஸ்பெயின் நாடு, மேற்படி தீவை தம் வசம் ஒப்படைக்கக் கோரி நெதர்லாந்திடம் கேட்டது. நெதர்லாந்து மறுத்தது. எனவே இப்பிரச்சனை இசைவுத்தீர்ப்பிற்கான நிரந்தர நீதிமன்றத்திடம் சென்றது. அங்கு நெதர்லாந்து நீண்ட நெடுங்காலமாக அத்தீவின் மீது தன்னுடைய முழு ஆட்சி அதிகாரத்தையும் (effective sovereignty and control) செலுத்தி ஆட்சி புரிந்து வந்ததால், அத்தீவின் மீதான உரிமை மூலம் நெதர்லாந்திற்குத்தான் உள்ளது என இசைவுத்தீர்ப்பாளர் முடிவு கூறினார்.

(மேலும் தெரிந்து கொள்ள இந்நூலின் பக்கம் எண். 121–இல் காண்க.)

பிரச்சனை 7:

A state claims sovereignty over an Island on the ground that it has discovered the same; but A State has no effective sovereignty on the Island. B State also claims sovereignty on the same Island on the ground that it has effective control and sovereignty over the Island for the last three hundred years. Which State has sovereignty over the island? Decide.

'A' நாடு தீவு ஒன்றை கண்டுபிடித்ததன் அடிப்படையில் அதன் மீது தனது இறையாண்மையைக் கோருகிறது; ஆனால் 'A' நாட்டிற்கு அத்தீவின் மீது முழு இறையாண்மை இல்லை. அந்த தீவின் மீது கடந்த முன்னூறு

ஆண்டுகளாக தான் முழு ஆட்சி அதிகாரம் மற்றும் இறையாண்மையை செலுத்தி வருவதால், அதன் மீது தனக்கும் இறையாண்மை உண்டு என்று 'B' நாடும் கோரியது. அந்த தீவின் மீது எந்த நாட்டிற்கு இறையாண்மை உண்டு என்பதை தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனையும் 'நாட்டின் ஆள்நிலம்' (State Territory) தொடர்பானது. நாம் இதற்கு முன் சென்ற பிரச்சனையில் வழங்கிய தீர்வைவே இதற்கும் அளிக்கலாம்.

ஒரு நாடு நிலப்பரப்பு ஒன்றை கண்டுபிடித்த பிறகு, அதன் மீது தனது முழு ஆட்சி அதிகாரம் மற்றும் இறையாண்மையை செலுத்தி ஆண்டனுபவித்து வந்தால் மட்டுமே, அந்த நிலப்பரப்புக்கு அது முழு உரிமை கோர முடியும் என்பது நாம் சென்ற பிரச்சனையின் தீர்வில் கண்டதாகும்.

இப்போதைய பிரச்சனையில் **A** நாடு அந்த தீவைக்கண்டுபிடித்திருந்தாலும், அதன் மீது 300 ஆண்டுகளாக முழு ஆட்சி அதிகாரம் மற்றும் இறையாண்மையை செலுத்தி ஆட்சி செய்து வருவது **B** நாடே. எனவே அந்த தீவின் மீது **B** நாட்டிற்கே இறையாண்மை உண்டு என்பதே இங்கு தீர்வாகும்.

(முந்தைய பிரச்சனையின் தீர்வில் சுட்டிக்காட்டப்பட்ட கருத்துகளையும், பஹாமஸ் தீவு வழக்கையும் இத்தீர்விற்கும் அப்படியே சுட்டிக்காட்ட வேண்டும்)

பிரச்சனை 8:

An Ambassador of a country enters into a contract with an Indian Interior Designer to design his country's embassy situated in India for a sum of Rs. 5 crores. After the designing work was over the Ambassador refuses to pay the money and claims immunity. Advise the Indian Interior Designer.

ஒரு இந்திய உள் அலங்கார நிபுணருடன் ஒரு வெளிநாட்டுத் தூதுவர் இந்தியாவில் அமைந்துள்ள அந்நாட்டுத் தூதரகத்தை வடிவமைக்க ரூ. 5 கோடிக்கு ஒப்பந்தம் போடுகிறார். பின்னர் வேலை முடிந்தவுடன் ஒப்பந்தத் தொகையை கொடுக்க மறுத்து தடைக்காப்புறுதி கோருகிறார். அந்த இந்திய உள் அலங்கார நிபுணருக்கு ஆலோசனை வழங்குக.

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம் தூதாண்மை உறவுகள் பற்றிய வியன்னா மாநாட்டு ஏற்பு விதிகளைக் கவனிக்க வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சபையின் நாட்டிடை சட்ட ஆணையமானது (Interna-

tional law commission of the United Nations) தூதாண்மையுறவு, தூதுவரின் சிறப்புரிமைகள், விலக்களிப்புகள் பற்றி நடைமுறையில் வழங்கி வரும் விதிகளைத் தேவைக்குத் தக்கவாறு மாற்றி அமைத்து, அவற்றை ஒரு தொகுப்பாக வெளியிட்டது.

இதையடுத்து ஐக்கிய நாடுகள் சபையானது தனது உறுப்பு நாடுகள் தூதாண்மையுறவின் மீதான இத்தொகுப்பை ஏற்பதற்காக 1961–ஆம் ஆண்டில் வியன்னாவில் மாநாடு (Vienna Conventon on Diplomatic Relations, 1961) ஒன்றைக் கூட்டியது. இதில் பங்கு கொண்ட 81 நாடுகளில் 45 நாடுகள் மேற்படி தொகுப்பை உடனடியாகவும் மற்றும் பல நாடுகள் பின்னரும் ஏற்றுக் கொண்டன. இந்த ஏற்பு விதிகளின் பல உறுபுகள் தூதுவரின் சிறப்புரிமைகளைப் பற்றிக் கூறுகின்றன. அதே நேரம் அவற்றின் மீதான கட்டுப்பாடுகள் சிலவற்றையும் கூறுகின்றன. அந்த வகையில் நமது பிரச்சனைக்கு தேவையான தீர்வும் இந்த ஏற்பு விதிகளிலேயே அடங்கியுள்ளது என்று சொன்னால் அது மிகையன்று.

வியன்னா மாநாட்டு ஏற்பு விதிகளின் உறுபு **31(1)–ஆனது தூதுவர்களுக்கு உரிமையியல் அதிகாரவரம்பிலிருந்து விலக்களிப்பு (Diplomatic Agents enjoy immunities from the jurisdiction of civil courts - Article 31(1) of the Vienna Convention)** உள்ளது என்று வகுக்குகிறது. இதன்படி ஒரு தூதுவர் மீது அவர் வாங்கிய கடனை வசூலிப்பதற்காக அல்லது ஒப்பந்த மீறுகைக்காக (breach of contract) உரிமையியல் வழக்கிட முடியாது. மேலும் உரிமையியல் வழக்கு தொடர்பாக, அவரை தூதுவராக ஏற்றுக்கொண்ட நாட்டு நீதிமன்றங்களின் முன், அவரை ஒரு பிரதிவாதியாக நிறுத்தவும் முடியாது. எனினும் இதற்கு பின்வரும் மூன்று விதிவிலக்குகள் உள்ளன. அதாவது, அச்சூழல்களில் மேற்சொன்ன விலக்களிப்பு பொருந்தாது. அவை,

(1) தன்னை தூதுவராக ஏற்றுக்கொண்ட நாட்டின் எல்லைக்குள் அமைந்துள்ள தூதுவரின் தனிப்பட்ட அசையாச்சொத்து குறித்த சட்ட நடவடிக்கைகளுக்கு இந்த விலக்களிப்பு பொருந்தாது. அதே நேரம் தன்னை தூதுவராக அனுப்பிய நாட்டின் சார்பாகவும், தூதாண்மையின் நோக்கங்களுக்கவும் அவர் அச்சொத்தை தனது உடைமையில் கொண்டிருந்தால், விலக்களிப்புரிமை பொருந்தும். (a real action relating to private immovable property situated in the territory of the receiving State, unless he holds it on behalf of the sending State for the purposes of the mission).

(2) வாரிசுரிமை தொடர்பான வழக்கு நடவடிக்கைகளில், தூதுவர் ஒரு நிறைவேற்றாளராக, நிருவாகியாக, வாரிசாக அல்லது உயில்வழி உரிமையாளராக, தன்னை அனுப்பிய நாட்டின் சார்பாக அல்லாமல், ஓர் தனி நபராக ஈடுபட்டிருந்தால், அங்கு மேற்சொன்னை உரிமையியல் நீதிமன்ற அதிகாரவரம்பு விலக்களிப்பு உரிமை பொருந்தாது. (an action relating to succession in which the diplomatic agent is involved as executor, administrator, heir or legatee as a private person and not on behalf of the sending state).

(3) தன்னை தூதுவராக ஏற்கும் நாட்டில் தனது அலுவலகப் பணிக்கும் அப்பால், ஒரு தூதுவர் தொழில்முறையில் அல்லது வணிகரீதியில் செயல் எதையும் செய்தது தொடர்பான வழக்கு நடவடிக்கைக்கு இந்த விலக்களிப்பு உரிமை கிடைக் காது.

மேற்சென்றதன் பின்னணியில் நமது மேற்படி பிரச்சனையை அணுகினால், நாம் தீர்வை எளிதில் எட்டிவிடலாம். இதில் ஒரு வெளிநாட்டுத் தூதுவர் இந்தியாவில் அமைந்துள்ள தனது நாட்டு தூதரகத்தை வடிவமைக்க ஒரு உள் அலங்கார நிபுண ருடன் ரூ. 5 கோடிக்கு ஒப்பந்தம் போட்டுக்கொண்டு, வேலை முடிந்தவுடன் ஒப்பந்த தொகை கொடுக்க மறுக்கிறார்.

இங்கு ஒரு தூதுவர் தன்னை ஏற்கும் நாட்டில் தனது அலுவலகப்பணிக்கும் அப்பால் வணிக நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடுதல் ஆகாது என்று நாம் மேலே கண்டோம். நமது பிரச்சனையில் அந்த வெளிநாட்டுத் தூதுவர் இந்தியாவில் அமைந் துள்ள தனது நாட்டு தூதரகத்தை வடிவமைக்கவே ஒப்பந்தத்தில் ஈடுபட்டுள்ளார். அதாவது தனது நாட்டின் சார்பாக மேற்படி செயலைச் செய்துள்ளார். எனவே இதில் அவரது சொந்த நலன் எதுவும் இருப்பதாக நாம் கருத முடியாது.

மேலும் மேற்படி உறுபு 31(1)–இன்படி ஒப்பந்த மீறுகைக்காக தூதுவர் மீது உரிமையியல் வழக்கிட முடியாது. இங்கு வேலை முடிந்தவுடன் தொகை தராமல் தூதுவர் தனக்கு விலக்களிப்பு உள்ளது என்று கோருவது மேற்படி உறுபு 31(1)–இன் பாற்பட்டதே. எனவே ஒப்பந்தத்தொகை ரூ. 5 கோடி கேட்டு அந்த உள் அலங்கார நிபுணர் தூதுவர் மீது வழக்கிட முடியாது. இங்கு அந்த நிபுணர்தான், ஒரு வெளிநாட்டு தூதுரகத்தை வடிவமைக்க வேண்டுமெனில், யாருடன் ஒப்பந்தம் செய்து கொள்வது என்பதில் விழிப்புணர்வுடன் இருந்திருக்க வேண்டும்.

அதே நேரம் தன்னை தூதராக அனுப்பும் நாட்டால் தன்னிடம் ஒப்படைக்கப் பட்டதும், தூதராக ஏற்கும் நாட்டுடன் செய்யப்பட வேண்டியதுமான அதிகாரபூர்வ அலுவல் அனைத்தும், ஏற்கும் நாட்டின் வெளியுறவு விவகாரங்கள் அமைச்சகத்துடன் அல்லது அதன் வழியாகத்தான் செய்யப்படுதல் வேண்டும் என்று மேற்படி வியன்னா மாநாடு, 1961–இன் உறுபு 41(2) கூறுகிறது. அதாவது இது தூதுவரின் கடமைகளுள் ஒன்றா கும்.

இங்கு இந்தியாவில் அமைந்துள்ள தூதரகத்தை வடிவமைக்கும் பணியை யும் ஓர் அதிகாரபூர்வமான அலுவல் என்றே கொள்ளலாம். காரணம் இந்திய நாட்டில் அமைந்துள்ள ஒரு வெளிநாட்டு தூதரக அலுவலகம் / வளாகம் என்பது, சம்பந்தப்பட்ட அந்த வெளிநாடே இந்தியாவில் அமைந்திருப்பதாக பொருளாகும். எனவே தூதரகத் தின் வடிவமைப்பு எப்படி இருக்க வேண்டும் என்பதை சம்பந்தப்பட்ட அந்த வெளிநாடு தீர்மானிக்கலாம். அவ்வாறு தீர்மானிக்கும் போது, அதனை மேற்படி உறுபு 41(2)– இன்படி இந்திய நாட்டின் வெளியுறவு விவகாரங்கள் அமைச்சகத்தின் வழியாக அந்த வெளிநாட்டு தூதுவர் செய்திருக்க வேண்டியது அவரது கடமைகளுள் ஒன்றாகும். நமது மேற்படி பிரச்சனையில் அவ்வாறு செய்ததாக சங்கதிகள் ஏதும் இல்லை.

எனவே, அவ்வெளிநாட்டுத்தூதுவர் இந்தியாவில் உள்ள தனது நாட்டின் தூதரகத்தை அழகுபடுத்துவதற்காக (வடிவமைப்பதற்காக), அதாவது தனது தனிப் பட்ட நலன் ஏதும் ஏதுமின்றி, ஆனால் தன்நாட்டின் சார்பாக தனிப்பட்ட முறையில் ஈடுபட்ட ஒப்பந்தம் மேற்படி உறுபு 41(2)–இன்படி சரியான நடைமுறை அல்ல. எனினும் இதற்கான ஒப்பந்தத் தொகை ரூ. 5 கோடியை தராமல் இருப்பதற்காக அத்தூதுவர் மீது உள் அலங்கார நிபுணர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கேதும் தாக்கல் செய்ய முடியாது. ஒப்பந்த மீறுகைக்காக வழக்கிடப்படுவதிலிருந்து அத்தூதுவர் உறுபு 31(1)–இன்படி விலக்களிப்பு (தடைக்காப்புறுதி) பெற்றவர்.

எனினும் பிரச்சனையில் மாட்டிக்கொண்ட உள் அலங்கார நிபுணருக்கு என்ன ஆலோசனை வழங்குவது? அவர் வெளிநாட்டு தூதுவருடன் ஈடுபட்ட ஒப்பந் தம் மேற்படி உறுபு 41(2)–இன்படியான நடைமுறையை மீறியதாகும். எனவே அவர் இந்திய ஒன்றியம் மற்றும் இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் மீது நஷ்டஈடு கோரி வழக்கிடலாம். அதில் உறுபு 41(2)–இன்படியான கடமையை தூதுவர் பின்பற்றத் தவறி விட்டார், எனவே அவர் உறுபு 31(1)–இன்படியான விலக்களிப்பை கோர உரிமை படைத்தவரல்ல, அவர் தூதாண்மை சிறப்புரிமை இழந்தவர் என்பதை ஆணித்தரமாக சுட்டிக்காட்டி வாதுரைக்கலாம். மேலும் அவ்வழக்கில், அத்தூதுவரையும் ஒரு தரப்பின ராக சேர்க்க அனுமதிக்க வேண்டும் என்று கோரி மனுச்செய்யலாம். இதுதான் நாம் அந்த உள் அலங்கார நிபுணருக்கு வழங்கும் ஆலோசனை.

(பிரச்சனைக்கான தீர்வு சற்றே நீண்டு இருந்தாலும், இதில் அடங்கியுள்ள விவாதங்களை ஒட்டி பிரச்சனை வினாக்கள் வேறு வடிவங்களில் தேர்வில் கேட்கப்பட வாய்ப்புண்டு. எனவே இதன் தீர்வு, இதையொட்டி எழும் வேறு பிரச்சனைகளுக்கு தீர்வளிக்கவும் உதவும். மேலும் இதிலிருந்து நெடு வினாக்களுக்கும் விடை எழுத முடியும் – நூலாசிரியர் பி.ஆர்.ஜெ.)

பிரச்சனை 9:

Country Z was suspended from the membership of the UNO by the Secretary General. Country Z approaches the ICJ against this move. Can Z succeed?

பொதுச்செயலாளரால் Z நாடு ஐ.நா.சபையின் உறுப்பினர் பதவியி லிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டது. சர்வதேச நீதிமன்றத்தில் Z நாடு இதை எதிர்த்து வழக்கு தொடர்கிறது. Z-ஆல் வெற்றி பெற முடியுமா?

தீர்வு:

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க நாம், ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து ஒரு நாட்டை தற்காலிகமாக விலக்கி வைக்க உள்ளபடியாக யாருக்கு அதிகாரம் உள்ளது என்பதற்கான விடையைத் தேட வேண்டும். இதற்கு நாம் ஐக்கிய நாடுகள் சாசனத் தின் (UN Charter) உறுபுகள் என்ன கூறுகின்றன என்பதை கவனித்தல் வேண்டும்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் **உறுபு 5**–ன்படி, அய்க்கிய நாடுகள் சபையின் எந்த ஒரு உறுப்பு நாட்டின் மீது பாதுகாப்புச்சபையால் தடுப்பு அல்லது அமலாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதோ அந்த நாடு தனது உறுப்பினர் நிலைக்கான உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளைச் செயற்படுத்துவதிலிருந்து, பாதுகாப்புச் சபையின் பரிந்துரையின் பேரில், பொதுச்சபையால் விலக்கி வைக்கப்படலாம். ஆனால் அத்தகு உரிமைகளையும், சிறப்புரிமைகளையும் மீண்டும் அந்நாட்டிற்கு அளிக்கும் அதிகாரம் பாதுகாப்புச்சபைக்கு உண்டு. இங்கு பாதுகாப்புச்சபையானது பொதுச் சபையின் ஒப்புதலைப் பெற வேண்டிய அவசியமில்லை. (A Member of the United Nations against which preventive or enforcement action has been taken by the Security Council may be suspended from the exercise of the rights and privileges of membership by the General Assembly upon the recommendation of the Security Council. The exercise of these rights and privileges may be restored by the Security Council - **Article 5 of UN Charter.**)

உறுப்பு நாடு ஒன்றை ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து விலக்கி வைத்தல் என்பது ஒரு முக்கியமான பிரச்சனை என்பதால், பாதுகாப்புச் சபையின் நிரந்தர உறுப் பினர்கள் உள்ளிட்ட 9 உறுப்பினர்களின் நேர்மறையான வாக்குகளும், அதுபோல் பொதுச்சபையின் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை வாக்கும் இத்தீர்மானத் திற்கு வருவதற்கு தேவையாகும் என்று ஐக்கிய நாடுகள் சாசனத்தின் **உறுபு 18(2)** கூறுகிறது. [Decisions of the General Assembly on important questions shall be made by a two-thirds majority of the members present and voting - **Article 18(2) of UN Charter**].

எனவே ஐக்கிய நாடுகள் சபையிலிருந்து ஒரு உறுப்பு நாட்டை விலக்கி வைக்க அதாவது தற்காலிகமாக வெளியேற்ற அல்லது இடை நீக்கி வைக்க ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளருக்கு தனி அதிகாரம் ஏதும் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சாசனத்தில் எங்கும் இல்லை.

இங்கு அதிகபட்சமாக ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் என்ன செய்ய முடியும் என்றால், அவர் ஒரு விடயம் சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பின் பராமரிப்பை அச்சுறுத்துவதாக உள்ளது என்று அபிப்பிராயப்பட்டால், அவ்விடயத்தை **உறுபு 99**–இன்படி பாதுகாப்புச் சபையின் கவனத்திற்கு கொண்டு செல்லலாம். அவ்வளவுதான். (The Secretary-General may bring to the attention of the Security Council any matter which in his opinion may threaten the maintenance of international peace and security - **Article 99 of UN Charter**)

பொதுச்செயலாளர் கவனத்திற்கு கொண்டு வந்த அவ்விடயத்திற்கு காரணமான நாட்டின் மீது பாதுகாப்புச்சபை தடுப்பு அல்லது சர்வதேச அமைதியை பேணுவதை வலியுறுத்திச்செயற்படுத்தும் அமலாக்க நடவடிக்கை எதையும் எடுக்கலாம். மேலும் ஐக்கிய நாடுகளின் உறுப்பினர் நிலையிலிருந்து தற்காலிகமாக

விலக்கி வைக்கும்படி நாம் ஏற்கனவே கண்ட உறுபு 5–இன்படி பொதுச் சபைக்கு பரிந்துரையும் செய்யலாம். எனவே உறுப்பு நாட்டை விலக்கி வைக்கும் அதிகாரம் பொதுச்செயலாளருக்கு இல்லை.

எனவே மேற்சென்றதன் அடிப்படையில் நமது பிரச்சனையில் Z நாடு சர்வதேச நீதிமன்றத்தை அணுகினால் வெற்றி கிடைக்கும். அது தனது உரிமைகள் மற்றும் சிறப்புரிமைகளை செயற்படுத்தும் அதிகாரத்தை மீண்டும் பெறும்.

பிரச்சனை 10:

State 'A' annexed its neighbouring state 'B' in a swift overnight action. 'A' resolution was passed by the Security Council with a 9 out of 15 majority vote including two permanent member abstaining. The resolution empowered the member states to take military action against state 'A'.

(a) Is the passing of the resolution valid?

(b) Is the military action justified as par the Charter of the UNO?

இரவோடு இரவாக நடந்த அதிரடி தாக்குதல் மூலம் 'B' நாட்டை 'A' நாடு ஆக்கிரமித்துக் கொண்டது. இரண்டு நிரந்தர உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் இருந்து விலகியிருந்த நிலையில் பாதுகாப்புச் சபையானது 15-ற்கு 9 வாக்குகள் பெரும்பான்மையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 'A' நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு உறுப்பினர் நாடுகளுக்கு அதிகாரம் அளிப்பதே அத்தீர்மானம்.

(அ) தீர்மானம் செல்லத்தக்கதா?

(ஆ) ஐ.நா. சாசனத்தின்படி ராணுவ நடவடிக்கை ஏற்புடையதா?

தீர்வு:

(அ) தீர்மானம் செல்லத்தக்கதா?

இவ்வினாவிற்குத் தீர்வு காண நாம் முதலில் ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய அங்கங்களில் ஒன்றான பாதுகாப்புச்சபையின் **(Security Council)** உறுப்பு நாடுகள் வாக்களிக்கும் முறை **(Voting Procedure)** பற்றி அறிந்து கொள்வது அவசியமாகும்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பராமரிப்பதே பாதுகாப்புச் சபையின் முதன்மை நோக்கமாகும். இதில் மொத்தம் 15 உறுப்பு நாடுகள் உள்ளன. இவற்றில் 5 நாடுகள் நிரந்தரமான உறுப்பு நாடுகளாகும். மீதி 10 நாடுகள் நிரந்தரமற்ற உறுப்பு நாடுகளாகும்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் **உறுபு 27(2)**–இன்படி பாதுகாப்புச்சபையின் உறுப்பு நாடு ஒவ்வொன்றுக்கும் ஒரு வாக்கு உண்டு. **நடைமுறை குறித்த விடயங்களில் (Procedural Matters)** ஒரு முடிவிற்கு வர பாதுகாப்புச் சபையின் 9 உறுப்பு நாடுகள் தங்கள் **நேர்மறையான வாக்குகளை (affirmative votes)** அளிக்க வேண்டும். ஆனால் **முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் (Substantial Matters)** ஒரு முடிவிற்கு வருவதற்கு பாதுகாப்புச்சபையின் 5 நிரந்தரமான நாடுகள் உள்ளிட்ட 9 உறுப்பு நாடுகள் தங்கள் நேர்மறையான வாக்குகளை அளிக்க வேண்டும். எனினும் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில், எதிர்மறையான வாக்கை **(negative vote)** அளிக்க 5 நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு உரிமை உண்டு. அதாவது நேர்மறையான வாக்களிக்க மறுக்கலாம். இது நிரந்தர உறுப்பு நாடுகளின் **மறுப்பாணை அதிகாரம் (Veto Power)** எனப்படுகிறது.

[**Article 27 of the UN Charter** states that:

(1) Each member of the Security Council shall have one vote.

(2) Decisions of the Security Council on procedural matters shall be made by an affirmative vote of nine members.

(3) Decisions of the Security Council on all other matters shall be made by an affirmative vote of nine members including the concurring votes of the permanent members; provided that, in decisions under Chapter VI, and under paragraph 3 of Article 52, a party to a dispute shall abstain from voting.]

பிரச்சனைக்கு தீர்வளிப்பதற்கு முன் இங்கு மற்றொன்றையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும். அதாவது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பிரச்சனையின் மீது வாக்கெடுப்பு நடத்தப்படும் போது, மேற்சொன்ன மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தி, அதில் தனக்கு சம்மதமில்லை என்று நிரந்த உறுப்பு நாடுகள் ஐந்தில் ஏதேனுமொன்று வாக்களித்துவிட்டாலும், அப்பிரச்சனையில் முடிவெடுக்க முடியாது. ஆனால் வாக்கெடுப்பின் மீது அந்நிரந்தர உறுப்பு நாடுகளில் ஏதேனுமொன்று நேர்மறையான அல்லது எதிர்மறையான வாக்குகளில் எதனையும் அளிக்காமல், பேசாமல் இருந்துவிட்டால் அல்லது வாக்கெடுப்பு கூட்டத்தில் கலந்து கொள்ளாமல் இருந்துவிட்டால் அல்லது வாக்களிப்பதில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டிருந்தால் **(Abstain)**, அது தனது சம்மதமின்மையைத் தெரிவித்ததாக எடுத்துக் கொள்ளப்படாது. அதாவது மறுப்பாணை அதிகாரத்தைப் பயன்படுத்தியதாகாது. இதன் உட்பொருள் யாதெனில்,"தேவைப்படுகின்ற 9 நேர்மறையான வாக்குகள் கிடைத்துவிட்டால், தாரளமாக தீர்மானத்தை நிறைவேற்றிக்கொள்ளலாம், நான் அந்த தீர்மானத்தை ஆதரிக்கவும் மாட்டேன், மறுக்கவும் மாட்டேன், ஆனால் எனக்குப் பிடிக்கவில்லை, எனவே அந்த இரண்டு வாக்குகள் எதையும் அளிப்பதிலிருந்து விலகியிருக்கிறேன்" என்று அந்த நிரந்தர உறுப்பு நாடு கூறுவதைப் போன்றதாகும்.

(If a permanent member does not fully agree with a proposed resolution but does not wish to cast a veto, it may choose to abstain, thus allowing the resolution to be adopted if it obtains the required number of nine favourable votes.)

நமது பிரச்சனையில் அதிரடித் தாக்குதல் மூலம் நாட்டை ஆக்ரமித்த நாட்டிற்கு எதிராக இராணுவ நடவடிக்கை எடுப்பதற்காக தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளது. இது செல்லுமா என்பதே பிரச்சனையில் வினவப்பட்டுள்ள முதல் வினா வாகும். ஆக்ரமிப்பு செய்த நாட்டிற்கு எதிராக உறுப்பு நாடுகள் நடவடிக்கை எடுப்பதற் காக தீர்மானிப்பது என்பது நடைமுறை சார்ந்த ஒரு சாதாரண விடயமல்ல. அது முக் கியத்துவம் வாய்ந்த விடயமாகும். அதாவது சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பின் பராமரிப்பு குறித்த விடயங்கள் (Matters with respect of maintenance of international peace and security) யாவற்றையுமே முக்கியத்துவம் வாய்ந்த விடய மாக ஐக்கிய நாடுகளின் பொதுச்சபையும், பாதுகாப்புச்சபையும் பார்க்கின்றது.

எனவே இங்கு தீர்மானத்திற்கு வருவதற்கு 5 நிரந்தரமான உறுப்பு நாடுகள் உள்ளிட்ட 9 உறுப்பு நாடுகள் தங்கள் நேர்மறையான வாக்குகளை அளிக்க வேண்டும். நமது பிரச்சனையில் 5 நிரந்தர உறுப்பு நாடுகளில் 2 வாக்களிப்பதில் இருந்து தம்மை விலக்கிக் (abstain) கொண்டுள்ளன. அதாவது தீர்மானத்தை ஆதரித்தும் வாக் களிக்கவில்லை, மறுத்தும் வாக்களிக்கவில்லை. இங்கு 15 உறுப்பு நாடுகளில் 9 உறுப்பு நாடுகள் வாக்களித்து பெரும்பான்மை பெற்றுவிட்டதால், அத்தீர்மானம் செல்லத் தக்கதே. ஒருக்கால் இங்கு அந்த 2 நிரந்தர உறுப்பு நாடுகள் மறுத்து (veto) வாக்களித்து இருந்தால், அத்தீர்மானம் செல்லத்தக்கதல்ல.

மேற்சென்ற விவாதங்களின் அடிப்படையில் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையில் செய்யப்பட்ட தீர்மானம் செல்லத்தக்கதே என்பதுதான் நமது பிரச்சனையில் கேட்கப்பட்ட முதல் வினாவிற்கு தீர்வாகும்.

இனி பிரச்சனையின் இரண்டாவது வினாவிற்கு வருவோம்.

(ஆ) ஐ.நா. சாசனத்தின்படி ராணுவ நடவடிக்கை ஏற்புடையதா?

நமது பிரச்சனையில் 'B' நாட்டை 'A' நாடு அதிரடியாக ஆக்ரமிக்கிறது. 'A' நாட்டின் இந்த செயலுக்கெதிராக பாதுகாப்புச்சபை தனது உறுப்பு நாடுகளின் துணை கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டும். ஆனால் அதற்காக எடுத்த எடுப்பிலேயே இராணுவ நடவடிக்கை எடுக்கலாமா, அது ஏற்புடையதா என்பதுதான் இங்கு தீர்மானிக்க வேண்டியதாகும்.

ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அத்தியாயம் **VI**–இன் கீழான **33 முதல் 38 வரை உள்ள உறுபுகள்** நாட்டிடை தகராறுகளை அமைதி வழியில் தீர்வு காண (Pacific Settlement of Disputes) பாதுகாப்புச் சபை முயற்சித்தல் பற்றிக் கூறுகின்றன. அவற்றின்படி தகராறுக்குரிய நாடுகள் தங்கள் பிரச்சனையை பேசித்தீர்த்துக்கொள்ள

இயலவில்லையெனில், அதனை நடுவில் நின்று பேச்சுவார்த்தை, புலன் விசாரணை, சமரசம் மற்றும் இசைவுத்தீர்வு முறை ஆகிய வழிகளில் அதாவது அமைதி வழியில் பேசி தீர்த்து வைக்க பாதுகாப்புச் சபை முதற்கண் முயல வேண்டும்.

அடுத்ததாக ஐக்கிய நாடுகள் சாசனத்தின் அத்தியாயம் VII–இன் கீழான **39 முதல் 41 வரை உள்ள உறுபுகள்** சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்புக்கு பங்கம் விளைவித்து வலுச்சண்டைக்கு இழுக்கும் ஆக்ரமிப்பாளர் நாட்டிற்கு எதிராக பொருளாதார, போக்குவரத்து, தகவல் தொடர்பு தடைகளை விதிக்கும்படி பாதுகாப்புச் சபை தனது உறுப்பு நாடுகளுக்கு வேண்டுகோள் விடுக்கலாம் என்று கூறுகிறது. மேலும் தூதாண்மை உறவுகளையும் துண்டித்துக் கொள்ளலாம். அதாவது ஆக்ரமிப் பாளர் நாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற தனது தீர்மானத்தை ஆயுதப்படையை பயன்படுத்தாமல் தனது உறுப்பு நாடுகளின் துணையோடு மேற் சொன்ன தடைகளை விதிப்பதன் மூலம் அந்நாட்டை கட்டுக்குள் கொண்டு வர பாதுகாப்புச் சபை முடிவெடுக்கலாம். இங்கு **எடுத்துக்காட்டாக இரஷ்யா–உக்ரைன் போரைச் சுட்டிக்காட்டலாம்.**

அண்மையில் 24/02/2022 அன்று இரஷ்யக் கூட்டரசு தனது அண்டை நாடான உக்ரைனில் அதனை ஆக்ரமிக்கும் நோக்குடன் மிகக்கடுமையான போர் தொடுத்தது. சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை அச்சுறுத்தும் இப்போரை இரஷ்யா உடனடியாக நிறுத்தி தனது படைகளை உக்ரைனில் இருந்து திரும்ப பெற வேண்டும் என்று அல்பேனியா மற்றும் அமெரிக்க ஐக்கிய நாடுகள் வரைவுத்தீர்மானம் (Draft Resolution) ஒன்றை 25/02/2022 அன்று பாதுகாப்பு சபையில் சமர்பித்தன. இதற்கு 11 வாக்குகள் கிடைத்தன. ஆனால் நிரந்தர உறுப்பு நாடான இரஷ்ய கூட்டரசு தனது மறுப்பாணை அதிகாரத்தைப் (veto) பயன்படுத்தி அத்தீர்மானத்திற்கு எதி ராக வாக்களித்தது. மற்றொரு நிரந்தர நாடான சீனா இதற்கு வாக்களிப்பதிலிருந்து விலகிக் கொண்டது. இந்தியா, ஐக்கிய அரபு நாடுகள் ஆகிய நிரந்தரமற்ற நாடுகள் வாக்களிப்பதிலிருந்து விலகிக் (abstain) கொண்டன. இப்போது என்ன நடந்திருக் கும் என்று நீங்களே ஊகித்துப்பாருங்கள். ஆம், நீங்கள் நினைத்தது சரிதான். இரஷ்ய நாடு உக்ரைன் மீது போர் தொடுத்த நிகழ்வு என்பது மிக முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகும். எனவே இதற்கான தீர்மானம் எதுவாக இருப்பினும் அதன் மீது நிரந்தர உறுப்பு நாடுகள் 5–ம் நேர்மறை வாக்குகளை அளிக்க வேண்டும். இங்கு நிரந்தர உறுப்பு நாடான இரஷ்யக் குடியரசு மேற்படி வரைவுத்தீர்மானத்தை மறுத்து வாக்களித் ததால், போரை நிறுத்துவதற்கான அந்த வரைவுத்தீர்மானம் தோற்றுப்போனது; பாதுகாப்புச்சபை அதை ஏற்க முடியவில்லை. ஆனால் இதையடுத்து என்ன நடந்தது? ஐக்கிய நாடுகள் சாசனத்தின் உறுபு 39, 41–இன்படி இரஷ்யாவின் மீது பொருளாதார, தடைகள் முதற்கொண்டு இரஷ்யாவிற்கு சுற்றுலா செல்வதன் மீதான தடை வரை எண்ணற்ற தடைகளை பாதுகாப்புச்சபையின் வேண்டுகோளின் பேரில் ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகள் விதித்தன; விதித்தும் வருகின்றன. ஆனால் இந் நூல் அச்சேறும் வரை போர் நின்றபாடில்லை. இரஷ்யாவின் தாக்குதல் தொடர்கிறது.

இவ்வாறு தடைகள் விதித்தும் ஆக்ரமிப்பாளர் நாடு பணியவில்லை என்றால்

என்ன செய்வது? உறுபு 41–ல் வகை செய்யப்பட்ட தடைகள் போதுமானதாக இல்லை என்று பாதுகாப்புச்சபை கருதுமிடத்து, சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பை பரா மரிப்பதற்கு அவசியமாக உள்ள வான்வெளி, கடல் வழி மற்றும் தரைவழி படைகளின் மூலம் அந்நாட்டிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கலாம் (Should the Security Council consider that measures provided for in Article 41 would be inadequate or have proved to be inadequate, it may take such action by air, sea, or land forces as may be necessary to maintain or restore international peace and security. Such action may include demonstrations, blockade, and other operations by air, sea, or land forces of Members of the United Nations) என்று **உறுபு 42** கூறுகிறது. இவ்வாறு உறுப்பு நாடுகள் படைகளை ஏவி இராணுவ நடவடிக்கை எடுப்பது என்பதை இறுதிக்கட்ட மாகத்தான் பாதுகாப்புச்சபை வைத்துள்ளது.

நமது பிரச்சனையில் பேச்சு வார்த்தை மூலம் தகராறை அமைதி வழியில் தீர்வு காணல், அது தோல்வியுற்றால் ஆக்ரமிப்பாளர் நாடு மீது உறுப்பு நாடுகள் பல்வேறு தடைகளை விதித்தல் ஆகியன பற்றி ஏதும் குறிப்புகள் இல்லை. ஆகவே அவற்றை முதலில் நாடுவதற்கான தீர்மானம் ஏதும் நிறைவேற்றாமல், எடுத்த எடுப்பிலேயே ஆக்ரமிப்பாளர் நாட்டின் மீது உறுப்பு நாடுகளின் படையை ஏவி இராணுவ நடவடிக்கை எடுத்தலுக்கு தீர்மானம் செய்வது என்பது ஏற்புடையதன்று; சரியானதல்ல என்பதே பிரச்சனையின் இரண்டாம் வினாவிற்கான தீர்வாகும்.

சற்றே தொகுத்துச்சொன்னால், இப்பிரச்சனையில் (அ) தீர்மானம் செய்த நடைமுறை செல்லத்தக்கது, ஆனால் (ஆ) இராணுவ நடவடிக்கைக்காக தீர்மானம் செய்தது ஐ.நா. சாசனத்தின் 33 முதல் 42 வரையிலான உறுபுகள்படி ஏற்புடையதல்ல.

(பிரச்சனையின் தீர்வு இவ்வளவு நீண்டு இருக்கின்றதே என்று அச்சமேதும் கொள்ளலாகாது. ஒரு நல்ல, ஆழ்ந்த புரிதலுக்காக இத்தீர்வை சற்றே விளக்கமாக தந்துள்ளேன். பின்னிட்டு இதை மையமாகக் கொண்டு பிரச்சனை வினாக்கள் எவ்வாறு தேர்வில் கேட்கப்பட்டாலும் மிக எளிதாக தீர்வளித்துவிடலாம். மேலும் இப்பிரச்சனைக்கும் இந்தத் தீர்விலிருந்து தேவையான பகுதியை மட்டும் எடுத்து தேர்வில் எழுதினால் போதுமானதாகும் – **ஆசிரியர் பிஆர்ஜெ.**)

பிரச்சனை 11:

The petitioner before the Supreme Court of India was a former Portuguese citizen who obtained licence to import certain goods. When the Portuguese territory was merged with India, he obtained Indian citizenship and requested for extension of his licence. His application for extension of licence was rejected by the Government of India against which he filed a writ petition under Article 32 of the Constitution of India can

he succeed?

இந்திய உச்ச நீதிமன்றத்தின் உள்ள மனுதாரர் ஒரு முன்னாள் போர்சுகீசிய குடிமகனாவார். அவர் போர்சுகீசிய குடிமகனாக இருந்தபோது சில சரக்குகளை இறக்குமதி செய்வதற்கு உரிமம் பெற்றிருந்தார். பின்னர் அப்பகுதி இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. தற்போது இந்திய குடிமகனான அவர் இந்திய அரசாங்கத்திடம் தனது உரிமத்தை நீட்டிப்பு செய்யுமாறு விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதன் பேரில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுபு 32-ன் கீழ் ஒரு நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்கிறார்? அவர் வெற்றி பெறுவாரா?

தீர்வு:

இப்பிரச்சனை **Pema Chibar Alias Preamabhai Vs. Union Of India And Others** [1966 AIR 442 and 1966 SCR (1) 357] என்ற வழக்கின் சங்கதிகளை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும். எனவே இந்த வழக்கில் உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பையே நாம் இந்தப்பிரச்சனைக்கும் தீர்வாகத்தரலாம்.

இந்திய உச்ச நீதிமன்றத்தில் எழுந்த இவ்வழக்கின் மனுதாரர் டாமனில் (Daman) வசித்து வந்த ஒரு முன்னாள் போர்சுகீசிய குடிமகனாவார். இந்நிலப்பரப்பை போரிடல் வாயிலாக இந்திய அரசாங்கம் 20–12–1961–ஆம் தேதியில் கைப்பற்றியது. இதன் விளைவாக அம்மனுதாரர் ஓர் இந்தியக் குடிமகன் ஆனார். அவர் போர்சுகீசிய குடிமகனாக இருந்த போது 9–10–1961 முதல் 4–12–1961 வரையிலான காலகட்டத்தில் சரக்குகளை இறக்குமதி செய்வதற்காக உரிமங்கள் பெற்றிருந்தார். அவை 180 நாட்களுக்கு செல்லத்தக்கதாகும். அதன் பின் அவற்றை மேலும் ஒரு கால அளவுக்கு புதுப்பித்துக் கொள்ளலாம். நிலை இவ்வாறு இருக்க, மேற்கண்டவாறு கைப்பற்றப்பட்ட நிலப்பரப்பிற்கான இராணுவ ஆளுநர் சில வகையான இறக்குமதிகளை மட்டும் அங்கீகரித்து வணிக ஏற்பாடுகள் தொடர்பான பிரகடனம் ஒன்றை 30–12–1961–ஆம் தேதியில் வெளியிட்டார். இவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட இறக்குமதிகளில் மனுதாரர் வாங்கி வைத்திருந்த உரிமங்கள் வரவில்லை. எனவே அந்த உரிமங்களின் அடிப்படையில் சரக்குகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கக் கோரி இந்திய அரசிடம் விண்ணப்பம் செய்தார். ஆனால் அவரது விண்ணப்பத்தை இந்திய அரசு நிராகரித்து விட்டது. எனவே அவர் இந்திய உச்ச நீதிமன்றத்தில் உறுபு 32–இன் கீழ் நீதிப் பேராணை மனு தாக்கல் செய்து, உறுபு 19(1)(g)–இன்படி வணிகம் செய்ய தனக்கு உள்ள அடிப்படை உரிமை (Fundamental Right) பாதிக்கப்பட்டுள்ளதாக கூறி, தனது உரிமங்களை அங்கீகரித்து அவற்றின்படி சரக்குகளை இறக்குமதி செய்ய இந்திய அரசை ஏவுரைக்க வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தை வேண்டினார்.

அம்மனுவில் அவர் குறிப்பாக பின்வரும் வாதமொன்றை முன் வைத்தார். அதாவது, 20–12–1961–ம் தேதியில் இந்தியா நாட்டால் கைப்பற்றப்பட்ட போர்சுகீசிய நிலப்பரப்புகளில் அமலில் இருந்த முந்தைய சட்டங்கள் 05–03–1962–ஆம் தேதியி

லிருந்து அவ்வாறே தொடர்ந்திருக்க வேண்டும் என்று கோவா, டாமன், டையூ (நிர்வாகம்) சட்டம், 1962–இன் வகைமுறைகள் கூறுவதாகவும், இது அந்த முந்தைய சட்டங்களின்படி எழுகின்ற அனைத்து உரிமைகளையும் இந்திய அரசாங்கம் அங்கீகரித்துள்ளதாக பொருளாகும் என்றும், அத்தகு உரிமைகளில் தனது உரிமங்களின் படி இறக்குமதி செய்யும் உரிமையும் உள்ளடங்கும் என்றும் மனுதாரர் வாதிட்டார்.

அவரது வாதங்களை தீர ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், முதற்கட்டமாக நாட்டிடைச்சட்டத்தின்படி வழக்கை அணுகியது. அதாவது, போரிடுதன் மூலம் ஒரு நாட்டின் நிலப்பரப்பு கைப்பற்றப்படுகையில், அந்த நிலப்பரப்பில் வசித்தவர்கள் முந்தைய நாட்டின் குடிமக்களாக தாங்கள் அடைந்திருந்த உரிமைகளை, தங்களுடன் தங்கள் நாட்டைக் கைப்பற்றிய புதிய நாட்டிற்கு கொண்டு வர இயலாது (In cases of acquisition of territory by conquest, the residents of the territory did not carry with them the rights which they possessed as, subject of the ex-sovereign) என்றும், புதிய நாடு வழங்கும் அல்லது அங்கீகரிக்கும் அத்தகு உரிமைகளை மட்டுமே அவர்கள் அடைய முடியும் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவு படுத்தியது.

அடுத்ததாக, கைப்பற்றுகைக்கு ஆளான நிலப்பரப்பில் இருந்த முந்தைய (பழைய) சட்டங்கள் அப்படியே தொடருகின்றன என்பதைச் சுட்டிக்காட்டி மனுதாரர் செய்யும் வாதம் ஏற்புடையதல்ல என்றும், மேலும் அந்த முந்தைய சட்டங்கள் 05–03–1962–ஆம் தேதியிலிருந்துதான் அவ்வாறே தொடர வேண்டும் என்று கோவா, டாமன், டையூ (நிர்வாகம்) சட்டம், 1962 கூறுகின்றதே தவிர, கைப்பற்றுகைக்கு ஆளான தேதியான 20–12–1961–ஆம் தேதியிலிருந்து தொடர வேண்டும் என்று கூறவில்லை என்றும், எனவே அவரது இறக்குமதி உரிமங்களை அங்கீகரிக்கும்படி இந்திய அரசாங்கத்தை கட்டாயப்படுத்த முடியாது என்றும் கூறி, முடிவில் மனுதாரரின் மனுவை இந்திய உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்து தீர்ப்பளித்தது.

இத்தீர்ப்பின் அடிப்படையில் நமது பிரச்சனையை அணுகும்போது மனுதாரர் வெற்றி பெற வாய்ப்பில்லை என்றுதான் கூற வேண்டும். அதாவது, அவர், தான் போர்சுகீசிய குடிமகனாக இருந்த போது பெற்ற இறக்குமதி உரிமங்களை, போர்சுகீசிய நிலப்பரப்பு இந்தியாவுடன் இணைந்து, அவரும் ஒரு இந்தியக் குடிமகனாக ஆனதற்குப் பிறகு, இந்திய அரசாங்கத்திடம் வலியுறுத்த முடியாது. நாம் ஏற்கனவே கண்ட வாறு, தனது மேனாள் நாடான போர்சுகீசிலிருந்து பெற்ற உரிமைகளை, அந்நாட்டை கைப்பற்றிய புதிய நாடான இந்தியாவினுள் அப்படியே எடுத்துக்கொண்டு வர முடியாது. ஒரு நாட்டின் நிலப்பரப்பு போர் மூலம் மற்றொரு நாட்டின் நிலப்பரப்புடன் இணைந்துவிட்ட பிறகு, பழைய நாட்டின் சட்ட திட்டங்கள் மறைந்து, அதனை இணைத்துக் கொண்ட புதிய நாட்டின் சட்டங்கள், பழைய நாட்டின் குடிமக்களை வழி நடத்துகின்றன. அவர்கள் பழைய நாட்டின் பழைய சட்டங்களின்படி உரிமை எதையும் கோர முடியாது.

எனவே மேற்படி பிரச்சனையில் மனுதாரர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில் அவர் பெற்ற பெற முடியாது என்பதே இங்கு முடிவான தீர்வாகும்.

பிரச்சனை 12:

River 'Plethore' originates in state 'A' and empties in a lake in state 'B'. Factories in state 'A' discharge their effluents in the river which goes downstream to state 'B' causing severe health issues to the citizens of state 'B' who use the water for drinking purpose. State 'B' brings an action against state 'A' before the ICJ. Decide.

ஃபிளிதோரா நதி 'A' நாட்டில் உதயமாகி 'B' நாட்டில் உள்ள ஏரியில் முற்றுப் பெறுகிறது. 'A' நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் கழிவுகள் அந்த நதியில் கலக்கப்பட்டு 'B' நாட்டுக்கு வந்தடைகிறது, 'B' நாட்டு மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் அந்நதி நீரால் மக்களுக்கு கடும் உடல் நலக் குறைவு ஏற்படுகிறது. சர்வதேச நீதிமன்றத்தில் 'B' நாடு 'A' நாட்டிற்கு எதிராக வழக்கு தொடுக்கிறது. தீர்மானிக்கவும்.

தீர்வு:

இப்பிரச்சனை நாட்டுப்பொறுப்பு நிலை **(State Responsiblity)** பற்றிய தாகும். அதாவது, நாட்டிடைச்சட்டத்தின்படி ஒரு நாடு, மற்றொரு நாட்டிற்கும் அதன் குடிமக்களுக்கும் தனது செயல்களால் விளைவிக்கும் தீங்குகள் அல்லது சேதங்களுக் குப் பொறுப்புடையதாகும்; இப்படிப்பட்ட பொறுப்பு நிலை ஒரு நாடு மற்றொரு நாட்டு டன் கொண்டுள்ள உடன்படிக்கையை அல்லது நாட்டிடை வழக்க நெறியின்பாற்பட்ட கடப்பாடுகளை மீறுவதால் எழக்கூடியதாகும்.

நாட்டுப்பொறுப்பு நிலை என்பது இரு வகைப்படும். அவை, (1) நேரடிப் பொறுப்பு நிலை (Direct Responsiblity). இதனை தன்செயல்பொறுப்பு நிலை (Original Responsiblity) என்றும் அழைக்கலாம். (2) மறைமுகப் பொறுப்பு நிலை அல்லது பகரப்பொறுப்பு நிலை (Indirect Responsiblity or Vicarious Responsibility). ஒரு நாடு தனது அரசாங்கப் பணிகளை மேற்கொள்கையில் எழுவது நேரடிப்பொறுப்பு நிலையாகும். அதாவது அப்பணிகளை ஒரு நாடு மேற்கொள்கையில் மற்ற நாடுகளுக்கும் அதன் குடிமக்களுக்கும் ஏதேனும் தீங்கு விளைவித்துவிட்டால், அதற்கு தீங்கு விளைவித்த நாடு நேரடியாகப்பொறுப்புடையதாகும். ஒரு நாட்டின் அரசுப்பணியாளர்கள், அதிகாரிகள் அல்லது முகவர்களால் மற்ற நாடுகளுக்கு இடர் பாடுகள் ஏதும் விளைந்தால், அங்கு அந்நாடு அந்த மற்ற நாடுகளுக்கு மறைமுகமாகப் பொறுப்புடையதாகும். அதாவது பகரப்பொறுப்புநிலையுடையதாகும்.

அதே நேரம் ஒரு நாட்டின் அரசுப்பணியாளர்களோ அல்லது முகவர்களோ அல்லாமல் அந்நாட்டின் "குடிமக்கள்" அயல்நாட்டுக் குடிமக்களுக்குத் தீங்கிழைத் தால், அதற்காக அந்நாட்டைப் பொறுப்பாளியாக்க முடியாது. ஆனால் அந்நாடு தன்

மக்களை அவ்விதத்தீங்குகள் புரியாத வண்ணம் தடுப்பதற்குண்டான எல்லா முயற்சிகளையும் எடுப்பதும், குற்றம் புரிந்தவர்களைத் கடுமையாகத் தண்டிப்பதும், அவர்களை இழப்பீடு கொடுக்கும்படி ஏவுரைப்பதும் அவசியம். ஒருக்கால் அந்நாடு இச்செயல்களில் தவறுமானால் இங்கும் கூட அது பொறுப்புடையதாக்கப்படும் (Responsible for the Delinquencies committed by private citizens).

எனவே மற்ற நாடுகளுக்கும், அதன் குடிகளுக்கும் ஒரு நாடு இழைக்கும் தீங்குகளுக்கான பொறுப்புகளிலிருந்து அது தப்ப முடியாது. பாதிக்கப்பட்ட குடிமக்கள் உள்நாட்டுச்சட்டப்படி உள்நாட்டு நீதிமன்றத்தில் அல்லது பாதிக்கப்பட்ட நாடு, நாட்டிடைச்சட்டப்படி சர்வதேச நீதிமன்றத்தில் வழக்கிட்டு நிவாரணம் பெறலாம்.

சர்வதேசஅளவில் தீங்கான செயல்களுக்கு நாடுகளின் பொறுப்புநிலை மீதான வரைவு உறுபுகளின் (The Draft Articles on Responsibility of States for Internationally Wrongful Acts) முதல் உறுபே ஒரு நாட்டின் சர்வதேச அளவிலான தீங்குச்செயல், அந்நாட்டின் மீது சர்வதேச பொறுப்பை விதிக்கிறது (Every internationally wrongful act of a State entails the international responsibility of that State - Article 1) என்று கூறுகிறது.

எனவே ஒரு நாட்டின் சட்டவிரோதமான செய்கை ஒவ்வொன்றுக்கும் அந்நாடு நாட்டிடைச்சட்டத்தின் கீழ் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் உள்ளது. உடன்படிக்கை முறிவுகளால் ஏற்படும் தீங்குகளைத்தவிர, நாட்டின் நடத்தையால் நேரும் தீங்குகளுக்கும் நாடு பொறுப்பு கொண்டுள்ளது. இவ்வகைத் தீங்குகள், ஒரு நாடு, நாட்டிடைச்சட்டத்தின் கீழ் மற்ற நாடுகளுக்கோ அல்லது அதன் குடிமக்களுக்கோ ஆற்ற வேண்டிய செயல்களைச் செய்யாது விடுவதாலோ அல்லது அதற்கு முரணாகச் செய்வதாலோ ஏற்படுவதாகும். எனவேதான் இவை **சர்வதேச அளவிலான தீங்குகள் அல்லது அனைத்துலக தீங்குகள் (International Delinquencies)** எனப்படுகிறது.

(மேற்சொன்னவை யாவும் நாட்டுப்பொறுப்பு நிலை பற்றிய பொதுவான கருத்துகளாகும். ஒரு முறை ஆழ்ந்து வாசித்துக்கொண்டால் பின் நாட்டுப்பொறுப்பு நிலை பற்றி பிரச்சனை வினாக்கள் எவ்வாறு கேட்கப்பட்டாலும் எளிதாக தீர்வளித்து விடலாம் – ஆசிரியர் பிஆர்ஜெ)

ஒரு நாடு தனது எல்லைக்கருகே அல்லது எல்லை தாண்டி செய்யும் சுற்றுச் சூழல் பாதிப்பு காரணமாக மற்ற நாடும், அதன் குடிமக்களும் பாதிப்படைவது தொடர்பாக நாட்டுப்பொறுப்புநிலை பற்றி நாம் ஏற்கனவே கண்ட தீங்கான செயல்களுக்கு நாடுகளின் பொறுப்புநிலை மீதான வரைவு உறுபுகளில் குறிப்பாக வழிவகை ஏதும் செய்யப்படவில்லை. எனினும் சர்வதேச நீதிமன்றத்தின் முன் எழும் வழக்குகளில் கூறப்படும் தீர்ப்புகளும், நாட்டிடை வழக்கநெறிகளும், அவ்வப்போது உறுப்பு நாடுகள் கூடி ஏற்கும் மாநாட்டு ஏற்பு விதிகளும், விழைவறிக்கைகளும், நாட்டின் பொறுப்பு நிலை குறித்த கருத்துகளை அறிய நமக்கு வழிகாட்டுகின்றன.

நமது பிரச்சனை ஒரு நாட்டின் எல்லைதாண்டிய தீங்கால் மற்றொரு நாட்டுக் குடிநீர் மாசடைந்து சுற்றுச்சூழல் பாதிப்படைவது பற்றியது. இது **எல்லை தாண்டிய மாசுபாடு (Transboundary Pollution)** எனப்படுகிறது. இது குறித்து எழுந்த முக்கிய வழக்கொன்றை பின்வருமாறு கவனிப்போம்.

டிரெய்ல் உருக்காலை வழக்கு (Trail Smelter Case) – 1927–ஆம் ஆண்டு தொடங்கி 1941–ஆம் ஆண்டு வரை நடந்த இந்த வழக்கின் பொருண்மைகள் படி, கனடாவின் மேற்குபுற மாகாணமான பிரிட்டிஸ் கொலம்பியாவில் டிரெய்ல் என்ற நகரில் தனியார் நிறுவனம் ஒன்று உலோகத் தாதுக்களில் இருந்து உலோகங்களை உருக்கி எடுக்கும் உருக்காலை ஒன்றை நடத்தி வந்தது. அது 1896–ஆம் ஆண்டு முதல் ஈயம் மற்றும் துத்தநாகத்தை உற்பத்தி செய்து வந்தது. இதனால் உருக்காலை யில் இருந்து வெளிப்பட்ட புகை அதனை சுற்றியிருந்த காட்டையும், வயல்வெளிகளை யும் மாசுபடுத்தியது. மேலும் அந்த ஆலைக்கு அடுத்து இருந்த கனடா–அமெரிக்க எல்லையைத் தாண்டி வாஷிங்டன் நகரையும் மாசுபடுத்தியது. அங்கு வசித்து வந்தவர் களுக்கு உடல்நலக் கேட்டை உண்டு செய்தது. எனவே பாதிக்கப்பட்ட அமெரிக்க குடிமக்கள் அந்த உருக்காலையின் அதிபர்களுக்கு எதிராக புகார் செய்து இழப்பீடு கோரினர். அவர்களோ இழப்பீடு தர முன் வரவில்லை. எனவே பிரச்சனையும் முடிவுக்கு வரவில்லை. இதனால் அப்பூசல் இசைவுத் தீர்ப்பாயத்திற்கு சென்றது. அங்கு பாதிப்பிற்குள்ளான அமெரிக்க நாட்டிற்கு கனடா இழப்பீடு தர வேண்டும் என்று தீர்வம் பிறப்பிக்கப்பட்டது. **சுற்றுச்சூழல் மாசுபாட்டால் பாதிக்கப்பட்ட நாடு மற்றும் அதன் குடிமக்களுக்கு, மாசுபாட்டை விளைத்த நாடு இழப்பீடு தர வேண்டும் என்று இருந்த நாட்டிடை வழக்கநெறியானது, முதன்முறையாக இவ்வழக்கில் பின்பற்றப் பட்டது. மேலும் இவ்வழக்கில் இழப்பீடு வழங்க வேண்டிய பொறுப்பை கனடாவின் மீது இசைவுத்தீர்ப்பாயம் சுமத்தியதே தவிர, அந்த உருக்காலையை நடத்திய தனியார் தரப்பினர்கள் மீது அல்ல.**

'மாசுபடுத்திய நாடு இழப்பீடு தரக்கடமைப்பட்டது' என்று மேற்படி வழக்கில் நிலைநிறுத்தப்பட்ட தீர்ப்புநெறியானது, 1972–ஆம் ஆண்டில் ஸ்டாக்ஹோமில் நடை பெற்ற **மனித சுற்றுச்சூழலின் மீதான ஐக்கிய நாடுகளின் மாநாட்டில் விளம்புகை (Declaration of the United Nations Conference on the Human Environment, 1972)** செய்யப்பட்டது. இது **ஸ்டாக்ஹோம் விழைவறிக்கை (Stockholm Declaration)** எனப்படுகிறது. **அதன் கொள்கை 22–ஆனது,** நாடுகளின் அதிகாரவரம்பு மற்றும் கட்டுப்பாட்டிற்குள் செய்யப்படும் செயல்களால் அத்தகு நாடு களின் அதிகாரவரம்பிற்கு அப்பால் உள்ள பகுதிகளில் விளையும் மாசுபாடு மற்றும் பிற சுற்றுச்சூழல் சேதத்தால் பாதிக்கப்படுபவர்களுக்கு பொறுப்பாக இருந்து இழப்பீடு வழங்குதல் தொடர்பாக நாட்டிடைச்சட்டத்தை மேலும் வளர்க்க அவை ஒத்துழைத்துக் கொள்ள வேண்டும் (States shall co-operate to develop further the international law regarding liability and compensation for the victims of pollution and other environmental damage caused by activities within the jurisdiction or control of such States to areas beyond their jurisdiction - **Principle 22** of the Declaration) என்று கூறுகிறது.

இனி மேற்சென்ற சட்ட நிலைப்பாடுகள், வழக்கு நெறி மற்றும் விழைவறிக் கையின் அடிப்படையில் நமது பிரச்சனையை அணுகினால், நமக்கு பின்வரும் முடிபுகள் கிடைக்கின்றன. அவை,

(1) ஃபிளிதோர நதி 'A' நாட்டில் உதயமாகி 'B' நாட்டில் உள்ள ஏரியில் முற்றுப்பெறுகிறது. எனவே இங்கு ஒரு நாட்டின் நீர்நிலை எல்லை தாண்டி மற்றொரு நாட்டில் சென்று முடிகிறது.

(2) 'A' நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் கழிவுகள் அந்த நதியில் கலக்கப்பட்டு 'B' நாட்டுக்கு வந்தடைகிறது. 'B' நாட்டு மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் அந்நதி நீர் மாசடைந்து, அந்நாட்டு மக்களுக்கு கடும் உடல்நலக் குறைவு ஏற்படுகிறது. எனவே இங்கு எல்லைதாண்டிய மாசுபாடு ஆகும்.

(3) இங்கு 'A' நாட்டில் உள்ள தொழிற்சாலைகளை அதன் அரசாங்கமே நடத்தினால், அது 'B' நாட்டுக்குடிமக்களுக்கு நேரடியாகப்பொறுப்புடையதாகும். அதே நேரம் 'A' நாட்டில் உள்ள தொழிற்சாலைகளை வேறு தனியார் அதிபர்கள் நடத்தி வந்தால், அவர்களது சட்டமுரணான செயலை தட்டிக்கேட்டு 'A' நாடு அவர்கள் மீது நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு ஏதும் எடுக்காத நேர்வில் 'A' நாடே 'B' நாட்டுக்குடிமக்களுக்கு மறைமுகமாக அதாவது பகரப்பொறுப்புநிலையில் இழப்பீடு வழங்கப்பொறுப்புடையதாகும். இதற்கு ஆதாரம் **டிரெய்ல் உருக்காலை வழக்கில் (Trail Smelter Case)** இசைவுத்தீர்ப்பாயம் கூறிய தீர்ப்பு.

(4) ஸ்டாக்ஹோம் விழைவறிக்கையின்படி ஒரு நாட்டின் அதிகாரவரம்பிற் குள் செய்யப்படும் செயல்களால், அதன் அதிகாரவரம்பிற்கு அப்பால் இருக்கும் பிற நாட்டில் விளையும் மாசுபாடு மற்றும் சுற்றுச்சூழல் சேதத்தால் பாதிக்கப்பட்டவர் களுக்கு, அந்த நாடு இழப்பீடு வழங்க பொறுப்புடையது.

(5) எனவே தன்னாட்டிற்கும் தனது நாட்டு மக்களுக்கும் ஏற்பட்ட பாதிப்பு களுக்காக 'B' நாடு 'A' நாட்டிற்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்தில் தொடுக்கும் வழக்கில் அது நிச்சயம் வெற்றி பெறும் என்பதும், 'B' நாடு இழப்பீடு வழங்கக் கடமைப்பட்டது என்பதுமே நமது பிரச்சனையில் ஆழ்ந்து ஆராய்ந்து வழங்கப்படும் தீர்வாகும்.

பிரச்சனை 13:

Due to an explosion in ammunition factory situated in border area of State X, a toxic gas released and spread to neighbour State and killed ten people of State Y. How far X liable?

'X' நாட்டின் எல்லையோரப்பகுதியில் அமைந்திருக்கும் வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடி விபத்தின் காரணமாக விஷ வாயு ஒன்று

வெளியாகி, அது அண்டை நாடான 'Y' நாட்டிற்குப்பரவி அதன் குடிமக்கள் 10 பேரை கொன்றுவிட்டது. எந்த அளவுக்கு 'X' நாடு பொறுப்புடையதாகும்? தீர்மானி.

தீர்வு:

இப்பிரச்சனையும் நாட்டுப்பொறுப்பு நிலை **(State Responsiblity)** பற்றிய தாகும். முந்தைய பிரச்சனையின் தீர்வில் கூறப்பட்ட **எல்லை தாண்டிய மாசுபாடு (Transboundary Pollution)** இங்கும் பொருந்தும்.

எல்லை தாண்டிய மாசுபாடு என்பது, ஒரு நாட்டிலிருந்து ஆரம்பிக்கும் மாசுபாடு, அந்நாட்டின் எல்லையை நீர் அல்லது காற்றுவழியில் கடப்பதன் மூலம் மற்றொரு நாட்டின் எல்லைக்குள் நுழைந்து அதன் சுற்றுச்சூழலுக்கு மாசு/சேதம் விளைவிப்பதாகும்.

எடுத்துக்காட்டாக 1986–ஆம் ஆண்டில் உக்ரைனில் உள்ள செர்னோபிள் அணு சக்தி உற்பத்தி ஆலையில் நடந்த விபத்தை யாரும் மறக்க முடியாது. அந்த ஆலையில் புதிதாக கட்டப்பட்ட அணு உலை ஒன்றை பரிசோதிக்கும் போது அது பயங்கரமாக வெடித்துச்சிதறியது. இதன் காரணமாக விஷ வாயுக்களும், கதிர்வீச்சும் வெளிப்பட்டன. சுமார் 1 வார காலத்திற்கும் மேலாக ஆலை எரிந்து கொண்டிருந்தது. இதனால் கிளம்பி புகை, எங்கும் பரவிச்சென்று கொண்டிருந்தது. இதில் ஒருபுறம் உக்ரைனும் கடும் பாதிப்பிற்குள்ளானது; அதே நேரம் அந்த விபத்திலிருந்து வெளிப் பட்ட கதிர்வீச்சு காற்றில் பரவி மெல்ல உக்ரைனின் அண்டை நாடுகளான நார்வே, பின்லாந்து, சுவீடன் ஆகியவற்றுக்குப் பரவி ஐரோப்பாவின் மையத்தை அடைந்து, அந்நாடுகளின் சுற்றுச்சூழலில், வேளாண்மை உற்பத்தியில் பேரிடரை விளைவித்தது. அணு உலை வெடித்துச்சிதற அச்சமயத்தில் பணியில் இருந்தவர்களின் கவனக் குறைவே காரணம் என புலனாய்வில் தெரிய வந்தது. இவ்வாறு ஒரு நாட்டின் மாசு, எல்லை தாண்டிச் சென்று அண்டை நாட்டையும் பாதிக்கும் போது, கவனக்குறைவாக செயல்பட்ட அந்த நாடே அண்டை நாட்டிற்குப் பொறுப்பாகின்றது என்றும், ஏற்பட்ட சேதங்களுக்கு அது இழப்பீடு தரக்கடமைப்பட்டது என்றும் இப்பேரிடர் தொடர்பாக நடந்த வழக்கில் **(Chernobyl Disaster Case)** கருத்துரைக்கப்பட்டது.

எனவே **'எல்லை தாண்டிய நாட்டுப்பொறுப்பு நிலை' (Transboundary Responsibility)** என்பது சர்வதேச சுற்றுச்சூழல் சட்டத்திலும், ஆட்சிமுறையிலும் மிக முக்கியப்பங்கு வகிக்கிறது எனில் அது மிகையன்று.

இத்தகு பொறுப்பு நிலையை சர்வதேச நீதிமன்றம் 1949–ஆம் ஆண்டில் எழுந்த **கர்ஃபூ கால்வாய் வழக்கு (Corfu Channel Case)** என்று பிரபலமாக வழங்கப்படும் **United Kingdom Vs. Albania [(1949) ICJ 4]** என்ற வழக்கில் மேலும் உறுதிப்படுத்தியது. இவ்வழக்கில், கர்ஃபூ கால்வாயில், தனது எல்லையோர

நீரடியில் கன்னி வெடிகள் பரப்பப்பட்டிருப்பதை அறிந்திருந்தும், அல்பேனியா நாடு, அவ்வழியாகச் செல்லும் வேற்று நாட்டு கப்பல்களுக்கு அது பற்றி அறிவிக்கக் கடமைப் பட்டிருந்தும், அது எவ்வித அறிவிப்பும் தராமல் வாய்மூடி மௌனியாக இருந்தது. இதை அறியாத பிரிட்டிஷ் கடற்போர்க்கப்பல்கள் அவ்வழியாகச் சென்ற போது, மேற்படி கன்னி வெடிகளால் தாக்குண்டு வெடித்துச்சிதறின. இதனால் உயிரிழப்பும், பொருளிழப்பும் ஏற்பட்டன. அல்பேனியா நாடு தனது மேற்படி கடமையிலிருந்து தவறிய தால், பிரிட்டிஷ் நாட்டிற்கேற்பட்ட இழப்பினை ஈடு செய்ய வேண்டிய பொறுப்புக்குட் பட்டது என்றும், ஒரு நாடு அறிந்தே மற்ற நாடுகளின் உரிமைகளுக்கும் குடிமக்களின் உயிர்களுக்கும் தீங்கு ஏற்படுத்தும் வகையில் நடவாதிருக்கக் கடமைப்பட்டது என்றும் இவ்வழக்கைத் தீர்மானித்த சர்வதேச நீதிமன்றம் கருத்துரைத்தது.

நமது மேற்படி பிரச்சனையில் X நாட்டின் வெடிமருந்து தொழிற்சாலையில் ஏற்பட்ட வெடிவிபத்து அந்நாட்டின் கவனக்குறைவையே சுட்டிக்காட்டுகின்றது. எனவே அவ்விபத்தின் காரணமாக கசிந்த விஷ வாயு அண்டை நாடான Y நாட்டிற்குப் பரவி, அந்நாட்டு மக்கள் 10 பேரை கொன்றதற்கு, இழப்பீடு வழங்க X நாடு பொறுப்பு டையதே என்பதுதான் இங்கு தீர்வாகும். பாதிக்கப்பட்ட Y நாடு மேற்சொன்ன எல்லை தாண்டிய பொறுப்புநிலைக் கொள்கையின் அடிப்படையில் இழப்பீடு கோரலாம்.

பிரச்சனை 14:

Due to nuclear testing carried out by State X, people and environment of nearby border village of Y suffered severe damage. Y sued X - Decide.

'X' நாடால் செய்யப்பட்ட அணு உலை பரிசோதனையின் காரண மாக, அதன் எல்லையோர கிராமமான 'Y'-யின் குடிமக்களுக்கும், சுற்றுச் சூழலுக்கும் மிகக்கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டன. 'X' மீது 'Y' வழக்கிட் டது. தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனையும் நாட்டுப்பொறுப்பு நிலை பற்றியதாகும். முந்தைய பிரச்சனையின் தீர்வில் கூறப்பட்டவாறே இதனையும் தீர்க்கலாம். அப்பிரச்சனையில் கூறப்பட்ட சொர்னோபிள் வழக்கின் பொருண்மைகள்படி இங்கு 'X' மீது வழக்கிடும் 'Y' வெற்றிபெறும். இத்தீர்விற்கு எல்லைதாண்டிய பொறுப்புநிலைக் கொள்கை (Principle of Transboundary Responsiblity) அடிப்படையாக உள்ளது.

பிரச்சனை 15:

A foreigner 'F' residing in the State 'X' was killed in a mob violence. Discuss if and to what extent, the State 'X'

responsible?

'X' நாட்டில் வசிக்கும் 'F' என்ற அயல்நாட்டவர் உள்நாட்டு கலவரம் ஒன்றில் கொல்லப்படுகிறார். இதற்கு 'X' நாடு பொறுப்புடையதா? பொறுப்புடையது எனில் எந்த அளவுக்கு?

தீர்வு:

நாட்டுப்பொறுப்பானது உள்நாட்டுக்கலவரங்களாலும் (Mob violence) எழுவதுண்டு. உள்நாட்டுக் கலவரங்களின் போது அயல்நாட்டவரின் (அயலர் – Aliens) பொருட்களுக்கு சேதம் ஏற்படுவதுண்டு; அவரது உயிருக்கு ஆபத்து விளைவதும் உண்டு. இத்தருணங்களில் அந்நாடு அயல்நாட்டவரின் சொத்துக்களை அல்லது அவரது உயிரை கலவரக்காரர்களிடமிருந்து காப்பாற்ற நல்லெண்ணத்துடன் தன்னதிகாரத்திற்குட்பட்டு எல்லா முயற்சிகளையும் எடுத்திருந்தால் அது பொறுப்பாகாது. மாறாக அவ்வாறு காப்பாற்றுவதற்கு எவ்வித முயற்சியும் எடுக்காதிருந்தால், அந்நாடு பொறுப்பாளியாகக் கருதப்படும்.

அதுபோல் உள்நாட்டுக்கலவரம் திடீரென வெடித்து, அதில் அந்நாட்டின் குடிகளோடு சேர்ந்து, பத்தோடு பதினொன்றாக அயல்நாட்டவர் ஒருவரும் கொல்லப்பட்டால், அதற்கு அந்நாட்டை பெரிதளவில் சர்வதேசரீதியாக பொறுப்பாக்க முடியாது. ஆனால் அக்கலவரமே அந்த அயல்நாட்டவருக்கு எதிராக கட்டவிழ்க்கப்பட்டிருந்து, அதனைத்தடுக்கவோ, அவரது உயிரைக்காப்பாற்றவோ அந்நாடு முயற்சி ஏதும் செய்யாமல் இருந்தால், அதற்காக அந்நாட்டை பொறுப்பாக்க முடியும். அக்கலவரத்தில் கொல்லப்பட்ட அயல்நாட்டவரின் குடும்பத்திற்கு இழப்பீடு வழங்க அந்நாடு தனது உள்நாட்டு அதிகாரவரம்பின்படி பொறுப்புடையதாகும்.

சுருங்கச்சொன்னால் ஒரு தனிநபரின் தீங்கான செயலை ஒரு நாடு எதிர்பார்க்க இயலாது. ஆனால் ஒரு கலவரக்கும்பல் தன்னாட்டு மக்களுக்கு எதிராக தீங்கான செயலொன்றை செய்பவுள்ளது என்பதை ஒரு நாடு தனது உளவுத்துறையின் வாயிலாக நிச்சயம் அறிய முடியும்/எதிர்பார்க்க முடியும். அச்சமயத்தில் அந்நாடு தன்நாட்டு குடிமக்களுக்கு மட்டுமல்லாமல், தன் நாட்டில் தங்கியிருக்கும் அயல்நாட்டவர்களுக்கும் உரிய மற்றும் நியாயமான பாதுகாப்பை நல்க வேண்டியது அந்நாட்டின் பொறுப்பாகும். அக்கலவரத்தைத்தடுக்க அந்நாடு **'உரிய கவனமெடுத்து' (due diligence)** செயல்பட வேண்டும்.

நமது மேற்படி பிரச்சனையில் 'X' நாட்டில் நடந்த உள்நாட்டுக்கலவரம் ஒன்றில் 'F' என்ற அயல்நாட்டவர் கொல்லப்படுகிறார். இங்கு அந்தக்கலவரத்தைத் தடுக்க அந்நாடு உரிய கவனமெடுத்தது என்றோ, அந்த அயல்நாட்டவரை காப்பாற்ற அனைத்து முயற்சிகளையும் செய்தது என்றோ நமது பிரச்சனையில் குறிப்புகள் ஏதும் இல்லை. எனவே 'X' நாடு, 'F' என்ற அயல்நாட்டவரின் மரணத்திற்கு இழப்பீடு வழங்க தன்னாட்டு அதிகாரவரம்பில் பொறுப்புடையதாகும் என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 16:

A collision recurred on the higher seas between a French vessel and a Turkish a vessel. Victims were Turkesh national and the alleged offender was French. Could Turkey exercise its jurisdiction over this French national under International law? Decide.

பிரான்ஸ் மற்றும் துருக்கி நாட்டு கப்பல்களை நடுக்கடலில் மோதிக் கொள்கின்றன. பிரான்ஸ் கப்பலின் ஒரு நபர் செய்த செய்கையால் துருக்கி கப்பலில் பயணம் செய்தவர்களில் சிலர் பாதிக்கப்பட்டதால் பிரான்ஸ் கப்பலின் நபர், மீது குற்றம் சாட்டப்படுகிறது. இந்த செய்கையானது சர்வதேச சட்டத் தின்படி துருக்கியின் அதிகாரவரம்புக்குட்பட்டதா முடிவு செய்க.

தீர்வு:

ஒரு கப்பல் எந்த நாட்டைச் சேர்ந்ததோ அந்த நாட்டுக் கொடியை பறக்க விட்டிருந்தால் அது அந்நாட்டின் மிதக்கும் தீவாக கருதப்படும். அதாவது கப்பல்கள் அது பறக்கவிட்டிருக்கும் கொடி நாட்டின் நிலப்பகுதியிலிருந்து பெயர்த்து எடுத்து மிதக்கவிடப்பட்ட ஒரு சிறு நிலப்பரப்பு. எனவே அது ஒரு மிதக்கும் தீவாக கருதப்பட்டது.

நமது பிரச்சனை **France v. Turkey (The Case of the S.S. Lotus or The Lotus Case)** [Citation : S.S. Lotus (Fr. v. Turk.), 1927 P.C.I.J. (ser. A) No. 10 (Sept. 7)] என்ற நாட்டிடைச் சட்ட மிக முக்கியத்துவம் வழக்கை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும்.

இவ்வழக்கில் ஃபிரான்சு நாட்டின் 'லோட்டஸ்' எனும் கப்பல் துருக்கி நாட்டின் கப்பல் மீது ஆழ்கடலில் மோதியது. இந்த மோதலுக்கு ஃபிரான்சு நாட்டு கப்பலதிகாரியின் கவனக்குறைவே காரணமாக இருந்தது. இதனால் துருக்கி நாட்டின் கப்பல் கடலில் முழ்கியது. அதிலிருந்து 8 பேர் இறந்துவிட்டனர். ஃபிரான்சு நாட்டுக் கப்பலதிகாரி துருக்கியின் தலைநகரான கான்ஸ்டாண்டிநோபில்ஸ்–க்கு கொண்டு செல்லப்பட்டார். அங்கு அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டு குற்றவியல் வழக் கிடப்பட்டது. அதில் அவருக்கு 80 நாட்கள் சிறைவாசமும் அபராதமும் தண்டனையாக விதிக்கப்பட்டது. ஃபிரான்சு அரசாங்கம் இதற்கு கடும் ஆட்சேபணை தெரிவித்து, தனது கப்பலதிகாரியை விடுவிக்கும்படியும், தனது கப்பலில் தன் நாட்டின் கொடி பறந்து கொண்டிருந்த காரணத்தால், ஆழ்கடலில் நடந்த இந்தக்கப்பல் மோதல் குறித்த வழக்கை விசாரிக்கும் முழுமையான அதிகாரவரம்பு தனக்கே உள்ளது என்றும், துருக்கி நாட்டிற்கு இல்லை என்றும், எனவே வழக்கை தன்னாட்டு நீதிமன்றத்திற்கு மாற்றியனுப்பும்படியும் துருக்கி அரசை கேட்டது.

இதில் இரு நாடுகளின் அதிகாரவரம்பு பிரச்சனை எழுந்துள்ளதால், அதை

சர்வதேச நிரந்தர நீதிமன்றத்தின் [Permanent Court of International Justice (PCIJ)] அதிகாரவரம்பின் முன் வைக்க ஃபிரான்சும், துருக்கியும் இசைந்தன.

வழக்கின் போது தனது மேற்படி நிலைப்பாட்டிற்கு ஆதரவாக ஃபிரான்சு நாடு சர்வதேச வழக்குகள் சிலவற்றை முன்னுதாரணமாகக் காட்டியது. ஆனால் அவற்றில் யாவும் மோதலை சந்தித்த இரண்டு கப்பல்களுமே ஒரே நாட்டுக் கொடியையே தாங்கியிருந்தன. எனவே கப்பலில் கொடியை பறக்கவிட்டிருக்கும் நாடே ஆழ்கடலில் நடந்த மோதலை விசாரிக்க அதிகாரவரம்பு படைத்தது என்று ஃபிரான்சு வாதிடுவது ஏற்புடையதல்ல என்றும், அதற்கென நாட்டிடைச்சட்டத்தில் எந்த விதியும் இல்லை என்றும் கூறி, ஃபிரான்சின் வாதத்தை சர்வதேச நீதிமன்றம் நிராகரித்தது.

இங்கு சர்வதேச நீதிமன்றத்தின் முன் தீர்வுக்காக எழுந்த பிரச்சனை (Issue before the court) யாதெனில், துருக்கியின் வெளியே ஃபிரான்சு நாட்டுக் குடிமகன் ஒருவர் செய்த குற்றமொன்றின் மீது துருக்கி நீதிமன்றங்கள் அதிகார வரம்பை செலுத்தியதால், துருக்கி நாட்டிடைச்சட்டத்தை மீறிவிட்டதா? ஆமெனில், ஃபிரான்சுக்கு துருக்கி இழப்பீடு தர வேண்டுமா ? (Did Turkey violate international law when Turkish courts exercised jurisdiction over a crime committed by a French national, outside Turkey? If yes, should Turkey pay compensation to France?) என்பதே.

வழக்கை தீர ஆராய்ந்த சர்வதேச நீதிமன்றம், ஃபிரான்சு கப்பலதிகாரியின் மீது துருக்கி வழக்கிட்டதால், அது சர்வதேச சட்டம் எதையும் மீறவில்லை என்றும், எனவே அது ஃபிரான்சுக்கு (அதாவது அக்கப்பலதிகாரிக்கு) இழப்பீடு ஏதும் தர வேண்டியது இல்லை என்றும் தீர்ப்புரைத்தது.

இவ்வழக்கில் தனது மேற்படி தீர்ப்புக்கு ஆதாரமாக மூன்று கொள்கைகளை சர்வதேச நீதிமன்றம் கூறியது. அவை வருமாறு:–

முதற்கொள்கை: ஒரு சர்வதேச உடன்படிக்கையோ அல்லது வழக்கநெறிச் சட்டமோ அனுமதித்தாலன்றி, ஒரு நாடு தனது ஆள்நில எல்லைக்கு வெளியே தனது அதிகாரவரம்பை செயற்படுத்தக்கூடாது. இது லோட்டஸ் வழக்கின் முதற்கொள்கை எனப்படுகிறது. (**First principle of the Lotus Case:** A State cannot exercise its jurisdiction outside its territory unless an international treaty or customary law permits it to do so).

இரண்டாவது கொள்கை: நாட்டிடைச்சட்டத்தின் விதி ஏதும் அனுமதிக்காது போனாலும், தனது நாட்டு ஆள்நில எல்லைக்குள், எந்த விடயத்தின் மீதும் ஒரு நாடு தனது அதிகாரவரம்பை செயற்படுத்தலாம் **(Second principle of the Lotus Case:** Within its territory, a State may exercise its jurisdiction, in any matter, even if there is no specific rule of international law permitting it to do so).

அதாவது நாடுகள் பரந்த தன்விருப்புரிமை படைத்தவை; அதற்கு இருக்கும் ஒரே வரம்பு யாதெனில், அதன் செயலைத் தடுக்கும் வண்ணம் நாட்டிடைச்சட்டத்தில்

தடுப்பு விதிகள் (Prohibitory Rules) ஏதும் இருத்தலாகாது. வேறு வகையில் கூறினால், ஒரு செயல் நாட்டிடைச் சட்டத்திற்கு முரணானது என்று வெளிப்படையாக சொல்லப்படாத நேர்வில், அந்தச் செயலைச் செய்ய நாடுகள் பரந்த அதிகாரம் படைத்தவை. ஒரு நாடு தனது அதிகாரவரம்பைச் செயற்படுத்த, நாட்டிடைச்சட்டத்தில் குறிப்பிட்டதொரு விதி வகை செய்திருக்க வேண்டும் என்று சொல்ல ஆரம்பித்தால், நாடுகளால் ஒருமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட விதிகளை, நாடுகள் தங்கள் அதிகார வரம்பை செயற்படுத்தியதற்கு ஆதாரவாக வழக்குகளின் போது சுட்டிக்காட்ட இய லாது; வழக்குகளை தீர்க்கும் நீதிமன்றங்களின்பணியும் முடங்கிப்போகும் என்பதே இங்கு சர்வதேச நீதிமன்றம் மேற்படி இரண்டு கொள்கைகளின் வாயிலாக வலியுறுத்த விழையும் கருத்தாகும்.

மூன்றாவது கொள்கை: இவ்வழக்கில் சர்வதேச நீதிமன்றம் ஒருங்குநிகழ் (ஏககால) அதிகாரவரம்பு (Concurrent Jurisdiction) பற்றி கொள்கை ஒன்றை வகுத்தது. அது லோட்டஸ் வழக்கின் மூன்றாவது கொள்கை எனப்படுகிறது. அதாவது இவ்வழக் கில் தனது நாட்டின் கொடியை தனது கப்பல் பறக்கவிட்டிருந்ததால், ஆழ் கடலில் கப்பலில் விளைந்த குற்றங்களின் மீது தனக்கே முழு அதிகாரவரம்பு உண்டு என்று ஃபிரான்சு செய்த வாதத்தை சர்வதேச நீதிமன்றம் ஏற்கவில்லை. காரணம், ஃபிரான்சு கப்பல் எவ்வாறு தனது கொடியை பறக்கவிட்டிருந்ததோ, அவ்வாறே துருக்கி நாட்டு கப்பலும் தனது நாட்டு கொடியை பறக்கவிட்டிருந்தது. எனவே துருக்கியின் கொடியை தாங்கிய துருக்கி நாட்டுக்கப்பலின் மீது தனக்கு மட்டுமே முழுமையான அதிகார வரம்பு உண்டு ஃபிரான்சு வாதிடுவது ஏற்புடையதல்ல என்றும், இரண்டிற்குமே ஒருங்குநிகழ் அதிகாரவரம்பு உண்டு என்றும் நீதிமன்றம் நிலைநிறுத் தியது.

நிறைவாக இவ்வழக்கில் துருக்கி நாட்டு நீதிமன்றத்திற்குத்தான் அதிகார வரம்பு உண்டு என்றும், அது ஃபிரான்சு நாட்டுக்கப்பலதிகாரிக்கு எதிராக பிறப்பித்த ஆணை செல்லத்தக்கதே என்றும் சர்வதேச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது. இவ்வழக்கில் சர்வதேச நீதிமன்றம் தனது மேற்படி தீர்ப்புக்கு ஆதரவாக விளங்கும் கூற்றுகளைப் பற்றி கூறுகையில்,

(1) ஒரு நாட்டின் கப்பல் ஆழ்கடலில் சென்று கொண்டிருக்கும் போது, அதனை அந்நாட்டின் ஒரு மிதக்கும் தீவாகக் கருத வேண்டும். அது எந்த நாட்டுக் கொடியை பறக்கவிட்டுள்ளதோ அந்த நாட்டைச்சேர்ந்ததாக கருத வேண்டும்;

(2) எனவே ஒரு நாடு தன்னாட்டு நிலப்பரப்பின் மீது எவ்வாறு முழுமையான அதிகாரவரம்பு கொண்டுள்ளதோ, அதேபோன்று தன்நாட்டு கப்பலின் மீதும் அதிகார வரம்பு கொண்டதாகும்;

(3) இந்த வழக்கில் துருக்கியின் கப்பலை துருக்கியின் ஆள்நிலப்பரப்புக்கு (அதாவது துருக்கியின் தீவாக) சமானமாக சர்வதேச நீதிமன்றம் எடுத்துக்கொண்டு குறிப்பிடுகையில், ஃபிரான்சு கப்பல் துருக்கி நாட்டின் கப்பல் மீது மோதி, அதனை சேதப்படுத்தியது; அதில் இருந்தவர்களின் உயிர்களை பலிவாங்கியது. எனவே அந்த

கப்பல் மோதலை துருக்கியின் சொந்த ஆள்நிலத்தில் ஃபிரான்சு செய்த மோதலை ஒத்ததாகவே கருத வேண்டும்.

(4) இங்கு கப்பல் மீது மோதியவர்கள் அயல்நாட்டவர்களாகவே (ஃபிரான்சு நாட்டு கப்பலதிகாரி) இருந்தாலும் கூட, அவர்கள் மீது குற்றவியல் அதிகாரவரம்பை செயற்படுத்த துருக்கி நாட்டிற்கு அதிகாரவரம்பு உண்டு. அதனை கேள்வி கேட்க இயலாது.

(5) நிறைவாக மேற்சொன்ன லோட்டஸ் கப்பல் மோதல் வழக்கில் துருக்கி நாட்டு நீதிமன்றத்திற்கே அதிகாரவரம்பு உண்டு. அது தன்னாட்டு நீதிமன்றத்தில் ஃபிரான்சு கப்பலதிகாரியை விசாரித்து தீர்ப்பு வழங்கியது சரியே. இங்கு நாட்டிடை சட்ட மீறல் ஏதும் நிகழவில்லை. எனவே துருக்கி நாடு ஃபிரான்சுக்கு இழப்பீடு ஏதும் வழங்கப் பொறுப்புடையதல்ல.

[The Court held that a ship in the high seas is assimilated to the territory of the flag State. This State may exercise its jurisdiction over the ship, in the same way as it exercises its jurisdiction over its land, to the exclusion of all other States. In this case, the Court equated the Turkish vessel to Turkish territory. The Court held that the "...offence produced its effects on the Turkish vessel and consequently in a place assimilated to Turkish territory in which the application of Turkish criminal law cannot be challenged, even in regard to offences committed there by foreigners." **The Court concluded that Turkey had jurisdiction over this case.**]

மேற்சென்ற விவாதங்களின் அடிப்படையில், நமது மேற்படி பிரச்சனையில் ஃபிரான்சு கப்பல் நபர் மீது துருக்கி குற்றம் சாட்டிய செய்கையானது சர்வதேச சட்டத்தின்படி துருக்கியின் அதிகாரவரம்பிற்குட்பட்டதே என்பதே இங்கு தீர்வாகும்.

பிரச்சனை 17:

The 'Black Berry', a ship belonging to State X collided with a ship vessel belonging to Y due to which eight men died. Four of them are nationals of Y and other four are nationals of Z. The captain of Black Berry was captured by Z in its territory. Has Z got legal basis to exercise jurisdiction over him? Decide.

X நாட்டைச் சேர்ந்த பிளாக் பெரி என்ற கப்பல் Y நாட்டைச் சேர்ந்த கப்பல் மீது மோதியதால் எட்டு ஆடவர் இறந்துவிட்டனர். அவர்களில் நால்வர் Y நாட்டினத்தவர்கள், மீதி நால்வர் Z நாட்டினத்தவர்கள். பிளாக்பெரி கப்பல் தலைவனை தனது நாட்டு எல்லைக்குள் வைத்து Z நாடு சிறைப்பிடிக்கிறது. அவர் மீது அதிகாரவரம்பை செயற்படுத்துவதற்கு Z நாட்டிற்கு சட்ட அடிப்படை உள்ளதா? தீர்மானிக்க.

தீர்வு:

இப்பிரச்சனை நாம் இதற்கு முந்தைய பிரச்சனையில் கண்ட **France v. Turkey (The Case of the S.S. Lotus or The Lotus Case)** [Citation : S.S. Lotus (Fr. v. Turk.), 1927 P.C.I.J. (ser. A) No. 10 (Sept. 7)] என்ற வழக்கை பின்பற்றி அமைந்ததாகும்.

இவ்வழக்கில் கூறப்பட்ட முதலிரண்டு கொள்கைகளை இங்கு நினைவு கூறல் நலம். முதல் கொள்கையின்படி, ஒரு சர்வதேச உடன்படிக்கையோ அல்லது வழக்கநெறிச் சட்டமோ அனுமதித்தாலன்றி, ஒரு நாடு தனது ஆள்நில எல்லைக்கு வெளியே தனது அதிகாரவரம்பை செயற்படுத்தக்கூடாது. அதாவது ஒரு நாடு தனது ஆள்நில எல்லைக்கு வெளியே தனது அதிகாரவரம்பை செயற்படுத்த வேண்டும் என்றால், அதற்கு ஒரு சர்வதேச உடன்படிக்கை அல்லது வழக்கநெறிச்சட்டத்தால் விளைந்த விதி ஏதும் அனுமதிக்க வேண்டும் (A State cannot exercise its jurisdiction outside its territory unless an international treaty or customary law permits it to do so).

இரண்டாம் கொள்கையின்படி, ஒரு நாடு தனது ஆள்நில எல்லைக்குள் தனது அதிகாரவரம்பை செயற்படுத்துவதற்கு அதனை அனுமதிக்கும் நாட்டிடைச் சட்ட விதி ஏதும் இல்லாவிட்டாலும் கூட, விடயம் எதிலும் அந்நாடு தனது அதிகார வரம்பை செயற்படுத்தலாம் (Within its territory, a State may exercise its jurisdiction, in any matter, even if there is no specific rule of international law permitting it to do so). வேறு வகையில் சொன்னால், தன்நாட்டு ஆள்நில எல்லைக்குள், எந்த விடயத்தின் மீதும் ஒரு நாடு தனது அதிகாரவரம்பை செயற் படுத்தலாம்; இங்கு அவ்வாறு செயற்படுத்துவதை அனுமதிக்கும் நாட்டிடைச்சட்ட விதி ஏதும் இல்லாவிட் டாலும், அது ஒரு பொருட்டல்ல.

இப்பிரச்சனைக்கு தீர்வு காண மேற்சொன்ன இரண்டு கொள்கைகளையும் சற்றே பிணைத்துப்பார்த்தல் அவசியம். இவ்விரண்டு கொள்கைகளும் நாடுகள் தங்கள் அதிகாரவரம்பை செயற்படுத்துவதில் அவற்றுக்கு பரந்த தன்விருப்புரிமையை வழங்குகிறது. இங்கு நாடுகளுக்கு இருக்கும் ஒரே வரம்பு யாதெனில், அதன் செயலைத் தடுக்கும் வண்ணம் நாட்டிடைச்சட்டத்தில் தடுப்பு விதிகள் (States have a wide measure of discretion, which is only limited by the prohibitive rules of international law) ஏதும் இருத்தலாகாது. அப்படியென்றால், அயல்நாட்டில் நிகழ்ந்த செயல்களுக்காக அவற்றின் மீது தனது சொந்த ஆள்நில எல்லைக்குள் ஒரு நாடு தன்நாட்டு நீதிமன்ற அதிகாரவரம்பை செயற்படுத்த முடியுமா என்பது இங்கு எழும் வினாவாகும். செயற்படுத்த முடியும் என்பதே விடையாகும். எப்போது? அந்நாடு தனது அதிகாரவரம்பை அவ்வாறு செயற்படுத்துவதிலிருந்து அதனை வெளிப்படை யாக தடுக்கும் வண்ணம் நாட்டிடைச்சட்டத்தின் விதி ஏதும் அங்கு இருத்தலாகாது.

சுருங்கக்கூறின், 'வெளிப்படையான தடை ஒன்றை இறையாண்மை பெற்ற நாடுகள் மீறாத வரை அவை தாம் விரும்புகின்ற எந்த வழியிலும் செயற்படலாம்'

(Lotus principles says that sovereign states may act in any way they wish so long as they do not contravene an explicit prohibition) என்பதே மேற்படி லோட்டஸ் வழக்கின் கொள்கைகள் உணர்த்தும் சாரமாகும்.

மேற்கண்ட லோட்டஸ் வழக்கின் கொள்கைகள் மற்றும் அவற்றின் மீதான விவாதங்களின் அடிப்படையில் பின்வரும் ஒரு வினாவிற்கு விடை கண்டறிந்தால், அதுவே நமது தற்போதைய பிரச்சனைக்குத் தீர்வாகும். அவ்வினா யாதெனில், 'தனது நாட்டின் அதிகாரவரம்பிற்கு அப்பால் ஒரு அயல்நாட்டவர் புரிந்த செயல்களின் மீது தன் நாட்டில் குற்றவியல் அதிகாரவரம்பை செயற்படுத்துவதிலிருந்து அந்நாட்டை தடுக்கும் நாட்டிடைச்சட்ட விதி ஏதும் இருக்கின்றதா? (Does a rule of international law which prohibits a state from exercising criminal jurisdiction over a foreign national who commits acts outside of the state's national jurisdiction exist?) என்பதேயாகும். 'இல்லை' என்பதுதான் இதற்கு விடையாகும். அதாவது ஒரு நாடு மற்றொரு நாட்டின் ஆள்நில எல்லைக்குள் தனது அதிகார வரம்பைச் செயற்படுத்த இயலாது. ஆனால் அதே நேரம் அயல்நாட்டில் நிகழ்ந்த செயல் களுக்காக, தன்நாட்டு ஆள்நில எல்லைக்குள் அந்நாடு தனது அதிகாரவரம்பை செயற்படுத்துவதை நாட்டிடைச்சட்ட விதி ஏதும் தடுக்கவில்லை. (இங்கு அவ்வாறு அதிகாரவரம்பை செயற்படுத்துவதை அனுமதிக்கும் நாட்டிடைச் சட்ட விதியை அந்த நாடு சுட்டிக்காட்ட முடியவில்லை என்பது ஒரு பொருட்டல்ல. அதாவது தடுக்கப்படாத எதுவும் அனுமதிக்கப்பட்டதாகும்) (The international law does not prohibit a State from exercising jurisdiction in its own territory, in respect of any case that relates to acts that have taken place abroad which it cannot rely on some permissive rule of international law. Everything which is not forbidden is allowed))

நமது பிரச்சனையில் அவ்வாறு தடுக்கும் நாட்டிடைச்சட்ட விதி ஏதும் இருப்ப தாக குறிப்பு இல்லை. அதாவது, ஆழ்கடலில் X நாட்டைச் சேர்ந்த பிளாக்பெரி என்ற கப்பல் Y நாட்டு கப்பல் மீது மோதியதால், அக்கப்பலில் பயணித்த தன் நாட்டு மக்கள் நால்வர் இறந்ததற்காக பிளாக்பெரி கப்பல் தலைவனை Z நாடு சிறைப்பிடித்து தனது நாட்டு அதிகாரவரம்பை செயற்படுத்தியதை தடுக்கும் வண்ணம் நாட்டிடைச்சட்ட விதி ஏதும் இல்லை. எனவே Z நாடு நாட்டிடைச்சட்ட விதி எதற்கும் முரணாக நடக்க வில்லை. குறிப்பாக அக்கப்பல் மோதலில் தன்நாட்டினத்தவர்கள் நால்வர் இறந்து போனதற்காக பிளாக்பெரி கப்பல் தலைவனை தன்னாட்டு ஆள்நில எல்லைக்குள் சிறைப்பிடித்து, அவர் மீது நீதிமன்ற அதிகாரவரம்பை செயற்படுத்த **Z நாட்டிற்கு சட்டத் தகுதியும் அடிப்படையும் உண்டு என்பதே இங்கு முடிவான தீர்வாகும்.**

இப்பிரச்சனையை ஒரு கப்பல் ஆழ்கடலில் செல்லும் போது அது எந்த நாட்டு கொடியை பறக்கவிட்டுள்ளதோ அந்த நாட்டைச் சேர்ந்ததாகும்; அது அந்நாட்டின் ஒரு மிதக்கும் தீவாகும் (ஆள்நிலப்பரப்பாகும்) என்று லோட்டஸ் வழக்கில் கூறப்பட்ட மூன் றாவது கொள்கையின் (Floting Island Principle) அடிப்படையில் அணுகினால், பிளாக்பெரி கப்பலில் X நாட்டின் கொடி பறந்து கொண்டிருந்து, அவ்வாறே அது

மோதிய கப்பலில் Y நாட்டின் கொடி பறந்து கொண்டிருப்பின் இவ்விரு நாடுகளுக்கும் மோதல் குறித்த பிரச்சனையின் மீது **ஒருங்குநிகழ் (ஏககால) அதிகாரவரம்பு (Concurrent Jurisdiction)** அதிகாரவரம்பு உண்டு. குறிப்பாக ஆழ்கடலில் மிதக்கும் தீவாக இருந்த தன்னாட்டு கப்பல் மீது மோதி தனது நாட்டினத்தவர் நால்வரின் மரணத்திற்கு காரணமானதற்காக X நாட்டைச் சேர்ந்த பிளாக்பெரி கப்பல் தலைவன் மீது Y நாடு தனது நாட்டு அதிகாரவரம்பைச் செயற்படுத்தலாம். இங்கு அதில் பயணித்து இறந்தவர்களின் நாடான Z நாட்டிற்கு X நாட்டு பிளாக்பெரி கப்பல் தலைவன் மீது நேரடியான அதிகாரவரம்பு இல்லை; இரண்டாம்பட்சம்தான். அவரை Z நாடு தன்நாட்டில் வைத்து சிறைப்பிடித்தாலும் மேற்படி மிதக்கும் தீவுக் கொள்கைப்படி தங்களிடம் நீதிமன்ற விசாரணைக்காக ஒப்படைக்கும்படி X நாடும், Y நாடும் கோர அதிகாரவரம்பு படைத்தவை. (ஆனால் நமது பிரச்சனையில் மோதல் சமயத்தில் கப்பல்களில் அந்தந்த நாட்டின் கொடி பறந்து கொண்டிருந்தது என்றவாறு குறிப்புகள் ஏதும் இல்லை என்பதை இங்கு கவனத்தில் கொள்வது நலம்.)

லோட்டஸ் வழக்கிற்கு பின்னிட்டு, 1982–ஆம் ஆண்டில் நடந்த கடல் சட்டம் பற்றிய ஐக்கிய நாடுகள் மாநாட்டில் (United Nations Convention on the Law of the Sea, 1982) பல்வேறு ஏற்பு விதிகள் வகுக்கப்பட்டன. அவற்றில் 90 முதல் 111 வரையிலான உறுபுகள் ஆழ்கடலில் செல்லும் கப்பல்களின் அதிகாரவரம்பு பற்றி குறிப் பிடுகின்றன. குறிப்பாக எந்த நாட்டுக்கொடியை கப்பல் பறக்கவிட்டுள்ளதோ, அது அந்த நாட்டைச்சேர்ந்ததாகும், அந்நாட்டின் நிலப்பரப்பு கப்பலின் வடிவில் ஆழ்கடலில் ஒரு தீவாக மிதந்து கொண்டிருக்கின்றது என்று பொருளாகும் என்று லோட்டஸ் வழக்கில் கூறப்பட்ட கொள்கைகள் அவ்வுறுபுகளில் சேர்க்கப்பட்டன. உறுபு 91–ஆனது, கப்பல்கள் எந்நாட்டின் கொடியை பறக்கவிட உரிமை கொண்டுள்ளதோ, அவை அந்நாட்டின் நாட்டுரிமை கொண்டதாகும் (Ships have the nationality of the State whose flag they are entitled to fly - **Article 91 of UNCOLS**) என்று கூறுகிறது.

முக்கியமாக கப்பல் மோதல் மீதான அதிகாரவரம்பு பற்றி உறுபு 97 கூறுகை யில், "ஆழ்கடல் கப்பல் மோதலில், சம்பந்தப்பட்ட கப்பல் தலைவன் அல்லது அக்கப்ப லில் பணியாற்றும் நபருக்கு எதிராக தண்டனை அல்லது ஒழுங்கு நடவடிக்கை எடுப் பதாக இருப்பின், அது கப்பலில் எந்த நாட்டுக்கொடி பறந்து கொண்டுள்ளதோ அந்த நாட்டின் அல்லது குற்றஞ்சாட்டப்பட்ட அந்நபர்கள் எந்த நாட்டினத்தவர்களோ அந்த நாட்டின் நீதிமுறை அல்லது நிருவாகமுறை அதிகாரிகளால் மேற்கொள்ளப்பட வேண் டும்" (In the event of a collision or any other incident of navigation concerning a ship on the high seas, involving the penal or disciplinary responsibility of the master or of any other person in the service of the ship, no penal or disciplinary proceedings may be instituted against such person except before the judicial or administrative authorities either of the flag State or of the State of which such person is a national - **Article 97**) என்று தெளிவுபடுத்துகிறது. எனவே இதன்படி நமது பிரச்சனையை அணுகி னால், X நாட்டைச் சேர்ந்த பிளாக்பெரி கப்பல் Y நாட்டுக் கப்பல் மீது மோதி அதில்

பயணித்தவர்களின் உயிர்களை பலி வாங்குகிறது. எனவே இங்கு குற்றச் சாட்டுக்கு ஆளாகும் **பிளாக்பெரி கப்பலை ஓட்டிய கப்பல் தலைவன் எந்த நாட்டினத் தவரோ அந்நாட்டிற்கே அவர் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரவரம்பு உண்டு.** ஒருக்கால் நமது பிரச்சனையில் சிக்கிய கப்பல்கள் தத்தம் நாட்டுக் கொடியை பறக்க விட்டிருந் தால், X, Y ஆகிய இரண்டு நாடுகளுக்கும் பிளாக்பெரி கப்பல் தலைவன் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரவரம்பு உண்டு. (கப்பல்கள் கொடியை பறக்க விட்டதற் கான குறிப்பு ஏதும் நமது பிரச்சனையில் இல்லை.)

(நாட்டிடைச்சட்டத்தில் **லோட்டஸ் வழக்கு** என்பது மிகவும் புகழ் பெற்றதா கும். நாட்டிடைச்சட்டத்தால் தடுக்கப்படாத ஏதையும் தன் விருப்பப்படி செய்ய நாடுகள் அனுமதிக்கப்பட்டவையாகும் என்பது உள்ளடங்கலாக நாடுகளின் அதிகாரவரம்பு பற்றி பல்வேறு நுணுக்கமான விடயங்களை எடுத்துரைத்த வழக்கு இது. எனவே பிரச் சனைக்கான தீர்வு நீண்டு இருந்தாலும், ஒரு முறை ஆழ்ந்து படித்துக் கொண்டால், பிரச்சனை வினாக்கள் எவ்வாறு கேட்கப்பட்டாலும் தீர்வளித்துவிடலாம். மேலும் இது தொடர்பாக வினவப்படும் நெடு மற்றும் குறு வினா எதற்கும் எளிதில் பதிலளித்து விடலாம். தேர்வின் போது தீர்வை சுருக்கமாக எழுதுக. – **ஆசிரியர் பி.ஆர்ஜெ.**)

பிரச்சனை 18:

On 31 May 2010, Israel military attacked a Turkish ship that carried aid for Gaza. As this is an untoward situation, the United National Security Council called a prompt action, impartial, credible and then transparent investigation, conforming to the International standards. State whether the United Nations Security Council can assist by sending its troops to take necessary action or not?

இஸ்ரேல் இராணுவம் கடந்த 2010 மே மாதம் 31ம் நாள் காசாவிற்கு எடுத்துச் செல்வதற்கான உதவி பொருள்கள் அடங்கிய துருக்கி நாட்டு கப்பல் கடலில் சென்று கொண்டு இருக்கையில் அக்கப்பலை தாக்கி வெடிகுண்டு வைத்து அகற்றியது. இந் நிலையில் ஐக்கிய நாட்டின் பாதுகாப்பு சபையில் பாரபட்சமற்ற நேர்மையான வெளிப் படை தன்மையுடைய விசாரணை சர்வதேச தரத்திற்கு இணங்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானம் இயற்றப்பட்டது. இஸ்ரேல் ராணுவத்தின் இச்செயல் குறித்து ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு குழுமம் தன்னுடைய இராணுவத்தை அனுப்பி உதவியாக எதிர்கொள்ளலாமா இல்லையா என்பதை விளக்குக.

தீர்வு:

சர்வதேச அமைதியை அச்சுறுத்தும் பிரச்சனையில் ஐ.நா.–வின் பாதுகாப்புச் சபை எடுத்த எடுப்பிலேயே இராணுவத்தையெல்லாம் அனுப்ப முடியாது என்பது இங்கு தீர்வாகும். ஐ.நா. சாசனத்தின் உறுபுகள் 39 முதல் 41–ஐ முதலில் பின்பற்ற வேண்டும். பிரச்சனை எண். 10–ன் தீர்வில் கூறப்பட்ட கருத்துகளின்படி தீர்வளிக்கவும்.

தமிழ்நாடு
டாக்டர் அம்பேத்கர்
சட்ட பல்கலைக்கழக
வினாத்தாள்கள்
[Tamil Nadu
Dr. Ambedkar Law University
Question Papers]

பல்கலைக்கழக வினாத்தாள்கள்
[University Question Papers]

மூன்றாண்டு சட்டக்கல்வி

மே, 2016

B.L. DEGREE EXAMINATION, MAY 2016.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க

1. Explain the rights and duties of individual under International law.
நாட்டிடைச் சட்டத்தின் கீழ் தனி மனிதனுக்கு உரிய கடமைகள் மற்றும் உரிமைகளை விளக்குக.

2. State the reasons as to why judicial decisions are considered to be indirect source of international law.
நாட்டிடைச் சட்டத்திற்கு மறைமுக ஆதாரமாக நீதிமன்ற தீர்வுகள் கருதப்படுவதற்குரிய காரணங்களை கூறுக.

3. Discuss the kinds of State Responsibility.
நாட்டின் பொறுப்புரிமை விதங்களை விவாதிக்கவும்.

4. Discuss the modes by which Nationality can be acquired.
நாட்டுரிமை பெறும் விதங்களை பற்றி விவாதிக்க.

5. Discuss the various jurisdiction of International Court of Justice.
சர்வதேச நீதிமன்றத்தின் பல்வேறு ஆள்வரையை விவாதிக்கவும்.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Doctrine of Double Criminality
இரட்டை குற்றக் கொள்கை விதி

(b) Citizenship
குடியுரிமை

(c) Diplomatic privileges
தூதுவர் சிறப்புரிமைகள்

(d) Continental shelf
கண்டத் திட்டு

(e) Protectorate state
பாதுகாப்பிலிருக்கும் நாடு

(f) Rights of Aliens
வெளிநாட்டவர்களின் உரிமைகள்

(g) Neutralised states
நடு நிலையான நாடுகள்

(h) Positivist theory
நேர்முறை கொள்கை

(i) Consuls
வணிக தூதுவர்கள்

(j) Maritime Belt
எல்லையோரக் கடல்

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) International Sea Bed Authority
சர்வதேச கடல் அடி வாரியம்

(b) Is Recognition, duty of a state?
அங்கீகாரம் நாட்டின் கடமையா?

(c) Right to punish Piracy
கடற் கொள்ளையை தண்டிக்கும் உரிமை

(d) Functions of diplomatic agents
தூதுவர் முகவர்களின் செயல்பாடுகள்

(e) Formation of a Treaty
உடன்படிக்கைகள் உருவாக்குதல்

(f) Custom and usage
வழக்காறு மற்றும் பழக்கம்

நவம்பர், 2016

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2016.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க

1. Explain the various theories that explain the nature and basis of International law.
நாட்டிடைச் சட்டத்தின் இயல்பு மற்றும் அடிப்படையினை விளக்கும் பல்வேறு கருத்தியல்களை விளக்குக.

2. Discuss the role of State and Individual as subjects of International Law - Discuss.
நாட்டிடைச் சட்டத்தின் அகநிலைப் பொருளாக தனிமனிதனும் அரசும் பங்காற்றுகின்றன – விவாதிக்க.

3. "The International Court of Justice shall apply International Conventions in preference to other sources of International Law in deciding dispute" - Explain.
"ஒரு வழக்கைத் தீர்மானிப்பதற்கு. நாட்டிடைச் சட்டத்தின் மற்ற மூலங்களை விட பன்னாட்டு உடன்படிக்கைகளுக்கே பன்னாட்டு நீதிமன்றம் முக்கியத்துவம் அளிக்கும்" – விளக்குக.

4. Explain the purposes and principles of the UNO.
ஒன்றிய நாட்டு அமைப்பின் நோக்கங்கள் மற்றும் நெறிமுறைகளை விளக்குக.

5. Discuss the consequences of State Succession with respect to International Treaties.
பன்னாட்டு உடன்படிக்கைகள் தொடர்பான நாட்டிறங்குரிமையின் விளைவுகளை விவாதிக்க.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Differentiate Public International Law and Private International Law.
பொது நாட்டிடைச் சட்டம் மற்றும் தனியார் நாட்டிடைச் சட்டங்களை வேறுபடுத்துக.

(b) Corfu Channel case.
கார்ஃபியூ கால்வாய் வழக்கு

(c) Status of refugees.
அகதிகளின் நிலைபாடு.

(d) Functions of the consulate.
வணிகத்தூதரகத்தின் பணிகள்.

(e) State Recognition.
நாட்டின் அங்கீகாரம்.

(f) Floating Island theory.
மிதக்கும் தீவு கருத்தியல்.

(g) Queen Vs Keyn.
அரசி எதிர். கீன்.

(h) North sea continental shelf case.
வடகடல் கண்டத்திட்டு வழக்குகள்.

(i) Territorial waters.
நிலவரைக் கடல்.

(j) Common heritage of mankind.
மனித இனத்தின் பண்பாட்டுப் பொதுச் சொத்து.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Island of Palmas Case.
பால்மஸ் தீவு வழக்கு.

(b) Vassal State.
அடிமை நாடு.

(c) Calvo Clause.
கால்வோ வகையம்.

(d) Differentiate Extradition and Deportation.
மீட்டு ஒப்படைத்தலை நாடு கடத்துதலிலிருந்து

(e) Expulsion of a member from the UNO.
வேறுபடுத்துக.
ஐக்கிய நாட்டு அமைப்பிலிருந்து உறுப்பினர் நாட்டினை வெளியேற்றல்

(f) Advisory jurisdiction of the ICJ.
பன்னாட்டு நீதிமன்றத்தின் ஆலோசனை ஆள்வரை.

மே, 2017

B.L. DEGREE EXAMINATION, MAY 2017.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க

1. Discuss the difference between Public International Law and Private International Law.
பொது நாட்டிடைச் சட்டத்திற்கும், தனி நாட்டிடைச் சட்டத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விவரிக்கவும்.

2. What are the rights, privileges and immunities of diplomatic agents?
தூதரக முகவர்களின் உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் சட்டரீதியான விலக்களிப்புகள் யாவை?

3. Discuss the rights and liabilities that arise out of State Succession.
நாட்டின் இறங்குரிமையால் கிடைக்கப் பெறும் உரிமைகள் மற்றும் பொறுப்பாடைகளை பெகைப்படுத்துக.

4. Define Nationality and discuss the various modes of acquiring and losing Nationality.
'நாட்டுரிமை' என்பதை வரையறை செய்து நாட்டுரிமையைப் பெறுவதும் அதனை இழக்கும் முறைகளைப் பற்றியும் விவாதிக்கவும்.

5. Write an essay briefly on the United Nations Convention on the Law of Sea, 1982.
1982 ம் ஆண்டின் ஐக்கிய சபை நாடுகளின் கடல் சட்டம் குறித்துச் சுருக்கமானக் கட்டுரை எழுதுக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Theory of positivism.
மெய்விளக்கக் கோட்பாடு.

(b) Pacquete Habana Chase.
பாக்குயட் ஹேபனா வழக்கு.

(c) Corfu Channel case.
கார்ஃபியூ கால்வாய் வழக்கு.

(d) Dualism.
இரு பொருள் வாதம்.

(e) Territorial Sovereignty.
நிலவரை இறையாண்மை.

(f) International Tribunal.
பன்னாட்டுத் தீர்ப்பாயம்.

(g) Continental Shelf
கண்டத் திட்டு.

(h) Treaty.
உடன்படிக்கை.

(i) Advisory Jurisdiction of International Court of Justice.
பன்னாட்டு நீதிமன்றத்தின் ஆலோசனை ஆள்வரை.

(j) Palamas Island Case.
பால்மஸ் தீவு வழக்கு.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Territorial Sea.

நிலவரைக் கடல்.

(b) Intervention
தலையீடு.

(c) Constitutive theory.
அமைப்புக் கோட்பாடு.

(d) Trail Smelter case.
டிரயல் ஸ்மெல்டர் வழக்கு.

(e) Delegation Concept.
அளிப்படைவு கருத்தியல்.

(f) De facto Recognition.
நிகழ்வு நிலை அங்கீகாரம்.

நவம்பர், 2017

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2017.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க

1. Critically examine the United Nations Convention on Law of Seas, 1982 (UNELOS).
1982–ம் ஆண்டின் ஒன்றியத்து நாடுகளின் கடலாண்மை சட்ட மரபொழுங்கை கூர்ந்தாய்வு செய்க.

2. Critically analyse the various jurisdictions of the International Court of Justice (ICJ).
பன்னாட்டு நீதிமன்றத்தின் பல்வேறு வகையான ஆள்வரையினைப் பற்றி திறனாய்வு செய்க.

3. What are the consequences of State succession with respect to International Contracts and Treaties and discuss with decided cases?
நாட்டிடை ஒப்பந்தங்கள் மற்றும் உடன்படிக்கைகளுக்கு நாட்டிறங்குரிமையால் ஏற்படும் விளைவுகள் யாவை என்பதை முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு விவாதிக்க?

4. Explain the law relating to extradition of political offenders with decided cases.
அரசியல் குற்றவாளிகளை மீட்டொப்படைத்தல் குறித்த சட்டத்தினை முடிவு செய்யப்பட்ட வழக்குகளோடு விளக்குக.

5. Briefly narrate the development of International law regarding Outer space.

அம்பரம் தொடர்புடைய நாட்டிடைச் சட்டத்தின் வளர்ச்சியைப் பற்றி சுருக்கமாக விவரிக்க?

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.

பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Consuls.
வணிகத் தூதுவர்கள்.

(b) Basis of International law.
பன்னாட்டுச் சட்டத்தின் அடிப்படை.

(c) Double Nationality.
இரட்டை நாட்டுரிமை.

(d) State Responsibility.
அரசின் பொறுப்பு.

(e) Dualism.
இரட்டைக் கோட்பாடு.

(f) Arantzazu Mendi's case.
அரண்சாசு மெண்டி வழக்கு.

(g) Vienna convention on Law of Treaties.
நாட்டிடை உடன்படிக்கை குறித்து வியன்னா சாசனம்.

(h) Admission and suspension of a state in the U.N.
ஒன்றிய நாட்டமைப்பில் நாட்டினைச் சேர்த்தலும் இடைநீக்கம் செய்தலும்.

(i) De jure Recognition.
சட்டநிலை அங்கீகாரம்.

(j) Temple of Preah Vihar case.
பிரிவிகார் கோவில் வழக்கு.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Piracy.
கடல் கொள்ளை.

(b) Reservation of Treaties.
பன்னாட்டு உடன்படிக்கைகளில் ஒதுக்கீடு.

(c) Corfu Channel case.
கார்ஃபூ கால்வாய் வழக்கு.

(d) Jus soli
மண்ணின் சட்டம்.

(e) Extra-territorial Asylum.

புற வரம்பெல்லை புகலிடம்.

(f) Hugo Grotius.
ஹுகோ குராஸ்சியஸ்.

மே, 2018

B.L. DEGREE EXAMINATION, MAY 2018.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க

1. Discuss the general principles of law recognised by civilized states as sources of international law.
பண்பார்ந்த நாடுகளால் அங்கீகரிக்கப்பட்ட பொதுவான சட்டநெறிகளே நாட்டிடைச் சட்டத்திற்கான மூலமாகும் என்பதை விவாதிக்க?

2. Explain the theories relating to relationship between international law and municipal law.
நாட்டிடை மற்றும் நாட்டுச் சட்ட உறவுமுறைகளை விளக்கும் கருத்தியல்களைப் பற்றி விளக்குக.

3. What is state responsibility and discuss with different responsibilities of the states?
அரசின் பொறுப்பு என்றால் என்ன என்பதுடன் அதன் பல்வேறு பொறுப்புகளையும் விவாதிக்க.

4. Briefly explain the origin and development of law relating to diplomatic relations.
தூதரக உறவாண்மை குறித்த சட்டத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சியினைப் பற்றி சுருக்கமாக விளக்குக.

5. Briefly explain the U.N Convention on Law of Sea, 1982.
1982–ம் ஆண்டு ஒன்றியத்து நாடுகளின் கடலாண்மை சட்டம் பற்றி சுருக்கமாக விளக்குக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) International Tribunal for the Law of Sea.

பன்னாட்டு கடலாண்மை தீர்ப்பாயம்.

(b) Prescription and Temple of Preach Vihar case.
நீடனுபோகமும் பிரிவிஹார் கோவில் வழக்கும்.

(c) Statelessness.
குடியுரிமையின்மை.

(d) Protection of Refugees.
அகதிகளை பாதுகாத்தல்.

(e) Interpretation of treaty.
உடன்படிக்கையினை பொருள் காணல்.

(f) Nuclear Test Case, 1973.
அணு வெடிப்பு சோதனை வழக்கு, 1973.

(g) Succession of public debt.
பொதுக்கடன் இறங்குரிமை.

(h) Estrada and Stimson Doctrille.
எஸ்ட்ராடா மற்றும் ஸ்டிம்சன் கோட்பாடு.

(i) Essential elements of state.
அரசின் முக்கியக் கூறுகள்.

(j) Pacific setticinent of disputes.
அமைதி வழியிலான தீர்வுகள்.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Mai lai trial.
மாய் லாய் விசாரணை.

(b) Extradition.
குற்றவாளிகளை திரும்ப ஒப்படைத்தல்.

(c) Outer space treaty.
அண்டவெளி உடன்படிக்கை.

(d) WHO
உலக சுகாதார அமைவம்.

(e) Veto power.
முடிவெடுக்கும் அதிகாரம்.

(f) Ex equo et bono.
ஏற்ற சட்டத்திற்கு மேலாக சென்று தீர்வழி காணல்.

நவம்பர், 2018

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2018.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. Discuss the differences between Public International Law and Private International Law.

பொது நாட்டிடை சட்டத்திற்கும், தனியார் நாட்டிடை சட்டத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டினை விவரிக்கவும்.

2. Examine "Judicial decisions" as source of International Law.

"நீதிமன்ற தீர்வுகள்" நாட்டிடை சட்டத்தின் மூலமாக அமைந்துள்ளது என்பதை ஆராய்க.

3. What are the essential conditions for Extradition?

மீட்டொப்படைத்தலுக்குத் தேவையான காரணிகள் என்ன என்பதினை எடுத்துரைக்கவும்.

4. What are the Rights and Duties of the State under the International Law?

நாட்டிடைச்சட்டத்தின் கீழ் ஒரு நாட்டின் உரிமைகள் மற்றும் கடமைகள் என்ன என்பதைக் கூறுக.

5. Discuss the scope and . jurisdiction of the International Court of Justice.

பன்னாட்டு நீதிமன்றத்தின் நோக்கெல்லை மற்றும் ஆள்வரையினைப் பற்றி விவாதிக்கவும்.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.

பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) International Tribunal.
பன்னாட்டுத் தீர்ப்பாயம்.

(b) Security Council.
பாதுகாப்பு மாமன்றம்.

(c) International Treaties.
பன்னாட்டு உடன்படிக்கைகள்.

(d) Refugees under International Law.
நாட்டிடை சட்டத்தின் கீழ் அகதிகள்.

(e) Asylum.
புகலிடம்.

(f) Law of the Air.
வளிச் சட்டம்.

(g) Nuremberg Trial.
நியூரம்பர்க் விசாரணை.

(h) Jus Cogens.

ஜஸ் கோஜன்ஸ்.

(i) Diplomatic Agent.
தூதாண்மையர்.

(j) Territorial Sovereignity.
நிலவரை இறையாண்மை.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Calvo clause.
கால்வோ வகையம்.

(b) De-Jure recognition.
சட்டநிலை அங்கீகாரம்.

(c) Public debt.
பொதுக் கடன்.

(d) Tokyo Trial.
டோக்கியோ விசாரணை.

(e) Pirates.
கடல் கொள்ளையர்கள்

(f) Estrada Doctrine.
எஸ்ட்ராடா கோட்பாடு.

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

மே, 2019

B.L. DEGREE EXAMINATION, MAY 2019.

INTERNATIONAL LAW

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Explain the various jurisdiction of the International Court of Justice.
சர்வதேச நீதிமன்றத்தின் பல்வேறு நீதிவரம்பெல்லைகளைப் பற்றி விளக்குக.

2. "International Law has been reduced into a mere directive principle under the Indian Constitution" - Examine.
"நாட்டிடைச் சட்டமானது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் ஒரு கோட்பாடாக குறைக்

கப்பட்டுள்ளது" – ஆராய்க.

3. Explain the law relating to State succession of treaties and contracts.
உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பான நாட்டு இறங்குரிமை சட்டத்தை விளக்குக.

PART B - (2 x 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the decision of the ICJ in the case concerning Corfu channel.
கார்ஃபூ கால்வாய் தொடர்பான வழக்கில் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்க.

5. Discuss the law relating the Hot Pursuit by referring to decided cases.
தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கொண்டு துரத்திப் பிடித்தல் தொடர்பான சட்டத்தைப் பற்றி விவாதிக்க.

6. What are the conditions to be satisfied before extraditing a criminal from the country to another?
ஒரு குற்றவாளியை ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு மீட்டு ஒப்படைத்தல் செய்வதற்கு முன்னால் பின்பற்ற வேண்டிய காரணிகள் யாது?

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on **FIVE** of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Custom as a source of International law.
நாட்டிடைச் சட்டத்தின் மூலமாக வழக்காறு.

(b) Protectorate State.
காப்பாந்து நாடு.

(c) Different kinds of diplomatic agents.
தூதாண்மையாளர்களின் பல்வேறு வகைகள்.

(d) Termination of a Treaty.
உடன்படிக்கை இரத்து.

(e) Uniting for Peace Resolution.
அமைதிக்கான ஒன்றுபடுதல் தீர்மானம்.

(f) Refugees.
அகதிகள்.

(g) Jus Cogens.
ஜெஸ் கோஜன்ஸ்.

PART D - (2 x 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A group of pirates belonging to State 'A' were arrested 10 nautical miles off the coast of State 'X'. State 'A' requested State: 'X' to hand over the pirates for which State 'X' refused. State 'A' moved to the ICJ. Decide.

'X' நாடு தனது நிலப்பரப்பிலிருந்து 10 கடல் மைல்கள் தொலைவில் 'A' நாட்டை சார்ந்த கடல் கொள்ளையர்களை கைது செய்தது. அவர்களை தங்களிடம் ஒப்படைக்குமாறு 'A' நாடு 'X' நாட்டைக் கேட்டுக் கொண்டது. ஆனால் 'X' நாடு. அதை மறுத்தது. 'A' நாடு சர்வதேச நீதிமன்றத்தை நாடியது. தீர்மானிக்கவும்.

9. River Jalan passes through State 'A' and State 'B'. 'A' and 'B' entered into a treaty in 1932 to construct dams across Jalan. In 2019 'B' was divided into two separate States 'B1' and 'B2'. Now State 'A' wants to execute the treaty but 'B1' in which river Jalan flows now refuses to entertain the treaty obligations. State 'A' moves to the ICJ against State 'B1'. Decide.

நாடுகள் 'A' மற்றும் 'B' வழியாக ஜலன் ஆறு பாய்கிறது. 1932–ம் ஆண்டு 'A' மற்றும் 'B' அவ்வாற்றின் மீது அணைகள் கட்ட ஒரு உடன்படிக்கை ஏற்படுத்திக் கொண்டது. 2019–ம் ஆண்டு 'B' நாடு இரண்டாக பிரிந்து 'B1' மற்றும் 'B2' ஆனது. தற்போது 'B1' நாட்டில் ஜலன் பாய்வதால் 'A' நாடு 'B1' நாட்டிடம் முந்தைய உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த முற்பட்டபோது 'B1' நாடு அவ்வுடன்படிக்கையை ஏற்க மறுத்தது. 'A' நாடு சர்வதேச நீதிமன்றத்தை நாடியது. தீர்மானி.

10. Two countries 'A' and 'B' claims for a small Island 'X'. 'A' claims to have discovered the Island in 1684. 'B" claims that it had a long and continuous display of sovereignty over the Island. The people of the Island speak the language of 'B', 'A' moves the ICJ to declare that the Island 'X' belongs to 'A' but was resisted by 'B'. Decide.

'A' மற்றும் 'B' ஆகிய இரு நாடுகள் 'X' என்கிற சிறு தீவின் மீது உரிமை கொண்டன. 1684 ஆம் ஆண்டு அத்தீவை கண்டுபிடித்ததாக 'A' உரிமை கொண்டாடு கிறது. 'B' நாடு அத்தீவு வெகுகாலமாக தொடர்ந்து தனது இறையாண்மையின் கீழ் உள்ளதாக உரிமை கோருகிறது. அத்தீவில் உள்ள மக்கள் 'B' நாட்டில் பேசும் மொழியை பேசுகிறார்கள். அத்தீவு தனக்கு தான் சொந்தம் என்று விளம்பக்கோரி சர்வதேச நீதிமன்றத்தில் 'A' நாடு வழக்காடியது, அதை 'B' நாடு எதிர்த்தது. தீர்மானிக்கவும்.

நவம்பர், 2019

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2019.

INTERNATIONAL LAW

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Examine the relationship between International law and Municipal law.

நாட்டிடைச் சட்டத்திற்கும், உள்நாட்டுச் சட்டத்திற்கும் உள்ள உறவை ஆராய்க.

2. Enumerate the walient features of the United Nations Convention on the law of Seas, 1982.

1982–ம் ஆண்டின் கடல்களைப் பற்றிய சட்டம், தொடர்பான ஐக்கிய நாடுகள் சாசனத்தின் முக்கிய கூறுகளை பட்டியலிடுக.

3. Whether an individual is a subject of International law? Refer to decided cases.

ஒரு தனிநபர் நாட்டிடைச் சட்டத்தின் அங்கமாக உள்ளாரா? தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோள் காட்டுக.

PART B - (2 x 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Examine the decision of the ICJ in the case concerning the Temple of Preah Vihar.

ஃப்ரிய விகார் கோவில் தொடர்பான வழக்கில் சர்வதேச நீதிமன்றத்தின் தீர்ப்பை ஆராய்க.

5. Enlist the privileges enjoyed by the diplomatic agents.

தூதுவர்களுக்கு வழங்கப்படும் சிறப்புச் சலுகைகளை பட்டியலிடுக.

6. What are the International Tribunals constituted under International law? Briefly narrate about each one of them.

நாட்டிடைச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டுள்ள சர்வதேச தீர்ப்பாயங்கள் யாது? அவை ஒவ்வொன்றைப் பற்றியும் சுருக்கமாக விவரிக்க.

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on **FIVE** of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Treaty Contracts.
ஒப்பந்த உடன்படிக்கைகள்.

(b) Extra-territorial Asylum.
எல்லைக் கடந்த புகலிடம்.

(c) Partial Succession.
பகுதியான இறங்குரிமை.

(d) Refugees.
அகதிகள்.

(e) General Assembly.
பொதுச்சபை.

(f) Hot pursuit.
துரத்திப் பிடித்தல்.

(g) Chicago Convention.
சிக்காகோ சாசனம்.

PART D - (2 x 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State 'X' is a member of the UNO, State 'Y' was formed by carving out a portion of state 'X'. Now 'Y' state claims the original membership of the UNO. Decide.

'X' நாடு ஐ.நா. சபையில் ஒரு ஒரு உறுப்பினர். 'X' நாட்டிலிருந்து ஒரு பகுதியை பிரித்தெடுத்து 'Y' என்ற நாடு உருவாகிறது. தற்போது 'Y' நாடு தான் ஐ.நா. சபையில் அசல் உறுப்பினர் என்று உரிமை கோருகிறது. தீர்மானி.

9. An Ambassador of a country enters into a contract with an Indian Interior Designer to design his country's embassy situated irr India for a sum of Rs. 5 crores. After the designing work was over the Ambassador refuses to pay the money and claims immunity. Advise the Indian Interior Designer.

ஒரு இந்திய உள் அலங்கார நிபுணருடன் ஒரு வெளிநாட்டுத் தூதுவர் இந்தியாவில் அமைந்துள்ள அந்நாட்டுத் தூதரங்கத்தை வடிவமைக்க ரூ. 5 கோடிக்கு ஒப்பந்தம் போடுகிறார். பின்னர் வேலை முடிந்தவுடன் ஒப்பந்தத் தொகையை கொடுக்க மறுத்து தடைக்காப்புறுதி கோருகிறார். அந்த இந்திய உள் அலங்கார நிபுணருக்கு ஆலோசனை வழங்குக.

10. Country 'Z' was suspended from the membership of the UNO by the Secretary General. Country 'Z' approaches the ICJ against this move. Can 'Z' succeed?

பொதுச்செயலரால் 'Z' நாடு ஐ.நா. சபையின் உறுப்பினர் பதவியிலிருந்து தற்காலிகமாக வெளியேற்றப்பட்டது. சர்வதேச நீதிமன்றத்தில் 'Z' நாடு இதை எதிர்த்து வழக்கு தொடர்கிறது. 'Z'–ஆல் வெற்றி பெற முடியுமா?

ஜனவரி, 2021

B.L. DEGREE EXAMINATION, JANUARY 2021.

INTERNATIONAL LAW

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. Distinguish between Universal and Partial succession. What is the effect of succession on contracts and treaty onligations?

முழு மற்றும் பகுதியான இறங்குரிமையை வேறுபடுத்துக. ஒப்பந்தங்கள் மற்றும் உடன் படிக்கை கடப்பாடுகளுக்கு இறங்குரிமையால் ஏற்படும் விளைவுகள் யாவை?

2. Bring out the salient features of the UN Convention on the Law of Seas,

1982.

1982–ம் ஆண்டின் கடல்களைப் பற்றிய ஐ.நா. சாசனத்தின் முக்கிய கூறுகளை வெளிக்கொணர்க.

3. What do you understand by the term 'State Intervention'? Describe the different modes of lawful and unlawful intervention taking a clue from the 'Nicaragua Case'.

'நாட்டின் தலையீடு' என்கிற பதத்தை நீங்கள் எவ்வாறு புரிந்து கொண்டுள்ளீர்கள்? நிக்காராகுவா வழக்கின் குறிப்புணர்த்தலின் அடிப்படையில் சட்டத்திற்கு உட்பட்ட மற்றும் சட்டத்திற்கு புறம்பான தலையீட்டு வழிகளைப் பற்றி விளக்குக.

PART B - (2 x 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. Write an essay on "Indian Constitution and International law".

"இந்திய அரசியலைமைப்புச் சட்டம் மற்றும் நாட்டிடைச் சட்டம்" கட்டுரை வரைக.

5. How a member is admitted into the UNO? How a member can be suspended and expelled?

ஐக்கிய நாடுகளின் சபையில் உறுப்பினராவது எவ்வாறு? ஒரு நாட்டை இடைநீக்கம் மற்றும் வெளியேற்றம் செய்வது எவ்வாறு?

6. Explain the present law relating to Extradition.

மீட்டு ஒப்படைத்தல் தொடர்பான தற்போதைய சட்ட நிலை குறித்து விளக்குக.

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on **FIVE** of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Temple of Preah vihar case.
ஃபிரிய விகாரம் கோயில் வழக்கு.

(b) Continental shelf.
கண்டத்திட்டு.

(c) Island of Palmas Case.
பால்மாஸ் தீவு வழக்கு.

(d) Termination of Treaty.
உடன்படிக்கையை முடிவுக்கு கொண்டு வருதல்.

(e) Defacto and De Jure Recognition.
நிகழ்வு நிலை மற்றும் சட்டநிலை அங்கீகாரம்.

(f) Nuremburg Trial.
நியூரம்பர்க் வழக்கு விசாரணை.

(g) Permanent Court of International Justice.
நிரந்தர சர்வதேச நீதிமன்றம்.

PART D - (2 x 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State 'A' annexed its neighbouring state 'B' in a swift overnight action. 'A' resolution was passed by the Security Council with a 9 out of 15 majority vote including two permanent member abstaining. The resolution empowered the member states to take military action against state 'A'.

(a) Is the passing of the resolution valid?
(b) Is the military action justified as par the Charter of the UNO?

இரவோடு இரவாக நடந்த அதிர்டி தாக்குதல் மூலம் 'B' நாட்டை 'A' நாடு ஆக்கிரமித்துக் கொண்டது. இரண்டு நிரந்தர உறுப்பினர்கள் வாக்கெடுப்பில் இருந்து விலகியிருந்த நிலையில் பாதுகாப்புச்சபையானது 15க்கு 9 வாக்குகள் பெரும்பான்மையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது. 'A' நாட்டின் மீது ராணுவ நடவடிக்கை எடுப்பதற்கு உறுப்பினர் நாடுகளுக்கு அதிகாரம் அளிப்பதே அத்தீர்மானம்.

(அ) தீர்மானம் செல்லத்தக்கதா?

(ஆ) ஐ.நா. சாசனத்தின்படி ராணுவ நடவடிக்கை ஏற்புடையதா?

9. The petitioner before the Supreme Court of India was a former Portuguese citizen who obtained licence to import certain goods. When the Portuguese territory was merged with India, he obtained Indian citizenship and requested for extension of his licence. His application for extension of licence was rejected by the Government of India against which he filed a writ petition under Article 32 of the Constitution of India can he succeed?

இந்திய உச்ச நீதிமன்றத்தின் உள்ள மனுதாரர் ஒரு முன்னாள் போர்சுகீசிய குடிமகனாவார். அவர் போர்சுகீசிய குடிமகனாக இருந்தபோது சில சரக்குகளை இறக்குமதி செய்வதற்கு உரிமம் பெற்றிருந்தார். பின்னர் அப்பகுதி இந்தியாவுடன் இணைக்கப்பட்டது. தற்போது இந்திய குடிமகனான அவர் இந்திய அரசாங்கத்திடம் தனது உரிமத்தை நீட்டிப்பு செய்யுமாறு விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதன் பேரில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் உறுபு 32–ன் கீழ் ஒரு நீதிப்பேராணை மனுவை தாக்கல் செய்கிறார்? அவர் வெற்றி பெறுவாரா?

10. River 'Plethore' originates in state 'A' and empties in a lake in state 'B'. Factories in state 'A' discharge their effluents in the river which goes downstream to state 'B' causing severe health issues to the citizens of state 'B' who use the water for drinking purpose. State 'B' brings an action against state 'A' before the ICJ. Decide.

ஃபிளிதோரா நதி 'A' நாட்டில் உதயமாகி 'B' நாட்டில் உள்ள ஏரியில் முற்றுப் பெறுகிறது. 'A' நாட்டில் உள்ள தொழிற்சாலைகளின் கழிவுகள் அந்நதியில் கலக்கப்பட்டு 'B' நாட்டுக்கு வந்தடைகிறது, 'B' நாட்டு மக்களின் குடிநீர் ஆதாரமாக விளங்கும் அந்நதி நீரால் மக்களுக்கு கடும் உடல் நலக்குறைவு ஏற்படுகிறது. சர்வதேச நீதிமன்றத்தில் 'B' நாடு 'A' நாட்டிற்கு ஏதிராக வழக்கு தொடுக்கிறது. தீர்மானிக்கவும்.

ஐந்தாண்டு சட்டக் கல்வி

மே, 2016

B.L. DEGREE EXAMINATION, MAY 2016.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. Holland's view that "International Law is the vanishing point of jurisprudence" has become obsolete. Examine.
ஹாலந்தின் கூற்று, "நாட்டிடைச் சட்டம் சட்டயியலின் ஒரு மறைவுப் புள்ளி" என்பதாவது செயல்பாடற்று போய்விட்டது. விளக்கவும்.

2. Critically examine the privileges and immunities of diplomatic Envoys.
தூதுவர்களுடைய சிறப்புரிமைகள் மற்றும் சட்ட விலக்களிப்புகளை திறனாய்வு செய்க.

3. Explain the modes of acquiring Nationality.
நாட்டுரிமை பற்றும் விதங்களை பற்றி விளக்குக.

4. Critically examine the salient features of the UN Convention on the Law of the Seas.
ஐ.நா. கடல்களைப் பற்றிய உடன்படிக்கையின் சிறப்புத் தன்மைகளை திறனாய்வு செய்க.

5. Explain the consequences of State Succession with respect to treaties and contracts.
சர்வதேச உடன்படிக்கைகள் மற்றும் ஒப்பந்தங்களுக்கு நாட்டின் இறங்குரிமையால் ஏற்படும் விளைவுகளை விளக்குக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Article 103 of the Charter of the UN.
ஐ.நா சாசனத்தில் சரத்து 103.

(b) Gabcikovo - Nagymaros project case.
கேப்சிகோவோ நகிமோரோஸ் திட்ட வழக்கு.

(c) Calvo clause.

கால்வோ விதி.

(d) Vinayak Damodar Savarkar case.
விநாயக் தாமோதர் சாவர்கார் வழக்கு.

(e) Uniting for Peace Resolution.
அமைதிக்காக ஒன்று சேர்க்கும் தீர்மானம்.

(f) Right to self - determination.
சுய நிர்ணய உரிமை.

(g) Legal effects of recognition.
அங்கீகரிப்பின் சட்ட விளைவுகள்.

(h) Diplomatic Asylum.
தூதரகங்களில் அடைக்கலம்.

(i) General principles of Treaty Interpretation.
உடன்படிக்கைகளை பொருள் விளக்கம் காண்பதற்கான பொதுக் கோட்பாடுகள்.

(j) Declaratory theory.
அறிக்கை கோட்பாடு.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Rule of double Criminality.
இரட்டைக் குற்ற விதி.

(b) Jus cogens and erga omnes.
ஜஸ் கோஜன்ஸ் மற்றும் எர்கா ஒம்னஸ்.

(c) Island Theory.
மிதக்கும் தீவு கோட்பாடு.

(d) Kasikili Sedudu Island case.
கசிக்கிலி செடுடோ தீவு வழக்கு.

(e) Article 13 of the Charter of United Nations.
ஐக்கிய நாடுகள் சாசனத்தில் சரத்து 13.

(f) Opinio juris sive necessitatis.
ஒபினியோ ஜீரிஸ் சைவ் நெஸிசிடாடிஸ்.

நவம்பர், 2016

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2016.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. "Hollands" statement that "International Law is the vanishing point of Jurisprudence has become obsolete and is falsified"-Elaborate.
"நாட்டிடைச் சட்டம் சட்டவியலில் இருந்து மறைந்து போகும் நிலையில் உள்ளது எனும் ஹாலந்தின் கூற்று தற்பொழுது செயலற்று மற்றும் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது". விவரிக்கவும்.

2. Define Treaty. Explain the general rules of treaty interpretation citing decided cases.
உடன்படிக்கையை வரையறுக்கவும். உடன்படிக்கைகளின் பொருளடக்கத்தை விளக்குவதற்குரிய பொது விதிகளை முடிவான வழக்குகளை மேற்கோள் காட்டி விளக்கவும்.

3. Discuss the significance of the following International case laws.
(a) La Grand (Germany vs U.S.A.)
(b) Lockerbie (Libya vs United Kingdom)
கீழே குறிப்பிட்டுள்ள சர்வதேச முடிவுற்ற வழக்குகளின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.
(அ) லாகிராண்ட (ஜெர்மனி எதிர் அமெரிக்கா)
(ஆ) லாக்கர்பீ (லிபியா எதிர் பிரிட்டன்)

4. "The UN Convention on the law of sea is considered to be the international Constitution for oceans"- Examine.
"ஐ.நா.வின் கடல்களைப் பற்றிய உடன்படிக்கையானது சமுத்திரத்தின் சர்வதேச அரசமைப்புச் சட்டமாக கருதப்படுகின்றது"–ஆராய்க.

5. Discuss the rights, privileges and immunities of Diplomatic envoys.
தூதுவர்களுடைய உரிமைகள், சிறப்புரிமைகள் மற்றும் சட்ட விலக்களிப்புகளை விவாதிக்கவும்.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Declaratory theory.
அறிவிக்கைக் கோட்பாடு.

(b) Rule of Double Criminality.
இரட்டைக் குற்ற விதி.

(c) Jus Cogens.
ஜஸ் கோஜன்ஸ்.

(d) Jurisdiction of the International Court of Justice.
சர்வதேச நீதிமன்றத்தின் ஆள்வரை.

(e) Kinds of State Succession.
நாட்டிறங்குரிமையின் வகைகள்.

(f) International Law Commission.
சர்வதேசச் சட்டக் குழுமம்.

(g) Contribution of Prof R.P. Anand.
பேராசிரியர் இரா. பி ஆனந்தின் பங்களிப்பு.

(h) Nationality.
நாட்டுரிமை.

(i) Article 103 of the UN Charter.
ஐ.நா. சாசனத்தில் ஷரத்து 103.

(j) Judicial decisions.
நீதிமன்றத் தீர்ப்புகள்.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Kasikili Sedudu Island case.
கசிக்கிலி செடுடோ தீவு வழக்கு.

(b) Uniting for peace resolution.
அமைதிக்காக ஒன்று சேர்க்கும் தீர்மானம்.

(c) UN General assembly resolution 2625, 1970.
ஐ.நா. பொதுச் சபைத் தீர்மானம் 2625, 1970.

(d) Five freedoms of Air space.
வான்வெளி குறித்து ஐந்து சுதந்திரங்கள்.

(e) State Responsibility.
நாட்டுப் பொறுப்பு.

(f) Continental shelf.
கண்டத்திட்டு.

மே, 2017

B.L. DEGREE EXAMINATION, MAY 2017.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. "Holland's statement that international law is the vanishing point of jurisprudence has become obsolete and is falsified"- Examine.
"நாட்டிடைச் சட்டம் சட்டவியலில் இருந்து மறைந்து போகும் நிலையில் உள்ளது எனும் ஹாலந்தின் கூற்று தற்பொழுது செயலற்று மற்றும் பொய்ப்பிக்கப்பட்டுள்ளது". ஆராய்க.

2. Define International Society. Explain the provisions contained in the

Charter of the United Nation's regarding "Peaceful settlement of International Disputes".

சர்வதேச சமூகம் வரையறு. ஐக்கிய நாடுகளின் சாசனத்தில் உள்ள "சர்வதேசத் தகராறுகளை அமைதி வழியில் தீர்வுகாணல்" குறித்தப் பிரிவுகளை விளக்குக.

3. Define Treaty. Explain the general rules of treaty interpretation citing decided cases.

உடன்படிக்கை வரையறு. உடன்படிக்கைகளின் பொருளடக்கத்தை விளக்குவதற்குரிய பொது விதிகளை முடிவான வழக்குகளை மேற்கோள் காட்டி விளக்கவும்.

4. Discuss the significance of the following international case laws :

(a) Gabcikovo Nagymaros Project. (Hungary/Slovakia)
(b) East Timor (Portugal/Australia)

பின்வரும் சர்வதேச முடிவுற்ற வழக்குகளின் முக்கியத்துவத்தை விவாதிக்கவும்.

(அ) கேப்சிகோவோ நகிமோரோஸ் திட்டம் (ஹங்கேரி/ஸ்லோவாக்கியா)
(ஆ) கிழக்கு தைமூர் (போர்ச்சுகல்/ஆஸ்திரேலியா)

5. Write an essay on the UN Convention on the Law of Seas.

ஐ.நா. வின் கடல்களைப் பற்றிய உடன்படிக்கையைக் குறித்து ஓர் கட்டுரை எழுதுக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.

பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Advisory
சர்வதேச நீதிமன்றத்தின் ஆலோசனை கூறும் அதிகாரவரம்பு.

(b) Contribution of Prof. R.P. Anand.
பேராசிரியர் இரா.பி. ஆனந்தின் பங்களிப்பு.

(c) Functions of Consuls.
வணிகத் தூதுவர்களின் பணிகள்.

(d) Jus Cogens.
ஜஸ் கோஜன்ஸ்.

(e) Legal effects of Recognition.
அங்கீகரித்தலின் சட்ட விளைவுகள்.

(f) Partial Succession.
பகுதியான இறங்குரிமை.

(g) Extradition and Asylum..
மீட்டொப்படைப்பு மற்றும் புகலிடம்.

(h) International law commission.
சர்வதேச சட்டக் குழுமம்.

(i) Double Nationality.
இரட்டை நாட்டுரிமை.

(j) Monism.
ஒற்றைக் கொள்கை.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Calvo doctrine.
கால்வோ கோட்பாடு.

(b) Article 103 of the UN Charter.
ஐ.நா. சாசனத்தின் பிரிவு 103.

(c) Uniting for Peace Resolution.
அமைதிக்காக ஒன்று சேர்க்கும் தீர்மானம்.

(d) Five freedoms of Air space.
காற்று மண்டலத்தின் ஐந்து சுதந்திரங்கள்.

(e) State Responsibility
நாட்டுப் பொறுப்பு.

(f) Kasikili Sedudo Island case.
கசிக்கிலி செடுடோ தீவு வழக்கு.

நவம்பர், 2017

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2017.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A - (3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. Critically analyse the UN convention on law of seas, 1982.
1982–ம் ஆண்டு ஒன்றிய நாட்டு கடலாண்மைச் சட்ட மரபொழுங்கினைப் பகுப்பாய்வு செய்க.

2. Explain the State responsibility with decided cases.
தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கோள்காட்டி நாட்டின் பொறுப்பு நிலையினை விவரிக்க.

3. Discuss the jurisdiction of the ICJ under international law.
பன்னாட்டுச் சட்டத்தின் கீழ் பன்னாட்டு நீதிமன்றத்தின் ஆள்வரையினை விவாதிக்க.

4. Discuss the law relating to State Succession with respect to contracts, treaties and tortious claims.

ஒப்பந்தங்கள், நாட்டிடை உடன்படிக்கைகள் மற்றும் தீங்கியல் முறையீடுகள் குறித்த நாட்டிறங்குரிமைச் சட்டத்தைப் பற்றி விவாதிக்க.

5. Explain the law of State recognition through the help Arantzazu Mendi case.

அராண்சாசு மென்டி வழக்கின் மூலமாக நாடுகளின் அங்கீகாரம் குறித்த சட்டத்தினை விளக்குக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.

பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Coastal State and Continental shelf.
கடலோர நாடும் கண்டத்திட்டும்.

(b) Hayadela Torra case.
அயடீலா டோரா வழக்கு.

(c) Unlawful intervention.
சட்ட முரணான தலையீடு.

(d) Functions of the consulate.
வணிகத் தூதரகத்தின் பணிகள்.

(e) Privileges of Ambassadors.
தூதுவர்களுக்குரிய சிறப்புரிமைகள்.

(f) Gabcikovo-Nagymaros project case.
கேப்சிகோவோ–நேகிமோராஸ் திட்ட வழக்கு.

(g) Functions of the Security Council.
பாதுகாப்பு மாமன்றத்தின் செயல்பாடுகள்.

(h) Outer space treaty.
அம்பர உடன்படிக்கை.

(i) State jurisdiction.
அரசின் ஆள்வரை.

(j) Five freedoms of air.
ஐவகை வளிமண்டலச் சுதந்திரம்.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Eastern Greenland case.
கிழக்கு கிரீன்லாந்து வழக்கு.

(b) Trial smelter arbitration case.
டிரைல் காரிய உருக்காலைகள் இசைவுத் தீர்ப்பாய வழக்கு.

(c) Uniting for Peace resolution, 1950.
அமைதி ஒன்றிணைவுத் தீர்மானம், 1950.

(d) Nuremberg trial.
நீயூரம்பெர்க் விசாரணை.

(e) Termination of treaties.
உடன்படிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருதல்.

(f) Sources of International law.
நாட்டிடைச் சட்ட மூலங்கள்.

மே, 2018

B.L. DEGREE EXAMINATION, MAY 2018.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A -(3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. Explain custom as a source of International law. How does a custom evolve in International law?
வழக்காறு நாட்டிடைச் சட்டத்தின் மூலம் என்பதை விளக்கவும். நாட்டிடைச் சட்டத்தில் வழக்காறு எவ்வாறு தோன்றுகிறது?

2. What are the rights and duties arising out of State Succession?
நாடுகளின் இறங்குரிமையால் எழும் உரிமைகளும், கடமைகளும் யாவை?

3. Define "Nationality". Explain the circumstances leading to 'Double nationality' and 'Statelessness'. How can Nationality be Acquired?
"தேசியம்" வரையறு. எவ்வித சூழ்நிலைகளில் 'இரட்டை தேசியம்' மற்றும் தேசியமற்ற நிலை உருவாகும் என்பதை விளக்குக. தேசியத்தை பெறக் கூடுவது எவ்வாறு?

4. Examine the changes brought about by the UN Convention on Law of Sea with respect to "Territorial sea" and "High seas".
'எல்லையோரக் கடல்" மற்றும் "ஆழ்கடல்" ஆகியவற்றைப் பொறுத்து கடல்களைப் பற்றிய ஐ.நா. உடன்படிக்கையில் கொண்டு வரப்பட்ட மாற்றங்களைப் பற்றி ஆய்வு செய்க.

5. Discuss the power and functions of the General assembly of the UNO,
ஐ.நா.வின் பொதுச் சபையினுடைய அதிகாரம் மற்றும் பணிகளைப் பற்றி விவாதிக்கவும்.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.
பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு

எழுதுக.

(a) Weakness of International Law.
பன்னாட்டு சட்டத்தின் பலவீனம்.

(b) A.M. Luther Vs James Sagor and Co.
A.M. லூத்தர் எதிர் ஜேம்ஸ் சாகர் நிறுவனம்.

(c) Innocent passage.
அமைதி வழிப் பாதை.

(d) Extraterritorial Asylum.
வரம்பெல்லைக்கு அப்பால் புகலிடம் அளித்தல்.

(e) Eastern Green Land case.
கிழக்கு கிரீன்லாந்து வழக்கு.

(f) Genocide.
இனப் படுகொலை.

(g) Floating Island theory.
மிதக்கும் தீவுக் கோட்பாடு.

(h) Outer space Treaty.
அண்டவெளி தொடர்புடைய உடன்படிக்கை.

(i) Protectorate State.
காபந்து நாடு.

(j) International Law Commission.
சர்வதேச சட்டக் குழுமம்.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Neutral states.
நடுநிலையான நாடுகள்.

(b) Lawful intervention.
சட்டரீதியான தலையீடு.

(c) Calvo Clause.
கால்வோ விதி.

(d) Dualism.
இரு பொருள் வாதம்:

(e) Rebus sic stantibus.
ரிபஸ் சிக் ஸ்டேன்டிபஸ்,

(f) International Criminal Court.
நாட்டிடைச் சட்டக் குற்றவியல் நீதிமன்றம்.

நவம்பர், 2018

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2018.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A -(3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. Narrate the Preamble, purposes and principles of the UNO as laid down in the U.N. Charter.

ஒன்றியநாட்டு பட்டயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகப்புரை மற்றும் ஒன்றிய நாட்டு அமைப்பின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்களைப் பற்றி விவரிக்க.

2. What are the consequences of state succession with respect to claims for tortious liabilities, contracts and international treaties?

தீங்கியல் பொறுப்படைவுகளுக்கான இழப்பீடு கோரல்கள், ஒப்பந்தங்கள் மற்றும் பன்னாட்டு உடன்படிக்கைகள் தொடர்பான நாட்டிறங்குரிமையின் விளைவுகள் யாவை?

3. Discuss the nature and origin of International law and examine its present status.

நாட்டிடைச் சட்டத்தின் தன்மை மற்றும் தொடக்கத்தை விவரித்து அதன் இன்றைய நிலை என்ன என்பதை ஆராய்க.

4. Discuss the limitations on territorial jurisdiction of a state.

நாட்டின் நிலவரையின் வரம்புகளை விவாதிக்க.

5. Write a brief essay on the United Nations. Convention on the Law of Seas, 1982 (UNCLOS).

1982–ன் கடல்களின் சட்டம் பற்றிய ஒன்றிய நாட்டு உடன்படிக்கை பற்றி சுருக்கமாக ஒரு கட்டுரை எழுதுக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.

பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Territorial waters

நிலவரைக் கடல்

(b) Difference between Public International Law and Private International Law.

பொது நாட்டிடைச் நாட்டிடைச் சட்டத்திற்கும், தனிப்பட்ட நாட்டிடைச் சட்டத்திற்கும் உள்ள வேறுபாடு.

(c) Custom as a source of International law.

நாட்டிடைச் சட்டத்தின் ஒரு மூலம் வழக்காறு ஆகும்.

(d) Conditions for extradition.
மீட்டு ஒப்படைத்தலுக்கான நிபந்தனைகள்.

(e) Ambrosini's case
அம்புரோசினி வழக்கு.

(f) Five freedoms of Air
வளிமண்டலத்தின் ஐந்து சுதந்திரங்கள்.

(g) Difference between Ambassadors and Consuls
தூதுவர்களுக்கும், வணிக தூதுவர்களுக்கும் உள்ள வேறுபாடு.

(h) Haya-de-la-Torre's Case
ஹயா–டி–லா–டோரே வழக்கு.

(i) Acquisition of nationality
நாட்டுரிமை அடையும் முறைகள்.

(j) Termination of Treaties.
பன்னாட்டு உடன்படிக்கைகளின் முடிவு.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Rebus sic standibus
செல்நிலை உடன்படிக்கை.

(b) Rights of refugees
அகதிகளின் உரிமைகள்.

(c) Powers of the Security Council
பாதுகாப்பு அவையின் அதிகாரங்கள்.

(d) International Tribunals
பன்னாட்டுத் தீர்ப்பாயங்கள்.

(e) Weaknesses of International law
நாட்டிடைச் சட்டத்தின் பலவீனங்கள்.

(f) Corfu Channel Case.
கார்ஃபியூ கால்வாய் வழக்கு.

மே, 2019

B.L. DEGREE EXAMINATION, MAY 2019.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A -(3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.

பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. Critically analyse Austin's view that International law is not true law but rules of positive international morality.

நாட்டிடைச் சட்டம் உண்மையில் சட்டமல்ல, அது ஆக்க முறையான நாட்டிடை ஒழுக்க நெறியாகும் என்ற ஆஸ்டினுடைய நோக்கினை திறனாய்வு செய்க.

2. What is state intervention in international law? What are lawful and unlawful intervention.

நாட்டிடைச் சட்டத்தில் ஒரு நாட்டின் தலையீடு என்றால் என்ன? சட்டப்பூர்வ மற்றும் சட்டவிரோத தலையீடுகள் யாவை?

3. Explain the law relating to Extradition and Asylum.

மீட்டொப்படைப்பு மற்றும் புகலிடம் பற்றிய சட்டத்தினை விளக்குக.

4. Explain the concepts of 'Continental Shelf'and 'Exclusive Economic Zone' (EEZ). What are the rights of the coastal state in the continental shelf and the EEZ ?

'கண்டத்திட்டு' மற்றும் 'தனிப்பட்ட பொருளாதார மண்டலம்' ஆகிய கோட்பாடுகள் பற்றி விளக்குக. அவ்விடத்தின் அருகில் உள்ள கடலோர நாட்டிற்கு உள்ள உரிமைகள் யாது?

5. Explain the provisions contained in the U.N. Charter regarding admission, expulsion and withdrawal of the states in the UNO.

ஐக்கிய நாடுகள் சாசனத்தில் ஐக்கிய நாடுகள் அவையில் நாடுகளைச் சேர்த்தல், வெளியேற்றுதல் மற்றும் தானாக வெளியேறுதல் குறித்த பிரிவுகளை விளக்குக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on EIGHT of the following not exceeding 2 pages each.

பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) Loss of Nationality.
நாட்டுரிமை இழத்தல்.

(b) Termination of Diplomatic mission.
தூதுவர் பணி ரத்து செய்தல்.

(c) Neutral states
நடுநிலையான நாடுகள்.

(d) Five freedoms of Air space.
காற்று மண்டலத்தில் ஐந்து உரிமைகள்.

(e) Subjugation.
கீழ்ப்படுத்துதல்

(f) Theories of state succession.
நாட்டு இறங்குரிமைக் கோட்பாடுகள்.

(g) Modes of recognition.
அங்கீகாரத்தின் வகைகள்.

(h) Geneva convention.

ஜெனீவா மாநாடு.

(i) Voting procedure of Security Council.
பாதுகாப்பு சபையின் வாக்களித்தல் பற்றிய நடைமுறைகள்.

(j) Jurisdiction of International Court of Justice.
சர்வதேச நீதிமன்றத்தின் நீதி வரம்பெல்லை.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Common Wealth States.
காமன் வெல்த் நாடுகள்.

(b) Nuremberg Trial.
நியூரம்பர்க் வழக்கு விசாரணை.

(c) Classification of diplomats.
தூதர்களின் வகைப்பாடு.

(d) Island of Palimas case.
பால்மாஸ் தீவு வழக்கு

(e) Doctrine of self help,
சுய உதவிக் கோட்பாடு.

(f) Plebiscite.
பொதுமக்கள் வாக்கெடுப்பு.

நவம்பர், 2019

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2019.

INTERNATIONAL LAW

Time : Three hours Maximum : 100 marks

PART A -(3x 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் மூன்றிற்கு ஆறு பக்கங்களுக்கு மிகாமல் விடையளிக்க.

1. Examine the Constitutional Provisions and judicial interpretation of the relationship between International Law and Municipal law, with respect to India.
நாட்டிடைச்சட்டம் மற்றும் உள்நாட்டுச்சட்டம். ஆகிய இரண்டிற்குமான தொடர்பு குறித்து இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் வகையங்கள் மற்றும் நீதிமன்றத்தீர்ப்பின் மூலம் உள்ள பொருள் விளக்கத்தினை ஆராய்க.

2. Critically analyse the provisions of the United Nations Convention on Law

of Seas (UNCLOS), 1982.

1982 ஆம் ஆண்டின் கடல்களின் சட்டம் தொடர்புடைய ஐக்கிய நாடுகள் சாசனத்தின் வகையங்களைப் பகுப்பாய்வு செய்க.

3. Examine the concept of De Jure and De facto recognition with special reference to the Arantzazu Mendi's case.

அராண்சாசு மெண்டி வழக்கின் சிறப்பு மேற்கோளோடு சட்டநிலை மற்றும் நிகழ்வுநிலை அங்கீகாரக் கோட்பாட்டை பற்றி ஆராய்க.

4. "It is time to reform the Security Council". Examine this statement and suggest few reform measures.

"பாதுகாப்பு சபையில் சீர்திருத்தங்கள் கொண்டு வரவேண்டிய தருணம் இது" – இக்கூற்றை ஆராய்ந்து சில சீர்திருத்தங்களை எடுத்துரைக்க.

5. Briefly explain the law of extradition with decided cases.

முடிவுற்ற வழக்குகளோடு மீட்டொப்படைத்தல் சட்டத்தைச் சுருக்கமாக விளக்குக.

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short notes on **EIGHT** of the following not exceeding 2 pages each.

பின்வருவனவற்றுள் எட்டினுக்கு இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சிறு குறிப்பு எழுதுக.

(a) State succession relating to International Contracts.
சர்வதேச ஒப்பந்தங்கள் தொடர்பான நாட்டிறங்குரிமை.

(b) Trial Smelter Arbitration.
டிரயில் உருக்காலைகள் இசைவுத் தீர்ப்பு வழக்கு.

(c) Duties of Envoys.
தூதுவர்களின் பணிகள்.

(d) Corfu Channel Case.
கார்ப்ஃயு கால்வாய் வழக்கு.

(e) Right to Self-determination.
சுயநிர்ணய உரிமை.

(f) Article 38 of the Statute of ICJ.
சர்வதேச நீதிமன்றம் தொடர்பான. செய்சட்டத்தின் உறுப்பு 38.

(g) Nottabohm's case.
நோட்டபாம் வழக்கு.

(h) Father of International Law and his contributions.
நாட்டிடைச் சட்டத்தின் தந்தை மற்றும் அவரின் பங்களிப்பு.

(i) Termination of Treaties.
சர்வதேச உடன்படிக்கைகளை முடிவுக்குக் கொண்டு வருதல்.

(j) Outer Space Treaty.
அண்டவெளி தொடர்புடைய சர்வதேச உடன்படிக்கை.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் நான்கிற்கு சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Gabcikovo - Nagymaros Dam Project case.
காப்சிகோவோ நேகிமோராஸ் அணை திட்ட வழக்கு.

(b) International Custom
சர்வதேச வழக்காறு.

(c) Haya-de-la-Torres case
அய டிலா டோரஸ் வழக்கு

(d) Jus Cogens.
ஜஸ் கோஜன்ஸ்

(e) Direct State Responsibility
நேர்முக நாட்டுப் பொறுப்பு.

(f) Lawful Intervention
சட்டபூர்வ தலையீடு.

ஜனவரி, 2021

B.L. DEGREE EXAMINATION, JANUARY 2021.

INTERNATIONAL LAW

Time : 3 hours Maximum : 100 marks

PART A - (3 x 12 = 36 marks)

Answer **THREE** of the following in not exceeding 6 pages each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. What are the conditions to be satisfied before extraditing a criminal from one country to another?
ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு ஒரு குற்றவாளியை மீட்டு ஒப்படைத்தல் செய்வதற்கு முன்னால் தீர்மானிக்கப்பட வேண்டிய காரணிகள் யாது?

2. Explain with reference to decided cases how the Indian Supreme Court applies International law in the municipal sphere?
நாட்டிடைச் சட்டத்தை உள் நாட்டில் இந்திய உச்ச நீதிமன்றம் எவ்வாறு பொருத்திப் பார்க்கிறது என்பதை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை மேற்கொள் காட்டி விளக்கவும்.

3. Discuss about the various kinds of jurisdiction exercised by the International Court of Justice.
சர்வதேச நீதிமன்றம் நடைமுறைப்படுத்தும் பல்வேறு நீதிமன்ற வரம்பு எல்லைகளைப் பற்றி விவாதிக்கவும்.

4. What are the various modes of acquiring nationality?
நாட்டுரிமை அடையும் பல்வேறு முறைகள் யாது?

5. What are your arguments to justify "International Law is very much

a law"?

"நாட்டிடைச்சட்டம் ஒரு சட்டமே" என்கிற கூற்றை நிலைநிறுத்த தங்கள் வாதங்கள் யாது?

PART B - (8 x 6 = 48 Marks)

6. Write short answers on **EIGHT** of the following in not exceeding two pages each.

பின்வருவனவற்றுள் எட்டிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் குறுகிய விடைகள் எழுதுக

(a) Estrada Doctrine,
எஸ்டிராடா கோட்பாடு.

(b) Specific Adoption Theory
சிறப்பு ஏற்புக் கோட்பாடு.

(c) Continental shelf.
கண்டத்திட்டு.

(d) Corfu Channel Case.
கார்ஃபூ கால்வாய் வழக்கு.

(e) Arantzazu Mendi's Case.
அரான்சாசு மெண்டி வழக்கு.

(f) Uniting for peace Resolution.
அமைதிக்காக ஒன்றுபடுதல் தீர்மானம்.

(g) Trail-Smelter Arbitration.
டிரெயில் –காரீய உருக்காலை இசைவுத் தீர்ப்பு.

(h) Hugo Grotius.
ஹியூகோ குரோட்டியூஸ்.

(i) I'm Alone Case.
ஐயம் அலோன் வழக்கு.

(j) Privileges of Ambassadors.
தூதுவர்களின் சிறப்புரிமைகள்.

PART C - (4 x 4 = 16 Marks)

7. Answer briefly **FOUR** of the following in not exceeding two pages each.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் சுருக்கமாக விடையளிக்கவும்.

(a) Root Philmore Plan.
ரூட் ஃபில்மோர் திட்டம்.

(b) Article 51(C) of the Constitution of India.
இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் உறுப்பு 51(C).

(c) Partial Succession.
பகுதியான இறங்குரிமை.

(d) Commonwealth Nations.

காமன்வெல்த் நாடுகள்

(c) Calvo Clause.
கால்வோ வகையம்,

(f) Unlawful Intervention.
சட்டத்திற்கு புறம்பான தலையீடு.

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

பிப்ரவரி, 2022

B.L. DEGREE EXAMINATION, FEBRUARY 2022.

INTERNATIONAL LAW

Time : 2½ hours Maximum : 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer **TWO** of the following in about 500 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்.

1. "The individual is no more just the object of International law, he has very much become the subject of International Law". Explain.
"தனிநபர் நாட்டிடைச் சட்டத்தின் நோக்கம் பொருளாக இனியும் இல்லை. பன்னாட்டுச் சட்டத்தின் கருப்பொருளாக ஆகிவிட்டார்"– விளக்குக.

2. What is the remedy available in the UN Charter when the Security Council fails to maintain the International peace and security?
உலக அனுமதி மற்றும் பாதுகாப்பை நிலைநாட்டுவதில் பாதுகாப்பு சபை தவறும் பொழுது ஐ.நா. சாசனத்தில் உள்ள தீர்வழி யாது?

3. Explain the State Succession relating to contracts.
ஒப்பந்தங்கள் தொடர்பான நாட்டிறங்குரிமையைப் பற்றி விளக்குக.

PART B - (2 x 7 = 14 Marks)

Answer **TWO** of the following in about 300 words each.
பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்.

4. What are the functions and power of the Diplomatic Agents?
தூதுவ முகவர்களின் செயல்திறன் மற்றும் சிறப்பச்செயல் சிறப்பம்சம் விவரிக்க.

5. Explain the Territorial Asylum with referred case laws.
எல்லை தஞ்சம் புகுதல் மற்றும் வழக்குகளை விவரிக்க.

6. What are the essential conditions for extradition?
மீட்டு ஒப்படைத்தலுக்கான முக்கிய காரணிகள் யாவை?

PART C - (5 x 4 = 20 Marks)

7. Write short notes on **FIVE** of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Extradition and Asylum
தஞ்சம்புகுதல் மற்றும் வெளியேற்றம்

(b) Freedom of High seas
ஆழ்கடலின் சுதந்திரங்கள்

(c) Difference between the Public International law and Private International law.
பொது சர்வதேச சட்டத்திற்கும் தனிநபர் சர்வதேச சட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை விவரிக்க.

(d) Island of Palmas case
பால்மாஸ் தீவு வழக்கு

(e) Extra territorial Asylum
புற எல்லைப் புகலிடம்

(f) International delinquency
சர்வதேச கடமை தவறுதல்

(g) Adhoc jurisdiction
அதற்கென அமைந்த ஆள்வரை.

PART D - (2 x 6 = 12 Marks)

Answer **TWO** of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. State 'X' is a member of the UNO. State 'Y' was formed by curving out a portion of state 'X' now 'X" state claims the original membership of UNO. Decide 'Y'.

'X' நாடு ஐக்கிய நாட்டு சபையில் ஒரு உறுப்பினர் 'X' நாட்டில் இருந்து ஒரு பகுதியை பிரித்தெடுத்து 'Y' என்ற நாடு உருவாகிறது. தற்போது 'Y' நாடு அதன் ஐக்கிய நாட்டு சபையின் அசல் உறுப்பினர் என்ற உரிமை கோருகிறது. தீர்மானி.

9. A collision recurred on the higher seas between a French vessel and a Turkish a vessel. Victims were Turkesh national and the alleged offender was French. Could Turkey exercise its jurisdiction over this French national under International law? Decide.

பிரான்ஸ் மற்றும் துருக்கி நாட்டு கப்பல்களை நடுக்கடலில் மோதிக் கொள்கின்றன. பிரான்ஸ் கப்பலின் ஒரு நபர் செய்த செய்கையால் துருக்கி கப்பலில் பயணம் செய்தவர்களில் சிலர் பாதிக்கப்பட்டதால் பிரான்ஸ் கப்பலின் நபர், மீது குற்றம் சாட்டப்படுகிறது. இந்த செய்கையானது சர்வதேச சட்டத்தின் படி துருக்கியின் அதிகார வரம்புக்குட்பட்டதா முடிவு செய்க.

10. On 31 May 2010, Israel military attacked a Turkish ship that carried aid for Gaza. As this is an untoward situation, the United National Security Council called a prompt action, impartial, credible and then transparent investigation,

conforming to the International standards. State whether the United Nations Security Council can assist by sending its troops to take necessary action or not?

இஸ்ரேல் இராணுவம் கடந்த 2010 மே மாதம் 31ம் நாள் காசாவிற்கு எடுத்துச் செல்வதற்கான உதவி பொருள்கள் அடங்கிய துருக்கி நாட்டு பெருங்கப்பல் கடலில் சென்று கொண்டு இருக்கையில் அக்கப்பலை தாக்கி வெடிகுண்டு வைத்து அகற்றியது. இந்நிலையில் ஐக்கிய நாட்டின் பாதுகாப்பு சபையில் பாரபட்சமற்ற நேர்மையான வெளிப்படை தன்மையுடைய விசாரணை சர்வதேச தரத்திற்கு இணங்க துரித நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என தீர்மானம் இயற்றப்பட்டது. இஸ்ரேல் ராணுவத்தின் இச்செயல் குறித்து ஐக்கிய நாடுகள் பன்னாட்டு குழுமம் தன்னுடைய இராணுவத்தை அனுப்பி உதவியாக எதிர்கொள்ளலாமா இல்லையா என்பதை விளக்குக.

-o0o-